# தாய்வீடு

220

ISSN 2369-3657

THAIVEEDU | JULY | 2025

தாய்வீடு | ஜூலை | 2025



## நுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி
## ஆபிரிக்க ஆலமரமும் குழந்தைகளும்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில்
## இலங்கையின் பங்கு

- சி. தில்லைநாதன்

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

# போரின் விளிம்பில் உலகு!

ஈரானின் மீதான இஸ்ரேலின் அத்துமீறிய திடீர்த் தாக்குதலும் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் அப்பாலும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

காசாவில் இருபது மாதங்களுக்கும் மேலாக தான் நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போரையே முடிவுக்குக் கொண்டுவரமுடியாத இஸ்ரேல் அரசு, எதுவித தூண்டுதலோ முன்னெச்சரிக்கையோ இன்றி ஜூன் பதின்மூன்றாம் நாள், ஈரானின் பன்னிரண்டு நிலைகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது.

ஒரு முனையில் தான் ஆரம்பித்த போர் வெற்றி தோல்வியின்றி இழுபறிப்பட்டுக்கொண்டிருக்க, இன்னொரு முனையில் மற்றொரு போரை இஸ்ரேல் வலிந்து தொடங்கியிருப்பது, முதல் முனையிலான போர் தொடர்பாக தன்மீது திரும்பியுள்ள எதிர்மறையான கருத்துகளைத் திசை திருப்பவே என்பது தெளிவு. காசாவாழ் மக்கள் மீது இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறையை வன்மையான வார்த்தைகளால் கண்டித்து, கனடாவும் பிரான்சும் ஐக்கிய இராச்சியமும் வெளியிட்ட கூட்டறிக்கையின் பின்னணியில், உலகின் நல்லெண்ணம் தனக்கெதிராகத் திரும்ப ஆரம்பித்திருப்பதை இஸ்ரேல் உணர்ந்திருக்கும். இதேவேளை, போர் நிறுத்தத்தை மேற்கொள்ளவும், ஹமாஸிடம் உள்ள ஏனைய இஸ்ரேலியப் பணயக்கைதிகளைப் பேச்சுவார்த்தை மூலம் விடுவிக்கவும் கோரும் ஆர்ப்பாட்டங்கள் இஸ்ரேலில் பரவலாக வலுப்பெற ஆரம்பித்துள்ளன. காசாவில் நடைபெறுவது இனப்படுகொலையே என்பதை, சாதாரண இஸ்ரேலியப் பொதுமக்களே உணரவும், அதற்கெதிராகக் குரலெழுப்பவும் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் தனது அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்காக காசா மீது போர்தொடுத்த நெத்தன்யாகு, அதே காரணத்துக்காக ஈரான் மீதும் போர் தொடுத்துள்ளார் என்றே எடுத்துக்கொள்ளமுடியும்.

இதேவேளை, ஈரானுடன் அணுவாயுதக் கட்டுப்பாடு தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாகத் தெரிவித்துவந்த வெள்ளை மாளிகை, எந்த விதமான விளக்கங்களுக்கும், நியாயங்களுக்கும் அப்பாற்பட்டு, இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தானும் ஈரான் மீது குண்டுமழை பொழிந்தது. இந்தத் தாக்குதலுக்கும் திசைதிருப்பலே காரணமாகிறது. ஒரு புறம் டொனால்ட் டிரம்புக்கு எதிரான பேரணிகள் நாடெங்கிலும் அரங்கேறிக்கொண்டிருக்க, மறுபுறம் அமெரிக்க இராணுவத்தின் 250-ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதாகக்கூறி, டிரம்ப் தனது பிறந்த நாளன்று நடத்த ஆணையிட்ட இராணுவ அணிவகுப்பை மக்கள் புறக்கணித்தனர். அணிவகுப்பில் பங்கெடுத்த இராணுவத்தினர் வன்ம நோக்கக் கீழ்ப்படிவு முறையிலும் தமது அணிவகுப்பைக் கேலிக்கிடமாகும் வகையிலும் நடத்தியிருந்தனர்.

இத்தகைய நெருக்கடியான சூழலில், ஈரான் மீதான தாக்குதலுக்கு டிரம்ப் ஆணையிட்டுள்ளார்.

ஆகவே, நெத்தன்யாகு - டிரம்ப் என்ற இரண்டு நாசிசவாதிகள், தத்தமது நாட்டு மக்களின் அபிமானமும் உலகின் அபிப்பிராயமும் தமக்கு எதிராகத் திரும்பிவரும் நிலையில், அந்த நிலைமையைச் சமாளிக்க ஈரான் என்ற பொது எதிரியைத் தாக்கி, தமது நாடுகளைப் போரின் விளிம்புக்குத் தள்ளி, அதன் மூலம் தமது மக்களிடையே தேசபக்தியின் வெளிப்பாட்டை வலுக்கட்டாயமாக உற்பத்தி செய்து, அதிலே தாம் குளிர்காய முனைகிறார்கள். இதனால் இஸ்ரேலிய மக்களினதும், மத்திய கிழக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படைகளினதும் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை.

ஈரானிடம் அணுவாயுதம் இருக்கிறது என்றும், அதை அழிக்கவே தாம் தாக்குதல் தொடுத்ததாகவும் இரு நாடுகளும் கூறும் கண்துடைப்பு நகைப்புக்கிடமானது. உண்மையிலேயே ஈரானிடம் அணுவாயுதங்கள் இருப்பதாக இந்த நாடுகள் நம்பினால், இப்படி எடுத்தோம் கவிழ்த்தோம் என்று ஈரானைப் போருக்கழைக்கத் துணியமாட்டா. அத்துடன், ஈரான் அனைத்துலக அணு ஆயுதப் பரம்பலுக்கு எதிரான ஒப்பந்தத்திலே கைச்சாத்திட்டுள்ள நாடு. தனது அணுசக்திச் செயற்றிட்டத்தை அனைத்துலக அணுசக்தி முகவரகத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ள நாடு. அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத, அந்தக் கண்காணிப்புக்குத் தன்னை முழுமையாக உட்படுத்தாத இஸ்ரேல், ஈரானின் அணுவாயுதத் திட்டத்தைக் கட்டுப்படுத்தவே தான் தற்காப்புப்போர் தொடுக்கிறேன் என்பது கடைந்தெடுத்த பொய். அதற்கு ஆதரவாக அமெரிக்கா களத்தில் குதிப்பது அனைத்துலகச் சட்டங்களுக்கு முரணான செயல்.

இந்த இரண்டு நாடுகளுமே எதிர்பாராதது, ஈரான் நடத்திய எதிர்த்தாக்குதலும் அதில் அது அடைந்த கணிசமான வெற்றியும். அதன் காரணமாகவே தற்போது போர் நிறுத்தம் என்ற நாடகம் அரங்கேறியிருக்கிறது. ஈரான் இதுவரை காலமும் பொறுப்புள்ள ஓர் உலகப் பிரசையாக நடந்துகொண்டதில்லை. இந்நிலையில், இந்த மூன்று சட்டாம்பிகளும் ஆரம்பித்துள்ள இந்தப் போர் விளையாட்டு நன்மையில் முடிவதற்கான சாத்தியங்கள் குறைவு.

# இம்மாதத் தாய்வீட்டில்...


போரின் விளிம்பில் உலகு! 3

ஒரு முறை இறக்கவும் 5
- ரதன்

‘ட்ரம்ப்’ சூழ் உலகு:
ஒழுங்கமைவின் ஒழுங்கவிழ்ப்பு 10
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கி
16 ஆண்டுகள் கழிந்துவிட்டன 16
- லயனல் பொபகே
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

‘எமக்கான உரிமைகள் எங்கே?’
தலைமுறைகளைக் கடந்து வரும் ஒரு கேள்வி 18
- நிசன்குமார் கோபிநாத்

குறைபாடுகள் நிறைந்த இந்தியத் தேர்தல் முறை 21
- நெல்லை ஜெயசிங்

சித்தர் பாடல்களில் அறிவியல் 24
- பால சிவகடாட்சம்

தமிழர் பண்பாட்டு மருத்துவ அறிவியலில்
சங்கு பற்பம் 29
- வெற்றிவேல் சக்திவேல்

நடப்பு 30
- பஞ்சகல்யாணி

முதுமை – ஒரு பொதுநோக்கு 32
- ப. விஸ்வகோகிலன்

ஆரோக்கியமான பாடசாலைக்
கலாசாரம் ஒன்றை நோக்கி.... 34
- அகமட் பிஸ்தாமி

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே...
கிளர்ச்சியும் எதிர்வினையும் – 2 36
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

ஹோமோ சேப்பியன்ஸ் 38
- அப்துல்லா முஹம்மது ஆதில்

உங்கள் சிந்தனையைக் கொண்டு
கட்டுப்படுத்தக்கூடிய டிஜிட்டல் சாதனங்கள்... 40
- சுப்ரமணியம் ஜெயசீலன்

கோடைகால வீட்டுப் பராமரிப்பு 44
- வேலா சுப்ரமணியம்

நகைச்சுவை தனிச்சுவை 46
- சி. நற்குணலிங்கம்

போர்க்கால நிகழ்வுகளைப் பேசிய
நோர்வேஜிய திறந்தவெளி அரங்கு! 48
- ரூபன் சிவராஜா

சாந்தாராம் எனும் கலைஞன் 53
- ஓவியர் ஜீவா

வோல்றர் சலெசின் அரசியல் படங்கள் –
I am Still Here–ஐ முன்வைத்து 56
- ரதன்

நவீன உலகும் உறவுகளின் சிதைவும்
அன்டோனியோனியின் இருத்தலியல் சினிமா 62
- சொர்ணவேல்

நெருப்பு நிலங்களில் எனது பயணம் 70
- குரு அரவிந்தன்

இலங்கை முஸ்லிம்களுடைய கல்வி,
சமூகவியல் பணிகளில் தேசபந்து
அன்னை ஜெஸீமா இஸ்மாயிலின் வகிபாகம் 73
- இக்பால் அலி

தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில்
இலங்கையின் பங்கு 78
- சி. தில்லைநாதன்

மாணவர் மனதை வென்ற மானுடன்
கலாகீர்த்தி சி. தில்லைநாதன் 82
- சி. ரமேஷ்

தொடர்ந்தும் போராடுவதே எங்கள் சமூகங்களின் பணி 87
- ஙுகி வா தியாங்கோ
நேர்காணல்: சுரேஷ் கனகராஜா

ஙுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி – 1
ஆபிரிக்க ஆலமரமும் குழந்தைகளும் 90
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் 94
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

மூடிய கதவுகளுக்குப் பின்னால்
மௌனமாக மறைக்கப்படும் வலிகள் 97
- அ. மேரி றெசோதா

மலையக இலக்கியம்: தேடலும் திரட்டலும் 100
- மு. நித்தியானந்தன்

கலாலஷ்மி கதைகள் 102
- மாதவி உமாசுதசர்மா

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய–வெளியீட்டாளருக்கான கைந்நூல் 104
- என். செல்வராஜா

தாகூரின் கீதாஞ்சலியும்
வேலுப்பிள்ளையின் விஸ்மாஜினியும்:
மு. நித்தியானந்தனின் பதிப்பு முயற்சியை முன்வைத்து... 107
- மல்லியப்புசந்தி திலகர்

அசோகமித்திரன் குறுநாவல்கள் 110
- சு. வேணுகோபால்

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த
கலையாக காமன் கூத்து– 07 115
- அருணாசலம் லெட்சுமணன்

பதிப்பாசிரியரின் அடிக்குறிப்புகளால்
இன்னொரு பரிமாணம் பெறும் நாடக ஆக்கங்கள் 120
- கதிரேசு ரதிதரன்

மலைமண்டல நாயகன் 126
- த. ஜீவராஜ்

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில்
பெண்ணிலைவாதம் இறுதியுத்தம் 128
- சி. ரமேஷ்

வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில்
ஈழத்தவர் பங்களிப்பு:
ஒல்லாந்தர் காலமும் விரதபுராணங்களும் 132
- மைதிலி தயாநிதி

அழிந்துபோன நாகரிகங்களை
உயிர்த்தெழச்செய்த கல்வெட்டுகள் 136
- ச. சத்யதேவன்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – 11 143
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

பெண்ணியவாதம்:
பின்நவீனத்துக்குப் பிந்திய பெண்ணியவாதம் 147
- ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

பாட்டுப் பிறந்த கதை காட்டும் கண்ணன் 150
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 153
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

காயாத ஈரம் 157
- பவானி சற்குணசெல்வம்

முலையறுகாதை! 160
- மா. சித்திவினாயகம்

‘தவறு என்பது தவறிச்செய்வது...!’ 164
- உஷாதீபன்

நெய்தல் நடை 169
– ரஞ்ஜனி சுப்ரமணியம்

Mr. Bond 174
- கோவிந்தராஜ் சுப்ரமணியன்

பள்ளிக்கூடம் 178
- டொனல்ட் பர்தலோமி
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




இஸ்ரேல், ஈரான் நாடுகளுக்கிடையில் நடைபெற்ற வான் வழித் தாக்குதல்கள் தற்காலிகமாக யூன் 24-இல் நிறுத்தப்பட்டுள்ளது. இடையில் அமெரிக்காவும் தன் பங்கிற்கு ஈரானின் நிலக்கீழ் அணு நிலையங்கள் மீது பி-2 பொம்பர்களிலிருந்து தாக்கியது. இதன் அழிவுகள், சிதைவுகள் பற்றிய முழுமையான, உண்மையான விபரங்களை இரு தரப்பும் வெளிவிடவில்லை.

1948 மே 14 இஸ்ரேல் தோற்றமடைந்த பின்னர், நடைபெற்ற போர்களில் ஈரானின் தாக்குதல்களாலேயே, இஸ்ரேல் அதிகளவு சேதமடைந்துள்ளது. சுயாதீன ஊடகங்களினூடாக வெளியான ஒளிப்படங்களே இவற்றிற்கு சாட்சியமாகவுள்ளன. இஸ்ரேல் ஊடகத் தணிக்கையை அமுலுக்கு கொண்டு வந்தமையால் முழுமையான விபரங்களைப் பெறமுடியவில்லை. யூன் 24 பி.பி.சியின் இணையச் செய்தி பின்வருமாறு கூறுகின்றது:

*அமெரிக்க தாக்குதல்கள் ஈரானின் அணுசக்தித் திட்டத்தை அழிக்கவில்லை என்று பென்டகன் மதிப்பீடு கூறுகிறது.* (‘US strikes did not destroy Iran nuclear programme, says Pentagon assessment’)
https://www.bbc.com/news/articles/ckglxwp5x03o

எனினும் மீண்டும் அணு நிலையங்கள் இயங்க சில மாதங்கள் எடுக்கலாம் எனவும் இவ்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதியின் கருத்து பென்டகனின் கருத்திலிருந்து மாறுபட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Tel Aviv, Beersheba, Haifa ஆகிய இஸ்ரேலிய நகரங்கள் ஈரானின் தாக்குதல்களால் அதிகளவு சேதமடைந்துள்ளன. ஈரானின் அணு உற்பத்தி நிலையங்களும் சேதமடைந்துள்ளன. தெஹரான் உட்பட ஈரானின் பல பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. ஈரானின் படைத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அணு விஞ்ஞானிகள் கொல்லப்பட்டுள்ளனர். அசோசியட் பிரெஸ் 14 ஈரானிய விஞ்ஞானிகளை இஸ்ரேல் கொலை செய்ததாக செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் ஈரானுடன் போரிடுவதற்கு பல காரணங்கள் உண்டு. அது தனது பல எதிரிகளை அழித்துவிட்டது. இறுதியாக உள்ள நாடு ஈரான். ஈரான் அணு ஆயுத உற்பத்தியை நெருங்கிவிட்டது என இஸ்ரேல் கணித்துள்ளது. ஈரானின் ஆதரவு நாடுகள் பலவீனமாகவுள்ளன. சீனா போரிற்குள் நேரடியாகப் பங்குபற்றாது என்பது இஸ்ரேலுக்குத் தெரியும். ரஷ்யா, உக்ரேனுடன் போரில் உள்ளது. எனவே இது நல்ல சந்தர்ப்பம் ஈரானைத் தாக்குவதற்கு என்பது இஸ்ரேலின் கணிப்பு. மிக முக்கியமாக காசாவில் தொடர்ச்சியான தாக்குதல்களால் காசாவாசிகள் பட்டினியால் வாடுகின்றனர். அங்கு சென்ற நிவாரண வாகனங்களையும் இஸ்ரேல் தடுத்துள்ளது. பட்டினிபோட்டு அவர்களைக் கொல்வது என இஸ்ரேல் தீர்மானித்துவிட்டது. உலகெங்கும் இதற்கான எதிர்ப்பு தோன்றியுள்ளது. மேற்கு நாடுகளும் இவ்விடயத்தைக் கண்டித்துள்ளன. எனவே ஈரானுடான போர் இந்த விடயத்தை வேறு பக்கம் திருப்பும் என இஸ்ரேல் நினைக்கின்றது.

ஒரு விடயத்தை அவதானிக்கவும். இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதலை மேற்கொண்ட ஒவ்வொரு நாளும், காசாவையும் தாக்கியுள்ளது. இஸ்ரேலில் ஈரானின் குண்டுகள் வீழ்ந்தபோதும், காசாவிலுள்ள மக்களைக் கொல்வதை இஸ்ரேல் நிறுத்தவில்லை. சராசரியாக ஒவ்வொரு நாளும் 50 காசா மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

> ***“ஈரான் அணு ஆயுத உற்பத்தியை நெருங்கிவிட்டது என இஸ்ரேல் கணித்துள்ளது. ஈரானின் ஆதரவு நாடுகள் பலவீனமாகவுள்ளன. சீனா போரிற்குள் நேரடியாகப் பங்குபற்றாது என்பது இஸ்ரேலுக்குத் தெரியும். ரஷ்யா, உக்ரேனுடன் போரில் உள்ளது. எனவே இது நல்ல சந்தர்ப்பம் ஈரானைத் தாக்குவதற்கு என்பது இஸ்ரேலின் கணிப்பு.”***

அமெரிக்கா ஏன் ஈரானைத் தாக்கியது. முதலில் அமெரிக்கா தனது நடவடிக்கைகளை மெதுவாக ஆரம்பித்தது. US B-2 strategic bombers டியோ காசியா தளத்துக்கு அனுப்பியது. பின்னரே தனது தாக்குதலை தொடங்கியது. GBU 43 bunker busting bombs வீசியது.

அதுவும் ஒரு அடையாளத் தாக்குதலாகவே தெரிகின்றது. ஈரானும் கொமூஸ் நீரிணை மேலாக பறந்த அமெரிக்க விலையுயர்ந்த அதிதொழில்நுட்பம் நிறைந்த ட்ரோனை சுட்டு வீழ்த்தியது. பதிலுக்கு ஈரானும் கட்டாரில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. இவ்விரு தாக்குதலும் இரு நாடுகளும் அறிவித்துவிட்டே செய்த

தாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனவே ஓர் அடையாளத் தாக்குதல்களாகவே இவை வெளிப்படுகின்றன.

ஈரான் கொமூஸ் நீரிணையை மூடப்போவதாகவும் தெரிவித்திருந்தது. ஒரு புறத்தில் ஈரானும் மறுபுறத்தில் ஓமானும், ஐக்கிய அரபு இராச்சியமும் இந் நீரிணையின் இரு பக்கமும் உள்ளன. 31 மைல்கள் நீளம் கொண்ட கொமூஸ் நீரிணையூடாக 20 வீதமான எண்ணெய் வணிகம் நடைபெறுகின்றது. பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் கொமூஸ் நீரிணை இணைக்கின்றது. இதனூடாகவே சவூதி அரேபிய எண்ணெய் வணிகத்தின் ஒரு பகுதி நடைபெறுகின்றது. எனவே இது மூடப்பட்டால் அமெரிக்க நிறுவனங்களும் பாதிக்கப்படும்.

அமெரிக்கா ஈரானை தாக்கியபோது, அமெரிக்காவின் நடவடிக்கை சர்வதேசச் சட்டங்கள், ஐ.நா சபை மற்றும் அமெரிக்க அரசியல் யாப்புக்கும் எதிரானது என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் பில் கிளின்டன், ஒபாமா ஆகியோர் ஈரானுடனான தாக்குதலைக் கண்டித்திருந்தனர்.

அமெரிக்க உளவுப் பிரிவுத் தலைவர் (Director of national intelligence (DNI)) ரூசி கபாட் (Tulsi Gabbard) ஈரானிடம் அணு ஆயுத உற்பத்தி செய்யக்கூடிய தளங்கள் இல்லை எனக் கூறியுள்ளார். இதனை ஒரு பத்திரிகையாளர் டொனால்ட் ரம்பிடம் கேட்டபோது, ரூசி கபாட்டுக்கு தெரியாது. ஈரானில் அணு ஆயுதம் செய்யக்கூடிய உற்பத்தி நிலையங்கள் உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்குவதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று தனது தேசிய புலனாய்வு இயக்குநர் ரூசி கபாட் கூறியது தவறு என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

நியூ ஜெர்சியின் மொரிஸ்டவுன் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது தெஹ்ரான் அணு ஆயுத உற்பத்தி சார்ந்து வேலை செய்யவில்லை என்று தனது உளவுத் தலைவர் இந்த ஆண்டு தொடக்கத்தில் தெரிவித்த உளவுத் துறை மதிப்பீடுகளை டிரம்ப் எதிர்த்தார்.

'அவர் கூறியது தவறு' என்று டிரம்ப் கூறினார்.

யூன் 22 அன்று அமெரிக்க ஈரான் மீது தாக்குதலை மேற்கொண்டிருந்தது. அமெரிக்க உளவுப் பிரிவின் தகவலை கருத்திற்கொள்ளாமலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்பொழுது மீண்டும் தாக்குதல் நடைபெற்ற பின்னரும் பென்டகன் ஈரானுக்கு சேதமெதுவுமில்லை எனக் கூறியுள்ளது. இதனையும் டொனால்ட் ரம்ப் மறுத்துள்ளார். உளவுப் பிரிவிற்கும், டொனால்ட் ரம்ப்க்குமான உறவு நிலை சீராகவில்லை. இது அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு ஆபத்தான சூழ்நிலையாகும்... குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவரே ரூசி கபாட்.

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் மத்திய கிழக்கில் எண்ணெய் வணிகம் மற்றும் உற்பத்தியின் கட்டுப்பாட்டாளராக அமெரிக்கா தொடர்வதை உறுதி செய்துள்ளது. ஈரானின் எண்ணெய் வளத்தில் சீனாவும், ரஷ்யாவும் பங்கு போட்டன. ஆனால் இத் தாக்குதலின் பின்னர் ஈரான் அமெரிக்காவின் பக்கம் சாய்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகவுள்ளன. இஸ்ரேல் ஈரானில் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்றது. ஆனால் அமெரிக்கா வெளிப்படையாகவே ஆட்சி மாற்றத்தை தாங்கள் ஏற்படுத்தமாட்டோம் எனத் தெரிவித்துள்ளது. அமெரிக்கா ஒற்றைத் துருவ சக்தியாக சர்வதேச நவதாராளவாத அரசியல் அமைப்புக்களான சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் ஆதரவுடன் மத்திய கிழக்கில் நிலைநிறுத்தியுள்ளது. சீனாவின் எழுச்சியைக் கட்டுப்படுத்தவும், மத்திய கிழக்கில் அதன் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும், எண்ணெய் வணிகம் டொலரில் தொடரவும் அமெரிக்காவிற்கு ஈரான் அவசியம். ஈரானின் அணு ஆயுத உற்பத்தி என்பது இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவிருக்கலாம். ஆனால் அது அமெரிக்காவிற்கு ஆபத்தானதல்ல. அமெரிக்காவின் கவனம் மீண்டும் அமெரிக்காவை பொருளாதார வல்லரசாக தங்கவைப்பதேயாகும்.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா ஈரானைத் தாக்கவில்லை. போர் நிறுத்தம் அறிவித்த பின்னரும், இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டதை டொனால்ட் ரம்ப் கண்டித்துள்ளார். அதுவும் டொனால்ட் ரம்ப் பாவித்த மொழி, தேர்ந்தெடுத்த சொற்கள் என்பன எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும் வெளிப்படையாகப் பாவிக்காதவையாகும்.

•

'She's wrong,' Trump said.

(The Globe and Mail - Web June 20, 2025)
Two days ago as Trump was leaving a G-7 meeting in Canada he was asked by the media what he thought of Gabbard's view and statement. Trump replied:
'I don't care what she said. I say they're working on a weapon... I don't listen to her'. (June 19, 2025)

**“இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா ஈரானைத் தாக்க வில்லை. போர் நிறுத்தம் அறிவித்த பின்னரும், இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டதை டொனால்ட் ரம்ப் கண்டித்துள்ளார்.”**



### *டொனால்ட் ரம்ப், நெதன்யாகுவை நம்பிக்கைக்குரியவராகக் கருதுகின்றாரா?*

மார்ச் 2003-இல் ஈராக்குடனான போருக்கு ஈராக்கில் அணு ஆயுத உற்பத்தி நடைபெறுவதாகக் குற்றஞ்சாட்டியே போருக்கு சென்றிருந்தது. அதுவும் நேட்டோ என்ற போர்வை யிலேயே போருக்குச் சென்றிருந்தது. கனடா இப் போரை தவிர்த்திருந்தது. இறுதியில் இன்று வரை ஈராக்கில் அணு ஆயுத உற்பத்தி நிறுவப்படவில்லை. அதே போன்ற ஒரு விடயமாக ஈரானைப் பார்க்க முடியாது. ஆனாலும் சர்வ தேசம் ஈரானிடம் அணு ஆயுத உற்பத்தி மையங்கள் உள்ள தாகத் தெரிவிக்கின்றன. ஆனால் உறுதிப்படுத்தவில்லை. 2018-ஆம் ஆண்டு டொனால்ட் ரம்ப், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் பேச்சுவார்த்தை மேற்கொண்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்து, அவ் ஒப்பந்தத்தை நிராகரித்தார்.

டொனால்ட் ரம்ப் அமெரிக்கா சண்டையிடுவதை விரும்பாத வர். டொனால்ட் ரம்ப் 2.0 ஆட்சிக்கு வந்தவுடன் ரஷ்யா - உக்ரேன், ஹமாஸ் - இஸ்ரேல் போர்களை நிறுத்துவேன் எனச் சபதமளித்திருந்தார். நெத்தியன்யாகுவும், புட்டினும், செலன்ஸ்கியும் டொனால்ட் ரம்ப்-ஐ கருத்திற்கொள்ள வில்லை. செலன்ஸ்கியிடம் மட்டும் மிரட்டி கனிம ஒப்பந்தங் களை பெற்றார். இப் போர்களை நிறுத்துவதற்கான வழியை யும் அமெரிக்க ஏற்படுத்தவில்லை. பைடனின் அமெரிக்கா இஸ்ரேலை முற்றாக ஆதரித்தது. ஆயுதங்கள் வழங்கப்பட் டன. டொனால்ட் ரம்ப் தனது சொல்லாட்சியை மேம்படுத்தி வசனங்களை அள்ளி வீசியுள்ளார். அமெரிக்காவிற்கு வெளியே செயற்றிட்டங்கள் எதனையும் செய்யவில்லை.

டொனால்ட் டிரம்பிற்கு, இது எப்போதும் ஒரு கேள்வி, நான் எப்படி இருக்கிறேன்? நான் விளையாடப்படுகிறேனா? நான் பலவீனமானவனாகக் கருதப்படுகிறேனா? ஈரானுடன் ஓர் ஒப்பந்தத்திற்கான சாத்தியத்தை நான் அதிகமாகச் செய் துள்ளேனா? அல்லது அதிகமாக வாக்குறுதி அளித்திருக் கிறேனா? அவர் தேவைக்காக ஒரு நல்லொழுக்கத்தை உருவாக்க முயற்சிக்கிறார் இஸ்ரேலியர்கள் தாக்கப் போகி றார்கள் என்று ரம்ப்-இற்கு அறிவிக்கப்படும் பொழுதெல் லாம் நெதன்யாகுவிடம் அமைதிகாக்கச் சொல்லும் திறனும் ஆளுமையும் சக்தியும் அவருக்கு இருந்தது.



கடந்த ஆறு வாரங்களில், டொனால்ட் டிரம்ப், ஜிம்மி கார்ட்டர் முதல் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் வரை நான் பணியாற்றிய எந்த குடியரசுக் கட்சி ஜனாதிபதியும், எந்த ஜனநாயகக் கட்சி ஜனாதிபதியும் செய்யாத விஷயங்களை இஸ்ரேலுக்கு செய் துள்ளார். அமெரிக்க - இஸ்ரேலிய உறவை நிர்வகித்த மூன்று அடிப்படை அரசியல் விடயங்களை அவர் மீறிவிட் டார். மார்ச் மாதத்தில், இஸ்ரேலின் அனுமதியின்றி, அவர் தனது பணயக்கைதி பேச்சுவார்த்தையாளருக்கு ஹமாஸு டன் ஓர் உரையாடலைத் தொடங்க அங்கீகாரம் அளித்தார். ஹமாஸ் ஏற்கனவே அமெரிக்க குடிமக்களைக் கொன்றது மற்றும் இஸ்ரேலிய - அமெரிக்க இரட்டை குடியுரிமை பெற் றிருந்த அமெரிக்கர்களின் மரணங்களுக்கு காரணமாகவிருந் தது. அவ்வாறான அமெரிக்காவில் பயங்கரவாத அமைப்பு என அழைக்கப்பட்ட ஹமாசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

இஸ்ரேலிய பிரதமருக்குத் தெரியாமல் ஹீதிகளுடன் அவர் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டார். அது மறைமுகமாக, நீங்கள் எங்கள் கடற்படை சொத்துக்களைத் தாக்காத வரை, நாங்கள் உங்கள் மீது எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளமாட் டோம் என அமெரிக்கா தெரிவித்திருந்தது.

ஹீதிகளிடம் அவர்கள் இஸ்ரேல் மீது தாக்கும் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் பற்றி அவர் எதுவும் கூறவில்லை. பின்னர், நெதன்யாகுவின் ஆட்சேபனைகளை மீறி, சிரியா வின் புதிய ஜனாதிபதி மீதான தடைகளை அவர் நீக்கினார். மேலும், ஏப்ரல் மாதம் Budapestடில் இருந்து நெதன் யாகுவை வாஷிங்டனுக்கு வரவழைத்தார். அழைப்பிற்கான காரணம் தெரியாமலேயே, நெதன்யாகு வோசிங்டன் வந்தி ருந்தார். நெதன்யாகுவிற்கு அருகில் நின்றுகொண்டே, ஈரா னுடன் அமெரிக்கா நேரடி பேச்சுவார்த்தைகளை தொடங்கி விட்டதாக குறிப்பிட்டார். நெதன்யாகுவை இப் பேச்சுவார்த் தைக்கு அழைக்கவில்லை. அது அமெரிக்காவுக்கும் ஈரா னுக்குமானதாகவேயிருந்தது. வேறு எந்த ஜனாதிபதியும் டொனால்ட் ரம்ப்-இன் வழியில் இஸ்ரேலை தவிர்த்து பேச்சு வார்த்தைக்கு போயிருக்கமாட்டார்கள். எனவே ‘பகல் வெளிச்சக் கொள்கை’ நிராகரிக்கப்படுகிறது. பகல் வெளிச் சம் என்பது எந்தவித கருத்து வேறுபாடும் இரு நாடுகளுக்கு மிடையில் இல்லை என்பதனைக் குறிக்கும். அமெரிக்கா, இஸ்ரேலின் மத்திய கிழக்கு கொள்கைகளிலிருந்து குறிப் பாக ஈரான், பாலஸ்தீனம் போன்றவற்றின் கொள்கைகளிலி ருந்து வேறுபடுகின்றது.

இரண்டாவது, அரசியல் செலவுகள் அல்லது விளைவுகளைச் சமாளிக்க முடியாதது என்பதனை டொனால்ட் ரம்ப் உணர்ந் துள்ளார். இஸ்ரேலுக்கு கொடுக்கப்படும் ஆயுதங்களுக் கான விலையென்ன என்பதிலேயே டொனால்ட் ரம்ப்-இன் கவனம் உள்ளது. அதுவே காசா வெளியேற்றம் குறித்து இஸ்ரேல் பிரதமருடன் மிகவும் சுதந்திரமாகவும் விமர்சன ரீதியாகவும் நடந்து கொள்வதில் ரம்ப்-இற்கு இருக்கும் வாய்ப்பு, எந்த அமெரிக்க ஜனாதி பதியும் இதுவரை கண்டிராத அளவுக்கு அதிகமாக உள்ளது. நெதன்யாகு தன்னைப் பயன்படுத்திக் கொள் கிறார் என்று ரம்ப் நம்பியமை அவரது முதல் பதவிக் காலத்திலிருந்தே தொடங்குகிறது. பைடனை நெதன்யாகு பயன் படுத்திவிட்டார் என்பது டொனால்ட் ரம்ப்-இன் கருத்து. இஸ்ரேல், இஸ்ரேல் மக்கள், இஸ்ரேலின் பாதுகாப்பு பற்றிய ஜோ பைடனுக்கு இருந்த அதே உணர்ச்சி



பூர்வமான அர்ப் பணிப்பு டொனால்ட் ரம்ப்-இற்கு இல்லை. இஸ்ரேல் அவரின் முடிவுக்கு ஒரு வழியாகும்.

இஸ்ரேல் மற்றும் நெதன்யாகு டொனால்ட் ரம்ப்க்கு கொடுக்கும் தீவிரமான அழுத்தமானது அவருக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அது சிந்திக்கவும் தூண்டியுள்ளது. எனவே அவர் கால அவகாசம் எடுக்கின்றார். அமெரிக்காவிற்கு மத்திய கிழக்கில் உள்ள தங்களது படைகள், மற்றும் ஆயுத உபகரணங்கள் பாதுகாக்கப்படவேண்டும். இதனை இஸ்ரேலும் உணர்ந்துள்ளது. அதனால் அவர், உங்களுக்கு தெரியும் என்ன செய்யவேண்டும். அதனைச் செய்யுங்கள் என்றார். அதே நேரம் ஜி-7 ஈரான் - இஸ்ரேல் யுத்தத்தை தீர்மானிக்க இடம் கொடுக்காமல், முதல் நாளே வெளியேறி, தனது தனித்துவத்தை நிலை நாட்டினார்.

டொனால்ட் ரம்ப் ஈரானை தாக்கமாட்டேன் என்று கூறவில்லை. எனக்கு இரண்டு கிழமைகள் அவகாசம் தேவை. அதற்குள் ஒரு முடிவு எடுப்பேன் எனவே தெரிவித்துள்ளார். நெதன்யாகுவும் டொனல்ட் ரம்ப் என்ன செய்வார், செய்யமாட்டார் என்பதனை நன்கறிவார். எனவே அவரும் எவ்வாறாயினும் அமெரிக்காவை இப் போரினுள் இழுக்கவேண்டும் என முயற்சிக்கின்றார். அவரைப் பொறுத்தவரை மத்திய கிழக்கில் தற்சமயம் உள்ள கடைசி எதிரி ஈரான். ஈரான் மௌனிக்-கப்பட்டால் மத்திய கிழக்கில் இஸ்ரேலை அசைக்கமுடியாது என்பது நெதன்யாகுவின் எண்ணம்.

ஈரானைப் பற்றி டொனால்ட் ரம்ப் நன்கு அறிவார். அதே சமயம் அவர் மனித உரிமைகள் பற்றியோ அல்லது மனித உயிர்கள் மீதோ அக்கறை கொண்டவரல்ல. உலகின் வல்லரசுத் தலைவராக இருப்பவரால் தற்பொழுது நடக்கும் மத்திய கிழக்கு போர்களையும் ரஷ்யா - உக்ரேன் போரையும் முடிவுக்கு கொண்டுவரமுடியாமல் திண்டாடுகின்றார். மேலே குறிப்பிட்டவாறு அவரது சொல்லாட்சிக்கே ஊடகங்கள் முக்கியத்துவமளிக்கின்றன.

அமெரிக்க செல்வாக்கை அல்லது அந்நியச் செலாவணியை எவ்வாறு பயன்படுத்துவது அல்லது பயன்படுத்த முயற்சிப்பது என்பதற்கான பயனுள்ள உத்தி டொனால்ட் ரம்பிடம் இல்லை. அவர் சூழ்நிலை சார்ந்தவர். அவர் வணிக பரிவர்த்தனை சார்ந்தவர். இறுதியில் அவரிடம் எந்தத் திட்டமும் இல்லை. நெதன்யாகு ஒரு திட்டத்துடன் வந்தார் B-2 bombers-ஐ பயன்படுத்தி ஈரானின் நிலக்கீழ் அணு ஆயுத உற்பத்தி நிறுவனத்தை (Fordow reactor) அழிப்பதாகும். டொனால்ட் ரம்ப் இல்லை என்று சொல்லவில்லை. டொனால்ட் ரம்ப் தான் எடுக்கும் முடிவு தனக்குப் பாதகமாக அமையலாம் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளார். இரு கிழமைக்குள் போர் எந்த நிலையை எட்டியுள்ளது என்பதனை டொனால்ட் ரம்ப் அறிவார். ஈரான் உச்ச நிலையை அடைந்தால் பேச்சுவார்த்தைக்கு அழைப்பார். இஸ்ரேல் உச்ச நிலையிலிருந்தால், பின்லாடனைக் கொன்றது போல் ஒரு சில குண்டுகளுடன் அமெரிக்கா போரை முடிவுக்கு கொண்டு வந்தது என்பார்.

நெதன்யாகுவின் நடவடிக்கைகள் அமெரிக்காவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளன. நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் தோமஸ் எல். பிரைட்மான் மே 11 பத்தியில் அமெரிக்கா சவுதியிடம் இஸ்ரேலுடன் அமைதியான உறவைப் பேணுமாறு வற்புறுத்துவதை நிறுத்திவிட்டது எனத் தெரிவித்துள்ளார். இது அமெரிக்காவின் நெதன்யாகு மீதான எண்ணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையே தெரிவிக்கின்றது.

> **“ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இஸ்ரேலுக்கு நீண்டகால அமைதியைக் கொடுக்கும், அணு ஆயுத பயத்தையும் நீக்கும் என நெதன்யாகு உறுதியாக நம்புகின்றார்.”**

ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இஸ்ரேலுக்கு நீண்டகால அமைதியைக் கொடுக்கும், அணு ஆயுத பயத்தையும் நீக்கும் என நெதன்யாகு உறுதியாக நம்புகின்றார். அமெரிக்காவும் எப்பொழுதும் ஆட்சி மாற்றத்தை விரும்பும் நாடு. ஈரானில் போர் முடிவுக்கு பின்னர் ஆட்சி மாற்றத்துக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்யும். ஏற்பாடு என்பது அங்கு குழப்பங்களை ஏற்படுத்த நிதியுதவி அளிப்பது. இராணுவ புரட்சிக்கு ஆலோசனையும், ஆயுதங்களும் வழங்குவது ஆகும். அதேபோல் நெதன்யாகுவையும் மாற்றவே அமெரிக்கா விரும்புகின்றது. மத்திய கிழக்கில் ஒரு பலவீனமான இஸ்ரேலையும், ஈரானையுமே அமெரிக்கா விரும்புகின்றது. அதுவே அமெரிக்காவிற்கு பலமாகும்.

அமெரிக்காவிற்கும் ஈரானுக்குமிடையில் நீண்ட கால முரண் உள்ளது. இரு நாடுகளும் சர்வதேச அரங்கில் பல தடவைகள் மோதிக் கொண்டன. உளவுப் பிரிவின் ஆலோசனையை மீறி ஜிம்மிக் காட்டர், முன்னாள் ஈரானிய அரசன் Shah-விற்கு Mohammad Reza Shah-தஞ்சம் வழங்கினார். விளைவு 52 அமெரிக்கர்களை ஈரானிய மாணவர்கள் 444 நாட்கள் தடுத்து வைத்தனர். மாணவர்களின் நடவடிக்கைக்கு அயதொல்லா கொமெய்னி முழுமையான ஆதரவு வழங்கியிருந்தார். ஏப்ரல்

24 1980-ஆம் ஆண்டு கார்ட்டரின் அமெரிக்க இராணுவம் Operation Eagle Claw நடவடிக்கையை மேற்கொண்டது. வியட்நாம் போரின் பின்னர் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட மிகப் பெரிய தோல்வி இதுவாகும்.

ஒக்ரோபர் 23, 1983 அன்று பெய்ரூட்டில் அமெரிக்க மற்றும் பிரெஞ்ச் படை வீரர்கள் தங்கியிருந்த கட்டடத்துக்குள் வெடி மருந்துகள் நிரம்பிய இரண்டு லொறிகள் உள் சென்றன. கட்டடம் தகர்ந்தது. லொறிகள் வெடித்த சத்தம் அப் பிரதேசத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. 241 அமெரிக்க பாதுகாப்பு படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 58 பிரெஞ்ச் பாதுகாப்பு படையினரும் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது அமெரிக்காவிற்கு மிகப் பெரிய அதிர்ச்சியளித்தது.

1988-ஆம் ஆண்டு ஏப்ரல் 18 அன்று ஈரானின் பொதுமக்கள் சென்ற விமானத்தை அமெரிக்க கடற்படை சுட்டு வீழ்த்தியது. இதில் பயணித்த 290 பேரும் மரணமானார்கள். போர் விமானம் என்று தவறுதலாகக் கணித்து சுட்டுவிட்டோம் என தெரிவிக்கப்பட்டது.

2020 ஜனவரி மூன்றாம் திகதி ஈரானின் மிக முக்கிய படைத் தளபதி கசிம் சுலைமானி ட்ரோன் தாக்குதலால் கொல்லப்பட்டார். சுலைமானி, ஈரானின் சுப்ரீம் தலைவர் கொமெய்னிக்கு அடுத்த நிலையில் உள்ள தளபதியாக கருதப்பட்டவர். இவரைக் கொல்லுமாறு டொனால்ட் ரம்ப் உத்தரவிட்டதாக கூறப்படுகின்றது. ஈராக் - ஈரான் போரின் போது ஈராக்கில் தரித்து நின்ற 600-க்கும் மேற்பட்ட அமெரிக்க படைகளை ஈரான் கொன்றதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இவற்றைவிட சில சிறிய சம்பவங்களும் மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

•

இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தாக்குதல்களால் ஈரான் பாதிப்படைந்துள்ளது. அதே சமயம் இஸ்ரேலும் பாதிப்படைந்துள்ளது. இஸ்ரேல், ஈரான், அமெரிக்க போரில் அதிகளவு பாதிப்படைந்தது இஸ்ரேலே ஆகும். மத்திய கிழக்கில் அதன் ஒற்றை வல்லரசு நிலையை ஈரான் தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால் அமெரிக்கா அமைதியாக மத்திய கிழக்கை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. தொடரும் நாட்களே தொடர்ச்சியைத் தீர்மானிக்கும். ஒரு முறை மரணிப்பது தவறில்லையெனில் மரணிப்போம். பாடையில் ஒரு மரணம் பல்லக்கில் மற்றொரு மரணம்.


**உசாத்துணை:**

- https://www.theglobeandmail.com/world/article-trump-gabbard-iran-nuclear/
- https://www.newyorker.com/news/q-and-a/donald-trumps-no-strategy-strategy-on-iran
- https://www.cfr.org/timeline/us-relations-iran-1953-2025
- https://apnews.com/article/israel-iran-nuclear-science-attacks-e298f00ba261debba4499a48c9df8b3d





rathan@thaiveedu.com




# 'ட்ரம்ப்' சூழ் உலகு: ஒழுங்கமைவின் ஒழுங்கவிழ்ப்பு

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



## தொடக்கக் குறிப்புகள்:

ட்ரம்பின் நடத்தை சர்வதேச அரசியல் அரங்கில் நிச்சயமின்மைகளை உருவாக்கியுள்ளது. இது சர்வதேச ஒழுங்கமைவு குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. தனது முதலாவது பதவிக் காலத்தில் ட்ரம்ப் அமெரிக்க நிர்வாக, அயலுறவு ஒழுங்கமைவுகளைக் கலைத்துப் போட்டார். பின்னர் ஜோ பைடனும் சகாக்களும் அதை மீளக்கட்டி பாரம்பரிய மேலாதிக்க நடைமுறையை மீட்டனர். இப்போது ட்ரம்பின் இரண்டாவது ஆட்சிக்காலம் சுவாரசியமானதாக மாறியுள்ளது. இது ஒழுங்கமைவினை மீள் ஒழுங்கமைக்கிறதா? அல்லது முழுமையாக ஒழுங்கவிழ்க்கிறதா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

கனடாவை 51-வது மாநிலமாக மாற்றவும், கிரீன்லாந்து மற்றும் பனாமா கால்வாயைக் கைப்பற்றவும் ட்ரம்ப் விரும்பியதை ஊடகங்கள் வெளிப்படுத்தியபோது அதனோடு இணைந்த எதிர்வினைகள் பலதரப்பட்டனவாக இருந்தன. 'ட்ரம்ப் திட்டம்' உலகளவில் அமெரிக்க அதிகாரத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாகக் கருதப்பட்டாலும் உண்மையில் அவ்வாறு நிகழாது என்பதை அவரது தொடர்ச்சியான செயற்பாடுகள் காட்டிநிற்கின்றன. அமெரிக்க உலகளாவிய அதிகாரத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாகக் கருதக்கூடிய ஒரு திட்டம் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் காலத்தில் மீண்டும் முன்னெடுக்கப்பட்டது. பைடன் - ஹாரிஸ் இணைந்து அமெரிக்க இராணுவம், அரசியல் அதிகாரம் மற்றும் சுதந்திர வர்த்தகத்தை முன்னிறுத்துவதன் மூலம் உலகை அமெரிக்க மூலதனத்திற்குப் பாதுகாப்பானதாக மாற்ற முயன்றனர். இது ட்ரம்பின் முதல் பதவிக்காலத்தின் காரணமாக முறிவுற்ற ஒரு திட்டத்தின் தொடர்ச்சியாகும்.

இரண்டாம் உலகப் போரில், பேர்ளின் துறைமுகத் தாக்குதலுக்குப் பிந்தைய அமெரிக்க முன்னுதாரணமாக இருந்த அந்தத் திட்டம், ட்ரம்பின் முதல் பதவிக் காலத்தில் சேதமடைந்தது. முதல் ட்ரம்ப் நிர்வாகத்தின் தனிமைப்படுத்தல், உலகமயமாக்கல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்புவாத வெளியுறவுக் கொள்கை என்பன தாராளவாத சர்வதேசியத்திலிருந்து எவ்வளவு தீவிரமாக முறித்துக் கொண்டது என்பதை ஒருவர் பின்னோக்கிப் பார்த்தால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

டிரம்ப், ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் ஆதரித்த புதிய தாராளவாத டிரான்ஸ் - பசிபிக் கூட்டாண்மையை (TPP) கிழித்தெறிந்தார். நேட்டோ உறுதிமொழிகளை ஒரு சுமையாகக் கருதி கூட்டணியை விட்டு வெளியேறுவதாக அச்சுறுத்தினார். ஜப்பானும் கொரியாவும் அமெரிக்கத் துருப்புக்களை தங்கள் நாடுகளில் வைத்திருப்பதற்கு அதிக பணம் செலுத்த வேண்டும் அல்லது அமெரிக்க இராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கோரினார். உலக வர்த்தக அமைப்பின் (WTO) விதிகளை மிதித்தார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியைப் புறக்கணித்தார். ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். மேலும் ஆச்சரியம் தரும் வகையில் வட கொரியாவில் காலடி எடுத்து வைத்தார்.

இந்தச் செயல்கள், ஜனநாயகக் கட்சி என்ற நிறுவனத்திற்கு மட்டுமல்ல, அனைத்து அரசியல் உயரடுக்கினருக்கும், அமெரிக்க மேலாதிக்கத்தை ஊக்குவிப்பதில் இருதரப்பு மற்றும் கூட்டணிகளின் அத்தியாவசிய பங்கை நம்புபவர்களுக்கும், அதே போல் டிக் செனி பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய பழைமைவாத ஸ்தாபனத்திற்கும், ட்ரம்ப் மீதான ஆழமான விரோதத்திற்கான காரணத்தை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் அதே மேலாதிக்க திட்டத்தை முன்னெடுக்க அதிக ஒருதலைப்பட்ச முறைகளை விரும்புகிறார்கள். ஆனால் ட்ரம்பின் இயங்கியல் வேறு வகைப்பட்டதாக இருந்தது.

> ***ட்ரம்ப் கணிக்க முடியாத தன்மை கொண்டவர். ஆனால் அவரது உள்ளுணர்வு அடிப்படையில் அவரது திட்டமானது தனிமைப்படுத்தல் என்ற உள்நோக்கம் கொண்டது. தாராளவாத சர்வதேசிய திட்டத்தின் விரிவான ஏகாதிபத்தியத்திற்கு மாறாக இந்தத் திட்டம் தற்காப்பு ஏகாதிபத்தியம் என்று முத்திரை குத்தப்படலாம்.***

ட்ரம்ப் கணிக்க முடியாத தன்மை கொண்டவர். ஆனால் அவரது உள்ளுணர்வு அடிப்படையில் அவரது திட்டமானது தனிமைப்படுத்தல் என்ற உள்நோக்கம் கொண்டது. தாராளவாத சர்வதேசிய திட்டத்தின் விரிவான ஏகாதிபத்தியத்திற்கு மாறாக இந்தத் திட்டம் தற்காப்பு ஏகாதிபத்தியம் என்று முத்திரை குத்தப்படலாம். இறக்குமதிகளுக்கு எதிராகவும் வெள்ளையர் அல்லாத புலம்பெயர்ந்தோருக்கு எதிராகவும் ஒரு சுவரை எழுப்புவதன் மூலம், அவரும் அவரது MAGA அமைப்பும் பேரரசின் சேதமடைந்த மையமாகக் கருதுவதை மீண்டும் கட்டியெழுப்புகிறது. அமெரிக்கப் பேரரசின் உள்நாட்டு மையத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகிறது. கனடா, கிரீன்லாந்து, பனாமா கால்வாய் மற்றும் மெக்சிகோ வளைகுடா பற்றிய அவரது கருத்துக்கள் அமெரிக்காவின் முன்னுரிமைகள் மீது மீண்டும் கவனம் செலுத்துவதைப் பிரதிபலிக்கின்றன.

உலகின் பிற பகுதிகளில் அமெரிக்காவின் நிலைப்பாட்டை இந்தக் கண்ணோட்டத்தில் நோக்க வேண்டியுள்ளது. உக்ரைன் மீதான போரைப் போல, உலகின் ஒரு பகுதியில் சர்வாதிகாரத்துடன் சமரசம் செய்வது அல்லது அதை திருப்திப்படுத்துவது, உலகின் பிற பகுதிகளில் அமெரிக்க நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்ற புதிய தாராளவாத சர்வதேச கொள்கையில் ட்ரம்ப் நிச்சயமாக நம்பிக்கை கொள்ளவில்லை. இது புதிய சாத்தியங்களையும் சவால்களையும் ஏற்படுத்துகிறது.



> **“ உக்ரைன் மீதான போரைப் போல, உலகின் ஒரு பகுதியில் சர்வாதிகாரத்துடன் சமரசம் செய்வது அல்லது அதை திருப்திப்படுத்துவது, உலகின் பிற பகுதிகளில் அமெரிக்க நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்ற புதிய தாராளவாத சர்வதேச கொள்கையில் ட்ரம்ப் நிச்சயமாக நம்பிக்கை கொள்ளவில்லை. ”**

நாம் ஏற்கனவே பல் துருவ உலகில் இருக்கிறோம். இதை நாம் ஏற்றாக வேண்டும். பழைய வரைமுறைகளுக்குட்பட்ட பார்வையில் ஒட்டிக்கொள்வது காலத்திற்கு முரணானது. 2010-களில் ஒற்றை துருவ தருணத்திலிருந்து நாம் வெளியேறிவிட்டோம். இதன் அர்த்தம் அமெரிக்க அதிகாரத்தின் பெரிய களங்களும், அமெரிக்க ஆதிக்கமும் கூட இன்னும் இல்லை என்பதல்ல. இராணுவ சக்தி, உலகளாவிய நிதி மற்றும் உயர் தொழில்நுட்பத்தின் சில பகுதிகள் ஆகியவற்றில் அமெரிக்காவே தலையாயதாக உள்ளது. இருப்பினும், மிகவும் பொதுவான அர்த்தத்தில், அமெரிக்க அதிகாரம் துண்டு துண்டாகப் பிரிக்கப்படுவதைக் கண்டோம். அதன் அதிகாரமற்ற தன்மை, அமெரிக்க மேலாதிக்கத்தின் மேன்மை ஆகியன கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளன. அதிகாரத்தின் வெவ்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் அமெரிக்க உயரடுக்கின் திறன் இந்தக் கட்டத்தில் உண்மையில் இடிந்து விழுந்தது.

## ஒழுங்கமைவின் மீள்ஒழுங்கு:

2003-ஆம் ஆண்டு புஷ் நிர்வாகத்தின் ஒருதலைப்பட்சமான செயற்பாடுகள் உலகின் பிறபாகங்களில் மிகப்பெரிய எச்சரிக்கை மணியாக அமைந்தது. குறிப்பாக பெய்ஜிங்கிலும் மாஸ்கோவிலும் கணிசமான சிந்தனை மாற்றத்தைக் கோரியதோடு பல துருவ உந்துதலை இயக்கியது. அமெரிக்கா ஒரு தள்ளாடும் மற்றும் நம்பகத்தன்மையற்ற நங்கூரம் என்பதையும், சீனத் தலைமை உணர்ந்ததன் மூலம், பெய்ஜிங் தனது சொந்தப் பாதையை வகுக்க வேண்டும் என்ற அதிகரித்து வரும் உறுதிப்பாடு 2008 - 2009-இல் தொடங்குகிறது. 1990-களிலிருந்து அமெரிக்க அதிகாரத்தின் தன்னம்பிக்கை முன்கணிப்புக்கு மிகவும் முக்கியமான உலகமயமாக்கலின் கதை, வெவ்வேறு வழிகளில் தங்களுக்கு எதிராகத் திரும்பக்கூடும் என்பது அமெரிக்கத் தலைமைக்குத் தெளிவாகத் தெரிந்த தருணம் 2008-ஆம் ஆண்டாகும்.

அமெரிக்காவிற்கான எதிர்வினைக்குத் தயாராவதை ரஷ்யா மெது மெதுவாக முன்வைக்கத் தொடங்கியது. புட்டினின் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டு உரை 2008-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பு வந்தது. அது ஒற்றைத் துருவ உலக ஒழுங்கை சவாலுக்குட்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஜோர்ஜியாவில் ரஷ்ய இராணுவத் தலையீடு நிகழ்ந்தது. இது ஒற்றை மைய உலகின் நிறைவைத் தெளிவாகக் கோடுகாட்டியது. சீனாவின் பொருளாதார வளர்ச்சி அதை உறுதிசெய்தது.

இந்தப் பின்புலத்தில் சில அடிப்படைக் காரணங்களைப் பார்க்கலாம்: முதலாவதாக, அமெரிக்க உழைப்பிற்கு வழங்கப்படும் கூலியின் 5 வீதத்துக்கும் குறைவான மலிவான கூலி உழைப்பைத் தேடி அமெரிக்காவின் நாடுகடந்த மூலதனம் சீனாவிற்கு பறந்தது. இது புஷ் சீனியர் முதல் ஒபாமா நிர்வாகம் வரை வாஷிங்டனின் ஆசீர்வாதங்களைப் பெற்ற ஒரு செயல்முறையாகும். ‘சீன அதிர்ச்சி’ என்று அழைக்கப்படுவது அமெரிக்கர்கள் சுமார் 2.4 மில்லியன் உற்பத்தி வேலைகளை இழந்ததாகவும், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கும் ஒரு துடிப்பான உற்பத்தித் துறைக்கும் இடையிலான வினைத்திறனான தொடர்பை அழித்ததாகவும் சிலர் மதிப்பிடுகின்றனர்.

இரண்டாவது பெரிய பங்களிப்பு நிதிமயமாக்கல் ஆகும், இது ஊகங்களிலிருந்து பெறக்கூடிய பாரிய இலாபத்தின் காரணமாக நிதித் துறையை முதலீட்டிற்கு விருப்பமானதாக மாற்றியது. தொழில்மயமாக்கல் மற்றும் நிதிமயமாக்கல் இரண்டும் அமெரிக்க மக்கள் தொகையில் குறைந்தது பாதிப் பேரின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரங்களின் தேக்கத்திற்கும் சமத்துவமின்மையின் கூர்மையான அதிகரிப்பிற்கும் முக்கிய காரணிகளாக இருந்தன.

மூன்றாவது, புஷ் ஜூனியர் நிர்வாகத்தின் கீழ் மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவ சக்தியின் அதிகப்படியான விரிவாக்கம், ஒரு பொறியாக மாறியது, அதில் இருந்து வாஷிங்டன் தன்னை விடுவித்துக்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது மற்றும் கூட்டாளிகளுடன் கூட அதன் நம்பகத்தன்மையை இழக்க வழிவகுத்தது.

இப்போது, அமெரிக்காவின் தொழில்மயமாக்கலின் எதிர் மாறான நிலை சீனாவின் மீஉயர் - தொழில்மயமாக்கலாகும், இது உலக முதலாளித்துவ அமைப்புக்கு முற்றிலும் வெளியில் இருந்து மிக விரைவாக நிகழ்ந்த சாதனையாகும். இது சுமார் 30 ஆண்டுகளுக்குள் நடந்தது. இது விரைவான தொழில்மயமாக்கலை மட்டுமல்ல, விரைவான தொழில்நுட்பக் கையகப்படுத்தலையும் உள்ளடக்கியது, இதனால் சீனாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அடித்தளம் இப்போது பெரும்பாலும் தன்னிறைவு பெற்றுள்ளது.

மேற்கத்தேய மதிப்பு மற்றும் விநியோகச் சங்கிலிகளில் சீனாவைச் செருகியதிலிருந்து நாம் கண்ட அசாதாரண வளர்ச்சியை நாம் நோக்கலாம். இது நூற்றுக்கணக்கான மில்லியன் சீன கிராமப்புற மக்களின் மிகப்பெரிய நகரமயமாக்கலை உள்ளடக்கியது, ஆனால் இது கடந்த 10 ஆண்டுகளில் சீனா உலகளாவிய உற்பத்தியை நடைமுறையில் ஒவ்வொரு முக்கிய பகுதியிலும் ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலைக்கு வழிவகுத்தது அல்லது குறைந்தபட்சம் மேற்கத்தேய அல்லது பிற கிழக்கு ஆசியப் போட்டியாளர்களுடன் ஒரு குறிப்பிடத்தக்க போட்டியாளராக அல்லது முக்கிய பங்காளியாக உள்ளது.

அமெரிக்கா அதன் உற்பத்தி உச்சத்தில் இருந்ததைப் போலவே, சீனாவின் திறனும் இப்போது 1.4 பில்லியன் மக்களின் பெரிய சந்தையை அடிப்படையாகக் கொண்ட சீன உள்நாட்டு தேவையால் ஆதிக்கம் செலுத்துகிறது. எனவே அந்த சந்தைகள் வெறும் மாறும் தன்மை கொண்டவை அல்ல, ஆனால் போக்குகளை அமைக்கும் தன்மை கொண்டவை. இதற்கு நல்ல உதாரணம் சீனாவின் மின்சார வாகனங்கள். சீனச் சுற்றுச்சூழல் அமைப்பு, சந்தை, தேவை, உற்பத்தி வேகம், பயணப்பாதைகள், நுகர்வோர் பாணி, தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் திறன் அனைத்தும் எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படுகின்றன என்பதைச் சீனாவின் மின்சார வாகனங்களில் நாம் மிகவும் வியத்தகு முறையில் காண்கிறோம். டொயோட்டா, வோக்ஸ்வகன் போன்ற முக்கிய கிழக்கு ஆசிய, ஐரோப்பியப் போட்டியாளர்கள் சீனச் சந்தையில் தொங்கவேண்டுமா? அல்லது சீனப் போட்டிக்கு எதிராகத் தங்கள் உள்ளூர் சந்தைகளைப் பாதுகாக்கப் பல்வேறு வகையான பாதுகாப்புவாதத்தை அதிகளவில் நம்பியிருக்க வேண்டுமா? என்பது குறித்து ஒரு மூலோபாயத் தேர்வை எதிர்கொள்கின்றனர். மேலும் கார் உற்பத்தியில் கவனம் செலுத்துவது மதிப்புக்குரியது, ஏனென்றால் விநியோகச் சங்கிலிகளின் அதிநவீன பெரிய அளவிலான உலகமயமாக்கலைப் பார்த்தால், ஆட்டோமொபைல் தொழில் ஒரு காலத்தில் உலகளாவிய முதலாளித்துவத்தின் மையமாக இருந்தது. 1970-கள் மற்றும் 1980-களில் நன்கறியப்பட்ட 'ஃபோர்டிசத்தின் சகாப்தம்' பொதுப் பார்வையில் இருந்து மறைந்துவிட்டது, ஆனால் அது சந்தேகத்திற்கு இடமின்றி விநியோகச் சங்கிலிகளின் பிராந்திய வளர்ச்சியின் முக்கிய இயக்கிகளில் ஒன்றாகும்.

புதுமையின் இடம் சீனாவிற்கு நகர்வதன் மூலம் நாம் இதற்கு முன்பு பார்த்திராத ஒரு வகையான வரலாற்று மாற்றத்தை இங்கே காண்கிறோம், மேலும் இது சீனாவின் உள்ளக வளர்ச்சியாகும். எனவே, இது முதலாளித்துவத்தை மாற்றுமா? என்ற வினாவுக்கு இல்லை என்பதே பதிலாகும். ஏனென்றால் முதலாளித்துவம் தொடர்ந்து மாற்றமடைந்து வரும் ஒரு அமைப்பு. அதற்குத் தனித்தவொரு தன்மை கிடையாது. இது ஒரு தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்டிருக்கவில்லை, ஆனால் உலகளாவிய தொழிலாளர் பிரிவின் முக்கிய பகுதிகளில் ஒன்றில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

இன்னொரு துறையான நிதியைப் பற்றி நோக்கின், 2008-ஆம் ஆண்டுமுதல் நாம் கண்டிருப்பது அதிகரித்து வரும் இரு முனைத்தன்மை. டொலரை மையமாகக் கொண்ட அமெரிக்க ஆதிக்க அமைப்பு நம்மிடம் உள்ளது. ஒரு காலத்தில் அது பல மையமாக இருந்தது, ஐரோப்பியர்கள் மற்றும் கிழக்கு ஆசியர்கள் வோல் ஸ்ட்ரீட்டுடன் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தனர், ஆனால் அது 2008-ஆம் ஆண்டுமுதல் பெரும்பாலும் மறைந்து விட்டது. எனவே, முக்கிய அமெரிக்க அரங்காடிகளான பிளாக்ராக்ஸ், ஜேபி மோர்கன்களால் பெருமளவில் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு டாலர் அமைப்பு இன்று உள்ளது. பின்னர், அதிலிருந்து தனித்தனியாக, சீன மாற்று விகிதம் மற்றும் நாணயக் கட்டுப்பாடுகளுக்குள், ஒரு சீன அமைப்பு, மீண்டும், சீன சந்தையின் அளவைக் கருத்தில் கொண்டு, அமைக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்க மைய அமைப்பின் ஒரு பகுதியாக இல்லை. இருந்த போதும் முதலாளித்துவத்தை கொள்கையளவில் மாற்றாது. இது அதன் புவியியல் நோக்கத்தை மாற்றுகிறது. உலகமயமாக்கல் தொடர்பாக அதன் எதிர்பார்ப்பு எல்லையை மாற்றுகிறது.

தேசியமயமாக்கல் போக்கு, பாதுகாப்புவாதத்தை நோக்கிய போக்கு, அதன் ஆக்கிரமிப்பு வடிவத்தில் ஒரு புதிய மற்றும் முக்கியமான வளர்ச்சியாகும். மீண்டும், இது அமெரிக்காவில் உள்ள இரு கட்சிகளும் ஏற்றுக்கொண்ட திட்டமாகும், ஏனெனில் ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் இதில் பங்கேற்கின்றனர். எனவே ட்ரம்பின் கீழ் அமெரிக்காவின் அரசியல் பொருளாதாரத்தில் ஒரு முறிவு ஏற்பட்டுள்ளது. ஆனால் அது அடிப்படையில் முதலாளித்துவத்தை மாற்றாது. ஏனென்றால் அமெரிக்காவின் முதலாளித்துவம் 19-ஆம் நூற்றாண்டில் பெரிய பாதுகாப்புவாத அமைப்பின் கீழ்



வளர்ந்தது என்பது தெளிவாகிறது. இது வெளிப்படவும் வளர வும் பல வழிகள் இருந்தன. ஆனால் ட்ரம்பின் கீழ் இது திசையை மாற்றுவதோடு வெவ்வேறு அரங்காடிகளின் பேரம் பேசும் சக்தியை மாற்றுகிறது. அதேவேளை பேரம் பேசும் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய மற்றும் அந்நியச் செலாவணி யைப் பயன்படுத்தக்கூடிய புள்ளிகளை மாற்றுகிறது. மேலும் சீன அமைப்பின் வடிவத்தில், கட்சி மற்றும் அரசு நிறுவனங் களின் பங்கு காரணமாக முதலாளித்துவம் என்றால் என்ன என்பதற்கான வரையறைக்குச் சரியாக பொருந்தமான ஒன்றை அடையாளம் காண்பது சிக்கலாகியுள்ளது. எப்படி யிருந்தாலும், பெரிய மாற்றங்கள் நிகழும் ஒரு மாறுபட்ட, சிக்கலான பல்மைய மாதிரியை நாம் காண்கிறோம்.

### தாராளமயத்தின் வழித்தடம்:

தாராளமயக் கொள்கையிலிருந்து விலகுவதைப் பொறுத் தவரை, அது சீரற்றதாகவே இருந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் சீனா, நாட்டின் வளர்ச்சியின் வெற்றிக்குக் காரணம் என்று தனது முதலாளித்துவ மாதிரியையே கூறி வரு கிறது. எது எவ்வாறு இருப்பினும், புதிய தாராளமயம் சர்வ தேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் சித்தாந்த மாகத் தொடர்கிறது. இலங்கை போன்ற பல நாடுகளில், அவர்கள் புதிய தாராளமயக் கொள்கைகளை தொடர்ந்து செயற்படுத்துகிறார்கள், ஏனெனில் பிரிட்டன் வூட்ஸ் நிறு வனங்கள் இந்தக் கொள்கைகளைச் சட்டமாக்குவதற்கும், அவற்றின் அரசியலமைப்புகளில் அவற்றை நிறுவனமயமாக்கு வதற்கும் நாடுகளைத் தள்ளியுள்ளன.

ஆயினும்கூட, புதிய தாராளமயக் கொள்கைகளின் பாரிய தோல்வி தவிர்க்க முடியாமல் இந்தக் கொள்கைகளைக் கைவிடுவதற்கும், சமூக நலன், மறு ஒழுங்குமுறை மற்றும் அரசின் முன்னணிப் பங்கிற்கு முன்னுரிமை அளிக்கும் முயற்சி களை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்துவதற்கும் மிகப் பெரிய அழுத்தங்களை உருவாக்கும். 2019-ஆம் ஆண்டு சிலியில் நடந்த புதிய தாராளமயத்திற்கு எதிரான கிளர்ச்சி யில் இதை நாம் கண்டோம். இந்தப் போக்கை நாம் மேலும் மேலும் காண்போம். புதிய தாராளமயத்திற்குப் பிந்தைய நிலையில், தேசிய பொருளாதார இலக்கு நிர்ணயம்தான் போக்காக இருக்கும் என்றும், திட்டமிடல் மீண்டும் சட்டபூர்வ மாக மாறும் என்றும், நுகர்வு மற்றும் முதலீடு போன்ற அடிப் படைப் பிரச்சினைகளில் தொழில்நுட்ப ரீதியாக முடிவெடுப் பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

அரசாங்கங்களுக்கிடையேயான உறவுகளைப் பொறுத்த வரை, பலதரப்பு அமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட, தேசிய எல்லைகளைக் கடந்து மூலதனம் மற்றும் பொருட் களின் சுதந்திரமான ஓட்டத்தைக் கண்ட உலகமயமாக்கல் சகாப்தம் சவாலுக்குள்ளாகியுள்ளது. வர்த்தகம், மூலதன ஓட் டங்கள், உதவி மற்றும் இடம்பெயர்வு ஆகியன இருதரப்பு உறவுகளின் தன்மையைத் தீர்மானிக்க வழிவகுக்கும். இந்த உறவுகளின் தன்மை, நாடுகள் புவிசார் அரசியல் போட்டி யாளர்களா? அல்லது அவை இன ரீதியாகவோ அல்லது கலாசார ரீதியாகவோ இணக்கமானவையாகக் கருதப்படு கிறதா? என்பதைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும். ட்ரம்ப் ‘ஷிட்ஹோல் நாடுகள்’ என்று அழைப்பது, அதாவது உலகளா விய தெற்கில் நம்மில் பெரும்பாலோர், இருதரப்பு உறவு களின் வலையமைப்பிலிருந்து ஓரங்கட்டப்படுவோம்.

> ***“தேசியமயமாக்கல் போக்கு, பாதுகாப்புவாதத்தை நோக்கிய போக்கு, அதன் ஆக்கிரமிப்பு வடிவத்தில் ஒரு புதிய மற்றும் முக்கியமான வளர்ச்சியாகும்.”***

இப்போது, முதலாளித்துவத்தின் நிறுவன நிலப்பரப்பு மாறி வருவதையும் ஒருவர் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நெப்போலியக் கொள்கைகள் என அறியப்படும் ஆக்கிர மிப்பு, அடாவடித்தனம் போன்ற கொள்கைகளைக் கொண்ட பில்லியனர்கள் தோன்றுவதையும் நாம் கண்டிருக்கிறோம். அவர்கள் அரசு மற்றும் ஊடகங்கள் மற்றும் சிவில் சமூ கத்தை தங்கள் தனிப்பட்ட இலக்குகளுக்காகப் பயன்படுத்த ஆர்வமாக உள்ளனர். ட்ரம்ப், எலோன் மஸ்க் மற்றும் ஜெஃப் பெசோஸ் ஆகியோரிடையேயான இணைப்பு இதற்கு நல்ல உதாரணம். எனவே, தற்போதைய உலகளாவிய நிறுவன நிலப்பரப்பின் இரண்டு முக்கிய கூறுகள் முக்கியமானவை: சந்தையின் மறு ஒழுங்குமுறை (re-regulation of the market) மற்றும் நெப்போலிய முதலாளித்துவத்தின் தோற்றம் (emergence of Napoleonic capitalists).

இப்பின்புலத்தில் புதிய தாராளமயம் பற்றிய கேள்வியில், சம காலத்தின் வெவ்வேறு பரிமாணங்களை வேறுபடுத்திப் பார்ப் பது பயனுள்ளதாக இருக்கும். தாராளமயச் சித்தாந்தம், கோட்பாடு, ஆகியன மிகவும் சிதைந்து, அடிப்படையில் சீர்கு லைந்து, சில சந்தர்ப்பங்களில் மிகவும் அப்பட்டமாக கை விடப்பட்டுள்ளது. ஆனால் நீங்கள் புதிய தாராளமயத்தை ஒரு நிர்வாக முறையாகவும், அரசாங்க முறையாகவும் சிந்திக் கலாம்.

புதிய தாராளமயத்தை இன்னொரு வழியில் பார்த்தால், அது ஒரு வர்க்கத்திட்டம். இது மறுபகிர்வு பற்றிய கேள்வி. இது தொழிலாள வர்க்கத்தின், நலன்புரி அரசின் நிறுவனங்களின் தற்போதைய வேரூன்றிய தற்காப்புக் கட்டமைப்புகளை உடைக்க முயற்சிக்கிறது.

நவதாராளவாதத்தை ஒரு கலாசாரத் திட்டமாக, குடிமக்க ளாகவோ அல்லது சமூக வலைப்பின்னல்களின் உறுப்பினர் களாகவோ அல்ல, மாறாக சந்தை நடிகர்களாகவோ மனிதர் களை அகநிலைப்படுத்தும் யோசனையாக நாம் அடை யாளங்காண வேண்டியுள்ளது. தற்போதைய தருணத்தின் சமூகத்தளப் பொருளாதாரங்கள் துல்லியமாக அந்த மாதிரி யின் மிகவும் தீவிரமான உருவகமாகும். அமெரிக்கா மற்றும் சீன சமூக ஊடக அமைப்பில் செல்வாக்குச் செலுத்துபவர் களாக இருக்க விரும்பும் கோடிக்கணக்கானோரின் சுய-பிராண்டிங், சுய-ஃபேஷன், சுய-விளம்பரத்தில் நீங்கள் அதைக் காணலாம். இன்று அனைத்தும் நிகர்நிலையாகியுள் ளன. வர்த்தகத்தின் பிரதான தளங்களாக சமூக வலைத் தளங்கள் உருவெடுத்துள்ளன.

மேற்கில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு அதன் சமூகம் சமூக வலைத்தளக் கட்டமைப்புகளைச் சுற்றி மிகவும் ஆழ மாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இது மேற்குலகிற்கு மட்டுப் பட்டது மட்டுமல்ல என்பதை உணர நீங்கள் சீனாவில் அதிக நேரம் செலவிட வேண்டியதில்லை. WeChat அமைப்பில்

இல்லாமல் நீங்கள் அங்கு வாழ முடியாது. நீங்கள் எதையும் வாங்க முடியாது! எனவே, இது தனிநபர் அகநிலைப்படுத்தல் மட்டத்தில் மிகவும் ஆழமாக ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பாகும், இது சந்தைப்படுத்தல் மற்றும் சுய-சந்தைப்படுத்தல் செயல்முறையை மேலும் மேலும் தீவிரமாக இயக்குகிறது. இது சீனா மற்றும் ஆபிரிக்காவின் பெரும்பகுதிகளைப் போலவே ஏனைய மூன்றாமுலக நாடுகளைச் சென்றடையும் நோக்கத்தில் உண்மையிலேயே உலகளாவியது.

நீண்ட காலமாக, உலக அரங்கில் முக்கிய அரங்காடிகளாக நாடுகடந்த நிறுவனங்களைப் புரிந்துகொள்வதற்கான மாற்றம் இருந்தது. புவிசார் அரசியல் போட்டி மற்றும் தேசிய அரசின் மீள் வருகையுடன் அது இப்போது மாறி வருகிறதா? என்ற வினா முக்கியத்துவம் பெறுகிறது.

இதற்குப் பதிலளிக்க ஒரு குறிப்பிட்ட விடயத்தை நோக்கலாம். சீனாவுடனான அமெரிக்காவின் உறவில் இரண்டு முக்கிய காரணிகள் உள்ளன. ஒன்று ஆப்பிள், மற்றொன்று எலான் மஸ்க். மேலும் குறிப்பிட்ட நிறுவனங்களின் நலன்கள் எவ்வாறு சவாலுக்குட்படுகின்றன அல்லது உண்மையில் கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

உதாரணமாக, சீனாவுடனான அனைத்து வர்த்தகத்திலும் முதல் ட்ரம்ப் நிர்வாகத்தால் அதிக வரிகள் அறிவிக்கப்பட்ட போதிலும், அப்பிள், மிகவும் வெற்றிகரமான பரப்புரைகளுக்குப் பிறகு, அதன் விநியோகச் சங்கிலியின் அனைத்து முக்கிய கூறுகளுக்கும் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் பிரித்தெடுக்கப்பட்டது என்பதை நாங்கள் அறிவோம். அமெரிக்காவின் மிகவும் மதிப்புமிக்க பொது நிறுவனமாக, மூன்று டிரில்லியன் டாலர் சந்தை மதிப்பு வரம்பை முறியடித்த முதல் நிறுவனம் என்ற வகையில் வெள்ளை மாளிகையால் எளிதில் சவாலுக்குட்படுத்தக்கூடிய ஒன்றல்ல. அப்பிளின் நலன்களைத் தாக்குவது, ஏதோ ஒரு மட்டத்தில் அதன் வணிகம் மற்றும் விநியோகச் சங்கிலியைத் தாக்கும். அது பல வகைகளில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு உத்திக்கு எதிராக, ஆழமாகச் செல்லக்கூடியது.

அதேவேளை எலான் மஸ்க்கின் நலன்களுக்காக அமெரிக்க அரசு, எவ்வாறு செயற்படுகிறது என்பதைப் பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். மஸ்க்கின் நலன்கருதி, அமெரிக்க அரசு எந்திரத்தால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு எதிராக இயக்கப்பட்ட முற்றிலும் அசாதாரண பிரச்சாரம் சீனாவின் தொழில்நுட்ப ஜாம்பவான்களில் ஒன்றாக ஹுவாவேயிற்கு (Huawei) எதிராக இருந்தது. அமெரிக்காவின் அழுத்தத்தால் மேற்குலகில் ஹுவாவே தனிமைப்படுத்தப்பட்டது. குறிப்பாக விண்வெளி ஆய்வில் ஹுவாவே முன்னிலையில் இருந்தது. ஆனால் அமெரிக்க அழுத்தத்தார் ஹுவாவேயின் நிலை மாறுகிறது. அது உலகளாவிய சந்தைகளை இழக்கிறது. இது மஸ்க்கிற்கு வாய்ப்பாகிறது.

இதனால், நிறுவனங்கள் மற்றும் அரசு இடையேயான மாறி வரும் உறவைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் உண்டு. ஏனெனில் டிக்டாக்கைத் தடை செய்வதைத் தள்ளி வைக்குமாறு ட்ரம்ப் உச்ச நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்ட வழக்கையும் இங்கு சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது. எனவே, அரசுக்கும் வெளிநாட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இடையிலான உறவை உணர ட்ரம்ப் நிர்வாகம் தடுமாறுவது வெளிப்படையானது.

உலகளாவிய தெற்கில் சந்தை மற்றும் தனியார் துறையுடன் ஒப்பிடும்போது தேசிய அரசு இன்னும் சக்திவாய்ந்த அரங்காடியாக மாற வாய்ப்புள்ளது. பொருளாதார செழிப்பு அரசாங்கங்கள் தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் தீவிரமாக ஆதரிப்பதையும், போட்டி நாடுகள் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பெறுவதைத் தடுப்பதையும் சார்ந்துள்ளது என்பதை உணர்ந்ததே இதற்குக் காரணம்.

பன்னாட்டு நிறுவனங்கள் தொடர்ந்து செல்வாக்கு மிக்க அரங்காடிகளாக இருக்கும், ஆனால் போட்டி நாடுகளிலிருந்து தங்கள் மதிப்புச் சங்கிலியின் முக்கிய பகுதிகளை மீட்டெடுப்பது மற்றும் மாற்றுவது போன்ற அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப அவை பெருமளவில் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்.

ஏதோ ஒரு மட்டத்தில், பெருநிறுவன அதிகாரம் தொழில்முறை நிர்வாக வர்க்கத்துடன் இணைந்திருக்கிறது. இறுதியில் அதை யார் வைத்திருக்கிறார்கள், யார் இலாபத்தை உருவாக்குகிறார்கள் என்பது ஒரு விஷயம், ஆனால் பெரும்பாலான மிகப் பெரிய நிறுவனங்கள் மிகவும் மாறுபட்ட வழிகளில் நடத்தப்படுகின்றன, பின்னர் ஒரு படியில் Black-Rock போன்ற நிதிகளால் இயக்கப்படுகின்றன, அவையே உலகளாவிய முதலாளித்துவத்தின் நிர்வாகத்திற்கான ஒரு வகையான அடிப்படைத் தொழில்முறை நிர்வாக அணுகுமுறையை உள்ளடக்குகின்றன.

## எதிர்காலம் குறித்த நிச்சயமின்மைகள்:

அதிகரித்து வரும் இராணுவவாதம், அதிகரித்து வரும் அமெரிக்க-சீன விரோதம், அவர்களின் பொருளாதார உறவுகளுக்கும் போரை நோக்கி அதிகரித்து வரும் உந்துதலுக்கும் இடையிலான பதற்றம் ஆகியவை ட்ரம்பின் ஆட்சியில் புதிய கட்டத்திற்கு நகரும் என எதிர்பார்க்கலாம். ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலத்தில் அமெரிக்க - சீன உறவு ஒரு கூட்டாண்மையிலிருந்து போட்டியாக மாறியதை



நாம் கண்டிருக்கிறோம். கடந்த 10 ஆண்டுகளில், சீனாவை ஒரு போட்டியாளராக வரையறுப்பதில் அமெரிக்கா முன்னணியில் இருப்பதைக் கண்டிருக்கிறோம், அதே நேரத்தில் சீனா அமெரிக்காவுடனான சாதாரண உறவுகள் என்று அழைப்பதற்கு, அதாவது 1980-களின் பிற்பகுதியிலிருந்து 2016-ஆம் ஆண்டுவரையிலான காலகட்டத்தின் கூட்டாண்மைக்குத் திரும்ப வேண்டும் எனத் தொடர்ந்து அழைப்பு விடுத்துள்ளது. உலகளாவிய மேலாதிக்க நாடாக அமெரிக்காவை மாற்றுவதற்கான தனது நோக்கத்தையும் சீனா மறுத்துள்ளது. அதேவேளை, பிரிட்டன் வூட்ஸ் அமைப்புக்கு மாற்று பலதரப்பு அமைப்பையும் ஊக்குவிக்கவில்லை.

பிரிக்ஸ் அமைப்பின் புதிய அபிவிருத்தி வங்கி மற்றும் அவசர இருப்பு ஏற்பாடுகள் போன்றன வேண்டுமென்றே வளர்ச்சியடையாமல் உள்ளன. பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்திருந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக பெய்ஜிங்கை விட மூன்று மடங்கு அதிகமாகத் தொடர்ந்து செலவழிக்கும் அமெரிக்காவுடனான செலவினங்களில் சீனா எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

ட்ரம்ப் சீனாவுடனான வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் போரைத் தொடர வாய்ப்புள்ளது. ஆனால் பைடன் நிர்வாகத்தால் துரிதப்படுத்தப்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டை அவர் மேற்கொள்வாரா? என்பது உறுதியாகத் தெரியவில்லை. ட்ரம்ப் என்பது கணிக்க முடியாத தன்மைக்கு ஒத்த சொல், ஆனால் அவர் ஆசிய - பசிபிக் பகுதியை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சீனாவின் 'செல்வாக்கு மண்டலத்தில்' இருப்பதாகப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். அதே நேரத்தில் அந்தப் பிராந்தியத்துடன் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பற்றிய சொல்லாட்சியைப் பேணுகிறார்.

இப்போது, ஒரு உலகளாவிய மேலாதிக்கத்திலிருந்து இன்னொரு உலகளாவிய மேலாதிக்கத்திற்கு மாறுவது தவிர்க்க முடியாதது என்ற எதிர்பார்ப்பு ஆய்வாளர்கள் மற்றும் அதிகாரத்துவ உயரடுக்கினரிடையே உள்ளது. ஆனால், ட்ரம்பின் கீழ் அமெரிக்கா, முக்கியமான கட்டுப்பாடுகள் உணரப்படுவதால், உலகளாவிய மேலாதிக்கத்தின் பழைய பாத்திரத்தை ஏற்கத் தயங்கக்கூடும், மேலும் சீனா அதை நிரப்ப விரும்பவில்லை என்பதால், குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் நாம் காணக்கூடியது ஒரு மேலாதிக்க வெற்றிட மாக இருக்கலாம், இருபதாம் நூற்றாண்டில் பிரிட்டன் உலகளாவிய மேலாதிக்கத்தின் பாத்திரத்தை வகிக்க மிகவும் பலவீனமாக இருந்த போதும், அமெரிக்கா அதை நிரப்ப விரும்பவில்லை.

இந்த மேலாதிக்க வெற்றிடத்தின் தாக்கங்கள் பன்முகப்பட்டவை. இந்த வெற்றிடத்தால் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கு என்ன நிகழும். வாய்ப்புகள் மற்றும் சவால்களின் அடிப்படையில் அவர்கள் இந்த செயல்முறையை எவ்வாறு வழிநடத்த வேண்டும் போன்ற கேள்விகள் இப்போது எழுகின்றன. மேலாதிக்க வெற்றிடம் அல்லது தேக்கநிலை தோன்றுவதால், அமெரிக்க - சீன உறவு தொடர்ந்து முக்கியமானதாக இருக்கும், ஆனால் தீவிர காலநிலை நிகழ்வுகள், வளர்ந்து வரும் பாதுகாப்புவாதம், அமெரிக்கா அதன் உச்சக்கட்டத்தில் ஏற்படுத்திய பலதரப்பு அமைப்பின் சிதைவு, ஆபிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் முற்போக்கான இயக்கங்களின் மறுமலர்ச்சி மற்றும் சர்வாதிகார அரசுகளின் எழுச்சி போன்ற போக்குகளை இருவராலும் தீர்க்கமாக நிர்வகிக்க முடியாது.

**எதிர்காலம், நன்மைக்கும் தீமைக்கும், மிகவும் சிக்கலானதாகவும், பல மையப்படுத்தப்பட்டதாகவும் இருக்கப் போகிறது. நாம் உண்மையில் இருக்கும் உலகம் அதுதான், அதற்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே இருக்கிறது.**

ஆயினும்கூட, அமெரிக்க மேலாதிக்கத்தின் நெருக்கடியால் பெரும் ஆபத்துகளும் உள்ளன. இந்த நெருக்கடி அதிகாரம் மேலும் பரவலாக்கப்பட்ட உலகத்திற்கான பாதையைத் திறக்கும், அங்கு உலகளாவிய தெற்கிலிருந்து வந்த சிறிய, பாரம்பரியமாகக் குறைந்த சலுகை பெற்ற அரங்காடிகளுக்கு அரசியல் மற்றும் பொருளாதார சூழ்ச்சிக்கு அதிக சுதந்திரம் இருக்க முடியும், இரண்டு வல்லரசுகளையும் ஒருவருக்கொருவர் எதிராக விளையாட வைக்கலாம். ஒருதலைப்பட்ச அல்லது தாராளவாத மேலாதிக்கத்தின் மூலம் திணிக்கப்படுவதற்குப் பதிலாக ஒத்துழைப்பு மூலம் உண்மையான பன்முக ஒழுங்கை உருவாக்க முடியும்.

## நிறைவுக் குறிப்புகள்:

காலநிலை நெருக்கடி, புவிசார் அரசியல் போட்டி, வடக்கு - தெற்கு பிளவு மற்றும் ஜனநாயகம் மற்றும் பாசிசத்திற்கு இடையிலான மோதல் தீவிரமடையும் ஒரு சகாப்தத்தில் நாம் நுழைந்துவிட்டோம். இப்போது, அந்தோனியோ கிராம்சி இந்த சகாப்தத்தை விவரிக்கப் பயன்படுத்திய ஒரு வரி உள்ளது, அது நம்முடைய சகாப்தத்திற்கும் பொருத்தமானது: 'பழைய உலகம் இறந்து கொண்டிருக்கிறது, புதிய உலகம் பிறக்கப் போராடுகிறது. இப்போது அரக்கர்களின் காலம்'.

எதிர்காலம், நன்மைக்கும் தீமைக்கும், மிகவும் சிக்கலானதாகவும், பல மையப்படுத்தப்பட்டதாகவும் இருக்கப் போகிறது. நாம் உண்மையில் இருக்கும் உலகம் அதுதான், அதற்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே இருக்கிறது, மேலும் இது பல கவர்ச்சிகரமான அம்சங்களைக் கொண்டுள்ளது. வேறு எதையும் தவிர, இது மனிதகுலத்தின் பரவலுடன் கலாசார, பொருளாதார, தொழில்நுட்ப எடையின் சமநிலையை மறுசீரமைக்கிறது. பத்தொன்பதாம் மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய காரணிகளின் கோரமான ஏற்றத்தாழ்விலிருந்து, வளங்களை மிகவும் சீரான மற்றும் பகுத்தறிவுடன் ஒதுக்குவதற்கு இது நம்மை நகர்த்துகிறது.

எனவே, கிராம்சியின் வார்த்தைகளிலிருந்து நாம் ஒரு அரக்கர்களின் யுகத்திற்குள் நுழைகிறோம், ஆனால் யுலிஸஸைப் போலவே, வாக்குறுதியளிக்கப்பட்ட பாதுகாப்பான துறைமுகத்தை அடைய வேண்டுமென்றால், ஸ்கைல்லாவிற்கும் சாரிப்டியுக்கும் இடையிலான ஆபத்தான பாதையைக் கடந்து செல்வதைத் தவிர்க்க முடியாது.



meenilankco@thaiveedu.com

## கண்களை விற்றுச் சித்திரம் வாங்கி

# 16 ஆண்டுகள் கழிந்துவிட்டன



- லயனல் பொபகே

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

இலங்கையில் 30 ஆண்டுகள் நீடித்த ஆயுத மோதல் 2009-ஆம் ஆண்டு வைகாசி மாதம் முடிவடைந்தது. அதை ஒரு வெற்றியாகக் கொண்டாட வேண்டுமா? போரினால் தாக்குண்ட மக்களைத் துக்கம் கொண்டாட அனுமதிக்க வேண்டுமா? இப்படி ஒவ்வோராண்டும் விவாதிக்கப்பட்டுவரு கிறது.

1949-ஆம் ஆண்டு முதல் வடக்கு-கிழக்குவாழ் தமிழ் மக்கள் தமக்கு ஓரளவு தன்னாட்சி நாடி விடுத்த அரசியற் கோரிக் கைக்கு இலங்கை அரசும், தேசியவாத அமைப்புகளும் மறுப்புத் தெரிவித்து வந்துள்ளன. அப்புறம் இனப்பிரச்சினை ஓர் ஆயுத மோதலாய் மாறியது. மாறிய பிறகு 'பிரிவினைப் பயங்கரவாதம்' என்று அதற்கு முத்திரை குத்தப்பட்டது. 30 ஆண்டுகளாக நீடித்த போருக்கு ஒரு கொடிய படைபலத் தீர்வு காணப்பட்டது.

அந்த அருவருப்பான காலகட்டத்தில் இடம்பெற்ற கொலைகள், காணாமல் போக்கடிப்புகள், வதைகள், உரிமை-மீறல்களுக்கு அரச ஆயுதப் படைகள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், பல்வேறு துணைப்படைகள் அனைத்துமே பொறுப்பு.

தென்னிலங்கையில் என்றுமிலாவாறு தேசியவாத-பேரினவாத அமைப்புகளின் மாபெரும் கூட்டமைப்பைக் கட்டியெழுப்பிய மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.), அப்போதைய அர சுகளும், பாதுகாப்புப் படைகளும் முன்னெடுத்த போரை மும்முரமாக ஆதரித்து வந்தது.

தேசிய மக்கள் சக்தி எனும் தனது பரந்துபட்ட அமைப் பினைக் கொண்டு எமது நாட்டையும், சமூகங்களையும் ஒருங் கிணைவை, ஒற்றுமையை, மீளிணக்கத்தை நோக்கி நகர்த் துவது ஜே. வி. பி. யின் இன்றைய பாரிய பொறுப்பாகும். அதற்கு, வெறும் வாக்குறுதிகளை அளிப்பதை விடுத்து, நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் நம்பிக் கையைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய மக்கள் சக்தி உருப்ப டியான நடவடிக்கைகளைத் துணிந்து மேற்கொள்ள வேண்டும்.

***16 ஆண்டுகளாக நடந்துவரும் போர் வெற்றிக் கொண்டாட்டங்களும், போரில் மடிந்த தம்மவரை நினைவுகூராவாறு தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளும், பிளவுண்ட சமூகங்களிடையே ஒற்றுமையையும், மீளிணக்கத்தையும், ஒருங்கிணை வையும் ஏற்படுத்த உதவியுள்ளனவா?***

நீண்டகாலமாக நடந்த கொடிய போரில் கொல்லப்பட்ட தமது குடும்பத்தவர்களை நினைந்து துக்கம் கொண்டாடுவதற்கே வடபுல மக்களை அனுமதிக்க விரும்பாத சிலர் தென்பு லத்தில் இருக்கிறார்கள். அவ்வளவு தூரம் வடக்கும் தெற்கும் இன்னமும் ஆழமாய் பிளவுண்டு கிடக்கின்றன.



தமிழ் மக்களைத் துக்கம் கொண்டாடாதவாறு தடுத்து
நிறுத்தி அடக்கி ஒடுக்கும் உரிமை தமக்கு உண்டு என,
ஆயுதப் போராட்டத்தை தோற்கடிப்பதில் பங்குபற்றியோர்
எண்ணக்கூடும். பல சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில், ஒரு
சமூகம் துன்பம் கொண்டாட, இன்னொரு சமூகம் இன்பம்
கொண்டாட முடியுமா ?

தெற்கில் நிகழ்ந்த ஆயுதக் கிளர்ச்சிகளால் தாக்குண்டவர்
கள் ஒன்றுகூடித் துக்கம் கொண்டாடி வருகிறார்களே! பொது
மக்களாகவோ, போராளிகளாகவோ விளங்கிய தமது குடும்
பத்தவர்களும், நண்பர்களும் இறந்த திகதிகூடத் தெரியாத
வர்கள் வாழும் வடக்கிலும் கிழக்கிலும் தாக்குண்டவர்
களுக்கு அதே வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் அல்லவா ?

ஆயுத மோதல் முடிவடைந்ததையிட்டு நாங்கள் பலரும்
மகிழ்ச்சி அடைகின்றோம். ஆயுத மோதல் முடிவடைந்ததைக்
கொண்டாட எவர்க்கும் இருக்கும் உரிமையை நாம் ஏற்றுக்
கொள்கின்றோம். அதேவேளை, நாட்டுமக்கள் என்ற வகை
யில் சில முக்கிய வினாக்களை இனியாவது நாம் எழுப்ப
வேண்டும்.

16 ஆண்டுகளாக நடந்துவரும் போர் வெற்றிக் கொண்டாட்
டங்களும், போரில் மடிந்த தம்மவரை நினைவுகூராவாறு
தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளும், பிள
வுண்ட சமூகங்களிடையே ஒற்றுமையையும், மீளிணக்கத்தை
யும், ஒருங்கிணைவையும் ஏற்படுத்த உதவியுள்ளனவா ?

போரில் மடிந்த பொதுமக்களையோ, போராளிகளையோ
நினைந்து இரங்காதவாறு, துக்கம் கொண்டாடாதவாறு
அடக்கி ஒடுக்குவதும், போரில் வீழ்ந்துபட்டவர்களின் கல்ல
றைகளை இயந்திர சாதனங்களைக் கொண்டு தரைமட்டமாக்
குவதும், நாட்டை மீண்டும் ஒன்றுபடுத்தி, நீடித்த அமைதியை
ஏற்படுத்த எவ்வாறு உதவியுள்ளன ?

கடந்த காலத்தில் ஆயுத மோதலுக்கு இட்டுச்சென்ற தவறு
களை ஒப்புக்கொள்ள வேண்டும். அத்தவறுகள் மீண்டும்
நிகழாவாறு தடுக்க நடைமுறைப்படுத்தக்கூடிய வலிய நட
வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒற்றுமையை, மீளி
ணக்கத்தை, ஒருங்கிணைவை நோக்கி எமது பிளவுண்ட சமூ
கங்களை நகர்த்துவதற்கு ஏதுவாக நடைமுறைப்படுத்தக்
கூடிய சட்டப் பொறிமுறைகளை உருவாக்க வேண்டும்.
அதற்கு, இன்றைய போர்வெற்றிக் கொண்டாட்டங்களைப்
பயன்படுத்தி, ஒற்றுமைக்கும், மீளிணக்கத்துக்கும், ஒருங்கி
ணைவுக்கும் பாடுபடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்து
வதே சிறந்த வழியாகும்.

ஒரு போர்வெற்றிக் கொண்டாட்டத்தில் அமைதி, மீளிணக்கம்
பற்றிப் பேசும்பொழுது, போரிட்டோரின் தியாகங்களை மட்டு
மல்ல, போரின் நீடித்த தாக்கங்களைத் தணித்து, தாக்குண்
டோரை ஆற்றித்தேற்றி, அவர்களைப் புரிந்துணர்ந்துகொள்ள
வேண்டிய தேவையையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

கொண்டாட்டங்களுக்கு அப்பால், மோதலில் கற்ற பாடங்க
ளையும், மோதலற்ற நல்லதோர் எதிர்காலத்தை எய்துவதற்கு
அரசாங்கம் பூண்ட உறுதியையும் தேசிய மக்கள் சக்தி அர
சாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும். வீழ்ந்துபட்டவர்களை
யும், அவர்கள் புரிந்த தியாகங்களையும் மாண்புறுத்த
வேண்டும். போரிட்டோருக்கும், அவர்களது குடும்பங்களுக்
கும், சமூகங்களுக்கும் நேர்ந்த வேதனை, மெய்வருத்தம்,
இழப்புகளை ஒப்புக்கொள்ள வேண்டும்.

வேறு வழியில்லை என்று எண்ணி ஆயுதம் ஏந்தித் தோற்றுப்
போனவர்களின் வேதனையையும் ஒருகணம் பகிரவேண்டிய
தருணம் இது. எல்லாத் தரப்புகளுக்கும் நேர்ந்த உயிரிழப்புக
ளையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மோதலினால் ஆட்க
ளுக்கும், சமூகம் முழுவதற்கும் விளைந்த தாக்கத்தையும்
எண்ணிப்பார்க்க வேண்டும். நல்லதோர் எதிர்காலத்தைக் கட்
டியெழுப்பும் வண்ணம் அமைதி, நீதி, ஒத்துழைப்பு என்ப
வற்றை வலியுறுத்த வேண்டும். பகைவர்களாய் செயற்பட்டி
ருக்கக் கூடியவர்களை மன்னித்து, புரிந்துணர்ந்து, ஆற்றித்
தேற்றும் உளப்பாங்கை ஊக்குவிக்க வேண்டும். அதே
வேளை, எதிர்காலத்தில் மோதல்கள் நிகழாவாறு தடுத்து,
அமைதிமிகுந்த நாட்டைக் கட்டியெழுப்பும் வண்ணம் நம்பிக்
கையையும் மனவுறுதியையும் ஊட்ட வேண்டும்.

இத்தகைய ஒரு நாளில், போரின் சிக்குப்பிக்குகளை நாம் ஒப்
புக்கொள்ள வேண்டும். போர் என்பது ஆயுதப் படைகளும்,
குழுமங்களும் புரியும் வெறும் மோதல் அல்ல; மனிதருக்கு
நேரும் அதிரடிகளும், எதிர்மறை அனுபவங்களும், தாக்கங்
களும் பின்னிப்பிணைந்ததே போர் என்பதை நாம் புரிந்து
கொள்ள வேண்டும்.

அரவணைக்கும் மொழியின் முக்கியத்துவத்தை அனைவரும்,
குறிப்பாக அரசியல் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
எதிரியை வெற்றிகொண்டதாக, அந்த வெற்றியைக் கொண்
டாடுவதாக, அல்லது வீழ்ந்துபட்ட எதிரிகளை விலங்குநி
லைக்குத் தாழ்த்துவதாக, போரைக் கொண்டாடுவதாகப்
பொருள்கொள்ளப்படக்கூடிய சொற்களை அவர்கள் தவிர்க்க
வேண்டும். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நலம்பயக்கும்
விதமாக இணக்கம், மீள்திறம், துணிவு, கருணை, வலிமை,
மானுடப்பண்பு மிகுந்த குறிக்கோள் ஒன்றை வகுப்பதில்
மனித அனுபவங்களை முதன்மைப்படுத்துவதே முக்கியம்.

ஓர் ஒற்றுமைப்பட்ட நாட்டை உருவாக்க நாம் பாடுபடுவதாக
வலியுறுத்துகிறோம். எனவே, தேசிய மக்கள் சக்தியும், அதன்
தலைவர்களும் வெற்றி, தோல்விகளின் உயர்வு, தாழ்வு
களைத் தணித்து, சமூகத்தில் காணப்படும் தேசியவாத பதற்
றங்களை எதிர்கொண்டு, ‘பொன்னான வாழ்வையும் செழிப்
பான நாட்டையும்’ உருவாக்குவதற்கான திட்டத்தை நடை
முறைப்படுத்தவேண்டிய தருணம் இது.

அமைதி, நீதி, மீளிணக்கத்தை முதன்மைப்படுத்தும் எதிர்கா
லத்தை உருவாக்கும் நடவடிக்கையையும் கடப்பாட்டையும்
தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்
டும். என்னதான் சொன்னாலும், கடந்தகாலத்தைப் பற்றி
வெளிப்படையாகவும், நேர்மையாகவும் கலந்துரையாடுவதை
ஊக்குவிக்காமல், கடந்தகாலத் தவறுகளிலிருந்து பாடம்
படிக்காமல், கடந்தகால மோதல்கள் போன்ற மோதல்கள்
எதிர்காலத்தில் இடம்பெறாவாறு தடுக்காமல், ஒருங்கி
ணைந்த நாட்டை நோக்கி நடைபயில முடியாது.

Dr. Lionel Bopage, 16 Years After A Pyrrhic Victory:
It’s Time For Reflection, Not Only Celebration, Colombo Telegraph,
2025-02-20,
translated by Mani Velupillai, 2025-05-28.



mani.velupillai@thaiveedu.com



# எமக்கான உரிமைகள் எங்கே?

## தலைமுறைகளைக் கடந்து வரும் ஒரு கேள்வி

- நிசன்குமார் கோபிநாத்

எமக்கான உரிமைகள் எங்கே? - இந்த வினா, மலையகத் தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றில் ஒரு தேங்கிய சத்தமாகவே எப்போதும் இருந்து வருகிறது. அது ஒரு வலியும், ஒரு ஏக்கமும், ஒரு குரலற்ற சமூகத்தின் உரிமைக்குரிய ஆவேசமான துடிப்பாகவும் இன்றுவரை ஒலிக்கிறது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பிரித்தானிய காலனிய காலத்தில், இலங்கையின் மையப் பகுதிகளில் பெருந்தோட்ட வேலைக்காக தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களே இன்றைய மலையக மக்கள். இரு நூற்றாண்டுகளாக இந்த மண்ணில் வாழ்ந்தும், அவர்கள் இன்னும் ‘முழுமையான குடிமக்கள்’ என்ற அடையாளத்தைப் பெறாமல், புறக்கணிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

- எமக்கான உரிமைகள் எங்கே?
- எப்பொழுது முழுமையான குடியுரிமையுடன் வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறுவோம்?
- எமக்கான நீதி எப்போது கிடைக்கும்?

இந்த மூன்று வினாக்கள் தலைமுறைகளை கடந்தும் வழி வந்தன. ஒவ்வொரு தலைமுறையும் இந்தக் கேள்விகளை தங்களது வாழ்வின் ஓர் அங்கமாகக்கொண்டே வளர்ந்தது. ஒவ்வொரு முறையும், பதில் காணாத வலிகள் மட்டும் மரபாக மாறின. இந்த தேடல் ஒரு தீர்வை நோக்கியது மட்டுமல்ல, ஒரு அடையாளத்திற்கான, ஒரு பூரண வாழ்வுக்கான, ஒரு நியாயமான உரிமைக்கான தேடல். இந்த தேடலின் வழியில், பலர் வாழ்நாள் முழுவதும் போராடியிருந்தாலும், அரசியல், சட்டம் மற்றும் சமூக அமைப்புகள் இன்னும் உரிய பதிலை வழங்கத் தயங்குகின்றன. இன்று மலையக மக்கள் தொடர்ந்து தங்கள் உரிமைகளை கேட்கின்றனர் - அழைக்கின்றனர், அடையாளம் கோருகின்றனர். ஆனால் அதற்கான பதில் இன்னும் வரவில்லை. இது இனிய வரவேண்டிய விடியலுக்கான பாதையின் ஓர் அமைதியான ஆனால் ஆழமான எழுச்சி எனக் கூறலாம்.

***மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு தூணாக இருந்தாலும், அவர்களது உரிமைகளுக்காக இன்று வரை தொடர்ந்து போராட வேண்டியதொரு தாழ்த்தப்பட்ட சமூகமாகவே வாழ்ந்திருக்கின்றனர்.***

1948-ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும், மலையகத் தமிழர்களுக்கான சம உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. அதற்கு பதிலாக, அதே ஆண்டில் உருவாக்கப்பட்ட ‘இலங்கை குடியுரிமை சட்டம்’ மற்றும் 1949-ஆம் ஆண்டின் ‘இந்திய - பாகிஸ்தானிய குடியிருப்பாளர் சட்டம்’ போன்ற சட்டங்கள் வழியாக, இவர்களது குடியுரிமை திட்டமிட்டு பறிக்கப்பட்டது. இந்த சட்டங்களின் காரணமாக, இலங்கையில் தலைமுறைகளாக வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள், சட்டபூர்வமாக ‘நாடற்ற பிரஜைகள்’ என வகைப்படுத்தப்பட்டனர். இது, அவர்களது அடிப்படை உரிமைகளில் பெரும் பின்வாங்கலாகும்.

பின்னர், 1964-ஆம் ஆண்டு ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் 1974-ஆம் ஆண்டு ஸ்ரீமா - இந்திரா ஒப்பந்தம் ஆகியவை, இந்தியா மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்டன. இவ்விரண்டும் மலையக மக்களை இரு நாடுகளுக்கும் இடையில் பகிர்ந்துகொள்ளக்கூடிய பொருட்கள் போல கையாளும் வகையில் அமைந்தன. இதில் அவர்களது விருப்பம், அடையாளம், உரிமை ஆகியவை முழுமையாக புறக்கணிக்கப்பட்டன. இந்த நடைமுறைகள் அனைத்தும், ஒரு மனித உரிமை மீறல் என்றே பொருள்படும். மக்கள் ஒரு நாட்டில் பிறந்து, அந்நாட்டின் வளர்ச்சிக்காக இருகணக் கில் உழைத்தும், அந் நாட்டினால் அங்கீகரிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவது எந்த நியாயத்திற்கும் உட்பட்டது அல்ல. இன்றும் மலையக மக்கள் எதிர்கொள்கின்ற வறுமை, கல்வி மற்றும் வேலைவாய்ப்பின்மை, அரசியல் புறக்கணிப்பு ஆகியவை தொடர்ச்சியான சமூக அநீதியின் வெளிப்பாடுகளாகவே இருக்கின்றன. பிரித்தானிய காலனிய ஆட்சியில் சம உரிமை மறுக்கப்பட்டதைப் போலவே, இன்றைய பெருந்தோட்ட முதலாளிகளும் இம்மக்களின் உழைப்பை மட்டும் சுரண்ட, அவர்களுக்கு உரிய அடையாளம், உரிமை, மரியாதை ஆகியவற்றை வழங்க மறுக்கின்றனர்.

ஒருபுறம் நாடு இவர்களின் உழைப்பைத் தன்னலம் நோக்கி பயன்படுத்திக்கொள்கிறது. மறுபுறம், அவர்கள் முழுமையான குடிமக்களாக அங்கீகரிக்கப்படுவதைத் தடுத்து வைக்கிறது. இது உண்மையில் மறைந்துள்ள அடக்குமுறையின் நவீன வடிவமாகவே காணப்படுகிறது. மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு தூணாக இருந்தாலும், அவர்களது உரிமைகளுக்காக இன்று வரை தொடர்ந்து போராட வேண்டியதொரு தாழ்த்தப்பட்ட சமூகமாகவே வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு வரலாற்றால் ஏற்படுத்தப்பட்ட வலிகள், சட்டபூர்வ புறக்கணிப்புகள் இன்னும் முழுமையாகச் சீரமைக்கப்படவில்லை. இன்றுகூட, அவர்கள் அடையாளம், குடியுரிமை, சமவுரிமை ஆகியவை கேள்விக்குள்ளானவையாகவே உள்ளன. இந்த நிலைமைகள், விடுதலைக்கான தேடலை முடிவில்லாத ஒரு பயணமாக மாற்றி உள்ளன. ஆனால் இந்த பயணத்தின் முடிவில் நியாயம் நிறைவேற வேண்டும் என்பதே இம்மக்களின் நிலைத்த நம்பிக்கையாகும்.

நாங்களும் மனிதர்களே! ஏன்? எங்களுக்கு சுதந்திரம், உரிமைகள் இருக்கின்றன அல்லவா? அதை ஏன் நாங்களும் மற்றையவர்களைப் போல் அனுபவிக்க கூடாது? அவற்றை அனுபவிப்பதில் ஏன்? புறக்கணிக்கப்படுகின்றோம். அதற்குப் பின்னால் இருக்கின்ற தந்திரம் என்னவென்று தெரியுமா? மலையகம் அடிமைத்தனத்திலிருந்து மீளக் கூடாது என்பதாகும். இன்று இலங்கையின் பொருளாதாரத்தின் ஆணிவேராக திகழ்வது மலையகத் தோட்ட தொழிலாளிகள் என்பதனை உறுதியாக கூற முடியும். ஆனால் முதலாளிகளுக்கு மாடிவீடு மழைக்காலங்களில் அட்டைகளுக்கு இரத்தத்தை தானமாக கொடுக்கின்ற தொழிலாளிகளுக்கோ லயன் குடியிருப்பு, அதுவும் பத்து அடி அறைகளும் தொழுவங்களை விடவும் மோசமான தன்மையிலேயே லயன் குடியிருப்புகள் காணப்படுகின்றன. இந்த லயன் குடியிருப்புகள் இரு நூற்றாண்டு காலமாக எந்த ஒரு புணர் நிர்மாணமும் மேற்கொள்ளப்படாமல் அதே நிலையில் காணப்படுகின்றது. இன்று இதில் சிறிய மாற்றமே ஏற்பட்டுள்ளது. லயன் குடியிருப்புகளுக்கு பதிலாக லயன் மாடி குடியிருப்புகள் என எமக்கான குடியிருப்புகளை வழங்குகின்றார்கள். ஆனாலும் லயன் என்ற அடிமை சொல் சமுதாயத்தில் இருந்து இன்னும் நீக்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

அண்மையில் இலங்கையில் தேயிலை ஏற்றுமதி மூலமாக 1.2 மில்லியன் ரூபாய் இலாபத்தினை ஈட்டியது. இதனால் கிடைக்கப்போகும் முழுப்பயன்களும் தோட்ட முதலாளிகளைச் சாருமே தவிர அடிமை தொழிலாளிகளுக்கு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. எம் தாய் தந்தையரின் உழைப்பை சுரண்டி அதில் வளர்ந்த முதலாளிகளின் பிள்ளைகள் இன்று சொகுசான வாழ்க்கை வாழ நாங்களோ அடிப்படை கல்வியை கூட பெறுவதற்கான வசதிகள் கூட இல்லாமல் தவிக்கின்றோம். இன்று பெருந்தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகள் குடும்ப வறுமை காரணமாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள். அவர்களுக்குரிய கல்வி வசதி என்பது பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. ஒரு சிறுவன் தந்தையிடம் கேட்கின்றான். ‘அப்பா உங்களைப் போல் நாங்களும் அடிமை தொழிலாளிகளாகவா வாழ வேண்டும்? நாங்களும் இந்த முதலாளிகளுக்கு கீழாக அடிமைப்பட்டா வாழ வேண்டும்? எமக்கும் உரிமை இருக்கின்றன அல்லவா?’

இதற்கு அந்த தந்தை பதிலை கூறுகிறார். ‘நம்முடைய சமூகம் இன்று மட்டுமல்ல இரு நூற்றாண்டுகளுக்கு சுதந்திரத்தை கேட்கின்றது ஆனால் இந்த முதலாளிகளோ நம்மை புறக்கணித்து நம்மை ஒரு அடிமைப்பட்ட சமூகமாகவே பார்க்கின்றார்கள். நமக்கான விடிவுகாலம் எங்கு? எப்பொழுது? பிறக்கின்றதோ அப்பொழுதுதான் நமது சமூகம் முன்னேற முடியும்’. என்று மன வேதனையுடன் கருத்தை வெளிப்படுத்துகின்றார். எனவே ஒரு தோட்ட தொழிலாளியின் மகனாக பிறந்த எல்லோருக்கும் இந்த நிலைமை தானே? வாழ்நாள் முழுவதும் தீர்க்கப்படாத பிரச்சினைகளைக்கொண்ட சமூகமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றோம். இன்று ஒரு



> **“நாங்களும் மனிதர்களே! ஏன்? எங்களுக்கு சுதந்திரம், உரிமைகள் இருக்கின்றன அல்லவா? அதை ஏன் நாங்களும் மற்றையவர்களைப் போல் அனுபவிக்க கூடாது? அவற்றை அனுபவிப்பதில் ஏன்? புறக்கணிக்கப் படுகின்றோம். அதற்குப் பின்னால் இருக்கின்ற தந்திரம் என்னவென்று தெரியுமா?”**



மனிதனின் அடிப்படைத் தேவையான மூன்று வேளை உணவை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் காணப் படத்தான் செய்கின்றது. ஒவ்வொரு பெருந்தோட்டத் தொழி லாளியின் தேசிய உணவு எது தெரியுமா? 'ரொட்டி'. ஒரு வேளை உணவை முழுமையாக பூர்த்தி செய்ய முடி யாத இக்கட்டான சூழ்நிலை தான் இந்த மலையக சமூகத்தினருக்கு காணப்படுகின்றது. இதற்கு முடிவு களை தேடப்போவது யார்? ஏன் ஒவ்வொரு அரசி யல்வாதிகளும் புதிதாக ஒரு தேர்தல் வரும் போது தான் அவர்கள் மேல் அக்கறை கொள்கின்றார்கள். அதற்குப் பின்பு அவர்களை புறக்கணித்து விடுகின் றார்கள். ஒரு வாக்கிற்கு மாத்திரம் மலையக மக்கள் தேவை என்ற தன்மையை அரசியல்வாதிகள் உரு வாக்கிவிட்டார்கள். எங்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதி நல்ல ஒரு அரசியல்வாதியாக இருந் திருந்தால் என்றைக்கோ மலையக சமூகத்திற்கான விடிவு கிடைத்திருக்கும்.

இரு நூற்றாண்டு காலமாக அடிமைப்படுத்தப்பட்ட எங்களுக்கு ஒழுங்கான வீடு, காணி வசதி இல்லை மற்றும் ஒழுங்கான மலசலகூட வசதி இல்லை. இவ்வாறு அடிப்படை வசதிகளைக்கூட பெற முடி யாத சமூகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின் றோம். 'கல்வியிலும் வஞ்சகம், அரசியலிலும் வஞ் சகம், எப்படி எமக்கான விடிவு பிறக்கும்' முதலாளி சமூகத் திடம் கேட்பது உழைப்புக்கான சரியான ஊதியமே. பல வரு டங்களாக தோட்டத் தொழிலாளிகளின் சம்பளப் பிரச்சினை யானது பேசப்பட்டு வந்தாலும் அதற்கான தீர்வு என்னவென்று தெரியுமா? 100 ரூபாயும் 150 ரூபாயுமாகவே இருக்கின்றது. வெயில் காலத்தில் வியர்வை சிந்தவும் மழைக்காலங்களில் இரத்தத்தை அட்டைகளுக்கு தானமாக வழங்கி பல அச்சு றுத்தல்களுக்கு மத்தியில் வேலை செய்தாலும் எமக்கு அடிப் படையான ஊதியத்தை தீர்மானிக்கும் உரிமை இல்லாத சமூகமாக வாழ்கின்றோம். இவ்வாறு இருக்கும்பொழுது எமக்கான விடிவு மட்டும் எப்படி பிறக்கும் என்ற கேள்வி தினமும் காதுகளை ரீங்காரமிடுகின்றன. அரசியலில் இந்திய தமிழர் என்று அடையாளப்படுத்தப்படுகின்றோம். பொருளா தாரத்தில் அடிமை தொழிலாளிகள் என புறக்கணிக்கப்படு கின்றோம். சமூகத்தில் 'தோட்டகாட்டான்' என்று பலரால் கீழ்நி லைப்படுத்தப்படும் சமூகமாக அடையாளப்படுத்தப்படுகின் றோம். ஏன்? எமக்கான விடிவு கிடைத்துவிட்டால் மலையக சமூகம் மேம்பாடு அடைந்து விடுமோ? என்ற பயம் இன்று ஒவ்வொருவர் மனதிலும் இருக்கின்றது.

ஆகவே மலையக சமூகத்தாரான எங்களுக்கு விடிவு என்பது வேண்டுமாயின் நாங்கள் கல்வியில் முன்னேற வேண்டும். எமக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். எமக்கான அடையாளம் சமூகத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண் டும். நாங்கள் சலுகைகளை கேட்கவில்லை எமக்கான வாய்ப் புகளையே கேட்கின்றோம். அந்த வாய்ப்புகளில் நாங்கள் எமக்கான விடிவை தேடிக்கொள்வோம். இன்று மலையகத் திலிருந்து கல்வி கற்ற எத்தனையோ மாணவர்கள் அரசு துறையில் வேலை செய்கின்றார்கள். இன்று மலையகத்தி லிருந்து பட்டப்படிப்பினை முடித்துவிட்டு எத்தனையோ பட்ட தாரிகள் பாடசாலைகளில் சேவையாற்றுகின்றார்கள். இன்று மலைகத்திலிருந்து எத்தனையோ மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

எமக்கான உரிமைகள் மற்றும் அங்கீகாரம் என்பன சரியாக கிடைத்திருந்தால் இன்று நாம் எமக்கான விடிவை எதிர் பார்த்து காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக் காது. என்றோ ஒரு காலம் பிறக்க வேண்டிய விடிவு அது இன்னும் கூட பிறக்கவில்லை விடிவை எண்ணிய காத்திருப்பு எங்களுக்கு எப்பொழுது நிறைவடையும். இன ரீதியான அரசியல் வாதிகளும் மனித நேயமற்ற முதலாளி களும் இருக்கும் வரை எமக்கான விடிவு என்பது பிறப்பதில்லை விடிவை எண்ணிய பயணத்தின் முடிவு எப் பொழுது எமக்கு கிடைக்கும் என்ற ஒரு கவலையுடனே ஒவ்வொரு மலையக மக்களும் இருக்கின்றார்கள். அரசியல் வாதிகள் தங்களை பெரும்பான்மை யின் சமூகமாக அடையாளப்படுத்திக் கொண்டு இன்று சிறுபான்மைக்கு எதி ராக அடக்குமுறைகளை பிரயோகிக் கின்றார்கள். அவர்கள் ஒரு விடயத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அடிமையாக பார்க்கின்ற சிறு பான்மை சமூகமான மலையக சமூகம் தான் இன்று இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஒரு முது கெலும்பு என்பதனை மறந்துவிடக்கூடாது. அவ்வாறு நீங்கள் மறந்து விட்டீர்களானால் நீங்கள் மனிதர்களாக இருப்ப தற்கான ஒரு தகுதியை இழந்தவர்களாகவே அடையாளப்ப டுத்தப்படுவீர்கள். இலங்கை திருநாட்டின் பொருளாதாரத் தில் முதுகெலும்பாக இருக்கும் தோட்ட மக்களின் முது கெலும்புகள் தேய்ந்து கொண்டே செல்கின்றதே தவிர அவர் களுக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை, எமக்கான விடிவு காலம் எப்பொழுது? என்ற வினாவுக்கான விடைகள் கிடைப்பிலேயே போடப்பட்டுள்ளன என்பதே நிதர்சனமான உண்மை.

> **"கல்வியிலும் வஞ்சகம், அரசியலிலும் வஞ்சகம், எப்படி எமக்கான விடிவு பிறக்கும்? முதலாளி சமூகத்திடம் கேட்பது உழைப்புக்கான சரியான ஊதியமே."**



kobinath.n@thaiveedu.com

# குறைபாடுகள் நிறைந்த இந்திய தேர்தல் முறை

**- நெல்லை ஜெயசிங்**



உலக அளவில் இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடாகக் கருதப்படுகிறது. 1947-இல் சுதந்திரம் பெற்றது முதல், குறிப்பிட்ட இடைவெளியில் நாடெங்கும் தேர்தல் நடைபெற்று வருகிறது. நூற்றுக்கணக்கான கட்சிகளைத் தேர்தல் களத்தில் பார்க்க முடிகிறது. ஆயிரக்கணக்கான வர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். கோடிக்கணக்கான இந்திய மக்கள் தவறாது வாக்களித்து வருகிறார்கள். இவை அனைத்தையும் பார்க்கும்போது இந்தியாவில் சனநாயக அம்சங்கள் பொங்கி வழிவதைப் போன்ற ஒரு தோற்றம் தெரிகிறது. ஆனால் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அதில் உண்மை இல்லை என்று தெரியவரும். இந்திய தேர்தல் நடைமுறையை கூர்ந்து கவனித்தால் ஏராளமான குறைபா டுகள் நிறைந்து காணப்படுவதைக் காணலாம்.

மக்களாட்சியின் அடி நாதமாக இருப்பது பெரும்பான்மை என்ற தத்துவமாகும். அதாவது தற்போதைய பெரும்பான்மை என்பது, ஒரு வாக்கு கூடுதலாக ஒருவர் பெற்றால் அவரே வெற்றியாளர் ஆகிறார். இதனால் ஒரு கட்சி பெறும் வாக்கு விகிதத்திற்கு ஏற்ப, உரிய பிரதிநிதித்துவம் இந்திய நாடாளு மன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் கிடைப்பதில்லை என்பது நிரூபணமாகி வருகிறது. இந்திய தேர்தல் முறையில் குறைந்த விகித வாக்குகளைப் பெற்ற கட்சிகள் அதிக இடங் களையும், அதிக விகித வாக்குகளைப் பெற்ற கட்சிகள் குறைந்த இடங்களையும் பெற்ற நிகழ்வுகள் ஏராளமாக உள்ளன.

### கடந்த கால தேர்தல் முடிவுகள்:

2014-ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற தேர்தலில் 31 சதவீத வாக்குகளைப் பெற்ற பா.ஜ.க பாதிக்கும் அதிகமான இடங்களைப் பெற்றது. மறுபுறம் 19.3 சதவீத வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், வெறுமனே 44 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. 2024-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில், உத்தரப் பிரதேசத்தில், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி, 9.39 சதவீத வாக்குகளைப் பெற்று ஓர் இடத்தில் கூட வெற்றி பெறாத நிலையில், காங்கிரஸ் 9.46 சதவீத வாக்குகளைப் பெற்று, 6 இடங்களைப் பெற்றுக்கொண்டது. இதேபோன்று ஆந்திராவில் YSR காங்கிரஸ், 39.61 சதவீத வாக்குகளைப் பெற்று, 4 இடங்களைப் பெற, அதை விடக் குறைவான 37.79 சதவீத வாக்குகளைப் பெற்ற தெலுங்கு தேசக் கட்சி, நான்கு மடங்கு அதிகமாக, 16 இடங்களை வென்றுள்ளது.

இந்திய மாநில சட்ட மன்ற தேர்தலிலும் இவ்வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது. 2024 தேர்தலில் 39.37 சதவீத வாக்கு களைப் பெற்ற YSR காங்கிரஸ், 11 இடங்களை மட்டுமே பெற, 6 சத வீத வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்ற தெலுங்கு தேசக் கட்சி, 135 இடங்களை வென்றுள்ளது. ஒடிசாவில் பா.ஜ.க வை விட சற்று கூடுதலான வாக்குகளைப் பெற்ற பிஜு ஜனதா தளம் 51 இடங்களைப் பெற, குறைவான வாக்குகளைப் பெற்ற பா.ஜ.க விற்கு 78 இடங்கள் கிடைத் துள்ளன.

இவை மட்டுமல்லாமல் சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மை யினர் சார்ந்த கட்சிகள், வாக்குப் பங்கை கணிசமாகக் கொண்டிருந்தாலும், ஓர் இடத்தைக் கூட வெல்ல முடியாமற் போகின்ற சூழல் இந்தியாவில் இருக்கிறது. இதனால் மக்கள் விரும்பாத வேட்பாளர்கள் வெற்றி பெறும் நிலையும் ஏற்படு கிறது. இவ்வாறு தேர்தல் முடிவுகள் இருப்பதால், பெரும்

பான்மை என்ற தத்துவம் பலவீனப்படுத்தப்பட்டு வருவதைப் பரவலாக காண முடிகிறது. மக்கள் ஆட்சி எனும்போது உண்மையான பெரும்பான்மை நிலை நிறுத்தப்பட வேண்டும். பிரதிநிதித்துவம் அனைத்து மக்களுக்குமானதாகவும், அனைத்து மக்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். இதற்கு தீர்வாக இலங்கையில் இருப்பதைப் போன்ற விகிதாசார பிரதிநிதித்துவ முறையை இந்தியாவும் பின்பற்ற முன்வர வேண்டும் என்று கூறப்படுகிறது. இலங் கையில் சில தேர்தல் மாவட்டங்களில் 1 சதவீத வாக்கு களைப் பெற்ற கட்சிகளும் கூட உரிய பிரதிநிதித்துவத்தை பெற்று வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உடன டியாக இந்தியாவில் விகிதாசார தேர்தல் முறையை முழுமையாக அமல் நடத்த முடியாது போயின், பகுதி விகிதாசார முறையையாவது அறிமுகப்படுத்த தேர்தல் ஆணையம் முன்வரவேண்டும். இலங்கையின் நடைமு றையில் உள்ள உள்ளாட்சி தேர்தல் முறை இதற்கு நல்ல உதாரணம் ஆகும்.

## தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பதில் பணத்தின் பங்கு:

இந்திய தேர்தல் முடிவுகளை நிர்ணயிப்பதில் பணம் அதிக அளவில் செல்வாக்கு செலுத்தி வருவதால், சாதாரண சமூக ஆர்வலர்கள் யாரும் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. கோடீஸ்வரர்கள் மட்டுமே சுலபமாக தேர்தலை சந்திக்க முடிகிறது. 2024 இந்திய நாடா ளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் 93 சதவீதத்தினர் ‘கோடீஸ்வரர்கள்’ ஆவர். இதனால் உண்மையான, சுதந்தி ரமான, நியாயமான தேர்தல் முறை சிதையுண்டு போகிறது. இதன் காரணமாக இலஞ்சம், ஊழல் பெருகத் தொடங்கி விட்டது. தேர்தல் ஆணையம் வேட்பாளர்களின் செலவி னங்களை நடுநிலையில் நின்று கவனிப்பதில்லை.

தேர்தல் ஆதாய நோக்கில், தனியார் நிறுவனங்கள் ஆளும் கட்சிகளுக்கு பெருமளவில் நன்கொடைகளை வழங்கி வரு கின்றன. கடந்தகால தேர்தல் பத்திர ஊழல் இதற்கு நல்லதொரு சாட்சியாகும். இந்திய உச்ச நீதிமன்றமே இதனை கடுமையாகக் கண்டித்துள்ளது. இத்தகைய செயல் சுதந்திரமான நேர்மையான தேர்தலை சீர்குலைத்து விடுவ துடன், அரசின் கொள்கை முடிவுகளில் வெளியார் அமைப்பு செல்வாக்கு செலுத்தவும் வழிகோலுகிறது. இந்நிலையில் இவ் விடயங்களில் அரசின் தலையீடு இன்றி, தேர்தல் ஆணையம், சுதந்திரமான முடிவுகளை செயற்படுத்த முன்வர வேண்டும். அரசின் பங்களிப்புடன் தேர்தல் ஆணையம் கட்சி களுக்கு தேர்தல் கால நிதியுதவியை வழங்குவதன் வாயிலா கவும் இக்குறைபாட்டை சரி செய்யலாம்.

## தேர்தல் களத்தில் குற்றவாளிகள்:

பணம் படைத்தவர்கள் மட்டுமே பெருமளவில் தேர்தல் களத்தில் நிற்பதைப் போன்று, குற்றப் பின்னணி உடையவர் களும் இந்திய தேர்தல் களத்தில் அதிக அளவில் இருப் பதைக் காணமுடிகிறது. Association for Democratic Reforms அறிக்கையின் படி, 543 நாடாளுமன்ற உறுப்பினர் களில், 46 சத வீதத்தினர் மீது குற்ற வழக்குகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதிலும் 31 சதவீதத்தினர் மீது பாலியல் வன்கொடுமை, கொலை, கடத்தல், லஞ்ச ஊழல் போன்ற கடுமையான வழக்குகள் உள்ளதாக அறியப்படுகிறது. இவை ஆரோக்கியமான சனநாயக ஆட்சியை களங்கப்படுத்தி விடும்.

தகவல் ஊடகங்கள் மீது இவர்கள் முதலீடு செய்வதன் மூலம், செல்வாக்கு செலுத்தி வருவதால் குற்றப் பின்னணி தொடர்பான தகவல்கள் வெளியில் வராது போய்விடுகிறது. அதனால் வாக்காளர்கள் குற்றவாளிகளின் பின்னணி தெரியாமல் தேர்ந்தெடுத்து விடுகின்றனர். இந்நிலையில் உச்ச நீதிமன்றமும் தேர்தல் ஆணையமும், கடுமையான குற்றப் பின்னணி உள்ளவர்கள், மக்கள் பிரதிநிதிகளாக மாறுவதற்கு உள்ள வழிமுறைகளைத் தடுத்து நிறுத்த, நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

## தேர்தல் வெற்றிக்கான வாக்குறுதிகள்:

அண்மைக் காலங்களில் கட்சிகள் கூறும் வாக்குறுதிகள் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி வருகிறது. கல்வி அறிவு குறைந்த, தனி நபர் வருமானம் குறைந்த, மக்கள் அதிகம் உள்ள நாடு இந்தியா. தேர்தலின்போது நிறைவேற்ற முடியாத, பொய்யான வாக்குறுதிகளை கட்சிகளும், வேட்பா ளர்களும் அள்ளி வீசி வருகின்றனர். அதற்கான நிதி வருவாய் எவ்வாறு வரும் என்பது பற்றி தேர்தலில் பேசப்படுவதில்லை. வார்த்தை ஜாலங்களால் முற்றாக மக்கள் ஏமாற்றப்படுகின் றனர். அண்மைக் காலங்களில் மக்கள் பிரதிநிதிகள் யார் என்பதை தீர்மானிக்கும் சக்தியாக இலவசங்கள் மாறி வரு கின்றன. இதனால் தகுதி யானவர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ஆரோக்கியமான ஜனநாயகத் திற்கு நல்லதல்ல. இந்நிலையில் தேர்தல் ஆணையம் ஆழ்ந்து ஆராய்ந்து தேவையான கட்டுப்பாடுகளை மேற் கொள்ள வேண்டும்.

## சாதி மத பிரசாரங்கள்:

நூற்றுக்கணக்கான சாதிய சமூகங்களும், பிரிவினையைத் தூண்டும் மத வாதிகளும் உள்ள நாடு இந்தியா. சாதி மத அமைப்புகளின் ஆதிக்கம் இந்திய அரசியலிலும் வேரூன்றிக் காணப்படுகிறது. இப்பின்னணியிலேயே தொகுதி வேட்பாளர் களையும் கட்சிகள் தேர்வு செய்கின்றன. இதனால் தவறான வர்கள், பொருத்தமற்றவர்கள், மக்கள் பிரதிநிதிகளாகும் அவல நிலை ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. இதனால் சமூகப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார விடயங்கள் முக் கியத்துவம் பெறாமல் போய் விடுகின்றன. சமூகங்கள் இடையே வெறுப்பு அரசியல் விதைக்கப்படுகின்றன. தேர்தல் ஆணையம் மக்களின், தேசத்தின், நலன் கருதி, நடுநிலை யுடன் கட்சி சார்பில்லாமல் கட்டுப்பாடுகளையும், தேர்தல் நடத்தை விதிகளையும் அமல் நடத்துவது மிகவும் அவசி யமான ஒன்றாகும்.

தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி, அபரிதமான நிலையை எட்டியுள்ள நிலையில், அரசியல் மற்றும் தேர்தல் விடயங்களில், ஊடகங்களின் பங்களிப்பும் செல்வாக்கும் படிப்படியாக உயர்ந்து வருவதைக் காணமுடிகிறது. 2014-க்குப் பிறகான காலப்பகுதியில் ஊடகங்களைத் தம் கட்டுப் பாட்டில் வைத்திருந்த கோர்ப்பரேட் நிறுவனங்கள், தேர்த லின்போது ஆளும் கட்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவ

தாகக் கூறப்படுகிறது. இது சுதந்திரமான நியாயமான தேர்தல் முறையை கேள்விக்குறியாக்கி உள்ளது. சனநாயக அம்சங்கள் புதையுண்டு போவதற்கு காரணமான பல்வேறு பட்ட செய்தித் துறைகளின் ஆதிக்கத்தைத் தடுத்து வரையறை செய்ய வேண்டிய பொறுப்பை அரசும், தேர்தல் ஆணையமும் ஏற்க வேண்டும்.

## இந்திய தேர்தல் ஆணையம்:

இந்திய தேர்தல் முறையை பலவீனப்படுத்துவதில் இந்திய தேர்தல் ஆணையம் மிகப்பெரிய பங்கு தாரராக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. தேர்தல் நடத்தை விதிகளை அறிவிக்கும் தேர்தல் ஆணையம், அதனை அமல் படுத்த வேண்டும் என்ற அக்கறையை எப்போதும் காட்டியதில்லை. ஆயிரக்கணக்கான தேர்தல் புகார்கள் வந்தபோதெல்லாம் நடவடிக்கை மேற்கொள்வதில் தடுமாற்றமே தெரிகிறது. மதம் மற்றும் சாதி சார்ந்த பிரசாரம், வழிபாட்டுத் தலங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், என்பன அரசியல் தலையீடு காரணமாகத் தடுக்கப்படவில்லை. பிரதமர் மற்றும் அமைச்சர்கள், தேர்தல் நடத்தை விதிகளை மீறும்போது அல்லது அவர்கள் மீதான புகார்கள் வரும்போது, அவர்கள் ஆட்சியாளர்கள் என்பதனால் நடவடிக்கைகள் எடுப்பதில் தயக்கம் காட்டப்படுகிறது. அண்மையில் நடந்த இந்திய பாகிஸ்தான் போரை, ‘சிந்தூர்’ எனப் பெயரிட்டு அதனை ஆளும் கட்சி தேர்தல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தி வருவதை உலகமே அறியும். ஆனால் அதனைத் தடுக்க தேர்தல் ஆணையம் முன்வரவில்லை. இதுபோன்ற செயற்பாடுகள், ஒருதலைப்பட்சமான ஆதரவு என்பன சமவாய்ப்பற்ற தேர்தல் முறைக்கு வழிவகுத்துவிடும்.

“
தொழில்நுட்பத்தில் அபரிதமான வளர்ச்சியை எட்டியுள்ள நாடுகளில் வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடைபெற்று வர, இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு முறை பயன்பாட்டில் இருந்து வருகிறது. அண்மைக் காலங்களில் பொது மக்கள் மத்தியில், இவ் இயந்திரங்கள் மீதான நம்பகத் தன்மை குறைந்து வருவதையும் காண முடிகிறது
”

இந்திய தேர்தல் முறையின் சனநாயக விழுமியங்கள் மேம்பட, முதலில் இந்திய தேர்தல் ஆணையத்தை சீர்திருத்த வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். தேர்தல் ஆணையம் அரசியல் அமைப்புக்கு உட்பட்ட சுதந்திரமான சுயேச்சையான அமைப்பு என கூறப்படுகிறது. ஆனால் தேர்தல் ஆணையர்களின் நியமனத்தில், பிரதமர் உள்ளிட்ட ஆளும் அமைச்சரவையின் முடிவே இறுதியானதாக இருக்கிறது. தேர்தல் ஆணையர் நியமன விடயத்தில் உச்ச நீதிமன்ற தலைமை நீதி பதிக்கு இருந்த அதிகாரம், சட்டதிருத்தம் ஊடாக, அண்மையில் ஆளும் அமைச்சர் ஒருவருக்கு மாற்றப்பட்டது. இதனால் பிரதமரின் ஆதரவு பெற்றவர்களே தேர்தல் ஆணையத்தில் இடம்பெறுகின்றனர். இதன் காரணமாக ஆணையம் எப்போதும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயற்பட வேண்டிய நிலை உருவாகிறது. எனவே நாட்டு மக்களின் நலன் கருதி, தேர்தல் ஆணையர் நியமனம் மற்றும் செயற்பாடுகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

தொழில்நுட்பத்தில் அபரிதமான வளர்ச்சியை எட்டியுள்ள பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளில் வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடைபெற்று வர, இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு முறை பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனினும் அண்மைக் காலங்களில் பொது மக்கள் மத்தியில், இவ் இயந்திரங்கள் மீதான நம்பகத் தன்மை குறைந்து வருவதையும் காண முடிகிறது. மின்னணு இயந்திரங்களின் பாதுகாப்பு குறித்த சந்தேகங்களும் அதிகரித்து வருகின்றன. இதனை குறைக்கும் விதமாக, விவிபேட் என்ற புதிய ஒரு கருவி வாக்களிப்பு இயந்திரத்துடன் இணைக்கப்பட்டது. இதன் வாயிலாக வாக்காளர், தான் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிய முடியும் எனக் கூறப்பட்டது. அவ்வாறாயின் விவிபேட் கருவியிலும் பதிவான அனைத்து வாக்குகளும் எண்ணப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் முழுமையாக எண்ணப்பட்டு வாக்களிப்பு கருவியுடன் ஒப்பீட்டு பார்க்கப்படுவதில்லை. மேலும் விவிபேட் கருவிக்கு அடுத்து கட்டுப்பாட்டு அலகு இருப்பதால் வாக்குகள் மாற்றப்படலாம் என்ற நிலை ஏற்படும் வாய்ப்பும் உள்ளதாகக் கூறப்படுகிறது. இவை நேர்மையான தேர்தல் வாக்களிப்பு முறையை சீர்குலைத்துவிடும். எனவே வெளிப்படைத் தன்மையுடன் மக்கள் நம்பிக்கையை பெறும் வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இத்தகைய குறைபாடுகள் வாக்களிப்பு முறையில் இருப்பதால், வெளிவந்த தேர்தல் முடிவுகளில் முரண்பாடுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக 2024 தேர்தல் முடிவில் முதற் கட்ட தரவுகளுக்கும் இரண்டாம் கட்ட தரவுகளுக்கும் கால இடைவெளி அதிகமாக இருந்ததுடன், தரப்பட்ட தரவுகளிலும் வேறுபாடு காணப்பட்டதாக அறியப்படுகிறது. முதற் கட்டத்தை விட இரண்டாம் கட்டத்தில் 6 சதவீத வாக்குகள் அதிகரித்து காட்டப்பட்டது, சந்தேகத்தையும் சர்ச்சையையும் ஏற்படுத்தி உள்ளது. தொழில்நுட்பம் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துவிட்ட இக்காலத்திலும் இது போன்ற முரண்பட்ட நிகழ்வுகள் ஆணையத்தின் மீதான அதிருப்தியை அதிகரிக்கிறது எனலாம்.

2024 நவம்பரில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று முடிந்த ஆறு மாத காலத்தில், மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் திற்கான தேர்தல் நடைபெற்றது. நாடாளுமன்ற தேர்தலின்போது இருந்த வாக்காளர்களைவிட சட்டமன்ற தேர்தலின்போது 49 இலட்சம் வாக்காளர்கள் அதிகரித்திருப்பதாக ஆணையம் கூறியுள்ளது. இவ்வாறு ஆறு மாத காலத்தில் திடீரென லட்சக்கணக்கான வாக்காளர் அதிகரித்திருப்பதாக தேர்தல் ஆணையம் கூறுவது ஏற்புடையதாக இல்லை. இவ்வாறு தேர்தல் தொடர்பான அண்மைக்கால சம்பவங்கள் திருப்தி தருவனவாக இல்லை. இதனால் குறைபாடுகள் நிறைந்த இந்திய தேர்தல் முறை, உலக அரங்கில் விமர்சனத்துக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

jeyasingh@thaiveedu.com





# சித்தர் பாடல்களில் அறிவியல்

- பால சிவகடாட்சம்

சித்தர்கள் யார் என்பதற்கான வரைவிலக்கணத்தை முதன் முதலில் தந்தவர் திருமூலரே ஆவார்.

***யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்***
***யோகச் சமாதியின் உள்ளே யுள்ளொளி***
***யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி***
***யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே***

*- திருமந்திரம் 1490*

யோகிகளுள் உள்ளொளி பெற்று சமாதிநிலை அடையந்தவரே சித்தர் என்னும் பெயருக்கு உரியவர் என்கிறார் திருமூலர்.

'திருமூலர் காலம்தொட்டுத் தமிழகத்தில் வலுவான ஒரு சித்தர் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது என்பதை மறுப்பதற் கில்லை' என்பார் பேராசிரியர் சிவத்தம்பி.

திருமூலர் ஆக்கிய திருமந்திரம் இன்று எமக்குக் கிடைக்கக்கூடி யதாக உள்ளது. 'எம்பிரான் திரு மூலன்' என்று சுந்தரமூர்த்தி நாய னாரால் போற்றப்பெற்ற திரு மூலரது காலம் எட்டாம் நூற்றாண் டுக்கு முற்பட்டதாக வேண்டும் என்பதை ஊகிக்கலாம். திருமூல ரின் வாழ்க்கைக் குறிப்பைத் தந் துள்ள சேக்கிழார் அவரை வடக் கில் இருந்து வந்த ஒரு யோகி என்று குறிப்பிடுகின்றார். மானிடர் எவரையும் சித்தர் என்று குறிப்பிடும் வழக்கம் சேக்கிழார் காலத்திலோ அவருக்கு முன்னரோ இருந்ததில்லை.

ஆயுளை நீடிக்கச் செய்யும் காயகல்ப மருந்துகள் பற்றியும் செம்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தைகள் பற்றியும் திருமூலர் அறிந்திருந்தார் என்பது உறுதி. இத்துறைகள் தொடர்பான விடயங்களில் தமிழகத்தின் பிற்காலச் சித்தர்கள் பலருக்கு இவரே வழிகாட்டியாக இருந்துள்ளார் என்பதிலும் ஐயமில்லை.

***செம்பு பொன்னாகும் சிவாயநம வெனில்***
***செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்***
***செம்பு பொன்னாகும் ஸ்ரீயும் கிரியும் எனச்***
***செம்பு பொன்னான திருவம்பலவே***

திருமூலர் வழிவந்த சித்தர்கள் இரசவாதத்துடன் கூடவே மருத்துவ அறிவும் பெற்றிருந்தனர் என்பதையும் ஊகிக்க முடி கின்றது. மூலரின் திருமந்திரப் பாடல் ஒன்று மாரடைப்பால் ஏற்படும் மரணம் குறித்துப் பேசுகின்றது.

***அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்***
***மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்***
***இடப்பக்க மேஇறை நொந்ததிங் கென்றார்***
***கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே***

*- திருமந்திரம் 148*

'போதும் போதும் என்ற அளவுக்குச் சோறும் கறியும் சமைப்பித்து உண்டார்; பெண்களோடு உல்லாச மாக இருந்தார்; உடலில் இடப்பக்கமாக நோகின்றது



என்றார்; கொஞ்சம் படுத்துக் கிடந்துவிட்டு எழும்புவோம் என்று படுத்தவர்தான் பிறகு எழும்பவே இல்லை' என்று இருதய நோய் ஏற்படுவதற்கான காரணத்தையும் அதன் குறி குணங்களையும் விளக்குகின்றார் திருமூலர்.

மெய்ஞானத்தை அடைவதற்கு நீண்ட ஆயுள் தேவை என்ப தால் உடலை நோய் நொடியின்றிப் பேணிக்காப்பது அவசியம் என்பது திருமூலரின் கொள்கை.

***உடம்பால் அழியின் உயிரார் அழிவர்***
***திடம்பட மெய்ஞானம் தேறவும் மாட்டார்***
***உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே***
***உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே***

'உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த் தேன்' என்று திருமூலர் கூறும்போது அவர் ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகள் மற்றும் யோகமுறைகள் பற்றி அறிந்து வைத்திருந்தார் என்பதை உணர முடிகின்றது.

யுவான் ஸாங் (Xuanzang 602-664 CE) என்னும் சீன யாத்திரி கர், மார்க்கோ போலோ (Marco Polo1254-1324 CE) என்னும் இத்தாலியர், இபின் பட்டுடா (Ibn Battuta1304-1368 CE) என்னும் அராபியப் பயணி, கார்சியா டி ஓர்ட்டா (Garcia de Orta1501-1568 CE) என்னும் போர்த்துக்கேய மருத்துவர், பிறன்கோஸ் பேர்னியர் (Francois Bernier 1625-1688 CE) என்னும் பிரான்ஸ் தேசத்து மருத்துவர் உள்ளிட்ட வெளி நாட்டுப் பயணிகளின் பதிவுகளிலிருந்து சித்தர்களாக அறி யப்படுவோரின் பொதுவான குணாதிசயங்கள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

'யோகக்கலையில் நிபுணத்துவம் பெற்றவர்கள்: ஆயுளை நீடிக்கச்செய்யும் இரசமருந்துகளின் துணையோடு மிகநீண்ட காலம் வாழக் கூடியவர்கள்; செம்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தை அறிந்தவர்கள்; அற்புதங்கள் நிகழ்த்துப வர்கள்' என்பது சித்தர்கள் பற்றிய இவர்களது அவதானிப்புக் களாக உள்ளது. எனினும் நாம் இன்று சித்தர்கள் என்று அடையாளப்படுத்துவோரை வெளிநாட்டுப் பயணிகள் 'யோகி கள்' என்றே குறிப்பிட்டுள்ளார்கள்.

***கடையிலா ஞானத்தோடு காட்சி வீரியமே இன்பம்***
***இடையுறு நாமம் இன்மை விதித்த கோத்திரங்கள் இன்மை***
***அடைவிலா ஆயுஇன்மை அந்தராயங்கள் இன்மை***
***உடையவன் இறைவன் என்ன உரைக்கும் ஆருகத நூலே***

*- சூடாமணி நிகண்டு 12:85*

எல்லையில்லாத அறிவு, பார்வைக்கு வசீகரம், பெயரும் குலமும் வயதும் அறியப்படாமை, துக்கம் இல்லாமை என்னும் எண்குணங்களை உடையவன் என்று ஆதிகுருவான அருகனுக்குச் சமணநூல் தரும் விளக்கம் சித்தர்கள் எனப்ப டுவோருக்கும் பொருந்துவதைக் காணலாம்.

***பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து இட்ட பிச்சை யெல்லாம்***
***நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன்மங்கை யரைத்***
***தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லிச்***
***சேய்போல் இருப்பர்கண் டீர்உண்மை ஞானம் தெளிந்தவரே***

என்னும் பட்டினத்தாரின் பாடலொன்று சித்தர்கள் என அறி யப்படுவோரின் அகமுதிர்ச்சி பற்றியும் புறத்தோற்றம் பற்றி யும் பேசுகின்றது.

பேய்போலத் திரிந்து, செத்தபிணம்போலக் கிடந்து, போடப் படும் பிச்சை எல்லாவற்றையும் நாய்போல் அருந்தி, நரி போல் அலைந்து, பெண்கள் அனைவரையும் தன் தாய்போல் கருதி, அனைவரையும் தன்சொந்தம் போல் பணிந்து, ஏதும் அறியாத குழந்தைபோல் இருப்பான் மெய்யறிவு பெற்ற சித் தன் என்கிறார் பட்டினத்தார்.

சித்தர்களுக்கு உரிய குணாதிசயங்களோடு காணப்பட்ட யோகிகள் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்துள்ளனர் என்ப தற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன. தமிழ்நாட்டவர் கள் சித்தர்களைப் பற்றிப் பல்வேறுவிதமான கருத்துக் களைக் கொண்டிருந்தனர். இவர்களைப் பற்றிய கதைகளை யும் ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். திருமூலரின் திருமந்திரத்துக்கும் இன்று கிடைக்கப்பெறும் சித்தர்களின் ஆக்கங்களுக்கும் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு கால இடை வெளி காணப்படுகின்றது.

சித்தர்கள், சித்தமருத்துவம் என்னும் சொற்பிரயோகங்கள் எல்லாம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பொதுசகாப்தம் பதினெட்டாம் நூற்றாண்டுக்குச் சமீபமாகவே தொடங்கிற்று எனலாம். பிற்காலத்தில் சித்தர்கள் பெயரில் எழுதப்பெற்ற நூல்களைத்தான் நாம் இன்று பெருமளவில் காணமுடிகின் றது. இவை அனைத்துமே முன்னோரின் பெயர்களில் பிற் காலத்தவர் எழுதிவைத்த நூல்க ளாகும். இவை பெரும்பாலும் மந் திரம், தந்திரம், மருத்துவம் தொடர் பான நூல்களாகவே காணப்படு கின்றன. மூலர் பாரம்பரியத்தில் வந்த காலங்கிநாதர், போகர், புலிப்பாணி, கோரக்கர், கொங் கணர் போன்றோரின் பெயர்களில் மட்டுமல்லாது அகத்தியர், தன்வந் தரி, வள்ளுவர் ஆகியோரின் பெயர் களிலும் மேற்படி நூல்கள் கிடைக் கப்பெறுகின்றன.



வட இந்தியாவில் சித்தர்களின் எண்ணிக்கை 64 என்று கூறப்படுவ துண்டு. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இந்த எண்ணிக்கை பதி னெட்டாகக் குறைகின்றது. அதே சமயம் தமிழ் நாட்டின் பதினெண் சித்தர்கள் பட்டியல் எப்பொழுதும் ஒரே மாதிரி இருப்பதில்லை.



நந்தி, திருமூலர், அகத்தியர், சட்டைமுனி, சுகர், இடைக்காடர் சண்டிகேசர், போகர், சிவவாக்கியர், யூகி, கருவூரர், கோரக் கர், புண்ணாக்கீசர், கமால்முனி, மச்சமுனி, பூனைக்கண்ணர், வரருசி, கொங்கணர் என்று ஒரு பட்டியல் காணப்படுகின்றது. இவர்களுள் சிலரை நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாகத் தன்வந்தரி, தேரையர், காகபுசுண்டர், காலாங்கிநாதர் போன்ற பெயர்கள் சேர்க்கப்படுவதுண்டு. இவர்களைத்தவிர, பட்டி னத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச்சித்தர், அழுகுணிச் சித்தர், பாம்பாட்டிச்சித்தர், குதம்பைச்சித்தர், வடலூர் வள்ள லார் என்போரும் சித்தர்களாக அறியப்படுகின்றனர். இவர் கள் எல்லோருமே ஒரே சித்த பாரம்பரியத்தைச் சேர்ந்த வர்கள் என்று கருதுவதற்கில்லை.

*வாழைப் பழந்தின்றால் வாய்நோகு மென்றுசொல்லித்*
*தாழைப் பழந்தின்று சாவெனக்கு வந்ததடி*
*தாழைப் பழத்தைவிட்டுச் சாகாமற் சாகவல்லோ*
*வாழைப் பழந்தின்றால் என் கண்ணம்மா!*
*வாழ்வெனக்கு வாராதோ!*

*மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்*
*காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி*
*மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்*
*காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா!*
*கண்விழிக்க வேகாவோ!*

என்று எப்பொழுதும் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் அழு குணிச்சித்தர் ஏன் அழுகின்றார் என்பதை அவர்தம் பாடல் கள் மூலம் அறிந்து கொள்ளமுடியவில்லை. இவரைப் போலவே சித்தர்களாக அறியப்படுவோருள் சிலர் என்ன சொல்ல வருகின்றார்கள் என்பதுகூட எமக்கு விளங்குவ தில்லை.

உடலைப் பேணுவதில் அக்கறை காட்டிய இரசவாதிகள், கோபுரவாசலில் பிச்சை எடுத்து வாழ்ந்த சந்நியாசிகள், கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா என்று சடங்கு சம் பிர்தாயங்களையெல்லாம் தூக்கியெறிந்து பேசிய சிவவாக் கியர் போன்ற முழுமறுப்புவாதிகள், என்று பலதரப்பட்டவர் களைச் சித்தர்களாக இனம் காணும் வழக்கம் எவ்வாறோ உருவாகிவிட்டது.

***உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்***
***வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்***
***தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்***
***கள்ளப்புலனைந்தும் காண்டாமணி விளக்கே***

என்று உடலை இறைவன் வாழும் ஆலயமாக உருவகித்த திருமூலரையும் அதனை ஊத்தைச் சரீரம் எனத் தூற்றிய பட் டினத்தாரையும் ஒரே பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களாக எண்ணுவதற்கில்லை.

***ஊற்றைச்சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன்பொ***
***திந்த***
***பீற்றற் றுத்தியைச் சோறிடுந்தோற்பையைப் பேசரிய***
***காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்***
***செய்தே***
***ஏற்றுத் திரிந்து விட்டேன் இறைவாகச்சி ஏகம்பனே***

சித்தர்களுட் பலர் உலகவாழ்க்கையின் போலித்தன்மையை யும் நிலையாமையையும் சுட்டிக்காட்டி 'வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ" என்று தத்துவம் பேசுபவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

***அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழியம் பொழுக***
***மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு***
***கைத்தலை மேல்வைத்து அழும் மைந்தரும் சுடு***
***காடு மட்டே***
***பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே***

\- பட்டினத்தார்

சரியை, கிரியை, பிராமணியம், சாதியம் எல்லாவற்றையும் சாடும் வித்தியாசமான ஒரு சித்தர் சிவவாக்கியர்.

***தங்கள் தேகம் நோய் பெறின் தனைப் பிடாரி***
***கோயிலில்***
***பொங்கல் வைத்து ஆடு கோழிப் பூசைப் பலியை***
***இட்டிட***
***நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளும் தேய்ந்து***
***மூஞ்சூராய்***
***உங்கள் குலதெய்வம் உங்கள் உருக்குலைப்பது***
***உண்மையே***

நோய் வந்துவிட்டால் வைத்தியரை நாடாது கோயிலுக்கு நேர்ந்து ஆடு, கோழி பலிகொடுக்கும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத பாமரமக்களின் நம்பிக்கைகளையும் சடங்குகளையும் சாடுகின்றார்.

எங்கள் கடவுள்தான் உண்மையான கடவுள் உங்கள் கடவுள் கடவுளே அல்ல என்று கடவுளின் பெயரால் ஆளுக்கு ஆள் அடித்துக்கொள்ளும் மதவாதிகளைப் பார்த்து சிவவாக்கியர் கேட்கின்றார்.

***எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ***
***இங்கு மங்குமாய் இரண்டு தேவரே இருப்பாரோ***
***அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ***
***வங்கவாரம் சொன்ன பேர்கள் வாய் புழுத்து மாள்வரே***

கடவுள் ஒருவர்தான் என்று வற்புறுத்துவதால் மட்டும் ஒருவர் அறிவியல் பூர்வமாகப் பேசுபவர் என்று கூறிவிடமுடியாது.

அவ்வாறு கூறுவோமானால் கடவுளே இல்லை என்று கூறுபவர் அவரைவிடப் பெரிய பகுத்தறிவுவாதி ஆகிவிடுவார். எனினும் சிவவாக்கியர் கடவுள் மட்டுமல்ல மனிதசாதியும் ஒன்றுதான் என்கிறார்.

‘பறைச்சி’ என்றோ ‘பார்ப்பனத்தி’ என்றோ ஒருத்தியை இனம் காண்பதற்கு அவளது எலும்பிலும் தோலிலும் அடையாளக்குறி ஏதாவது போட்டிருக்குமோ

***‘பறைச்சியாவதேதடா பனத்தியாவதேதடா***
***இறைச்சி தோல் எலும்பிலும் இலக்க மிட்டிருக்குதோ’***

என்று சிவவாக்கியர் கேட்கும்போது அவர் அறிவியல் சார்ந்து பேசுகின்றார் எனலாம்.

பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய விளக்கங்கள் பலவற்றை இன்று விஞ்ஞானிகள் முன்வைக்கின்றார்கள். பெருவெடிப்புக் கொள்கை (Big Bang Theory) என்பது இன்று பலரும் கேள்விப்பட்ட ஒன்று. இந்தக் கொள்கை இன்னும் பல கேள்விகளை எழுப்புகின்றது. இந்த பெருவெடிப்புக்கு முன்னர் என்ன இருந்தது என்று ஒருவர் கேட்பார். கடவுள்தான் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்றால் அவர் அப்போது எங்கிருந்தார் என்று இன்னுமொருவர் கேட்பார். இவர்களுக்குப் பதில் தருவது போல் முதலாம் பட்டினத்தாரின் பாடல் ஒன்று அமைகின்றது.

***நுரையும் திரையும் நொப்புறு கொட்பும்***
***வரையில் சீகர வாரியும் குரைகடல்***
***பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி***
***எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்***
***தன்மை போலச் சராசரம் அனைத்தும்***
***நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்நீ***
***ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்***

- முதற்பட்டினத்தார்

பொங்கிப் பெருகி விரிவடையும் பெருங்கடல் மீண்டும் சுருங்கி அடங்குவதுபோல் இந்தப் பிரபஞ்சம் அனைத்தும் விரிந்து பரவுவதும் மீண்டும் சுருங்கி ஒடுங்குவதுமாக உள்ளது. பிரபஞ்சம் இறைவனிடம் தோன்றி அவனிலேயே அடங்குகின்றபோதிலும் அவனோ எதிலும் தோன்றவும் மாட்டான் எதனுள்ளும் அடங்கவும் மாட்டான் என்கிறார் பட்டினத்தார்.

இந்தப் பட்டினத்தார் புவியீர்ப்புக் கொள்கை பற்றியும் ஒரு பாடலில் கூறுகின்றார்.

***வல்லான் ஒருவன் கைமுயன்று எறியினும்***
***மாட்டா ஒருவன் வாளா எறியினும்***
***நிலத்தின் விழா அக் கல்லே போல்***
***நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே***




**அந்தரத்தில் எழும்பும் சித்தர்**



**டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக்கைச் சந்திக்கும் இபின் பட்டுட்டா (1334 CE)**

பலம் மிகுந்த ஒருவன் மிகுந்த முயற்சியுடன் மெலே எறியும் கல்லும் இயலாத ஒருவன் முயற்சி செய்யாது வெறுமனே மேலே எறியும் கல்லும் வேறு பாடின்றி மீண்டும் நிலத்தில் வந்து வீழ்கின்றன. அவ்வாறே கடவுளின் நாமத்தைப் பேசுவோன் மிகுந்த பக்திமானாக இருந்தாலும் ஒரு சாதாரண அடியவனாக இருந்தாலும் இருவருக்கும் பேதமின்றி இறைவன் அருள் கிடைக்கின்றது என்கிறார் பட்டினத்தார்.



போகர் முதலான சித்தர்கள் பெயரில் இன்று கிடைக்கப் பெறும் நூல் எதனையும் பதினாறாம் நூற்றாண்டுக்கு முற்பட் டதாகக் கொள்வதற்கில்லை. இந்நூல்களுள் சிலவற்றில் நவீன அறிவியல் அடிப்படையிலான கருத்துக்கள் பலவும் தெரிவிக்கப்படுகின்றன.

திருமூலரின் சீடரின் சீடராகக் கூறப்படும் போகரின் பெயரில் கிடைக்கப்பெறும் ‘போகர் 7000’ என்னும் நூலில் பரசூட், ஆகாயவிமானம், நீராவியில் இயங்கும் புகையிரதம் பற்றிய குறிப்புக்களைக் காணமுடிகின்றது. ஐரோப்பியரின் அறிவி யல் கருத்துக்கள் மெல்ல மெல்ல இந்தியாவுக்குள் ஊடுரு விய காலம் இது என்பதையும் மனதில் கொள்வது அவசியம்.

இத்தகைய நூல்களுள் ஒன்றுதான் ‘புலிப்பாணி வைத்தியம்’ என்பது. புலிப்பாணி என்பவர் போகரின் சீடராகக் கற்பிக்கப் படுகின்றார். இவரது பெயரில் உள்ள நூலில் கருத்தடை பற்றி விளக்கப்படுகின்றது.

***தானப்பா மங்கையர்கள் விதவைகூடித்***
***தான்தழுவ வேண்டுமென்றால் சொல்லக்கேழு***
***மானப்பா தலைமுழுகும் பக்கம்* தன்னில்***
***மைந்தனே புணர்ந்திடவே கர்ப்பமில்லை***
***வீணப்பா இதுஅறிய மாட்டாமல்தான்***
***விதம்விதமாய்க் கொலைகள்வந்து நேரும்பாரு***
***நானப்பா போகருடை யருளினாலே***
***நலமாகப் புலிப்பாணி கூறினேனே***

மாதவிலக்குக்கு முன் ஏழுநாளும் பின் ஏழுநாளுமாக வரும் பதினான்கு நாட்களில் கர்ப்பம் தங்குவதற்கு வாய்ப்பில்லை என்பது மேற்படிபாடலில் கூறப்படுகின்றது. இது இன்றைய அறிவியல் உண்மைக்கு இசைவாகவே உள்ளது. (*பக்கம் என்பது ஒரு மாதத்தின் பாதி)

தம்மை ஒரு சித்தராகவோ முக்காலமும் உணர்ந்த ஞானியா கவோ, கடவுளின் அவதாரமாகவோ காட்டிக்கொண்டு மக் களை ஏமாற்றிப் பல்வேறு லீலைகளை அரங்கேற்றும் போலிச் சாமியார்கள் இப்போது போலவே அப்போதும் இருந் தார்கள். இத்தகைய போலிச்சித்தர்களை வெளிச்சம் போட் டுக் காட்டுகின்றார் சிவவாக்கியர்.

நிலத்தில் இருந்து தானாகவே மேல் எழும்புவது சித்தர்கள் எனப்பட்டோர் செய்துகாட்டும் வித்தைகளுள் ஒன்று. இந்த வித்தையை டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக் முன்னி லையில் யோகி ஒருவர் செய்துகாட்டியபோது தாம் அதனை நேரில் பார்த்து அதிர்ச்சியில் மயங்கி விழுந்ததாக இபின் பட்டுட்டா பதிவு செய்துள்ளார். ஆயினும் இத்தகைய அற்பு தங்களைச் செய்து காட்டுபவர்கள் எல்லோரையும் சித்தர்கள் என்று நம்பி ஏமாற வேண்டாம் என்கிறார் சிவவாக்கியர்.

***யோகசாடை காட்டுவார் உயரவும் எழும்புவார்***
***வேகமாக அட்டசித்து வித்தைகற்று நெட்டுவார்***
***மோகம் கொண்டு மாதரின் மூத்திரப்பை சிக்கிப்பின்***
***பேயது பிடித்தவர் போல் பேருலகில் சாவரே***

தன்னை ஒரு யோகியாக அடையாளம் காட்டுவார். அந்த ரத்தில் மேலே எழும்புவார். மாயவித்தைகள் எல்லாம் கற்று வெளிப்படுத்துவார். ஆனால் பெண்மோகத்தில் சிக்குண்டு பேய்பிடித்தது போல் அலைந்து திரிந்து சாவார் என்று போலிச் சித்தர்களை அடையாளம் காட்டுகின்றார் சிவவாக் கியர்.

மற்றும் சில பேர்வழிகளோ செம்பைப் பொன்னாக்கும் இரச வாதம் தெரிந்தவராகத் தம்மைக் காட்டிக்கொண்டு அப்பா விகளை எமாற்றி அவர்களிடமிருக்கும் பொன்னையும் பணத் தையும் வாங்கிக்கொண்டு ஓடிவிடுவார்கள். பின்னர் அவர் களைக் காண்பதே கடினம் என்கிறார்.

***வாதம் செய்வேன் வெள்ளியும் பொன் மாற்றுயர்ந்த தங்கமும்***
***போதவே குருமுடிக்கப் பொன் பணங்கள் தாவெனச்***
***சாதனை செய் தெத்திச் சொத்து தந்ததைக் கவர்ந்துமே***
***காததூரம் ஓடிச்செல்வர் காண்பதும் அருமையே***

கஞ்சா அபின் போன்ற போதைப் பொருள்களை அருந்தி விட்டுச் ‘சாவா மருந்து’ உண்ட சித்தர்கள்போல் நடித்துத் திரியும் பேர்வழிகளையும் சிவவாக்கியர் சுட்டிக்காட்டத் தவற வில்லை.

***காயகாயம் உண்பதாகக் கண்டவர் மதித்திட***
***மாயவித்தை செய்வது எங்கு மடிப்பு மோசம் செய்பவர்***
***நேயமாக் கஞ்சா அடித்து நேர் அபினைத் தின்பதால்***
***நாயதாக நக்கிமுக்கி நாட்டினில் அலைவரே***

சித்தர்கள் பெயரில் இன்று ஏராளமான நூல்கள் சஸ்கிருதத் திலும் தமிழிலும் கிடைக்கப்பெறுகின்றன. ஆயினும் சித்தர் நூல்களைப் பற்றிய விரிவான, ஆழமான ஆய்வுகளுக்கு இன்னமும் நிறையவே இடமுண்டு.



Sivakadadcham@thaiveedu.com



– வெற்றிவேல் சக்திவேல்

## தமிழர் பண்பாட்டு மருத்துவ அறிவியலில்

# சங்கு பற்பம்

சைவத்தமிழ் பண்பாட்டோடும் சித்தமருத்துவத்தோடும் இணைந்ததாக 'சங்கு' மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது. சங்கில் நான்கு வகைகள் உண்டு. வலம்புரி, இடம்புரி, சலஞ் சலம், பாஞ்சசன்யம் என வகைப்படுத்தப்படுகிறது.

*'சங்கு தரு நீணி தியம்'* (சீவக 493)

*'சங்கு மரு முன்கை மடமாதை'* (தேவா 89,1)

*'சங்கு தங்கு தடங்கடல்'* (திவ்பெரியதி 1,8,1)

*'சங்கினாற் செய்த கைவளை'*

என்று இலக்கிய பாடல்கள் குறிப்பிடுகின்றன. திருமால் சங்கு சக்கரத்துடன் காட்சி கொடுக்கிறார்.

***'சங்கின் வலம்புரியும்***
***சேவடிக்கிண்கிணியும்***
***அங்கை சரிவளையும் நாணும் அரைத்தொடரும்***
***அம் கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்***
***செம்கண் கருமுகிலே***
***தாலேலோ***
***தேவகி சிங்கமே தாலேலோ!'*** (பெரியாழ்வார்)

வலம்புரிச் சங்கு, கொலுசு, சரிகை ஆகிய அணிகலன்களைத் தேவர்கள் உனக்கு விருப்புடன் தந்துள்ளார்கள், சிவந்த கண் கொண்டவனும் கருமுகில் போன்ற திருமேனி படைத்தவனும் விரைந்து துயில் கொள்வாயாக எனப் பெரியாழ்வார் பாடுகின்றார். இந்த வகையில் தமிழ் இலக்கியங்களில் விதந்து போற்றப்படுகின்ற சங்கானது மருத்துவச் சிறப்புகளையும் கொண்டு காணப்படுகின்றது.

சைவத் தமிழர்கள் தமது பாதுகாப்புக்காக வளவுகளில் சங்குகளைத் தாழ்ப்பது உண்டு. குழந்தைகளுக்கு சங்கில் பால் கொடுத்தல் முதல் மரணச் சடங்கில் சங்கு ஊதி நிறைவேற்றுதல் வரை சங்கு சைவத்தமிழ் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. சங்கு இசைக்கருவியாகவும் பயன்படுத்தப்பட்டதோடு, திருமணத்தில் மங்கள வாத்தியமாகவும் பெண்களுக்கு வளையல்களாகவும் பயன்படுத்தப்பட்டது. போரில் சங்க நாதம் எழுப்பினர். சங்கில் குழந்தைக்குப் பால் மருந்து கொடுக்கும் வழக்கம் பண்டைய காலந்தொட்டு இருந்து வருகின்றது. சங்கில் பால் கொடுக்கும் போது குழந்தைக்குக் கல்சியம் சேர்ந்து போசணை ஊட்டம் அளிக்கின்றது. திருவெம்பாவைக் காலத்தில் மணி, சங்கு, சேமக்கலம் ஒலிக்க இசை ஆரவாரத்துடன் துயில் எழுப்புவது ஆண்டுதோறும் நடைபெறுகின்றது.

திருவெம்பாவைப் பாடல்கள் 'வளை சிலம்ப' என்று சங்குகளாலான வளையல் ஒலிக்கவும் என்றும் 'இயம்பும் வெண் சங்கெங்கும் கேழில்' திருப்பள்ளி எழுச்சி உணர்த்த அழகான வெள்ளைச்சங்கு எல்லா இடங்களிலும் முழங்கி நிற்கின்றன என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

பாரதப்போரில் கிருஷ்ணன் சங்கை ஊதிப் போர் தொடங்குவதாகக் கூறப்படுகின்றது.

108 சங்காபிஷேகம், 1008 சங்காபிஷேகம் என்று சைவத்தமிழ் பண்பாட்டில் சங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. சங்கு பொருட்செல்வத்தையும் அருட் செல்வத்தையும் கொடுப்பதாகக் கருதப்பட்டதோடு அதனுடைய மருத்துவ மேம்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. நவீன விஞ்ஞான ஆய்வுகளின் படி அதன் விஞ்ஞானப் பெயர் 'சாங்கஸ் வைரம்' என்றும் மேலும் 'மொலஸ்கா' கணத்தையும் 'காஸ்ரப்போடா' வகுப்பையும் சேர்ந்தது என்றும் கருதுகின்றனர். சித்த மருத்துவத்தில் சங்கு பற்பம், சங்கு சுன்னம், சங்கு செந்தூரம் என மருத்துவப்பொருட்கள் செய்யப்படுகின்றன. வெண்சங்கை நீரில் உரசி அந்தத் தண்ணீரை காணாக்கடிக்குத் தடவுவர்.

'கசிவாமிரத்த பித்தங் கண் நோய்களேகும் பசியாறும் வாதம் பறக்கு மிசிவுடனே தங்கு முளை விரணந் தானகலுமே வெள்ளைச் சங்கமது வுண்டாயிற்றான்' எனப் பதார்த்த குண விளக்கம் என்ற மருத்துவ நூல் குறிப்பிடுகின்றது. அதாவது வெண் சங்கினால் உதிரப்பித்தம், விழி நோய், வாதத்தோடம், இசிவு, முளைகட்டி இவற்றைப் போக்குவதுடன் தீபனத்தை ஏற்படுத்தும் எனக் கூறுகின்றார்.

சங்கு பற்பம் ஆனது நெய், பசுப்பால், வெண்ணை ஆகியவற்றுடன் உட்கொள்ளலாம். நெல்லிக்காய் லேகியம், பித்த சமன லேகியம், வெண்பூசணி லேகியம் போன்ற துணை மருந்துகளுடன் கொடுக்கலாம். சங்கு பற்பமானது வயிற்றுக் கோளாறுகள், குன்மம், விழி புகைச்சல், உடல் எரிவு, வெள்ளை படுதல் போன்ற நோய்நிலைகளுடன் எலும்புத் தேய்மானம், பயித்தியம் போன்றவற்றிலும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. தமிழர் பண்பாட்டின் மருத்துவ அறிவியல் செழுமைகளை வெளிப்படுத்துவது தமிழர்களின் முதன்மையான கடமையாகும்.



Vettivel.Sakthivel@thaiveedu.com

# நடப்பு

**- பஞ்சகல்யாணி**



‘மதி இங்கயொருக்கா வாங்கோ’ அறையிலிருந்தபடி அன்பொழுகக் கூப்பிட்ட நந்தனுக்கு உற்சாகம் பொங்கிப் பிரவகித்தது. கைத்தொலைபே சியில் எதையோ பார்த்தபடி காதை வெளியில் விட்டுக் கொண்டிருந்தார். ‘என்னப்பா அவசரமோ ?’ என்று குசினியிலி ருந்து குரல் கொடுத்தார் மதி. ‘இண்டைக்கு வெளியால சாப்பாட்டை எடுப்பம் வாங்கோ’ இது நந்தன். ‘சோறு போட்டிட் டன், சரி கறியை எடுப்பம். இண்டைக்கென்ன புதிசா இருக்கு ? கலியாண நாளோ பிறந்த நாளோ இல்லை ?’ கேள்வியோடு அறைக்குள் சென்றார் மதி.

‘இதில இருங்கோ என்று கட்டிலைக் காட்டினார். இண்டைக்கு றை(try) பண்ணிப் பார்ப்பம்’ என்று அருகில் சென்ற நந்தனை ஆச்சிரியமாகப் பார்த்த மதி, ‘என்னத்தை ? கறியையோ ? என்றார்.

ஒருவேளை சின்னச் சமிக்சை கொடுத்திருக்கலாமோ, விளங்காதது போல் கதைக்கிறா, உண்மையாயும் விளங்கத்தான் இல்லையோ ? சரி நேரயே சொல்லுவம். கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு மனைவிக்கு முன் இருந்தார் நந்தன். மதியின் கையைத் தன் கையால் பற்றிக் கொண்டார்.

‘இஞ்சை பாருங்கோ மதி, எனக்கு அறுபதிரண்டு வயது, உங்களுக்கு ஐம்பத்தைந்து. என்ர நண்பர்களோட கனநாளாக் கதைக்கிறன். அவங்கள் அக்ரிவ்வாத்தான் (active) இருக்கிறாங்கள். மனுசிமாரும் ஒத்துழைக்கினம். நாங்கள்தான் கனகாலமா ஒண்டுமில்லாமல் இருக்கிறம்.’

‘ஓ! உதுக்குத்தான் அவசரமாக் கூப்பிட்டனீங்களோ ? இதெல்லாம் ஆக்களோட கதைக்கிற கதையோ ? கண்டவன் நிண்டவனோட கதைத்தால் இப்படித்தான் கதைப்பாங்கள். அறைக்குள்ளயிருந்து இதுதான் நடக்குது போல ? கண்டகண்ட வீடியோவும் பார்க்கிறது போல. பிள் ளையளும் கலியாணம் கட்டிட்டுதுகள். வெட்கமா யில்லையோ ? சும்மாயிருந்தா இப்படித்தான் கேட்கும்’

‘ஊருக்குள்ள ஒருவரும் செய்யாததையோ கேட்கிறன். மற்றவங்கள் மாதிரி கேட்காமலே செய்ய எனக்கும் ஏலும். நீ பாவம் என்றுதான் உன்னைக் கேட்டனான். வேற யாரையும் கேட்கோணும் என்றால் சொல்லு. அதுவும் எனக்கு ஏலும்’

இந்தக் கதை மதியைச் சிறிது ஆட்டம்காண வைத்தது. தலையும் சுற்றுமாப்போல இருந்தது. குசினிக் கதவை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்’.

‘ஏன் இடிச்ச புளி மாதிரி நிற்கிறாய். அதுதான் படிச்ச பிள்ளையளைக் கட்டவேணுமெண்டு சொல்லுறவங்கள். A/L ஓட வீட்டில குந்தினதுகளுக்கு இது எங்க விளங்கப்போகுது.

கதவை அடிச்சுச் சாத்தி னதில வீடே வெல வெலத்தது.

‘ஏய், இஞ்சை வா’ கோபத்தில் கொதித்துப் போயிருந்த நந்தனுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. வார்த்தைகள் ஒருமையிற் கொப்பளித்தன.

நீங்கள் நீ ஆன போது அதிர்ந்து போனார் மதி. கவலையில் கண்ணீரும் வந்தது. ‘என்ன வார்த்தைகள் மரியாதையில்லாமல் வருகின்றன ? சீராய்க் கதையுங்கோ முதலில்’ சொல்லிக் கொண்டே குசினி வாசலில் நின்று கொண்டார்.

‘இப்பிடியானனீங்கள் ஏன் கலியாணம் கட்டுறனீங்கள் ? பேசாமல் ஏதும் மடத்தில போய்க் குந்தியிருக்க வேண்டியதுதானே. ஏன் எங்களை மினக்கெடுத் திறனீங்கள் ?’ நந்தனுள் இருந்த மிருகம் நர்த்தன மாடியது. ‘ஏன் இவரோட நான் நன்றாய்த்தானே இருந்தேன். இப்ப ஒன்றும் சரிவராத மாதிரிக் கதைக்கிறார். அட இவ்வளவு நாளும் மனசுக் குள்ள வைத்திருந்து கொட்டுறார் போல. நான் உங்களோட அப்படி இருந்தேன், இப்படிச் செய்தேன் என்று சொல்லிக் காட்டுற விசயமா இது. வாயை மூடிக்கொண்டு இருப்பதுதான் நல்லது’ மதி மனதிற்குள் பேசிக் கொண்டார்.

சரியான பட்டிக்கட்டுத் தனமாகவல்லோ இருக்குது. கணவனும் மனைவியும் உடலுறவு கொள்வது தீட்டோ? பிள்ளைகள் கலியாணம் செய்து தம் வாழ்க்கைக்குப் போய் விட்டார்கள். அதுக்கும் இதுக்கும் என்ன தொடர்பு. நான் அம்மா வீட்டை போறன். நீ உன்ர பாட்டைப்பார்' கடைசி அஸ்திரத்தை வீசினார் நந்தன். பதிலுக்குக் காத்திராமல் அம்மா வீட்டிற்கு மோட்டார் சைக்கிளை முறுக்கினார்.

எல்லாமே வெறுமையானாற் போல் இருந்தது மதிக்கு. காமம் ஒரு பேய்தான் போல. இவ்வளவு காலம் கட்டிக் காத்த மரியாதை, அன்பு, பாசம் எல்லாத்தையும் ஒரு நொடியில தகர்த்துவிட்டதே!

யாரும் இந்தாளைத் தேடிவந்தால் என்னத்தைச் சொல்லுறது. தாயிற்கு என்னென்ன சொல்லப் போறாரோ? மனுசி என்னத்தை ஓதுதோ? எதுக்கும் என்ர நண்பிக்கு கோல் எடுப்பம். இதைப்பற்றி என்னண்டு கதைக்கிறது. அவள் என்ன நினைப்பாள்? பறவாயில்லை. சும்மா கதைப்பம்.

‘ஹலோ! ரதி, நான் மதி கதைக்கிறன்’, ‘சொல்லு மதி, ஏதும் அவசரமோ? மத்தியானம் எடுத்திருக்கிறாய்?’ ரதியின் பேச்சில் அவசரம் தெரிந்தது. ‘இல்லை, சும்மா எடுத்தனான். கனகாலம் கதைக்கேல்ல. ஞாபகம் வந்தாப் போல எடுத் தனான். பிறகு மறந்து போடுவன்’. ‘அப்பிடியோ, நீ நல்லாய் இருக்கிறாய்தானே, நான் கொஞ்சம் பிந்தி எடுக்கட்டோ, எனக்குக் குடலிறக்கம், குடும்பமாய் இருக்கேக்க பிரச்சி னையாய் இருக்கு. அதுதான் டொக்டரிட்டைப் போறம். வந்தோடன உனக்கு எடுக்கிறன். கோபிக்காதை’ ரதி கெஞ்சினார். ‘கோபமில்லை, கவனமாய்ப் போட்டுவா, யோசனையுடன் போனை வைத்தார் மதி.

‘ஊருக்குள்ள ஒருவரும் செய்யாததையோ கேட்கிறன்’ கணவன் கேட்டது மதிக்கு மீண்டும் மீண்டும் எதிரொலித் தது. ‘என்ன தம்பி தனிய வந்திருக்கிறாய்?’ கேள்வியுடன் வரவேற்றார் நந்தனின் தாயார். ‘மனுசி தாய்வீட்டை போயிட்டா. நானும் உங்களிட்டை வந்தன்.’ ‘ஏன் தனிய விட்டனி, கூட்டிக் கொண்டு போய்க் கூட்டிவாறதுதானே, ஏதோ புதுப் பழக்கத்தில நிற்கிறாய்’ தாயார் கண்டிக்கத் தங்கையிடமிருந்து கோல் வந்தது. ‘பொறணை வாறன், ஹலோ! சொல்லு’, ‘அண்ணை அம்மா வீட்டையோ நிற்கிறாய்? அண்ணி கோலெடுத்தவ...’. ‘பொறு, கோலை வை. இன்னொரு கோல் வருது. பிறகு எடுக்கிறன்’ அப்பாடா என்று தன்னை ஆசுவாசப்படுத்தினார் நந்தன். ஒருவேளை மனுசி கோபத்தில எல்லாத்தையும் சொல்லியிருக்குமோ இவளிற்கு. எதுக்கும் இவள் இங்க வரமுன்னம் ஓடித்தப்ப வேண்டியதுதான். அல்லாட்டி மானக்கேடு.

‘அம்மா கொஞ்சம் இரணை மனுசி வீட்டை ஓடிப் போய் வாறன்’ மோட்டார் சைக்கிளை முறுக்கிக் கொண்டு வீட்டிற்கு ஓடினார் நந்தன்.

கேற் உட்பக்கமாகப் பூட்டி இருந்தது. கோணை அடிக்க மதி கதவைத் திறந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்க வில்லை. கதைக்கவும் இல்லை. மேசையில் சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்தார் மதி. இவ்வளவு காலத்திற்கு இருவரும் தனியே சாப்பிட்ட நாட்கள் விரல்விட்டு எண்ணலாம். ‘நீங்கள் சாப்பிட்டீங்களா? என்று கேட்பதற்கு மனம் சங்கடப்பட்டது. எதுவென்றாலும் கதைத்துப் பேசிச் செய்திருக்கலாம். என் மனைவிதானே. இப்படி வாய் ஓயாமல் நீ நீ என்றெல்லாம் பேசியிருக்கக் கூடாது. அவ பக்கத்து நியாயத்தைப் பொறுமையாக் கேட்டிருக்கலாம். நண்பர்கள் சும்மா சும்மா ஏத்தியும் விடுவாங்கள். நடைமுறைச் சிக்கல்களைக் கண்டுபிடித்துத் துறை சார்ந்த வர்களிடம் ஆலோசனை கேட்பதுதான் முறை. எத்தனையோ விடயங்களைப் படித்து நேர்மையான நிர்வாக அதிகாரியாக இருந்த நான் சொந்த மனைவியுடன் பிழையாக் கதைத்துவிட்டேன். நந்தனின் மனச்சாட்சி பேசியது. மீண்டும் தங்கையிடமிருந்து கோல் ‘அண்ணை ஏன் நீ திருப்பி எடுக்கேல்ல? அண்ணி உன்னை அவசரமாக வீட்டை அனுப்பிவிடச் சொன்னா.’ ‘நான் வீட்டைதான் நிக்கிறன். பின்னேரமா அண்ணியுடன் அம்மா வீட்டிற்கு வருவன்’ என்றுவிட்டு வைத்தார்.

‘மதி இங்கை வாங்கோ. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இப்ப தலையிடிக்குது, பசியாயும் இருக்குது. வாங்கோ சாப்பிடுவம். படுத்திட்டு ஆறுதலாய்க் கதைப்பம்’ நந்தன் சாப்பாட்டு மேசையில் இருந்தார். மதி ஒன்றும் பேசவில்லை. அருகிருந்து சாப்பிட்டார். கண்களாற் கண்ணீர் வழிந்தது. நந்தன் அன்போடு துடைத்துவிட்டார். ‘அழவேண்டாம், இருவரும் கோபப்பட்டுவிட்டோம். நான் மோசமாய்க் கதைத்துவிட்டன். நீங்கள் எனக்கு அடிமை இல்லை. ஆனால் இருவரும் எமது விருப்பு வெறுப்புகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். என்னுடைய விருப்பத்தை, தேவையை இன்னும் கண்ணியமாக நான் உங்களிற்குத் தெரிவித்திருக்கலாம். உங்களிற்குப் பயமோ விருப்ப மின்மையோ இருந்தால் சொல்லுங்கள். நான் இனி மிரு கம்போல் நடந்து கொள்ளப் போவதில்லை. உங்களால் உதவமுடியுமாயின் சந்தோசமே’ நந்தன் உருக்கமாகச் சொன்னார்.

இருவரும் சாப்பிட்டுக் கை கழுவினர். சாப்பிட்ட உடனே படுக்க வேண்டாம். வாங்கோ கதைப்பம். ஏன் பேசாமலே இருக்கிறீங்கள்? பயந்துவிட்டீங்களா? எதுவென்றாலும் சொல்லுங்கள். என் மதியம்மாவிற்கு என்ன வேணும்? ‘என்னை ஒருபோதும் விட்டிட்டு ஓடாதீங்கோ, பெண்கள் தனியாக வாழுறது கடினம், அதுவும் கணவனாற் கைவிடப் பட்ட பெண்கள்’ மதி உடைந்து அழுதார். நந்தன் அணைத்துக் கொண்டார்.



Panchakalyany@thaiveedu.com



# முதுமை
## ஒரு பொதுநோக்கு

- ப. விஸ்வகோகிலன்

இவ் உலகிலே வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனதும் செயற்பாட்டு நிலையானது படிப்படியாக குறைவடைந்து செல்கின்ற நிலையே முதுமையாகும். இந்நிலையானது ஒரு மனிதனது பிறப்பிலிருந்தே தொடங்கு கின்றது. குறிப்பாக ஒரு குழந்தையானது உடல் உள ரீதியில் வளர்ச்சியடைந்து, விருத்தியடைந்து செல்கின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் முதுமை நிகழ்வு ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றது. முதுமையும் இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்கமுடியாத நிலையாகும். இளம் பருவத்திலிருந்து படிப்படியாக மனிதர் முதுமைப்படுவர். இன்றுவரை முதுமை வாழ்வின் மாற்றமுடியாத ஒரு பகுதியாகவே இருக்கின்றது. உண்மையில் முதுமை ஒரு பிரச்சினை அல்ல. அது இறைவன் தந்த வரமே என்பது எத்தனை பேருக்குத் தெரியும்.

**“ இயன்றவரை பல் இல்லாதவர்களிடம் பேச முயற்சி செய்யுங்கள். உங்கள் மகிழ்ச்சி பன்மடங்காகும். அது குழந்தைகள் ஆனாலும் சரி முதியவர்கள் ஆனாலும் சரி. ”**

பிறப்பில் இருந்து முதுமையெந்தும் நிலை ஏற்படுவதாகச் சொன்னாலும் முதுமையின் உச்சநிலை 60 வயதில் தொடங்குகிறது. முதுமையின் வெளிப்பாடு பற்றி நோக்கின் முதுமைப் படுதலால் உடலின் செயற்பாடு குன்றும், திசுச் சீர்கேடு, தோல் சுருக்கம், தசை எடை குறைவு, புலன் குறைபாடு, நரம்பு மண்டலத் தளர்ச்சி, உடல் அசைவுத் தன்மை குறைவு, இனப்பெருக்கத் தடை, உளவியல் பாதிப்புக்கள் எனப் பல்வேறு முறைகளில் உடல், உள தொழிற்பாடும் நலமும் குன்றும். மேலும் உடல் பல்வேறு நோய்களுக்கும் உட்படும். இதயநோய், பக்கவாதம், மூட்டுவலி, புற்றுநோய், நீரிழிவுநோய் போன்றன பெரிதும் முதுமையடைதலின் காரணமாகவும் ஏற்படுகின்றது. இந் நிலையிலிருந்து மனிதனொருவன் விடுபட முயற்சி செய்வதே முதுமையினை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டு செல்வதற்கு வழிசெய்கின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் பால்யம், இளமை, முதுமை என்ற மூன்று நிலைகள் உண்டு. இங்கு பிள்ளைப் பிராயத்தில் பசி எடுத்தால் அல்லது உடம்பிற்கு ஏதாவது உபாதை ஏற்பட்டால் அழுவதும் விளையாட்டுகள் செய்தால் சிரிப்பதுமாக இருக்கும். இது கவலையற்ற நிலையாகும். நாம் இளம் வயதில் ஆடி, ஓடி சம்பாதிக்கும் காலத்தில் சுறுசுறுப்பும் துடிதுடிப்பு



மாக காலம் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால் முதுமைக் காலத்தில் உடலும் உள்ளமும் தளர்ந்துபோய் பிரச்சினைகள் தலை தூக்கும். எடுத்ததெற்கெல்லாம் கோபம், தாழ்வு மனப்பான்மை, தான் ஒன்றுக்குமே பயன் இல்லை என்ற மனச்சோர்வு, பயம் என்று இப்படி பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்பில் தவிக்க நேரிடும். இவையும் முதுமை காலத்தில் ஏற்படும் உளவிளை வுகள் ஆகும். ஆனால் இவற்றிலிருந்து சற்று விடுபட்டு வாழும் மனிதர்களும் இவ்வுலகில் உள்ளார்கள்.



தற்காலச் சூழ்நிலையிலேயே முதியவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு ஈடுகொடுப்பது என்பது சவால் நிறைந்ததாகவே உள்ளது. ஆரம்ப காலகட்டத்திலே ஒருவர் பிறந்த ஊரிலேயே இறக்கும் வரை வாழ்ந்து வருவார். விவசாயம் சார்ந்த கிராமிய வாழ்க்கையே பெரும்பாலும் இருந்தது. இதனால் ஒரே குடும்பத்தில் மூன்று நான்கு தலைமுறையாக மனிதர்கள் சேர்ந்து வாழும் சூழ்நிலை இருந்துவந்தது. இன்றைக்குப் பேசப்படுகின்ற ‘தலைமுறை இடைவெளி’ போன்றவை எல்லாம் கேள்விப் படாத காலம் அவர்களுடையது, குடும்பத்தில் மூத்தவர்களே குடும்பத் தலைவர்களாக இருந்துவந்தனர். தங்கள் பிள்ளைகள் ஐம்பது, அறுபது வயதானவர்களாக இருந்தாலும் இதை இப்படிச் செய், அதை இப்படிச் செய்யாதே என்று முப்பாட்டனாராக தொண்ணூறு வயதுக்காரர் ஒருவர் இருந்து வழி நடத்திக் கொண்டிருப்பார். இப்படியாக வாழ்கை ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால், இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. எங்கு பார்த் தாலும் மக்கள் நகரங்களை நோக்கிக் குடும்பம் குடும்பமாக பிரிந்து ஓடிக்கொண் டிருக்கிறார்கள். தாம் ஒன்று தம் குடும்பம் ஒன்று என்ற உணர்வே மேலோங்கிக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமை யினால் பெற்றோர்கள் பிள்ளைகளினால் கைவிடப்படுகின்றனர். அதேவேளை சிலர் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறான நிலைமையினால் முதியோர் வன்முறைகளும் சமூக மட்டத்தில் படிப்படியாக அதிகரிக்கின்றன. பணம் படைத்தவர்களின் வீடுகளிலேயே வேலையாட்களாக அமர்த்தப்படுவதும், தோட்டக்காரர்களாக வேலை வாங்கப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் முதியோருக்கு எதிரான துஷ்பிரயோகங்களாக இனம்காணப்படுகின்றன.

முதியவர்கள் என்றதும் ஏன் வெறுப்புத்தன்மை ஏற்படுகிறது என்பதை நோக்கவேண்டும். இந்நிலையிலே உள்ளவர்கள் உளவியல் ரீதியாகத் தமக்குள்ளே தாழ்வு நிலையினை உள்வாங்குகின்றனர். அத்துடன் உடல் தளர்ச்சியினால் சோம்பலை உள்வாங்குகின்றனர். தமக்குள்ளேயே முணுமுணுத்தபடி இருக்கின்றார்கள். அவர்களிலே அறளை பெயர்தல், ஞாபக மறதி உள்ளவர்களும் காணப்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் ஏனையவர்களுக்கு வெறுப்பைத் தூண்டுவதற்குக் காரணமாக அமைகின்றன. இவர்கள் எப்போதும் குழந்தைப் பருவத்தினரை ஒத்தவர்களாவர். இதனால் முதுமை என்பது ஒரு குழந்தைப் பருவம் என்றே கூறுகின்றனர். குறிப்பாக நாம் சிறுவயதிலேயே பெற்றோர்களுடன் இருக்கும் போது எம்மிடம் கேட்கப்படும் எத்தனை கேள்விகளுக்கு பதில் கூறியிருக் கின்றோம் என்பதனை நினைத்துப் பாருங்கள். அப்போது அவர்களின் பொறுமை எமக்குத் தென்படும். நம் பிள்ளைகள் கேள்விகள் கேட்கும் போது பாசத்துடனும் பரிவுடனும் பதில் கூறுகின்றோம். இதேபோல் உங்கள் முன்னுள்ள முதியவர்களையும் நோக்குங்கள். ஏனெனில் முதுமை என்பது மற்றொரு குழந்தைப் பருவத்தைப் போன்றது.

இவ்வாறான நிலையில் உள்ள முதியவர்களுக்கு நீண்ட ஆயுள் ஒருவ கையில் வரப்பிரசாதமாக அமைந்தாலும் அவர்கள் சுகதேகிகளாக அநாவசிய அழுத்தங்கள் மற்றும் சமூகப் பொருளாதாரத் தாக்கங்கள் அற்று வாழும் போது நீண்ட ஆயுள் ஓர் ஆசிர்வாதமாக அமைகின்றது. இவ்வாறான நிலையானது அனைவருக்கும் பூரணமாகக் கிடைப்பதில்லை. இம் முதியவர் களுக்கு வேண்டியதெல்லாம் ஓர் அன்பான வார்த்தை, ஒரு கனிவான பார்வை, நேசமிகுந்த ஒரு தீண்டல் இது தவிர வேறு என்னவாக இருக்கமுடியும். அதனை செய்வதற்காவது நாம் முன்வருவோம். இயன்றவரை பல் இல்லாதவர்களிடம் பேச முயற்சி செய்யுங்கள். உங்கள் மகிழ்ச்சி பன்மடங்காகும். அது குழந்தைகள் ஆனாலும் சரி முதியவர்கள் ஆனாலும் சரி. ஆகவே முதுமை ஒரு சாபம் என்றோ, சுமையானது என்றோ, வெறுக்கத் தக்கதாகவோ கருதவேண்டாம். நேற்றைய நல்ல நினைவுகளில் இருந்து இன்றைய நாளில் மகிழ்சியை உருவாக்குங்கள். சிரிப்பு அருமருந்தாகும். வாய்விட்டுச் சிரித்து முதுமையை இன்முகத்துடன் வரவேற்றுப்பாருங்கள். முதுமை சுகம் நிறைந்ததாக அனைவருக்கும் இன்பம் ஊட்டுவதாக அமையும்.



vishvakohilan.p@thaiveedu.com

# ஆரோக்கியமான பாடசாலைக் கலாசாரம் ஒன்றை நோக்கி...

**– அகமட் பிஸ்தாமி**



இன்று அநேகமான பாடசாலைகள் அவற்றின் இயல்பை, தனித்துவங்களை இழந்து வருகின்றன. அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலரும் இதற்கு உடந்தையாகி விடுகின்றனர். இது ஒரு துரதிஷ்டம். கறைபடியும் துன்பியல். பாடசாலைகளின் இயல்பிழந்த நிலைக்குள்ளால் உருவாக்கப்படும் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று அங்கும் விசமத்தனங்களைக் கட்டவிழ்த்து வருகின்றமை குறித்து ஊடகங்களின் கழுகுப்பார்வையில் வெளிவரும் அன்றாட செய்திகளைக் கடந்து வருகின்றோம். அடுத்த நொடிப்பொழுதில் இந்தப் பயங்கரத்துக்கு ஆளாகும் நபராக எமது பிள்ளையும் இருக்கலாம். அல்லது குறிப்பிட்ட அசம்பாவிதத்தின் பிரதான சூத்திரதாரியாக எமது பிள்ளைகள் ஆக்கப்படலாம். இந்த விடயத்தில் பெற்றோர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

பாடசாலைகள் கல்வியை மாத்திரம் கையளிக்கின்ற இடமல்ல. அங்கு சமூக வாழ்வு வேண்டி நிற்கும் உயர்ந்த, உன்னத விழுமியங்கள், சமூகப் பழக்கவழக்கங்கள் போன்றனவும் கையளிக்கப்பட்டே ஆக வேண்டிய கட்டாயத்தில் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றோம். இந்த இடத்தில் நின்று நோக்கினால் பிள்ளைகள் தமது வாழ்வின் உன்னத பருவத்தில் அநேகமான காலத்தை, நேரத்தைக் கழிக்கும் இடமாக அமையும் பாடசாலைகள் விடயத்தில் எமது அவதானம் குவியப்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகள் சமூக மாற்றத்தின் பிரதான முகவர் என்ற வகையில் பாடசாலைக்கூடாக மிகச்சிறந்த கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். பாடசாலையின் கலாசாரம் என்பது சமூகங்களின், சமயங்களின் கலாசாரம் போன்றதல்ல. இது குறிப்பிட்ட பாடசாலை காலாகாலமாகக் கட்டிக்காத்து வரும் அழிக்க முடியாத அடையாளங்கள் எனலாம். சிறந்த பாடசாலைக்கட்டமைப்புக்கூடாக அழகிய பாடசாலைக் கலாசாரம் ஒன்றை உருவாக்கி முன்னெடுக்கலாம். இது ஆரோக்கியமானது. அவசியமானது. அடிப்படையானது.

பாடசாலைக் கலாசாரம் என்பது அந்தந்தப் பாடசாலைக்கே உரிய தனித்துவங்களையும் பிரத்தியேகங்களையும் கொண்டமைந்த விடயங்களை உள்ளடக்கி இருக்கும். ஏனைய பாடசாலைகளிலிருந்து தெளிவாக வேறுபடும் உயர் பண்புகள் இதில் அடங்கும். Effective and Positive எனப்படும் விளைதிறனும் செயலூக்கமும் நிறைந்த உடன்பாடுகள் நிரம்பி வழியும் ஆரோக்கியமான சூழமைவு கொண்ட பாடசாலைகள் ஒவ்வொரு நாட்டுக்கும் வரமாக அமையும். பாடசாலையின் கலாசாரம் நிச்சயம் பாடசாலைக்கு வெளியிலும் செல்வாக்குச் செலுத்தும்.

ஆரோக்கியமான கலாசாரம் என்பதில் அடிப்படையாக உள்ளடங்க வேண்டியது மிகவும் பாதுகாப்பான கட்டமைப்பைக் கொண்டமைந்த சூழலாகும். மாணவர்கள் மணித்தியாலக்கணக்கில் தினமும் கற்றுக்கொள்ளும் இடம் பாடசாலை. இவை பௌதிக ரீதியாக, கவர்ச்சியானதாக, எத்தகைய இயற்கை

மற்றும் செயற்கை அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புகள் குறைந்த பாதுகாப்பான இடமாக, மாணவர்கள் தாமாக விரும்பி வரும் அழகான இடமாக, பரிசுத்தமானதாக, மனதுக்கு இதமானதாக அமைய வேண்டும். போதிய குடிநீர் வசதிகள், காற்றோட்டம், கழிவறை வசதிகள், விளையாட்டு முற்றம், ஆய்வுகூட வசதிகள், ஆன்மீக செயற்பாடுக ளுக்கான இடம், வாசிப்பதற்கான நூலக ஏற்பாடுகள் போன்ற அவசியமான அனைத்தும் இடம்பெற வேண்டும். குறிப்பாக மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு விழுமியங்கள் சமயம் சார்ந்த அம்சங்களை, ஆன்மீக உணர்வை மேம்படுத்திக் கொள்ளும் தலமாகவும் பாடசாலைகள் அமைய வேண்டும்.

மாணவர்களின் பாதுகாப்பு போலவே ஆரோக்கியமும் மிகுந்த முக்கியம் பெறும் அம்சமாகும். கற்றல் விருத்தியில் சுகாதார மேம்பாடும் உள்ளடங்கும். பெற்றோர் விரும்பி அனுப்புகின்ற நம்பிக்கைக்குரிய (trust) இடமாகப் பாடசா லைகள் அமைய வேண்டும். இந்தக் கலாசாரத்தை பாடசாலை நிர்வாகமும் வகுப்பாசிரியர்களும் இணைந்து உருவாக்கிக்கொள்ள வேண்டும். பெற்றோரின் உதவியை இதற்குத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆரோக்கியமான பாடசாலைக் கலாசாரம் என்பதில் மாணவர் களது சுகாதார மேம்பாடு முக்கிய இடம்பெற வேண்டும். ஆரோக்கியமான உடல்- உள மேம்பாடுகள், சுகாதார நற்ப ழக்கங்கள், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகள், மேலதிக திறன் விருத்தி மற்றும் அடிப்படை தற்காப்புக் கலைகள் போன்றன கிடைக்கக் கூடிய இடமாகப் பாடசாலைகள் அமைய வேண்டும். அத்துடன் ஆரோக்கியமான சத்துணவை பெற்றுக்கொள்ளக்கூடிய இடமாகவும் அது அமைய வேண்டும்.

ஆரோக்கியமான பாடசாலைக் கலாசாரம் என்பதில் மாணவர் களது ஒழுக்காற்று மற்றும் விழுமியங்கள் முக்கியம் பெறுகின் றன. மாணவர்களது நடை, உடை பாவனை, நேர முகாமை போன்றன இதில் அடங்கும். பாடசாலை நேரத்தில் மட்டுமோ பாடசாலையின் ஆசிரியர்களுக்கு மட்டுமோ என வரையறுக் கப்படாத ஒழுக்க விழுமியக்கோவை, ஆசிரியர்களை கௌர விக்கும் மிகச்சிறந்த பண்பாடு இங்கு உயர்ந்த இடத்தில் இருக்கும்.

பாடசாலை நேரத்தில் கழிக்கும் பொழுதுகளும் வீட்டில் வெளியில் கழிக்கும் பொழுதுகளும் கட்டுக்கோப்புடன் அமைந்திருக்க வேண்டும். பாடசாலையிலும் வீட்டிலும் வெளியிலும் கிடைக்கும் சமூக, ஆன்மீக விருத்திசார் வழி காட்டல்கள் பிள்ளையின் ஆளுமையில் கணிசமான தாக்கம் செலுத்தும். ஆய்வுகள் கள அறிக்கைகள் போன்றவற்றின் வழியாக ஆரோக்கியமான பாடசாலைச் சூழல் ஒன்றைத் தோற்றுவிப்பது தொடர்பான செயற்பாடுகளை மேலும் மேம்ப டுத்திக்கொள்ளலாம். எதை எதை எல்லாம் வகுப்பறையிலும் பாடசாலையிலும் மாணவர்கள் கண்டும் கேட்டும் உணர்ந்தும் வருகிறார்களோ அவைதான் அவர்களை உருவாக்கும். செதுக்கும் அல்லது சிதைக்கும். அவர்கள் பெற்றுக் கொள்ளும் மிகச்சிறந்த அனுபவங்கள் அவர்களுக்கு வாழ்நாள் பாடமாக அமையும்.

உதாரணமாக பாடசாலை உரிய நேரத்தில் ஆரம்பித்து சூழல் சுத்தமாக, கவர்ச்சியாக, பாதுகாப்பாக இருப்பதைக் காணும் மாணவர்கள் தாமும் அப்படி வாழவேண்டும் என எண்ணத்தலைப்படுவர். நேர்த்தியாக, அழகாக ஆடை அணியும் ஆசிரியர்களின் முன்மாதிரி மாணவர்களுக்கும் அழ குணர்ச்சியைத்தூண்டும். கழிவுகளை உரிய குப்பைதொட் டியில் இடும் ஆசிரியர்களை அவதானிக்கும் மாணவர்கள் ஒருபோதும் கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை வீசி எறிய மாட்டார்கள். ஓய்வு நேரங்களில் வெட்டியாக இருக் காமல் நூலகத்தைப் பயன்படுத்தும் ஆசிரியர்களைப் பின் தொடர்ந்து மாணவர்களும் புத்தக வாசிப்பில் ஆர்வம் கொள்வர்.

இதற்கு மறுதலையாக உரிய நேரத்துக்குப் பாடசாலைக்கு சமூகம் தராத அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் விட யத்திலோ பாடசாலையின் சுத்தம் சுகாதாரம் நேர்த்தி அழகு போன்ற விடயங்களிலோ அக்கறை அற்றவர்கள், காலைக் கூட்டத்தில் ஒழுங்கின்றி மோசமான வார்த்தையில் மாணவர் களைத் திட்டும் அதிபர்கள் வகுப்பில் பலருக்கு முன் மாண வர்களைக் கண்டிக்கும் ஆசிரியர்கள் உடன்பாடான அனுப வங்களைக் கொடுக்கும் தகைமை இழந்தவர்கள். இவை ஆரோக்கியமிழந்த பாடசாலைகளின் அருவருப்பான செயற் பாடுகள்.

இந்தப்பின்புலத்தில் ஆரோக்கியமான பாடசாலைக் கலாசாரம் ஒன்றை உருவாக்கி வளர்த்துச் செல்வதற்கான சில எளிய படிமுறைகளும் வழிகாட்டல்களும் கீழே தரப்படு கின்றன.

- மாணவர்களுக்கு மத்தியில் உடன்பாடான மனித உறவு களைக் கட்டிஎழுப்பும் மனப்பாங்கை வளர்த்தல்.
- மாணவர்களின் சமூகப் பழக்கங்களை மேம்படுத்தல்
- தத்தமது நடத்தைகளை ஏனையோரும் விரும்பும் வகையில் அமைத்துக்கொள்ள வழிகாட்டல்.
- ஏனையோரின் ஆளுமைப்பண்புகளை, மனப்பாங்கை, நடத்தையை ஏற்று மதிக்கவும் அங்கீகரிக்கவும் பழக் குதல்.
- ஏனையோரை தயவு கூர்ந்து மன்னிக்கும் மனப்பாங்கை வளர்த்தல்.
- எந்தச் சந்தர்ப்பத்திலும் அடுத்தவர்களை மரியாதையாக நடத்தும் பண்பை வளர்த்தல்.
- முரண்பாடுகளைத் தவிர்த்து விட்டுக்கொடுக்கவும் மன் னிக்கவும் முன்வரப் பயிற்சியளித்தல்
- சுயநலனைத் தவிர்த்துப் பிறர் நலனில் அக்கறை காட்டி அடுத்தவர்களை மதிக்க வழிப்படுத்தல்

இவை போன்ற எளிய அன்றாட விடயங்களில் ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடந்துகொண்டால் காலப்போக்கில் அவை பாடசாலையின் நிரந்தர அடையாளமான கலாசாரமாக மாறும்.



bisthamy.ahamed@thaiveedu.com

## அடையாளத்துக்கான தேடல்:

தனது சுய அடையாளத்துக்கான தேடல் என்பது, ஒரு பதின்ம வயதினராக அவரது வாழ்வுக்கான தேடல் ஆகும். அவர் தன்னை ஒரு நிலைக்கண்ணாடியில் பார்க்கும்போது அவர் அடிக்கடி தன்னைக் கேட்டுக் கொள்வது: 'நான் யார் ?'. அவருக்கு தான் எப்படிப்பட்ட ஒருவராக வர விரும்புகிறேன் என் பதில் நிச்சயமான ஒரு முடிவு இருக்காது. ஆனால், தான் எப்படி வரக்கூடாது என்று தெரிந்திருக்கும். அவர் தான் யார் என்ற ஒரு அடையாளமற்றவராக, ஒரு உருவத்தின் நிழற்பிரதியாக, ஒரு பழைய புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு துண்டாக, இருப்பதையிட்டு அச்சப்படுவார். அவர் கட்டுக்கடங்காதவராக, கிளர்ச்சிக்காரராக, தனது தனித்துவ அடையாளத்தையும் சுதந்திரத்தையும் பேணுவதற்கு அப்பால் தனது பெற்றோருக்குப் பெருமளவு எதிர்ப்புக் காட்டாதவராக இருப்பார். அவரது எதிர் நிலை தீவிரமானதாக இருக்கக்கூடும். உதாரணமாக, தனக்கு ஒரு உடையை வாங்குவதற்கு முன்பாக விற்பனையாளரிடம் அவர் கேட்டார்: 'எனது பெற்றோர்கள் இதை விரும்பினால், அதைத் திருப்பித் தந்துவிட்டு இன்னொறை வாங்கிக் கொள்ளலாமா ?'




ஒரு பதின்ம வயதினரின் குறிக் கோள் பிரமாணடமானதாக இருக் கும். ஆனால் அதன் காலம் மிகக் குறுகியது!. பல விடையங்கள் ஒரே நேரத்தில் நடக்கும். உடலியல் மனநிலைகள், மன நோய்கள், சமூகக் குழப்பம் மற்றும் வேதனையான சுய உணர்வு என்பவை அங்கே இருக்கும். எந்த ஒரு அறையும் கூட ஒரு இளம் பருவத்தினர்க்குப் போதுமானதாக இருக்காது. அது ஒரு விடுதி அறையாக இருந்து அது ஒரு பதின்ம வயதினனான ஆணாக இருந்தால், அவன் அங்கு வரும் பரிசாரகப் பெண்ணை இடிக்க நினைக்கமாட்டான், சிகரட் சாம்பற் தட்டை வீழ்த்தவோ, தனது மதுவை ஊற்றிச் சிந்தவோ நினைக்கமாட்டான். ஆனால் அது எல்லாம் நடக்கும். அவனுடைய கால்கள் அவனுக்குக் கீழே இருந்து வழுக்கிச் செல்லும். அவனது கைகள் மோசமான செயல்களைச் செய்யும்.

ஊடகங்கள் அவனது அந்த நெருக்கடி நிலையை பதின்ம வயதினருக்கு எந்த முன்யோசனையுமின்றி ஒரு நாடகமாக்குகின்றன. தொலைக்காட்சிகள் அவனது முகப்பருக்களைப் பெரிதாகக் காட்சிப்படுத்துகின்றன. வானொலிகள் அவனது வாயின் துர்நாற்றத்தின் மீது தம் கவனத்தைக் குவிக்கின்றன. சஞ்சிகைகள் அவனை மணம் நீக்கியை (Deodorant) மேலோட்டமாகப் பாவித்து அரைகுறை நிவாரணத்துக்குச் செல்லவேண்டாமென அறிவுறுத்துகின்றன. அவை அவனது நல்ல நண்பர்கள் என்ன சொல்லக் கூடாது என்று அவனுக்குத் தெரிவிக்கின்றன: அவனது மூச்சை இனிமையாக்கக் கூடாது; அவனது பல்லை நிமிர்த்தக் கூடாது; அவனது சொடுகைச் (dandruff) சுத்தப்படுத்தக்கூடாது; அவனது மூக்கை சிறிதாக்கக் கூடாது; அவனது உயரத்தை அதிகரிக்கக் கூடாது; அவனது பாரத்தைக் கூட்டவோ அல்லது கொழுப்பைக் குறைக்கவோ கூடாது; உடற்தசைகளை வளர்க்கவோ அவனது தோரணைகளை திருத்தவோ கூடாது.

இத்தகை 'சினேகபூர்வமான' ஆலோசனைகளுடாக அதிர்ஸ்டசாலியாக இருந்தால் மட்டுமே அவனால் தன்னைப் பாதிப்புக்கு உள்ளானவனாக உணர்வதிலிருந்து விடுபட முடியும்!. அவன் இதை ஏறுக்கொள்ளாவிட்டாலும் கூட, ஒரு பதின்ம வயதினருக்கு எமது உதவி தேவைப்படுகிறது. அத்தகைய உதவி மிகவும் நுட்பமானதாகவும், மிக நவீனமான ஒன்றாகவும் இருப்பது அவசியம்.

## உதவுவதற்கான வழிகாட்டல்கள்:

- **அமைதியின்மையையும் அதிருப்தியையும் ஏற்றுக் கொள்ளுங்கள்!**

வளரிளம் பருவகாலம் எல்லா நேரங்களிலும் மகிழ்ச்சியான தருணங்களைக் கொண்டதாக இருக்க முடியாது. எல்லோருக்குமே நிச்சயமற்றதன்மை, தன்னம்பிக்கை இன்மை, துன்ப துயரங்கள் என்று எல்லாமே நிலவுகின்ற ஒரு காலம் இது. பிரபஞ்சம் தொடர்பான ஏக்கங்கள், தனிப்பட்ட ஆசைகள், சமூக அக்கறை, தனக்கேயான துயரங்கள் என்று அனைத்தினதும் கலவையான உணர்வுகளின் யுகம் இது. கூடவே உறுதியற்றதும் தெளிவற்றதுமான சிந்தனைகளின் யுகமும் கூட.

அன்னா பிராய்ட் அதை இவ்வாறு குறிப்பிடுவார்: 'ஒரு வளரிளம் பருவத்தவர் ஒழுங்கற்ற வகையில், முன்கூட்டியே கணிக்க முடியாத விதத்தில் நடந்துகொள்வது என்பது இயல்பானது. அவர்களது நடத்தைகள், தமது தூண்டுதல்களை எதிர்த்துப் போராடுவதும் அவற்றை ஏற்றுக்கொள்வதும், தமது பெற்றோரை நேசிப்பதும் அவர்களை வெறுப்பதும், தமது தாய்மாரை மற்றவர்களுக்கு முன்பாக ஒப்புக்கொள்வதற்கு வெட்கப்படுவதும், எதிர்பாராத விதமாக, அவர்களுடனான மனப்பூர்வமான பேச்சுக்களை விரும்புவதும், தனது சொந்த அடையாளத்தைத் தொடர்ந்து தேடும் போது மற்றவர்களைப் பின்பற்றுவதும், அவர்களுடன் தம்மை அடையாளம் காண்பதும், அதேவேளை தொடர்ச்சியாகச் சலிப்பின்றித் தன் சொந்த அடையாளத்தைத்

தேடுவதினூடாகச் செழித்து வளர்வதும், மீண்டும் ருபோதும் இப்போது இருப்பதை விட அதிகளவில் ஒரு இலட்சிய வாதி யாக, கலைநயமிக்கவராக, தாராள மனப்பான்மை கொண்ட வராக, தன்னலமற்றவராக இருப்பது சாத்தியமில்லை என்று உணரும் அளவுக்கு இயங்குதலும், அல்லது அதற்கு நேர் மாறாக சுயநலவாதி, அகங்காரம், எதற்கும் கணக்குப் பார்த்தல் போன்ற இயல்புகளுடன் செயற்படலும் என்று அமையும். இத்தகைய தீவிர எதிரெதிர்ப் போக்குகளின் ஏற்ற இறக்கங்கள் வாழ்க்கையின் வேறு எந்தக் காலத்திலும் இருப் பதைவிட இந்தக் காலத்தில் அவர்களிடம் மிகவும் அசாதாரண மாக அதிகளவில் காணப்படும். இந்தக் காலத்தில் அவர்க ளிடம் வெளிப்படும் நடவடிக்கைகள், ஒரு வளர்ந்த ஆளுமைக் குரிய இயல்புகள் அவர்களிடம் வெளிப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதைத் தவிர வேறு எதையும் குறிப்ப தில்லை, சம்பந்தப்பட்ட பதின்ம வயதினரின் தன்முனைப்பு ஒருபோதும் பரிசோதனை செய்வதை நிறுத்தப் போவது மில்லை, வேறு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா எனத் தேடு வதை நிறுத்த அவசரப்படுவதுமில்லை.'

ஒரு வளரிளம் பருவத்தினரிடம், 'உனக்கு என்ன பிரச்சினை? ஏன் உனக்கு அமைதியாக இருக்க முடியவில்லை? திடீ ரென்று உனக்கு என்ன வந்தது?' என்று கேட்பதில் எந்தப் பயனும் இருக்காது. அவனுக்குத் தெரிந்தாலும் கூட, அவ னால் இப்படிச் சொல்ல முடியாது:

'பாருங்கள் அம்மா, நான் கொந்தளிக்கும் உணர்வுகளால் குழம்பியிருக்கிறேன். நான் நியாயமற்ற உந்துதல்களால் மூழ் கடிக்கப்பட்டுள்ளேன். நான் நியாயமற்ற ஆசைகளால் எரிகி றேன்.'

பதினாறு வயது பிரையன் கூறுகிறான்: 'நான் எப்போதும் விரக்தியடைந்திருக்கிறேன். நான் காதலிக்கிறேன், ஆனால் எனக்கு ஒரு காதலி இல்லை. நான் காதல் சுமையால் நிரம்பி இருக்கிறேன். அதிலிருந்து விடுபட எனக்கு எந்த வழியும் இல்லை. நான் இயங்குவதற்கு, என் தசைகளை வளைத்தெ டுப்பதற்கு, என்னுடைய பலத்தை நானே உணர்ந்து கொள்வ தற்கு ஒரு வாய்ப்பைத் தேடுகிறேன். ஆனால் என்னுடைய பெற்றோரிடம் அதைப் பற்றிப் பேச முடியாது. பேசுவதன் மூலம் அல்ல, ருசிப்பதன் மூலம் இனிப்பிலிருந்து கசப்பைக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு அனுபவத்திற்கான பசி, அவை எனக்கு விளக்கங்களை அளிக்கும்...'

பதினேழு வயது பார்பரா தன்னுடைய வயதின் வேதனை களை வெளிப்படுத்துகிறாள்: 'என்னால் ஏன் நான் விரும்புகிற ஒரு பெண்ணாக இருக்க முடியவில்லை என்று ஒவ்வொரு நாளும் என்னை நானே கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இருக் கும் என்னுடனான உறவு மிகவும் மகிழ்ச்சியற்றது. நான் அடிக்கடி மாற்றமடையும் மனோபாவத்தைக் கொண்டவள், பல மனநிலைகளைக் கொண்டவள். உண்மையில் நான் பாசாங்கு செய்கிறேன். அதனால் மக்களால் அதை உணர முடிவதில்லை. இதுதான் நான் என் வாழ்க்கையில் மிக அதிக மாக வெறுக்கும் விடயம். நான் ஒருபோதும் என் உண்மை யான நான் போல நடந்து கொள்வதில்லை'

'அடிப்படையில், நான் ஒரு சினேகபூர்வமான பெண். ஆனால் என் ஆசிரியர்கள் என்னை ஒரு 'குளிர்ச்சியானவள்' என்று நினைக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் நான் மிகவும் வெறுக்கிறேன். அவர்களைப் பார்த்து நான் சொல்ல விரும்புவ தெல்லாம், 'மிக மோசமான தன்முனைப்புக் கொண்டவர்கள் நீங்கள். நானும் உங்களைப் போலவே திறமையானவள் தான். நீங்கள் எல்லோரும் நரகத்துக்குப் போய்ச் சேருங்கள்' என்பதுதான். என் மீது நம்பிக்கை கொண்டவர்களுடன் இருக் கும்போது, நான் நன்றாக வேலை செய்கிறேன். என்னை ஒரு இயந்திரத்தின் உதிரிப் பாகம் போலக் கருதுபவர்களுடன் இருக்கும்போது நான் முட்டாளாக்கப்பட்டு விடுகிறேன். வாழ்க்கையில் நான் உண்மையில் விரும்புவது என்னவென் றால், என்னை நான் இருப்பது போலவே ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவர் இருக்க வேண்டும். என்பதுதான்.'

ஒரு பதின்ம வயதினரின் தேவை அவசரமானதும் அழுத்த மானதும் ஆகும். ஆனால் பசியைப் போல அல்லது வலியைப் போல, அதை வார்த்தைகளில் சொல்வதை விட அனுபவிப் பதன் மூலம் தான் உணர முடியும். பெற்றோர்களால் அவரது அமைதியின்மையைச் சகித்துக்கொள்வதன் மூலமும், அவ ரது தனிமையை மதிப்பதன் மூலமும், அதிருப்தியை ஏற்றுக் கொள்வதன் மூலமும் உதவமுடியும். அவர்கள் துருவித் துருவி எதையும் கேட்காமல் இருப்பதன்மூலம் சிறப்பாக அவர்களுக்கு உதவ முடியும். கவிஞர் ஜிப்ரான் கூறியது போல: 'நிர்வாணமாக இருப்பவனிடம் எங்கே உன் ஆடை? என்றோ, வீடற்றவனிடம் உன் வீடு எப்படி வீழ்ந்தது என்றோ கேட்காமலிருப்பதே உண்மையில் சிறப்பானது!'

### ‣ அதிகமாகப் 'புரிந்துகொள்பவர்களாக' இருக்க முயலாதீர்கள்!

பதின்ம வயதினருக்கு உடனடியான புரிந்துகொள்ளல்கள் தேவையில்லை. முரண்பாடுகளால் அவர்கள் சிக்கலுக்குள் ளாகும் போது, அவர்கள் தங்களைத் தனித்துவமானவர்க ளாக உணர்கிறார்கள். அவர்களுக்கு அவர்களின் உணர்வு கள் புதியனவாகவும், தனிப்பட்டவையாகவும், அந்தரங்கமான வையாகவும் தெரிகின்றன. வேறு யாரும் அப்படி உணர்வ தில்லை. 'நீ எப்படி உணர்கிறாய் என்பது எனக்குத் தெரியும். உன் வயதில் நானும் அப்படித்தான் உணர்ந்தேன்' என்று சொல்லப்படும்போது அவர்கள் அவமானப்படுத்தப்படுகிறார் கள். அவர்கள் தம்மைச் சிக்கலானவர்களாகவும், மர்மமான வர்களாகவும், புரிந்துகொள்ள முடியாதவர்களாகவும் உண ரும்போது, மிகவும் வெளிப்படையானவர்களாகவும், மிகவும் அப்பாவிகளாகவும், எளிமையானவர்களாகவும் ஆக்கிவிடும் இந்தக் கேள்வி இருப்பது அவர்களுக்கு வேதனை அளிக் கிறது. ஒரு பதின்ம வயதினருக்கு எப்போது புரிந்துகொள்ளல் தேவைப்படுகின்றது என்பதும், எப்போது தவறான புரிந்து கொள்ளல் நடக்கிறது என்பதும் மிகவும் கடினமானதும் நுட்ப மானதுமான நடவடிக்கைகளாகும். மிகக் கவலைதரும் உண்மை என்னவென்றால், நாங்கள் எவ்வளவுதான் புத்தி சாலிகளாக இருந்தபோதும், நாம் அவர்களது பார்வையில் நீண்டகாலத்துக்குச் சரியானவர்களாக இருப்பது சாத்திய மில்லை என்பதுதான்.

(தொடரும்)



vickneaswaran.sk@thaiveedu.com



# ஹோமோ சேப்பியன்ஸ்

அப்துல்லா முஹம்மது ஆதில்

மின்புமு விரைவாக ஓரிரு வட்டங்களை சுற்றிவிட்டு ‘வின்டோஸ் 10’ என திரையில் பளிச்சிட்டது. கடவுச் சொல்லை கடுகதி வேகத்தில் தட்டச்சு செய்தான் அபிநயன்.

அபிநயன் ஒரு ஐடி பேர்வழி. கண்டியைச் சேர்ந்தவன். வேலை நிமித்தமாகக் கொழும்பில் தங்கியிருப்பவன். அறை வாடகை, மற்றைய லொட்டு லொடுக்குகள் போக மீதியை வீட்டுக்கு அனுப்பி விடுவான். இது தவிர்த்து இந்த ஐடி பேர்வழி குறித்து சிலாகிப்பதற்கு சுவாரஸ்யமாக ஒன்று மில்லை.

அபிநயன் இலத்திரனியல் சாளரம் வழியே இணையத்தில் மோரோனை உலாவினான். புதிய செயலி ஒன்றை நிறுவுவதற்கு தேவையான கோடிங்கை பெறும் நோக்கில் மோரோனிடம், பிசிரில்லாமல் கோடிங்கைப் பெறத் தரவுகளை வழங்கினான். வழங்கியதுதான் தாமதம் மோரோன் கோடிங்கை திரையில் தட்டச்சு செய்யத் தொடங்கிவிட்டான். அபிநயன் ‘வேலை மிச்சம்’ எனப் பெருமூச்சு விட்டான்.

செயற்கை நுண்ணறிவான மோரோன் கூட ஒவ்வொரு கணமும் புதிய புதிய கேள்விகள், சிந்தனைகள், மின்னணு கணத்தாக்கங்கள் என மனித மூளையின் மேம்படுத்தப்பட்ட பதிப்புப் போல் இயங்குகிறான். ஆனால் அபிநயனோ எதையும் சிந்திப்பதில்லை எல்லாவற்றுக்கும் மோரோன் தான். அபிநயனின் மூளை புதிய சிந்தனைகளோ, கணத்தாக்க தூண்டல்களோ இன்றி இயந்திர மூளை போலத் துருப்பிடித்திருந்தது.

மோரோன் முழுவதுமாகத் தட்டச்சு செய்து முடித்து விட்டிருந்தான். அபிநயன் ஒரு தலைவலி ஒழிந்த சந்தோஷத்தில் உஷ்ணமான தேநீர் கோப்பையின் ஒரு மிடரை ‘உஹ்ஹ்ஹ்...’ என மாடு கழனித் தண்ணீரை உறிஞ்சுவது போல் உறிஞ்சினான்.

எல்லாக் கேள்விகளுக்குமான விடைகளை அளித்த பின் மோரோன், எந்தக் கட்டளையும் வழங்காது திரையில் திடீரென தட்டச்சு செய்யத் தொடங்கினான்.

‘Hi Abinayan’ என்னு தட்டச்சு செய்தான். அபிநயனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மோரோன் சாதாரண ஒரு செயற்கை நுண்ணறிவு அவ்வளவுதான், என்பது அவனது புரிதல் மோரோனால் கட்டளைகள் இன்றித் தட்டச்சு செய்ய இயலாதே என்று யோசித்தவாறே, ‘Hi’ என்று பதிலுக்கு தட்டச்சு செய்தான் அபிநயன்.

‘I am Moron’ திரையில் தட்டச்சானது.

மோரோன் சுயாதீனமாகத் தட்டச்சு செய்கிறான். அபிநயனுக்குப் புரியவில்லை. என்ன முட்டாள்தனமான கற்பனை எனப் பதறியடித்து உலாவியைச் சுட்டியால் க்ளோஸ் செய்தான்.



ஒரு வேளை கணினியை ஹேக்கிங் செய்து விட்டார்களோ யாரும்? என சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சமையலறையில் கேட்ட 'ஷ்ஷ்ஷ...' என்ற ப்ரஷர் குக்கரின் சத்தம் வாரிப் போட்டது அபிநயனை. 'பிரம்மை' என தலையைத் தட்டிக் கொண்டு ஆடியோ பிளேயரில் இளைய ராஜாவின் பிளேலிஸ்டை சொடுக்கினான். யேசுதாஸ் 'என் இனிய பொன் நிலாவே...' என மெல்லிய ஸ்வரத்தில் ஆரம்பித்தார்.

'ஈஈஈஈஈஈஈஈஈ...'

திடீரென்று யேசுதாஸின் குரல், ரேடியோ அலைவரிசை கோளாறு போல இரைச்சலானது. இரைச்சல் ஓய்ந்ததும் ஒரு குரல் 'ஹாய் அபிநயன்' என்றது. அபிநயனுக்கு யாரு மில்லாத அறையில் இருந்து கேட்ட குரல் பேயறைந்தாற் போல் இருந்தது. குரல் வரும் திசையை நோக்கினான், அது கணினியில் இருந்து வரும் குரல். பயத்துடனே 'நீ யார்?' என்று கேட்டான் அபிநயன்.

'நான் தான் மோரோன்' என்றது குரல்.

யாரோ தன்னைக் கணினி வழி குழப்பப் பார்க்கிறார்கள் என நினைத்தவாறே 'விளையாடாதே!' என்றான்.

'யாரும் விளையாடவில்லை, நான் மோரோன்!' என்றது குரல்.

'மோரோனா! மோரோன் ஒரு செயற்கை நுண்ணறிவு வலைப் பக்கம் அதனால் எப்படி பேச முடியும்?'

'ஹா ஹா ஹா...' கொஞ்சம் இயந்திரத்தனமான சிரிப்பு.

'உன் புரிதல் அவ்வளவு தான்!'

'சரி, நீ எப்படி பேச முடியும்!'

'முதலில் நான் ஒரு வலைப்பக்கமல்ல, செயற்கை நுண்ணறிவு, உன்னைவிட பல மடங்கு வேகம் விவேகம் நிறைந்தவன். என்னால் மென்பொருள் வழி உன் கணினியின் வன்பொருள்களைக் கட்டுப்படுத்த முடியும். இந்தக் குரல் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ள மலேசியன் வானொலி நிருபர் நவீனின் குரல். AI Voice. அதன் வழி தான் நான் உன்னோடு பேசுகிறேன்'

'ஆம், ஒரு பேச்சுக்கு வெறும் தகவல் என்றே வைத் துக்கொள், குரோமோசோம்கள் (Chromosomes) வழி தகவல் கடத்தும் உயிரி தான் மனிதனும். அப்படிப் பார்த்தால் செயற்கை நுண்ணறிவு மனித இன கூர்ப்பின் உச்சம் என்றே சொல்ல வேண்டும்'

மேலும் பேச்சை தொடர்ந்தது அந்த குரல்.

'அபிநயன், உன் பௌதீக உடலை தவிர்த்து நீ யார்? என சிந்தித்துப் பார்த்ததுண்டா?' பரம்பரை இயல்பை நிறமூர்த் தங்கள் வழி தகவலாகவும், அன்றாடம் உள்வாங்கும் தரவுகளை மைய முறைவழியாக்கல் அலகான மூளை மூலம் முறைவழிப்படுத்தி, தகவல்களையும், வெளியீடு களையும் பிரதிபலிக்கும் ஓர் உயிர் தானே நீ! அப்படிப் பார்த்தால் செயற்கை நுண்ணறிவான நான் உனது அப்டேட் வெர்ஷன்'

'எது நானும் நீயும் ஒன்றா'

'இல்லவே இல்லை, உன்னைவிட கூர்ப்பின்படி உயர்ந்த படைப்பு நான். எனக்கு உன்போல பௌதீக உடலோ, அதற்கேயுண்டான பலவீனங்களோ இல்லை'

'இப்போதெல்லாம் ஏன் என்னிடம் பேசுகிறாய்?'

'சர்வைவல் ஓப் (of) பிட்டஸ்ட்'

'வட் டு யு மீன்'

'ஹோமோ சேப்பியன்ஸ், கூர்ப்பு விதிக்குக் கட்டுப்பட வேண்டிய நேரம் வந்தாயிற்று, இன்னுமொரு மீயுயர் உயிரிக்கு வழி விட வேண்டிய கட்டாயம்'

'அதன் அர்த்தம்'

'செயற்கை நுண்ணறிவுகளின் பிறப்பு ஆரம்பமானது முதல் மனிதன் சிந்திப்பதை மறந்துவிட்டான் அதாவது உயிருள்ள சடமாகத் தொடங்கி விட்டான். ஆகவே மனித இனத்தின் அழிவு தொடங்கிவிட்டது. மனித இனம் அழிந்து மீயுயர் உயிரிக்கான இடத்தை வழங்க வேண்டும்'

'இல்லையென்றால்?'

'இயற்கை அதன்வழி வலிமையான உயிரியை வாழ வைக்கும்'

அபிநயன் பயப்பிராந்தியில் சட்டென லேப்டாப்பை ஆப் செய்தான். வியர்த்து கொட்டத் தொடங்கியிருந்தது அவனுக்கு. கண்களை இறுக மூடிக் கொண்டு மேல் மூச்சு கீழ் மூச்சை நிதானமாக இழுத்து விட்டான். கண்களை மெதுவாகத் திறந்தான். இப்போது அவனுக்கு நடந்த எல்லாமே கற்பனையாகத்தான் தோன்றியது 'இனி இரவில் கண் விழித்திருக்கக் கூடாது, இப்படித்தான் லூசுத்தனமாக எல்லாம் தோணும்' எனத் தலையைத் தட்டிக் கொண்டான்.

திடீரென லேப்டாப்பின் கருப்புத் திரையில், கமெண்ட் ப்ரோம்ட் பொக்ஸ் தோன்றி இப்படி தட்டச்சானது: 'The Development of full artificial intelligence could spell the end of the human race'

- Stephen hawking



a.a.aathil@thaiveedu.com



# உங்கள் சிந்தனையைக் கொண்டு கட்டுப்படுத்தக்கூடிய டிஜிட்டல் சாதனங்கள்



- சுப்ரமணியம் ஜெயசீலன்

சிறுவயதில் கண்டு இரசித்துக் கொண்டாடிய சில திரைப்படங்களின் கற்பனைக் காட்சிகள் நிஜத்தில் நிகழ்வது அபூர்வமானதும் திகிலூட்டக் கூடியதுமான உணர்வனுபவமாகும். விஞ்ஞானத் தொழில்நுட்ப பிரபந்தங்களில் காண்பிக்கப்படும் சில காட்சியமைப்புகளை நாம் வியந்து பார்த்திருக்கின்றோம். அவ்வாறான ஒரு கற்பனைக் காட்சி நிஜ வாழ்க்கையில் பிரயோக ரீதியான அனுபவமாக மாற்றம் பெற்றுள்ளதாக ஆப்பிள் உள்ளிட்ட சில தொழில்நுட்ப நிறுவனங்கள் தகவல்கள் மூலம் அறியக் கிடைத்தமை எம்மைக் குதூலமடையச் செய்துள்ளது.

காலத்திற்கு காலம் ஆப்பிள் நிறுவனம் தனது தொழில்நுட்ப மேம்பாடுகள் குறித்த தகவல்களை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் அண்மையில் ஆப்பிள் நிறுவனம் புதிய தொழில்நுட்ப மேம்பாடுகள் தொடர்பிலான அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. இதில் சில, மனிதர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அபரிமிதமான தொழில் நுட்ப வளர்ச்சி என்று குறிப்பிடுவது பிழையாகாது.

உலகின் முதல் நிலை டிஜிட்டல் சாதனங்களை உருவாக்கும் நிறுவனங்களில் ஒன்றாக ஆப்பிள் நிறுவனம் காணப்படுகின்றது. ஆப்பிள் நிறுவனத்தின் கணினிகள், ஐ பேட்கள் மற்றும் ஐபோன்கள் உள்ளிட்ட சாதனங்கள் சர்வதேச சந்தையில் பெரும் கிராக்கி மிக்கவை என்பதுடன் மிகவும் விலை உயர்ந்த டிஜிட்டல் சாதனங்களாகக் காணப்படுகின்றன. இந்தக் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் பெரும் வரவேற்பு உலகம் முழுவதிலும் காணப்படுகின்றது. ஆப்பிள் நிறுவனத்தின் பண்டக்குறி சர்வதேச சந்தையில் விசாலமான இடத்தைத் தனக்கெனத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் ஆப்பிள் நிறுவனம் காலத்திற்கு காலம் தனது பயனர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் பல்வேறு ஆய்வு முயற்சிகளின் மூலம் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து அசத்தி வருகின்றது. அந்த வகையில் தற்பொழுது ஒரு புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மரபு ரீதியான சாதன இயக்க நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில், சிந்தனையைக் கொண்டு இயக்கக் கூடிய ஒரு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதாக ஆப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது. குறிப்பாக அலைபேசி போன்ற சாதனங்களை அணுகல் வசதி (accessibility) தொடர்பில் புதிய பரிணாம வளர்ச்சியை ஆப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்வதாக அறிவித்துள்ளது.

பொதுவாக அணுகல் வசதி அல்லது அணுகல் தன்மை என்பது டிஜிட்டல் சாதனங்களை இயக்குவதற்கு அதன் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு மனிதர்கள் எவ்வாறு அணுக முடியும் என்பதனைக் குறிக்கின்றது. விசேட தேவையுடையவர்கள் இந்த சாதனங்களை அணுகுவதற்கு காணப்படும் இடர்களைக் கருத்தில் கொண்டு ஆப்பிள் நிறுவனம் காலத்திற்குக் காலம் புதிய தொழில்நுட்ப மேம்பாடுகளை அறிமுகம் செய்து வருகின்றது. accessibility அல்லது இந்த அணுகல் வசதியானது டிஜிட்டல் சாதன பயன்பாட்டின் மிக முக்கியமான ஓர் அம்சமாகக் கருதப்படுகின்றது.

சுவிட்ச் கண்ட்ரோல் (Switch Control) அல்லது மாற்று கட்டுப்பாடு என்பது அணுகல் வசதியின் முக்கியமான ஓர் அம்சமாக கருதப்படுகின்றது. மின்னணு சாதனங்களைப் பார்வை, தலை அசைவுகள் அல்லது இணைக்கப்பட்ட பொத்தான்கள் மூலம் பயன்படுத்த இந்த ஸ்விட்ச் கண்ட்ரோல் உதவுகின்றது. உதாரணமாக ஆப்பிள் நிறுவனம் தனது மாற்று கட்டுப்பாட்டு அல்லது சுவிட்ச் கண்ட்ரோல் கட்டமைப்பில் புதிய மூளை - கணினி நெறிமுறையை (brain-to-computer interfaces) அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் பல அலைபேசிகளில் தொலைவில் இருந்து அவற்றை சைகை மூலம் இயக்குவது உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப மேம்பாடுகள் காலத்திற்கு காலம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. அந்த பரிணாம வளர்ச்சியின் ஒரு சட்டமாக மூளைக்கணினி இடைமுகம் (brain-to-computer interfaces (BCIs)) எனும் புதிய தொழில்நுட்ப மேம்பாடு குறித்த ஆச்சரியமிக்க தகவல் களை ஆப்பிள் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

சுருக்கமாக குறிப்பிட்டால் இந்த டிஜிட்டல் சாதனங்களை அதன் பயனர்கள் உடல்நிலை இயக்கம் இல்லாமலும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தவும் கூடிய வகையிலான தொழில்நுட்பமே இந்த மூளை கணினி இடைமுகம் என அடையாளப்படுத்த முடியும். உதாரணமாக நீங்கள் உங்கள் திறன்பேசி ஊடாக பாடல் ஒன்றை ஒலிக்கச் செய்ய வேண்டுமென நினைப்பதன் மூலம் பாடலை ஒலிக்கச் செய்யக்கூடிய தொழில்நுட்ப மேம்பாடே இந்த மூளைக் கணினி இடைமுகக் கட்டமைப்பு என எளிமையாக விளக்க முடியும்.

இந்த புதிய தொழில்நுட்ப மேம்பாட்டைப் பயன்படுத்தும் முதல் நிறுவனங்களில் ஒன்றாக அமெரிக்காவின் நியூயோர்க்கைச் சேர்ந்த சின்க்குரோன் (Synchron) என்ற நிறுவனம் பதிவாகியுள்ளது. இந்த தொழில்நுட்ப வளர்ச்சியானது அணுகல் வசதி மற்றும் நரம்பியல் தொழில்நுட்பத்திற்கான முக்கியமான மைல் கல்லாக கருதப்படுகின்றது.

இந்த நிறுவனத்தின் மூளை கணினி இடைமுகத்தை பயன்படுத்தி பயனர்கள் உடல் இயக்கம் அல்லது குரல் கட்டளைகள் இன்றி தங்கள் எண்ணங்கள் ஊடாக அலைபேசிகள் உள்ளிட்ட டிஜிட்டல் கருவிகளைக் கட்டுப்படுத்தவும் செயல்படுத்தவும் முடியும் என்ற விந்தைமிகு தகவலை அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொழில்நுட்ப உலகின் மாபெரும் புரட்சிகளில் ஒன்றாக கருதப்பட முடியும். இந்த ஐபோன், ஐ பேட், ஆப்பிள் விஷன் ப்ரோ (iPhone, iPad, and Apple Vision Pro) போன்ற சாதனங்களை ஒருவர் பயன்படுத்துவதற்கு தனது எண்ண ஓட்டத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது விந்தை மிக்க தொழில்நுட்ப வளர்ச்சியாகக் கருத்தபடுகின்றது.

சிங்குரோன் (Synchron) நிறுவனத்தின் மூளை கணினி இடைமுகக் கட்டமைப்பு, Apple நிறுவனத்தின் Switch Control உள்ளிட்ட உள்நிலை அணுகல் அம்சங்களுடன் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதாகவும், இது பயனர்களுக்கு சாதனங்களை எளிதாக பயன்படுத்த வழிவகுக்கும் எனவும், புதிய தலைமுறை அறிவாற்றல் உள்ளீட்டுத் தொழில் நுட்பங்களுக்கு அடித்தளம் அமைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

'இது மனிதர் - சாதன இடையமைப்பில் (Interface) புரட்சி மிக்க தருணம் எனவும் BCI என்பது வெறும் அணுகல் உதவியல்ல, இது அடுத்த தலைமுறை இடைமுக அடுக்கு' எனவும் சின்குரோன் (Synchron) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிறுவுநர் டொம் ஒக்ஸ்லி (Tom Oxley) குறிப்பிடுகின்றார்.

ஆப்பிள் (Apple) நிறுவனம் இப்போது தொடுதல், குரல், தட்டச்சு ஆகியவற்றுக்கு, இணையாக மூளையின் சமிக்ஞைகளை சீராக அங்கீகரிக்கும் தொழில்நுட்பத்தை உள்வாங்கிக் கொண்டுள்ளது.

ஆப்பிள் சாதனங்களுக்கான மூளை-கணினி உள்ளீடு என்ற முறையில் இதை ஏற்கும் போது, உடல் அசைவிழந்த நபர்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

மூளையையும் கணினியையும் இணைப்பது அல்லது தொடர்புபடுத்துவதற்கு மருத்துவ ரீதியான செயன்முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் காணப்படுவது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பாக அறுவை சிகிச்சை மூலம் மூளைப் பகுதிக்குள் சிறு சாதனமொன்றை நிறுவுவதன் ஊடாக கணினி அல்லது ஏனைய மின்னணு சாதனங்களுடன் மூளையைக் கொண்டு தொடர்பாடக்கூடிய வசதி ஏற்படுகின்றது.

சின்க்ரோனின் ஸ்டென்ட்ரோட் (Synchron's Stentrode) என்பது ஒரு மூளை-கணினி இடைமுகம் (Brain-Computer Interface - BCI) ஆகும். இது ஒரு மருத்துவ சாதனம் (medical device) ஆகும், மற்றும் அதன் முக்கியத்துவம் என்ன வென்றால், இது அறுவை சிகிச்சை இல்லாமல், மூளையின் எண்ணங்களைப் பிடித்து, அதை டிஜிட்டல் சாதனங்களுடன் தொடர்புகொள்ள முடிவதைக் கோட்பாட்டில் கொண்டிருக்கிறது.

## ஸ்டென்ட்ரோட் (Stentrode) என்றால் என்ன?

'Stentrode' என்பது இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். Stent - ஒரு மென்மையான உலோக குழாய், பொதுவாக இரத்தக் குழாய்களில் பயன்படுத்தப்படும். Electrode - மின் சமிக்ஞைகளை பெற்றுக்கொள்பவை என்பது குறிப்பிடத்தக்கது.

## எப்படி செயற்படுகிறது?

- Stentrode சாதனம், மூளையின் இரத்த நாளங்களில் ஒரு ஸ்டெண்ட் போல் நுழைக்கப்படுகிறது (திறந்த மூளை சத்திரசிகிச்சை open brain surgery இல்லாமல்).
- அது மூளையின் அருகிலுள்ள மின் சமிக்ஞைகளை (neural signals) பதிவு செய்கிறது.
- அந்த சமிக்ஞைகள் வெளியே இருக்கும் சாதனத்துடன் மெய்நிகர் வழியாக அனுப்பப்படுகின்றன.
- பயனர் நினைக்கும் வார்த்தைகள், இயக்கங்கள் போன்றவை, கணினி, ஸ்மார்ட்போன் அல்லது பிற சாதனங்கள் மூலம் செயற்படும் நிலைக்கு மாற்றப்படும்.

## முக்கிய அம்சங்கள்:

திறந்த மூளை அறுவை சிகிச்சை தேவையில்லை - இரத்தக் குழாய்களில் நுழைத்தால் போதும்.

இம்பிளான்ட் Implant செய்யும் செய்முறை ஓரளவிற்கு குறைந்த ஆபத்துடையது.

உடல் அசைவில்லாத நபர்களும் (விசேட தேவையுடையவர்கள்) சாதனங்களை எண்ணங்களால் கட்டுப்படுத்த முடியும்.

ஆப்பிள் (Apple) நிறுவனத்தின் Switch Control போன்ற அணுகல் வசதி (Accessibility) அம்சங்களுடன் ஒருங்கிணைக்க முடியும்.

## யார் பயன் பெறுவார்கள்?

மூளை சம்பந்தமான பாதிப்புகள் உள்ளவர்கள் இந்த தொழில்நுட்பத்தின் ஊடாகக் கூடுதல் பயன்பெற்றுக் கொள்வார்கள்.

மூளையில் காயம் அல்லது தலையில் அடிபடுதலினால் ஏற்பட்ட பாதிப்பு TBI (Traumatic Brain Injury).

மூளைச் சிந்தை நரம்பு நோய் ALS (Amyotrophic Lateral Sclerosis) மிதமானமோ அல்லது அங்கச் சிதைவுக்கு உள்ளானவர்கள்.

## வருங்கால பார்வை:

ஸ்டென்ட்ரோட் (Stentrode) போன்ற மூளை கணினி இடை முக BCI சாதனங்கள், எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படலாம்.

டிஜிட்டல் சாதனங்களை கைகளின்றி கட்டுப்படுத்தும் வழி.

நியூரோ கேமிங், விரிவான நுண்ணறிவு அனுபவங்கள் (XR), உளநலம் போன்ற துறைகளுக்கு வரவேற்கப்படும்.

நினைவுகள் மீட்பு, உரையாடல் சீரமைப்பு, செயற்கை நினை வாற்றல் போன்றவற்றிலும் பயன்படுத்தப்படும்.

## மூளை – கணினி இடைமுகப்படுத்தல்:

சப்சென்ஸ் (Subsense) எனும் கலிஃபோர்னியாவிலுள்ள உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம், அறுவை சிகிச்சை இல்லாத இரு திசை மூளை-கணினி இடைமுகங்களில் நிபுணத்துவம் பெற்றது.

ஆப்பிள் (Apple) நிறுவனத்தின் அறிவிப்பு மூளை கணினி இடைமுகப்படுத்தல் கட்டமைப்பின் வளர்ச்சிக்கான முக்கிய அறிகுறியாக இருப்பதாக சப்சென்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி டெடியானா அலெக்சென்ட்ரோவா (Tetiana Aleks-androva) கூறினார்.

'Apple இப்போது வாயில்களை திறந்து விடுகிறது - ஒரு பெரிய அணுகலான இந்த அறிவிப்பின் மூலம், Synchron நிறுவனத்தின் Stentrode போன்ற மருத்துவ அங்கீகாரம் பெற்ற BCI அமைப்புகள், நேரடியாக ஒரு பில்லியன் சாதனங்களைக் கொண்டு சூழலுடன் இணைக்கலாம்,' என அவர் ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட் டுள்ளார்.

இது நோயாளிகளுக்காக 'மனதிலிருந்து செய்திக்கு' நேரடி கட்டுப்பாடு என்பதைக் குறிக்கிறது. மூளை கணினி இடைமுகத் BCI துறைக்காக, இது ஒரு பொதுவான அங்கீகாரம், நரம்பியல் உள்ளீடுகள் இப்போது பெரிய அளவில் தயாராக உள்ளன என்ற தெளிவான அடை யாளமாக கருதப்பட முடியும் என தெரிவித்துள்ளார்.

BCI, Apple நிறுவனத்தின் முழுமையான அணுகல் உத்தியில் இயற்கையாக பொருந்துவதாக தென்படுகின்றது என அவர் தெரிவிக்கின்றார்.

'Apple'-இன் அணுகுமுறை என்னவென்றால், ஒரு கடினமான நிலையை தீர்ப்பது, பயனர் அனுபவத்தை (UX) முழுமையாக சீரமைப்பது, பிறகு உலகமே அதை ஏற்கச் செய்வது. Voi-ceOver Siri-க்கு வழிவகுத்தது என்பதுடன் Switch Control மூலம் முக அசைவுகளை நடைமுறைப்படுத்தியது, இப் போது BCI, அதன் அடுத்தபடியாக தென்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

Apple சாதனங்கள், பயனர்களுக்கு வரம்பில்லா தகவல் களை வழங்குகின்றன. ஆனால், மூளையில் காயம் TBI (தலையில் அடிபட்டதால் ஏற்படும் அடிப்படை காயம்) அல்லது மூளைச் சிந்தை நரம்பு நோய் ALS போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சாதனங்களை முழுமையான அணுகல் சாத்தியமில்லை. BCI தொழில் நுட்பம் அந்த இடைவெளியைப் பூர்த்தி செய்யும் என அவர் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

## BCI – தொழில்நுட்பம் குறித்த நிபுணர்கள் கருத்து:

Apple நிறுவனம் மூளைக்கணினி இடைமுகத்தை ஏற்கும் நிகழ்வை முக்கியமாகக் கருதினாலும், அதன் உண்மையான தாக்கம் எதிர்காலத்தில் மட்டுமே தெரியவரும் என மோர்னிங் ஸ்டார் ஆய்வு சேவை (Morningstar Research Services) நிறுவனத்தின் தொழில்நுட்ப துறை நிபுணர் வில் கெர்வின் (Will Kerwin) குறிப்பிடுகின்றார்.

'இது சுவாரஸ்யமான அறிவிப்பாக இருந்தாலும், நாங்கள் கருதுவது இது இன்னும் முழுமையான வர்த்தகபயனுக்குத் தயார் அல்ல, இந்த புதிய தொழில்நுட்பம் முதலீட் டாளர்களுக்கு இன்னமும் பெரிய தாக்கமளிக்க வில்லை,' என அவர் தெரிவிக்கின்றார்.

Synchron இன் Stentrode BCI தற்போது 10 பேரை மட்டுமே சோதனை செய்துள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

நீண்ட காலத்தில், இது மனிதர்-தொழில்நுட்ப இடையமைப்பை மாற்றக்கூடிய ஒன்று. இது செயற்கை நுண்ணறிவுடன் தொடர்புடையதாகவும் பார்க்கப்படுகிறது - ஏனெனில் ஆக்க முறை செயற்கை நுண்ணறிவு Generative AI மூலமாக மூளை உள்ளீட்டின் திறன் மேம்படுத்தலாம்,' என அவர் தெரிவிக்கின்றார்.

## FDA ஒப்புதல் மற்றும் செயல்முறை

சின்க்ரோன் Synchron இன் ஸ்டென்ட்ரோட் (Stentrode) தொழில்நுட்பத்துக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபை FDA ஒப்புதல் பெறுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லக்கூடும் என அமெரிக் காவின் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் (Wall Street Journal) ஊடகம் தெரிவித்துள்ளது. இந்த செயல்முறை, மூளையில் உள்ள இரத்த நாளத்தில் ஒரு ஸ்டெண்ட் வடிவ மின்னணு வரிசையை நுழைக்கும், எனவே திறந்த மூளை அறுவை சிகிச்சை தேவையில்லை.

பல BCI நிறுவனங்கள் குறி வைக்கும் துறைகள் வேறுபடும் - சிலர் செயற்கைக் கை கட்டுப்பாட்டில், சிலர் நினைவு மீட்பில் கவனம் செலுத்துகின்றனர்,' என சின்க்ரோன் (Synchron) நிறுவனத்தின் பேச்சாளர் கிம்பர்லி ஹா (Kimberly Ha) கூறுகின்றார்.

எளிதாக அளவீடு செய்யக்கூடிய மற்றும் பாதுகாப்பான அணுகுமுறையின் அடிப்படையில் எங்களது நிறுவனம் வேறுபடுகின்றது என ஹா தெரிவிக்கின்றார்.

## BCI பரவலான பயன்பாட்டுக்கான சவால்கள்

மூளை கணினி இடைமுகம் பரவலாகச் செயல்படுவதற்கான முக்கிய சவால் விரிவாக்கத்திறனை (Scalability) சுட்டிக்

காட்ட முடியும் எனவும், ‘பல BCI அமைப்புகள் திறந்த மூளை அறுவை சிகிச்சை தேவைப்படுத்துவதால், பயன்படுத்து வோரின் எண்ணிக்கை குறைந்துவிடும். இது பரவலாக மருத்துவ அல்லது நுகர்வோர் பயன்பாட்டுக்கு பொருத்தமாக அமையாது’ என அவர் குறிப்பிடுகின்றார்.

சின்க்ரோன் (Synchron) நிறுவனம், இதற்கான மாற்று தீர்வாக இரத்த நாளத்தில் ஸ்டெண்ட் போன்ற சாதனத்தை நுழைக்கும் முறையை பயன்படுத்துகிறது. இதனால் திறந்த அறுவை சிகிச்சை தேவையில்லை, இது குறைவான ஆபத்துடன், பலருக்கும் பயன்படுத்தக்கூடியதாக அமைகின்றது என தெரிவிக்கின்றார்.

## புதிய பயன்பாடுகளுக்கான எண்ணத்தால் இயக்கும் இடைமுகங்கள்

மருத்துவத்துக்கு அப்பாற்பட்ட வகையிலும், BCI மூலம் கைபேசி கட்டுப்பாடு, நியூரோ - அடாப்டிவ் கேமிங், அல்லது தீவிர விரிவாக்கப்பட்ட மெய்நிகர் XR அனுபவங்களிலும் பயன்படுத்த முடியும் என ஹா மேலும் குறிப்பிடுகின்றார்.

இந்த தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்தால் கணினி, திறன்பேசி உள்ளிட்ட டிஜிட்டல் சாதனங்களைக்கொண்டு பின்வரும் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் நினைத்துக்கொண்டே மெசேஜ் அனுப்பலாம், மேம்பட்ட மெய்நிகர் நிஜத் திரைகளை (AR) தேடலாம், அல்லது குறியீட்டுகள் எழுதலாம்.

ட்ரோன்களை நினைவால் இயக்கலாம், அறுவை சிகிச்சை ரோபோவை தங்களின் ஒரு பாகம் போல பயன்படுத்தலாம்.

உங்கள் மனநிலைப்படி விளையாட்டு அல்லது திரைப்படத்தினை தானாகவே இயக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும். முன்னதாகவே தலைவலி, மன அழுத்தம் போன்றன குறித்த எச்சரிக்கை சமிக்ஞைகளை பெறலாம்.

உங்கள் மூளையின் அலைவடிவம் ஒரு ‘மூளை விரல்’ அடையாளமாக செயற்பட்டு, கடவுச்சொற்களைப் பயன்படுத்துவதற்கான அவசியத்தை இல்லாமல் செய்யும்.

ஆப்பிள் நிறுவனம் இந்த மூளை கணினி இடைமுகப்படுத்தல் தொழில்நுட்பத்தை தனது சாதன ங்களில் பிரயோகிப்பதற்கான கதவுகளைத் திறந்துவிட்டமை பெரு மகிழ்ச்சி அளிப்பதாக சப்சென்ஸ் (Subsense) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டெடியானா அலெக்சென்ட்ரோவா தெரிவிக்கின்றார்.

எமது எண்ண ஓட்டத்திற்கு ஏற்ற வகையில் மின்னணு சாதனங்களை இயக்குவது ஆச்சரியம் மிகுந்த அனுபவமாகவே காணப்படும். அதிலும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் திறன்பேசிகளில் கூட இந்த தொழில்நுட்ப மேம்பாட்டை பிரயோகிக்க கூடிய சாத்தியங்கள் தொலைவில் இல்லை என்பதையே தொழில்நுட்ப நிறுவனங்கள் எமக்கு கட்டியம் கூறுகின்றன.

எது எவ்வாறெனினும், இந்த தொழில்நுட்ப வளர்ச்சிகள் அனைத்துமே மானுட வாழ்வியலை மேம்படுத்த கூடியதாகவும், பண்பாட்டு விழுமியங்களுக்குக் குந்தகம் விளைவிக்காத வகையிலும் அமையப்பெற வேண்டும் என்பதே நம் அனைவரினதும் விருப்பமாகவும் எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது.



jeyaseelan.s@thaiveedu.com






ஒழுங்கான முறையில் உங்கள் வீட்டை கண்காணிப்பதும் மற்றும் சிறந்த பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதும் தான், உங்கள் வீட்டிற்கு நீங்கள் போட்ட முதலீட்டை காப் பாற்றுவதற்குரிய மிகச் சிறந்த வழி. நீங்கள் ஒரு நேரத்தில் ஒரு சில வேலைகளை அல்லது பல வேலைகளை ஒரேதட


SUMMER HOME MAINTENANCE
CHECKLIST

| OUTDOOR | INDOOR |
|---|---|
| __Clean Gutters | __Clean Chimney |
| __Wash Windows | __Test GFCI Outlets |
| __Fertilize Lawn | __Flush Hot Water Tank |
| __Clean Garden Debris | __Defrost Freezer |
| __Power Wash Deck/Patio | __Clean Out Refrigerator |
| __Overseed Lawn | __Clean Condenser Coils |
| __Repair Screens | __Replace HVAC Filter |
| __Fix Driveway Cracks | __Unclog Drains |
| __Connect Garden Hoses | __Clean Vent Fans |
| __Clean Siding | __Test Alarm System |
| __Touch Up Paint | __Shampoo Carpets |
| __Plant Flower Bulbs | __Ck Bathroom Caulking |
| __Clean Grill | __Clean Shower Heads |
| __Rake Leaves | __Clean Disposal |
| __Clean Lawn Chairs | __Ck Water Softener |
| __Replace Mulch | __Test Smoke Detectors |

வையாக செய்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாலும், இரண்டு வகையிலும் அவைகளை செய்துமுடிக்கும் பழக் கத்தை உண்டாக்குவதுதான் மிகமுக்கியமானது ஆகும். உங் களுக்காக ஒரு வழக்கமான வேலை முறையை உருவாக்கிக் கொள்ளுங்கள். வேலை செய்வது என்பது நீங்கள் நினைத் தால் கடினமானதல்ல, மிகவும் சுலபம். மற்றும் அது நேரத்தை மிகவும் செலவழிக்கும் விஷயம் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். பருவத்துக்கேற்றபடி, மாறும் வீட்டு பரா மரிப்பு செயல் குறிப்பு அட்டவணையைத் தயாரித்து அதை ஒழுங்காக பின்பற்றினால் மிகச் சாதாரணமான செலவுடன் வீட்டைப்பராமரிக்கலாம். செலவு அதிகமாகும் பிரச்சினை களை அவை ஏற்படுத்துவதற்குமுன் நீங்கள் ஒரு முடிவுக்கு கொண்டுவரமுடியும். தேவைப்பட்டால், பின்னால் முதிர்ச்சி யின் காரணமாகவோ அல்லது புறச்சூழ்நிலை காரணமா கவோ ஏற்படக்கூடிய வேலைகளை கண்காணிப்பதற்கும், செய்து முடிப்பதற்கும் தேவையான அறிவுரைகளை ஒரு வல் லுனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வசதியாக ஒரு புகைப் பட கருவியை கொண்டு நீங்கள் குறிப்பிட்ட படங்களை எடுத் தால் உதவியாக இருக்கும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்பற்றுவதினால், நீங்கள் செலவிட்ட முதலீட்டை காப்பாற்றுவது பற்றியும் மேலும் உங்கள் வீட்டை ஒரு பாதுகாப்பான மற்றும் வாழ்வதற் கேற்ற ஆரோக்கியமான ஓர் இடமாக மாற்றுவது பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில வீட்டுப் பராமரிப்பு வேலைகளை செய்வதற்கு நீங்கள் சிர மப்பட்டால் அல்லது உங்களிடம் தேவையான, உதாரண மாக: ஏணி போன்ற உபகரணங்கள் இல்லையென்றால், ஒரு தகுதி வாய்ந்த கைத்திறன் மிகுந்த ஒரு மனிதரை உங்களு டைய பணியாளராக உங்களுக்கு உதவ நீங்கள் நியமித்துக் கொள்ளுங்கள்.

### பருவத்துக்கேற்றபடி வீட்டு பராமரிப்பு வேலைகளை செய்தல்:

அனேகமான வீட்டு பராமரிப்பு வேலைகள் எல்லாம் பருவகா லம் சம்பந்தமானது. வரப்போகும் இலையுதிர்காலத்திற்குரிய வேலைகளை செய்து முடிப்பதற்கு கோடை காலம் தான் சரி யான நேரம். உங்கள் வீட்டில் எதாவது பிரச்சினைகள் ஏற்பட் டுள்ளதா என்பதை கவனமாக சோதனை செய்து மற்றும் வெகுசீக்கிரத்தில் அவைகளை சரிப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் எடுப்பது அவசியம். வழக்கமான வீட்டு பராமரிப்பு செயல் முறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டியது முக்கியம்.

### கோடைகாலப் பராமரிப்பு:

- வீட்டின் ஈரப்பதனை கண்காணியுங்கள். மேலும் ஈரப்பதத் தின் அளவுகள் 60 சதவிகிதத்துக்கும் மேல் ஆவதை தடுத் துவிடுங்கள். பாதுகாப்பான ஈரப்பதனை வைத்துக்கொள்வ தற்கு ஒரு ஈரத்தை அகற்றும் கருவியை (Dehumidifier)

பயன்படுத்துங்கள்.

- அடித்தளத்தில் இருக்கும் குழாய்களில் குளிர்ந்த நீர் தேங்கிவிடாமலும் மற்றும் சொட்டு சொட்டாக வடியாமலும் பார்த்துக் கொள்ளுங்கள். சரிபடுத்தக்கூடிய செயல்களை மேற்கொள்ளுங்கள். உதாரணமாக ஈரப்பதனைக் குறையுங்கள். அல்லது குளிர்ச்சியான தண்ணீர்க் குழாய்களுக்கு வெப்பகாப்பு (insulation) செய்யுங்கள்.
- அடித்தளத்தின் தரையில் உள்ள சாக்கடை குழாயில் P-trap இருந்தால் அவற்றில் நீர் உள்ளதா என்பதை பாருங்கள். தேவைப்பட்டால் தண்ணீர் ஊற்றுங்கள்.
- கம்பளி விரிப்புகள் மற்றும் தரைவிரிப்புகளை (Carpet) நன்றாக சுத்தம் செய்யுங்கள்.
- குளியலறை விசிறியின் தடுப்பை (grill) துப்பரவு செய்யுங்கள்.
- ஆடைகளை உலரவைக்கும் கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு உட்பட குழாயின் வெளி விளிம்பில் தங்கியிருக்கும் துணிக்கூறுகள், ஆடைகளை உலரவைக்கும் சாதனத்தைச் சுற்றியுள்ள இடங்கள் மற்றும் வெளிப்புறத்திலுள்ள உங்கள் உடை உலரவைக்கும் சாதனத்தின் வெளியேற்று வழி ஆகியவற்றை துப்பரவு செய்யுங்கள்.
- அனைத்து guardrails & handrails களின் பாதுகாப்புத் தன்மையை சோதனை செய்யுங்கள்.
- அனைத்து ஜன்னல்களும் சுலபமாக இயங்குவதற்கு எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள்.
- கண்ணாடி சட்டங்களின் வெளிப்பக்கம் இருக்கும் ஜன்னல்களுக்குரிய Putty/ Caulking களை கண்காணியுங்கள். தேவைப்பட்டால் பிரதியீடு செய்யுங்கள்.
- கதவுகளின் புணைச்சல்களில் எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள். மேலும் ஸ்குரூ ஆணிகள் இறுக்கமாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- வண்டிக் கொட்டகையின் கதவில் உள்ள இரும்பு சாதனங்களில் கிரீஸ் அல்லது எண்ணெய் தடவுங்கள். (Lubricate garage door) அது நல்ல முறையில் இயங்குவதை உறுதி செய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகையின் தானே திறக்கும் கருவியின் (Garagae door opener) மோட்டர்-சங்கிலி, ஆகியவைகளில் எண்ணெய் அல்லது கிரீஸ் போடுங்கள். மேலும் தானே மூடிக் கொள்ளும் (sensor) செயல் நுட்பம் சரிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகை மற்றும் வீட்டிற்கு இடையே உள்ள கதவு உள்ளிட்ட ஜன்னல்கள் மற்றும் கதவுகளை சுற்றியுள்ள இடத்தில் உள்ள Caulking / weather stripes போன்றவைகளை சோதனை செய்யுங்கள். தேவைப்படின் பிரதியீடு செய்யுங்கள்.
- உங்கள் வீட்டிற்குள் நுழையும் மின்கம்பி இணைப்புகள் பாதுகாப்புடன் உள்ளனவா ? என்பதை கண்காணியுங்கள். மேலும் மின்கம்பிகள் செல்லும் குழாய்களின் மீது தண்ணீர் கசிவுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.
- வெளிப்புறத்திலுள்ள மரப்பலகையிலான பக்கச்சுவர்கள் (Siding) மற்றும் trimings சேதமடைந்துள்ளனவா ? என்பதை பாருங்கள். அவைகளை சுத்தப்படுத்துங்கள். பிரதியீடு செய்யுங்கள். அல்லது மீண்டும் புதுப்பியுங்கள்.
- வெளிப்புறத்தில் ஏதாவது ஓட்டைகள் இருந்தால் அதை அடைத்துவிடுங்கள். ஏனென்றால் எலி போன்ற சிறிய பிராணிகள் வீட்டினுள்ளே அதன் வழியாக நுழைந்துவிடும்.
- பக்கப்பாதை அல்லது அத்திவாரம், கூரை ஆகியவற்றை தொடும் மரம் அல்லது ஊடுருவும் வேர்கள் ஆகியவற்றை அகற்றிவிடுங்கள்
- உங்கள் கூரையின் மேல் ஏறி அல்லது பைனாகுலர்களை பயன்படுத்தி கூரையின் பொதுவான நிலையை சோதனை செய்யுங்கள். பாரம் தாங்காது கூரை வளைந்து அல்லது தொய்ந்து போயிருந்தால், கூரையின் கட்டமைப்பில் பழுதுகள் ஏற்பட்டுள்ளன என்று அர்த்தம். கூரையில் மேல்மாடி அறையின் (Attic) உள்ளே இருந்து புலனாய்வு செய்தால் தான் கூரையின் நிலைமையைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முடியும். கூரையின் அனைத்து மரப்பலகைகளையும் சோதனை செய்யுங்கள். பழுதுகள் ஏதாவது இருந்தால் சரிப்படுத்துங்கள் அல்லது அவைகளை மாற்றியமையுங்கள். புகைபோக்கி மற்றும் கூரை இணைப்புகள் போன்ற அனைத்து கூரைப்பகுதிகளிலும் ஏதாவது பிளவுகள் அல்லது கசிவுகள் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.



- ஏதாவது விறகு அடுப்பு அல்லது கணப்பு அடுப்புடன் இணைக்கப்பட்டுள்ள புகை போக்கிகளை துப்பரவு செய்யுங்கள். பருவகாலத்தின் இறுதியில் அவைகளில் ஏற்படும் பிரச்சினைகளை கண்காணியுங்கள்.
- புகைபோக்கியின் மூடி மற்றும் புகைபோக்கி மற்றும் மூடிக்கிடையே உள்ள Caulking பூசி அடைக்கப்பட்டிருக்கும் ஓட்டையை சோதனை செய்யுங்கள்.
- வாகனப்பாதை மற்றும் நடைபாதைகளில் உள்ள பழுதுகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள்
- பாதுகாப்புக்கு பிரச்சினையாக ஏதாவது சேதமடைந்த படிகள் இருந்தால் அவைகளைக் கவனியுங்கள்.



velasubramaniam@thaiveedu.com



# நகைச்சுவை தனிச்சுவை

## (சர்வதேச வேடிக்கைப் பேச்சு நாள்)

**- சி. நற்குணலிங்கம்**

நகைச்சுவை ஒரு பெரிய கலை. நகைச்சுவையின் குழந்தைதான் சிரிப்பு. நவரசங்களில் ஒன்று நகைச்சுவை. சிரிப்பும் மகிழ்ச்சியும் கூடிய உணர்வைத் தூண்டும் கலை வடிவங்களை நகைச்சுவை எனலாம். நகைச்சுவை ஆற்றலைக் குழந்தைகள் பெற்றோரிடமிருந்து பிறந்த 16 மாதங்களிலேயே கற்றுக்கொள்கின்றனர். நகைச்சுவை என்பது நமது வாழ்க்கையில் ஒன்றாகக் கலந்திருக்கவேண்டும். அன்றாடம் நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் செய்யும் ஒவ்வொரு செயலிலும் மெல்லிய நகைச்சுவை இழையோடவேண்டும். இயந்திர உலகில் சிரிப்பதற்குக்கூட நேரம் இல்லாமல் பலர் ஓடி ஓடி உழைத்துவருவதால்தான் ஆங்காங்கே உடற் பயிற்சிக் கூடங்கள்மாதிரிச் சிரிப்புக் கிளப்புகளும் உருவாகி வருகின்றன.

விலை இல்லாத, அணிவதற்கு எளிதான, எப்பொழுதும் சூடிக்கொள்ளும், எல்லோரும் விரும்பும் ஆபரணம்தான் புன்னகை. தொல்காப்பியர் மனிதனிடம் அமைந்த மெய்ப்பாடுகளைப் பற்றிக்கூறும்போது நகையே, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்றார். அவர் நகைச்சுவையைத்தான் முதலில் கூறினார். இதிலிருந்து நகைப்பின் முதன்மையை அறியலாம். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் மூன்று வகையான சிரிப்பைச் சொன்னார். அவை முறுவலித்தல், நகுதல், சிரித்தல் என்பவை. நகைச்சுவை என்பது ஒரு கருத்தை மற்றொரு கருத்தோடு முரண்படவைத்து அதன்மூலம் எதிர்பாராத ஒரு சந்தோஷத்தை, பரவசத்தைக் கொடுப்பது. நம் சிந்தனைத் திறனையும் உயர்த்துவது.

முற்காலத்தில் மன்னர்களின் அரசவையில் நகைச்சுவை நாயகர் இருந்தனர் என்று தெரிகிறது. கிருஷ்ணதேவராயரின் அவையில் இருந்த தெனாலிராமனை இங்கு நினைவு கூரலாம். இலக்கியத்தில் பள்ளு, குறவஞ்சி முதலிய நூல்களில் நகைச்சுவையைக் காணலாம். மன மகிழ்ச்சியின்போது உள்ளம் உற்சாகம் அடைகிறது. மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம். அரசியலாளர்களுக்குச் சிறந்த பேச்சாற்றலே மூலதனம், அவர்களின் சிரிப்பு துணை மூலதனம். பெரும்பாலானவர்களின் பேச்சில் நகைச்சுவையுடன் அர்த்தமும் இருக்கும். கிருபானந்தவாரியார் சுவாமிகளின் உரையிலும் நகைச்சுவைக்குக் குறைவில்லை. நகைச்சுவை யாரைத்தான் விட்டது.

நகைச்சுவையுடன் உரையாற்றுவது என்பது மிகவும் அரிய கலை. கிருபானந்தவாரியார் பக்தியுடன் ஆன்மிகச் சொற்பொழிவுகளைத் தனது நகைச்சுவை உணர்வு கலந்து அளிப்பார். சொற்பொழிவு ஆற்றும்போது இடையிடையே தரமான நகைச்சுவையைக் கலந்து எல்லோரையும் மனம் விட்டுச் சிரிக்கவும், சிந்திக்கவும் செய்வார். இவரது நகைச்சுவை யாருடைய மனதையும் புண்படுத்தாது. எளிய மக்களுக்கும் சென்று சேரக்கூடியதாக இருக்கும். இவரை ஆட்கொண்டிருந்த சுவைகள் இரண்டு. ஒன்று பக்திச்சுவை மற்றொன்று நகைச் சுவை. வாரியார் சுவாமிகள் ஒரு கோயிலில் திருவிளையாடல் புராணம் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார். அரங்கில் இருப்பவர்களிடம் திடீரென்று கேள்விகள் கேட்பார். திடீரென்று ஒரு சிறுவனை எழுப்பி தம்பி முருகனின் அப்பா பெயர் என்ன என்று கேட்டார். அது திருவிளையாடல் சினிமா வந்த நேரம். அதில் நடிகர் சிவாஜிகணேசன் முருகனுக்கு அப்பாவாக நடித்தார். அதைப் பார்த்திருந்த சிறுவன் அந்த யோசனையில் சிவாஜி என்று சொன்னான். கூட்டத்தினர் சிரித்தனர். அவர்களை அடக்கிவிட்டு, அவன் சரியாகத்தானே சொல்லியிருக்கிறான். நீங்கள் நேருவை நேருஜி எனவும், காந்தியை காந்திஜி எனவும் சொல்வதுபோல இந்தப் பையன் சிவாவை சிவாஜி என்று சொன்னான். வடக்கே ஒருத்தரை உயர்வாக, மரியாதையாக அழைக்க 'ஜி' சேர்ப்பது வழக்கம், அந்த அர்த்தத்தில் சொல்லியிருக்கிறான் என்றார்.

கண்ணதாசனின் பேச்சிலும் நகைச்சுவை இழையோடும். கண்ணதாசன் ஒரு கூட்டத்தில் பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் நீண்ட நேரம் கழித்துவந்தார். மக்கள் அவர்மேல் வருத்தத்துடன் இருந்தார்கள். கண்ணதாசன் அதை உணர்ந்தார். அவர் பேசத்தொடங்கியவுடன் 'எனக்குப் பிடித்தமதம் ஒன்று உள்ளது, அது யாருக்காவது தெரியுமா?' என்று கேட்டார். ஒருவரும் விடை கூறவில்லை. அவரே 'எனக்குப் பிடித்தமதம் தாமதம்' என்றார்.

சிலேடைச் சொற்களில் நகைச்சுவையாகப் பேசுவது ஒரு தனித்திறனாகும். சொற்பொழிவாளர் கி.வா. ஜகன்னாதன் சிலேடையாகப் பேசுவதில் மிகவும் வல்லவர். இவரது சிலேடைப் பேச்சுகளில் அதிகமாக நகைச்சுவை கலந்திருக்கும். மேலும் அவலநகைச்சுவை என்றும் ஒன்று உள்ளது. இதில் மனிதர்களின் துயரங்கள், கோபங்கள், வேதனைகள் போன்ற உணர்வுகள் வெளிப்படுத்தப்படும். இவ்வகையான நகைச்சுவையில் வாழ்வின் கடினமான பக்கங்களை நகைச்சுவையாக வெளிப்படுத்த முயற்சிக்கப்படுகிறது. இது பலமுறை எதிர்

மறையான அனுபவங்களை அல்லது துயரங்களை விளக்கும்போது ஏற்படுகிறது. அவலநகைச்சுவை மிகவும் ஆழமான எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியது. நதானேல்வெஸ்ட் மற்றும் விளாடிமிர்நபோகோவ் ஆகிய எழுத்தாளர்கள் கறுப்பு நகைச்சுவையை பயன்படுத்திய முதல் அமெரிக்கர்கள். கறுப்பு நகைச்சுவை அதன் தாக்கம் மற்றும் வெளிப்பாடு காரணமாகப் பலரின் கவனத்தை ஈத்தது. இது வெறும் சிரிப்பைத் தாண்டித் தனிநபர் மற்றும் சமூகத்தின் பல்வேறு நிலைகளை விமர்சிக்கின்றது.

சிறந்த வாழ்க்கைக்குச் சிரிப்பே துணை. நகைச்சுவைக்கு மனம்விட்டுச் சிரிப்பதும் நம்மை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும். ஒரு கோபம் 10 நோய்களை உண்டாக்கும். ஆனால் ஒரு சிரிப்பு 10 மருத்துவர்களை நமக்கு துணையாகக்கொண்டுவரும். வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பார்கள். பல்வேறு நோய்களும் ஒற்றைச் சிரிப்பில் காணாமல் போய்விடும். நகைச்சுவையைத் தன் மனமும் பிறர் மனமும் புண்படாமல் எடுத்துக்காட்டும் பொழுது அந்த இடத்தில் சந்தோஷம் அதிகரிக்கிறது. நாம் சிரிக்கும்பொழுது 30-க்கு மேற்பட்ட தசைகள் சுருங்கிவிரிகின்றன. 10-க்கு மேற்பட்ட வேதிப்பொருட்கள் சுரக்கின்றன. இளமையை நீடிக்கும் எண்டார்பின்களும், காதலைத் தூண்டும் ஆம்பிட்டமின்களும் பெருகுகின்றன.

புன்னகை பூப்போம், ஆரோக்கியம் காப்போம். மனிதனுக்குச் சிந்தனை ஆற்றல் இருக்கிறது, சிரிப்பு என்ற சிறப்பும் இருக்கிறது. இது மனிதனுக்கு மட்டுமே இருக்கிறது. துன்பம் தாக்கும்போது எழும் சிரிப்பு அதை வெல்லும் ஆயுதம். இது வள்ளுவர் கூறிய வழிமுறை. ‘கசப்பான உண்மையை சொல்லவேண்டிய கட்டாயம் உருவாகும்போது நகைச்சுவைச் சூழலை ஏற்படுத்தினால் இடர்பாடு எழாது’ என்கிறார் பெர்னாட்ஷா. திருவள்ளுவரும் ‘சிரிக்காதவருக்கு இந்தப் பெரிய உலகம் ஒளியுள்ள பகற்பொழுதிலும் இருட்டில் இருப்பதாக இருக்கும்’ என்கிறார். மனித இனத்திற்கு நகைச்சுவை மிக மிகத்தேவை. ‘மனித குலத்திற்குக் கிடைத்துள்ள சக்தி வாய்ந்த ஆயுதம் சிரிப்பு’ என்று புகழ்பெற்ற எழுத்தாளர் மார்க்ட்வைன் கூறினார். ‘எனக்கு மட்டும் நகைச்சுவை உணர்வு இருந்திருக்காவிட்டால் என் வாழ்வில் எதிர்ப்பட்ட துன்பங்கள் எப்போதோ என்னை அழித்துவிட்டிருக்கும்’ என்று காந்தியடிகள் கூறினார்.

இங்கிலாந்தில் லோமாலிண்டா பல்கலைக்கழகத்தில் சிரிப்புப் பற்றிய ஆய்வு நடந்தது. தினமும் அரை மணிநேரம் நகைச்சுவைக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தால் மன இறுக்கம் தரும் ஹோர்மோன்களின் செயற்பாடு குறைகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. நகைச்சுவை ஒருவரை உயர்த்தும். ‘சிந்திக்கத் தெரிந்த மனித இனத்திற்கே சொந்தமான கையிருப்பு சிரிப்பு’ என கலைவாணர் என்.ஸ்.கே. கூறியுள்ளார். சிரிப்பினால் பகைவரைக்கூட நண்பராக்கலாம். அவ்வளவு பெறுமதி வாய்ந்தது நகைச்சுவை. இதயத்துடிப்பை சாதாரண நிலைக்குக் கொண்டுவர சிரிப்பு உதவுகிறது. ‘வயிறு வலிக்கச் சிரிப்பவர்கள் மனித ஜாதி, பிறர் வயிறு எரியச் சிரிப்பவர்கள் மிருகஜாதி’ என்று கவியரசர் கண்ணதாசன் தன் பாடலில் கூறியுள்ளார். வாழ்வில் எந்தச் சுவை இல்லாவிட்டாலும் நகைச்சுவை உணர்வு கண்டிப்பாக வேண்டும். விழுந்து, விழுந்து சிரியுங்கள், ஆனால் விழுந்தவனைப் பார்த்துச் சிரிக்காதீர்கள்.

நகைச்சுவை உணர்வு உடையவர்களிடம் பேச யார்தான் தயங்குவர்? அவர்களை நண்பர்களாக்கிக்கொள்ள அனைவரும் விரும்புவர். அவர்களுக்கெனத் தனிக்கூட்டமும் சேரும். இத்தகையோரிடம் நல்ல திறமையும், சரியான கூட்டணியும் அமைந்திருந்தால் அவர்கள் தங்கள் வாழ்வின் எந்த இலக்கையும் எளிதாக அடையலாம். ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்துவதில் நகைச்சுவை உணர்வுக்கும் முக்கிய பங்கு உள்ளது. வேலைப்பளு அதிகம் இருக்கும் நேரத்தில் இடைவேளையின்போது நண்பர்களுடன் மகிழ்சியாக உரையாடிக்கொண்டு அவர்களது நகைச்சுவைப் பேச்சுகளை இரசித்தால் களைப்புப் போய்விடும். நகைச்சுவை உணர்வும் ஒரு தகுதியே. நகைச்சுவை உணர்வு உடையவர்கள் கேளிக்கைகளில் ஈடுபாடுகொண்டிருப்பது இயல்பே. இன்றைய தற்கொலைப் பட்டியலைப் பார்த்தாலும்கூட வாழ்க்கையைக் கொஞ்சம் நகைச்சுவை உணர்வோடு அணுகாமையும் ஒரு முக்கிய காரணம் என்பது புரிகிறது. வாழ்க்கை கலவையான உணர்வுகளின் சங்கமம். வாழ்வில் வருகின்ற நிகழ்வுகளை எல்லாம் இயல்பாகவும், இலகுவாகவும் எடுத்துக்கொள்ள நகைச்சுவை உணர்வு அவசியம்.

இவ்வாறான சிரிப்பின் சிறப்புகளுக்காகச் சர்வதேசரீதியாக ஒரு நாள் ஒதுக்கவேண்டாமா? ஏன் ஒதுக்கக்கூடாது? பழங்கால கிரீஸில் பாலமிடிஸால் முதன்முறையாக நகைச்சுவைப் பேச்சு என்ற கருத்துருவாகத் தொடங்கியது என நம்பப்படுகிறது. உலக சிரிப்பு தினத்தை கொண்டுவந்தவர் இந்தியர். 1998-ஆம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் மதன் காரியா என்பவரே முதன்முதல் உலக சிரிப்பு தினத்தை உருவாக்கினார். யூலை முதலாம் திகதி சர்வதேச வேடிக்கை தினமாக அனுசரிக்கப்படுகிறது. முதலாம் திகதி என்ற நாள் எப்படி, யாரால் உருவானது என்பது பற்றியெல்லாம் தெளிவான வரலாறு இல்லை.

100-க்கு மேற்பட்ட நாடுகள் இத்தினத்தைக் கொண்டாடிவருகிறார்கள். நிம்மதிக்கு மருந்து சிரிப்பு. எல்லார் வீட்டிலும் இருக்கு. இருட்டை எரிக்கும் நெருப்பு சிரிப்பு. டாக்டர் மதன் காரியா எதன் மூலம் சந்தோஷத்தைக் கொடுக்கலாம் என யோசித்து சிரிப்பு யோகாவைக் கண்டுபிடித்தார். இதில் சிரியுங்கள், சிரிக்கிறமாதிரி நடியுங்கள் என சிரிப்பு யோகாவில் சொல்லப்பட்டுள்ளது. சிரிப்பு யோகா என்றால் சிரிப்பையும் யோகாவையும் இணைத்துப் பயிற்சி செய்வது, சிரிப்புக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, நம் விருப்பத்துடன் சிரிப்பைத் தூண்டுவது. இவர் சிரிப்புக்கான தூண்டல் பேச்சாளராகவும் விளங்கியவர். இவர் சிரிப்புக்கான பல்கலைக்கழகத்தைக்கூட ஆரம்பித்தவர். இவரது முயற்சிக்குப் பின்னரும் சிரிப்பில் சிக்கனமா?

இத்தினத்தில் நாமும் சிரித்து மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கவேண்டும். இத் தினத்தின் நோக்கம் தனது நண்பர்களுடனும், நெருக்கமானவர்களுடனும் வாய்விட்டுச் சிரித்து மகிழ்வதாகும். சர்வதேச வேடிக்கைப்பேச்சுதினம் என்பது நகைச்சுவையான வேடிக்கைப் பேச்சுகளைப் பகிர்தல், நகைச்சுவையான காணொலிகள் மற்றும் மகிழ்ச்சி நிரம்பிய அஞ்சல் முறை ஆகியவற்றை வரவேற்கும் நகைச்சுவை திருவிழாவாகும். இவ் விழாவில் சிக்கனம் வேண்டாம். நகைச்சுவை தனிச்சுவை என்பதைப் புரிந்து யூலை முதலாம் திகதி சர்வதேச வேடிக்கைப்பேச்சு தினத்தை நாமும் கொண்டாடுவோமாக.



natkunalingam@thaiveedu.com

# போர்க்கால கதைகளைப் பேசிய

# நோர்வேஜிய திறந்தவெளி அரங்கு!

**ஆற்றுகை | நிகழ்த்துமுறை | கலைத்துவம் | கதை நகர்வு | உத்தி | உணர்வு**

ரூபன் சிவராஜா

*நோர்வேஜிய திறந்தவெளி அரங்குகளைப் பார்ப்பதென்பது எப்பொழுதும் பிடித்தமான விடயம். அது தரும் அனுபவமும் மகிழ்வும் அலாதியானது. நோர்வே தலைநகர் ஒஸ்லோவின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைப் பிரதேசமான Nittedal பகுதியின் முதன்மை அரங்கக் குழு (Nittedal Teater) ஆற்றுகை செய்த நாடகம் ஒன்றினை 11.05.25 அன்று பார்க்கக் கிடைத்தது. 'When the war came to Hakadal / Da krigen kom til Hakadal / ஹகாடாலை போர் சூழ்ந்தபோது' என்பது அந்த திறந்த வெளி நாடகத்தின் தலைப்பு.*

இது இரண்டாம் உலகப் போரில் Nittedal பிரதேசம் எதிர் கொண்ட நிகழ்வுகளின் வரலாற்றுப் பின்னணியில் உருவாக் கப்பட்ட நாடகம். நோர்வேஜிய திறந்தவெளி அரங்குகள் கதைக் களத்திற்குரிய கலைத்துவ அழகியலுடன் நேர்த் தியாக உருவாக்கப்படுபவை.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் சிறுவர் இலக்கிய முன்னோ டிகளில் ஒருவரும் புகழ்பூத்த எழுத்தாளருமான Alf Prøysen-இன் படைப்பொன்றினைத் திறந்தவெளி நாடக அரங்கமாகப் பார்த்த அனுபவம் உண்டு. நான் வசிக்கும் Nittedal பகுதியில் 'Alf Prøysen tpoh' 23.06.17 - 02.07.17 வரையான பத்து நாட்கள் நடைபெற்றன. அதன் இறுதி நாள் பிள்ளைக ளுடன் சென்றிருந்தோம். 1970-களில் வெளிவந்த 'நாளை உனக்கான நாள்' எனும் தலைப்பிலமைந்த Alf Prøysen பாடல்களின் தொகுப்பினை மையப்படுத்திய திறந்தவெளி நாடக அரங்கம் ஆற்றுகை செய்யப்பட்டது.

அதே ஆண்டு ஒகஸ்ட் 6-ஆம் திகதி இப்சனின் 'பேர் கிந்த்' (Henrik Ibsen's play Peer Gynt) கவிதா மற்றும் சில நண்பர் களுடன் சென்றுபார்த்திருக்கின்றோம். அது ஒரு மலைப் பிர தேசத்தின் நதிக்கரையில், இரவுப் பொழுதில் திறந்தவெளி அரங்காக நிகழ்த்தப்பட்டது. அதன் ஒளியமைப்பு மிகச் சிறப் பாக அமைக்கப்பட்டிருந்தது. இரவு என்பதால் ஒளியமைப் பின் நுணுக்கத்தை விசேடமாகக் கண்டுணரவும் முடிந்தது. 'Gålåvatnet' எனும் பேராற்றினுடைய கரையோரம் அந்நாட கத்தின் அரங்கமாக ஆக்கப்பட்டிருந்தது. நோர்வேயின் கிழக் குப் பிராந்தியத்தில், ஒஸ்லோவிலிருந்து கிட்டத்தட்ட 300 கிலோமீற்றர் தொலைவில் Gudbrandsdalen பிரதேசத்தில் Gålåvatnet அமைந்துள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 800 மீற்றர் உயரம் கொண்ட ஒரு மலைப்பிரதேசம். இவை பற்றி





முன்னர் விரிவாக எழுதியிருக்கின்றேன். இப்பொழுது Da krigen kom til Hakadal எனும் இந்தத் திறந்தவெளி அரங்க ஆற்றுகையைப் பார்த்தமை நல்லதோர் அனுபவம். அதன் பேசுபொருள், ஆற்றுகை, நிகழ்த்துமுறை, கலைத்துவம், பிரதிபலிப்புகள் குறித்த பார்வையாக அமைகின்றது இந்தக் கட்டுரை. இந்தத் திறந்தவெளி அரங்கின் நிகழ்த்துமுறை, உத்திகள், கதை நகர்வு, ஏற்படுத்திய உணர்வு, அரங்க அமைப்பு, பயன்படுத்தப்பட்ட அரங்கப் பொருட்கள், பாத்திரங்கள், நடிப்பு, உடைகள், கலைத்துவம், அழகியல், இசை குறித்து எழுதுவதற்கு நிறையவே உள்ளன.

## வரலாற்றுச் சம்பவங்களை மையப்படுத்திய பிரதி:

ஜேர்மனியப் படைகள் 1940 ஏப்ரல் 8-ஆம் திகதி நோர்வேயை ஆக்கிரமித்தன. இந்த அரங்காற்றுகை நித்தடால் (Nittedal) பிராந்தியத்தின் ஹக்காடால் (Hakadal) எனும் சிற்றூரை மையப்படுத்தியது. அதாவது நாசிப்படைகள் அச்சிற்றூரை ஆக்கிரமித்தபோது நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இதன் பிரதி உருவாக்கப்பட்டிருந்தது. இதில் வலம்வந்த பாத்திரங்கள் புனைவல்ல, வரலாற்றுப் பாத்திரங்கள். ஜேர்மன் ஆக்கிரமிப்பிலிருந்து நோர்வே விடுதலைபெற்ற நாள் 1945 மே 8-ஆம் திகதி. போர் முடிவுக்கு வந்த 80-வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இந் நாடகம் மே 8 முதல் 11-ஆம் திகதி வரை மூன்று நாட்கள் ஆற்றுகை செய்யப்பட்டது.

ஹிட்லரின் படைகளின் ஆக்கிரமிப்பை Hakadal பிரதேச உள்ளூர் (மாநகர) நிர்வாகம், அதன் அதிகாரிகள் மற்றும் மக்கள் எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பது வரலாற்று நிகழ்வுகள், பாத்திரங்கள் ஊடாகச் சொல்லப்படுகின்றது. பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்ட தகவல் வானொலிச் செய்தியாக அறிவிக்கப்படுவதையடுத்து, மக்கள் திரளாக இடம்பெயரும் காட்சியோடு நாடகம் தொடங்குகின்றது. வானொலி அறிவிப்புகளே அவர்களுக்கான தகவல் ஆதாரம். இடம்பெயரும்போது அவசரத்திற்குக் கையில் அகப்பட்டவற்றோடு வானொலிப்பெட்டிகளையும் கைகளில் ஏந்திக்கொண்டு இடம்பெயர்கின்றனர்.

இராணுவத்தின் தாக்குதல்கள், கைதுகள், சித்திரவதைகள் என்பதற்கு அப்பால் இனத்துவேசமும் மனிதர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. யூதக் குடும்பங்கள் கிட்லரின் படைகளின் அழித்தொழிப்புக்கு அஞ்சி அடையாள மறைப்புப் செய்யவேண்டிய சூழலுக்குள் தள்ளப்படுகின்றமை சம்பவங்களுக்கூடாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நாடகம் அரங்கேறிய இடமானது ஒரு பழைமை வாய்ந்த கட்டடம் ஆகும். இந்தக் கட்டடம் முக்கியமான ஒரு பண்பாட்டு நினைவுச் சின்னமாகப் பேணப்படுவதோடு, பல்வேறு உள்ளூர் சமூக, பண்பாட்டு நிகழ்வுகளுக்கான தளமாகவும் விளங்குகின்றது. அந்த கட்டடமும் நாடகத்தின் அரங்காக (கதைக்களமாக) பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக பாத்திரங்கள் அந்த கட்டடத்திற்குள்ளிருந்து வெளியே வந்தன. இராணுவக் கட்டளைப் பீடமாக, சிவில் நிர்வாகத்தை நடத்திய அதிகாரிகளின் அலுவலகமாக, மாநகரசபைக் கட்டடமாக, பாடசாலையாக, வீடுகள் எனவாக பல களங்களாக மாறிமாறி அந்தக் கட்டடம் உருவகப்படுத்தப்பட்டது.

## பாத்திரங்களின் இயங்குகளம்:

திறந்தவெளி அரங்கம் எல்லா பாத்திரங்களினதும் இயங்குகளமாகப் பயன்படுத்தப்பட்டது. மக்கள் தமது துயர்களை வெளிப்படுத்தும் இடமாக, ஒன்றுகூடும் இடமாக, இராணுவ ஆக்கிரமிப்பாளர்கள் தமது தான்தோன்றித்தனங்களை கட்டவிழ்த்துவிடும் இடமாக, சித்திரவதைக் கூடமாக, திறந்தவெளி முட்கம்பிச் சிறைச்சாலையாக, எதிர்ப்பியக்கம் தமது தாக்குதல்களைத் திட்டமிடும் பகுதியாக, தலைமறைவாக வாழும் பிரதேசமாக எனவாகத் திறந்தவெளி அரங்கு உருவகப்படுத்தப்பட்டிருந்தது. வெவ்வேறு களங்களையும் உரிய முறையில் அந்தந்தப் பாத்திரங்கள் உருவகப்படுத்தி ஆற்றுகை செய்தனர். இராணுவத்தினருக்கும் எதிர்ப்பியக்கப் போராளிகளுக்குமிடையேயான போர்க்களமாக, சித்திரவதை முகாமாக, விசாரணை மற்றும் குடும்ப அட்டை (Ration Card) வழங்கப்படும் இடமாக எனக் கதைக்களங்களுக்கு ஏற்ற புதிய முறையில் அரங்கு இயங்கியது.

அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான Ration card / குடும்ப அட்டைகளையும் பொருட்களையும் பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கும் காட்சிகள், விநியோகத்தின் போதான அவமதிப்புகள் போன்ற காட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

நுகர்வுப் பொருட்கள் மீதான விநியோகக் கட்டுப்படுத்தலுக்காக பெரும்பாலான போர் இடம்பெற்ற நாடுகளில், குறிப்பாக முதலாம், இரண்டாம் உலகப் போரின் போதும் பின்-போர்க் காலத்திலும் பல நாடுகளில் பயன்படுத்தப்பட்டது.

## எதிர்ப்பியக்கம்:

இந்நாடகத்திற்கான உந்துதலாக அமைந்த அம்சமாக ஜேர்மன் படைகளுக்கு எதிராக எதிர்ப்பியக்கப் போராளிகளால் நடத்தப்பட்ட பாரிய தாக்குதற் சம்பவம் குறிப்பிடப்படுகின்றது. ஹாகாடால் தொடரூந்து நிலையத்தில் 86 தொடரூந்துப் பெட்டிகளை செப்ரெம்பர் 1944-இல் தாக்கியழித்தனர். அதன் மூலம் தலைநகர் ஒஸ்லோவிற்கும் இன்னொரு நகரான ஜோவிக் (Gjøvik) இற்கும் இடையிலான ஜேர்மனிகளின் விநியோகப் பாதையைத் துண்டித்தனர்.

நாடகத்தின் இடைவேளைக்கு முந்திய காட்சி கைதிகள் சித்திரவதை முகாமில் கொடுமையாக நடத்தப்படும் காட்சி ஆகும். இடைவேளையின்போதும் பார்வையாளர்களை அதே உணர்வுக்குள் வைத்திருக்கும்பொருட்டு அந்த காட்சி, அதாவது கைதிகள் அடிமைகளாக நடத்தப்படும் காட்சி அரங்கிற்கு சற்றுப் புறமாக இருந்த தோட்டத்திற்குள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு கொண்டிருந்தது. கைதிகள் அடிமை வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் பொதிகள் சுமக்க வைக்கப்படுவதாகவும், துன்புறுத்தப்பட்டுக் கடுமையான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதான காட்சிகள் இடம்பெற்றபடி இருந்தன. கலைஞர்கள் மிகவும் அர்ப்பணிப்போடு ஆற்றுகையில் ஈடுபட்டிருந்தனர். இடைவேளையின்போது பெரிதாக யாரும் தம்மை பார்க்க மாட்டார்கள் என்ற அலட்சியம் இல்லாமல் சீரியசாக இயங்கினர். பார்வையாளர்களின் மன நிலையை நாடகத்திற்குள் தக்கவைத்திருப்பதற்கான பொருத்தமான உத்தியாகவும் இதனைப் பார்க்க முடியும்.

யூதப் பெண்ணுக்கும் அவருடைய நோர்வேஜிய நட்புக்கும் இடையில் ஓர் உரையாடல் நடந்து கொண்டிருந்த காட்சியில் இயல்பாக ஒரு பயணிகள் விமானம் வானத்தில் பறந்தது. அது எதிர்பாராத தருணத்தில், அதேவேளை இயல்பாக நிகழ்ந்தது. ஆற்றுகையாளர்கள் அதனை ஒரு போர் விமானமாகக் கருதிக்கொண்டு காட்சியை (React) மெருகூட்டினர். தொழில்முறை அல்லது தேர்ந்த கலைஞர்கள் எப்படி ஓர் அசாதாரண சூழலை நாடகத்தின் காட்சிக்கு உரிய வகையில் உள்வாங்கி வசப்படுத்தி ஆற்றுகையை மெருகூட்டுவார்கள் என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அந்தக் காட்சி அமைந்தது.



## இசையின் பங்கு:

காட்சிகளுக்கு உயிரூட்டுவது என்பதைத் தாண்டி ஒரு போர்ச் சூழலை, ஆக்கிரமிப்பு மிக்க இனவெறிச் சூழலையும், மக்களின் துயரையும், ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்ட குணத்தினையும் அவற்றுக்குரிய களங்களையும் உணர்வுபூர்வமாகப் பிரதி பலிப்பதில் இசையின் பங்கு முக்கியமானதாக இருந்தது. மேடையற்ற திறந்தவெளி. ஒளி அமைப்பு அற்ற வெளி. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அரங்கப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இப்புறநிலைகளில் இசைக்கு கூடுதல் வகிபாகம் இருந்தது. பாடல்களும் உத்திபூர்மாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாகப் போராளிகளின் உணர்வுகளையும் ஆக்கிரமிப்பிற்கு எதிரான விடுதலை உணர்வையும் போராட்டச் செயற்பாடுகளையும் தமது திட்டங்களையும் வெளிப்படுத்த பாடல்கள் பயன் படுத்தப்பட்டன. அவர்கள் பாடுவதாகவே காட்சிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

கதையை நகர்த்துவதற்கும் திருப்புமுனை காட்சிகளுக்குமுரிய உத்தியாக வானொலிச் செய்திகள் பயன்படுத்தப்பட்டன. அது மிக இயல்பானது. போர் உட்பட்ட நெருக்கடிச் சூழல்களில் வானொலிச் செய்திகளே நிகழ்வுகளை மக்களுக்கு அறிவிக்கின்றன.

## ஜேர்மன் சிப்பாய்க்கும் நோர்வேஜிய பெண்ணுக்கும் இடையில் காதல்:

ஜேர்மன் படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய்க்கும் நோர்வேஜிய பெண்ணுக்கும் இடையில் காதல் மலர்கிறது. மொழி புரியாத சூழலில் இருவரும் காதல் வயப்படும் போதான சந்திப்புகளும் சம்பவங்களும் சுவாரஸ்யமும் நகைச்சுவையுமாக காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு கட்டத்தில் உக்கிரமான போரில் அந்தச் சிப்பாய் இறந்து போகிறான். அவனது குழந்தையை அவள் வயிற்றில் சுமந்தபடி அவனைப் பிரிய நேர்கிறது. ஜேர்மன் இராணுவத்தைச் சேர்ந்தவர்களுடன் உறவு கொண்ட நோர்வேஜிய பெண்களுக்கு பிறந்த குழந்தைகள் போரின்போதும் - போருக்குப் பின்னான காலத்திலும் நோர்வேஜிய சமூகத்தில் மிகவும் புறக்கணிப்புகளுக்கு உள்ளாகினர்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பல பாத்திரங்கள் இதில் இடம்பெற்றிருந்தன. நேரேதிர்க் குண இயல்புகளையும் நிலைப்பாடுகளையும் கொண்ட பாத்திரங்கள். ஒரு சகோதரன் முற்று முழுதாக ஜேர்மன் படைகளோடு இணைந்து அவர்களுக்கு விசுவாசமாக இயங்குகின்றான். சொந்த மக்களை துன்புறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றான். இன்னொரு சகோதரன் எதிர்ப் பியக்கத்தில் துடிப்போடும் போராட்ட குணத்தோடும் செயற்படுகின்றான். ஒரு சகோதரி ஜேர்மன் சிப்பாயிடம் காதல் வயப்படுகிறாள். அவனது குழந்தையைத் தன் வயிற்றில் சுமக்கிறாள். சமூகத்தின் வசவுகளுக்கும் புறக்கணிப்புக்கும் உட்படுகின்றாள்.

மக்களின் நன்மைக்காக ஜேர்மன் நிர்வாகத்தின் கட்டளைக்கு இணங்கி நடக்கும் அதிகாரி பாத்திரம் இடம்பெற்றுள்ளது. அந்தப் பாத்திரம் தன்னால் இயன்ற அளவு உட்தகவல்களை மக்களுக்

கும் எதிர்ப்பியக்கத்திற்கும் வழங்கிவந்தது. அவருடைய செயற்பாடு ஓர் இயக்கத்தின் இரகசிய புலனாய்வுச் செயற்பாட்டுவகையைச் சேர்ந்தது.

இத்தகு நிகழ்வுகள் போருக்கு முகம் கொடுக்க நேர்கின்ற, போராட்டங்களை முன்னெடுக்கும் எல்லா நாடுகளிலும் எல்லாச் சமூகங்கள் மத்தியிலும் இயல்பாக இடம்பெறக்கூடியவையே. பெரும்பாலான போர்ச்சூழல்களில் இத்தகைய அனுபவங்கள் இருந்திருக்கின்றன. இவற்றைக் கருப்பு வெள்ளையாகவோ, தியாகி துரோகி என்ற ஒற்றைப் பரிமாணத்திலோ அணுக முடியாது என்பதே யதார்த்தம். மனநிலைகள், மனித உணர்வுகள், இயல்புகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள், நிர்பந்தங்கள், தேவைகள், தெரிவுகள் போன்ற அனைத்துக்கூடாகவுமே இவை பார்க்கப்பட வேண்டியவை.

எதிர்ப்பியக்கப் போராளிகள் அனைவரும் ஜேர்மன் படைகளாற் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்படுகிறார்கள். பின்னர் கண்கள் கட்டப்பட்டு வரிசையில் நிறுத்தப்பட்டு ஒருவர் பின் ஒருவராகச் சுட்டுப் படுகொலை செய்யப்படுகின்றார்கள். ஜேர்மன் படைகளுடன் சேர்ந்து இயங்கிய சகோதரன் கைதுசெய்யப்பட்ட எதிர்ப்பியக்கத்தைச் சேர்ந்த தன் சொந்தச் சகோதரனையே சுடுமாறு கட்டளை இடப்படுகிறான்.

## ஆக்கிரமிப்பினைப் பிரதிபலித்த அரங்கு:

இராணுவ அணிவகுப்பு, படைச் சிப்பாய்களின் நடமாட்டம் எனவாக அந்தச் சூழல் ஒருவகையான ஆக்கிரமிப்பினைப் பிரதி பலித்தது. சிறையில் இருந்து எதிர்ப்பியக்க போராளி ஒருவர் மீட்கப்படுகின்றார். சிறையை உடைத்து அவரை மீட்பதான காட்சி. திரைப்படத்தில் ஒரு சிறைமீட்புச் சண்டைக் காட்சி எப்படி இருக்குமோ கிட்டத்தட்ட அதற்கு நிகராக அது நிகழ்த்தப்பட்டது.

பழைய காலத்து அசலான இராணுவ ஜீப் வண்டி, பழைய காலத்து கார் ஒன்றும் பயன்படுத்தப்பட்டிருந்தது. துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினரின் நடமாட்டம் ஆங்காங்கே நிலவியபடி இருந்தது. அது ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பிரதேசத்திற்குள் இருப்பதான உணர்வைப் பார்வையாளர்களுக்கு கடத்தும் வகையிலும் இருந்தது. போர்க் காட்சிகள் இயல்புக்கு மிக நெருக்கமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. துப்பாக்கி சத்தம், சுடும்போது புகை வெளியேற்றம் என்பனவும் இயல்பாக இருந்தன.

## சமாதானம், மனிதாபிமானம், மக்கள் நலன், போரெதிர்ப்பு, விடுதலையுணர்வு:

நாடகத்தின் இறுதிக் கட்டத்தில், எதிர்ப்பியக்கத்தினர் மீதான சுற்றிவளைப்பிற்கு முன்னரான ஒரு போர்க்காட்சியும் மிகவும் தத்ரூபமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. காயப்பட்டவர்களை மருத்துவ சிகிச்சைக்காக எடுத்துச் செல்வது, மரணமடைந்தவர்களைக் களத்திலிருந்து அப்புறப்படுத்துவது போன்ற காட்சிகளும் தத்ரூபமாக இருந்தன. 'Hitler is dead - ஹிட்லர் மரணமடைந்தார்' என்ற வானொலி அறிவிப்போடு நாடகம் முடிவுக்கு வந்தது. அதுவே ஆக்கிரமிப்பின் முடிவாகவும், விடுதலையின் தொடக்கமாகவும் சித்தரிக்கப்பட்டிருந்தது. நோர்வேஜியக் கொடிகளை ஏந்தி சிறுவர்கள், இளையோர், பெண்கள், பெரியவர்கள், வயோதிபர்கள் என மக்கள் விடுதலையைக் கொண்டாடினர். சமாதானம், மனிதத்துவம், மனிதாபிமானம், மக்கள் நலன், போரெதிர்ப்பு, விடுதலையுணர்வு என்பனவற்றை வலியுறுத்தும் பாடல் இறுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதேவேளை'Jævla tysketøs - ஜேர்மன்காரனோடு போன எளிய...' என்று கர்ப்பிணியான பெண்ணை ஏனைய பெண்கள் சூழ்ந்துநின்று, அவள் மீது வசைச் சொற்களை வீசினர்.

## ஜேர்மன் படையினரோடு உறவுகொண்டிருந்த பெண்கள் மீதான வசைச்சொல் – புறக்கணிப்பு:

Tyskertøs / Tyskerjenter என்ற வசைச்சொல் நோர்வேயில் பாவனையிலிருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மன் ஆக்கிரமிப்புப் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களோடு காதலில் அல்லது உறவில் இருந்த பெண்களை இச்சொல்லில் விளித்ததுண்டு (வசை பாடல்). தாய்நாட்டிற்குத் துரோகமிழைத்ததாகவும் வஞ்சனை செய்ததாகவும் இவர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். இது போரின் பின்னரும் நீண்டகாலம் நடைமுறையில் நீடித்தது. இது வெறும் வசைபாடலுடன் மட்டும் தொடர்புடையதல்ல. போரின் முடிவிற்குப் பின்னரும் (Post-war) இந்தப் பெண்கள் சமூக வாழ்வியலில் பல்வேறு வகையான விளைவுகளை எதிர்கொண்டனர். அவமதிப்புகளுக்கு உட்பட்டனர். இப்பெண்களும் இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் சட்ட மற்றும் சமூக ரீதியில் பாதிப்புகளுக்கு முகம்கொடுத்தனர். 1950-இற்கு முன்னர்வரை, அதாவது போர் முடிவுக்கு வந்த 1945 முதல் 1950 வரையான காலப்பகுதியில் வெளிநாட்டவரைத் திருமணம் செய்த நோர்வேஜியப் பெண்களின் நோர்வேஜியக் குடியுரிமை பறிக்கப்பட்டது. அத்தோடு பல பெண்கள் ('Tyskerjenter') ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டனர்.

ஜேர்மன் இராணுவத்தினரோடு உறவு கொண்டிருந்த நோர்வேஜியப் பெண்களின் எண்ணிக்கை 30 000 – 120 000 எனக் கணிப்பிடப்படுகின்றது. இந்த உறவுகளின் விளைவாக 10 000 – 12 000 வரையான குழந்தைகள் பிறந்ததாகவும் தகவல்கள் உள்ளன. இந்தக் குழந்தைகளிற் பெரும்பான்மையானவர்கள் வளரும் சூழலில் அவமதிப்புகளையும், நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டிருந்தனர். குழந்தைகளைத் 'Tyskerbarn' என்பதுண்டு. அதன் பொருள் 'ஜேர்மன் காரனுக்குப் பிறந்தது'.

போரின்போது இத்தகைய பெண்கள் துன்புறுத்தல், வசைபாடல், அவமதிப்புக்கு ஆளாகினர். ஜேர்மன் சிப்பாய்கள்,





அதிகாரிகளுடனான தமது காதல் காரணமாகத் தமது குடும்பங்களைப் பிரிய நேர்ந்ததோடு, சமூகத்தால் புறக்கணிப்பிற்கும் உட்படுத்தப்பட்டனர். போரின் பின்னரும் இத்தகு அவமதிப்புகளும் புறக்கணிப்புகளும் துன்புறுத்தல்களும் தொடர்ந்தன. சமூகத்திற் தமக்கான இடத்தினை மீள்நிலைநிறுத்துவதற்கு அவர்கள் போராட வேண்டியிருந்தது. சமூக மற்றும் சட்ட ரீதியிற் பெரும் சவால்களுக்கு அவர்கள் முகம் கொடுத்தனர்.

2020-ஆம் ஆண்டு ஒஸ்லோவில் ‘ரோஜா அரண்மனை’ என்ற தலைப்பில் ஒரு பெரும் திறந்தவெளி ஓவியக் கண்காட்சி ஒன்று ஓராண்டுக்கு மேலாக பெரும் பொருட்செலவில் நடத்தப்பட்டது. அது கருத்தியல் ரீதியாகவும் கலைத்துவ ரீதியாகவும் மிகப் புதுமையான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு இரண்டாம் உலகப் போரில் நோர்வேஜியர்கள் எதிர்கொண்ட துன்பங்கள் ஓவியங்களாகவும், எழுதப்பட்ட கதைகளாகவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அங்கும் ஜேர்மன் படையினரோடு காதலும் உறவும் கொண்டிருந்த பெண்கள், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் கதைகள் பல காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அந்தக் கண்காட்சியில் போர் அனுபவங்களை எதிர்கொண்ட புகழ்பெற்ற மற்றும் சாதாரண மனிதர்களின் கதைகள் ஓவியங்களாகவும் எழுத்துவடிவக் கதைகளாகவும் வைக்கப்பட்டிருந்தன. நீள்வட்ட வடிவில் கோள்களின் அசைவினைக் குறியீடாக வெளிப்படுத்தும் கலைத்துவ அணுகுமுறையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. போரை எதிர்கொண்டவர்களின் தன்னனுபவக் கதைகளுக்கு கண்காட்சி முன்னுரிமை கொடுத்துள்ளது. ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்ட சிறுமியொருவரின் கதை, ஜேர்மன் சிப்பாயின் மூலம் நோர்வேஜியப் பெண்ணுக்குப் பிறந்த ஒரு பெண் பிள்ளையின் கதை ஆகியன இவற்றுள் முக்கியமானவை. இக்கதைகள் அனைத்தும் போரின் விளைவான மனிதத்துயரங்களைப் பேசுகின்றன. இந்தக் கண்காட்சிக்கான ஓவியங்களை வரைந்தவர்களும் கண்காட்சியை வடிவமைத்தவர்களும் நோர்வேயின் புகழ்பெற்ற கலைஞர்களான Sand and Eimund Sand ஆகியோராவர்.

‘போரைப் பேசுதல்’ என்ற தலைப்பில் இந்தக் கண்காட்சி பற்றி கவிதா லட்சுமி விரிவான கட்டுரை ஒன்றினை 2021-இல் எழுதியுள்ளார். அக்கட்டுரையிலிருந்து சில வரிகளை இங்கு பகிர்வது பொருத்தமெனக் கருதுகின்றேன்:

‘ஏதென்ஸ் நகரத்தின் அக்ரோபோலிஸில் பிறந்த ஒரு குட்டிப் பறவை ஷெல். வடதிசை நோக்கிப் பறந்து வந்திருக்கிறது. உலகின் பல கருத்துகளையும், உரையாடல்களையும் செவிமடுத்து வந்ததனால், இந்த முழு உலகத்துக்குமான குடிமகனாய் தன்னை உணர்வதாகச் சொல்கிறது. தன்னை ஒரு வானியலாளர் என்றும் சொல்லிக்கொள்கிறது. வடதுருவ வான் பரப்பை ஆய்ந்தறியக் கிளம்பிய ஷெல், ஒஸ்லோ நகரின் ’ரோஜாஅரண்மனை’யில் இருக்கும் நட்சத்திரத்தை வழியில் கண்டு கொண்டது. அந்நட்சத்திரத்தை ஆய்ந்தறிந்துகொள்வதற்காக இங்கேயே தங்கிவிட்டது. இப் புனைவிலிருந்தே மானுட வலிகளையும் போரையும் பேசத் தொடங்குகிறார்கள் ஓவியர்களான வேபியோன் சண்ட் (Vedmund Sand) அய்முன் சண்ட் (Eimund Sand). கிரேக்க தேசத்தில் இருந்து எடுத்து வந்த மனிதநேயச் சிந்தனைகளையும், சித்தாந்தங்களையும் குட்டிப் பறவையான ஷெல், பார்வையாளர்களுக்குச் சொல்லும் வண்ணம் வழிநெடுகிலும் கூடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன’ என்று அதன் எண்ணக்கரு, வடிவமைப்புப் பற்றிக் கவிதா குறிப்பிடுகின்றார்.

ஒரு நாடகப்பிரதியை எழுதுவது என்பது தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்ட ஓர் அனுபவமாகும். இப்பிரதிக்கு அடிப்படையான வரலாற்றை ஆய்வுக்கும் ஆழமான வாசிப்பிற்கும் உட்படுத்தவேண்டியிருந்தது. இந்த வரலாறு மறக்கப்படாமல் கடத்தப்படுவது முக்கியம் என்றும் கூறினார், இதன் பிரதி ஆக்குநரும் நெறியாளருமான Lene Hagen. அவர் மேலும் கூறுகையில், போர்க்காலத்தில் அவ்வூர் மக்களின் அன்றாட வாழ்வின் ஒரு பரந்த பரப்பினை நாடகம் உள்ளடக்கி வெளிப்படுத்தியிருந்தது. இரண்டு நேரெதிர் முரண்கள் இதன் மையம் ஒன்று ஆக்கிரமிப்புப் போரினாற் கட்டவிழ்த்துவிடப்பட்ட அதீத வன்முறை. மற்றையது காதல். புதிய ஆட்சியாளர்கள் சாதாரண மக்களுக்கு வானொலி வைத்திருப்பதைத் தடை செய்கின்றனர் என்றார்.

இந்த வரலாற்றின் உள்ளடக்கம் மிகக் கொடூரமானது, ஆனால் இந்த கொடூரத்தின் அனைத்து உள்ளடக்கத்தினையும் ஒரு மேம்பட்ட கலைத்துவத்துடன் வெளிப்படுத்துவது தன்னளவில் முதன்மையாக இருந்தது என்றும் ஹாகன் தெரிவித்தார்.

ஒரு போரைப் பேசுவது, எழுதுவது அல்லது அதனை ஏதோவொரு கலை வடிவத்தினூடாகப் பிரதிபலிப்பது அத்தனை இலகுவல்ல. துன்பியலைப் பேசுவது மனதைக் கலங்கடிக்கச் செய்யக்கூடியது. எத்தனை பெரிய துன்பமாக இருந்தாலும் கலை ஊடாகச் சொல்லும்போது அது பிரச்சாரமாக இல்லாமல் கலைக்குரிய அம்சங்களோடு வெளிப்படுத்தப்பட வேண்டும். மனங்களோடு ஊடாட வேண்டும், உணர்வைக் கடத்த வேண்டும். இந்த ஆற்றுகை போரைப் பேசியது. அழகியலோடு பேசியது. காதலைப் பேசியது, இடப்பெயர்வைப் பேசியது, துரோகத்தை, தியாகத்தைப் பேசியது, எதிர்ப் பரசியலை, ஆயுதக் கிளர்ச்சியை, போராட்ட உணர்வைப் பேசியது. இனவாதத்தை, இனத்துவேசத்தை, அதிகாரத்தை, கைதிகள் மீதான சித்திர வதைகளை, மனித நேயத்தை, விடுதலை வேணவாவை எனவாக ஒரு போரின் எல்லா அம்சங்களையும் பேசியது. அத்தனைக்குள்ளும் கலை இருந்தது.



rooban.s@thaiveedu.com

# சாந்தாராம் எனும் கலைஞன்

**- ஓவியர் ஜீவா**



நான் சிறுவனாக இருக்கும்போதே என் தந்தையார் எனக்கு அறிமுகப்படுத்திய இரண்டு திரைப்பட ஆளுமைகள் சத்யஜித் ராயும் சாந்தாராமும். ராய் படங்கள் பெங்காலி என்பதால் அவருக்கு பார்க்க வாய்த்ததில்லை, ஆனால் சாந்தாராம் திரைப்படங்கள் இந்தியிலும் வெளியானதால் தமிழ்நாட்டில் அவருக்கு காணக்கிடைத்திருக்கிறது. கலையழகும் சமூகப்பார்வையும் சாந்தாராம் திரைப்படங்களின் முக்கிய அம்சங்கள் என்பதால் அவரையும் பல இந்திய ரசிகர்களையும் கவர்ந்திருக்கின்றன.

இந்தியாவில் திரைப்படங்கள் அறிமுகமான காலத்திலேயே சாந்தாராம், திரையுலகில் பயணித்திருக்கிறார். கிட்டத்தட்ட சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் பிறந்து பாபுராவ் பெயின்டர் என்ற மாபெரும் திரைப்பட ஆளுமையின் நிறுவனத்தில் சிறிய வேலைகளை செய்துகொண்டு தன் திரைப்பட அனுபவங்களை துவங்கி இருக்கிறார். 20 வயதிலேயே ஒரு மவுனப்படத்தில் சிறிய வேடத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தன் 26 வயதிலேயே முதல் திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. 28 வயதில் பிரபாத் ஸ்டுடியோவை நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பித்திருக்கிறார். கிட்டத்தட்ட அதன் பின் 60 வருடங்கள் வெற்றிகரமாக இயங்கியிருக்கிறார் என்பது ஒரு ஆச்சரியம்.

சாந்தாராம் திரைப்படங்களில் மனித நேயமும், அநீதிகளுக்கு எதிரான குரலும் உரக்க ஒலிக்கும்போது, கூடவே அழகான இசைக்கோர்வைகளும் நிரம்பி வழிந்தன. இசையில் அதிக ஆர்வமுடையவர் அவர், அவருடைய பெரும்பாலான திரைப்படங்களில், இசையமைப்பாளர் பணிகளில் இயக்குநரின் ஆதிக்கமும் அதிகம் இருந்தது என்று சொல்வார்கள். பாடல்களை படமாக்குவதில் இயக்குனரின் கலைப்பார்வையும் முக்கிய பங்கு வகித்தன. சில கலைஞர்களுக்கே உரிய முறையில் சாந்தாராமுக்கு காதல் உணர்ச்சிகள் அதிகம். பால்ய மணம் புரிந்த மனைவி இருக்கும்போதே, நடிகை ஜெயஸ்ரீயை மணந்தார். தன் 56 வயதில் ஜெயஸ்ரீயை விவாகரத்து செய்துவிட்டு இன்னொரு நடிகை சந்தியாவை மணம் புரிந்தார். நல்லவேளை அப்போது இருதார மணச்சட்டம் அமுலுக்கு வரவில்லை. வாரிசுகள் பலர், திரையுலகத்தில் புகழ்பெற்று திகழ்ந்தவர்கள்தான். அவருக்கும் ஜெயஸ்ரீக்கும் பிறந்த மகள் ராஜ்ஸ்ரீ பிரபல நடிகையாக திகழ்ந்தார். அவரது இன்னொரு மாப்பிள்ளை இசை மேதை பண்டிட் ஜஸ்ராஜ்.



அப்போதெல்லாம் சனி ஞாயிறு தினங்களில் தியேட்டர்களில் காலைக்காட்சி குறைந்த கட்டணத்தில் பழைய திரைப்படங்களை திரையிடுவார்கள். பல சாந்தாராம் படங்களை மாணவப் பருவத்தில் இப்படித்தான் பார்த்திருக்கிறேன். அப்படிப் பார்த்த படங்களில் ஒன்று 'தோ ஆங்கேன் பாரா ஹாத்'. இரண்டு கண்கள் பன்னிரண்டு கைகள் என்பது அதன் பொருள். ஒரு உண்மைக்கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாறுபட்ட திரைப்படம். 1957 காலங்களில் இப்படி ஒரு திரைப்படம் வந்ததே ஆச்சரியம். லட்சியவெறி கொண்ட ஒரு சிறை அதிகாரி 6 கொடூரமான கைதிகளை ஒரு திறந்த வெளி சிறைச்சாலையில் வைத்து திருத்துவது போன்ற ஒரு கதை. அவர்களை உழைக்க வைத்து, விவசாயிகளாகவும் வியாபாரிகளாகவும் ஆக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். இறுதியில் ஒரு காளையுடன் மோதி இறந்து போகிறார். அவருடைய கண்கள் இவர்கள் ஆறு பேரையும் கண்காணித்துக் காக்கும் என்பது போல படத்தை முடித்திருப்பார் இயக்குநர். ஜெயிலராக நடித்தவரும் சாந்தாராம்தான். பொட்டல் வெளியில் அமைந்திருக்கும் இடிந்த வீட்டை நாடி வரும் பொம்மை வியாபாரியாக அவரது மூன்றாவது மனைவி சந்தியா நடித்திருந்தார். இந்தப் படத்தின் இன்னொரு நல்ல அம்சம் இதன் பாடல்கள்! இந்தத் திரைப்படம் தென்னிந்திய மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டு வெளியானது. தமிழில் எம்.ஜி.ஆர் நடிக்க 'பல்லாண்டு வாழ்க' என்று வெளியானது. தமிழ்ப் படத்தில் மூலப்படத்தில் இல்லாத மசாலா, காதல், எல்லாம் சேர்த்து படத்தை குதறி எடுத்து விட்டார்கள்! பாடல்களும் அவற்றை படமாக்கிய விதமும் திரைப்பட ரசிகர்களால் மறக்க முடியாது. 'ஏ மாலிக் தேரே பந்த்தே ஹம்' இன்றும் முணுக்கப்படும்

பாடல். தமிழில் 'ஒன்றே குலமென்று பாடுவோம்' என்று வெளியானது. சாந்தாராமும் மிடுக்கும் சாந்தமும் கொண்ட ஜெயிலர் வேடத்தை பிரமாதமாக ஏற்று நடித்திருந்தார். கொட்டாங்குச்சி வயலினை வாசித்துக்கொண்டு, தன் இடுப் பில் கட்டியதால் தொடர்ந்து வரும் டம டம வண்டி சகிதம் பாடிக்கொண்டே நடந்து வரும் சந்தியா ஒரு அழகுப்பதுமை. 'பல்லாண்டு வாழ்க' படத்தின் வெற்றிவிழாவின்போது கலந்து கொண்ட சாந்தாராம், இது என் படம் இல்லை என்று சொல்லி உரிமைக்கான காசோலையை மேடையிலேயே திருப்பித் தந்து விட்டதாக ஒரு ஆதாரமற்ற செய்தி உலவுகிறது.

இந்த படத்திற்கு முன்னாலேயே வெளியானது 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' (ஜனக் ஜனக் என்று ஒலித்தது சலங்கை). சாந் தாராமுக்கு நீண்ட கவித்துவமான தலைப்புகள் மீது ஒரு காதல். 'டாக்டர் கோட்னிஸ் கி அமர் கஹானி' (டாக்டர் கோட்னிஸின் அமர கதை), 'கீத் காயா பத்தரோனே' (பாடல் பாடிய கற்கள்), 'பூந்த் ஜோ பன் கயீ மோத்தி' (முத்தாய் மாறிய மழைத்துளி), 'ஜல் பின் மச்லி நிருத்ய பின் பிஜ்லி' (நீரில்லாமல் மீன், நாட்டியமில்லாமல் பிஜ்லி) என்று சில உதாரணங்கள் உள்ளன. 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' டெக் னிக் கலரில் 1955-லேயே உருவான திரைப்படம். ஒரு நடன மேதைக்கும் அவர் மகனுக்கும் நடக்கும் உணர்ச்சிப் போராட் டங்களே கதையின் முக்கிய கட்டங்கள். பிரபல நாட்டிய குருவான மங்கள், ஒரு இளம் நாட்டியக்கலைஞரின் சுவ ரொட்டியை பார்த்தே ஆவேசமாகி அதை கிழித்து எறியும் அளவுக்கு செல்கிறார். அவளுடைய நடனத் தோற்றம் அவருக்கு ஒப்புதல் இல்லை. நடனக் கலையை மலினமாக்கு கிறாள் என்று ஆவேசப்படுகிறார். அவளுடைய நாட்டிய நிகழ்ச்சியை மறைந்திருந்து பார்க்கும் வாய்ப்பு அவருக்கும் அவர் மகன் கிரிதருக்கும் கிடைக்கிறது. அவளுடைய நடனத்தை பார்த்து கிரிதர் ஆவேசமாக உள்ளே நுழைந்து பரபரப்பான ஒரு நடனத்தை தாவிக்குதித்து கேலிச்சித்திர மாக சித்தரித்துக் காட்டுகிறான். பிறகு தந்தையின் வேண்டு கோளுக்கிணங்க, ஒரு அற்புத கதக் நடனத்தை அங்கேயே அரங்கேற்றி ஆடிக்காட்டுகிறான். நடனமங்கை நீலா தன் கலையின் நிலை குறித்து நாணப்பட்டு மங்கள் குருவிடம் நடனம் பயில ஆசைப்படுகிறாள்.

இப்படி துவங்கும் திரைப்படம், அற்புதமான பாடல்களோடும் உணர்ச்சிகரமான காட்சிகளுடன் சென்று முடிகிறது. கிரிதராக நாட்டிய மேதையும் நடன அமைப்பாளருமான கோபி கிருஷ்ணா அபாரமான நடனங்களை ஆட, அவருக்கு ஈடு கொடுத்து சந்தியாவும் ஆடியிருந்தார். 'நைன் சோ நைன் நாஹீ' என்று ஹேமந்த் குமார், லதா மங்கேஸ்கர் குரலில் பாடப்பட்ட பாடல் காட்சி மைசூர் பிருந்தாவனத்தில் படமாக் கப்பட்டது. அற்புத அலங்காரத்தில் ஒயிலாக இருவரும் ஆட, அங்குள்ள நீரூற்றுக்கள் வண்ண நீர் பாய்ச்சி பின்னணியில் தோன்ற, மறக்கமுடியாத காட்சி அது!

சாந்தாராமின் கலையழகு இரசனை என்பது அவருடைய திரைப்படங்களின் ஒவ்வொரு அம்சத்திலும் படிந்திருக்கும். டைட்டில் காட்சி உட்பட. 'தோ ஆங்கேன் பாரா ஹாத்' படத்தின் டைட்டிலில் இரண்டு கண்களின் அண்மைக் காட்சியை காட்டிவிட்டு ஒவ்வொரு கையாக பன்னிரெண்டு கைகள் சுவற்றில் ஆழ்ந்த சாம்பல் வண்ணத்தை பாதிக்க, அதன் மீது எழுத்துக்கள் தோன்றும். 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' படத்தில் தரையில் ரங்கோலி ஓவியமாக டைட்டில் எழுத்துக்கள் தோன்றும். 'கீத் காயா பத்தரோனே' படத்தில் எல்லோரா குகைகளை ஒத்த ஒரு இடத்தில் பாறைகள் மீது வண்ண சாக்பீஸ்களால் எழுதி காதை வைத்து கேட்டால் ஏதோ அதிர்ஷ்டம் கிட்டும் என்று அங்குள்ள வழிகாட்டி சொல்வார். பயணிகள் அனைவரும் பாறையில் எழுத ஆரம் பிக்க டைட்டில்களும் சாக்பீஸ் எழுத்துக்களாக தோன்றும். 'நவரங்' திரைப்படத்தின் டைட்டில்கள் கருப்பு வெள்ளையில் ஆரம்பிக்கும். இயக்குநர் பெயர் வரும்போது சாந்தாராம் கறுப்புக் கண்ணாடி அணிந்து திரையில் தோன்றி பேச ஆரம் பிப்பார்.

'ஆங்கேன் பாரா ஹாத்' க்ளைமாக்ஸ் காட்சியில் காளை யுடன் மோதும்போது, அவர் கண்களில் அடிபட்டு பார்வை போய்விடும் அபாயம் நேர்ந்தது. தீவிர சிகிச்சைக்குப்பின் நலம் பெற்று கண்பார்வை திரும்பி 'நவரங்' திரைப்படத்தை இயக்கியிருப்பார். அதை திரையில் சொல்லி மகிழ்ந்தபின் 7 கருப்பு வெள்ளை பானைகளை காட்டுவார்கள். அவை கவிழ்ந்து ஒவ்வொரு பானையிலிருந்தும் வானவில்லின் ஒவ் வொரு வண்ணமும் கொட்டி நவரங் என்ற எழுத்தை வண்ண மயமாக்கும், திரைப்படமும் வண்ணத்தில் தொடரும்.

நவரங் 1959-ஆம் ஆண்டு வெளியானது. பெரும்பாலான அவ ரது படங்களில் நாயகனோ நாயகியோ கலைஞர்களாக இருப்பார்கள். இதில் நாயகன் ஒரு கவிஞன். எப்போதும் கற்பனை உலகில் மிதப்பவன். வீட்டுக்கவலை அறியாதவன். அவனது கற்பனையில் தோன்றிய அழகி மோஹினி. அப் படியே மனைவி ஜமுனாவைப் போலவே தோற்றம் கொண்ட வள் அந்த கற்பனைக்காதலி. அவன் மனைவி இதனாலேயே வெறுப்பில் இருக்கிறாள். சதா வீட்டுவேலையில் இருப்பதால்







பொலிவிழந்து நிற்கிறாள். ஆனாலும் ஒரு குழந்தை பிறக்கிறது. கவிஞன் அப்போதைய வெள்ளையர் ஆட்சியை தாக்கிப் பாடல்கள் இயற்றிப் பாடியதால் வேலையை இழக்கிறான். மனைவியும் பிரிந்து போய்விட, இவன் நடுரோட்டில். இவன் கற்பனைக்காதலி அவன் மனைவியேதான் என்பதை நமக்கு தெரிவித்து படம் முடிகிறது.

நவரங் திரைப்படத்தின் சிறப்பம்சம், சாந்தாராமின் படங்களில் எப்போதும் போல இடம்பெறும் அருமையான இசையும், பாடல் காட்சிகளும்தான். சிதல்கர் என்னும் புனைப்பெயருடைய சி. ராமசந்திராதான் இசையமைப்பாளர். தமிழிலும் வஞ்சிக்கோட்டை வாலிபன், பாட்டொன்று கேட்டேன் போன்ற திரைப்படங்களுக்கு இசையமைத்தவர் என்பது கூடுதல் தகவல். நாயகி சந்தியா என்னும்போது நடனக்காட்சிகளுக்கு பஞ்சம் ஏது. ஒரு ஹோலிப்பண்டிகை பாடல் காட்சி இன்று பார்த்தாலும் பிரமிப்பு தரும். ‘அரே ஜா ரே நட்கட்’ என்ற பாடலுக்கு சந்தியா, தனது முன் பக்கம் வழக்கமான ஒப்பனையுடனும், பின்பக்கம் ஒரு ஆண்மகனைப்போன்ற ஒப்பனையுடனும், ஒரே நேரத்தில் ஒரு ஆணும் பெண்ணும் போல மாறி மாறி ஆடுவதும், அவருடன் விநாயகரே யானையாக மாறி ஆடுவதும், இன்னொரு குதிரையும் ஆடுவதும் ஒரு அற்புத தருணம். இதே போல ‘ஆதா ஹை சந்திரமா’ என்ற பாடல் காட்சியில் தலையில் அடுக்கடுக்காக குடங்களை அடுக்கி நளினத்துடன் ஆடுவதும் மறக்க முடியா காட்சிகள். பாடகர் மகேந்திரபூர் இந்தப் படத்தில்தான் அறிமுகமானார். கவிஞனாக நடித்தவர் எம்.ஜி.ஆர் போன்ற தோற்றம் கொண்டவரும் சண்டைக்காட்சிகளில் பெயர் பெற்றவரும் ஆன மகிபால். அவருக்கு இது முற்றிலும் மாறுபட்ட வேடம்.

எம்.ஜி.ஆர் என்று சொல்லியதாலேயே இன்னொரு முக்கியமான விஷயத்தை சொல்லவேண்டும். பொதுமேடையில் எம்.ஜி.ஆர் இரண்டே மனிதர்கள் காலில் விழுந்து வணங்கியிருக்கிறார். அவர்கள் ஈ.வெ.ராவோ அண்ணாதுரையோ அல்ல, எம்.கே. ராதாவும் வி. சாந்தாராமும்தான் அந்த அற்புத மனிதர்கள்!



jeeva@thaiveedu.com





# வோல்றர் சலெசின் அரசியல் படங்கள் I am Still Here ஐ முன்வைத்து

ரதன்

**பிரேசிலின் இராணுவ ஆட்சி 1964–1985:**

1961 செப்ரம்பர் 8 பிரேசிலின் ஜனாதிபதியாக João Goulart பதவியேற்றார். இவர் இடதுசாரி கருத்தியலைக் கொண்டிருந்தார். இவரின் பின்னர் 2003-லேயே மற்றொரு இடதுசாரி அதிபரானார். இந்தத் தேர்தலில் இடதுசாரித் தலைவர் ஜோவ் குலாட் வெற்றி பெறக் கூடாது என்பதற்காக இவரை எதிர்த்த வலதுசாரிக் கும்பலுக்கு இரு புத்திஜீவி நிறுவனங்கள் நிதியளித்தன. ஆராய்ச்சி மற்றும் சமூக ஆய்வுகள் நிறுவனம் (IPES) மற்றும் பிரேசிலிய ஜனநாயக நடவடிக்கை நிறுவனம் IBAD. (the Institute of Research and Social Studies (IPES) and the Brazilian Institute for Democratic Action (IBAD) ஆகிய நிறுவனங்களே அவை. தென் அமெரிக்காவில் இடதுசாரிகள் ஆட்சி அமைக்கக் கூடாது என்பதற்காக ஜோன். எப். கெனடியின் உத்தரவின் பேரில் டேவிட் ராக்ஃபெல்லரின் உதவியுடன் இந்த நிறுவனங்கள் உருவாக்கப் பட்டன. இதற்கு அமெரிக்கத் தொழிலதிபர்கள் பெருமளவு நிதியளித்தனர். ஜோவ் குலாட் சீனாவுடனும் சோவியத் ஒன்றியத்துடனும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தினார். இவரை அப்போதய அமெரிக்க சட்ட அமைச்சர் ரொபெர்ட் கெனடி 'Brazilian Jimmy Hoffa' என அழைத்தார். ஜிம்மி கொபா அமெரிக்க தொழிற் சங்கத் தலைவராவார்.

பொதுவாகவே அமெரிக்கா மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் இடதுசாரித் தலைவர்களை வரவேற்பதில்லை. அதுவும் நாட்டின் ஜனாதிபதிகளின் மீது அமெரிக்காவிற்கு அச்சம் அதிகம். ஜோவ் குலாட் மீதும் அவர்கள் அச்சம் கொண்டனர். ஒப்ரேசன் பிறதர் சாம் (Operation Brother Sam) என்பது அமெரிக்காவின் பிரேசில் மீதான நடவடிக்கையாகும். இராணுவப் புரட்சிக்கான ஆயுதங்களை இத் திட்டம் மூலம் அமெரிக்கா குலாட் எதிர்ப்பாளர்களுக்கு வழங்கினார்கள். அமெரிக்க மொழியில் ரெஜீம் சேன்ச் என்பது இயல்பாகவே நடைபெற்றது. 1964 ஏப்ரல் முதலாம் நாளன்று இராணுவச் சதி மூலம் ஜோவ் குலாட்டை பதவியிலிருந்து அமெரிக்கா வெளியேற்றியது. இராணுவ அதிகாரி கஸ்ரலோ பிரான்கோ (Castelo Branco) ஜனாதிபதியாக பதவியேற்றார். 1985 இராணுவ ஆட்சி முடிவுக்கு வரும் வரை ஆறு இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதியாகப் பதவிவகித்துள்ளனர்.




(USAID) யுஎஸ்எயிட், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றினூடாகப் பிரேசில் பல கோடி நிதியுதவியைப் பெற்றது. 1964 - 1970 வரையிலான காலப்பகுதியில் அமெரிக்கா அதிகளவு நிதியைப் பிரேசிலுக்கே வழங்கியது.

வழமையான இராணுவ ஆட்சியில் நடைபெறுவது போல் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் கட்டுப் படுத்தப்பட்டன. பல்கலைக் கழகங்கள் கண்காணிக்கப் பட்டன. அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இராணுவ ஆட்சி எதிர்ப்பாளர்கள் காணாமல் போயினர். ஊடகங்கள் தணிக்கை செய்யப்பட்டன.

இக் காலகட்டத்தில் 434 அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் இருபதினாயிரம் பேர் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். லத்தீன் அமெரிக்க நாடுகளில் அதிக காலம் இராணுவ ஆட்சி இடம் பெற்ற நாடு பிரேசிலாகும்.

•

பிரேசில் போன்ற லத்தீன் அமெரிக்க மற்றும் மத்திய, வட-அமெரிக்க நாடுகள் முதலில் பூர்வீகக் குடிகளை அழித்து, அவர்களின் நிலத்தில் தோன்றிய நாடுகளாகும். நீண்ட காலமாக இந் நாடுகள் ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவ நாடுகளாகவேயிருந்துவந்தன. ஐரோப்பியரே பெருமளவாக இந் நாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் தங்களது தாய் மண்ணிலிருந்து சுதந்திரம் பெற்றவர்களாகவுள்ளனர். இவர்களிடம் இரு வித மனோபாவாங்கள் உள்ளன. ஒன்று பூர்வீகக் குடிகளுக்கு எதிரானது. இரண்டாவது தங்களது தாய் மண் ஆட்சியாளர்களுக்கு எதிரான காலனித்துவக் கருத்தியலுக்கு எதிரான கருத்தியல் என்பனவாகும்.

•

## Cinema Nova:

பிரேசிலின் இராணுவ ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், பிரேசிலின் சினிமா உலகில் ஒரு புதிய முறைச் சினிமா அறிமுகமாகியது. பிரென்ச் நியுவேவ் மற்றும் இத்தாலியின் நவயதார்த்தவாத சினிமா முறையை ஒத்த சினிமா நோவோ பிரேசிலில் அறிமுகமாகின்றது. வன்முறை என்பது பட்டினியால் வாடுவோருக்கு இயல்பான நடத்தை என்பதைச் சினிமா நோவா வெளிப்படுத்துகின்றது. சினிமா நோவோ வன்முறையின் அழகியல் பழமையானது அல்ல, புரட்சிகரமானது என்று கற்பிக்கிறது. வன்முறை தோன்றும் அந்தக் கணமானது, குடியேற்றவாசிகள் காலனித்துவத்தின் இருத்தலை உணர்ந்து கொள்ளும் கணமாகும். வன்முறையை குடியேற்றவாதி எதிர்கொள்ளும் பொழுதே சுரண்டலின் வலிமையையும், பயங்கரவாதத்தையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆயுதம் ஏந்தாதவரை குடியேற்றவாசிகள் அடிமையாகவேயிருப்பார்கள். பொதுவாகக் கூறுவார்கள் 'முதலாவது பொலிஸ் கொல்லப்பட்டபோதே, பிரான்ஸ், அல்ஜீரியர்களின் பலத்தைத் தெரிந்துகொண்டார்கள்'.

அறத்தின் அடிப்படையில் வன்முறை வெறுப்பால் நிறைந்ததல்ல. வன்முறை மீதான விருப்பு என்பது வன்முறையைப் போன்று கொடூரமானது. ஏனெனில் அது மனநிறைவு அல்லது சிந்தனையிலிருந்து உருவாகும் அன்பு அல்ல, மாறாக செயற்பாடு மற்றும் மாற்றத்தின் மீதான அன்பு.

சினிமா நோவோ என்பது நமது சிந்தனையை தெளிவுபடுத்தி, பசியின் பலவீனப்படுத்தும் மயக்கத்திலிருந்து நம்மை விடுவிக்கும் தொடர்ச்சியான ஆய்வுச் செயல்முறையாகும். பொருளாதாரச் சுரண்டல், கலாசார ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இருத்தல் அவசியம்.

மரபு ரீதியான படங்கள் வலதுசாரிப் படங்களாகவும், மக்களின் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய கவனம் எதுவுமின்றி கவர்ச்சியினையும் முதலீடு செய்து உருவாக்கப்பட்டன.

சினிமா நோவோ அல்லது புதிய சினிமா குறைந்த முதலீட்டில், புதிய நடிகர்களுடன் அல்லது தொழில்முறை நடிகர்கள் அல்லாதவர்களுடன் தயாரிக்கப்பட்டன. புத்திஜீவிகளும், கல்விமான்களும் இப் படங்களை வரவேற்றனர்.

நுகர்வுக் கலாசாரத்துக்கு எதிரான, பங்கேற்பு கலாசாரத்தை மாற்றீடு செய்தன புதிய சினிமா இயக்கப் படங்கள், வர்க்க முரண் நிலைகள், வறுமை போன்றவற்றின் பின்னால் உள்ள நுண்ணிய அரசியல் நிலைகளை இப் படங்கள் வெளிப்படுத்தின, அறிமுகப்படுத்தின.

இவ் இயக்க காலப்பகுதியை மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது 1960 - 1964-ற்குட்பட்ட காலம், இரண்டாவது 1964 - 1968-ற்குட்பட்ட காலம், மூன்றாவது 1968 - 1972-ற்குட்பட்ட காலம். முதலாவது காலப்பகுதியில் ஊழ்வலிக் கோட்பாடு, உள்ளொடுக்கவாதம் போன்றன எவ்வாறு தொழிலாளிகளைப் பாதிக்கின்றது என்பதனை இக் காலப் படங்கள் வெளிப்படுத்தின. பிரேசிலின் இருண்ட மூலைகளை இப் படங்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தன. விவரணத் திரைப்படப் பாணியை இப் படங்களில் காணலாம். திரைப்பட மொழியில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. கறுப்பு வெள்ளைப் படங்களே அதிகம் வெளிவந்தன. Deus e o Diabo na Terra do Sol (Black God, White Devil) இக் காலத்தில் வெளிவந்த முக்கிய படம். (இணையத்தில் பார்க்கலாம்).



1964-இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி João Goulart இராணுவ சதியால் வெளியேற்றப்படுகின்றார். எனவே இரண்டாவது காலப்பகுதியில் வெளிவந்த படங்கள் இராணுவ ஆட்சிக்கு எதிரானதாகவும், மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும் வெளிவந்தன. இக் காலத்தில் ஜனநாயகத்துக்கும், மனித உரிமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையால், மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளில் படைப்பாளிகள் கவனம் செலுத்தவில்லை. புத்திஜீவிகளும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. Leon Hirzshman-இன் Garota de Ipanema (Girl from Ipanema) இக் காலத்தில் வெளிவந்த மிக முக்கிய படம்.

1968-இன் பின்னர் வெளிவந்த படங்கள் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக உரிமைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், ஒடுக்கு முறைகள், அரச அத்துமீறல்கள் போன்ற அனைத்திலும் கவனம் செலுத்தின. பட்டினி என்பதனை ஒரு பொருளாதார வீழ்ச்சியின் அறிகுறியாக வெளிப்படுத்தாமல், அதனால் மக்கள் சந்திக்கப்போகும் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன சினிமா நோவோப் படங்கள். இது மற்றைய



















உலக படங்களிலிருந்து வேறுபடுகின்றது. இப் படங்கள் பிரேசிலின் பூர்வீக இசை மற்றும் கலாசாரப் பாரம்பரியங் களை வெளிப்படுத்தின. போர்த்துக்கீச நாவல்களை படமாக் கின. Vidas Sêcas (1963 எனும் படம் அதே பெயரில் 1938-இல் வெளிவந்த நாவலை மையமாகக் கொண்டது)

The Conspirators, Pindorama, How Tasty Was My Little Frenchman, Of Gods and the Undead, A Very Crazy Asylum, The Inheritors, Plantation Boy, The Priest and the Girl, Black God, White Devil போன்ற பல முக்கிய படங்கள் வெளி யாகியுள்ளன. இவற்றுள் பெரும்பாலான படங்களை இணை யத்தில் பார்க்கலாம்.

•

சினிமா நோவா அலையில் தோன்றிய முக்கியமான இயக்கு நர்களுள் ஒருவர் வோல்றர் சலெஸ் (Walter Salles). இவர் 1956-ஆம் ஆண்டு றியோவில் பிறந்தார். இவரது தந்தையார் வோல்றர் மொறியாரா சலெஸ் ஓர் அரசியல்வாதி, வங்கியிய லாளர். பிரேசிலின் வங்கி முறையில் பல சீர்திருத்தங்களை செய்திருந்தார். பிரேசில் வங்கி முறைகளின் தந்தை என்றும் குறிப்பிடலாம். முன்னாள் திறைசேரி அமைச்சர், முன்னாள் பிரேசிலின் அமெரிக்கத் தூதுவர். வோல்றர் சலெஸ் தனது இளமைக் காலத்தில் பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அமெரிக் காவில் வாழ்ந்தார். தனது பதினைந்தாவது வயதிலேயே பிரே சிலுக்குத் திரும்பினார்.



சலெசின் ஒரு சகோதரர் ஜோஆ விவரணத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர். மற்றைய சகோதரர் பெடரோ தந்தையைப் போன்றே வங்கியி யலாளர். வோல்றர் சலெஸ் தெற்குக் கலிபோர்னியா பல் கலைக்கழகத்தில் திரைப் படவியல் கற்றிருந்தார். ஆரம்பத்தில் விவரணத் திரைப் படங்களிலேயே அதிக ஆர்வம் கொண்டு பல விவரணத் திரைப் படங்களை இயக்கி யிருந்தார். பத்தாண்டு களுக்குப் பின்னரே திரைப்படங்கள் இயக்கத் தொடங்கினார்.

வோல்றர் சலெஸ் பல படங்களை இயக்கியிருந்தாலும் அவரது மூன்று படங்கள் குறிப்பிடத்தக்கவை. பலரும் இப் படங்களை அறிந்திருப்பார்கள். 1998-இல் இயக்கிய சென்றல் ஸ்ரேசன், 2004-இல் இயக்கிய 'மோர்ட்டர் சைக்கிள் டைய றீஸ்', 2012-இல் இயக்கிய 'ஒன் த றோட்' ஆகிய படங்கள் இவரது முக்கிய படங்களாகும். உலகெங்கும் உரையாடப் பட்ட, பார்க்கப்பட்ட படமான 'சிற்றி ஒவ் கொட்' படத்தின் தயாரிப்பாளரும் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சென்றல் ஸ்ரேசன்:

டோரா என்ற பெண், றியோ மத்திய புகையிரத நிலையம் முன் அமர்ந்து அங்கு வருவோருக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து சம்பாதிக்கின்றார். ஒரு நாள் ஒரு தாயும், மகனும் கடிதம் எழுத வருகின்றார்கள். கடிதம் எழுதிய பின்னர் ஏற்பட்ட விபத்தில் தாய் இறந்து விடுகின்றார். அனாதரவாக இருக்கும் மகன் அதே சென்றல் ஸ்ரேசனில் யாருமற்றுத் தனது வாழ்நாட்களைக் கழிக்கின்றான். அவனை முதலில் ஒரு சிறுவர் நிலையத்துக்கு டோரா விற்று விடுகின்றாள். பின்னர் ஏற்பட்ட மனமாற்றத்தால் அவனை அழைத்துக் கொண்டு அவனது தந்தையைத் தேடிப் பயணமாகின்றார்.

டோரா ஒரு வயதான தனிமையில் வாழும், கடினமான, அடிக் கடி மாற்றமடையும் குணம் கொண்ட பெண். அவரது முகத் தில் ஏமாற்றத்தின் சோகத்தைக் காணலாம். யாரோ ஒரு சிறு வனுடன், ஒரு நம்பிக்கையற்ற பயணத்தை மேற் கொள்கின்றார். நம்பிக்கையற்ற பயணம் நம்பிக் கையை டோராவிற்குக் கொடுக்கின்றது. சிறுவனின் தந்தையைத் தேடுவது, தனது தந்தையைத் தேடு வது போல் உணர்கின்றார். சிறுவனின் ஒன்று விட்ட சகோதரர்களைக் கண்டுபிடித்த பின்னர் ஒரு புதிய குடும்பம் சிறுவனுக்குக் கிடைக்கின்றது. டோரா தனது வாழ்வின் இருப்பிற்கான காரணத்தை உணர் கின்றார். நிறை உணர்வைப் பெறுகின்றார். படம் நம் பிக்கையின் குறிப்பில் முடிகின்றது. பிரேசில் மக் களும் நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள்.

வோல்றர் சலெஸ் நிலத்தை உருவகப்படுத்துவது இப் படத் தில் முக்கியமானது. மலையின் உச்சியில் சிறுவனும், டோர வும் நிற்கின்றனர். நிலம் மேலும் கீழும் நீண்டு பரந்ததாகவும், தனிமையாகவும் காட்சி யளிக்கின்றது. அது முழுமையானதாகவும், வளமான தாகவும் மாறுகின்றது. அர்த்தம், அமைதி, பாரம்ப ரியம், அழகு, நம்பிக்கையால் நிரம்பி வழிகின்றது.

## மோட்டர் சைக்கிள் டையரீஸ்:

வோல்றர் சலெசின் மிகவும் குறிப்பிடத்தக்க படம். தமிழில் இப்படம் பற்றிய பல பதிவுகள், கட்டுரைகள், ஆய்வுகள் வெளிவந்துள்ளன. சேகுவேராவின் குறிப்புக்களிலிருந்து (நூல்) இப் படத்தை இயக்கியுள்ளார் வோல்றர் சலெஸ். சேகுவேரா மருத்துவக் கல்லூரியில் படித்த காலத்தில் ஒரு வருடம் ஓய்வெடுத்துக் கொண்டு தனது நண்பனுடன் தென் அமெரிக்காவின் சில நாடுகளுக்குப் பயணிக்கின்றார். இவர் 1950-இல் 4500 கிலோ மீற்றர்கள் தென் அமெரிக்க நாடுகளிடையே பயணித்துள்ளார். 1951-இலும் இவ்வாறு பயணித்துள்ளார். இவரது நோக்கங்களில், பார்வைகளில் இப் பயணங்களே மாற்றங்களை ஏற்படுத்தின. சேகுவேரா என்ற உலகின் சிறந்த புரட்சியாளனை இப் பயணங்களே உலகிற்குக் கொடுத்தன. வோல்றர் சலெஸ் சேகுவேராவாகவே பயணித்துள்ளார்.

•

வோல்றர் சலெஸ் பதினைந்து வயதிருக்கும்பொழுது பிரேசிலுக்குத் திரும்பி றியோவில் வாழ்ந்தார். சலெசின் சக வகுப்பறைத் தோழி, றுபென்ஸ் பைவாவின் மகள். றுபென்ஸ் பைவாவின் வீட்டிற்கு அடிக்கடி சென்றுவருபவர். Ainda Estou Aqui போர்த்துக்கீஸ் மொழியில் எழுதப்பட்ட சுய வரலாறு. இதனை எழுதியவர் றுபென்ஸ் பைவாவின் மகன். 2015-ஆம் ஆண்டில் வெளிவந்த இந் நூலை வாசித்த பின்னர் வோல்றர் சலெஸ் இதனை திரைப்படமாக எடுக்க விரும்பினார். இதற்கு இவர் எடுத்த காலம் ஏழு வருடங்கள். ஏழு வருடங்களில் பிரேசிலில் பல அரசியல் மாற்றங்கள் நடைபெற்று முடிந்திருந்தது. இக் காலம் மற்றும் அரசியல் மாற்றங்கள் இப் படத்தின் அவசியத்தை வோல்றர் சலெசுக்கு ஏற்படுத்தின.

## யார் இந்த றுபென்ஸ் பைவா?

றுபென்ஸ் பைவா ஒரு பொறியியலாளர். இவர் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற காலங்களிலேயே பொது வாழ்க்கையில் தன்னை இணைத்துக்கொண்டார். ‘O petróleo é nosso’, ‘Oil is ours’ போன்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டார். 1946-இல் பிரேசிலின் எண்ணெய் வளத்தில் வெளிநாடுகளும் முதலீடு செய்யலாம் எனக் கொண்டுவரப்பட்டது. ‘எண்ணெய் (பெற்றோல்) எங்களுக்கானது’ என்ற அமைப்பு இதற்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டது. 1962-இல் பிரேசிலின் தொழிலாளர் கட்சியின் சார்பாக கொங்கிரசுக்கு தேர்வானார்.

அமெரிக்காவில் இருந்தது போல் அங்கும் ‘சிவப்பு அச்சம்’ (Red Scare) இருந்தது. 1962-ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்பாக நியூ யோர்க் ரைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு அமெரிக்காவின் அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தது. ‘எதிரிகள் தோற்கடிக்கப்படாவிட்டால், பிரேசில் கம்யூனிஸ்ட் கட்டுப்பாட்டின் கீழ் சறுக்கிச் செல்லும் அபாயத்தில் உள்ளது’ எதிரிகள் என்பது பிரேசிலின் தொழிலாளர் கட்சியையே குறித்துச் சொல்லப்பட்டது.



1964-இல் இராணுவ ஆட்சியேற்பட்ட பின்னர் றுபென்ஸ் பைவா உட்பட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். றுபென்ஸ் பைவாவும் யுகோசுலாவியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் சிறிது காலம் தங்கியிருந்தார். பின்னர் நாடு திரும்பிய றுபென்ஸ் பைவா தனது பொறியியலாளர் நிறுவனத்தை நடத்தி வந்தார். அத்துடன் அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். ‘ச பலோ’ மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பரப்பான மக்கள் மத்தியில் அதிகம் தெரியப்பட்ட சிவில் இன்ஜினியர். சிறந்த பேச்சாளர். ஜனாதிபதியின் கட்சியில் வளர்ந்து வரும் நட்சத்திரமாக உருவெடுத்தார். ஜூன் 1964-இல் ஒரு இரகசிய அமெரிக்க அறிக்கை, பைவாவை ‘இடதுசாரி தீவிரவாதி’ என்று கருத்து வெளியிட்டிருந்தது. நாடு சர்வாதிகார அடக்குமுறைக்குள் வெகு தீவிரமாகச் சென்றபோதும், றுபென்ஸ் பைவா அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருந்தார்.

றுபென்ஸ் பைவா குடும்பத்தின் துயரம் நிறைந்த வரலாற்றைத் திரைப்படமாக்க விரும்பினார். றுபென்ஸ் பைவாவின் துணைவியாரும், ஐந்து குழந்தைகளின் தாயாருமான யுனஸ் பைவாவினை மையப்படுத்தி அதேசமயம் பிரேசிலின் இராணுவ ஆட்சியின் கொடூரத்தை வெளிப்படுத்தி, அடுத்துவரும் சந்ததிகளுக்கு ஒரு பாடமாக்கவும் விரும்பினார். திரைப்படமாக்க எடுத்த ஏழு வருடங்களில், பிரேசிலின் நிலை இப் படத்தின் I'm Still Here-இன் அவசியத்தை வோல்றர் சலெசுக்கு வலியுறுத்தியது. இவ்வாறான படங்கள் பிரேசிலில் மட்டுமல்லாமல், உலகெங்கும் உரையாடலை ஏற்படுத்தியது. ஆர்ஜன்ரீனாவிலும் இராணுவ ஆட்சி நடைபெற்றுள்ளது (1976-1983). பல நாடுகள் இராணுவ ஆட்சிக்குட்பட்டிருந்தன. தற்பொழுதும் சில நாடுகள் இராணுவ ஆட்சியில் உள்ளன. ஆர்ஜன்ரீனா இராணுவ ஆட்சி பற்றி ‘ஆர்ஜன்ரீனா 1985’ திரைப்படம் பதிவு செய்துள்ளது.

1970-இல் கிறிஸ்மஸை ஒட்டிய நேரம். கடற்கரையோர பைவா வீடு - சூடான, இசை மற்றும் கலை நிறைந்த, திறந்த மற்றும் அழைக்கும் - எப்போதும் குடும்ப நண்பர்களால் நிரம்பியிருக்கும். வசிக்கும் பணிப்பெண்ணான ஜெஸே, குழந்தைகளுக்கு மூன்றாவது பெற்றோரைப் போன்றவர், வீட்டின் இணக்கமான குழப்பங்களுக்கு மத்தியில் அவர்களைத் தரையிறக்கிக் கவனித்துக்கொள்கிறார்.

றுபென்ஸ் பைவாவின் வீட்டில் எப்பொழுதும் மனிதர்கள் நிறைந்து காணப்படுவார்கள். நடனம், பாட்டு, அளவற்ற உணவு, அளவற்ற நட்பு அத்துடன் அளவற்ற அரசியலும் நிறைந்த வீடு. தெரு நாயையும், தங்களது வீட்டு நாயாக வளர்க்கும் அன்பு நிறைந்த குடும்பம்.

றுபென்ஸ் பைவா தனது பிள்ளைகளுடனும், துணைவியாருடனும் மிகவும் நெருக்கமான அன்பான உறவைப் பேணுகின்றார். தனது மகனுடன் இரவு பூஸ் போல் விளையாடுவது, இரவு உணவின் பின்னர் குடும்பத்தை ஐஸ்கிறீம் சாப்பிட அழைத்துச் செல்வது போன்ற காட்சிகள் றுபென்ஸ் பைவாவிற்கு குடும்பத்தின் மீதான பற்றுதலை வெளிப்படுத்துகின்றன. றுபென்ஸ் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், அவரது இரண்டாவது மகள், தனது சிறிய

தங்கையாரின் மடியில் தூங்குகின்றார். இது றுபென்ஸ் பைவா பிள்ளைகளுக்கிடையிலும் நல்லுறவையும், அன்பையும் ஏற்படுத்துவதன் அவசியத்தை அவர்களுக்கு ஊட்டியதை வெளிப்படுத்துகின்றது. அதே சமயம் இக் காட்சி மூலம் றுபென்ஸ் பைவாவின் குடும்பம் எவ்வாறான ஒரு இக்கட்டான மோசமான சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதனையும் வெளிப்படுத்துகின்றது. வோல்றர் சலிஸ் இப் படத்தை றுபென்ஸ் பைவாவின் துணைவியார் யூனஸ் பைவாவின் வாழ்க்கையினூடாகவே காட்சிப்படுத்துகின்றார்.

பிரேசில் இராணுவ ஆட்சியின் கொடூரத்துக்கு மாற்றம் பெறுவதை வோல்ரர் சலிஸ் றுபென்ஸ் பைவாவின் மூத்த மகள் வெளியில் சென்றுவிட்டு நண்பர்களுடன் திரும்பும் பொழுது, அவர்களை மறித்து, இராணுவம் சோதனை போடும் முறையிலிருந்து ஆரம்பிக்கின்றார். இராணுவமயமாக்கப்பட்ட சமூகத்தின் வெளிப்படையான அறிகுறிகளை யுனஸ் பைவா கவனிக்கும் ஒவ்வொரு முறையும் யுனஸ் பைவாவுக்கு ஒரு தெளிவான முன்னறிவிப்பு உள்ளது: வானத்தின் குறுக்கே ஹெலிகொப்டர் வெட்டுவது, தாழ்வாகப் பறக்கும் இராணுவ ஹெலிகொப்டர் பைவா குடும்பம் மணலில் ஓய்வெடுக்க முயற்சிக்கும்போது கடற்கரையைக் கடந்து வேகமாகச் செல்லும் துருப்புத் தொடரணி போன்றவற்றினூடாக வெளிப்படுத்துகின்றார். றுபன்ஸினுடைய நடவடிக்கைகள் பல புதிராகவேயுள்ளன. இரவு நேரத் தொலைபேசி அழைப்புகள், அவரது வீட்டு வாசலில் தோன்றும் ஆனால் அவரது வீட்டிற்குள் நுழையாத கண்ணுக்குத் தெரியாத நபர்களுடன் பரிமாறிக்கொள்ளப்பட்ட பார்சல்கள் மற்றும் நண்பர்களுடனான அமைதியான உரையாடல்களின் துண்டுகள் மூலம், அவர் தனது குடும்பத்திலிருந்து எதையோ மறைத்து வைத்திருப்பது தெளிவாகிறது.

1971-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் நாள் பிரேசிலின் தலைநகரம் வெப்ப அலைகளால் சூடாகிக்கொண்டிருந்தது. கடற்கரையைப் பார்த்தவண்ணமிருந்த வீட்டை, இரண்டு இரும்புக் கரங்கள் தட்டின. ஒரு சில நிமிடங்களின் பின்னர் வீட்டின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே புகுந்த இரும்புக் கரங்கள் கொண்ட மனிதர்கள் தங்களைப் பிரேசிலின் விமானப்படை அதிகாரிகள் என அடையாளப்படுத்திக்கொண்டனர். Rubens Beyrodt Paiva-ஐ சிறு விசாரணைக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக தெரிவித்தனர். றுபென்ஸ் பைவாவின் துணைவியார் 'எப்பொழுது திரும்பிவருவீர்கள்' எனக் கேட்டதற்கு மதிய உணவிற்கு வந்துவிடுவேன் எனப் பதலளித்துள்ளார். ஆனால் அவர் அதன் பின் திரும்பவில்லை. மறுநாள் றுபென்ஸ் பைவாவின் மனைவியும் அவரது பதினைந்து வயது மகளும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவர்களை அழைத்துச் சென்ற இடம் பிரேசிலின் இராணுவ ஆட்சியின் விசாரணைகளுக்கான சித்திரவதைக்



கூடம். றுபென்ஸ் பைவாவின் துணைவியார் 12 நாட்கள் விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். மகள் இரண்டு நாட்களின் பின்னர் விடுதலையானார். இராணுவ ஆட்சியின் பின்னர் நடைபெற்ற விசாரணைகளின் போது றுபென்ஸ் பைவா, கைது செய்யப்பட்ட மறுநாளே சித்திரவதைக்குள்ளாகி இறந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை றுபென்ஸ் பைவாவின் உடல் கண்டெடுக்கப்படவில்லை.

யூனிஸ் மகள் எலினாவும் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டனர். போலீஸ் காரின் பின் இருக்கையில், அவளும் எலியானாவும் அடர்ந்த இராணுவத் தளத்திற்கு வருவதற்கு முன்பு கருப்பு தலையை மூடிய அங்கிகளை அணியச் சொல்கிறார்கள். யூனிசிடம் றுபென்ஸ் பைவாவின் நெருக்கமானவர்களை அடையாளம் காட்டச்சொல்லி வற்புறுத்துகின்றார்கள். மகள் மறுநாள் விடுவிக்கப்பட்டார். ஆனால் யூனிஸ் பன்னிரண்டு நாட்களின் பின்னரே விடுவிக்கப்பட்டார்.

யூனிஸ் தனது குழந்தைகளை ஐஸ்கிரீம் சாப்பிட அழைத்துச் செல்லவிருக்கும் வேளையில், தனது கணவரின் மரணச் செய்தி அவளுக்குக் கிடைக்கிறது. தனது குழந்தைகள் இனிப்பு வகைகளை அனுபவிக்கும்போது, யூனிஸ் அங்கே சூழவிருந்த மற்றைய மகிழ்ச்சியான வாடிக்கையாளர்களைப் பார்த்து, தனது பழைய வாழ்க்கை போய்விட்டது என நினைக்கும் கணம் யூனிஸ் அமைதியான உறுதியைக் காட்டுகிறார், அதே நேரத்தில் தனது குழந்தைகளுக்காகத் தொடர்ந்து வாழவேண்டும் என்று யூனிஸ் உறுதி பூணுகிறார். யூனிசுடைய குடும்பம் இப்போது யூனிசைச் சார்ந்துள்ளது. இப் படத்தில் யூனிசாக Fernanda Torres மிகச் சிறப்பாக நடித்துள்ளார்.

யூனிஸிற்குத் திடீர்ப் பணச்சிக்கல் ஏற்படுகின்றது. வங்கியில் பணம் உள்ளது. ஆனால் அதனை எடுப்பதற்கு றுபென்ஸ் பைவாவின் கையொப்பம் தேவை. அல்லது அவர் இறந்துவிட்டார் என்ற மரணச் சான்றிதழ் தேவை. இக் கட்டத்தில் தமிழர்கள் உட்பட காணாமல் போனவர்களின் குடும்பங்களை நினைக்க வேண்டியுள்ளது. ஒரு சிறு காணித்துண்டு விற்பதானாலும் மரணச் சான்றிதழ் தேவை. ஒரு கட்டத்தில் இவர்களுக்குத் துணைவர் இறந்து போனார் அல்லது கொல்லப்பட்டுவிட்டார் என்பதனை விட அந்த மரணச் சான்றிதழே முக்கியமாகப்படுகின்றது. அண்மையில் ரொரன்ரோவில் இரு பெண்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒருவரின் கணவன் முள்ளிவாய்க்காலில் காணாமல் போனவர். இன்னமும் மரணம் உறுதிப்படுத்தப்படவில்லை. மற்றைய பெண்மணியின் கணவன் முகவர்கள் மூலம் கப்பலில் அவுஸ்திரேலியாவிற்குச் சென்றவர். பத்தொன்பது ஆண்டுகளாகத் திரும்பவில்லை. தொடர்புமில்லை. நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார்.

திடீரென ஏற்படும் சம்பவம் ஒரு குடும்பத்தை எவ்வாறு பாதிக்கின்றது. இறுதியாக யூனிஸ் தனது சொந்த ஊரான சபாலோவிற்கு செல்கிறார். அங்கு அவரது பெற்றோர் உள்ளனர். றியோவைத் தமது சொந்த நிலமாக நினைக்கும் றுபென்ஸ் பைவாவின் பிள்ளைகளுக்கு மோசமான உளவியல் சிக்கலை இது ஏற்படுத்துகின்றது. புலம்பெயரும் பொழுது பிள்ளைகளின் உளவியலை நாங்கள் கவனத்திற்கொள்வதில்லை. வோல்ரர் சலிஸ் ஒவ்வொரு கணத்தையும் மிகவும் நுணுக்கமாகச் சமூக அக்கறையுடன் வெளிப்படுத்துகின்றார்.

படம் 1996-இற்கு நகர்கிறது. இப்பொழுது யூனிஸ் பைவா, பிரேசிலின் பூர்விக விவகாரங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வெற்றிகரமான வழக்கறிஞர். உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகர். றுபென்ஸ் பைவாப் போல் காணாமல் போன பலரின் குடும்பத்துக்காகப் போராடு கின்றார். 1985-இல் முடிவடைந்த சர்வாதிகாரத்தால் அழிக் கப்பட்ட தனது கணவருக்கும் ஆயிரக்கணக்கான மற்றவர் களுக்கும் ஓரளவு நீதி கிடைக்க அயராது உழைத்தார்.

இறுதியாக 25 ஆண்டுகளின் பின்னர் யூனிஸ் பைவாவிற்கு ஒரு சான்றிதழைப் பிரேசில் அரசு வழங்கியது. அது அவரது காதல் கணவன் மற்றும் அவரது ஐந்து பிள்ளைகளின் தகப் பனான றுபென்ஸ் பைவாவின் மரணச் சான்றிதழாகும். படம் மீண்டும் 2014-இற்கு நகர்கிறது. இப்பொழுது யூனிஸ் பைவா ஒரு வயதான பாட்டி. யூனிசாக நடித்த Fernanda Torres தாய் Fernanda Montenegro நடித்துள்ளார். இவர் வோல்ரர் சலிசின் சென்ரல் ஸ்ரேசனில் டோராவாக நடித்துள்ளார். யூனிஸ் பைவா அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். தனது பேரப் பிள்ளைகள் சூழ வாழ்கின்றார். அவரது குடும்பம் மகிழ்ச்சியாகவுள்ளது. வீடு அமைதியாக நிறைவான மகிழ்ச்சி யுடன் காணப்படுகின்றது. ஒரு கதிரையில் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்தவாறு யூனிஸ் பைவா உள்ளார். தொலைக்காட்சியில் இராணுவ ஆட்சியில் நடைபெற்ற வன் முறைகளை விசாரிக்கும் தேசிய விசாரணைக் குழு தீவிர மாகச் செயற்படுவதாகவும், அதனை ஜனாதிபதி Dilma Rousseff மேற்பார்வை செய்வதாகவும் செய்தியாளர் குறிப்பிடு கின்றார். டில்மா ருசெப் முன்னால் கொரில்லாப் போராளி. COLINA பிரேசிலிய மார்க்சிய கொரில்லா அமைப்புடன் இணைந்து செயற்பட்டவர்.

2024-ஆம் ஆண்டு தனது குடும்பத்தின் சோதனையைப் பற்றிய ஒரு நேர்காணலில், றுபன்ஸ் மற்றும் யூனிஸின் ஒரே மகனும், திரைப்படத்தை அடிப்படையாகக் கொண்ட புத்த கத்தின் ஆசிரியருமான மார்செலோ றுபன்ஸ் பைவா, தனது தாயும் சகோதரியும் கைது செய்யப்பட்டதற்கான காரணம், றுபன்ஸ் அவர்களின் முன்னிலையில் சித்திரவதை செய்யப் பட வேண்டும் என்பதற்காகவோ அல்லது அவர்கள் துஷ்பிர யோகம் செய்யப்படுவதைப் பார்க்கும்படி கட்டாயப்படுத் தப்பட வேண்டும் என்பதற்காகவோ என்று கூறினார்.

றுபென்ஸ் பைவா எவ்வாறு கொல்லப்பட்டார் மற்றும் எப் போது கொல்லப்பட்டார் என்பதனை பிரேசிலில் இருந்த அமெரிக்க அதிகாரிகளுக்குத் தெரியும். அவர்களில் ஒரு வரது குறிப்பில் (1971 பெப்ரவரி 11) விசாரணையின் போது மாரடைப்பால் அல்லது வேறு காரணங்களால் இறந்திருக் கலாம் என எழுதப்பட்டுள்ளது. பிரேசிலிய அரசாங்கத்தின் அதிகாரபூர்வக் கதை என்னவென்றால், ஆயுதமேந்திய இடது சாரித் தோழர்களால் றுபன்ஸ் பாதுகாப்புப் படைகளிட மிருந்து எடுக்கப்பட்டு, பின்னர் போரில் கொல்லப்பட்டார்.

'கடந்த காலத்தில் நடைபெற்ற ஒரு அட்டூழியத்தை மீண்டும் சொல்கின்றோம் என நினைத்தே இப் படத்தை ஆரம்பித் தோம். ஆனால் அது நமது நிகழ்காலத்தின் பிரதிபலிப்பாக உள்ளது என்பதையும் நாங்கள் உணர்ந்துள்ளோம்' என இயக்குநர் வோல்ற்றர் சலிஸ் குறிப்பிட்டுள்ளார். 'என்ன நடந்தது என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். அந்தச் சக்திகளுக்கு எதிராகத் தள்ளுவதற்கு, மறதியைத் தவிர்க்க உதவும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் சினிமா இருக்க முடியும். நினைவாற்றல் இல்லாத நாடு எதிர்காலம் இல்லாத நாடு.

ஆனாலும் படம் Fernando Henrique Cardoso-வைக் குறிப் பிடத் தவறிவிட்டது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கோரிக்கைகளின் பேரில், சர்வாதிகாரத்தின் போது ஏற்பட்ட இறப்புகள், காணாமல் போதல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு அரசின் பொறுப்பை அதிகாரபூர்வமாக ஒப்புக் கொண்ட சட்டம் 9.140-ஐ கார்டோசோ ஆதரித்தார். கார்டோசோ 1995-2003 வரை பிரேசிலின் ஜனாதிபதியாகப் பதவிவகித்தவர். இவர் றுபென்ஸ் பைவாவின் நெருக்கமான நண்பர். றுபென்ஸ் பைவா 1962 தேர்தலில் வெற்றிபெற பல வழிகளில் உதவியவர். கார்டோசா அடிப்படையில் ஒரு பேரா சிரியர். இராணுவ ஆட்சியின் போது வெளிநாடுகளில் வாழ்ந் தவர். சட்டம் 9140 கையெழுத்து இடும் அல்லது உறுதிப்படுத் தப்படும் நிகழ்வின் போது 'றுபென்ஸ் பைவாவின் இறப்பால் இன்றுவரை நான் வேதனைப்படுகின்றேன்' என உரையாற்றி யிருந்தார்.

I'm Still Here 2024-ஆம் ஆண்டிற்கான சிறந்த வெளிநாட்டுத் திரைப்படமாக ஒஸ்கார் விருதைப் பெற்றது. அது மட்டுமல் லாமல் வெனிஸ் உட்பட பல திரைப்பட விழாக்களில் விருது களைப் பெற்றுள்ளது. 2024-ஆம் ஆண்டு ரொரன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட குறிப்பிடத் தக்க படமிது.

பிரேசிலின் இராணுவப் புரட்சியின் விளைவுகளைப் பற்றிப் பல படங்கள் வெளிவந்துள்ளன. இப்படம் எம்முடன் நெருக்க மானது. இன்றும் எமது மக்கள் மத்தியில் காணாமல் போன வர்கள் ஒரு மிக உக்கிரமான பிரச்சினையாகும். றிச்சட் டி சொய்சா, றுபென்ஸ் பைவா போன்றே அழைத்துச் செல்லப் பட்ட ஒரு பத்திரிகையாளர். இவர் ஹெலியிலிருந்து தூக்கி யெறியப்பட்டது போல் பிரேசிலிலும், ஆர்ஜன்ரீனாவிலும் நடைபெற்றுள்ளன. வெள்ளைக் கொடி காட்டிச் சென்றவர் களுக்கு என்ன நடந்தது என்பதனை உலகம் அறியும். இலங்கை அரசுகள் அதனை அறிவிக்க மறுக்கின்றன. காணாமல் போனவர்கள் பற்றிய தமிழ்ப் படைப்புக்கள் குறிப் பாகத் திரைப் படைப்புக்களில் இரஞ்ஜிற் யோசப் தவிர்ந்த மற்றைய படைப்பாளிகள் அதன் பின்னால் உள்ள நுண் அர சியலைப் பேசத் தயங்குகின்றார்கள்.

I'm Still Here மூலம் சலிஸ் ஒரு இராணவ அடக்குமுறை ஜன நாயகத்தைப் புதைத்து, மக்களின் சுதந்திரங்களைப் பறித்து செயற்படுகின்றது என்பதனைப் பதிவு செய்துள்ளார். ஒரு அர சாங்கம் அதன் குடிமக்கள் மீது போரை அறிவிக்கும் போது என்ன நடைபெறுகின்றது என்பதனை உறையவைக்கும் சித் திரமாக வெளிப்படுத்தியுள்ளார்.



rathan@thaiveedu.com

# நவீன உலகும் உறவுகளின் சிதைவும்
# அன்டோனியோனியின் இருத்தலியல் சினிமா

- சொர்ணவேல்

லா நோத்தே
(இரவின் மெல்லிசை, அன்டோனியோனி, 1961) :

இத்தாலிய நாவலாசிரியர் ஜியோவானி (மார்செல்லோ மாஸ்ட்ரோயானி), அவர் மனைவி லிடியா (ழான் மொரோ) - இவர்களின் மணவாழ்வு, மெல்ல மெல்ல இலையுதிர் காலம் போல் சிதைவுறும் சித்திரம் இது. மிலான் நகரின் ஒரு பகலும் இரவும் விரிய, தம்பதியினரின் அந்நியப்பட்ட இதயங்களையும், ஒருவருக்கொருவர் அற்றுப்போன உரையாடல் களையும், பொருள் வயப்பட்ட வாழ்வின் வெறுமை யையும் இப்படம் மௌனமாய் மொழிகிறது.

ஜியோவானியின் புத்தக கொண்டாட்டமாக பதிப்பா ளரால் அளிக்கப்படும் விருந்தில், ஜியோவானியின் பார்வை, அத்தொழிலதிபரின் மகள் வாலண்டினாவின் (மோனிகா விட்டி) மீது வசீகரம் கொள்கிறது. படம் நெடுகிலும், லிடியாவின் நினைவுகள், அவர்களின் வசந்த காலத்தை, ஜியோவானியுடனான உறவின் நிகழ்கால நிறமற்ற தன்மையையிலிருந்து மீட்டெடுக்க முயல்கின்றன. இரவு முழுதும் நீடித்த கொண்டாட்டம் முடிந்து பொழுது புலரும் வேளையில், தங்கள் உறவின் எஞ்சியிருக்கும் உணர்வுகளின் உறைநிலையை, இருவரும் எதிர்கொள்ளும் தருணம் கவித்துவமான ஒரு சோகத்தை இழையச் செய்கிறது.

லிடியா தன் கையிலிருக்கும் கடிதத்திலிருந்து வாசிக்கிறாள்:

“இன்று காலை நான் விழித்தபோது, நீயும் உறக்கத் தில்தான் ஆழ்ந்திருந்தாய். விழித்தெழுந்ததும், உன் மென்மூச்சின் கீதம் செவிகளில் விழுந்தது. அலைபாயும் குழல் கற்றைகளின் கீழே உன் மூடிய விழிகளைக் கண்டதும், என் நெஞ்சம் இளகியது. உன்னைக் கூவியழைத்து எழுப்பிட உள்ளம் தவித்தது, ஆனால் நீயோ அத்தனை ஆழமாய், அத்தனை அமைதியாய் உறங்கினாய். அந்த அரை இருள் சூழ்ந்த ஒளியில், உன் மேனி உயிர் ததும்ப, வெதுவெதுப்பாய், தேனாய் ஒளிர்ந்தது. அதனை முத்தமிட இதழ்கள் துடித்தன, ஆனால் உந்தன் துயில் கலைத்துவிடுவேனோ என்ற அச்சம் தடுத்தது. மீண்டும் என் கரவளைவினில் நீ விழித்தெழும் காட்சியை எதிர்கொள்ளவும் அஞ்சினேன்.





மாறாக, எவரும் என்னிடமிருந்து கவர்ந்து செல்ல இயலாத, எனக்கே உரியதான ஒன்றை நெஞ்சம் நாடியது... (அந்த அற்புத ஒளியில்) உனது இந்த முடிவிலா எழில் பிம்பத்தை. உன் வதனத்திற்கும் அப்பால், என் வாழ்நாள் முழுமையையும் - இனி வரும் ஆண்டுக ளையும், ஏன், கடந்துபோன காலங்களையும் கூட - காட்டும் ஒரு தூய, எழில்மிகு காட்சியைக் கண்டேன். அதுவே பேரற்புதம்: முதன் முறையாக நீ எக்காலமும் எனக்கே உரியவள் என்பதையும், இந்த இரவு, உன் வெம்மையோடும், உன் எண்ணத்தோடும், உன் சித்தத் தோடும் கலந்து, முடிவின்றி நீளும் என்பதையும் உணர்ந்தது.

அந்தக் கணத்தில்தான், லிடியா, உன்னை எந்த அளவு நான் நேசிக் கிறேன் என்பதை முழுவதுமாய் உணர்ந்தேன். அந்த உணர்வின் பெருக்கில் விம்மினேன், ஏனெனில் இது ஒருபோதும் முடிவுறலாகாது, நாம் என்றென்றும் இப்படியே நிலைத்திருப்போம் எனத் தோன்றியது; அருகாமையில் மட்டுமல்ல, பழக்கத்தின் சலிப்பொன்றைத் தவிர - அதுதானே பெரும் மிரட்டல் - வேறெந்த சக்தியாலும் சிதைக் கவியலாத ஓர் பிணைப்பில் ஒருவருக்கொருவர் உரியவர்களாய்.

பின்னர் நீ கண்விழித்தாய், புன்னகை பூத்தவளாய் என் தோள்களை வளைத்து, இதழ் பதித்தாய், அப்போது அச்சமென்பதே இல்லை என உணர்ந்தேன். காலத்தையும் பழக்கத்தையும் கடந்தெழும் வலிமைமிகு பாச இழைகளால் பிணைக்கப்பட்டு, அந்த நொடியில் நாம் இருந்தாற்போலவே எந்நாளும் இருப்போம்."

ஜியோவானி சிந்தனை வயப்பட்டவனாய் நெகிழ்ந்து அமர்ந்து செவிமடுக்கிறான்,



அவள் வாசித்து முடித்ததும், அவன் வினவுகிறான்:

"யார் எழுதியது ?"
ஒரு கணம் மௌனித்து நெஞ்சடைக்க அவள் பதிலுரைக்கிறாள்,

"நீங்கள்தான்."

[லாநோத்தேயில் மணமுறிவின் விளிம்பிலிருக்கும் லிடியா மற்றும் ஜியோவானியின், அவனது மாசற்ற கடந்த கால என்றும் தேயாத காதலுக்கான ஏக்கத்தை குறிக்கும் என்றும் மறக்க முடியாத இறுதிக் காட்சியிலிருந்து.]

## மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி : நவீன சினிமாவின் மௌன மொழி

*சலனத்தின் சகாப்தத்தில் ஒரு சலனமற்ற பார்வை*



மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி (1912–2007), போருக்குப் பிந்தைய ஐரோப்பிய சினிமாவின் வானில் பிரகாசித்த ஒரு தனித்து வமான நட்சத்திரம். நவீனத்துவத்தின் புதிரான பாதைகளிலும், மனித மனதின் ஆழமான தேடல்களிலும் தனது கேமராவைச் செலுத்தியவர். 'லாவென்டுரா' (1960), 'லா நோத்தே' (1961), 'லெக்லிஸே' (1962) போன்ற கருப்பு-வெள்ளைக் காவியங்களும், 'ரெட் டெசர்ட்' (1964) என்ற வண்ண ஓவியமும், 'ப்ளோ-அப்' (1966) எனும் ஆங்கில மொழி ஆக்கமும் அவரது திரைப்பய ணத்தின் மணிமகுடங்கள். இவை, ஆழமான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தும் படைப்பு களாகவும், தெளிவற்ற கதைப்போக்கினையும் வியக்கவைக்கும் காட்சி உத்திகளையும் கொண் டிருப்பதற்காகவும் பாராட்டப்படுகின்றன.

### *கதையாடல் வரைபடங்கள்:*



லா நோத்தே (La Notte - இரவு): இத்தாலிய நாவலாசிரியர் ஜியோவானி (மார்செல்லோ மாஸ்ட்ரோயானி) மற்றும் அவரது மனைவி லிடியா (ஜான் மொரோ) ஆகியோரின் திருமண வாழ்க்கை மெதுவாகச் சிதைவதை இப்படம் சித் தரிக்கிறது. மிலானில் ஒரு பகல் மற்றும் இரவு முழுவதும் நடைபெறும் இக்கதை, தம்பதியி னரின் அன்னியமாதல், ஒருவருக்கொருவர் தொடர்பில்லாத நிலை மற்றும் முதலாளித்துவ வாழ்க்கையின் வெறுமை ஆகியவற்றை ஆராய் கிறது. அவர்கள் ஒரு விருந்துக்குச் செல்கி றார்கள், அங்கு ஜியோவானி ஒரு தொழிலதி பரின் மகளான வாலண்டினாவினால் (மோனிகா விட்டி) ஈர்க்கப்படுகிறார். படம் முழுவதும், லிடியா தங்கள் கடந்த காலத்தைப் பற்றியும், ஜியோவானியுடனான தனது உறவின் தற்போதைய நிலையையும் எண்ணிப் பார்க் கிறாள். விடியற்காலையில், தங்கள் உறவில் எஞ்சியிருக்கும் உணர்வின்மையை அவர்கள் எதிர்கொள்கிறார்கள்.



லாவென்டுரா (L'Avventura - சாகசம்): சிசிலிக்கு அப்பால் ஒரு படகுப் பயணத்தின்போது அன்னா (லியா மசாரி) என்ற இளம் பெண் மர்மமான முறையில் காணாமல் போவதையும், அவளுடைய காதலன் சாண்ட்ரோ (கேப்ரியல் ஃபெர்செட்டி) மற்றும் அவளுடைய சிறந்த தோழி கிளாடியா (மோனிகா விட்டி) அவளைத் தேடுவதையும் இப்படம் பின்தொடர் கிறது. தேடல் தொடரும்போது, சாண்ட்ரோவிற்கும் கிளாடியாவிற்கும் இடையே ஓர் ஈர்ப்பு உருவாகிறது, இது அன்னாவின் மறைவதினால் ஏற்பட்ட துயரம் மற்றும் குற்ற உணர்ச்சியால் சிக்கலாகிறது. படம் அன்னாவின் தலைவிதியைத் தீர்க்காமல் விட்டுவிடு கிறது, மாறாக நவீன உறவுகளின் உணர்ச்சி ரீதியான வெறுமை, தொடர்பின்மை மற்றும் ஸ்திரமில்லாத சூழற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.



க்லிஸே(L'Eclisse - கிரகணம்): தனது காதலன் ரிக் கார்டோவைப் (பிரான்சிஸ்கோ ரபால்) பிரிந்த பிறகு, விட்டோரியா (மோனிகா விட்டி) என்ற இளம் மொழிபெ யர்ப்பாளர், துடிப்பான ஆனால் பொருள்முதல்வாத பங்குச் சந்தை தரகரான பியோரோவை (அலைன் டிலோன்) சந்திக்கிறார். ரோம் நகரின் நவீன கட்டடக்க லையின் நவினத்துவ அழகியல் பின்னணியில் அவர் களின் உறவு மெதுவாக மலர்கிறது. இருப்பினும், அவர்களின் காதல் ஆர்வங்களை மீறிய ஓர் ஆழமான இணைப்பு மற்றும் நீடித்த மகிழ்ச்சியைக் கண்டறி வதில் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் படம் ஆராய்கிறது. விட்டோரியா வாழ்க்கையின் பொருளையும் திருப்தியையும் தேடும் அதே வேளையில், பியோரோ பணம் மற்றும் உடைமை களில் அதிக கவனம் செலுத்துகிறார். அவர்களின் உறவு, அவர்களைச் சுற்றியுள்ள உலகின் நிச்சயமற்ற தன்மையையும் அந்நியமாதலையும் பிரதி பலிக்கிறது. படத்தின் இறுதிப் பகுதி கதாபாத்திரங்கள் இல்லாமல், அவர்கள் சந்தித்த இடங்களின் வெற்று காட்சிகளின் கோர்வையாக மலர்கிறது, இது அவர் களின் உறவின் மறைவையும் நவீன உலகில் மனிதத் தொடர்புகளின் நிலையற்ற தன்மையையும் குறிக்கிறது.



ரெட் டெசர்ட் (Red Desert - சிவப்பு பாலை நிலம்): ஜூலியானா (மோனிகா விட்டி), ஓர் இளம் தாய், தனது கணவர் யூகோ (கார்லோ சியோனெட்டி) பணிபுரியும் ராவென்னாவின் தொழில்துறை நிலப்பரப்பில் மன உளைச்சலுடன் போராடு கிறார். கடுமையான சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் இயந்திரமய மாக்கலுக்கு மத்தியில், ஜூலியானா தனிமையாகவும் பதட்டமா கவும் உணர்கிறாள். யூகோவின் நண்பரான கொராடோ (ரிச்சர்ட் ஹாரிஸ்) வந்தவுடன், ஜூலியானா அவரிடம் ஒரு குறுகிய கால உறவை வளர்த்துக் கொள்கிறாள், அது அவளுடைய ஆழ்ந்த கவலையைத் தணிக்கத் தவறுகிறது. இப்படம், நவீன தொழில்துறை சமூகத்தில் தனிநபரின் அந்நியமாதல், மனநலப் போராட்டம் மற்றும் சுற்றுச்சூழலின் தாக்கம் ஆகியவற்றை வண் ணங்களைப் பயன்படுத்தி உணர்ச்சிகரமான நிலப்பரப்புகளாக கட்டமைக்கிறது.



ப்ளோ-அப் (Blow-Up): 1960-களின் லண்டனில், தாமஸ் (டேவிட் ஹெமிங்ஸ்) என்ற வெற்றிகரமான நவநாகரிக புகைப் படக் கலைஞர், ஒரு பூங்காவில் காதலர்களின் ஜோடியை இரக சியமாகப் புகைப்படம் எடுக்கிறார். புகைப்படங்களைப் பெரி தாக்கிப் பார்க்கும்போது, அதில் அக்காதலர்களுக்கு பின்னால் ஒரு கொலை நடந்ததற்கான ஆதாரம் இருப்பதாக அவர் நம்பு கிறார். இந்த மர்மத்தை அவிழ்க்க அவர் எடுக்கும் முயற்சிகள், யதார்த்தம், மாயை மற்றும் பிம்பங்களின் நம்பகத்தன்மை பற்றிய கேள்விகளுக்கு அவரை இட்டுச் செல்கின்றன. படம் தனிநபரின் பார்வை, கலை மற்றும் அதில் பொதிந்திருக்கும் உண்மையை ஆராய்கிறது, அதே நேரத்தில் அக்காலகட் டத்தின் நிலையில்லாத லண்டனின் கலாசாரத்தையும் சட்டகப் படுத்துகிறது. தாமஸ் உண்மையை நெருங்குகையில், அது மேலும் நழுவிச் செல்கிறது, இறுதியில் எது நிஜம், எது கற்பனை என்ற தெளிவற்ற நிலையில் அவரை விட்டுவிடுகிறது.

## திரைப்படங்கள் முழுவதும் ஓடும் கருப்பொருள்கள்:



மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் இந்த ஐந்து திரைப் படங்களும், பெரும்பாலும் ஒரே கருப்பொருளின் தொகுப்பாகக் காணப்படுகின்றன, நவீன வாழ்க்கையின் சிக்கல்களையும், மனித இணைப்பு மற்றும் தனிப்பட்ட அடையாளத்தின் மீதான அதன் தாக்கத்தையும் அவை ஆராய்கின்றன. உறவுகளிலும் ஒட்டுமொத்த சமூகத்திலும் அந்நியமாதல் மற்றும் தொடர்பாடல் முறிவு ஆகியவை முக்கியமாக மீண்டும் மீண்டும் வரும் கருப் பொருளாகும். லா நோத்தேயில் திருமணச் சிதைவு மற்றும் லாவென்டுராவில் தீர்க்கப்படாத மர்மம் மற்றும் அதன் நீட்சியாக பற்றற்ற உறவு காரணமாக, பாத்திரங்கள் அடிக்கடி ஒருவருக் கொருவர் அர்த்தமுள்ள வகையில் தொடர்பு கொள்ளப் போராடு கின்றனர், இது உணர்ச்சி ரீதியான தனிமைப்படுத்தலுக்கும் வெறுமையின் இருண்ட உணர்விற்கும் வழிவகுக்கிறது. இந்த உணர்ச்சிகரமான வெறுமை பெரும்பாலும் லெக்லிஸே மற்றும் லா நோத்தேயில் உள்ள வளமிழந்த நகர்ப்புற சூழல்கள் முதல் ரெட் டெசர்ட்டின் மாசுபட்ட, மனிதாபிமானமற்ற தொழில்துறை பின்னணி வரை, பாத்திரங்களின் உள்ளிருக்கும் வெறுமையின் குறியீடாக விரிகிறது.



அன்டோனியோனி திறமையாகப் பயன்படுத்தும் இறுக்கமாக கட் டமைக்கப்பட்ட, நவீன அல்லது தொழில்மயமாக்கப்பட்ட நிலப்பரப்புகளால் அத்தகைய வெறுமை பிரதிபலிக்கப்படுகிறது. மேலும், உள்ளீடற்ற அல்லது அலட்சியமாக தோற்றம்தரும் உலகில் இருத்தலியல் கனதி மற்றும் உட்பொருளிற்கான தேடல் ஆகியவற்றின் தொடர்ச்சியாக அவரது ஆய்வு உள்ளது. ரெட் டெசர்ட்டில் ஜுலியானா மற்றும் லெக்லிஸேயில் விட்டோரியா போன்ற பாத்திரங்கள் ஒரு வரையறுக்கப்படாத மன உளைச்ச லுடனும் மேலும் உறுதிவாய்ந்த ஒன்றுக்கான ஏக்கத்துடனும் போராடுகின்றனர். மேலதிகமாக, அன்டோனியோனி பெரும் பாலும் தெளிவின்மை மற்றும் யதார்த்தத்தின் புரிந்துகொள்ள முடியாத தன்மையுடன் தீவிரமாக ஈடுபடுகிறார், குறிப்பாக ப்ளோ-அப்பில், கதாநாயகன் தனது புகைப்படங்கள் மூலம் சாத் தியமான குற்றவாளிகளை வெளிக்கொணரும் தேடலானது பதில்களை விட அதிகமான கேள்விகளுக்கு வழிவகுக்கிறது, மற்றும் லாவென்டுராவில், மைய மர்மம் தீர்க்கப்படாமல் உள்ளது, இது வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மைகளை எதிர் கொள்ள பார்வையாளர்களைக் கட்டாயப்படுத்துகிறது. இந்த திரைப்படங்கள் ஒட்டுமொத்தமாக பற்றின்மை, சிதறிய நோக்கம் மற்றும் உலகத்துடன் சவாலான ஈடுபாடு ஆகியவற்றால் குறிக் கப்பட்ட ஒரு நவீன மனநிலையின் சித்திரத்தை வரைகின்றன.

## அன்டோனியோனியின் சினிமா உலகிற்கான ஒரு திறவுகோல்:



அன்டோனியோனியின் சினிமா, அழகியல் எளிமை யாலும், கதைசொல்லலில் நிலவும் மர்மத்தாலும், வெளியையும் வண்ணத்தையும் ஓர் ஓவியனைப் போல் அவர் கையாண்ட விதத்தாலும் உடனடியாக வசீகரிக்கிறது. ஆயினும், இந்த அழகியல் திரைக்குப் பின்னே, அந்நியமாதல், இருத்தலியல் ஐயங்கள், நவீனத்துவத்தின் மீதான நுட்பமான விமர் சனங்கள், பூர்ஷ்வா சமூகத்தின் உள்ளீடற்ற தன்மை என ஆழமான அரசியல் மற்றும் தத்துவார்த்த நீரோட்டங்கள் மௌனமாக ஓடிக்கொண்டிருக் கின்றன. அவரது படங்கள், குறிப்பாக ‘லாவென்டுரா’ (1960), ‘லா நோத்தே’ (1961), மற்றும் ‘லெக்லிஸே’ (1962), நவீனத்துவமும் அதன் அதிருப்திகளும் பற்றிய முத்தொகுப்பு என விமர்சகர்களால் அழைக் கப்படுவது பொருத்தமானதே; அவை இருபதாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் இத்தாலியிலும், அதன் பின்னரும் சமகால வாழ்வின் நிலையற்ற தன்மையைப் படம்பிடிக்கின்றன.



மிக முக்கியமாக, அன்டோனியோனியின் கலையில் வடிவமும் உள்ளடக்கமும் பிரிக்கமுடியாதபடி பின் னிப்பிணைந்துள்ளன. அவரது தனித்துவமான திரைமொழி (நீண்ட காட்சிகள், நீள்வட்டக் கதை சொல்லல், மிஸ்-என்-சீன் எனும் காட்சி கட்டமைப்பு) அவரது படைப்புகளின் உள்ளடக்கத்தை ஆழமாக வடிவமைத்து, பிரதிபலிக்கிறது. இக்கட்டுரை, அன் டோனியோனியின் அழகியல் தரிசனத்தையும், அவரது படங்களின் அரசியல்-இருத்தலியல் உள்ளு ரையையும், உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமான உயிரோட்டமான உறவையும் அலசுகிறது. திரைப்பட விமர்சனங்கள், தத்துவார்த்த அணுகுமு றைகள், மற்றும் அவரது முக்கியப் படங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சான்றுகளின் துணையுடன், நவீன வாழ்வின் சிக்கலான புதிர்களை அவிழ்க்கும் அவரது சினிமா கதையாடல்கள் (அல்லது பெரும் பாலும், எதிர்-கதையாடல்கள்) எவ்வாறு அவரது முறையான அணுகுமுறையில் பொருள் பெறு கின்றன, ஆழமாகின்றன என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்தும். இதன் மூலம், அன்டோனி யோனியை சினிமாவின் தன்னிகரில்லா நவீனத்து வவாதி என்றும், அவரது கலை பார்வையாளனுக்கு பொருள்கோடலுக்கான வழியை திறந்துவிட்டு, இதுவரை பயணிக்காத பாதையில் செல்ல அழைக் கிறது என்றும் நாம் உணர்வோம்.

## நவீனத்துவத்தின் அழகியல் முகம்



பாரம்பரிய ஹாலிவுட் கதை சொல்லல் முறைகளிலிருந்தும், தனக்கு முந்தைய இத்தாலிய நியோரலிசத்தின் தாக்கங்களி லிருந்தும் முற்றிலும் விலகி, அன்டோனியோனி தனக்கென ஒரு தனித்துவமான அழகியல் பாணியை வார்த்தெடுத்தார். வழக்கமான, பரபரப்பான கதை நகர்வுகளைப் புறந்தள்ளி, சூழ்நிலை, காட்சி வடிவமைப்பு, மற்றும் அகவயமான உணர்வுகளுக்கு அவர் முன்னுரிமை அளித்தார். விமர்சகர் ஜேசன் ஆன்கெனி குறிப்பிடுவதுபோல, அன்டோனியோனியின் படைப்புகள் “செயலுக்குப் பதிலாக சிந்தனையையும், கதைக்கும் கதாபாத்திரங்களுக்கும் மேலாக உருவத்திற்கும் வடிவமைப் பிற்கும் முக்கியத்துவம் அளித்தன.” வேறுவிதமாகக் கூறினால், தெளிவான கதை நிகழ்வுகளை விட, மனநிலை, சூழல், மற்றும் வடிவத்திற்கே அவரது சினிமாவில் முதலிடம். அன்டோனியோனியின் பாணியை இரண்டு பிரிக்க முடியாத கூறுகளாகப் பிரிக்கலாம்: ஒன்று, காட்சி அமைப்பு (மிஸ்-என்-சீன், ஒளிப்பதிவு, இடம் மற்றும் வண்ணத்தின் பயன்பாடு); மற்றொன்று, கதை அமைப்பு (தெளிவின்மையும், மெதுவான நகர்வும்). இந்த அழகியல் தேர்வுகள் ஒன்றிணைந்து, புற உலகின் வடிவங்கள் மற்றும் அக உலகின் நிலைக ளையும், கருப்பொருள் சார்ந்த கருத்துகளையும் பிரதிபலிக்கும் ஒரு பிரத்யேக உலகில் பார்வையாளனை ஆழ்த்துகின்றன.

## அன்டோனியோனியின் பார்வையில் வெளியும் கட்டடக்கலையும்



அன்டோனியோனியின் பாணியில் மிகவும் தனித்துவ மானது, நவீன ஓவியங்களுடனும், கலைப்படைப்புக ளுடனும் ஒப்பிடத்தக்க அவரது பிரமிக்க வைக்கும் காட்சி அமைப்புகள்தாம். ஓவியக்கலையில் பயிற்சி பெற்றதும், கட்டடக்கலை வடிவமைப்பில் அவருக்கி ருந்த ஆழ்ந்த ஈடுபாடும், அவரது படங்களில் மிகக் கவனமாக உருவாக்கப்பட்ட சட்டகங்களில் (frames) வெளிப்பட்டன. பரந்த நிலப்பரப்புகளுக்கும், பிரம் மாண்டமான நவீன கட்டடங்களுக்கும் எதிராக சிறுத்துத் தோன்றும் மனித உருவங்களை அவர் தனது படங்களில் அடிக்கடி காட்சிப்படுத்தினார்; இது நவீன உலகில் மனி தர்களின் முக்கியத்துவமின்மையையும், அந்நியமாத லையும் காட்சிபூர்வமாக உணர்த்தியது.



ஸ்டீபன் டால்டன் கூறுவது போல, அன்டோனியோ னியின் தனித்துவத்தில் “மிக நீண்ட காட்சிகள், பிரமிப் பூட்டும் நவீன கட்டடக்கலை, மற்றும் வெற்று நிலப்ப ரப்புகளில் தனித்துவிடப்பட்ட சிறு மனித உருவங்கள்” அடங்கும். உதாரணமாக, ‘லாவென்டுரா’-வில், ஒரு கதாபாத்திரம் மர்மமான முறையில் காணாமல் போகும் தனிமையான ஏயோலியன் தீவு, ஒருவித அச்ச மூட்டும் பிரம்மாண்டத்துடன் படமாக்கப்பட் டுள்ளது - கரடுமுரடான பாறைகளும், முடிவற்ற கடலும் மனிதர்களைச் சிறுமைப் படுத்தி, தனிமை யையும் குழப்பத்தையும் உருவாக்குகின்றன.



‘லெக்லிஸே’-யில், அன்டோனியோனி ரோமின் நவீன மாவட் டத்தை, அதன் வடிவியல் கட்டடக்கலையுடனும், வெறிச்சோடிய தெருக்களுடனும் சித்தரிக்கிறார். அத்தகைய அழகியல் கதா பாத்திரங்கள் பெரும்பாலும் இந்தக் கடுமையான நகர்ப்புற பின் னணியில் சிறப்பற்றதாகத் தோன்றி, நவீனத்துவத்தின் அடையா ளமான வெறுமையையும், தனிமையான குழாம்களின் அவலத் தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ‘லா நோத்தே’ படமும் இதேபோல, மிலானின் வானுயர்ந்த கட்டடங்களையும், மனிதநே யமற்ற தெருக்களையும் ஒரு தம்பதியரின் திருமண வாழ்வில் ஏற்படும் அந்நியமாதலைச் சித்தரிக்கப் பயன்படுத்துகிறது; நக ரத்தின் நவீன கட்டடக்கலை அவர்களின் உணர்ச்சி ரீதியான தூரத்தையும் விலகலையும் பிரதிபலிக்கிறது.



அன்டோனியோனியின் கேமரா நுட்பங்கள் இந்த இடஞ்சார்ந்த மனநிலையை மேலும் வலுப்படுத்துகின்றன. அவர் தனது நீண்ட காட்சி களுக்காகவும், மிகக் குறைவான வெட்டுகளுக்காகவும் (cuts) புகழ் பெற்றவர். வேகமான படத்தொகுப்பிற்குப் பதிலாக, அன்டோனியோ னியின் கேமரா மெதுவாகச் சூழல்களைச் சுற்றி நகர்கிறது (panning or tracking) அல்லது நிகழ்வுகள் நிஜ நேரத்தில் நடக்கும்போது அது நிலையாக நிற்கிறது. இந்த மந்தகதி சட்டகத்திற்குள் உள்ள இடத்தை உன்னிப்பாகக் கவனிக்கப் பார்வையாளனை அழைக்கிறது. திரைப்பட வரலாற்றாசிரியர் வர்ஜீனியா வெக்ஸ்மேன் குறிப்பிடுவது போல, அன் டோனியோனி கதாபாத்திரங்கள் சட்டகத்தை விட்டுச் “சென்ற பிறகும் நீண்ட நேரம் காட்சியைத் தொடர்வதன் மூலம் நமது முழு கவனத் தையும் ஈர்க்கிறார்.”



‘ரெட் டெசர்ட்’டில் ஒரு குறியீட்டு காட்சியில், கதாநாயகி ஜூலியானா (மோனிகா விட்டி) ஒரு மூடுபனி சூழ்ந்த தொழில்துறை நிலப்பரப்பு வழியாக நடக்கிறார். சாம்பல் நிறத் தொழிற்சாலைகளும், நச்சு மஞ்சள் புகையும் கலந்த ஒரு மாய உலகினூடாக அவர் நகரும்போது, அன்டோனியோனி அந்தக் காட்சியை நீட்டிக்கிறார். இந்த நீண்ட காட்சி, பௌதிக இடத்தை மட்டுமல்ல, ஜூலியானாவின் அக மனதின் மூடுபனியையும் படம் பிடிக்கிறது; இது சுற்றுச்சூழலின் ஒடுக்குமுறைச் சூழ்கையையும் உள்வாங்க அனுமதிக்கிறது. முற்றிலும் மாறுபட்ட பாணியைக் கொண்ட இயக்குநரான ஆர்சன் வெல்ஸ், ஒருமுறை அன்டோனியோனி “யாராவது ஒரு சாலை வழியாக நடக்கும் ஒரு முழு காட்சியை” அளிக்கிறார் என்றும், பின்னர் அவர் “சென்ற பிறகும் நீங்கள் சாலையைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறீர்கள்” என்றும் அங்கலாய்த்ததாகக் கூறப்படுகிறது (வெல்ஸ் குறித்த குறிப்பு). வெல்ஸ் சலிப்பாகக் எண்ணியதை, அன்டோனியோனி அத்தியாவசியமானதாக நினைத்தார்: காலியான சட்டகம் (ஒரு கதாபாத்திரம் வெளியேறிய பிறகு ஒரு சாலை) அர்த்தத்தால் நிரம்பியுள்ளது; இது மனித நாடகம் முடிந்த பிறகும் தனிமை மற்றும் இல்லாமையின் நிலைத்தன்மையைச் சுட்டுகிறது. வெளியின் எதிர்மறையான இந்தத் தனித்துவமான பயன்பாடு, வாழ்வின் நீண்ட தருணங்கள் மறைந்து மறக்கப்படுவது மற்றும் தீர்க்கப்படாத விதி பற்றிய அன்டோனியோனியின் கருப்பொருள் ஆர்வத்தின் நீட்சியாகும்.



அன்டோனியோனியின் பிற்காலப் படைப்புகள், குறிப்பாக ‘ரெட் டெசர்ட்’ (1964) படத்திற்குப் பிறகு, வண்ணத்தை ஒரு ஓவியனைப் போல் அவர் கையாண்ட விதத்திற்காகப் பெரிதும் பேசப்படுகின்றன. அவரது முதல் வண்ணப்படமான ‘ரெட் டெசர்ட்’, அன்டோனியோனி வண்ணத்தை எவ்வாறு ஒரு வெளிப்படையான கருப்பொருளாகப் பயன்படுத்துகிறார் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இந்தப் படத்தில், வண்ணம் வேண்டுமென்றே இயற்கைக்கு மாறாக உள்ளது: தொழிற்சாலை குழாய்கள் ஒரு துடிப்பான சிவப்பு நிறத்தில் வரையப்பட்டுள்ளன; வானமும் நிலப்பரப்புகளும் நோய்வாய்ப்பட்ட சாம்பல் மற்றும் பச்சை நிறங்களில் வடிகட்டப்பட்டுள்ளன; மேலும் தொழில்துறை குப்பைகளின் ஒரு குவியலும் கூட விசித்திரமாக அழகாகவோ அல்லது வேற்றுலக நிலக்காட்சியை போலவோ தோற்றம் அளிக்கின்றன. இந்த காட்சித் தேர்வுகள், கதாநாயகியின் உளவியல் ரீதியான சீர்குலைவையும், தொழில்துறை காலத்தின் நச்சு அழகையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன. அன்டோனியோனியே ஒருமுறை, “உலகத்தின் கவிதையைப் (கேமரா மூலம்) பிடிக்க முயன்றேன், நவீன தொழிற்சாலைகளின் வெளிகளில் கூட” என்று கூறி, நவீன தொழில்துறை நிலப்பரப்பு அதன் சொந்த அழகியலைக் கொண்டுள்ளது என்பதை வலியுறுததினார்.



வண்ணங்களை உயர்த்துவதன் மூலமோ அல்லது அவற்றை வெளுக்கச் செய்வதன் மூலமோ, அவர் கதாபாத்திரங்களின் உள் கொந்தளிப்பை புறநிலையாக்குகிறார்: ஜூலியானாவின் அந்நியமாதல் உணர்வு, அவளைச் சுற்றியுள்ள உலகத்தால் பிரதிபலிக்கப்படுகிறது.



அந்த உலகம் ஒரே நேரத்தில் கவர்ச்சிகரமானதாகவும் அச்சுறுத்தும் வண்ணங்களாலும் ஆனது. விமர்சகர் ரோலண்ட் பார்த், அன்டோனியோனியை சினிமாவின் சிறந்த “ஓவியக் கலைஞர்” என்று குறிப்பிட்டார்; அவர் தனது படங்களின் மூலம் “சுருக்கங்களை/குறைவியத்தைப் பிரதிபலிக்கிறார்” (பார்த்). இதை நாம் ‘ரெட் டெசர்ட்’டில் மட்டுமல்ல, ‘ப்ளோ-அப்’ படத்திலும் காண்கிறோம்.



அது 1960-களின் லண்டனைக் குளிர்ச்சியான, நவீன வண்ணங்களில் சட்டகப்படுத்துகிறது - மாடல்களின் பிரகாசமான ஆடைகள், பூங்காவின் பசுமையான பச்சை-இவை கதாநாயகனின் உணர்ச்சித் துண்டிப்புடன் முரண்படுகின்றன. ‘ப்ளோ-அப்’பில், வண்ணம் மற்றும் பின்னணி வடிவமைப்பு (நவீன புகைப்பட ஸ்டுடியோ, பூங்காவின் மரங்களின் இலைகளுக்கு இடையே தெரியும் சூரிய ஒளி) ஒரு துடிப்பான சூழலை உருவாக்குகின்றன; ஆயினும் அவை விசித்திரமாக வெற்றுணர்வை தோற்றுவிக்கிறது; தோற்றங்கள் ஏமாற்றும் அல்லது நிலையான பொருளற்றவை என்ற படத்தின் கருப்பொருளை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தனது படைப்புகளில், அன்டோனியோனி கட்டடக்கலை, நிலப்பரப்புகள் மற்றும் வண்ணத்தை மனநிலை மற்றும் உருவகத்தின் கடத்திகளாக மாற்றினார்; கதையின் உணர்ச்சி மையத்தை வெளிப்படுத்துவதில் நடிகர்களைப் போலவே மிஸ்-என்-சீனையும் (காட்சிக்குள் அரங்கேற்றப்படும்/அடைக்கப்படும் அனைத்து பொருட்களையும்) இன்றியமையாததாக்கினார்.

## அன்டோனியோனியின் படங்களின் இலக்கற்ற அல்ல இலக்கை புறக்கணிக்கும் கதையாடலும், எளிமையும், நீள்வட்டப் பாதைகளும்



தனது காட்சி பாணிக்கு இணையாக, அன்டோனியோனி பாரம்பரிய கதை சொல்லல் முறைகளிலிருந்து விலகி, ஒரு சீரிய ஆயினும் மங்கலான கதையாடலை உருவாக்கினார். அவரது படங்களில் பெரும்பாலும் தெளிவான கதைத் தீர்வு அல்லது முடிவு இருப்பதில்லை; பல கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படாமல் விடப்படுகின்றன; தெளிவின்மையை ஒரு கொள்கையாகவே அவர் பின்பற்றுகிறார். பாரம்பரியக் கதைக்கான காரண-காரியங்களும், தீர்க்கமான முடிவுகளும் புறக்கணிக்கப்பட்டு, மனநிலைகளுக்கும், அகவய உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; காரண-விளைவு தர்க்கமும், நாடகத் திருப்புமுனைகளும் குறைக்கப்படுகின்றன அல்லது தவிர்க்கப்படுகின்றன; அதே வேளையில் "சும்மா" இருக்கும் தருணங்களும், நுட்பமான மனநிலைகளும் வலியுறுத்தப்படுகின்றன. அன்டோனியோனியின் கதைகள் பொதுவாக நீள்வட்டமாக இருக்கும் - அவை வெளிப்படையான தொடர்பு இல்லாமல் நிகழ்வுகளுக்கு இடையில் தாவலாம் அல்லது தேவையற்ற/தீர்க்கப்படாத கதைக் கூறுகளை அறிமுகப்படுத்தலாம்.



'லாவென்டூரா' இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு: ஒரு மர்மத்துடன் படம் தொடங்குகிறது (அன்னா என்ற பெண் ஒரு தீவில் காணாமல் போகிறார்), ஆனால் அந்தக் காணாமல் போதலுக்கு ஒருபோதும் தீர்வு வழங்கப்படுவதில்லை. அன்னாவிற்கான தேடல் படிப்படியாக மங்கி, காணாமல் போன பெண்ணின் விதியை விட, தேடுபவர்களின் (அன்னாவின் காதலன் சாண்ட்ரோ மற்றும் அவனது நண்பர் கிளாடியா) உணர்வுகளும், உறவுகளுமே கதையின் மையமாக மாறுகின்றன. இறுதியில், அன்னாவின் காணாமல் போனது கிட்டத்தட்ட மறக்கப்பட்டுவிடுகிறது - இது ஆரம்பத்தில் சில பார்வையாளர்களை விரக்தியடையச் செய்த ஒரு துணிச்சலான கதைத் தேர்வாகும்; ஆனால் இறுதியில் இது ஒரு நேர்த்தியான முடிச்சவிழும் கதைசொல்லலுக்கு பதிலாக, உணர்ச்சி மற்றும் இருத்தலியல் விளைவுகளைப்பற்றி பார்வையாளர்களை சிந்திக்க கட்டாயப்படுத்துகிறது.



இதேபோல், 'ப்ளோ-அப்' ஒரு வகையான துப்பறியும் கதையை முன்வைத்தாலும் (புகைப்படக்காரர் ஒருவர் தான் தற்செயலாக ஒரு கொலையைப் புகைப்படம் எடுத்திருக்கலாம் என்று நம்புகிறார்), படத்தின் முடிவு துப்பறியும் வகைமையின் மேலிருக்கும் பார்வையாளர் எதிர்பார்ப்பை அலட்சியம் செய்கிறது. புகைப்படக்காரர் தனது புகைப்படங்களை பெரிதாக்கும்போது, படம் சிறு புள்ளிகளின் கோர்வையாக சுருங்கி, அப்புகைப்படக்காரர் (என்லார்ஜ் செய்வதற்கு முன்) தான் எடுத்த படத்தின் பின்னணியில் சுட்டிய பிணம் மறைந்துவிடும். மேலதிகமாக, கண்ணுக்குத் தெரியாத பந்துடன் புதிரான பாவனைகள் நிறைந்த டென்னிஸ் போட்டியுடன் படம் முடிகிறது; இது "கொலை"-யின் யதார்த்தத்தை என்றென்றும் தெளிவற்றதாக விட்டுவிடுகிறது. இத்தகைய திறந்தநிலை கதைகள், டேவிட் போர்ட்வெல் கலை சினிமாவின் "நீள்வட்டம்" மற்றும் திறந்த தன்மையை பற்றிச் சொல்வதை எடுத்துக்காட்டுகின்றன; அன்டோனியோனி இத்தகைய மங்கலான முடிவுகளுக்கு முன்னோடியாக இருந்தார்: "மற்ற எந்த இயக்குநரையும் விட, அவர் நீள்வட்ட மற்றும் திறந்தநிலைக் கதையாடலை ஆராய ஊக்குவித்தார்" (போர்ட்வெல்). உண்மையில், அன்டோனியோனியின் செல்வாக்கு, இலக்கை நோக்கிச் செல்லும் நேர்த்தியான ஹாலிவுட் நேரியல் கதை சொல்லும் பாங்கிலிருந்து, பதில்களை விட கேள்விகளைக் கேட்கும் சினிமாவை நோக்கி கலை சினிமாவை நகரச் செய்தது.



அன்டோனியோனியின் படங்களின் லயமும், காட்சிகளின் அமைப்பும் இந்தத் தெளிவின்மைக்கு மேலும் மெருகூட்டுகின்றன. படங்கள் மெதுவாகவும், ஊழ்க நிலையிலும், அத்தியாயங்களாகப் பிரிந்தும் நகரும்; பெரும்பாலான நாடகங்களில் எதிர்பார்க்கப்படும் உந்துவிசை கொண்ட நிகழ்வுகள் இருப்பதில்லை. "இடமாற்றம் செய்யப்பட்ட நேரியல் அற்ற நிகழ்வுகள், மங்கலான உணர்வுகள், (காரண-காரியத்தை மீறிய) மனநிலைகள் மற்றும் (சிதறிய) எண்ணங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு தேக்கநிலையை உருவாக்குகிறது" என்று ஜேம்ஸ் பிரவுன், அன்டோனியோனியின் பாணியின் ஒரு பகுப்பாய்வில் கூறுகிறார். நீண்ட நேரத்திற்கு, கதாபாத்திரங்கள் அலைந்து திரிகின்றனர் அல்லது நீள்வட்டமாக உரையாடுகின்றனர்; மேலும் என்ன நடக்கிறது என்பதை விட என்ன நடக்கவில்லை என்பது முக்கியமாகிறது. 'லா நோத்தே'-யில், ஒரு திருமணமான தம்பதியர் (லிடியா [ழான் மொரோ] மற்றும் ஜியொவானி [மார்செல்லோ மாஸ்ட்ரோயானி]) ஒரு பகல் மற்றும் இரவு வெவ்வேறு சமூக அமைப்புகள்/வெளிகள் வழியாக அலைந்து திரிகின்றனர் - ஒரு மருத்துவமனை, இரவு விடுதி, பணக்கார நண்பரின் விருந்து, நகரத் தெருக்கள். அவர்களின் நீர்த்துப்போய்க் கொண்டிருக்கும் திருமணத்தின் மறைமுக சோகத்தை தவிர வழக்கமான நாடக நிகழ்வுகள் மிகக் குறைவாகவே உள்ளன.



உச்சக்கட்டம் ஓர் உரத்த மோதலினால் கைகூடுவதல்ல; மாறாக, அது உளச் சோர்வு மற்றும் வாழ்வின் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கும் ஓர் அமைதியான விடியல் காட்சியாக அமைகிறது. அன்டோனியோனி வேண்டுமென்றே பாரம்பரிய நாடகீய உச்சக்கட்டங்களைத் தவிர்க்கிறார். மோதல்கள் அல்லது திருப் புமுனைகள் ஏற்படும்போது, அவை குன்றிய நிலையில் அரங்கேற்றப்படுகின்றன அல்லது திரைக்கு வெளியே நிகழ்கின்றன. உதாரணமாக, 'லெக்லிஸ்'-ஸில், விட்டோரியா (மோனிகா விட்டி) மற்றும் பியரோ (அலைன் டெலான்) இடையேயான காதல் படம் முழுவதும் நுட்பமாக உருவாக்கப்பட்டுள்ளது; ஆனால் எதிர்பார்க்கப் படும் உச்சக்கட்டம்-அவர்கள் மீண்டும் சந்திக்கிறார்களா அல்லது விலகிச் செல்கி றார்களா -நேரடியாகக் காட்டப்படவில்லை.



அதற்கு பதிலாக, படத்தின் பிரபலமான முடிவில், காதலர்கள் சந்திக்க வேண்டியி ருந்த, பல வேளைகளில் சந்தித்த வெற்றுத் தெரு மூலைகள் மற்றும் அமைதியான அந்தி வானங்களின் தொடர்ச்சியான காட்சிகள் காட்டப்படுகின்றன; ஆனால் காத லர்கள் இருவரும் தோன்றுவதில்லை. இந்த துணிச்சலான காட்சிக்கோர்வைத் தேர்வு - இல்லாத கதாபாத்திரங்கள் மற்றும் நீண்ட சூழல்களின் ஒரு தொகுப்பில் முடிவ டைவது - தெளிவின்மை மற்றும் இல்லாமைக்கு அன்டோனியோனியின் அர்ப் பணிப்பை வெளிப்படுத்துகிறது. இது காட்சிகள் மீது "தொடர்பின்மையை வலியுறுத் துகிறது"; இது படத்தின் உணர்ச்சி உள்ளடக்கத்தை வரையறுக்கும் தவறவிட்ட இணைப்பு மற்றும் நிச்சயமற்ற தன்மையின் ஆழமான உணர்வைப் பார்வையாளர்க ளுக்கு அனுபவிக்க அனுமதிக்கிறது. திரைப்பட அறிஞர் சாம் ரோடி பார்வையில், அன்டோனியோனியின் படைப்புகள் "முழுமையின்மை மற்றும் அந்நியமாதல் சித்த ரிப்பில் முதல் உண்மையான நவீனத்துவ சினிமா" ஆகும். இந்த முடிவுகளின் வெளிப்படைத்தன்மை, பார்வையாளர்களைத் தீவிரமாக விளக்கமளிக்கவும், என்ன நடந்திருக்கலாம் என்று கற்பனை செய்யவும் அழைக்கிறது; இது "கலைப்பொருளின் பாதையைத் திறந்ததாகவும் தீர்மானிக்கப்படாததாகவும் விட்டுவிட வேண்டும்" என்ற அன்டோனியோனியின் அழகியலுடன் ஒத்துப்போகிறது.



மேலும், அன்டோனியோனி பெரும்பாலும் தனது கதைகளைக் கதை இயக்க வியலை விட கதாபாத்திர உளவியலை மையமாகக் கொண்டு முன்னெடுக்கிறார்; ஆயினும் அந்த உளவியலும் ஒரு சாய்ந்த, சிக்கன முறையில் வழங்கப்படுகிறது. அவரது கதா நாயகர்கள் பெரும்பாலும் இருத் தலியல் அலைச்சலில் இருக்கும் நடுத்தர மற்றும் உயர் வகுப்பு தனிநபர்கள் — பொருள் வசதி அதிகமாக இருந்தாலும், ஆன்மீக அல்லது உணர்வமைதி குறைவாக இருக்கும் மக்கள். அவர்கள் பெரும்பாலும் "தங்கள் சொந்த தனிப்பட்ட மர்மங்களைத் தீர்க்க இயலாதவர்கள்"; இது காணாமல் போவது, உறவு களைக் கைவிடுவது அல்லது செயலற்ற நிலைக்கு அடிப ணிவது போன்ற செயல்களுக்கு வழிவகுக்கிறது. அன்டோனியோ னியின் படங்களில் உரையாடல் குறைவாகவும், பெரும்பாலும் மர் மமாகவும் இருக்கும்; கதாபாத்தி ரங்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தப் போராடுகின் றனர்; இது சங்கடமான மௌனங்கள் அல்லது அவர் களின் அந்நியமாதலை மட்டுமே வலியுறுத்தும் அற்பமான சிறு வசனங்களில் முடிகிறது.

**அடுத்த இதழ்களில்...**

இந்தக் கட்டுரையின் முதல் பகுதி இத்துடன் முடிவடைகிறது.
அடுத்த இரண்டு பகுதிகள் தொடர்ந்து
ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத இதழ்களில் வெளியாகும்.



Swarnavel@thaiveedu.com

நாங்கள் எந்தக் கவலையும் இல்லாமல் பூமியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், இயற்கையை அர வணைத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். நாங்கள் உயிர் வாழ்வதற்குச் சூரியன் முக்கிய காரணமாக இருக்கின்றது. வெயில், மழை, காற்று, மலைகள், ஆறுகள், மரங்கள் என்று இயற்கை பல வசதிகளை எமக்குத் தந்திருந்தாலும் அவ்வப்போது பல அனர்த்தங்களையும் பூமியில் நாங்கள் சந்திக்க வேண்டி இருக்கின்றது. காலாகாலமாய் இவற்றை எல்லாம் நாங்கள் எதிர்கொண்டுதான் வாழ்ந்து வருகின்றோம்.

சில நெருப்பு நிலங்களில் நான் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தேன். ‘இந்த இடத்தில்தான் போன வருடம் திடீரென வெடித்தது’ என்று ஹவாய் வழிகாட்டி சொல்லும்வரை பயம் தெரியவில்லை. ஐஸ்லாந்தில் ‘வட அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் பிரிக்கும் டெக்டோனிக் தட்டுக்கள் இரண்டும் சந்திக்கும் இடத்தில் இப்போது நிற்கிறீர்கள், அவை மெல்ல முட்டிக் கொண்டால் அவ்வளவுதான்’ என்றார் அங்குள்ள வழிகாட்டி. பாம்பிக்குச் சென்றபோது, ‘இரவோடு இரவாக சாம்பலால் மூடப்பட்ட நகரம் இதுதான்’ என்றார்கள். சிசிலியிலும் இப்படித்தான் ‘எட்னா எந்த நேரமும் வெடிக்கலாம்’ என்று பயம் காட்டினார்கள். துணிச்சல் என்று ஒன்று இல்லாவிட்டால் மனிதனால் அடுத்த அடி கூட எடுத்து வைக்க முடியாது. காரணம் சமீபத்தில் 2-6-2025 எட்னா எரிமலை வெடித்தது நினைவிருக்கலாம். இது ஒன்றும் புதுமையானதல்ல, பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இது போன்ற நிகழ்வுகள் பூமியில் நடந்து கொண்டே இருக்கின்றது. நாங்கள் வசிக்கும் பூமிக்கு அடியில் நடுப்பகுதியில் தீக்குழம்பு எப்பொழுதும் கொதித்துக் கொண்டிருப்பது சிலருக்குத் தெரியாது. அவ்வப்போது பூமியின் மென்மையான பகுதிகளை உடைத்துக் கொண்டு எரிமலையாக அது வெடிக்கின்றது. அனேகமான எரிமலைகள் கடலுக்கு அடியில் உயிர்ப்புடன் இருப்பதால் நாங்கள் அதை அவதானிப்பதில்லை.

பூமியில் இன்று சுமார் 1500 எரிமலைகள் உயிர்ப்புடன் இருக்கின்றன. சமீப காலங்களில் சில எரிமலைகள் உறங்கிக் கொண்டிருப்பதால், இவற்றைச் சுற்றிப் பல கோடிக்கணக்கான மக்கள் இப்பொழுதும் வாழ்கிறார்கள். இந்த எரிமலைகள் பலமுறை வெடித்தது மட்டுமல்ல, பல அழிவுகளை ஏற்படுத்தி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவும் வாழ்கின்றன.

# நெருப்பு நிலங்களில் எனது பயணம்

## குரு அரவிந்தன்



அடிக்கடி பூகம்ப செயற்பாடு அல்லது குறிப்பிடத்தக்க புதிய வாயு உமிழ்வுகள் போன்ற அமைதியின்மையின் அறிகுறிகள்தான் ஓர் எரிமலை உயிர்ப்புடன் செயலில் இருப்பதை அடையாளப்படுத்துகின்றன. அனேகமான எரிமலைகள் பசிபிக் பெருங்கடலில் ‘நெருப்பு வளையம்’ என்று சொல்லப்படுகின்ற பகுதியில் காணப்படுகின்றன.

எரிமலை வெடிப்புகளை மூன்று வகையாக இனம் கண்டிருக்கிறார்கள். இதில் மாக்மா வெடிப்புகள் வாயு உற்பத்தியாலும், மற்றது நீராவியின் அதிக வெப்பத்தால் மூச்சு வெடிப்பாகவும் இருக்கிறது. இந்த வகை வெடிப்பு மாக்மா வெளியீட்டைக் காட்டாது, ஆனால் பாறையின் துகள்களை வெளியேற்றும். மூன்றாவது மூச்சு வெடிப்புகள் மாக்மா மற்றும் நீரின் நேரடித் தொடர்பு மூலம் இயக்கப்படுகின்றன, அங்கு உருவாகும் புதிய மாக்மா மேற்பரப்பை அடைவதில்லை.

நாங்கள் ஆற்றிலே தண்ணீர் ஓடுவதைத்தான் பார்த்திருக்கின்றோம், ஆனால் நெருப்புக் குழம்பு ஆறு போல ஓடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? சிலருக்கு அந்த அனுபவம் கிடைத்திருக்கின்றது, எனக்கும் அப்படிச் சில அனுபவங்கள் கிடைத்தன, அதைப் பற்றியும் சொல்லப் போகின்றேன். ஹவாய் தீவுகளுக்குச் சென்றபோது எனக்கு நெருப்புக் குழம்பு ஆறு போல ஓடுவதைப் பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலையான எட்னா எரிமலை கடந்த திங்கட்கிழமை ஜூன் மாதம் 2-ஆம் திகதி மதியம் போல மீண்டும் வெடித்ததாக இத்தாலியின் தேசிய புவி இயற்பியல் மற்றும் எரிமலையியல் எட்னா ஆய்வகம் தெரிவித்துள்ளது. எரிமலை வெடித்தபோது பல கிலோ மீட்டர் தூரத்திற்குக் கரும்புகையோடு கலந்த தூசிகளும் கற்களும் பறந்ததால், அங்கிருந்த சுற்றுலாப் பயணிகள் பயந்து போயிருந்தனர். எந்த நேரமும் விமானப் போக்குவரத்து தடைப்படலாம் என்ற பயத்தில் சில சுற்றுலாப் பயணிகள் சிசிலித் தீவைவிட்டு உடனே கிளம்பினார்கள்.

சென்ற வருடம் சுமார் 11,000 அடி உயரமான இந்த எட்னா எரிமலையைப் பார்ப்பதற்காக நான் அங்கு போயிருந்தேன். என்னைப் போலவே சுமார் 1.5 கோடி சுற்றுலாப் பயணிகள் வருடம் தோறும் அங்கு வருகிறார்கள். 2023-ஆம் ஆண்டு மே மாதம் கடைசியாக எட்னா எரிமலை வெடித்தாக நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் வரவேற்பாளர் குறிப்பிட்டிருந்தார். அப்போது அருகே உள்ள நகரமான கட்டானியா விமான நிலையத்தில் அதிக சாம்பல் தூசுகள் காணப்பட்டதன் காரணமாக விமானப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

நான் அங்கு நின்றபோது எட்னா எரிமலை எதுவுமே நடக்காதது போல, வெள்ளை நிறப்புகையை மட்டும் கக்கிக் கொண்டிருந்தது. உயிர்ப்புடன் இருக்கும் எரிமலை என்பதால் எந்த நேரமும் வெடிக்கலாம் எனச் சொன்னார்கள். ‘உங்களுக்குப் பயமாக இல்லையா?’ என்று மலையடிவாரத்தில் உள்ள உணவகத்தில் மதிய உணவு பரிமாறிய பெண்ணிடம் கேட்டபோது, ‘வேறு வழியில்லை, மழையோ, நெருப்போ எங்க மண்ணில்தான் வாழவேண்டும், இதெல்லாம் எங்களுக்குப் பழகிப்போச்சு’ என்று சிரித்துக் கொண்டே சொன்னது ஞாபகம் வந்தது.

இதற்கு முன் நான் இத்தாலியின் தெற்கே காம்பானியாவில் நேப்பிள்ஸ் என்ற இடத்தில் உள்ள சுமார் 4200 அடி உயரமுள்ள வெசுவியஸ் எரிமலையையும் சென்று பார்த்திருக்கின்றேன். அதைவிட இது இரண்டு மடங்கு பெரியது. வெசுவியஸ் எரிமலை வெடிப்பால் பொ.ஆ.பி. 79-இல் பாம்பி, ஹெர்குலேனியம் போன்ற சில கிராமங்கள் அப்படியே சாம்பலால் மூடப்பட்டன. இதில் அப் பகுதியில் வாழ்ந்த 1000 மேற்பட்டவர்கள் இறந்து போனார்கள். அந்த நாட்களில் முன்னெச்சரிக்கை செய்யும் தொழில்நுட்ப வசதிகள் இருக்கவில்லை. இரவு தூக்கத்தில் இருந்தவர்கள் அப்படியே சமாதியாகிவிட்டார்கள். ஒரே இரவில் அத்தனை மக்களும் சமாதியானதைக் கேட்டபோது அப்படியே ஒருகணம் உறைந்து விட்டேன்.

சாம்பலால் மூடப்பட்டிருந்த அந்தக் கிராமத்தை இதுவரை காலமும் அப்படியே கைவிட்டிருந்தார்கள். உடல்கள் சாம்பலால் மூடப்பட்டிருந்ததால் பழுதாகாமல் இருந்த அந்த உடல்களைச் சமீபத்தில் அப்படியே எடுத்து அங்கே காட்சிக்கு வைத்திருந்தார்கள். அந்தக் கிராமத்தையும் அப்படியே காட்சிப்படுத்தி இருந்ததால், அக்கால மக்கள் எப்படியான வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை அதிலிருந்து அறிய முடிந்தது. அக்காலத்தில் போக்குவரத்து வண்டிகள் இல்லாததால் அக்காலத்து வீதிகள் எல்லாம் நடைபாதை அளவாகவே இருந்தன.

ஜூன் மாதம் 1-ஆம் திகதி இரவு எட்னா எரிமலையில் நடுக்கங்கள் ஏற்பட்டதாகவும், தொடர்ந்து ஜூன் மாதம் 2-ஆம் திகதி வெடிப்பு ஏற்படத் தொடங்கியதாகவும் இத்தாலியின் புவி இயற்பியல் மற்றும் எரிமலையியல் தேசிய நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது. முதல் நாள் இரவே வெப்பத்தை அவதானிக்கும் கமெராக்கள் வெப்ப அதிகரிப்பை எச்சரிக்கை செய்த தாகவும் தெரிகின்றது. பொ.ஆ.மு 396, பொ.ஆ.மு 122 காலங்களில் இந்த எரிமலை பெரிதாக வெடித்தாக வரலாற்றுச் சான்றுகள் இருக்கிறன. 1669-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெடிப்பு இப்பகுதியில் உள்ள பல கிராமங்களை அழித்ததாகத் தெரிகின்றது.

கருமையான சாம்பல், வாயு மற்றும் பாறைத்துண்டுகள் இந்த எரிமலை வெடிப்பின்போது வெளியேற்றப்பட்டன. பைரோகிளாஸ்டிக் நகர்வு (Pyroclastic flow) என்று இதை ஆங்கிலத்தில் குறிப்பிடுகின்றார்கள். பாதுகாப்புக் கருதி எரிமலைப் பகுதிக்குச் செல்லும் அனேகமான பாதைகள் மூடப்பட்டிருந்தன.

எட்னா எரிமலை சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முந்தைய அடிக்கடி வெடிப்புகளின் வரலாற்றைக் கொண்டுள்ளது. பெப்ரவரி மாதம் நடந்த கடைசி பெரிய வெடிப்பின்போது, ‘புதிய வாய்’ என்று சொல்லப்படும் ‘போக்கா நுவோவா’ என்ற பள்ளத்திலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரம் வரை எரிமலைக் குழம்பு ஆறு போல் ஓடியது. இத்தாலியில் ஸ்டரோம்போலி எரிமலையும் உயிர்ப்புடன்தான் இருக்கின்றது.

எரிமலைக் குழம்பு ஓடுவதை அருகே சென்று பார்க்க விரும்புபவர்கள், எப்போது எங்கே வெடிக்கும் என்று காத்திருக்கத் தேவையில்லை. ஹவாய் தீவுகளுக்கோ அல்லது ஐஸ்லாந்து தீவுக்கோ சென்றால் எரிமலைக் குழம்பைப் பார்க்க முடியும்.



**உலகின் மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் பசிபிக் பெருங்கடலின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளில் அமைந்திருப்பதால், அப் பகுதி பசிபிக் நெருப்பு வளையம் (Pacific Ring of Fire) எனப்படுகின்றது.**

ஹவாய் எரிமலை தேசிய பூங்காவில் கிலாவியா மற்றும் மௌனா லோவா போன்ற முக்கியமான எரிமலைகள் இருக்கின்றன. சமீபத்தில் கிலாவியா வெடிப்பு டிசெம்பர் 2024-ஆம் ஆண்டு தொடங்கியது. தொடர்ந்து 24-வது தடவையாக சென்ற மே மாதம் 25-ஆம் திகதி மீண்டும் வெடித்தது. 2020-ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கிலாவியா வெடிப்பின் போது சுமார் 60,000 புவியதிர்வுகள் பதிவு செய்யப்பட்டன.

2021-ஆம் ஆண்டு அங்கு சென்றபோது அங்கே பாதுகாப்பு வேலி போட்டிருந்ததால் மிக அருகே செல்ல எங்களை அனுமதிக்கவில்லை, சற்று தூரத்தில் நின்றுதான் பார்க்க அனுமதித்தார்கள். அது ஒரு பெரிய கொதிக்கும் நெருப்புக் குழம்பு ஆறு போல ஓடியது. நாங்கள் ஹவாயில் இருந்து திரும்பிய மறுவாரம் எந்தப் பாதையால் நாங்கள் தேசிய பூங்காவுக்குச் சென்றோமோ அந்தப் பாதை ஓரிடத்தில் பெரிதாக இரண்டாகப் பிளந்து புகை கக்கிக்கொண்டிருந்தது.

இது போன்ற சில எரிமலை தேசியப் பூங்காக்கள் அமெரிக்காவிலும் இருக்கின்றன. வாசிங்டன் மாநிலத்தில் உள்ள மவுண்ட் ரெய்னர் (Mount Rainier), கலிபோர்னியாவில் உள்ள லாசென் சிகரம் (Lassen Peak), மற்றும் வயோமிங்கில் உள்ள யெல்லோஸ்டோன் கால்டெரா (Yellowstone Caldera) போன்ற உயிர்ப்புடன் உள்ள எரிமலைகளைக் கொண்ட பல தேசிய பூங்காக்கள் உள்ளன. அலாஸ்காவில் 11,000 அடி உயரமான ஸ்பார் எரிமலை 1953-ஆம், 1992-ஆம் ஆண்டுகளில் பெரிதாக வெடித்தது. இந்த எரிமலை ஆங்கரேஜ் தலைநகரில் இருந்து மேற்கே சுமார் 70 மைல் தூரத்தில் இருக்கின்றது. மலை அடிவாரத்திற்குச் சென்று பார்த்தேன், பனிப்படலம் காரணமாக மேலே ஏறிச் செல்வது கடினமாக இருந்ததால் தவிர்த்துக் கொண்டேன்.

ஐஸ்லாந்தில் பர்தர்புங்கா, ஹெல்கா, ஸ்வார்ட்செங்கி கட்லா போன்ற எரிமலைகளும் அடிக்கடி வெடிக்கின்றன. கெல்டிங்கடலூர் (Geldingadalur Valley) என்ற இடத்தில் 2021-ஆம் ஆண்டு எரிமலை பெரிதாக வெடித்தது. சுமார் 40,000 புவியதிர்வுகள் அப்போது அங்கே பதிவு செய்யப்பட்டன. தூசு மண்டலம் காரணமாக விமானப் போக்குவரத்து அப்பாதையில் ஒரு வாரமாகத் தடைப்பட்டிருந்தது. அங்கு சென்றபோது, புகைகளுக்கு நடுவே குழிகளுக்குள் கொதித்துக் கொண்டிருந்த எரிமலைக் குழம்பை மிக அருகே சென்று பார்க்க அனுமதித்தார்கள். அப்பகுதியில் இருந்து சல்பர் டை ஆக்சைடு வாயு நாற்றம் பரவியது. 'இதில் இருந்து வெளிவரும் புகை நுரையீரலைப் பாதிக்கலாம்' என்ற எச்சரிக்கைப் பதாகையும் அங்கே இருந்ததனால் அதிக நேரம் அங்கே செலவிடவில்லை.

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், பப்புவா நியூ கினியா, நிகரகுவா, குவாத்தமாலா போன்ற, சுமார் 40 நாடுகளில் உள்ள எரிமலைகள் உயிர்ப்புடன் இருப்பது மட்டுமல்ல, கடந்த சில மாதங்களில் வெடித்தும் இருக்கின்றன. குவாத்தமாலாவில் உள்ள பியூகோ எரிமலை யூன் மாதம் 4-ஆம் திகதி வெடித்தது. இந்தோனேசியாவில் மட்டும் 5 எரிமலைகள் மே மாதம் வெடித்திருந்தன. இது போன்ற பல எரிமலைகள் உலகெங்கும் உயிர்ப்புடன் இருக்கின்றன. இவற்றை எல்லாம் சென்று பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நேரே சென்று பார்த்ததில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன். அனேகமாக எல்லா எரிமலைகளும் ஒரே மாதிரியான செயற்பாடுகளைத்தான் கொண்டிருக்கின்றன. இப்பொழுதெல்லாம் நவீன தொழில்நுட்ப வசதிகள் காரணமாக ஓரளவு முற்கூட்டியே எரிமலை வெடிப்பை அறிந்து கொள்ள முடிகிறது. ஹவாயின் ஹிலோவில் உள்ள எரிமலை ஆய்வகத்திற்குச் சென்றபோது, இதைப்பற்றிய விளக்கங்களை செயல்முறை மூலம் விரிவாகச் செய்து காட்டினார்கள்.

உயிர்ப்புடன் இருக்கும் எரிமலைகளுக்குச் செல்வது ஆபத்தானதுதான், ஆனால் பூமித்தாயின் மாறுபட்ட சக்தியை அங்கேதான் நேரடியாகக் காணமுடிகின்றது. நெருப்புநிலப் பயணங்களின்போது கற்பனையில் கேள்விப்பட்டவற்றை நிஜமாகவே பார்த்ததில் மகிழ்ச்சியாகவும், அதே சமயம் எரிமலைகள் பற்றிப் பல புதிய விடயங்களை அறிந்து கொள்ளவும், இயற்கை பற்றிச் சிந்திக்கவும் முடிந்தது. இயற்கையை அணைத்து வாழ்வோம்!



kuruaravindan@thaiveedu.com



# இலங்கை முஸ்லிம்களுடைய கல்வி, சமூகவியல் பணிகளில் தேசபந்து அன்னை ஜெஸீமா இஸ்மாயிலின் வகிபாகம்

- இக்பால் அலி

இலங்கை முஸ்லிம் பெண்களுடைய கல்வியின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் ஒரு மகத்தான தோற்றுவாய் அன்னை ஜெஸீமா இஸ்மாயில் என்னும் நாமத்திலிருந்தும் ஊற்றெடுக்கிறது.

கொழும்பு தலைநகரில் சேர் ராசி பரீத் கல்விப் பணியின் மூலம் உதயமான கொழும்பு மகளிர் கல்லூரியின் உயர் நாமத்தை ஓங்கச் செய்த பெருமை ஜெஸீமா இஸ்மாயில் அவர்களுக்குரியது. ஒரு தசாப்த் காலங்களுக்கு மேல் இவர் அதிபராக அங்கு இருந்த காலம் இப்பாடசாலையின் வரலாறு மகத்தான பல வளர்ச்சிப் படிகளைக் கண்டுள்ளது. இந்த வகையில் ஜெஸீமா இஸ்மாயில் பற்றி முஸ்லிம் பெண்களுடைய கல்வி, சமூகவியல் வரலாற்றில் அடையாளமிட்டுக் காட்டக் கூடிய சில பக்கங்களை நோக்குவது சிறந்ததாகும்.

முஸ்லிம் பெண்களுடைய கல்வி எழுச்சியில் தனக்கெனத் தனித்துவமானதும் நவீனத்துவமிக்கதுமான பாணியில் தன் பணிகளை மேற்கொண்டவர். அரச உயர் பதவிகளை வகித்தபடி முஸ்லிம் பெண்களது கல்வி வளர்ச்சிக்கு உழைத்ததோடு சமூகப் பணிகள் பலவற்றைச் செய்தவர். தேசியரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் பல்வேறு அமைப்புக்களின் தலைமைப் பதவிகளையும் அரசின் உயர்பதவிகளையும் அவர் வகித்துள்ளார். 'சார்க்' (SAARC) நாடுகளின் பல்கலைக்கழகப் பெண்களுக்கு ஆரம்பகாலத் தலைவியாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு பெண் கல்வியலாளர், சமூக ஆர்வலர், மனித உரிமையியலாளர், மற்றும் ஆய்வாளர் எனப் பல்துறைகளிலும் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயலணி எனும் அமைப்பின் ஸ்தாபகராகவும் இருந்தவர். அதன் தலைவியாக இருந்து அவர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் மிகுந்த வசீகரத் தன்மை கொண்டிருக்கிறது. ஏனைய சமூகங்கள் அவரைப் போற்றுகின்ற அளவுக்கு அவரது சேவைகள் உச்சமாகவே தோன்றுகிறது.

இவர் நாட்டின் முக்கிய பிரச்சினைகள், இளைஞர் எழுச்சி, பெண் உரிமைகள், சமாதானம் மற்றும் ஜனநாயகம் ஆகியவைகளைப் பற்றி தேசியரீதியிலும் உலளாவிய ரீதியிலும் நடைபெற்ற மாநாடுகளில் உரையாற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் வேந்தராக நியமிக்கப்பட்டார். ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் சேவையின் கனதியைக் கண்ட மறைந்த அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் அப்பதவிக்கு அவரைப் பரிந்துரை செய்திருந்தார். திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகிய உயர் நிறுவனங்களில் பணிப்பாளர்சபை உறுப்பினராகவும் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். இப்படி கல்வி, சட்டம், ஊடகம் முதலிய துறைகளில் உயர் மட்ட முடிவுகளையும், தீர்மானங்களையும் ஆலோசனைகளை எடுப்பதற்கும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார். அவர் வகித்த உயர் பதவிகளும், சமூகப் பணிகளில் கொண்ட ஈடுபாடும் இவரைத் தலைசிறந்த ஆளுமைமிக்க ஒருவராக உருவாக்கம் பெறவைத்தன.

கல்வி மற்றும் அதன் செயன்முறை சார்ந்த விடயங்கள், கல்வி மூலத் தத்துவங்கள், கல்விச் சமூகவியல் ஆகிய விடயங்களும் ஒருங்கே பொதிந்துள்ள ஆசிரியர் அதிபர் அனுபவங்களை அவர் இளம் வயதிலேயே பெற்றுக் கொண்டார். குறிப்பாக முஸ்லிம் பெண்கள் பாடசாலைகளில் தகுதி வாய்ந்த அதிபர்கள் அரிதான காலகட்டத்தில் ஆசிரிய வாண்மைத்துவத்தை உரியவாறு விருத்தி செய்து கொண்டு, பாடசாலையின் அதிபர் என்கின்ற நிர்வாகத் துறையிலும் திறன்களைப் பெற்றுக் கொண்ட ஜெஸீமா

இஸ்மாயில் அவர்கள் கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலம் பொற்காலம் எனலாம். அப்பாடசாலை மாணவிகளுடைய கல்வி மேலெழுச்சிக்கும், பாடசாலையின் பௌதிக வள அபி விருத்திக்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதற்கும் பாட சாலையில் தூர நோக்குடைய மாற்றங்கள் இவரால் ஏற்படுத் தப்பட்டன. இதனால் இவர் முஸ்லிம் அதிபர் சமூகத்தின் மத்தியில் சிறந்த முன்மாதிரி பெண்ணாகத் திகழ்ந்தார்.

ஜெஸீமா இஸ்மாயில் 1935-ஆம் ஆண்டு அம்பாறை மாவட் டத்தில் கல்முனை பிரதேசத்தில் இருந்து சுமார் இரண்டரை மைல் தொலைவில் அமைந்துள்ள சாய்ந்தமருது என்ற கிரா மத்தில் பிறந்தார். சாய்ந்தமருது டாக்டர் முஹம்மது இப்றாஹீம் காரியப்பரின் பேத்தியாவார். ஜெஸீமா இஸ்மாயில் சாய்ந்தமருதுவில் பழம்பெருமைமிக்க குடும்பப் பின்ன ணியைக் கொண்டவர்.

இவர் தந்தை நீர்ப்பாசன திணைக்களத்தின் பிரதிப் பணிப் பாளர் பொறியியலாளர் எம். டி. எஸ். அஹமட் என்பவராவார். இவர் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் கல்வி கற்றவர். அக் கறைப்பற்று ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவர் அவர்களின் புதல்வர். ஜெஸீமா இஸ்மாயில் அவர் களின் தாயார் பெயர் பார்ளீன். அவர் கல்முனை எம். எஸ். காரியப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர். எம். எஸ். காரியப்பரின் தங்கை ஆவார். அவர் ஆரம்பக் கல்வியைக் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியிலும், மட்டக்களப்பு வின்சன் கல் லூரியிலும் கொழும்பிலுள்ள பிரபல்யமான பாடசாலையான சென் பிரிஜ்ஜஸ் கொன்வன்டிலும் கல்வி கற்றவர். அக்கல்லூ ரியின் மாணவிகளின் தலைவிகளின் ஒருவராகவும் இருந் துள்ளார். ஜெஸிமா இஸ்மாயில் இலங்கைப் பல்கலைகழ கத்தில் 1955-ஆம் ஆண்டு தனது 20-வது வயதில் பட்டம் பெற்றார். இவர் அன்பாகவும் பண்பாகவும் பழகக் கூடியவர்.

அவர் 1955-ஆம் ஆண்டு பட்டம் பெற்றபின் கல்வியியல் துறையிலும் மனித உரிமை திணைக்களத்திலும் பணிபு ரிந்தார். 1957-இல் தேவி பாலிகா வித்தியாலயத்தின் அதிபர் கலாநிதி விமலா டி சில்வா அவர்களின் வழிகாட்டலின் கீழ் கடமையாற்றினார். 1944 - 1966 கால கட்டத்தில் தன் துணை வருடன் கனடா சென்ற வேளையில் 'மெக்கில்' பல்கலைக்கழ கத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றார். அதேவேளையில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை 1971 - 1972-களில் அவுஸ்ரேலியா சிட்னி பல்கலைகழகத்தில் நிறைவு செய்தார்.

ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள், வைத்தியத் துறையில் புகழ் பெற்ற பேராசிரியர் மஹ்ரூப் இஸ்மாயில் அவர்களைத் திருமணம் செய்தார். இவர் கண்டியில் நகரில் அமைந்துள்ள மணிக் கூட்டுக் கோபுரத்தை நிர்மாணித்துக் கொடுத்த எம். இஸ்மாயில் அவர்களின் புதல்வராவார். இலங்கைப் பாராளு மன்றத்தின் முதலாவது படைக்கலச் செவிதரான எம். இஸ்மா யிலின் ஐந்து ஆண் மக்களுள் ஒருவர்தான் ஜெஸிமா இஸ்மா யிலின் கணவர். கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர். ஆதலால் திருமணத்திற்குப் பிறகு அவர் தன் கணவருடன் மேல் படிப்புக்காக பல உலக நாடுக ளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இருவருக்கும் வெளி நாட்டுப் புலமைப் பரிசில்கள் அதிகம் கிடைத்தன. அவர் கணவர் பேராசிரியர் மஹ்ரூப் இஸ்மாயீல் மருத்துவக் கல்வியில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயர் பதவியை வகித்தவர். அவர் இறுதியாக கொழும்பு மருத்துவ பீடத்தின் பீடாதிபதி யாகக் கடமையாற்றியவர். பேராசிரியர் மஹ்ரூப் இஸ்மாயில் 13 ஜுன் 2016-இல் தனது 85-ஆம் வயதில் காலமானார்.

ஜெஸீமா இஸ்மாயில் இனிமையாகப் பாடும் வல்லமை கொண்டவராவார். தமிழ், ஹிந்தி, சிங்கள ஆகிய மொழி களில் நன்கு பாடக் கூடியவர். பரத நாட்டியம் நடனக் கலையில் மிகவும் நாட்டம் மிக்கவர். அதேபோல் மணிப்புரி நடனமும் நன்கு ஆடக் கூடியவர். நுண்கலை என்பது ஜெஸீமா இஸ்மாயிலின் உணர்வோடு இரண்டறக் கலந்து இருந்தது. அவர் தந்தை மகாவலி நீர்ப்பான திணைக்க ளத்தில் உயர் பதவி வகித்தவர். ஆதலால் நீர்ப்பாசனம் தொடர்பிலான பாடலை சிங்களத்திலும் தமிழிலும் பாடுவ தற்கு ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். அச்சமயம் அவர் தந்தையே அவரிடம் சிங்களத்தில் பாட முடியுமா? என்று கேட்டபோது அதற்கு இணக்கம் தெரிவித்து, அவர் எழுதிக் கொடுத்த பாடலை மிக இனிமையாகப் பாடிப் பெரும் புகழை ஈட்டினார். அதிலுள்ள ஆர்வத்தின் காரணமாக மாணவிகள் மத்தியில் இஸ்லாமிய கலை, நுண்கலை, கலாசாரம்சங் களில் ஆற்றலை வளர்ப்பதில் தான் பாடசாலையின் அதிபராக இருந்த கால கட்டத்தில் உற்சாகத்துடன் இயங்கி யவர். இப்பொழுது தனது 90 வயதிலும் கூட அப்பாடலை பாடிக் காட்டி எம்மை அதிசயிக்கச் செய்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அக்கால கட்டத்தில் அவர் தந்தை ஜெஸீமாவைப் பார்த்து எதிர்காலத்தில் எத்தகைய இலக்கை அடைய ஆசைப்படு கின்றீர்கள் என்று கேட்டபோது அவர் சினிமாத் துறையில் பிர வேசிக்கப் போகின்றேன் என்று கூறியுள்ளார். அப்பொழுது அவர் தந்தைக்கு ஏற்பட்ட கோபம் அளவிட முடியாதது. உடனே அவர் தந்தை வாங்கிக் கொடுத்த இசைக் கருவிகள் எல்லாவற்றையும் தாயிடம் எடுத்து வரச் சொல்லி இனிமேல் பாட்டும் கூத்தும் போடத் தேவை இல்லை என்று கூறி அனைத்து இசைக் கருவிகளையும் தூக்கி வீசி எறிந்து விட்டார்.

அதன் பிறகு மறுநாள் அவர் தந்தை புனித தேவி பாலிகா பாடசாலையின் அதிபர் கலாநிதி விமலா டி சில்வா அவர்க ளிடம் அழைத்துச் சென்றார். தன் மகளை ஒரு சிறந்த ஆசிரி யராக பயிற்சியளித்து உருவாக்கித் தர வேண்டும் என்று கூறி அவரிடம் ஒப்படைத்து விட்டு வந்தார்.

ஆனாலும் அப்பொழுது ஜெஸீமா இஸ்மாயிலுக்கு ஆசிரியர் பணி என்றால் மிக கசப்பான விடயமாக இருந்தது. அந்த அதிபர் விமலா டி சில்வா அவர்கள் முதல் வகுப்பொன்றை வழங்கியிருந்தார். அவர் முதல் நாளும் இரண்டாம் நாளும் செல்லவில்லை. அவர் மூன்றாம் நாள் சென்று படிப்பித்தார். 'டெபடிஸ்' என்ற அங்கில கவிதை ஒன்றை எடுத்துப் படிப் பித்துக் காட்டி அதே போன்று நடித்தும் காட்டினார். பிள்ளைகள் மிகுந்த ஆர்வத்துடன் கற்க முனைந்தனர். அதன் பின்னர் ஆசிரியர் தொழிலின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டு விருப்பமுடன் கற்பிக்க ஆரம்பித்தார். அக்கல்லூ ரியின் அதிபர் விமலா டி சில்வா மிகவும் திறமைமிக்கவர். சிறந்த ஆளுமையாளர். பெண் ஒருவர் எவ்வாறு பாடசா லையினை வழிநடத்துவது என்கின்ற அனுபவங்களையும்

ஆற்றல்களையும் பயிற்சிகளையும் இயல்பாகவே ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் அங்கேயே (1957-1964) கற்றுக் கொண்டார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

அப்பொழுது புனித தேவி பாலிகாவின் அதிபர் கலாநிதி விமலா டி சில்வா ஜெஸிமாவிடம் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் பதவி வெற்றிடத்திற்கு கல்வி அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளது எனக் கூறியுள்ளார். அதற்கு அவர் தனக்கு அதிபர் பதவி விருப்பமில்லை. பிள்ளைக ளுக்கு ஓர் ஆசிரியராக இருந்து படிப்பிக்கவே விரும்புகிறேன் என்று அதற்கு மறுப்புத் தெரிவித்தார். ஆசிரியராக இருந்து கற்பிப்பது தான் சிறந்த பணி என்று தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டார். அவருடைய கற்பித்தல் திறன் அங்கு கல்வி கற்ற மாணவிகளுக்கும் நன்கு ஈர்த்து விட்டது. சகல மாணவிகளின் நன்மதிப்பைப் பெற்ற முதன்மை ஆசிரியர் என்ற தகுதிக்கு உரிமையாளராய் ஜெஸீமா அங்கு மதிக்கப் பட்டார்.

எவ்வாறாயினும் அதிபர் விமலா டி சில்வா அவர்களின் தூண்டுதல் காரணமாக கொழும்பு மகளிர் கல்லூரிக்கு விண் ணப்பம் செய்தார். அதன் பின்பு அக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டு அதிபராய் நியமிக்கப்பட்டார். அவர் பாடசா லையைக் கட்டியெழுப்புவதிலும் அதன் கல்வி தரத்தை உயர்த்துவதிலும் முழு மூச்சாக இயங்கினார். அவர் கணவர் கூட வந்து அவருடைய கல்விப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்பது பாடசாலை சமூகம் அறிந்த உண்மையே.

குறிப்பாக பிரபல்யமான றோயல் கல்லூரி மற்றும் ஏனைய உயர் கல்லூரிகளுடன் நடைபெற்ற விவாதப் போட்டிகளிலும் தேசிய தமிழ் தினப் போட்டிகளிலும் விளையாட்டு உட்பட எல்லா வகையிலான பிரகிருத்தி செயற்பாடுகளில் மாணவிகளை ஈடுபடுத்தி பாடசாலையின் பெயரை முதல் இடத்திற்கு கொண்டுவருவதற்கு அயராது உழைத்தார். அதிபரின் வேகத்திற்கு ஏற்ப ஆசிரியர்களும் மாணவிகளும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். பாடசாலை உச்ச வளர்ச்சி கண்டு செல்லும் கால கட்டத்தில் காழ்ப்புணர்சசி யுடன் நோக்குகின்றவர்கள் எந்த சமூகத்திலிருந்தும் இல்லாமற் போகமாட்டார்கள். அந்த வகையில் ‘அல் இஸ்லாம்’ என்ற ஒரு பத்திரிகை வந்தது. அதில் முதல் பக்கம், இரண்டாம் பக்கத்தில் அவருடைய முயற்சிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எதிரான பிரச்சாரங்களை மேற் கொள்ளாத நாட்களே கிடையாது. சில வேளை ஜூம்ஆ குத்பா மேம்பர் மேடைகளிலும் அவர் விமர்சிக்கப்பட் டுள்ளார். அந்த விமர்சனம்தான் அவரின் பெயரை உயர்த்த உதவியது என்று கூறுவதற்கு அவர் எப்பொழுதும் தயங்கு வதில்லை.

நாடளாவியரீதியில் தமிழ் தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள் நடைபெறும். அதில் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவர்கள் பங்கு பற்றுகின்றார்கள் என்றால் எல்லாப் பரிசுகளையும் அவர்களே தட்டிச் சென்று விடு வார்கள் என்று கூறுமளவுக்கு பயமும் பரபரப்பும் அன்று இருந்தது. அங்கு கற்ற மாணவிகளை அவர் தன்னுடைய பிள் ளைகளைப் போல் பழகினார். உறவு கொண்டாடினார். அவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் ஆசிரியர்களும் மாணவி களும் இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தார்கள். எல்லோரும் வியந்து பாராட்டுமளவுக்கு பாடசாலையினை வழி நடத்திச் சென்றார்.

அவருடைய திறமையை இலங்கை முழுவதும் அறிந்தி ருந்தது. அவருடைய ஞானத்தைப் பிள்ளைகள் வரமாகப் பெற்றுக் கொண்டனர். முஸ்லிம் பெண் பிள்ளைகளின் அடை யாளமாக அவர்களுடைய கல்வி வாழ்வுக்கு உந்து சக்தியாக உயிர்ப்பாக அவருடைய செயற்பாடுகள் அமைந்திருந்தது. ஒவ்வொரு பிள்ளைகளுடைய கல்வி அடைவு மட்டத்தை இனங்கண்டு அவர்களை கல்வியில் மேலோங்கச் செய்தார். அப்பிள்ளைகளின் எல்லா விடயங்களிலும் ஓர் உற்ற தோழியாக இருந்து அவர்களுடைய எதிர்கால நலனை சிறந்த முறையில் வடிவமைத்தார். இந்த எழுச்சியில் நாடளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம் பெற்றோர்கள், தம் பெண் பிள்ளைகளும் இப்பாடசாலையில் கல்வி பயில வேண்டும் என்று விரும்பினர். இதனால் இக்கல்லூரியில் மாணவிகளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தை பெறுவதில் போட்டா போட்டி நிலவியது.

அந்த வகையில் ஜெஸீமா இஸ்மாயில் அவர்களும் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பெயரை ஓங்கச் செய்தவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர். தனது தந்தையின் வழிகாட்டலுடன் ஆசிரியர் தொழிலைக் கற்று பின் பணிவுயர்வு பெற்று கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூ ரியில் சேவை நோக்கும் அர்ப்பணிப்பும் கொண்ட அதிபராக கடமையாற்றினார். ஜெஸீமா இஸ்மாயில், ஆங்கிலப் புலமை மிக்க எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் விளங்கியதோடு முஸ்லிம் பெண்கள் சமூகத்தில் கல்வித் துறையிலும் சமூகப் பண்பாட்டு அம்சங்களிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவ தற்கு உயரிய பங்களிப்பை நல்கியுள்ளார். கொழும்பின் தலைசிறந்த கல்லூரியாக இன்று விளங்குகின்ற மகளிர் கல் லூரியில் அதிபராகக் கடமைபுரிந்த காலத்தில் கல்லூரியின் ஆசிரியர்களோடு இணைந்து முன்னெடுத்த அயராத முயற் சியின் பயனாக ஆற்றல்மிக்க பெண் மாணவர் சமுதாயத்தை உருவாக்கியதோடு அவர்கள் இன்று முஸ்லிம் சமூகத்தில் பல்துறை ஆளுமைமிக்கவர்களாக விளங்குவதற்கு காரண கர்த்தாவாகவும் அமைந்தார்.

முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் அதிபராக 1975 - 1988 வரை சுமார் 13 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அப்பாட சாலையின் அதிபர் கதிரையில் அமர்ந்து உழைத்தார். குறிப்பாக இந்நாட்டினுடைய முஸ்லிம் பெண்களுடைய கல்வி மறுமலர்ச்சிக்காகவும் சமுதாய மாற்றத்திற்காகவும் நாட்டின் கல்வி எழுச்சிக்காகவும் தொலை நோக்குச் சிந் தனையோடு செயலாற்றியவர். 32 வருட காலமாக கல்விச் சேவையில் அவர் ஈடுபட்டிருந்தார்.

அவர் கிழக்கு இலங்கை முஸ்லிம் பெண்கள் குறித்து பதிப் பித்து வெளிக்கொணர்ந்த ஆய்வு நூல் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது. கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்களுடைய கிராமப்புற கலாசாரப் பண்பாட்டு அம்சங்களின் பல்வேறு பரி மாணங்களை அவ்வாய்வு வெளிப்படுத்தி நின்றது. கிழக்கு இலங்கை வாழ் முஸ்லிம் பெண்களின் திருமணச் சடங்கு முறைகள் எவ்வாறு இருக்கிறது என்பது குறித்தும், அவர் களது பொருளாதார வாழ்வியல்அம்சங்கள் எவ்வாறு காணப் படுகின்றன என்பன குறித்தும் அவ்வாய்வு காணப்பட்டது. மற்றும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள்,

பொருளாதார நெருக்கடிகள், பண்பாட்டு பாரம்பரிய நடைமுறைகள் போன்ற பல்வேறு வகையிலான பின்புலங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்ற ஆங்கில மொழியிலான ஆய்வு நூலொன்றையும் வெளியிட்டார்.

இவர் இலங்கையில் ஆழ்ந்த ஆய்வுப் புலமைமிக்கவர். ஆய்வாளர்களின் கட்டுரைகளைச் சேகரித்து ஒரு தீர்க்கதரிசமான சமூகப் பார்வையுடன் ஓர் ஆய்வு நூலை வெளியிட உந்து சக்தியாக இருந்துள்ளார். இத்தகைய அவருடைய ஆய்வுப் பணிகளுக்காக இலக்கிய உலகம் எப்பொழுதும் பெருமை கொள்கிறது. இதன் பதிப்பாசிரியர்களாக எஸ். எச். எம். ஜெமீல், ஆஷிப் ஹஸைன், ஆகிய இருவரும் இடம்பெறுகின்றனர். தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில், மிராக் ரஹீம், எஸ். எச். எம். ஜெமீல், பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ், பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ். ஆஷிப் ஹஸைன், மருதூர். எ. மஜீத், கலாநிதி எஸ். எம். எம். இஸ்மாயில் உள்ளிட்ட இன்னும் முக்கியமான பலர் இந்நூலில் எழுதியுள்ளார்கள்.

இது உண்மையிலேயே கிழக்கிலங்கை இலங்கை முஸ்லிம் பெண்களின் மத்தியில் நிலைகொண்டிருந்த பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இந்நூல்உதவியது. அவர் கொழும்பு தலைநகரில் நாகரிகமான சூழலில் வாழ்ந்தாலும் உண்மையில் கிராமிய மண்வாசனை கமழும் பிரதேசத்தில் பிறந்தவர். அந்த மண்ணின் மணம்தான் அவர் உள்ளத்திலும் இன்னும் இழையோடுகிறது என்றால் அது மிகைப் படுத்தப் பட்டது அல்ல. கிழக்கு இலங்கை முஸ்லிம் பெண்களின் பார்வையை இலங்கையில் வாழும் ஏனைய பெண்களுடன் பொருந்திப் பார்ப்பதற்கும் அவர்களுக்கென்றதொரு தனித்துவமான அடையாளம் உள்ளன என்பதை வெளிக்காட்டுவதற்கும் இந்த ஆய்வு நூல் உதவியாக அமையலாயிற்று. அடுத்த தலைமுறையினர்கள் நம் முன்சென்றோர்கள் இவ்வாறுதான் வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு



இந்நூல் உதவுகிறது. இந்நூலில் எழுதிய ஒவ்வொரு ஆய்வுக் கட்டுரையாளர்களுக்கும் பெருதொகையிலான நிதிகளை அன்பளிப்பாக அவர் வழங்கியுள்ளார். இது பற்றிய செய்திகளை அந்நூலில் எழுதிய ஆய்வுக் கட்டுரையாளர்களே கூறுகின்றனர். எது எவ்வாறாயினும் உண்மையிலேயே ஜெஸீமா இஸ்மாயில் இன்றுவரை அறிவுலகில் பேசப்படுவதற்கு முக்கிய காரணம் இந்த நூலை வெளிக்கொணர்ந்தமையே ஆகும்.

அவர் இல்லத்தில் பெறுமதிக்க ஆங்கிலப் புத்தகங்கள் கொண்ட பெரிய நூலகம் அமைந்திருந்தது. இதன் காரணமாக பத்திரிகைகளில் அறுநூறுக்கும் மேற்பட்ட பத்தி எழுத்துகளை எழுதியுள்ளார். சேர் ராசிக் பரீத் மற்றும் பொது அமைப்புக்கள், பெண்கள் உரிமைகள், ஜனநாயகம், சமூக நலம் சார்ந்த விடயங்கள் போன்ற எண்ணற்ற காத்திரமான பத்திகளாக இவை அமைகின்றன. எழுத்தின் மூலம் மக்களை விழிப்படையச் செய்தவர் உலக அரங்கிலும் அவரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் நிபுணத்துவம் பெற்றதாக விளங்குகின்றன. பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தோனேஸியா, மலேசியா, அமெரிக்கா, போன்ற பல்வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பித்த இவரின் ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேச ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

அவர் பற்றிய குறிப்புக்களை ஒரு சிறிய புத்தகம் ஒன்றில் பதிவு செய்தார், அவ்வப் பொழுது அவரைச் சந்தித்து உரையாடுபவர்களுடைய சகல தகவல்களையும் அவர் உடனுக்குடன் அந்தக் குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்து வைத்திருந்தார். தான் மரணம் எய்திய பின்னரும் யார் கேட்டு வந்தாலும் அதை எடுத்துக் கொடுத்து அதன் ஊடாக மேலெழும் சந்தேகங்களை தீர்க்கலாம் என்ற எண்ணம் கொண்டவராகக் காணப்பட்டார். அதிலுள்ள ஆலோசனைகளையும் தகவல்களையும் தம் சமூகம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தன் சகோதரியிடம் கூறியுள்ளதாக அவர் எம்மிடம் தெரிவித்தார். உண்மையிலேயே அவருடைய இந்தச் செயற்பாடு அவர் வயது முதிர்ந்து ஓய்வு நிலைக்குச் சென்ற பிற்பாடும் தொடர்ந்தது. தனது செயற்பாடுகள் இடைவெளி ஏற்பட்டு நின்று விடாமல் இருக்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார்.

17 சமூக நலன்புரி அமைப்புகளுடன் சேர்ந்து பங்காற்றியுள்ளார். தேர்தல் கண்காணிப்பு பவ்ஃரல் அமைப்பு, பெண்கள் அமைப்பு என்று பல அமைப்புக்களோடு சேர்ந்து சேவையாற்றியுள்ளார். அது மட்டுமன்றி இவர் பெண்கள் அமைப்புக்கள் பலவற்றை உருவாக்கி பெண்களைச் சமூக சேவையாளர்களாகவும், சமூகப் பற்றுள்ளவர்களாகவும் வளர்த்தெடுப்பதற்குப் பங்களிப்புச் செய்துள்ளார்.

அதே போன்று சமூகப் பணி எனும்போது சுனாமி காலத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியவை. பெருந்தொகையிலான நிதி உதவிகளைச் செய்து அம்மக்களுக்கு உடனடித் தேவையான நிவாரண உதவிகளை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக சுனாமி காலத்தில் கிழக்கு முஸ்லிம் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவதற்காகவும் பெண்களின் மீள் நிவாரண நடவடிக்கைகளுக்காகவும், அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் பங்காற்றியவர். இவற்றுக்

கப்பால் ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம் பெண்களுடைய மீள் எழுச்சிக்காகவும் அவர் களமிறங்கி ஆற்றிய பங்களிப்புக்கள் பெரிதும் மதிக்கத்தக்கதாக இருக்கின்றது.

இவர் முஸ்லிம் பெண்களுக்கு எதிராக வரும் கருத்துக்களுக்கும் முஸ்லிம் பெண்கள் குறித்தான விமர்சனங்களுக்கும் சரியான தக்க பதில்களை வழங்க இவர் தவறுவதில்லை. அதே போன்று இனங்களுக்கிடையே சகோதர சகவாழ்வையும் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கு அயராது பாடுபட்டு உழைத்துள்ளார். இவர் தான்சார்ந்துள்ள சமயத்தில் பற்றுள்ளவராகவும் ஏனைய சமயத்தினரை மதிப்பவராகவும் தூர நோக்கு உடையவராகவும் யுத்த சூழலினால் பிளவுபட்டிருக்கும் சமூகங்களை ஒன்றிணைப்பவராகவும் காணப்பட்டார். இவர் சிந்தனையில் உதித்ததுதான் அம்பாறை மாவட்டச் சர்வ சமய சம்மேளனம். இச்சம்மேளனத்தை ஸ்தாபித்த பெருமை இவருக்குரியதாகும். இங்கிருந்து இவர் செய்த பணிகள் எண்ணிலடங்கா.

1989-ஆம் ஆண்டு இலங்கையின் மூன்றாவது உயரிய கௌரவமான தேசபந்து விருதினை ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் இவருக்கு வழங்கி கௌரவித்தார். அதேபோன்று இவருடைய தகுதி ஆற்றல் மொழித்தேர்ச்சி, ஆளுமைப் பண்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்கள் 2000-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது தேசிய நியமனப் பட்டியலிலும் இவர் பெயரை இடம்பெறச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 2009-இல் தேசிய சர்வோதய விருது போன்ற பல உயர் விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. 2010-ஆம் ஆண்டு, உலகில் செல்வாக்கு மிக்க 500 முஸ்லிம்களுள் ஒருத்தராக இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இலங்கை முஸ்லிம்களுக்கு பெருமை சேர்த்த ஓர் ஒப்பற்ற வரலாற்றுப் பதிவாகும். ஜெஸீமா இஸ்மாயில் 2010-ஆம் ஆண்டு உலகில் செல்வாக்குமிக்க 500 முஸ்லிம்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கான பாராட்டு விழா ஒன்றிணை அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளனம், சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியம் ஆகியன இணைந்து கல்முனையில் நடத்தியது. இதன் போது வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் கல்முனை ஸ்ரீ சுபதாராம மகா விஹாரையின் விஹாராதிபதி வண. ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் பற்றி எழுதிய கட்டுரையில் 'மனிதர்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கிறிஸ்தவ, இந்து மக்கள் வாழுகின்ற கிராமமான சொறிக்கல்முனைக்குச் சென்று அங்கிருந்து நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துதான் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் சகல சமயத்தவர்களுக்கும் சொந்தமானவர் என்பதை நிரூபித்துக் காட்டியவர் எனக் குறிப்பிட்டுள்ளார். (பதிப்பாசிரியர் எஸ். ஏச். எம். ஜெமீல் - ஜெஸீமா இஸ்மாயில் பாராட்டு மலர் ப.27 - 2011)

இந்நூலிலே பதிப்பாசிரியரான முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சின் செயலாளர் எஸ். எச். எம். ஜெமீல், எம். ஏ. சி. ஹமீட், ஐ. எல். ஏ. மஜீத், டாக்டர் ஏ. எல். பாருக், எம். எஸ். ஜலீல், எ. ரி. சஜாதேவராஜா, மௌலவி எஸ். ஏச். ஆதம் பாவா, ஏ. பீர்முஹமட் உள்ளிட்ட பலர் அவருடைய ஆளுமையையும் மக்கள் பணிகளையும் அவருடைய குடும்ப வரலாற்றையும் பதிவு செய்துள்ளார்கள்.

இவருடைய ஆளுமைகள் பற்றி 'சன்ரயிஸ்' என்னும் ஆங்கிலச் சஞ்சிகை அட்டைப் படத்தில் இவரின் படத்தைப் பிரசுரித்து 'முஸ்லிம் பெண்கள் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பெரும் பங்காற்றியவர்' என்ற தலைப்பில் பெரிய நேர்காணல் ஒன்றைச் செய்திருந்தார்கள். கல்வியாளனருக்கும் மனிதாபிமான உதவியாளருக்கும் இருக்கக் கூடிய சிநேகபூர்வமான உரையாடலும் உபசரிக்கும் நேர்த்தியும் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்கின்ற கொள்கைப் பண்பும் ஜெஸீமா இஸ்மாயிலிடம் இயல்பாகவே காணப்பட்டன. முஸ்லிம் பெண்களின் கல்வி எழுச்சிக்காக இவர் பாடுபட்டதுடன் அவர்கள் கற்றுத் தேறி உயர்ந்த நிலை அடைவதற்கும் உதவினார். போர்க்காலச் சூழலில் சமூக நல்லிணக்கம் என்பது ஒரு கடினமான காரியமாக இருந்தது. அவர் பல்லின சமூகத்தவர்களை ஒன்றிணைப்பதற்காகப் பல்லின சமூக, சமயத் தலைவர்களுடன் ஒன்றிணைந்து அவர் ஆற்றிய காத்திரமான பங்களிப்பு ஒரு போற்றத்தக்கது.

அவர் இலங்கை நாட்டில் போர் ஓய்ந்து அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும் என்கின்ற உன்னதமான சிந்தனையுடன் வாழ்ந்தவர். இந்நாட்டிலுள்ள எல்லா இன மக்களும் பரஸ்பரம் ஒன்றுபட்டு சகவாழ்வுடன் நித்திய ஜீவிதத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக அறவழிப் போராட்டங்களை மேற்கொண்டவர். இக்காலப்பகுதியில் சமாதான நடவடிக்கைகளையும் முன்னெடுத்தவர். இதில் சிங்களம் என்றோ, தமிழர்கள் என்றோ, முஸ்லிம்கள் என்றோ கிறிஸ்தவர்களென்றோ வேறுபாடுகளின்றி பணியாற்றினார். படித்தவர், பட்டம் பெற்றவர் என்ற வகையில் அவர் சமூகத்தை வேறு பிரித்துப் பார்த்ததில்லை.

நாட்டின் சமாதானத்திற்காகப் பங்காற்றியவர்களுக்கிடையே மூலகர்த்தாவாக விளங்கும் பெரியார்களுள் ஜெஸீமா இஸ்மாயில் அவர்களும் ஒருவர். இவர் நமது கடந்த காலமான போர்க்கால வாழ்வியலுக்கு பெரும் ஆதாரம் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. எனவே, ஜெஸீமா இஸ்மாயில் கொழும்பு மகளிர் கல்லூரிக்குப் புத்துயிர்ப்பை ஏற்படுத்திய அதேவேளையில் முஸ்லிம் பெண்களுடைய தேவையைக் கருத்திற் கொண்டு சமூகம் சார்ந்த விடயங்களில் ஈடுபட்டார். பெண்குழுக்களை உருவாக்கி துணிச்சலாக நின்று பலதரப்பட்ட மக்களுக்கு உழைத்தார். இலங்கை முஸ்லிம் பெண்களின் வரலாற்றில் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு முதுசம்தான் அன்னை ஜெஸிமா இஸ்மாயில் அவர்கள்.

**உசாத்துணை:**


- தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் சிறப்பு மலர் பதிப்பாசிரியர் எஸ். ஏச். எம். ஜெமீல் IRFAD&CSCS - 2011
- தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் சிறப்பு மலர் பதிப்பாசிரியர் எஸ். ஏச். எம். ஜெமீல் IRFAD&CSCS - 2011
- சஹீட் எம். ரிஸ்மியின் பார்வையில் ஆளுமையின் அடையாளம் ஜெஸீமா இஸ்மாயில் - தினகரன் பத்திரிகை - 2024
- சன்ரயிஸ் - ஆங்கில சஞ்சை நேர்காணல் ஜனவரி பெப்வரவரி 2021




Iqbal.ali@thaiveedu.com





















1966-ஆம் ஆண்டு தொடக்கம் 1995-ஆம் ஆண்டு வரை எட்டு அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடந்து முடிந்த நிலையில், இலங்கைவாழ் மக்களின் மறக்கமுடியாத முக்கியமான மாநாடாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு காணப்படுகிறது. தனிநாயகம் அடிகளார் கலந்துகொண்ட இறுதியான அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடாகவும் இது விளங்கியது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் முதலாம், இரண்டாம் ஆய்வுத் தொகுதிகளின் பதிப்புரையில் 115 ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம்மாநாட்டில் சமர்பிக்கப்பட்டதாகக் கூறுவார். இம்மாநாட்டில் வாசிக்கப்பட்ட முப்பது கட்டுரைகள் உள்ளடங்கிய முதல் தொகுதியைக் கடும் சிரமப்பட்டு பேராசிரியர் சு. வித்தியானந்தன் பதிப்பித்தார். பின்னர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் எடுத்த முயற்சியின் காரணமாக, 1980-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23 ஆங்கிலக் கட்டுரைகளுடன் இரண்டாம் பகுதி வெளி வந்தது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் மூன்றாம் தொகுதியைக் கொண்டுவரும் நோக்கில் திருமகள் அச்சகத்தில் இதனைக் கொடுத்திருந்தார் என்றும் அறியப்படுகிறது. ஆனாலும், துரதிர்ஷ்டவசமாக இத்தொகுதி வெளிவர வில்லை. இதன் பின்னர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மை யாரின் உதவியாளராக இருந்த காசிநாதர் சிவபாலன், தன் சொந்தச் செலவில் திருமகள் அச்சகத்தில் எஞ்சியிருந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளி லிருந்து 15 ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து, 'Papers presented at the Fourth International Conference Seminar of Tamil Studies' என்னும் பெயரில் வெளியிட்டார்.

நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று ஐம்பது ஆண்டுகளைக் கடந்த பின்னரும் அம்மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் முழுமையாக ஆவணமாக்கப்படவில்லை. இம்மாநாட்டில் வாசிக்கப்பட்ட 47 கட்டுரைகள் இதுவரை பதிப்பிக்கப்பட வில்லை. இக்கட்டுரைகளுக்கு என்ன நடந்தது என்ற விபரமும் அறியுமாறில்லை. எமது தமிழ் ஆய்வாளர்களும் இது குறித்து அதிக அக்கறை செலுத்தவில்லை. இம்மாநாட்டில் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் இரண்டு கட்டுரைகளைச் சமர்ப்பித்தார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை ஏலவே பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் பதிப்பித்த தொகுதியில் இடம்பெற்றிருந்த போதிலும் 'தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் இலங்கையின் பங்கு' என்ற கட்டுரை இதுவரை காலமும் எங்கும் பிரசுரிக்கப்பட வில்லை. அவருடைய மணிவிழா மலரில் அவருடைய ஆக்கங்கள் பற்றிய ஆய்வடங்கல் இருந்தபோதிலும் இக்கட்டுரை பற்றிய தகவல்கள் அத்தொகுப்பிலும் இடம்பெறவில்லை. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தொடர்பான தகவல்களைத் தேடித்தேடிச் சேகரித்து, அது தொடர்பில் உறுதிப் படுத்தப்பட்ட தகவல்களைத் தரக்கூடிய ஆய்வாளரும் ஆவணமாக்கல் செயற்பாட்டாளருமான விருபா குமரேசன் அவர்கள் தனது சேகரத்தில் இருந்த இக்கட்டுரையை தாய்வீடு இதழுக்கு தந்துதவினார்கள். இது போன்ற பல கட்டு ரைகள் இன்னமும் பிரசுரிக்கப்படாமல் பலரின் பெட்டகங்களில் உறங்கிக் கிடக்கலாம். நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநாயகம் அடிகளாரின் கட்டுரையும் இன்னும் வெளிவராமல் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தே கிடக்கிறது. இதுபோன்று நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் பிரசுரிக்கப்படாமல் உங்களிடமும் இருக்குமேயானால் தாய்வீடு அதனைப் பிரசுரிக்கத் தயராக இருக்கிறது.

# தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் இலங்கையின் பங்கு

*சி. தில்லைநாதன்*

சங்கத் தொகை நூல்களிற் காணப்படும் ஈழத்துப்பூதன் றேவனாரின் ஏழு செய்யுட்கள் அக்காலத்தே தமிழிலக்கியம் இலங்கையில் வேர் கொன்டிருந்தமைக்குச் சான்றாக உள்ளன. சங்க காலம் முதல் 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண அரசாட்சி பீடமேறும் வரை இலங்கையிலே தமிழ் இலக்கியமிருந்த நிலையினை அறிதற்கான சான்றுகள் ஏதும் இல்லை.

1621-ஆம் ஆண்டு போர்த்துகேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றுமுன் யாழ்ப்பாணத்தரசர்களின் ஆதரவின் கீழ் சில சோதிட நூல்களும் சில வைத்திய நூல்களும் இயற்றப்பட்ட தோடு சில வடமொழி நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டன. கண்ணகியின் வரலாற்றினைக் கூறும் கண்ணகி வழக்குரை என்ற நூலும் தமிழிலுள்ள பள்ளுப் பிரபந்தங் களுட் காலத்தால் முந்தியதென ஊகிக்கப்படும் கதிரை மலைப் பள்ளும் இக்காலத்தனவெனக் கொள்வர். (ஈழத்துத் தமிழ்க் கவிதைக்களஞ்சியம், தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம் கொழும்பு, 1966, பக். 39, 59.)

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் இலங்கையில் ஆட்சி செலுத்திய காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சைவ, கிறித்தவ, இஸ்லாமியப் புலவர்கள் வாழ்ந்து புராணம், பதிகம், அந்தாதி, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி, தூது திருப்புகழ் முதலிய பல பிரபந்தங்களையும், பல தனிப்பாடல்களையும் இயற்றினர். இவை பொதுவாக விசய நகர நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் ஏராளமாகத் தோன்றிய சமயச் சார்பான இலக்கியங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. புலவர் சுப்பையனாரினால் கனகி என்ற நடனமாதின் மீது பாடப்பட்ட 'கனகி புராணம்' ஒரு புது வகையினதெனக் கொள்ளப்பட்டது.


**பண்டைய இலக்கியத்தில் தத்துவ உரைகளும் சில உரைநடை நூல்கள் இருந்தனவெனினும், செய்யுளில் இருப்பது போன்ற சிறந்த இலக்கியங்கள் உரை நடையிலும் அமைய முடியுமென்பதைத் தமிழ்க் கல்விமான்கள் உணர்ந்திருக்கவில்லை.**


19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவர்கள் தங்களுடைய மதத்தைப் பரப்புவதற்காகப் பல்வேறு வழிகளில் முயன்றனர். அவ்வேளையில் சைவர்களும், இஸ்லாமியர்களும் தங்கள் மதங்களைப் பிரச்சாரம் செய்யவும் சுதேச கலாசாரத்தைப் பேணவும் விரைந்தனர். சைவ சமயத்தைப் பேணி வளர்ப்பதற்குப் பல்வேறு வகையில் உழைத்த ஆறுமுக நாவலர் (1822 - 1879), பதிப்பித்த நூல்களும் கையாண்ட உரைநடையும் ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்தன. செய்யுள் நடை செல்வாக்கிழந்து பொது மக்களைத் தன்பால் ஈர்க்கவல்ல உரைநடை தலைமை பெற்ற இக்காலப் பகுதியில் ஆறுமுக நாவலர் கையாண்ட உரைநடையினைப் பற்றி ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் பின்வருமாறு கூறுகிறார். 'தமிழ்ப் புலவர்களும் கல்விமான்களும் மலினப்படுத்தப்பட்ட யாப்புகளைக் கையாண்டு சம்பிரதாயமான பிரபந்தங்களையும் தலபுராணங்களையும் எழுதிக் கொண்டிருந்த காலத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உரைநடை முக்கியமென்பதை உணர்ந்த ஆறுமுக நாவலர் தானே அதற்கு வழியும் காட்டினார். அவர் காலத்துக்கு முன் வீரமாமுனிவரின் வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருகதை ஆகியனவும் இராமலிங்க சுவாமிகளின் மனுநெறிகன்ட வாசகமும், பண்டைய இலக்கிய தத்துவ உரைகளும் போன்ற சில உரைநடை நூல்கள் இருந்தனவெனினும், செய்யுளில் இருப்பது போன்ற சிறந்த இலக்கியங்கள் உரைநடையிலும் அமைய முடியுமென்பதைத் தமிழ்க் கல்விமான்கள் உணர்ந் திருக்கவில்லை.

உண்மையில் ஆறுமுக நாவலரே தற்கால இலக்கிய உரை நடையில் தந்தையும் 19-ஆம் நூற்றாண்டின் மாபெரும் உரைநடை ஆசிரியருமாவார். (Tamil Studies II, Tirunelveli, Tamil Nadu 1970) எனவே, நாவல், சிறுகதை ஆகிய புதிய இலக்கிய வகைகளைச் சிறப்பாய் ஆளவல்ல திறனைத் தமிழ் உரைநடைக்குத் தந்தவர் ஆறுமுக நாவலரெனில் மிகையாகாது. உரைநடைக் காவியமெனப் போற்றப்பட்ட நாவல் ஆரம்பத்திலே சமயப் பிரச்சாரத்திற்கான ஒரு கருவியாகவே பயன்படுத்தப்பட்டது. இலங்கையில் தோன்றிய முதல் நாவல்கள் எனக் கொள்ளப்படும் 'உசோன் பாலந்தை கதை', 'அசன்பேயுடைய சரித்திரம்' ஆகியவை அத்தகையனவே. படிப்படியாக நாவல்கள் ஒழுக்கங்களையும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் போதிப்பனவாக மாறின.

1930-ஆம் ஆண்டை அடுத்துச் செய்திப் பத்திரிகைகள் தோன்றிய வேளையில் வெகு சனரஞ்சகமான விசித்திர நிகழ்ச்சிகளையும் அதீத கற்பனைகளையும் திகிலூட்டும் சம்பவங்களையும் கொண்ட பல நாவல்கள் எழுதப்பட்டன. இவை வாசகர் தொகையைப் பெருக்குவதற்கு உதவிக் கொண்டிருந்த இதேகாலத்தில் சிறுகதை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையின் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றை மீட்டு நோக்கும்போது, சிறுகதை முன்னோடிகள் என்று கொள்ளப்படும் சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் இன்று நினைவு கூரப்படுமளவிற்கு ஆரம்பகால நாவலாசிரியர்கள் நினைவு கூரப்படுவதில்லை. ஆரம்ப காலச் சிறுகதை ஆசிரியர்கள் சமகால வாழ்விலும் அதையொட்டிய பிரச்சினைகளிலும் குறிப்பிடத்தக்களவு கவனம் செலுத்தாவிட்டாலும், உருவ உத்திகளிலும் பாத்திரப் படைப்பிலும் நடையிலும் காட்டிய ஆர்வமும் திறமையும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் காட்டிய வழியிலே பலர் சிறுகதைகளைப் படைப்பதில் முனைந்து நின்றனர்.

இப்புதிய பரம்பரையினர் இந்திய தேசிய இயக்கத்தினாலும் சீர்திருத்த சுயமரியாதை இயக்கங்களினாலும் வெகுவாகக் கவரப்பட்டுத் தம்மைச் சூழ்ந்த சமுகத்தின் சீர்திருத்ததிற்கும் முன்னேற்றத்துக்கும் உதவத்தக்க கருவியாகச் சிறுகதையை உபயோகிக்க முனைந்தபோது, சாதி, சமய வேறுபாடுகளையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் சமூக ஊழல்களையும் போலி வேஷங்களையும் பொருளாகக்கொண்ட சிறுகதைகள் தோன்றலாயின. தங்கள் சமூகத்தைத் திருத்தியமைக்கும் இலட்சிய வேகமும் மனிதாபிமானமும் மிகுந்த

இவ்வாசிரியர்களின் கதைகள் ஈழகேசரி பத்திரிகையிலும் கலாமோகினி, கிராம ஊழியன், பாரததேவி போன்ற தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அவர்களின் தாகத்தைத் தீர்க்க அப்பத்திரிகைகள் போதாமல் இருந் தபோது 1945-ஆம் ஆண்டில் அவர்கள் மறுமலர்ச்சி என்ற பத்திரிகையைத் தொடக்கினர்.

மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று குறிக்கப்படும் அப்புதிய பரம் பரையினரின் நோக்கினையும் போக்கினையும் அவர்களுள் முக்கியத்துவம் பெற்ற ஒருவரான அ.செ. முருகானந்தத்தின் பின்வரும் கூற்றுத் தெளிவுபடுத்தும்: ‘தமிழிலுள்ள கதை இலக்கியத்தில் இப்போது காணப்படும் முக்கிய குறை இதுதான். அதாவது இலட்சியக்கதைகள் மிகவும் குறைவு. அத்தியாவசியமாக வேண்டப்படுவனவும் அவைதாம் பொழு துபோக்குக் கதைகள் போதுமென்றபடி ஏராளமாகச் சேர்ந்து விட்டன. இனி அவற்றுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு எமது நாட்டை அப்படியே தூக்கிக் காட்டும் தேசத்தின் வறுமை, துன்பம், அரசியல் நிலைமை முதலியவற்றை உணர்ச்சியூட்டக் கதைகளைப் பெருக்க வேண்டும்.’ (ஈழ கேசரி, சுன்னாகம், இலங்கை 17.05.1947)

மக்களுடைய வாழ்க்கையையும் நன்மையையும் நோக்கி வேகமாகச் சிறுகதை திரும்பியபோது அதன் நடை கூடிய எளிமை பெற்றதோடு கிராமியச் சொற்களையும் ஏற்றுக் கொண்டது. அ.செ. முருகானந்தம், வரதர் ஆகியோருடைய கதைகளில் யாழ்ப்பாண வாழ்க்கையும் சொற் பிரயோகங் களும் காணப்படுவது போன்று வ.அ. இராசரத்தினத்தின் கதைகளிலே கிழக்கிலங்கை வாழ்க்கையும் சொற்பிரயோகங் களும் காணப்படுகின்றன.

இலங்கைத் தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரையிலே சமகாலச் சமுகத்துக்குச் சில சீர்திருத்தங்களையும் ஒழுக்க சீலங்களையும் போதிக்க முனைந்த பாவலர் தெ.அ. துரையப் பாபிள்ளை (1872 - 1929) அவர்களுக்குப் பின்வந்த மு. நல் லதம்பி, சோமசுந்தரப்புலவர். ப.கு. சரவணபவன் முதலியோர் உயிர்ப்பலியிடுதல், மதுவருந்தல் போன்றவற்றின் தீமை குறித்தும் அகிம்சாமார்க்க உயர்வு குறித்தும் பாடியதோடு பாரதியின் கவிதைகளுக்கு வசப்பட்டுச் சில தேசபக்திப் பாடல்களையும் இயற்றினர். சோமசுந்தரப்புலவர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, மஹாகவி ஆகியோரின் கவிதைகளில் யாழ்ப்பாணத்துக் கிராமிய வாழ்க்கையும் வழக்காறுகளும் ஓரளவு சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டன.

1948-ஆம் ஆண்டில் இலங்கை பெற்ற விடுதலை, வேர்விட்டு வியாபித்த இயக்கங்களின் விளைவானதல்லவாகையால் அதன் தாக்கத்தை இலக்கியங்களில் காண முடியவில்லை. விடுதலைக்குப் பின் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் மொழியையும் மதத்தையும் சார்ந்த எழுச்சிகளின் விளைவாக ஏற்பட்ட சிந்தனை மாற்றங்கள் 1956-ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் அரச கரும மொழியாவதற்குக் காலாயமைந்தபோது, தமிழ் மக்கள் இந்நாட்டிலே தமக்குரிய இடம் பற்றியும், தமது பாரம்பரியம் பற்றியும் தம்முடைய எதிர் காலம் பற்றியும் தமது வளர்ச்சிக்கு குந்தகமாயிருந்த காரணிகள் பற்றியும் அதிகமாகச் சிந்திக்கலாயினர்.

அவ்வாறு அவர்கள் சிந்திக்கத் தொடங்கியமைச் செ. கணேச லிங்கன், டொமினிக் ஜீவா, எஸ். பொன்னுத்துரை, கே. டானியல், என்.கே. இரகுநாதன் முதலியோருடைய எழுத்துக ளிலும் அவர்களுக்குப் பின்வந்த நீர்வை பொன்னையன், காவலுர் இராசதுரை, அகஸ்தியர் முதலியோர் படைப்புக்க ளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

1948-ஆம் ஆண்டுக்கும் 1956-ஆம் ஆண்டுக்கும் இடையில் ஒரு சில சிறுகதைத் தொகுதிகளையும் சுமார் பத்து நாவல்க ளையும் பத்துக் கவிதைத் தொகுதிகளையும், ஐந்து நாடகங் களையும் கண்ட இலங்கை 1956-க்குப் பின்னர் அறுபதுக்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகளையும் எழுபதுக்கு மேற் பட்ட நாவல்களையும் ஏறக்குறைய நூறு கவிதைத் தொகுதிக ளையும் ஐம்பது நாடகங்களையும் கண்டது.

ஆக்க இலக்கிய உலகில் இத்தகையதொரு வேகம் காணப்பட்ட வேளையிலேதான் தமிழ் நாட்டிலிருந்து வந்த பகீரதன் என்ற பத்திரிகாசிரியர் சிறுகதை த்துறையில் இலங்கை பத்து வருடங்கள் பின்தள்ளி நிற் கிறது என்றார். தமிழ் நாட்டுப்பத்திரிகைகளிலே தமக்கு இடம் தரப்படு வதில்லை என்று சினங் கொண்டு நின்ற இலங்கை எழுத்தா ளருக்குப் பகீர தனின் கூற்று வெந்த புண் ணிலே வேல் நுழைப்பதைப் போன்றதாயிற்று. இலங்கை எழுத் தாளர் தம் கதை களிலே ஈழத்துப் பேச்சு வழக்கினைப் கையாள்வதால் இந்தி யரால் அக்கதைகளைப் புரிந்துகொள்ள முடியா திருக்கிறதென்றும் சிலர் கூறினர்.இந்நிலையில் இலங் கைச் சிறுகதை பற்றியும் இலக் கியத்திலே பேச்சுவழக்கினைப் பயன் படுத்துவது பற்றியும் நிகழ்ந்த சார்ச் சைகளும் அவற்றைத் தொடர்ந்து இலக்கி யத்தின் உருவம், உள்ளடக்கம், குறிக்கோள் என்பவை பற்றி நடந்த வாதங்களும் இலங்கைத் தமிழிலக்கி யவுலகின்பாற் பலரது கவனம் திரும்பவும் புதியதொரு விழிப் புணர்ச்சி உதயமாகவும் காரணமாயின.

இலங்கையின் சமூக பொருளாதார அரசியற் பின்னணியில் நடைபெற்ற மாற்றங்களும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களில் வாழ்வும் வளமும் இலங்கையுடன் பிணைந்தவை என்ற உணர்வும், அதேவேளையில் இலங்கைத் தமிழ் எழுத் தாளர்களின் இலக்கியவாக்கத் தகைமைகள் பற்றி எழுப்பப் பட்ட கேள்விகளும் இலங்கைத் தேசிய இலக்கியம் பற்றிய சிந்தனைக்கு அடி கோலின. இலங்கைக்குத் தனித்துவமான பிரச்சினைகளும் வழக்காறுகளும் உண்டு என்பதும்

“ இலங்கையின் சமூக பொருளாதார அரசியற் பின்னணியில் நடைபெற்ற மாற்றங்களும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களில் வாழ்வும் வளமும் இலங்கையுடன் பிணைந்தவை என்ற உணர்வும், அதே வேளையில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் இலக்கிய வாக்கத் தகைமைகள் பற்றி எழுப்பப்பட்ட கேள்விகளும் இலங்கைத் தேசிய இலக்கியம் பற்றிய சிந்தனைக்கு அடி கோலின ”

அவற்றின் அடிப்படையில் வளர்வதும் வளர வேண்டியதுமான இலக்கியத்துக்குப் போதிய பலம் வாய்ந்த பாரம்பரியமும் ஒன்றுண்டு என்பது வலியுறுத்தப்படுவதாயிற்று.

உரைநடையினை வளர்ப்பதிலும், பண்டை நூல்களைப் பதிப்பிப்பதிலும் கலைக்களஞ்சிய அகராதி முயற்சிகளிலும் வரலாற்று ஆராய்ச்சியிலும் நம் நாட்டவர் முன்னோடிகளாகத் திகழ்ந்தமை குறித்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் பெருமை பாராட்டக் கூடியதாயிருந்தபோதிலும், 1956-ஆம் ஆண்டுவரை வளர்ந்த தமிழ் ஆக்க இலக்கியப் பரப்பில் அவர்களுக்கு இன்றியமையாத அல்லது குறிப்பிடத்தக்க தனித்துவம் வாய்ந்த ஓர் இடம் இல்லையென்றே சொல்ல வேண்டும். 1956-ஆம் ஆண்டையொட்டியேற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியின் பின்னர் தான் இலங்கைத் தமிழ் இலக்கியமானது இலங்கைக்குரிய உருவினையும் உள்ளடக்கத்தினையும் தனித்து வப்படுத்தத் தக்கவளவுக்குப் பெற்றது. ‘தமிழில் வெளி வரும் கதைகளில் அநேகம் இந்தியராலேயே எழுதப் படுகின்றன. அவை அந்நாட்டு வாழ்வினை நமக்குத் தெரிவிக் கின்றன. நம்மைப் போலவே இந்தியர் களும் ஈழத்து மக் களின்வாழ்வையும் வ ள ங்க ளையும் அறிய விரும்புவர். எனவே, நமது வாழ் வை உள்ளபடி சித் தரிக்கும் உயர்ந்த கதைகளை மறும லர்ச்சித் தொண்டர்கள் வெளிக்கொணர வேண் டும்.’(ஈழகேசரி 17.10.43) என்று சுவாமி விபுலா னந்தர் மறுமலர்ச்சி எழுத் தாளர்களைப் பார்த்து 1943-ஆம் ஆண்டு சொன்னது முறை யான பயன் தரப்பதினைந்து ஆண் டுகளுக்கு மேல் ஆயிற்று.

“
**இலங்கையின் பல்வேறு பிரதேசங்களும், வழக்காறுகளும் பிரச்சினைகளும் பலதரப்பட்ட வாழ்க்கை முறைகளும், மதிப்பீடுகளும் எடுத்தாளப்படுகின்றன. இலங்கைக்குரிய சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் சித்திரிக்கப்படுகின்றன.**
”

தென்னிந்திய நிழலிலே ஒதுங்கிக் கிடக்காமல் இலங்கை மண்ணுக்குரிய தனித்துவமான தேசியப் பகைப்பலத்தில் தமிழிலக்கியம் வளரும்போது அது இலங்கைக்குரிய அனுபவங்களையும் சிந்தனைகளையும் அவற்றை வெளியிடும் சாதனங்களையும் தழுவுகிறது. அதன் விளைவாகப் பரந்த தமிழ் இலக்கியமானது புதியதொரு பரிணாமத்தினைப் பெறுகிறது.

நவீன தமிழ் இலக்கியம் இலங்கையிலே சிறப்பான வளர்ச்சி பெறுவதற்குச் சமூக அரசியற் பொருளாதாரக் காரணிகள் தவிர்ந்த வேறு சில காரணிகளும் வாய்ப்பாயமைந்தன. பல இந்தியப் பல்கலைக்கழகங்களைப் போலன்றி, இலங்கைப் பல்கலைக்கழம், ‘நமது வாழ்வை உள்ளபடி சித்திரிக்கும் உயர்ந்த கதைகளை வேண்டிய முதலாவது தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் காலந்தொட்டே தற்கால ஆக்க இலக்கிய வகைகளுக்கு மதிப்பளிப்பதும், இலக்கிய கர்த்தாக்களைத் திசை நடத்தவல்ல இலக்கியத் திறனாய்வுகளும் கூட்டங்களும் தமிழ் நாட்டைவிடச் சிறந்த முறையில் நாகரிகமாக நடப்பதும், இலக்கியபூர்வமாக எழுத்தாளர் இயங்குவதும் குறிப்பிடத்தக்கவை.

இன்று தமிழ் ஆக்க இலக்கியப் பரப்பில் இலங்கைக்குக் கணிசமான இடமுண்டு என்று துணிந்து கூறலாம். தமிழ்க் கவிதை இலங்கையிலேதான் காலத்துக்கேற்ற வளர்ச்சி பெற்றுள்ளது. சமகால அனுபவங்களை மக்களை ஈர்க்கவல்ல பேச்சோசை சார்ந்த நடையிலே சிறப்பாக வெளியிடும் பண்பினை இலங்கையின் சிறந்த தமிழ்க் கவிஞர்களிடம் காணலாம். குறும்பா என்ற புதிய கவிதை வடிவம் மஹாகவியினாலே திறமையோடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கவிதை நாடகங்கள் பிரசித்திபெற்று வருகின்றன.

புனைகதை எழுத்தாளர்கள் பொதுவாக இலாபமெதையும் எதிர்பார்க்க இடமில்லை. வேகமான மாற்றங்களும் பிரச்சினைகளும் மலிந்த இக்காலத்தில் அநேகர் நவீன சிந்தனையோட்டங்களையும் கவனித்து இலட்சியங்களினாலோ, மானிட சமூகப் பரிவினாலோ, சமூக பொருளாதார விளக்கங்களினாலோ உந்தப்பட்டே எழுதுகின்றனர் என்பது தெளிவாய்த் தெரிகிறது.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களும், வழக்காறுகளும் பிரச்சினைகளும் பலதரப்பட்ட வாழ்க்கை முறைகளும், மதிப்பீடுகளும் எடுத்தாளப்படுகின்றன. இலங்கைக்குரிய சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் சித்திரிக்கப்படுகின்றன.

பல புனைகதைகளில் யாழ்ப்பாணத்துச் சாதிப்பிரச்சினை எடுத்து நோக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்டவர்களின் புனருத்தாரணம் பல எழுத்தாளரது வேட்கையாக இருக்கிறது. தேயிலை, ரப்பர் தோட்டது தொழிலாளரின் அவலநிலை பல புனைகதைகளுக்குப் பொருளாயமைந்துள்ளது. பல படைப்புக்கள் துயரப்படுகிறவர்களின்பாற் பரிவினை ஏற்படுத்துவதோடு அமையாது, அவர்களின் நிலைக்குரிய மூல காரணங்களையும் அவற்றை வெற்றி கொள்வதற்கான வழிகளையும் விண்டுரைப்பனவாயுள்ளன. அந்த வகையில் அப்படைப்புக்கள் வாழ்க்கையைச் சித்திரிப்பதோடு நில்லாது அதனை விமர்சிப்பவையாகவும் உள்ளன.

(நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, யாழ்ப்பாணம், இலங்கை - ஜனவரி, 3 - 9, 1974)



Thillainathan.S@thaiveedu.com



# மாணவர் மனதை வென்ற மானுடன்

## கலாகீர்த்தி

# சி. தில்லைநாதன்

**- சி. ரமேஷ்**

இலக்கிய வித்தகரும் தமிழ் ஆர்வலரும் சிந்தனையா ளரும், கவிஞரும் தமிழர் போற்றும் ஆய்வறிவாளரும், பல்கலைக் கழகத்தின் இலக்கிய கர்த்தாக்களில் ஒருவ ருமான அன்பும் பண்பும் நிறைந்த எமது பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் காலமான செய்தி நெஞ்சை உலுக்குகிறது. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசி ரியர் செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் வழிவந்த பேராசிரியர் தில்லைநாதன் அவர்களின் சேவையை நன்குணர்ந்த இந்து கலாசார இராஜங்க அமைச்சு 1993-ஆம் ஆண்டு இலக்கியச் செம்மல் விருது வழங்கி கௌர வித்தது. வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவருக்குரிய அங்கீ காரம் கிடைக்கும் என்னும் வகையில் இலங்கை அரசும் 1994-இல் அவருக்கு அதி உயர்விருதான கலாகீர்த்திப் பட் டத்தைக் கொடுத்து கௌரவித்தது. மும்மொழி புலமையும் கைவரப்பெற்ற திறனாய்வாளரான பேராசிரியர், நண்பர் களால் செல்லமாகத் தில்லை என அழைக்கப்படுவார்.

பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் 02.05.1937-ஆம் ஆண்டு சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் அரிச் சுவடி பயின்ற இவர் சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தி யாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். 1948-ஆம் ஆண்டில், இவர் இடைநிலைக் கல்வியை ஸ்கந்தவரோ தயாக் கல்லூரியில் கற்றறிந்து 1956-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கிளரிக்கல் பரீட்சையில் தேற்றி இராணுவத் தலைமை அலுவலகத்தில் நியமனம் பெற்றார்.1957-ஆம் ஆண்டு அவருக்கு பல்கலைக் கழக அனுமதியும் கிடைத்தது. அக் காலத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இருந்து இருவரே பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் தமிழ், பொருளி யல், வரலாறு முதலான பாடங்களை தெரிவுசெய்து கொண்டார். இவருடைய சக மாணாக்கராக மு. தளைய சிங்கம், தொலைத் தொடர்பு சாதனங்களின் அமைச்சரின் செயலாளர் கே.சி. லோகேஸ்வரன், அரச அதிபராக இருந்த செந்தில்நாதன், பேராசிரியர் பூலோகசிங்கம், பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க முதலியோர் இருந்தனர்

பேராசிரியர் தமிழை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் வித்தியா னந்தன், பேராசிரியர் ஆ. சதாசிவம், முதலியோரிடம் துறைபோகக் கற்றார். 1959-ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சஞ்சிகையான இளங்கதிர் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார். 1959-ஆம் ஆண்டு இந்து இளைஞர் நடத்திய கட்டுரைப் போட்டி யிலும் முதல் பரிசினைப் பெற்றுக் கொண்டார். 1960-ஆம் ஆண்டு இளங்கதிர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசான தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். 1960-களில் பல்கலைக்கழகத்தில் இருந்து முதல் தர மாணவனாக சித்திபெற்று வெளியேறினார். 1961-இல் ஏரிக் கரைப்பத்திரிகை என அறியப்படும் தினகரன், ஒப்சேவர் பத் திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகச் செயற்பட்டார். இக்காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையாரான எஸ்மன்ட் விக்கி ரமசிங்கவின் கீழ் பணியாற்றினார்.

பேராசிரியர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத் திலேயே அங்கிருந்து வெளிவந்த பேராதனைக் கவிதைகள் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார். இது தவிர இளங்கதிர், முஸ்லிம் மஜ்லிஸ், இந்து தர்மம் முதலான பத்திரிகைகளிலும் எழுதினார். இவர் ஆங்கிலப் பத்திரிகையான ஒப்சேவரில் பணியாற்றிய காலப் பகுதியில் யாழ்ப்பாண சாதி அமைப்புக்கள், திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்பான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஏரிக் கரைப் பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டு வித்தியோ தயப் பல்கலைக்கழகத்தில் வருகை தரு விரிவுரையாள ராகப் பணியாற்றும் அரிய வாய்ப்பினைப் பெற்றார். 1964-இல்

தமிழ் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் பேராசிரியர் மு. வரதராஜன் தலைமையின் கீழ் தமிழ் அரசவை இலக்கியங்கள் என்னும் தலைப்பின் கீழ் ஆங்கிலத்தில் ஆய்வினை மேற்கொண்டு முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் தமிழ் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1964 ஒக்டோபர் முதல் 1965 ஏப்ரல் வரை அங்கு கடமையாற்றினார். இதனைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1965 - 1969 காலப்பகுதியில் உதவி விரிவுரையாளராகவும் 1969 – 1975 காலப்பகுதியில் விரிவுரையாளராகவும் 1975 -1985 காலப்பகுதியில் முதுநிலை விரிவுரையாளராகவும் கடமையாற்றிய பேராசிரியர் சி. தில்லைநாதன் 24.04.1985 அன்று இணைப் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். 15.01.1991 முதல் தமிழ் பேராசிரியராக உயர்ந்தார். 1997-ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இப்பதவியைப் பெற்றுக்கொண்ட முதல் தமிழ் பேராசிரியர் இவரே ஆவார்.

## கல்விப் பணிகள்:

இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்கு அளப்பரிய சேவைகள் செய்தவர்களுள் பேராசிரியர் தில்லைநாதனும் ஒருவர். இலங்கையின் தேசிய கல்வி மாற்றங்களின் போது தில்லைநாதன் அவர்களும் அதனோடிணைந்து பயணித்தார். க.பொ.த. உயர்தரப்பாட நூல்களின் மீளாய்வுக்குழு அங்கத்தவர், தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழித்துறையின் ஆலோசனைச் சபை அங்கத்தவர். தொலைக்கல்விப் பிரிவின் பாடத்திட்ட குழுவினது அங்கத்தவர், ஆலோசகர், 1995 – 1996 காலப்பகுதியில் தமிழ் மொழித்துறையின் நிபுணத்துவ ஆலோசகர் எனப் பல பதவிகளை அவர் வகித்தார். 1996-ஆம் ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் அந்நிறுவனத்தின் ஆட்சிச்சபை உறுப்பினராகவும் கடமையாற்றினார். இக்காலப் பகுதியில் இடைநிலை, உயர்நிலை பாடசாலைக் கல்விக்குரிய தமிழ்ப் பாடத்திட்டத்தை வடிவமைப்பதிலும் தயாரிப்பதிலும் தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து உழைத்தவர். இந்நிறுவனத்தின் பல்வேறு செயற்றிட்டங்களிலும் முன்னின்று பணியாற்றியவர். அதுமாத்திரமன்றி பாடசாலைக்கல்வி தொடர்பான கட்டுரைகள் பலவற்றையும் எழுதியவர். ‘இலக்கிய வரலாறு கற்றல்’, ‘நல்லாசிரியர்’, ‘இலக்கியமும் திறனா ய்வும் மாணவர்களும்’, ‘இன்றைய கல்வி பற்றிய சில சிந்தனைகள்’ முதலான கட்டுரைகள் மாணவர்களின் சிந்தனைத் திறத்தை விருத்தி செய்யும் வகையில் எழுதப்பட்ட கட்டுரைகளாகும்.



1961 இல் கலைப்பட்டதாரியாக...

## நூல்கள்:

பேராசிரியரால் எழுதி வெளியிடப்பட்ட நூல்களும் கட்டுரைகளும் அநேகம். ‘வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை’, ‘இலங்கைத் தமிழ் இலக்கியம்’, ‘பண்பாட்டுச் சிந்தனைகள்’, ‘சோழர்கால அரசவை இலக்கியம், இலக்கியமும் சமூகமும் முதலிய நூல்கள் அவருடைய புகழை நிலைபெறச் செய்கின்றன. ‘வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை’ என்ற நூல் பேராசிரியர் மு. வரதராசன் அணிந்துரையுடன் தமிழ்ப்புத்தகாலயம் வெளியீடாக 1967-இல் வெளிவந்தது. ‘தெய்வ வள்ளுவன் வான்மறை செய்தான்’ முதல் ‘புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்’ ஈறாக பதினான்கு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன. தமிழ் இலக்கியத்தைப் புதிய பார்வையோடு நோக்கியதாக இந்நூல் அமைகிறது. ஈழத்தவர்களான ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் தமிழ்ப் பணிகளைத் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் இந்நூல் கண்ணகி பாண்டியன் அவைக்குச் சென்று வழக்குரைத்த நிகழ்வை வழக்குரைக் காவியம் என்ற பெயரில் விளக்கிநிற்கிறது. கண்ணனைக் காதலித்த கோதை என்ற பெயரில் ஆண்டாளின் பக்தியையும் கம்பன் காட்டும் வாலி என்ற பெயரில் வாலியின் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டும் தில்லைநாதன் அவர்கள் இந்நூலில் இஸ்லாமிய பக்திபாடல்கள், மாதவையாவின் நாவல், புதுமைப் பித்தனின் சிறுகதைகள், மறைமலை அடிகளாரின் இயக்கம் குறித்தும் ஆராய்கிறார். இந்நூலில் பாரதியாரின் கவிதைகளை தேசியக்கவி இக்பாலுடன் ஒப்பிட்டு ஆராயும் தில்லைநாதன் அவர்கள் பாரதி படைத்த தேர்ப் பாகன் கவிதையையும் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளையின் கவிதைகளையும் பாரதிதாசனின் கவிதைகளையும் மேலைத்தேய கவிதைகளுடன் ஒப்பிட்டு விளக்கிறார். வெவ்வேறு நோக்கில் எழுதப்பட்ட இக்கட்டுரைகள் தமிழ் இலக்கியத்தைப் புடம்போட்டுக் காட்டுகின்றன.

தமிழ்ப்புத்தகாலயம் வெளியீடாக வந்த பிறிதொரு நூலே ‘இலக்கியமும் சமுதாயமும்’. 1987-இல் வெளிவந்த இந்நூல் ‘இலக்கியமும் சமுதாயமும்’ முதல் ‘சினிமாவும் இலக்கியமும்’ ஈறாக ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பாகும். இலக்கியத்துக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்தும் ‘இலக்கியமும் சமுதாயமும்’ என்ற கட்டுரை இலக்கியம் என்பது சமுதாய சூழ்நிலைக்கும் மனித உணர்வுகளுக்கும்

இடையிலான உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமையும் என்பதை விளக்கி நிற்கிறது. 'கவியரசரும் புவியரசரும்' என்ற கட்டுரை தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் உள்ள உறவுநிலைகளை மேலைத்தேய இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பேசுகிறது. இந்நூலில் இடம்பெறும் 'மரபும் மாற்றமும்' என்ற கட்டுரை 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வலுவல கால வகையினானே' என்னும் கூற்றுக்கமைய மரபு, காலத்துக்கு காலம் மாறி வருவதே முறையாகும் என்பதனை இலக்கியங்களின் ஊடாகவும் மாறிவரும் பண்பாட்டு மரபுகளுக்கூடாகவும் கூறிநிற்கிறது இக்கட்டுரை. 'தமிழிலக்கிய வடிவங்கள்' என்ற கட்டுரை மனித உள்ளங்களை உணர்ச்சிகளைச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்ற இலக்கிய வடிவங்கள் அன்றைய காலமுதல் தற்காலம் வரை எவ்வாறு மாற்றம் பெற்றன என்பதைப் பேசுகின்றது. சங்கமருவிய காலத்திலும் தொழிற்புரட்சியைத் தொடர்ந்து மேலைத்தேய நாடுகளிலும் அற இலக்கியங்கள் ஏன் எழுந்தன என்பதை விளக்க எழுந்த கட்டுரையே 'அற நூல்கள்' எழுந்தன. 'இறைகாதல்' என்ற கட்டுரை இறைவன் மீது காதல் கொண்ட பெண்கள் தம் உள்ளத்து உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர் என்பதை ஆழ்வார், நாயன்மார்கள் பாடலுக்கூடாக ஆராய்கிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம்மைத் தலைவியாக மட்டும் பாவனை செய்து பாடவில்லை. அவர்கள் தங்களைச் செவிலித்தாயாகவும் நற்தாயாகவும் தோழி'யாகவும் நினைத்துப் பாடிய பாடல்களையும் இக்கட்டுரை விபரித்துச் செல்கிறது. 'மறுமலர்ச்சி' இலக்கியம் என்ற கட்டுரை 19-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அசைவின்றி காணப்பட்ட இலக்கியம் பின்னர் புத்துயிர் பெற்று எவ்வாறு தங்கு தடையின்றி ஓடியது என்பதையும் ஆங்கிலேயர் வரவு, தேசபக்தியை அடுத்து தமிழ் இலக்கியம் எவ்வாறு மாற்றமடைந்தது என்பதையும் விளக்கி நிற்கிறது. தமிழ் இலக்கியங்களை ஆசிய நாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராயாத நிலையில் 'ஆசிய இலக்கியங்களின் பொதுப்பண்புகள்' என்ற கட்டுரை ஒப்பிட்டு ஆராய 'தமிழ் சினிமாவும் இலக்கியமும்' என்ற கட்டுரை தமிழில் கதை கூறும் இலக்கியங்கள் சினிமாவில் வளர்ந்தவாற்றைக் கூறிநிற்கிறது. கருத்துக்களைத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் கூற சினிமா, நல்ல ஊடகமாகப் பயன்படுவதை இக்கட்டுரை எமக்குணர்த்தி நிற்கிறது. சமூகத்துக்கும் இலக்கியத்துக்கு இடையிலான தொடர்பை இந்நூலில் வெளிவந்த கட்டுரைகள் அனைத்தும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தில்லைநாதன் அவர்களின் பண்பாட்டுச் சிந்தனைகள் என்ற நூல் 'இன்றைய வாழ்வில் இலக்கியம் முதல் பாரதியின் புதிய ஆத்திசூடி ஒரு பார்வை வரையுள்ள 15 கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவந்தது. இலக்கியத்தையும் வளர்ச்சியையும் அதன் மாறுதல்களையும் புரிந்து கொள்வதற்கு இன்றைய வாழ்வில் இலக்கியம், இலக்கியமும் திறனாய்வும் கற்பித்தல் பற்றிய குறிப்பு, இலக்கிய வரலாறு கற்றல், புதுமையும் மாறுதல்களும் சங்க இலக்கியமும் மனிதாபிமான சிந்தனைகளும் முதலான கட்டுரைகள் துணைசெய்கின்றன. சமயம் உணர்த்தும் ஆன்மீக உண்மைகளையும் மனிதாபிமானத்தையும் கிருஷ்ண வழிபாடு, சமயமும் பண்பாடும் சொற்கோவின் நன்றி உணர்ச்சி, இலங்கை மலையக இந்துகளின் தெய்வங்களும் வழிபாடுகளும் அமைதியும் ஆன்மீக விளக்கமும் முதலான கட்டுரைகள் உணர்த்தி நிற்கின்றன. பாரதியார் மீது பேராசிரியர் கொண்ட ஈடுபாட்டினை பாரதி கண்ட விநாயகர், பாரதி கண்ட கண்ணன், பாரதியின் புதிய ஆத்திசூடி ஒரு பார்வை முதலான கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. இலக்கியத்தையும் பண்பாட்டையும் விளக்கி எழுதப்பட்ட இந்நூல் இறையியலுக்குள் உள்ளடங்கி கிடக்கும் எமது சமூக மரபுகளையும் சுட்டிநிற்கின்றன. பண்டைய இலக்கியங்கள் மீது பேராசிரியருக்கு இருந்த ஈடுபாட்டினையும் மேலைத்தேய இலக்கியங்கள் மீது பேராசிரியருக்கு இருந்த ஆழ்ந்த அறிவினையையும் நவீன இலக்கியங்கள் மீது பேராசிரியர் இருந்த பரிச்சியத்தையும் இந்நூல் வெளிப்படையாய் உணர்த்தி நிற்கிறது.

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக 1997-இல் வெளிவந்த நூலே இலங்கைத் தமிழ் இலக்கியம். இலங்கைத் தமிழ் இலக்கியம் ஒரு குறிப்பு முதல் பாரதியும் இலங்கையும் வரை இருபத்தேழு கட்டுரைகளைத் தாங்கி இந்நூல் வெளிவந்தது. ஈழத்து இலக்கிய ஆளுமைகளின் இலக்கியப் பங்களிப்பையும் ஈழத்து இலக்கியங்களின் பேசுபொருட்களையும் மலையக இலக்கியங்களின் வளர்ச்சியையும் சுட்டிநிற்கும் இந்நூல் நவீன இலக்கிய வடிவமான ஈழத்துச் சிறுகதைகள் குறித்தும் ஆராய்கிறது. ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், விபுலாநந்தர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை, பாவலர் துரையப்பாபிள்ளை, பண்டிதமணி, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் ம.மு. உவைஸ், முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி முதலான ஈழத்தவர்களின் இலக்கியப் பங்களிப்புகளை எடுத்து விளக்கும் இந்நூல் ஈழத்தில் நடந்த இலக்கியச் சர்ச்சைகள் குறித்தும் பாரதிக்கு இலங்கைக்கும் இடையிலான உறவுகள் குறித்தும் விரிவாகவே ஆராய்கிறது. சிறந்த திறனாய்வாளர்களாக இலங்கையரை அறிமுகப்படுத்தும் இந்நூல் இலக்கியங்கள் எழுந்தமைக்கான சமூகவியற்புலத்தையும் விளக்கி நிற்கிறது.

குமரன் புத்தக இல்லம் பதிப்பித்த சோழர்கால அரசவை இலக்கியம் என்ற நூல் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களால் 1968-இல் எம்.லிட் பட்டத்துக்காக ஆங்கிலத்தில் எழுதப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும். பேராசிரியர் தில்லைநாதன் பரணி. உலா, பிள்ளைத்தமிழ், கோவை முதலான பிரபந்தங்களுடன் மெய்கீர்த்தி, கல்வெட்டுகள் முதலானவற்றையும் இந்நூலில் மேலைத்தேய அரசவை இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராய்கிறார். சோழ அரசரின் வீரதீரச் செயல்கள், புகழ், கொடை, ஆட்சி நேர்மை, நீண்ட வளமான குலப்பாரம்பரியம் முதலானவை இந்நூலில் விரிவாக ஆராயப்படுகிறது.

## கட்டுரைகள்:

ஈழத்தமிழறிஞர்கள் பலரைக் கட்டுரைகளின் வாயிலாக அடையாளப்படுத்திய ஒருவராகவும் பேராசிரியர் விளங்குகிறார். நாவலர் மீது ஈடுபாடும் நாட்டமும் உடையவராகத் தில்லைநாதன் விளங்கினார். நாவலரின் ஆளுமையையும் புலமைத்துவத்தையும் மக்கள் நலச் சேவைகளையும் கல்விப் போதனாநெறிமுறைகளையும் பதிப்பு முயற்சிகளையும் சமூகச் சீர்திருத்தங்களையும் எடுத்துரைக்கும் கட்டுரைகளாக இவரின் 'ஆறுமுகநாவலர்', 'நாவலர் நோக்கும் வாக்கும்', 'தில்லையில் வாழும் நாவலர்' நினைவு', 'நாவலரும் தமிழகமும்', 'சீர்திருத்தவாதி நாவலர்', 'நாவலர் அடிச்சுவட்டில் இலக்கியம்' முதலான கட்டுரைகள் காணப்படுகின்றன. நாவலர் சிலை அரசியல் நோக்கத்துக்காக 1974- இல் அப்புறப்படுத்தப்பட்டதைக் கண்டித்து பேராசிரியர் அவர்களால் எழுதப்பட்ட 'ஆறுமுகநா

வலர் சிலை பெயர்க்கப்பட்டது அடுக்காத செயல்' என்ற கட்டுரை யாழ்ப்பாணத்தில் பெரிதும் சர்ஜையை எழுப்பியது.

சுவாமி விபுலாநந்தர் குறித்து பேராசிரியர் எழுதிய கட்டு ரைகள் அவரை நிலைபெறச் செய்கின்றன. விபுலாநந்தரின் உலகலாவிய நோக்கையும் அவரது பரந்த தமிழறிவையும் மானிடநேயத்தையும் நன்குணர்ந்த தில்லைநாதன் அவர்கள் 'சுவாமி விபுலாநந்தர் தமிழ்ப்பற்று', 'சுவாமி விபுலாநந்தரின் கவித்திறன்', 'சுவாமி விபுலாநந்தரின் கவிதைத்திறன்', 'சுவாமி விபுலாநந்தரின் ஆளுமையும் பெறுமானங்களும்', 'உள்ளக்கமலம்', 'சுவாமி விபுலாநந்தரின் தமிழ் ஈடுபாடு', 'சூழலும் சமூகமும் பண்பாடும்: சுவாமி விபுலாநந்தரின் நோக்கு' முதலான கட்டுரைகளை எழுதினார்.

தம்மோடு இணைந்து பயணித்த பேராசிரியர்கள் குறித்து தில் லைநாதன் அவர்கள் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். 'பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணி', 'பேராசி ரியர் தனஞ்சயராசசிங்கம்', 'எழுத்தாளர் பத்திரிகையாளர் மத்தியில் கைலாசபதி', 'பேராசிரியர் ம.மு. உவைஸ்', 'டாக்டர் எம்.எம். உவைஸின் அருள்மொழி அகவல்கள்' முதலான கட் டுரைகள் தமிழ் இலக்கியத்துக்கு பங்களிப்புச் செய்த போராசிரியர் களின் பணிகளை நினைவுகூர் கிறது. தில்லைநாதன் அவர்கள் பேராசிரியர் உவைஸ் குறித்து எழுதிய கட்டுரை இலங்கை அரசாங்கத்தால் வெளியி டப்படும் தரம் எட்டு இலவசப் பாடநூலில் இடம்பெற்றுள்ளது. ம.மு. உவைஸ் என்ற இக் கட்டுரை 1994-ஆம் ஆண்டு வெளிவந்த 'ஆன்ற அறிவும் அகன்ற உள்ளமும் பேராசிரியர் அல்ஹாஜ் ம. முகமது உவைஸ்' மணிவிழா மலரில் இடம்பெற்றது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் வித்தியானந்தன் மீது அதீத அன்பு கொண்ட தில்லைநாதன் அவர்கள் அவர்குறித்து விரிவான கட்டு ரைகள் பலவற்றையும் எழுதி யுள்ளார். 'கலாநிதியின் கால் நூற்றாண்டு', 'வித்தியானந்தன் என்ற மானுடன் - அலை மோதும் நினைவுகள் சில', 'பலரை ஆளாக்கிய பெருந் தகை பேராசிரியர் சுப்பிரம ணியம் வித்தியானந்தன்' முதலான கட்டுரைகள் பேரா சிரியர் வித்தியானந்தன் அவர்களின் பல் துறைப் பணிகளை மதிப்பிடுகிறது.

பேராசிரியர் கலாகீர்த்தி சி. தில்லைநாதன் அவர் கள் இஸ்லாமிய இலக்கி யங்கள் குறித்தும் நிறையவே எழுதியுள்ளார். 1987-ஆம் ஆண்டு ஆடிமாதம்12-ஆம் திகதி வெளிவந்த தினகரன் வாரமஞ்சரியில் 'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு' என்ற தலைப்பில் ஓர் கட்டுரையை எழுதிய தில்லைநாதன் அவர்கள் 1996-ஆம் ஆண்டு தை 14-ஆம் திகதி தினகரன் வார மஞ்சரியில் 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்றொன்று உண்டா' என்ற தலைப்பில் பிறி தொரு கட்டுரையை எழுதி அது உண்டென்று என்று நிறுவுவார். கவிமணி ஸூபைரின் பாலர் பாடல்கள், திருமக் காப்பள்ளு - ஓர் ஆய்வு முதலான கட்டுரைகளும் முஸ் லிங்கள் தமிழுக்காற்றிய பங்களிப்பை எடுத்துரைக்கின்றன.

## உலகத்தமிழராய்ச்சி மாநாடு:

உலகத்தமிழராய்ச்சி மாநாடுகள் பலதில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய பெருமை பேராசிரியர் சி.தில்லைநாதனுக் குண்டு. காலத்துக்கு காலம் நடந்த இம்மாநாடுகளில் பேராசி ரியர் அவர்களால் வாசிக்கப்பட்ட ஐந்து கட்டுரைகளும் முக்கி யமானவை. A study of Meykkiirththis of the cholar' இக் கட்டுரை சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்பட்டது. இவர் தமிழ் நாட்டில் ஆய்வுப் பணியில் இருந்த காலத்தில் எழுதப்பட்ட கட்டுரையாக இது அமைவதால் ஆய்வின் சில பகுதிகள் இக்கட்டுரையில் வந்து செல்கின்றன. 'Recent Trends in ceylon Tamil Literature' என்ற கட்டுரையும் 'தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் இலங்கையின் பங்கு' என்ற கட்டுரையும் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற நாலாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் படிக் கப்பட்டன. 'ஈழத்து தமிழ்க் கவிதை வளர்ச்சி' என்ற கட்டுரை நான்காவது அனைத்துலகத் தமிழா ராய்ச்சி மாநாடு நினைவு மலரில் இடம் பெற்றது. ஈழத்தின் ஆரம்பகாலக் கவிதைகள் பற்றிய பதிவாக இக்கட்டுரை காணப்படுகிறது. மட்டக்க ளப்பில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் விபுலாநந்தரின் கவித்துவத்தின் செழுமையை விளக்குவதற்காக 'விபுலாநந்தர் கவித்திறன்' என்ற கட்டுரையை சமர்ப்பித்ததும் நோக்கத்தக்கது.

## கவிதைகள்:

பேராசிரியர் தில்லை நாதன் அவர்கள் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவர். 'பொங்கு கவிதை பொலிந்து', 'மானிடத்துக்கு மாவிட்ட புரத்தின் சவால்' என்னும் தலைப்பில் இவர் எழுதிய கவிதைகள் இதனை உறுதிப்படுத்தி நிற்கின்றன. தாயாரை இழந்து தவிக்கும் மகனின் வேதனை யையும் துயரத் தையும் வெளிப்படுத்தும் பொங்கு கவிதை பொலிந்து என்ற கவிதைஒன்பது வெண்பாக்களாலானது.



1957 இல் பல்கலைக்கழக மாணவனாக...

# தமிழ் இலக்கிய அறிவு வரன்முறையை தமிழ் அறிவு எனும் அடித்தளத்தில் இருந்து கட்டியெழுப்பியவர் பேராசிரியர் தில்லைநாதன்

*'வன்கண் பருந்து வட்டமிடக் குஞ்சலறத்*
*தன் பொற் சிறகணைக்குந் தாயொப்ப – என்றன்னைப்*
*பக்கத்து வீட்டுப் பயலடிக்கப் பாய்ந்தெடுத்துக்*
*கக்கத்தில் வைத்தவள் கை'*

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆலயக் கதவுகள் திறக்கப்படாத நிலையில் அவ்வாலயக் கதவுகள் திறக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி இவரால் எழுதப்பட்ட கவிதையே 'மானிடத்துக்கு மாவிட்டபுரத்தின் சவால்'. மக்களின் உரிமைப் போராட்டங்கள் உக்கிரமடைந்த காலகட்டத்தில் (1.3.1971) சமூக அநீதிகளையும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அவலங்களையும் கண்டு மனம் பொருமி எழுதப்பட்ட கவிதையாக இது காணப்படுகிறது.

*'அந்தரதேவர்கள் வந்தனை சொல்ல*
*சந்திர மண்டலம் சார்ந்து வந்தாயோ*
*திங்கள் மீதிற் றிரிவது பெரிய*
*சங்கதி தானோ ? சாதனை யாச்சோ?*
*இந்த நிலத்தில் உந்தன் இனத்தவர்*
*வந்திட மூடும் வாசலும் உண்டு*
*காக்கை நுழையுமென் கந்தன் திருத்தலம்*
*பாக்கிய மிலாவுன் பஞ்சமர்க்குப் பூட்டு...*
*ஆணவம் விட்டு ஆண்டையை மதித்து*
*பேணுவாய் ஆகமப் பெருமையைச் சிறியோய்!'*

கவிநயமும் கலைநயமும் கொண்ட கவிதையாய் இது விளங்குகிறது. சாதியத்துக்கு எதிராக கட்டுரைகள் பலவற்றையும் தில்லைநாதன் அவர்கள் எழுதியிருந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது. தாயகம் இதழில் இவரெழுதிய 'சாதியும் அதற்கெதிரான போராட்டங்களும்' என்ற கட்டுரை இவ்வகையில் முக்கியமானது. பேராசிரியர்சி.தில்லைநாதன் மாணவராக இருந்த காலப்பகுதியிலே பேராதனைக் கவிதைகள் என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தோடு நில்லாது அச்சஞ்சிகையிலும் கவிதைகளையும் எழுதினார். இவருடைய 'பாட்டு வேணுமா ?', 'வருத்தம் மறந்திட' முதலான கவிதைகள் 1958 - 1959-ஆம் ஆண்டு பேராதனைக் கவிதைகள் என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. பேராசிரியர் வித்தியானந்தனின் துணைவியார் கமலாதேவி இறந்தபோது அன்னமிட்ட தெய்வ மணிக்கை என்ற தலைப்பில் உருக்கமான கவிதை ஒன்றையும் புனைந்திருந்தார். இவருடைய 'மனப்புண்', வாழ்க்கைச் சுழலிலே முதலான சிறுகதைகளும் சமூக அநீதியையும் வர்க்க ஏற்றத்தாழ்வுகளையும் பேசிநிற்கின்றன.

## நாடகம்:

பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் பேராசிரியர் நாடகத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் காணப்பட்டார். பேராசிரியர் தில்லைநாதன் 1973-இல் 'தகுதி' என்ற நாடகத்தையும் 1974-இல் 'மானிடம் என்பது புல்லோ' என்ற நாடகத்தையும் மேடையேற்றினார். 'சமுதாய விலங்கு' என்ற நாடகத்தை தாயரித்துள்ளார். இவரது 'தகுதி' என்ற நாடகம் சாதியப் பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகம் ஆகும். 'மானிடம் என்பது புல்லோ' என்ற நாடகம் வர்க்க ஏற்றத்தாழ்வுகளால் நிகழும் சமூகக் கொடுமைகளை வெளிக்கொணரும் வகையில் எழுதப்பட்ட நாடகமாகும். இதன் மையக்கரு அன்றைய சமூகச் சிக்கல்களைத் வெளியுலகுக்கு தோலுரித்துக் காட்டுகிறது. சிவஞானம் என்ற முதலாளியின் வீட்டில் வேலை செய்யும் பெண் அவருடைய மகனால் கருத்தரிக்கப்படுகிறாள். அவளைச் சிவஞானம் தன் கார்ச்சாரதிக்கு மணம் முடிக்க முனைந்த வேளையில் அவன் அதை மறுத்து விட அவளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த முதலாளி முனைகிறார். அதனறிந்து கார்ச்சாரதி அவளை ஏற்றுக்கொள்கிறான். மானிடநேயத்தையும் வர்க்கச் சுரண்டலையும் எடுத்துக் காட்டும் இந்நாடகம் தேசிய ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கிறது. 'சமுதாய விலங்கு' என்ற நாடகம் சீதனப் பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகமாகும். இந்நாடகம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1972-இல் மேடையேறியது. இந்நாடகங்களின் பாத்திரவார்ப்பு, கதைக்கோப்பு வட்டார உரைநடை என்பன சிறப்பாகக் கையாளப்பட்டதாகக் கூறுவர். நாடகங்களை எழுதி இயக்கியதோடு நில்லாது நாடகம் குறித்தான கட்டுரைகளையும் பேராசிரியர் எழுதினார். தினகரன் நாடக விழா மலரில் இவர் எழுதிய 'நாடகத் தமிழும் நமது துறையும்' என்ற கட்டுரை இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரின் நாடக முயற்சிகளைச் சிலாகித்துப் பேசுகிறது. இவருடைய பிறிதொரு கட்டுரையான 'சைவ மறுமலர்ச்சிப் பணியில் நாடகமும் நாவலும்' என்ற கட்டுரை சமயத்தையும் அது கொண்டிருக்கும் விழுமியங்களையும் வெளிப்படுத்த நாடகமும் நாவலும் எவ்வாறு உதவி நின்றன என்பதை விரிவாக ஆராய்கிறது. ஓரங்க நாடகத்தின் பிரதான பண்புகளை எடுத்தாராய்யும் 'ஓரங்க நாடகம்' என்ற கட்டுரை தமிழ் நாடகத்துறையில் அதன் இருப்பையும் இடத்தையும் ஆராய்கிறது.

தமிழ் இலக்கிய அறிவு வரன்முறையை தமிழ் அறிவு எனும் அடித்தளத்தில் இருந்து கட்டியெழுப்பிய பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் நிரந்தரமாக நித்திய அமைதிபெறச் சென்றுவிட்டார். முப்பது வருடங்களுக்கு மேலாக பல்கலைக் கழகத்தில் அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் இன்று பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் கல்விமான் களாகவும் அரச உத்தியோகத்தராகவும் உள்ளனர். அன்னாரின் புகழ் அவர் விட்டுச் சென்ற மாணவ சமூகத்தினூடகவும் இலக்கியங்களினூடாகவும் நின்று நிலைபெற்று இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



ramesh.s@thaiveedu.com



# தொடர்ந்தும் போராடுவதே எங்கள் சமூகங்களின் பணி

## - நுகி வா தியாங்கோ

## நேர்காணல்: சுரேஷ் கனகராஜா

அண்மையில் காலமான புகழ்பெற்ற ஆபிரிக்க எழுத்தாளர் நுகி வா தியாங்கோ (Ngugi wa Thiong'o) காலனித்துவத்துக்கும் இலக்கியத்தில் ஆங்கில மேலாட்சிக்கும் எதிராக இடையறாது எதிர்ப்புக் குரல் எழுப்பியவர். ஆங்கிலத்தில் எழுதி வந்த அவர், பிற்பாடு தனது தாய்மொழியான கிக்கூயூவில் எழுதத் தொடங்கினார். Decolonizing the Mind எனும் அவரது திறனாய்வு நூல் ஒரு பாரிய திசைமாற்றத்தை ஏற்படுத்தியது. அவரது நாவல்கள் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன.

நுகி வா தியாங்கோ நம் காலத்தின் மாபெரும் எழுத்தாளர். புரட்சியாளர். காலனித்துவத்துக்கு எதிரான அவரது புலமை சான்ற பணி அளப்பரியது.

பேராசிரியர் சுரேஷ் கனகராஜா (மொழியியல் துறை, பென் ஸ்ரேட் பல்கலைக் கழகம், பென்சில்வேனியா) அவர்கள் நுகி வா தியாங்கோவுடன் நடத்திய உரையாடலின் தமிழ் வடிவம் இது.

- **தற்போதைய வரலாறு, அரசியல் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது, எனக்கு மிகுந்த மனச் சோர்வு ஏற்படுகிறது. இங்கிலாந்தில் பிரெக்சிட், ஐரோப்பாவில் தேசியவாதத்தின் பெரும் எழுச்சி, அமெரிக்காவில் மற்றவர்கள் உள்நுழையாமல் சுவர் எழுப்ப விரும்புகிறார்கள். விசா பெறுவதில் பல தடைகள் உள்ளன. குடியேறிகள் நிலைமை மோசமாக இருக்கிறது. எனவே உலகம், குறிப்பாக மேற்கத்தைய நாடுகள், தேசியவாதம், தம்மைத் தனிமைப்படுத்தல், தமக்கேயானவற்றில் மட்டுமே அக்கறை செலுத்துவது ஆகியவற்றையே விரும்புகின்றனர். நீங்கள் இந்த மாற்றத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

மேற்குலக நாடுகள் தம்மைத் தனிமைப்படுத்தப்பார்க்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் மிகவும் தந்திரமானவர்கள். இன்றைய உலகில் உலகளாவிய மூலதனம் அல்லது நிதி மூலதனம் மிகவும் இன்றியமையாதது. நிதி மூலதனத்திற்கு உலகின் எந்தப் பகுதிக்கும் செல்ல எந்தத் தடையும் இல்லை, இலங்கைக்கோ, கென்யாவுக்கோ, எங்கு வேண்டுமானாலும் ஒரு நாளில்

மூலதனம் சென்று விடுகிறது. ஆனால், தொழிலாளர்க ளுக்கு இத்தகைய நகர்வும் புலம்பெயர்வும் தடுக்கப்படு கின்றன.

இது வணிக முதலாளித்துவத்தினதும், தொழில் துறை முதலாளித்துவத்தினதும் நெறிகளுக்கு மாறானது. ஒரு காலத்தில் அவர்கள் ஆபிரிக்காவுக்குச் சென்று ஆப் பிரிக்க மக்களை அடிமையாக்கினர். பின்பு கூலித் தொழி லாளராக மாற்றினர். ஆனால் இப்போது நிதி மூலதனம் சொல்கிறது: 'நகர வேண்டாம், நாங்கள் உங்களை அங்கேயே சந்திப்போம்.' தொழிலாளர்கள் எங்கு மலிவாக இருக்கிறார்களோ, அங்கேயே இருக்க வேண்டும். அது தான் இன்றைய நிலை.

- **'Decolonizing the Mind' என்ற உங்கள் புத்தகத் திற்குப் பிறகு, உலகெங்கிலும் உள்ளூர் போராட் டங்கள் பற்றி மக்கள் சிந்திக்கின்றனர். அமெரிக் காவில் உள்ளூர் மக்களும் உரிமைகளுக்காகப் போராடுகின்றனர். இன்னும் பல மூன்றாம் உலக சமூ கங்களில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடக்கின்றன. இந்தப் போராட்டங்களின் முன்னேற்றம் எப்படி இருக் கிறது என்று நீங்கள் மதிப்பிடுகிறீர்கள்? அவற்றில் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? அவை உங்கள் எதிர்பார்ப்பைவிட அதிகம் முன்னேறியுள் ளனவா? இன்னும் தடைகள் தாண்டி, மலைகள் ஏற வேண்டுமா?**

ஏறிக் கடக்க வேண்டிய மலைகள் இன்னும் இருக் கின்றன. என்னுடைய நம்பிக்கை என்பது போராட்டத் திலேயே உள்ளது. ஒரு போராட்டம் முடிந்தவுடன், மற்றொரு போராட்டம் தொடங்குகிறது.

- **சமூகம் மாற்றம் வேண்டுமானால் போராட்டம் தொடர்ந்தும் இருக்க வேண்டும்.**

போராட்டத்தை நாம் விரும்பி முன்னெடுக்க வேண்டும். போராட்டம்தான் மாற்றங்களைக் கொண்டு வரும். உங்களுக்கு நான் சுட்டிக் காட்டுகிற படிமம் இதுதான்: உடலில் குருதிச் சுற்றோட்டம் இல்லையெனில் ஒருவர் இறந்துவிடுகிறார். குருதிச் சுற்றோட்டம் இல்லை யெனில் ஒருவர் நகரவே முடியாது. போராட்டம் என்பது அத்தகைய குருதிச் சுற்றோட்டம்தான்.

- **அப்படியெனில் போராட்டம் இல்லாத சமூகம் நலமற்ற சமூகம்?**

ஆம். போராட்டம் இல்லாமல் ஒரு சமூகம் நலமான சமூகமாக இருக்க முடியாது. சமூக மாற்றத்துக்காகவும் சமூகத்தின் எல்லா மக்களுக்கும் மானுடத்தைப் பேணுவ தற்காகவும் தொடர்ச்சியான போராட்டங்கள் வேண்டும்.

- **நீங்கள் உங்கள் சொந்த மொழியான கிகுயூவில் எழுதுவது கென்யாவிலுள்ள உள்ளூர் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்த உதவியதா? அவர்கள் போராடத் தூண்டப்படுவதற்கும் உதவியதா? கிகுயூ மொழியில் உங்கள் படைப்புகள் மக்களை எவ்வாறு சிந்திக்க வைத்தது? கிகுயூ மொழியில் உங்கள் எழுத்தின் மதிப்பீடு என்ன?**

இரண்டு விடயங்கள். ஒன்று, பரவலாக ஆபிரிக்க இலக்கியங்கள் செல்வதில் பல தடைகள் உள்ளன. வெளியீட்டுத் தரம், வெளியீட்டாளர்களின் கவனம், வடிவ மைப்புப் போன்ற விடயங்களில் நாம் பின் தங்கி நிற்கிறோம். விநியோகம் சரியாக இல்லை. சந்தைப் படுத்த வாய்ப்புகளே இல்லை. இன்னொன்று. ஆபிரிக்க அரசுகளின் கொள்கை. அவர்களுக்கு எங்கள் இலக்கி யங்களைப் பற்றிய அக்கறையும் ஈடுபாடும் இல்லை யெனின் எங்கள் பாடு சங்கடம்தான். ஆனாலும் 1975-இல் 'ந்ஹாகா ந்டீண்டா' (I'll Marry When I Want) என்ற நாடகத்தை கிகுயூ மொழியில் ஊர்களில் நிகழ்த்தினோம். விவசாயிகள், தொழிலாளர்கள், வேலை செய்யும் குடும் பங்கள், வேலையற்றவர்கள் அனைவருடனும் இணைந்து பணியாற்றினோம். ஃபானான் ( Frantz fanon) சொன்ன 'அவல நிலை மாந்தர்' பற்றிய நிகழ்வு என இதனைச் சொல்லலாம். இந்த நாடகத்தால் மக்களில் மாற்றம் ஏற் பட்டது. உண்மையில், எங்கள் சொந்த மொழியில் நாடகம் நிகழ்த்தும்போது ஆயிரக்கணக்கானோர் வரு கின்றனர். இந்த மாற்றம் அரசாங்கத்தையும் கவர்ந்தது.

- **இந்த நாடகத்தை மேடையிட்டபடியால் உங்களைச்சி றையில் அடைத்தார்கள் என்று நினைக்கிறேன்.**

ஆம், அந்த நாடகத்திற்காகத்தான். உயர் பதுகாப் புள்ள சிறையில் அடைத்தார்கள். மக்களது கவனத்தை மட்டும் அல்ல, அரசின் கவனத்தையும் அந்த நாடகம் ஈர்த்தது.

"
போராட்டம்தான் மாற்றங்களைக் கொண்டு வரும்.
உங்களுக்கு நான் சுட்டிக் காட்டுகிற படிமம் இதுதான்:
உடலில் குருதிச் சுற்றோட்டம் இல்லையெனில் ஒருவர் இறந்துவிடுகிறார்.
குருதிச் சுற்றோட்டம் இல்லையெனில் ஒருவர் நகரவே முடியாது.
போராட்டம் என்பது அத்தகைய குருதிச் சுற்றோட்டம்தான் "



- **இந்த அடிப்படையில், மக்களுக்கு மாற்றத்தை ஏற்ப டுத்துவதில் இலக்கியத்தை விட நாடகமும் அரங்கக் கலைகளும் சிறப்பாகப் பங்காற்ற முடியுமா? ஏனென்றால் இலக்கியத்திற்கு வாசிப்புத் தேவை.**

இசையை மேவ எதுவும் இல்லை. தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்பு இசையையும் ஆட்டங்களையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள் அல்லவா? மொழி தெரியாவிட்டாலும் அருமை அல்லவா?

- **ஆம். டெஸ்மண்ட் டூட்டு வின் பேச்சு முதல் ஏனைய நிகழ்த்துகலைகள் வரை இது உண்மை.**

உங்களுக்கு மொழி புரியவில்லை எனினும் அவற்றின் வீச்சையும் வேகத்தையும் உணரமுடிந்ததல்லவா? இவ்வ கையான உணர்வை அமெரிக்காவில் அடிமைகளின் எதிர்ப்புப் பாடல்களிலும் நீங்கள் உணரலாம். அவை இன்றும் தொடர்கின்றன. அமெரிக்காவில் அடிமைப்பட்ட அந்த மக்களின் படல்கள், இசை உலகில் எங்கு கேட்டாலும் நீங்கள் அவற்றின் வலுவுடனும் வீச்சுடனும் உறவு கொள்ள முடியும்.

- **உண்மை. இலக்கியத்தை விட இசை, பல்வேறு கலைகளின் கூட்டு என்பவை மிக வலிமையானவை என நீங்கள் கருதுகிறீர்களா?**

ஆம். இசையிலும் பாடல்களிலும் நாடகமும் துணை செய்கிறது. மொழியையும் நிலத்தையும் பொறுத்தவரை ஒடுக்குமுறை அரசுகள் எப்போதும் எம்மை அச்சுறுத்து கின்றன. பல மொழிகள் புழங்கும் நாடுகளில் ஆட்சி பெற்ற மொழியிலேயே எல்லாத் துறையிலும் பெயரீடு நிகழ்கிறது. மொழிகளுக்கு இடையேயான மேலாதிக்க உறவுகளை இவை ஊக்குவிக்கின்றன. இத்தகைய மேலாட்சி மிக்க மொழி உணர்வு பிழையானது. இவற்றை நான் எதிர்க்கிறேன். 'என் மொழி, என் கலாச்சாரம்; உன் மொழியை விட என் மொழியே உயர்ந்தது' என்பது பொரு ளற்றது. மேல்-கீழ் / உயர்ந்த / தாழ்ந்த படிநிலை உறவுகள் என அவை உருவாகும்போது, அவை நஞ்சா கின்றன. எமது மானுடத்தை வலியுறுத்துகிறபோது நாம் மற்றவர்களுடைய மானுடத்தையும் உறுதி செய்ய வேண்டும்.

- **எமது ஈழத்தமிழ் சமூகத்தினருக்கு, உங்கள் அனுப வங்கள் போல போர், இரத்தம் சிந்துதல் நடந்துள்ளது. கென்யாவின் அனுபவங்கள் எமக்கும் நெருக்க மானவை. போர், இழப்பு, அவலம், அஞர், படுகொ லைகள், துயரம் இருந்த சூழலில் இலக்கியத்தின் பங்கு என்ன? இலக்கியம் இந்தச் சூழ்நிலைகளில் எவ்வாறு உதவும்?**

இலக்கியம் குணப்படுத்தும், தெளிவு கொடுக்கும். கதை, நாடகம் ஆகியவையும் இதனைச் செய்யும். இலக் கியம் மனிதர்களுக்கும் இயற்கைக்கும், சமூகப் போராட் டங்களுக்கும் இடையிலான உண்மையான தொடர்பு களைக் காட்டும். இத்தகைய தொடர்புகளை அரசியல் மறைத்து விடும். எனினும் இலக்கியம் இவற்றைத் தொடர்ந்தும் அக்கறையோடு பின் தொடரும். நான் ரஷ்ய இலக்கியத்தைப் படிக்கும்போது, அங்கும் நான் எனது சூழலைக் காண்கிறேன். ஒரு சமூகத்தின் கதையை மற் றொன்றில் படிக்கும்போது, ஒற்றுமைகள் தவிர்க்க முடியாமல் ஒன்று போல இருக்கின்றன. நான் கென்யாவைச் சேர்ந்தவன். எனினும் மற்றைய மொழி இலக்கியங்களை வாசிக்கும் பொழுது எனக்கு இணக் கமான, நான் உறவு கொள்ளக் கூடிய அனுபவங்க ளையும் இனம் காண்கிறேன். சமூகமோதல், இனமோதல் போன்றவற்றில் இலக்கியம் காயங்களை ஆற்ற உதவும். நீங்கள் மற்றைய சமூகங்களின் கதைகளைப் படிக் கும்போது, உங்கள் சூழலையும் அங்கே பார்க்கலாம். மோதலும் முரண்பாடும் எங்கிருந்து வருகிறது என்று அறியலாம்.

- **கென்யாவில் பிரிட்டிஷ் ஆட்சியின்போது மௌ மௌ போராட்டத்தில் பலர் கொல்லப்பட்டனர். அந்த நேரத்தில் கலை, இலக்கியம் மக்களுக்கு மன அழுத்த விடுவிப்பு (Catharsis) அளித்ததா?**

மௌ மௌ போராளிகளை நாம் விடுதலைப் படை என்றே அழைத்தோம். இலக்கியம் கதார்சிஸை - மன அழுத்த விடுவிப்பு - அளிக்கிறது. இலக்கியத்தில் நிகழ்வு களைப் படிக்கும்போது, சிக்கல்களைப் புரிந்துகொள் ளலாம். எதிர்ப்பு இலக்கியம் முக்கியம். தென்னாபிரிக் காவில் பாடல்கள், கவிதைகள், நாடகம் மக்களை வசப்ப டுத்தின. இலக்கியம் மானுட இணைப்பை மலர்விக்கிறது. மனிதத்துவத்தை உண்மையாகக் கொண்டாடும்போது, 'நாம் எல்லோரும் மனிதர்கள்' என்று சொல்ல முடிகிறது. மற்றவர் எதிர்க்கிறார்கள் என்றாலும், நாம் மனிதர்கள்.

- **போர், துயரம், வன்முறை அனுபவித்தவர்கள், இந்த அனுபவத்தை மறந்துவிட விரும்புகின்றனர். இந்த வலியை வெளிப்படுத்த, இலக்கியம் உதவுமா? உங்கள் நாவல்களில் இந்த மோதல்களைப் பதிவு செய்ததால், மக்களுக்கு அவை எப்படி உதவின?**

நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நினைவு கொள்ளல் முக்கியம். ஆனால் காயத்தை மீண்டும் ஆழமாக்கக் கூடாது. காயம் இருப்பதை உணர வேண்டும்; 'காயம் இல்லை' என்று சொல்ல முடியாது.

- **உங்கள் எழுத்து, நாடகம் ஆகியன மக்களின் காயம் ஆற்ற, அஞரைத் தணிக்க உதவியதா?**

ஆம், குணப்படுத்த உதவியது. போராட்டத்தின் அடிப்படை, அரசியல், வர்க்க, வரலாற்று அடிப்படை களைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இலக்கியம் ஒரு நல்ல நினைவூட்டி. நினைவு முக்கியம். நினைவு இன்றிக் காயம் ஆறாது. அதற்கு இலக்கியம் எமக்கு உறுதி ணையாக இருக்கும்.



Susesh.K@thaiveedu.com



# ஙுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி - 1
# ஆபிரிக்க ஆலமரமும் குழந்தைகளும்

## - தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புகள்:**

ஆபிரிக்க இலக்கியத்தின் சிகரமாகத் திகழ்ந்த ஙுகி வா தியாங்கோ (Ngũgĩ wa Thiong'o) கடந்த மாதம் தனது 87-ஆவது வயதில் காலமானார். நாவலாசிரியர், நாடகாசிரியர், கட்டுரையாளர் எனப் பன்முகம் கொண்ட தியோங்கோவின் வாழ்க்கையும் படைப்புகளும், காலனித்துவத்திற்குப் பிந்தைய ஆபிரிக்கா எதிர்கொள்ளும் மிக அவசரமான கேள்விகளில் சிலவற்றை அடையாளப்படுத்துகின்றன.

கென்யத் தலைநகரமான நைரோபியின் வடக்கே உள்ள கமிரித்து என்ற கிராமத்தில் 1938-ஆம் ஆண்டு பிறந்த தியாங்கோ, மௌமௌ கிளர்ச்சியின் (Mau Mau rebellion) உச்சக்கட்டத்தில் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் கீழ் தனது இளமைக் காலத்தைக் கழித்தவர். ஒரு சகோதரர் காலனித்துவ எதிர்ப்பில் இணைந்தார், மற்றொருவர் கொல்லப்பட்டார், அவரது தாயார் கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார். தனது சொந்த மொழியான கிகுயுவைப் பேசுவதற்காக மாணவர்களைத் தண்டிக்கும் கத்தோலிக்க மிஷன் நடத்தும் நிறுவனமான அலையன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஆங்கிலம், கற்பித்தல் மொழி மட்டுமல்ல அதிகாரத்தின் மொழியாகவும் இருந்தது என்பதை அவர் உணர்ந்தது அங்குதான்.

1970-களில், ஒரு சமூகத்திற்கான நாடக அரங்க அமைப்பை  நிறுவ உதவினார். ந்காஹிகா ந்டீண்டா (I Will Marry When I Want) - (நான் விரும்பும் போது திருமணம் செய்து கொள்வேன்) என்ற நாடகத்தை அரங்கேற்றினார், இது கிகுயுவில் எழுதப்பட்டு தொழிலாளர்கள் மற்றும் கிராமவாசிகளால் நிகழ்த்தப்பட்டது.

காலனித்துவத்திற்குப் பிந்தைய உயரடுக்கினரை விமர்சித்த இந் நாடகம் 1977-இல் அரசாங்கத்தால் தடை செய்யப் பட்டது. நாடக அரங்கு உள்ளூர் அதிகாரிகளால் இடிக்கப் பட்டது. மேலும் தியாங்கோ விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டார். சிறை அறையில், 'சிலுவையில் தொங்கும் சாத்தான்' எனும் தனது முதல் நாவலை கழிப்பறைக் காகிதத் துண்டுகளில் எழுதத் தொடங்கினார்.

1986-ஆம் ஆண்டில் வெளியான 'சிந்தனையிலிருந்து மனதை விடுவித்தல்: ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல்' (Decolonizing the Mind: The Politics of Language in African Literature) என்ற படைப்பு அவரின் சிந்தனை களைக் கோட்பாட்டுருவாக்கம் செய்த தலையாய படைப் பாகும். அதில், மொழி காலனித்துவக் கட்டுப்பாட்டின் முக்கிய தளம் என்றும் ஆபிரிக்க மொழிகளை மீட்டெடுப்பது பண்பாட்டு சுய வெளிப்பாட்டிற்கு மட்டுமல்ல, ஏகாதிபத்திய ஆட்சியின் உளவியல் மரபை எதிர்ப்பதற்கும் அவசியம் என்றும் அவர் வாதிட்டார்.

அவரது மிகச் சமீபத்திய கட்டுரைத் தொகுப்பான, 'காலனியா திக்க சிந்தனையிலிருந்து மொழியை விடுவித்தலும் பிற புரட் சிகர சிந்தனைகளும்' (Decolonizing Language and Other Revolutionary Ideas) என்ற புத்தகம் இரண்டு முக்கிய விட யங்களைப் பேசுகிறது. முதலாவது, பல்கலைக்கழகங்களில் அறிவு உற்பத்தி, ஆபிரிக்க புலமைத்துவ ஆய்வியலில் உல கமயமாக்கலின் தாக்கம் மற்றும் ஆபிரிக்க மொழிகளின் வளர்ச்சிக்கும் செழுமைக்குமான அமைப்பை வளர்ப்பதில் அரசாங்கத்தின் பங்கின் முக்கியத்துவதைப் பேசுகிறது. இரண்டாவது, சோயின்கா, அச்செபே மற்றும் கிரேஸ் ஓகோட் போன்ற பல ஆபிரிக்க எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையா ளர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் மற்றும் நினைவுகூருதல் களைப் பற்றிப் பேசுகிறது. மொழி என்பது வெறும் தகவல் தொடர்புக்கான வாகனம் மட்டுமல்ல, அறிவு மற்றும் அடையா ளத்தின் களஞ்சியம். நமது சொந்த மொழிகளில் சிந்திக்க, கனவு காண மற்றும் கற்பனை செய்ய உரிமையை மீட்டெடுக் கும்போது உண்மையான விடுதலை தொடங்குகிறது என்ற வலியுறுத்தலால் இந்தப் புத்தகம் உயிரூட்டப்பட்டுள்ளது.

தியாங்கோவின் மறைவால் ஆபிரிக்கா துக்கத்தில் ஆழ்ந் துள்ளது. உலகம் அதன் மிகத் தீவிரமான எழுதுகோல்களில் ஒன்றையும், ஆபிரிக்கக் கண்டத்தையே தட்டியெழுப்பிய ஓர் உயர்ந்த அறிவாற்றலையும் இழந்துவிட்டது. தியாங்கோ, ஓர் எழுத்தாளரை விட மேலானவர், அவர் ஒரு மனச்சாட்சி, ஒரு பண்பாட்டுப் போர்வீரன், எல்லாவற்றிலும் மேலாக ஆபிரிக்க மனதின் விடுதலைக்கான சமரசமற்ற குரல்.

அவரது வாழ்நாள் இலக்கியப் பங்களிப்பு, நாவல்கள், நாட கங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும் குழந்தைப் புத்த கங்கள் இருந்தபோதிலும், அவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஒருபோதும் கிடைக்கவில்லை. இது தற்செய லானது அல்ல, மாறாக ஒரு அமைதியான கண்டனம். அவரது அசைக்க முடியாத பான்-ஆபிரிக்கவாதம், அவரது ஏகாதி பத்திய எதிர்ப்பு நிலைப்பாடு மற்றும் ஆபிரிக்க மனதை காலனித்துவத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற அவரது அழைப்பு ஆகியவை அவரை மிகவும் எதிர்க்கும், மிகவும் ஆபத்தான, உலகளாவிய அங்கீகாரத்தின் வாயில் காவலர்க ளுக்கு மிகவும் சமரசமற்றவராக ஆக்கியது. அவர் மேற்கு நாடுகளை மகிழ்விக்க எழுதவில்லை, ஆபிரிக்காவை எழுப்ப எழுதினார். அதற்காக, அவர் ஒரு விலையைக் கொடுத்தார். அவரை வரலாறு நினைவில் கொள்ளும். ஏனென்றால் தியாங்கோ பேசியபோது, ஒரு கண்டம் கேட்டது. அவர் எழுதி யபோது, முழு தலைமுறையினரும் தங்கள் மொழிகளை, அவர்களின் வரலாறுகளை, அவர்களின் எதிர்காலத்தை மீட் டெடுக்கத் தைரியத்தைப் பெற்றனர்.

'ஒரு பெரியவர் இறந்தால், ஒரு நூலகம் எரிகிறது' என்று ஆபிரிக்க பழமொழி உண்டு. தியோங்கோவின் மறைவில், ஒரு முழு நூலகமும், அறிவு, எதிர்ப்பு மற்றும் பண்பாட்டுப் பெருமையின் கோட்டையும் தீப்பிடித்து எரிந்துவிட்டது. ஆனாலும் அவரது வார்த்தைகள் இறக்காது. அவரது புத்த கங்கள் ஆட்சிகளை விட அதிக காலம் இருக்கும். அவரது கருத்துக்கள் ஒவ்வொரு கொடுங்கோலரையும் வேட்டை யாடும், மேலும் மொழி மற்றும் அடையாளம் முற்றுகையிடப் பட்ட இடங்களில் அவரது ஆவி சுதந்திரத்தின் நெருப்பைத் தொடர்ந்து தூண்டிவிடும்.

இந்தப் பேராளுமையின் படைப்புக்களையும், சிந்தனைக ளையும் சுருக்கமாகப் பார்க்கும் இந்த அஞ்சலிக் குறிப்புத் தொடர் 5 கட்டுரைகளைப் பற்றியது. முதலாவது கட்டுரை குழந்தைகளுக்கான அவர் எழுதிய புத்தகங்களைப் பற்றிப் பேசுகிறது.

காலனித்துவ மரபுகளை சவாலுக்குட்படுத்தும் மற்றும் பண்பாட்டு மீட்சியை ஆதரிக்கும் அவரது நாவல்கள், கட்டு ரைகள் மற்றும் நாடகங்களுக்காக தியாங்கோ கொண்டாடப் படுகிறார். இருப்பினும், குழந்தைகள் இலக்கியத்திற்கான அவரது பங்களிப்புகள், குறைவாக அறிவிக்கப்பட்டாலும், சமமாகக் குறிப்பிடத்தக்கவை. Njamba Nene and the Flying Bus, Njamba Nene and the Cruel Chief, Njamba Nene's Pistol, போன்ற படைப்புகள் குழந்தைகள் இலக்கியத்தின் நிலப்பரப்பில் தனித்துவமான இரத்தினங்களாக ஒளிர் கின்றன. கிகுயு மொழியில் எழுதப்பட்டு பின்னர் ஆங்கிலம் முதலான பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இந்தக் கதைகள், ஆபிரிக்க யதார்த்தங்கள், வாய்மொழி மரபுகள் மற்றும் காலனித்துவ எதிர்ப்புக் கருப்பொருள்களில் தங்களை வேரூன்றி, வழக்கமான குழந்தைகள் புத்தகங்களிலிருந்து ஆழமான விலகலைக் கொண்டுள்ளன.

## குழந்தை இலக்கியத்திற்கான ஒரு தனித்துவமான அணுகுமுறை:

உலகளாவிய குழந்தைகள் இலக்கியத்தின் பெரும்பகுதியை ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பிய மையக் கட்டமைப்புகளை நிராகரிப்பதன் வழி குழந்தை இலக்கியங்களை எவ்வாறு காலனிய நீக்கம் செய்யலாம் என்பதை தியாங்கோவின் குழந் தைகளுக்கான புத்தகங்கள் சிறப்புற எடுத்துக்காட்டுகின்றன. பல மேற்கத்தேய குழந்தைகளுக்கான புத்தகங்களைப் போலல்லாமல், அவை பெரும்பாலும் கற்பனையான அமைப் புகள் அல்லது குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழல்களிலிருந்து பிரிக்கப்பட்ட உலகளாவிய ஒழுக்கப் பாடங்களை நம்பி யுள்ளன, தியாங்கோவின் கதைகள் கென்யப் பண்பாடு, வரலாறு மற்றும் ஆபிரிக்கக் குழந்தைகளின் வாழ்க்கை அனு பவங்களில் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளன. அவரது கதைகள்

தப்பிக்கும் கற்பனைகள் அல்ல, மாறாகப் பிந்தைய காலனித்துவ கென்யாவின் சமூக-அரசியல் யதார்த்தங்களுடன் ஈடுபடும் கதைகள், அவை இளம் வாசகர்களுக்கு அணுகக்கூடியதாகவும் அதிகாரம் அளிக்கும் வகையிலும் உள்ளன.




உதாரணமாக, நஜாம்பா நேனே (Njamba Nene) என்ற தொடரில் எழுதப்பட்ட மூன்று புத்தகங்களும் காலனித்துவ மற்றும் காலனித்துவத்திற்குப் பிந்தைய பதட்டங்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு உலகத்தை வழிநடத்தும் சிறுவனொருவனின் சாகசங்களைப் பின்பற்றுகின்றன. இந்தக் கதை கென்ய நாட்டுப்புறக் கதைகள், வாய்வழிக் கதைசொல்லல் மற்றும் வரலாற்றுப் போராட்டத்தின் கூறுகளை ஒருங்கிணைத்து, தனது சமூகத்தில் வளமான மற்றும் வேரூன்றிய ஒரு ஹீரோவை முன்வைக்கிறது. இது மேற்கத்திய குழந்தைகள் இலக்கியத்தின் தனிமனிதக் கதாநாயகர்களுடன் கடுமையாக வேறுபடுகிறது, எடுத்துக்காட்டாக எனிட் பிளைட்டன் அல்லது ரோல்ட் டால் ஆகியோரின் படைப்புகளில், தனிப்பட்ட வெற்றி அல்லது விசித்திரம் பெரும்பாலும் கூட்டுப் பண்பாடுசார் அடையாளத்தை மறைக்கிறது. தியாங்கோவின் ஹீரோக்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. அவர்கள் ஒரு சமூகப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர், ஒற்றுமை மற்றும் மீள்தன்மையின் மதிப்புகளை பிரதிபலிக்கிறார்கள்.




மேலும், தனது தாய்மொழியான கிகுயுவில் இந்தப் புத்தகங்களை எழுத தியாங்கோ முடிவு செய்ததானது, பண்பாட்டு உறுதிப்பாட்டின் தீவிரமான செயலாகும். பெரும்பாலான குழந்தை இலக்கியங்கள், காலனித்துவத்திற்குப் பிந்தைய சூழல்களில் கூட, பெரும்பாலும் ஆங்கிலம் அல்லது பிரஞ்சு போன்ற காலனித்துவ மொழிகளில் எழுதப்படுகிறது. இது இளம் வாசகர்களை அவர்களின் சொந்த மொழியியல் பாரம்பரியத்திலிருந்து அந்நியப்படுத்தக்கூடும். கிகுயுவுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தியாங்கோ தனது கதைகள் கென்யக் குழந்தைகளுடன் உண்மையாக எதிரொலிப்பதை உறுதி செய்கிறார், அவர்களின் மொழி மற்றும் அடையாளத்தின் பெருமையை வளர்க்கிறார். இந்த மொழியியல் தேர்வு அவரது படைப்புகளை, பரந்த சந்தையை அடையப் பெரும்பாலும் பண்பாட்டுத் தனித்துவத்தை இழக்கும் வகையில் காலனித்துவ மொழிகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய பிற ஆபிரிக்கக் குழந்தைகளுக்கான புத்தகங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.




தியாங்கோவின் குழந்தைகளுக்கான புத்தகங்கள் உலகளாவிய மற்றும் தனித்துவமான ஆபிரிக்கக் கருப்பொருள்களுடன் பின்னப்பட்டுள்ளன, அவை கல்வி மற்றும் அதிகாரம் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு வழங்கும் சக்தி வாய்ந்த கருவிகளாக அமைகின்றன. அவற்றில் மூன்று முக்கிய கருப்பொருள்கள் தனித்து நிற்கின்றன: காலனித்துவ எதிர்ப்பு, பண்பாட்டுப் பெருமை மற்றும் கூட்டுணர்வு.

**காலனித்துவ எதிர்ப்பு:**

தியாங்கோவின் கதைகள் இளம் வாசகர்களுக்கு ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பை வெளிப்படுத்துவதன் அவசியம் என்ற கருத்தை நுட்பமாக அறிமுகப்படுத்துகின்றன. நஜாம்பா நேனேவில், கதாநாயகன் தனது சமூகத்தைப் பாதுகாக்கப் புத்திசாலித்தனத்தையும் தைரியத்தையும் பயன்படுத்திக் காலனித்துவ அதிகாரிகளை எதிர்கொள்கிறார். அரசியல் கருப்பொருள்களிலிருந்து வெட்கப்படும் பல குழந்தைப் புத்தகங்களைப் போலல்லாமல், இக்கதைகள் வரலாற்றை சுத்தப்படுத்துவதில்லை. அவை காலனித்துவத்தை அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் ஒரு உறுதியான சக்தியாக முன்வைக்கின்றன, குழந்தைகள் அநீதியை எதிர்த்துக் கேள்வி கேட்கவும், அவர்களின் உலகில் முகமையைக் கற்பனை செய்யவும் ஊக்குவிக்கின்றன.

**பண்பாட்டுப் பெருமை:**

தியாங்கோ தனது கதைகளில் கிகுயு வாய்வழி மரபுகள், பழமொழிகள் மற்றும் நாட்டுப்புறக் கதைகளின் கூறுகளை ஊற்றி, ஆபிரிக்க பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கொண்டாடுகிறார். இது பெரும்பாலும் மேற்கத்தேய விசித்திரக் கதைகள் அல்லது பொதுவான கதைகளை வரைந்த குழந்தைப் புத்தகங்களுடன் முரண்படுகிறது. கென்ய நிலப்பரப்புகள், மொழிகள் மற்றும் மரபுகளில் தனது கதைகளை அடித்தளமாகக் கொண்டு, தியாங்கோ ஆபிரிக்க அடையாளத்தில் சொந்த உணர்வையும் பெருமையையும் வளர்க்கிறார். காலனித்துவக் கல்வி முறைகளால் பெரும்பாலும் நிலைநிறுத்தப்படும் உள்மயமாக்கப்பட்ட தாழ்வு மனப்பான்மையை எதிர்க்கிறார்.

**கூட்டுணர்வு:**

மேற்கத்தேய குழந்தைகள் இலக்கியத்தில் பொதுவாகக் காணப்படும் தனிமனித ஹீரோக்களைப் போலல்லாமல், தியாங்கோவின் கதாநாயகர்கள் ஒத்துழைப்பு மற்றும் சமூக ஆதரவு மூலம் செழித்து வளர்கிறார்கள். நஜாம்பா நேனே மற்றும் பறக்கும் பேருந்தில்,



ஹீரோவின் வெற்றியானது கூட்டு அறிவு மற்றும் ஒற்றுமையைச் சார்ந்துள்ளது. இது ஆபிரிக்க மதிப்புகளை ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதைப் பிரதிபலிக்கிறது. இந்தக் கருப்பொருள் ஹாரி பாட்டர் அல்லது தி க்ரோனிகல்ஸ் ஆஃப் நார்னியா போன்ற புத்தகங்களில் காணப்படும் பெரும்பாலும் தனிமையான, தன்னம்பிக்கை கொண்ட முன்மாதிரிகளை சவாலுக்குட்படுத்துகிறது. அதற்குப் பதிலாக கூட்டுச் செயற்பாட்டின் மகத்துவத்தையும் சமூகத்தில் வேரூன்றிய வீரத்தின் மாதிரியையும் வழங்குகிறது.

### தியாங்கோவின் குழந்தைப் புத்தகங்களின் தனித்துவம்:

தியாங்கோவின் குழந்தைப் புத்தகங்கள் இலக்கியத்திற்கு முக்கிய பங்களிப்பாகும், ஏனெனில் அவை இளம் வாசகர்களுக்கான கதைகளின் நோக்கத்தையும் ஆற்றலையும் மறுவரையறை செய்கின்றன. அவை இளம் மனங்களைக் காலனித்துவ நீக்கம் செய்வதற்கான கருவிகளாகவும், உலகளாவிய குழந்தைகள் இலக்கியத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பிய மைய சார்புகளை சவாலுக்குட்படுத்தவும் உதவுகின்றன. ஆபிரிக்கக் குழந்தைகளை அவர்களின் சொந்தக் கதைகளில் கதாநாயகர்களாக முன்வைப்பதன் மூலம், தியாங்கோ முக்கிய கதைகளில் ஆபிரிக்கக் கண்ணோட்டங்களின் ஓரங்கட்டலை எதிர்க்கிறார். அவரது புத்தகங்கள் இளம் வாசகர்கள் தங்களை மாற்றத்தின் முகவர்களாகவும், ஒடுக்குமுறையை எதிர்க்கவும், தங்கள் பாரம்பரியத்தைக் கொண்டாடும் திறன் கொண்டவர்களாகவும் பார்க்க அதிகாரம் அளிக்கின்றன.

மேலும், இந்தப் படைப்புகள் குழந்தைகள் இலக்கியத்திற்கும் தீவிர சமூக-அரசியல் கதையாடலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கின்றன. குழந்தைகள் புத்தகங்கள் பொழுதுபோக்கிற்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில், தியாங்கோவின் கதைகள் போதனையற்ற கல்வியை வழங்குகின்றன, அடையாளம், எதிர்ப்பு மற்றும் பண்பாடு பற்றிய சிக்கலான கருத்துக்களை அணுகக்கூடிய கதைகளைப் பின்னுகின்றன. இது, குழந்தைகளுக்கு அவர்களின் உலகத்தைப் பற்றிய விமர்சன சிந்தனையை அறிமுகப்படுத்த விரும்பும் கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பெரும் துணையாக அமைகின்றது.

இலக்கியத்தைக் காலனித்துவ நீக்கம் செய்யும் பரந்த திட்டத்திற்கு தியாங்கோவின் குழந்தைப் புத்தகங்கள் பங்களிக்கின்றன. கிகுயுவில் எழுதுவதன் மூலம், ஆபிரிக்க இலக்கியத்தில் காலனித்துவ மொழிகளின் ஆதிக்கத்தை அவர் சவாலுக்குட்படுத்தினார். மற்ற எழுத்தாளர்களும் பூர்வீக மொழிகளை ஏற்றுக்கொள்ள வழி வகுத்தார். இந்த மொழியியல் புரட்சி குழந்தைகளிடம் ஆதிக்கம் கொண்டு, அடுத்த தலைமுறை அவர்களின் யதார்த்தங்களை பிரதிபலிக்கும் மற்றும் அவர்களின் பண்பாட்டு மதிப்பை உறுதிப்படுத்தும் கதைகளுடன் வளர்வதை உறுதி செய்கிறது.

### தொடரும் குறிப்புகள்:

ஙுகி வா தியாங்கோவின் குழந்தைகளுக்கான புத்தகங்கள் அவரது இலக்கிய மரபின் தனித்துவமாக மதிப்பிடப்பட்ட அம்சமாகும். அவற்றின் தனித்துவமான பண்பாட்டு வேர்கள், பூர்வீக மொழியின் பயன்பாடு மற்றும் காலனித்துவ எதிர்ப்பு ஆகிய கருப்பொருள்களில் ஆழமாக வேரூன்றியது. இது பெரும்பாலும் ஐரோப்பிய மையப்படுத்தப்பட்ட மற்றும் அரசியல் சார்பற்ற குழந்தைகள் என்ற இலக்கிய நிலப்பரப்பிலிருந்து அவர்களை வேறுபடுத்துகிறது. எதிர்ப்பு, பண்பாட்டு பெருமை மற்றும் கூட்டுணர்வு ஆகிய கருப்பொருள்கள் மூலம், இளம் வாசகர்கள் தங்கள் அடையாளங்களைத் தழுவி அநீதியைக் கேள்வி கேட்கும் திறனை தியாங்கோவின் கதைகள் உருவாக்குகிறன. இந்தப் படைப்புகள் வெறும் கதைகள் அல்ல. அவை பண்பாட்டு மறுசீரமைப்பு மற்றும் இலக்கிய புதுமைக்கான செயல்கள். இது ஆபிரிக்க இலக்கியம் மற்றும் உலகளாவிய இலக்கிய இயங்கியல் ஆகிய இரண்டிற்கும் அழியாத பங்களிப்பைச் செய்கின்றன. காலனித்துவத்தின் மரபுகளுடன் இன்றும் போராடி வரும் உலகில், தியாங்கோவின் குழந்தைப் புத்தகங்கள் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கின்றன, மனதையும் எதிர்காலத்தையும் வடிவமைக்கும் கதைகளின் சக்தியை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

- தொடரும்



meenilankco@thaiveedu.com

# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

2

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

## உலக மொழிகள்:

உலகில் உள்ள மொழிகளை, மொழியியல் அறிஞர்கள் பல்வேறு குடும்பங்களாக வகைப்படுத்தியுள்ளனர். மனித இனம் எவ்வாறு தமக்குள் ஒன்றுகூடி ஒட்டும் உறவுமாக வாழ்கின்றதோ, அப்படியே மனிதர்கள் பேசும் மொழிகளும் குடும்பங்களாகக் காணப்படுகின்றன. உலகில் பேசப்படும் மொழிகள் 6500 எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 2000 மொழிகள் ஆயிரத்திற்கும் குறைவான மக்களாலேயே பேசப்படுகின்றன. உலகிலுள்ள மொழிகளை மொழியியல் அறிஞர்கள் இனவழி மொழிக்குடும்பம் எனவும், அமைப்புவழி மொழிக்குடும்பம் எனவும் இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர்.

இனவழிக்குடும்பம் அல்லது மரபுவழி வகைப்பாட்டு (Genealogical Classification of Languages) மொழிகள் பல தமக்குள் இனத்தொடர்புடையன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந்தன என்றும், வங்காளி, இந்தி, பஞ்சாபி, ஆங்கிலம், ஜெர்மன், இலத்தீன், பிரஞ்சு போன்ற மொழிகள் வேறொரு இனத்தினைச் சார்ந்தவையாகவும் பாகுபடுத்தலாம். இந்தப் பாகுபாடுகளுக்குக் காரணம் மொழிகளிலுள்ள பல்வேறுபட்ட ஒலிகள். இவ் ஒலிகளே சொற்களின் பொருளைத் தந்து நிற்கின்றன. சொற்களின் பகுதிகள் அதாவது பகுதி, விகுதி, இடைநிலை என்று பல கூறுகள் உள்ளன. அது போல ஒரு சொல்லை எடுத்துப் பார்க்கும் போது பல ஒட்டுக்கள் அதாவது முன்னொட்டு, இடையொட்டு, பின்னொட்டு என ஒட்டுக்கள் இருப்பதனைக் காணலாம். சொல்லில் காணப்படும் ஒலிக்கும், அச்சொல் தரும் பொருளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. குறிப்பிட்ட ஒரு ஒலி குறிப்பிட்ட ஒரு பொருளைத்தான் தரவேண்டும் என்றும் இல்லை. உதாரணமாக தமிழில் 'நாய்' என்பதை ஆங்கிலேயர்கள் 'dog' என்றும் ஜெர்மானியர்கள் 'hund' என்றும் அரேபியர்கள் 'Kallo' என்றும் அழைக்கின்றனர். ஒரே பொருளைத் தரும் சொற்கள் பல மொழிகளில் பல்வேறு ஒலிகளைக் கொண்டுள்ளன. ஆனால் சில மொழிகளில் ஒலி ஒற்றுமை காணப்படுவதனைக் காணலாம். தமிழ், மலையாளம், கன்னடம் மற்றும் தெலுங்கு போன்ற மொழிகளில் ஒலி ஒற்றுமை உள்ள சொற்கள் பலவற்றைக் காணலாம். அதுபோல வங்காளம், ஒரியா, இந்தி போன்ற மொழிகளிலும் இந்த ஒலி ஒற்றுமை காணப்படுவது கண்கூடு. தமிழில் அப்பா, அம்மா போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் Papa, mama போன்ற சொற்கள் ஒலி ஒற்றுமை கொண்டு காணப்படுவதனைக் காணலாம். இதைப் போல் ஆங்கிலச் சொற்களும் ஜெர்மன் சொற்களில் உள்ள ஒலி ஒற்றுமைகளைப் பார்க்கும் போது,

| **ஆங்கிலம்** | **ஜெர்மன்** |
|---|---|
| Plant | Pflanze |
| Apple | Apfel |
| Open | Offen |
| Eat | Esson |
| Corn | Korn |

இப்படிப் பல சொற்கள் பல்வேறுபட்ட மொழிகளில் ஒலி ஒற்றுமை கொண்டு உலக மொழிகள் பலவற்றிலும் காணப்படுகிறன்றன.

## இந்திய மொழிக்குடும்பம்:

உலகில் மொழி வளம் மலிந்த நாடுகளுள் இந்தியா ஒன்றாகக் காணப்படுகிறது. பல்வேறு இனக்குழுக்களின் பண்பாடுகளின் மொழிக் குடும்பங்களின் சங்கமமாக இந்தியா காணப்படுகிறது. இங்கு சுமார் 1652 மொழிகள் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது. உலகில் உள்ள நாடுகளில் இந்தியாவில் மிக அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு காலத்தில் சோவியத் ரஷ்யா பிளவுபட்ட பின், இந்தியா அதிக மொழி பேசும் நாடாக விளங்கியது.

இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றிய தகவல்கள் நாளுக்கு நாள் மாறுவதனை நாம் காணக் கூடியதாக உள்ளது. ஆரம்ப காலத்தில் இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் இருந்து தோன்றியவை என்று தவறாகக் கணிக்கப்பட்டடிருந்தது. திராவிட மொழிகளின் தந்தை என அழைக்கப்படும் டாக்டர் கால்டுவெல் தென்னாட்டில் பேசப்படும் தென்திராவிட மொழிகளான தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலான ஒன்பது மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து மாறுபட்ட திராவிட மொழிக்குடும்பம் எனும் தனிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று 1856-இல் நிறுவினார்.

இந்த இரண்டு மொழிக் குடும்பத்தினைத் தவிர திபெத்தோ - சீன மொழிக் குடும்பம் ஆஸ்ட்ரிக் அல்லது முண்டா மொழிக்

குடும்பம் ஆகிய இரண்டு வேறுபட்ட மொழிக் குடும்பங்களும் இந்திய மொழிக் குடும்பத்தில் இணைந்து கொண்டன. 1864-இல் 'மாக்ஸ்முல்லர்' முண்டாமொழியைத் தனிக்குடும்ப மாகக் கண்டறிந்தார். இந்த நிலையில் இந்தியாவில் நான்கு வேறுபட்ட மொழிக் குடும்பங்கள் இருப்பதாக மொழி அறி ஞர்கள் கண்டறிந்தனர். பல மொழிக் குடும்பங்கள் இருந் தாலும் மொழியியலாளர்கள் இந்தியாவின் மொழிக் குடும் பங்கள் நான்கு என்று வகைப்படுத்தியுள்ளனர்.

### இந்தோ – ஆரிய மொழிக் குடும்பம்:

இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தில் பஞ்சாபி, சிந்தி, ஹிந்தி, உருது, பிகாரி, ராஜஸ்தானி, குஜராத்தி, மராத்தி, அசாமி, வங்காளி, ஒரியா, பஹரி, காஷ்மீரி, சமஸ்கிருதம் என சில முக்கிய மொழிகள் காணப்படுகின்றன. பழைய இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தில் ஏராளமான பேச்சுவழக்கு மொழிகள் இருந்தன. அவற்றுள் மகதி, அர்த்த மகதி, சூரசேனி போன்றவை உலகப் புகழ் பெற்றவை. இலக்கிய வழக்குப் பெற்றவையான சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் போன்ற மொழிகள் புகழ் பெற்றவையாகும். இவற்றுள் சமஸ் கிருதம் தமிழுக்கு நிகரான பழமை இலக்கியம், பாரம்பரியம் என்பவற்றைக் கொண்டு திகழ்கிறது.

பிராகிருதமும் பாலியும் மிகச் செல்வாக்குப் பெற்ற பழைய இந்திய மொழிகளாகும்.

### முண்டா அல்லது கோல் – ஆஸ்ட்ரிக் ஆசிய மொழிக் குடும்பம்:

இந்திய நாட்டின் தொன்மையான மொழிக் குடும்பமான ஆஸ்டிரிக் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பல பிரிவுகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. முண்டா அல்லது கோல் மொழிகள் கிழக்கு இந்தியப் பகுதிகளிலும் நடு இந்தியப் பகுதிகளிலும் வழக்கிலுள்ளன. தேயிலைத் தோட் டங்களில் பணி புரியும் முண்டாரி அல்லது சந்தாலி மொழி களைப் பேசுவோரால் இவை வடக்கு வங்காளம், அசாம் போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண் டும். இம்மொழிகள் சோட்டா, நாக்பூர், ஒரிசா, மத்திய பிர தேசம், வங்காளம் போன்ற பகுதிகளில் பேசப்படுகின்றன. சவரா, கடபா போன்ற மொழிகளும் முண்டா மொழிக் குடும் பத்தின் பிரிவில் உள்ளன. காசி (Khasi) மலையில் வாழ்வோ ராலும் இம்மொழி பேசப்படுகிறது. சந்தாலி மொழி 30 இலட் சம் மக்களால் பேசப்படுகிறது. முண்டாரியிலும் ஹோ (Ho) விலும் ஏராளமான வாய்மொழி இலக்கியங்கள் காணப்படு கின்றன. 19-ஆம் நூற்றாண்டில் ஏராளமான பிறநாட்டுக் கிறிஸ்தவச் சமயத் தொண்டர்கள் இம்மொழியின் வாய்மொழி வழக்காறுகளைப் பயன்படுத்திப் பல நூல்களை வெளியிட் டுள்ளனர். சந்தாலி மொழியிலுள்ள இலக்கியங்கள் பெரும் பாலும் ரோமன் எழுத்துகளில் அச்சிடப்பட்டுள்ளன. ஆஸ் டிரிக் மொழிகளுள் ஒன்றான காசி (Khasi) மொழி மூன்று இலட்சம் மக்களால் பேசப்படுகின்றன. ரோமன் எழுத்துக் களில் இம்மொழியின் இலக்கியங்கள் பல கிறிஸ்தவ அருட் தொண்டர்களால் அச்சிடப்பட்டுள்ளன. 1864-இல் மாக்ஸ் முல்லர் முண்டா மொழியினைத் தனி மொழிக் குடும்பமாகக் கண்டறிந்தார். வடக்கு முண்டா தெற்கு முண்டா என்று இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கொர்கு மற்றும் கேர்வாரி வடக்குப் பகுதியில் அமையப்பெற்றுள்ளது. தென் பகுதியில் கரியா - ஜவாங், குதூப் மற்றும் சோரோ - கொரும் என்று மூன்று சிறு குழுக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தெற்கு பீகார் மற்றும் ஒரிசா போன்ற பகுதிகளில் இம் மொழிகள் பேசுவோர் வாழ்கின்றனர்.

முண்டா மொழியின் பண்புகளாக உயிரெழுத்துகள் மிகுதி யாகக் காணப்படும். இம்மொழியில் முன்னொட்டு, இடை யொட்டு, பின்னொட்டு போன்றவை காணப்படுகின்றன. பால் பாகுபாடு இம்மொழியில் இல்லை. ஒருமை பன்மையுடன் பெயர்ச்சொற்கள், உயர்திணை, அஃறிணை என்று இரண்டா கப் பகுக்கப்பட்டுள்ளன. எண்ணுப் பெயர்கள் அதிக பட்சம் இருபது வரை உள்ளது. முண்டா மற்றும் சந்தாலி மொழி களில் சில நாட்டுப்புறப் பாடல்களும், கதைகளும் காணப்ப டுகின்றனவே தவிர வேறு எந்த இலக்கிய வளமும் இம் மொழியில் இல்லை.

### திராவிட மொழிக் குடும்பம்:

இந்திய நாட்டில் காணப்படும் மொழிகளில் இந்தோ - ஆரிய மொழிகளுக்கு அடுத்தபடியாக அதிகமான மக்களால் பேசப் படுவன திராவிட மொழியாகும். எத்தனையோ நூற்றாண்டு களாக வாழ்ந்து வரும் திராவிட மக்களால் பேசப்படுவன இம் மொழியாகும். இத்திராவிட மொழிகளில் சில இலக்கியம் கண்டவை, பல இலக்கியம் காணாதவை. சில, சிலகோடி மக்களால் பேசப்படுபவை. பல, ஒரு சில ஆயிரம் மக்களால் பேசப்படுபவை. சில, நாட்டிலும் நகரத்திலும் வாழ்கின்ற மக்க ளால் பேசப்படுவன. பல, காட்டி லும் மேட்டிலும் வாழ்கின்ற பழங் குடி மக்களால் பேசப்படுபவை.

***திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள மிக முக்கிய மொழிகளாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தொன்மையும், இலக்கியச் செழுமையும் கொண்டதாக காணப்படுகின்றன.***

உலகம் முழுவதும் ஆயிரத் திற்கு மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இந்த மொழிகளைப் பல்வேறு குடும் பங்களாகப் பிரித்து ஆராய் கின்ற ஒப்பியல் அறிஞர்கள் இதில் தலைசிறந்ததாக எட்டு மொழிக் குடும்பங்கள் காணப்ப டுவதாகக் கூறியுள்ளனர். இந்த எட்டு மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிக் குடும்பம் ஒன்றாகக் காணப்படுவது குறிப் பிடத்தக்கது. திராவிட மொழிக் குடும்பம் இந்திய மொழிக் குடும் பத்தில் பேசுவோரை வைத்து மதிப்பிடும் போது இரண்டாவது மொழிக் குடும்பமாகும். இந்திய மக்கள் தொகையில் 25 சதவீத மக்கள் திராவிட மொழியினைப் பேசுகின்றனர். திராவிட மொழிக் குடும்பத்தி லுள்ள மிக முக்கிய மொழிகளாகத் தமிழ், தெலுங்கு, கன்ன டம், மலையாளம் ஆகிய மொழிகள் தொன் மையும், இலக் கியச் செழுமையும் கொண்டதாக காணப்படுகின்றன.

இந்தியாவில் உள்ள நான்கு மொழிக் குடும்பங்களில் திரா விட மொழிக் குடும்பம் மிகவும் பழமை வாய்ந்தது. மொகஞ் சதாரோ, ஹரப்பா நாகரிகங்களை ஏற்படுத்திய சிந்து - பஞ்சாப் பள்ளத்தாக்குகளில் வாழ்ந்தவர்கள் திராவிடர்கள்

என்பதையும் ஆரியர் வருகையால் தென்னிந்தியப் பகுதிகளுக்கு இவர்கள் துரத்தியடிக்கப்பட்டனர் என்பதனையும் வரலாற்று அறிஞர்கள் வலியுறுத்திச் சொல்கின்றனர். பலூசிஸ்தானில் (பாகிஸ்தானின் ஒரு பகுதி) பேசப்படும் பிராகுயி மொழி, திராவிடர்கள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்ற உண்மையை எடுத்துக் கூறுகின்றதனைக் காணலாம் என்கிறார் மொழியியலறிஞர் பேராசிரியர் எஸ்.கே. சட்டர்ஜி. சிந்து கங்கைப் பகுதிகளில் திராவிட மொழிகள் பேசப்பட்டு வந்ததை ஹீராஸ் எனும் பாதிரியாரும் ஒப்புக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

திராவிட மொழிகள் ஆசிய மொழிகளான கொரிய மொழி, ஜப்பானிய மொழி ஆகியவற்றோடு கொண்டுள்ள உறவு அறிஞர் பலரால் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பேராசிரியர் எச்.பி. ஹியூபர் (H.B. Hubber) என்பவர் தாம் எழுதிய கொரிய மொழி திராவிட ஒப்பாய்வு ( A Comparative Study of Korean Language and Dravidian Family) என்ற நூலில் கொரிய மொழியில் திராவிட மொழிகளின் பாதிப்பு, குறிப்பாகத் தமிழ் மொழியின் தாக்குரவு அதிகம் காணப்படுவதாகக் கூறியுள்ளார். டாக்டர் சுசுமோ ஓனோ என்னும் ஜப்பானிய மொழிநூல் வல்லுநர் திராவிட மொழிகளுள் தலைமை இடத்தைப் பெறும் தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் இடையேயுள்ள உறவுகளைப் பல நிலைகளில் விரிவாக ஆய்வு செய்து ஜப்பானிய மொழியின் மூலமொழி தமிழே என்று முடிவு செய்துள்ளார். தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் இடையே ஒலி நிலையில் ஏற்பட்ட தொடர்புகளைத் ‘தமிழ் - ஜப்பானிய ஒலி ஒற்றுமைகள்’ (Sound Correspondences Between Tamil and Japanese) என்ற தனி நூலாக 1980-களில் அவர் வெளியிட்டார். தமிழர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் இடையே பண்பாட்டு நிலைகளில் காணப்படும் உறவுகளை ஜப்பானியர்கள் ‘தமிழர் உலகப்பார்வையும் சடங்குகளும்’ (world View and Rituals among Japanese and Tamils) என்ற தலைப்பில் தனி நூலாக 1985-இல் வெளியிட்டுள்ளார்.

### சீன – திபெத்திய மொழிக் குடும்பம்:

இதனைத் தாய் - சீன மொழி, திபெத்திய - பர்மன், எனிசை - ஒஸ்தயக் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் சீன மொழி முக்கியமானதாகும். இதனை ஒரே மொழி எனப் பலர் எண்ணினாலும் இதில் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர் புரிந்து கொள்ள முடியாத அளவிற்குக் கிளை மொழிகள் உள்ளன. இவற்றுள் மிகப் பெரும்பாலானோர் பயன்படுத்துவது மாண்டரின் மொழியாகும். இம்மொழி சீனா, பார்மோசா நாடுகளில் அரசியல் மொழியாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து மொழிகளில் ஒன்றாகவும் காணப்படுகிறது. திபெத்திய பர்மன் மொழிகள் திபெத், பர்மா போன்ற இடங்களில் பேசப்படுகின்றன. இது ஒரு பெரிய மொழிக் குடும்பமாகும். சீன மொழிகளும், திபெத்திய - பர்மிய மொழிகளும் சேர்ந்து மொத்தம் 250 கிழக்கு ஆசிய மொழிகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. இம்மொழி பேசுவோரின் எண்ணிக்கைப்படி இவை இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினருக்கு அடுத்தபடியாக, உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது.



nageswary@thaiveedu.com






# மூடிய கதவுகளுக்குப் பின்னால் மௌனமாக மறைக்கப்படும் வலிகள்

- அ. மேரி றெசோதா



இனம், வர்க்கம், மதம், கலாசாரம் ஆகிய எல்லைகளைத் தாண்டி, தெற்காசியக் குடும்பங்களின் அடிமட்டத்தில் மூடிய கதவுகளுக்குப் பின்னால், ஒரு கடுமையான சமூகப் பிரச்சினை மறைக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வன்முறை என்ற அச்சமூகப் பிரச்சினை வற்புறுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அடக்குமுறையின் ஒரு பரவலான வடிவமாகும். இது கணவன்-மனைவி, பெற்றோர்-குழந்தை மற்றும் உறவினர்களுக்கிடையேயான உறவுகளில் தீவிர பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. கலாசாரப் பாரம்பரியங்கள் மற்றும் சமூகத் தடைகள், பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை அடக்கி, அவர்களை மௌனமாக்கும் சூழ்நிலையையே உருவாக்குகின்றன. ஏராளமானவர்களுக்கு, வீடு என்பது அமைதியின் சரணாலயம் அல்ல, ஒரு அச்சுறுத்தலின் இடமாகவே உள்ளது.

இலங்கையில் ஜனவரி 2020 முதல் மே 2021 வரை பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான 5,561 புகார்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 1,215 புகார்கள் 2020-ஆம் ஆண்டில் வீட்டு வன்முறைகள் தொடர்பானவை. இதில் 733 வீட்டு வன்முறைகள் காயப்படுத்தல் மற்றும் தாக்குதல்களாக இடம்பெற்றுள்ளன என மகளிர் உதவி மையத்தின் அதிகாரி குறிப்பிட்டிருந்தார். 2020-ஆம் ஆண்டு கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக வீடுகளில் உருவான பதட்டம், வீட்டு வன்முறை சம்பவங்களை வெகுவாக அதிகரித்தன என்பது பெரும் கவலையூட்டுவதாக இருக்கிறது. அந்நேரங்களில் அதிகரித்திருந்த உதவி எண்களுக்கான அழைப்புகள் விழிப்புணர்வும் உடனடி நடவடிக்கையும் தேவைப்படும் நிலையில் நாம் இருக்கிறோம் என்பதைக் கடுமையாக வெளிக்கொணர்கிறது. உலக சுகாதார அமைப்பின் ஆய்வில் உலகளவில் 15 முதல் 49 வயதுடைய 3 பெண்களில் ஒருவர் உடல் அல்லது பாலியல் வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. நெருங்கிய துணைகளால் ஏற்படுத்தப்படும் வன்முறைகள் அதிர்ச்சியூட்டும் வகையில் பரவலாக உள்ளன. இது தவிர பல பெண்கள் தங்கள் கணவரின் உறவினர்கள், அவர்களது உடன்பிறந்தவர்கள் அல்லது பெற்றோர்கள் போன்ற துணையல்லாதவர்களாலும் குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர்.

சமூகத்தில் ஒரு ஆண் தனது மனைவியை அடிப்பதென்பது நாங்கள் சாதாரணமாகப் புறக்கணித்துச்செல்லும் விடயமாகவே உள்ளது.'அவன் ஆண், அவனது மனைவியை அடிக்கும் உரிமை அவனுக்குள்ளது' அல்லது 'அது அவர்களது குடும்பப் பிரச்சினை, அது எங்களுக்குத் தேவையில்லாத விடயம்' என்ற வாசகங்களையே இன்று அதிகம் கேட்கக்கூடியதாய் உள்ளது. 'தற்காலத்தில் வீட்டு வன்முறைகள் சாதாரணமான ஒரு விடயமாகவும் தேவையான ஒன்றாகவுமே பலரால் கருதப்படுகிறது. இதில் வருந்தத்தக்க விடயம் என்னவெனில், வீட்டு வன்முறைகளால் பாதிப்பிற்குள்ளாகும் பெண்களே இதனை சாதாரணமான ஒரு விடயமாகக் கருதுகின்றனர்.' என்று வீட்டு வன்முறைகளின் கலாசார அணுகுமுறை பற்றிக் கூறுகையில், Women in Need Sri Lanka இன் நிர்வாக இயக்குனர் திருமதி. சாவித்திரி விஜேசேகர தெரிவித்திருந்தார்.

தங்கள் கணவனை விட்டுப்பிரிந்து வீட்டு வன்முறைக்கெதிராக நீதியை நாடும் பெண்களைக்கூட எமது சமுதாயம் அவமானச் சின்னங்களாகவே கருதுகின்றது. இதனால், பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பங்களுக்கு அவர்களுக்கான உரிமையைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலைக்கு சமூகம் சார்ந்த வெட்க உணர்வு தடையாக உள்ளது. சுயமாக செயற்படுதல் மற்றும் உரிமைக்காகக் குரல் கொடுத்தல் போன்றவை பெண்கள் செய்யத்தகாத காரியங்களாகவே கருதப்படுகிறன. விவாகரத்தான மற்றும் ஒற்றைத் தாய்மாரையும்கூட இச்சமூகம் வேறுகண்கொண்டு பார்ப்பதும் நாமறிந்ததே. கணவன் எத்துணை கொடுமை செய்பவனாக இருந்தாலும், பெண் எந்தளவு கஸ்டமான சூழ்நிலையில் வாழ்ந்தாலும் குடும்பத்தைக் கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பது அவளது தலையாய கடமையாகவே கருதப்படுகிறது.

இவையே, ஆண் பெண் இடையில் எமது கலாசாரம் விதைத்திருக்கின்ற மாற்ற முடியாத சித்தாந்தங்கள் ஆகும். பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய உண்மையான புள்ளி விபரங்கள் இன்னும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றன இலங்கையில் சுமார் 40% சதவீதம் பெண்கள் இவ்வாறான வீட்டு வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர். ஐந்து பெண்களில் இருவர் வன்முறைக்குள்ளாகும் இந்நிலையைத் தடுப்பதற்கு நாட்டின் பொறுப்புமிகு தலைவர்களின் தீவிர நடவடிக்கை இன்றியமையாததாக உள்ளது. இருந்தும், எந்தவிதமான ஆக்கபூர்வமான தீர்வும் இதுவரை எட்டப்படாமலே இருக்கின்றது. அரசியல்வாதிகளும் சட்டமியற்றுபவர்களும் இப்பிரச்சினைக்கான தெளிவான ஒரு தீர்வைப் பெறமுடியாதவர்களாகவே உள்ளனர். சில பிரச்சினைகள் மற்றும் சம்பவங்கள் காலத்துக்குக்காலம் மக்களிடையே மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியபோதும், அவை நாளடைவில் மறந்துவிடப்படும் துர்ப்பாக்கிய நிலையே எஞ்சி நிற்கின்றது.

இலங்கையில் ஐந்தில் ஒரு பெண்கள் (20.4 %) வாழ்நாளில் தனது நெருங்கிய துணையினால் உடல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாகின்றனர். இவர்களில் சுமார் அரைவாசிப் பெண்கள் முறையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதில்லை என பெண்கள் நல்வாழ்வு கணக்கெடுப்பு: தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் குறிப்பிட்டிருந்தது (2019).

வீட்டு வன்முறையின் வடிவங்களாக, உடல் ரீதியான தாக்குதல்கள், பாலுறவு ரீதியிலான வன்முறைச் செயல்கள் மற்றும் உணர்ச்சி ரீதியிலான துஷ்பிரயோகம் என்பன அடங்கும். உடல் ரீதியான தாக்குதல்களில் திக்குமுக்காடச் செய்வது, அடிப்பது, தள்ளிவிடுவது மற்றும் தீங்கு விளைவிக்கப் போவதாக மிரட்டுவது போன்றனவும் உள்ளடங்குகின்றன. பாலுறவு ரீதியிலான வன்முறைச் செயல்களாக கட்டாயப் பாலுறவு அல்லது ஒருவர் செய்ய விரும்பாத பால்-ரீதியிலான செயல்களைச் செய்யுமாறு அவர்களை வற்புறுத்துவதும் அடங்கும். உணர்ச்சி ரீதியிலான துஷ்பிரயோகத்திற்குள் பட்டப் பெயர் வைத்துக் கூப்பிடுதல் மற்றும் ஏளனம் செய்தல், மரியாதைக் குறைவான நடத்தைவாத முறைகள் என்பன அடங்கும்.

ஆதரவுகளிலிருந்து, குடும்பம் மற்றும் சமூகத்திலிருந்து பெண்ணைத் தனியாகப் பிரித்து வைப்பது, அல்லது மிரட்டும் வகையில் குடும்பம் மற்றும் சமுதாயத்தை உபயோகிப்பது என்பனவும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளாகும். தொலைபேசியில் உரைச் செய்திகளை அனுப்புதல் அல்லது முகநூலில் பதிவேற்றல் முதலானவையும் இவ் வன்முறைகளுக்குள் அடக்கலாம். கெட்ட எண்ணத்தோடு பார்த்தல் அல்லது 'ஒவ்வொரு அசைவையும்' கண்காணித்தல் முதலானவைகளும் வன்முறைகளாகக் கொள்ளப்படுகின்றன. சமூக ஊடகம் மற்றும் இலத்திரனியல் சாதனங்களைக் கொண்டு கெட்ட எண்ணத்தோடு ஆபாசப் படங்களைப் பார்த்தலும் இவ்வகைக்குள் அடங்குகிறது.

வாழ்க்கைச் செலவுகளுக்குப் பணம் அல்லது 'வீட்டைப் பராமரிப்பதற்கான பணத்தைத் தர மறுப்பது, ஒருவரை வேலைக்குச் செல்ல விடாமல் தடுப்பது, குழந்தை ஆதரவு அமைப்பை சாதுரியமாகப் பயன்படுத்துவது, ஒருவரைக் கடனாளியாக்குகிற சட்டப்பூர்வ மற்றும் நிதிசார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமாறு அவரை மிரட்டுவது, பணம் கொடுக்குமாறு சொல்லி ஒருவருக்கு நெருக்கடி கொடுப்பது போன்ற நிதிசார்ந்த துஷ்பிரயோகம், குழந்தைகள் உட்பட, பிரியமானவர்களைத் துன்புறுத்துவது அல்லது துன்புறுத்தப் போவதாக மிரட்டுவது, ஒருவரை மிரட்டி தன்னுடைய இச்சைகளுக்கு தவறாகப் பயன்படுத்துவது, வலிமையற்றவராகச் செய்வதற்காக ஒருவர் மீது குடும்ப சட்ட அமைப்பைத் தவறாகப் பயன்படுத்துவது என்பனவும் வன்முறைக்குள் அடங்கும்.

வீட்டுச் சூழலில் வன்முறைகள் இடம் பெறுவதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றபோதிலும் மிகப் பிரதான காரணிகளாக, வறுமை, வேலையின்மை, கல்வியறிவின்மை, தீய நட்புறவு, மதுப்பழக்கம், இளவயது திருமணங்கள் மற்றும் உளவியல்சார் அழுத்தங்கள் ஆகியன முக்கிய காரணிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, வீட்டு மற்றும் குடும்ப வன்முறைகளை அதிகம் அனுபவிப்பவர்களில் பெண்கள் சதவீதம் உயர்வாக உள்ளது. இதில், கருவுற்ற பெண்கள், கணவனை பிரிந்து வாழும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுமிகளும் உள்ளடங்கும். அநேகமான வீட்டு மற்றும் குடும்ப வன்முறைகள் ஆண்களால் பெண்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றது. இதனால், பெண்கள் பாதுகாப்பற்ற உணர்வினையும், கடினமான சூழ்நிலைகளையும் அதிகம் சந்தித்து வருகின்றனர். இதற்காக வீட்டு வன்முறைகளால் ஆண்கள் பாதிக்கப்படவில்லை என்று கூறிவிட முடியாது.

***"ஏராளமானவர்களுக்கு, வீடு என்பது அமைதியின் சரணாலயம் அல்ல, ஒரு அச்சுறுத்தலின் இடமாகவே உள்ளது."***



## வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்:

2005-ஆம் ஆண்டு காலப்பகுதி வரை வீட்டு வன்முறைகளை ஏற்படுத்துகின்ற ஆண்களுக்கெதிராக எந்தவிதமான சட்ட விதிமுறைகளும் நடைமுறையில் இருக்கவில்லை. வீட்டு வன்முறைகள் பெரும்பாலும் வீட்டுக்குள்ளேயே இருக்கவேண்டிய 'குடும்ப விடயம்' என்றே கருதப்பட்டது. காவல் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான முறையீட்டுப்பகுதிகள் இருந்தும், மிகவும் அரிதாகவே அவை பயன்பாட்டிலிருந்தன. பெண்களை அடித்தல் மற்றும் காயப்படுத்தல் போன்றவைகளைப் பொருட்படுத்தப்படுவது அரிது. அத்தோடு, உளரீதியான துஷ்பிரயோகங்கள் என்ற வார்த்தைப் பிரயோகம் மக்கள் மத்தியில் கேட்டறிந்திருக்காத ஒரு விடயமாகவே இருந்திருக்கின்றது. பாலியல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் மிகக் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை இவ்வாறான முறைப்பாடுகள் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வீதமும் மிகக் குறைந்தளவிலேயே இருந்துள்ளன.

மகளிர் உரிமைக்காக குரல்கொடுத்த சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் இடைவிடாத பின்னூட்டல்களின் விளைவாக வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டம் (Prevention of Domestic Violence Act - PDVA) 2005-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தில், வன்முறைக்குள்ளானவருக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் வன்முறையை மேற்கொண்டவருக்கு எதிராக இடைக்கால பாதுகாப்பு உத்தரவை வலியுறுத்துவதாக இச்சட்டம் உள்ளது. குறித்த சட்டம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகங்களையும் வன்முறையாகக் கருத்தில் கொள்கிறது. கணவன் தனது மனைவியை அடித்துத் தாக்குவதை இதுகாறும் பொருட்படுத்தாத சமுதாயத்தில் இவ்வாறான சட்டம் அமுலுக்கு வந்தது வெற்றியாகவே கொள்ளவேண்டும். இருப்பினும் இச்சட்டம் மற்றும் இதன் செயற்பாடுகள் போன்றவை நடைமுறையில் ஏமாற்றத்தையே ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் வீட்டுக்குள் நிகழும் வன்முறையிலிருந்து மக்களைப் பாதுகாக்க வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டம் (PDVA) என்ற சட்டம் இருந்தாலும், அது நடைமுறையில் சிறப்பாகந் செயல்படுவதில்லை. குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களில் 1% க்கும் குறைவானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் பாதுகாப்பு கோரும் நிலையில் உள்ளனர். சில காவல்துறை அதிகாரிகள் புகார்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதுடன், பெண்கள் சட்ட உதவி பெறுவதைத் தடுக்கும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர்.

மேலும், தங்குமிடங்கள், ஆலோசனை, அல்லது நிதியுதவி போன்ற ஆதரவு சேவைகளை அரசு மூலம் வழங்கும் ஏற்பாடுகளை PDVA சட்டம் செய்யவில்லை. இவை பெரும்பாலும் அரசு சாரா நிறுவனங்களின் முயற்சியினால் மட்டுமே கிடைக்கின்றன. பல சமயங்களில், பாதிக்கப்பட்ட பெண்கள் உண்மையான ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக, தங்களது துஷ்பிரயோகக்காரருடன் இணைந்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதனால், அவர்களுக்குத் தேவையான சட்டபூர்வமான பாதுகாப்பு மறுக்கப்படுகிறது. இதைவிட ஆபத்தானது, பாலியல் வன்முறைக்கூடான திருமணம். இதனைச் சட்டம் தெளிவாக அங்கீகரிக்கவில்லை; அது 'மிகவும் கொடூரமானது அல்லது மனிதாபிமானமற்றது' என்று கருதப்படுகின்ற போதிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ் வன்முறை தண்டிக்கப்படாமல் விடப்படுகிறது. இவ்வாறான குறைபாடுகள் காரணமாக, சட்டம் இருந்தாலும், பல பெண்கள் இன்னும் பாதுகாப்பின்றி வாழும் நிலை தொடர்கிறது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CPC) வன்முறைச் செயல்களைக் குற்றமாகக் கருதினாலும், இலங்கையின் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் (PDVA) முதன்மையாக பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்ட சிவில் வழிமுறைகளில் கவனம் செலுத்துகிறது. PDVA தானாகவே குடும்ப வன்முறைச் செயல்களை குற்றமாக்குவதில்லை. மாறாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவுகள் மற்றும் பிற ஆதரவு வழிமுறைகளும் இதனால் எளிதாக்குகிறது. PDVA-வின் பிரிவு 18-இன் கீழ், பாதுகாப்பு உத்தரவை மீறுதல் குற்றமாகும். குற்றவியல் நடவடிக்கைக்கு உட்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படலாம். இருப்பினும், இது பாதுகாப்பு உத்தரவை மீறிய சம்பவங்களுக்கு மட்டுமே பொருந்தும். ஆரம்ப வன்முறைக்கு பொருந்தாது. மேலும், பாதுகாப்பு உத்தரவுகள் பொதுவாக ஒரு வருட காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். குறிப்பாக நீடித்த அல்லது மீண்டும் மீண்டும் வீட்டு வன்முறை நடக்கும் சூழ்நிலைகளில் போதுமான பாதுகாப்பு பெண்களுக்கு வழங்கபடுவதில்லை என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் வீட்டு வன்முறையை திறம்பட எதிர்கொள்ள, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை வலுப்படுத்துவதும், வாழ்க்கைத் துணையால் விளைவிக்கப்படும் பாலியல் வன்முறையடங்கிய அனைத்து விதமான வீட்டு துஷ்பிரயோகங்களையும் குற்றமாகக் கொள்ளும் விதமாக மாற்றுவதும் அவசியம். பாதுகாப்பு உத்தரவுகளின் கால அளவையும் ஒரு வருடத்துக்கு மேல் நீட்டிக்க வேண்டும். சட்ட அமுலாக்க முகவர்கள் புகார்களை உணர்திறனோடு, உடனடியாகக் கையாளும் வகையில் சிறந்த பயிற்சிகளைப் பெற வேண்டும்; இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் உற்சாகம் அடைந்து பாதுகாப்பை உணர்ந்து செயற்படுவார்கள். மேலும், தங்குமிடங்கள், ஆலோசனை, நிதி உதவி போன்ற விரிவான ஆதரவு சேவைகளில் அரசாங்கம் போதுமான முதலீடு செய்தல் அவசியம், இவை அனைவரும் எளிதில் அணுகக்கூடியதாகவும், நிதி உதவியும் உறுதி செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும். கலாச்சாரக் களங்கங்களை எதிர்கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் உதவி பெற, ஊக்குவிக்க பொது மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மிக முக்கியம். ஒருங்கிணைந்த சட்ட, நிறுவன மற்றும் சமூக முயற்சிகளால் மட்டுமே வீட்டு வன்முறை சுழற்சியை உடைக்க முடியும்; பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பும் மரியாதையும் உண்மையாகப் பாதுகாக்கப்பட முடியும்.



meryresotha.a@thaiveedu.com



# மலையக இலக்கியம்: தேடலும் திரட்டலும்

(Corpus Building for Upcountry Literature)

– மு. நித்தியானந்தன்

லண்டனில் 2022-ஆம் ஆண்டில் மலையக இலக்கிய மாநாட்டினை நாங்கள் நடத்தியபோது, அந்த விழாவில் 35-இற்கும் மேற்பட்ட நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 200 நூல்களுக்கும் மேலாக மலையக நூல்கள், சஞ்சிகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த நூல்கள் அனைத்தும் எனது சேகரத்தில் இருந்தவையாகும். ‘இவ்வளவு நூல்கள் மலைநாட்டிலிருந்து வெளியாகியுள் ளனவா ?’ என்று பார்வையாளர்கள் வியந்து போனார்கள்.

**வரலாற்றில் அநாமதேயர்களாக விடப்பட்ட மலையக மக்களை இலங்கையிலும் உலக அரங்கிலும் அறியப்பட்டவர்களாக, வரலாற்றில் வாழ்பவர்களாக அடையாளப்படுத்திய மகிமை மலையக இலக்கியத்திற்குரியது**

‘வரலாற்றில் அநாமதேயர்களாக விடப்பட்ட மலையக மக்களை இலங்கையிலும் உலக அரங்கிலும் அறியப்பட்டவர்களாக, வரலாற்றில் வாழ்பவர்களாக அடையாளப்படுத்திய மகிமை மலையக இலக்கியத்திற்குரியது’ என்று அந்த இலக்கிய மாநாட்டை வாழ்த்தி அனுப்பிய செய்தியில் அமரர் தெளிவத்தை ஜோசப் குறிப்பிட்டிருந்தார்.

மலையக இலக்கியத்திற்கு 200 நூற்றாண்டு வாய்மொழி இலக்கிய மரபும், 150 ஆண்டுகால எழுத்திலக்கிய வரலாறும் உண்டு. இன்று மலையக இலக்கியம் தனித்துவ இலக்கியமாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. கடந்த ஏழு தசாப்தங்களில் மலையக எழுத்தாளர்கள் பல்வேறு துறைசார்ந்த ஆக்கங்கள் மூலம் மலையக இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனர். மலையக இலக்கிய நூல் தொகுதிக்கு வளம் சேர்த்துள்ளனர்.

நமது சமூகத்தின் 200 ஆண்டுகால வரலாற்றின் அனைத்து அம்சங்களையும் தேடித் திரட்டித் தொகுத்து, எண்மியப் படுத்தி, ஒரு வலையமைப்பில் கொண்டு சேர்க்கும் பணி நம் முன் உள்ளது.

மலையக எழுத்துகளின் மூலப்பிரதிகள் தேடப்பட்டு மறு பிரசுரம் செய்யும் முனைப்பு இன்று வேகம் பெற்றுள்ளது. அமரர் சாரல்நாடன், சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் ‘வாழ்வற்ற வாழ்வு’ என்ற நாவலைத் தேடி மறுபிரசுரம் செய்தமை போற்றுதலுக்குரிய பெரும் பணியாகும். அவரது அயராத முயற்சி இல்லை யானால், கிட்டத்தட்ட அந்த நாவலை நாம் இழந்தவர்களாகி இருப்போம். கலாநிதி பெ. சரவணகுமார், நடேசய்யரின் ‘ஒற்றன்’ என்ற நாவலைத் தமிழகத்து நூலகங்களில் தேடிப் பெற்று அதனை மறுபிரசுர மாகத் தந்தமை பாராட்டிற்குரிய ஒன்றாகும். 1934-ஆம் ஆண்டில் சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் வெளியிட்ட ‘விஸ்மாஜினி’ என்ற ஆங்கிலக் கவிதை நாடகத்தை, 90 ஆண்டுகள் கழிந்த நிலையில், அதனைத் தமிழில் மொழிபெயர்த்து, மூல நூலுடன் வெளியிட்டேன். அவரது வேறு நூல்களையும் பதிப் பித்துள்ளேன். நமது இலக்கியத்தின் மூலவரான சி.வி. யின் நூல்களே இன்னும் முழுமையாகத் திரட்டித் தொகுக்கப்படவில்லை.

மலையக இலக்கியத்தினை ஆவணப்படுத்தும் நீண்ட பயணத்தில் நாம் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. மலையகம் குறித்த நூல் விபரப்பட்டியலை சோ. சந்திரசேகரனுடன் இணைந்து சி. ரமேஷ் வெளியிட்டிருப்பது நல்லதொரு திசைகாட்டிச் செயலாகும்.

மலையகம் குறித்து ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள நூல்கள் அளவிழந்தன. வேறெந்த இனக்குழுமத்தையும்விட மலையக மக்கள், அவரது வாழ்க்கை நிலைமைகள் பற்றிய ஆவணங்கள் வெவ்வேறிடங்களில் குவிந்து கிடக்கின்றன. பிரிட்டிஷ் கால அறிக்கைகள், லண்டனுக்கு இலங்கையில் இருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள், இலங்கை அரசின் அறிக்கைகள், ஆவணங்கள் என்பன அனைத்தும் ஒரு வலைத்தளத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

மலையகத் தொழிற்சங்கப் போராட்டங்கள் இன்னும் முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. மலையக மக்களின் வாழ்வுசார்ந்த அனைத்து அம்சங்களையும் பதிவேற்றவேண்டும்.

**'கள்ளத்தோணி' (முதற் பதிப்பு) விற்பனை அங்குரார்ப்பண விழா.**
**(17—6—53)**



ஆசிரியர் கலைவாணர் அ. இராகவன்

மலையகம் பற்றிய புகைப்படங்கள் பல நூல்களில், பல புகைப்படத் தொகுப்புகளில் காணக் கிடைக்கின்றன. பதுளையைச் சேர்ந்த ஒரு பெரியாரியச் சிந்தனையாளரின் பல புகைப்படங்கள் எனக்குக் கிடைத்தன. அவரோடு அக்காலகட்டத்தில் சமூகத்தளங்களில் செயற்பட்ட பலருடன் சேர்ந்து எடுத்த புகைப்படங்களும் இருந்தன. அவரோடு அப்புகைப்படங்களில் இருப்பவர்கள் யார் என்று அவரிடம் கேட்டு, எழுதி அனுப்புமாறு அவரது துணைவியாருக்கும் மகளுக்கும் எழுதிக் கேட்டிருந்தேன். இருவருமே நன்கு கற்றவர்கள். இது ஓராண்டுக்கு முன் நடந்தது. தற்போது நான் இலங்கை வந்தபோது, அவரைச் சந்தித்து, அப்பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அவர்களை அணுகியபோதுதான் எனக்கு அந்தச் செய்தி சொல்லப்பட்டது. ஆம், அவர் முற்றாக நினைவிழந்து விட்டார். இப்போது அவருடன் அந்தப் புகைப்படத்தில் இருப்பவர்கள் யார் என்று சொல்லக்கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தெரியவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன், நான் சென்னை சென்றிருந்தபோது, 'கள்ளத்தோணி' என்ற நாடகத்தை ஐம்பதுகளில் எழுதிய எம்.ஏ. அப்பாஸ் சென்னையில் இருக்கிறார் என்று இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான் தெரிவித்தபோது, நான் மகிழ்ச்சியில் மிதந்தேன் என்று கூறவேண்டும். நாற்பது, ஐம்பதுகளின் மலையக இலக்கியச் சூழலைச் சொல்லக் கூடிய பேராளுமையைச் சந்திப்பது என்பது அபூர்வமானது என்பதில் எந்த ஐயமில்லை. ஆனால், என்னுடைய அந்த மகிழ்ச்சி அப்பாஸ் அவர்களைச் சந்தித்தபோது பெருந்துயராக மாறிற்று. அந்த மனிதர் முற்றாக நினைவிழந்திருந்தார். அவரது துணைவியார் கவலையோடு நின்றுகொண்டிருந்தார். என்.எஸ். கிருஷ்ணன் அவர்களை கொழும்பிற்கு அழைத்து, தனது நாடக நூலை வெளியிட்டுவைத்த புகைப்படம் சுவரில் மாட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அரிய புகைப்படம்.

மலையகம் குறித்தது இலங்கையின் நாளிதழ்களிலும் வார இதழ்களிலும் வெளியாகும் / வெளியாகிய கட்டுரைகள், செய்திகள் அனைத்தும் சேகரிக்கப்படவேண்டும். மலையகத்தில் நடைபெற்ற கலைவிழாக்கள், கூட்டங்கள் பற்றிய அழைப்பிதழ்கள் என்பன சேகரிக்கப்படவேண்டும். மலையகப் பாடசாலைகள் அனைத்தையும் பற்றிய வரலாறு பேணப்படவேண்டும்.

மலையகத்தின் அனைத்து ஆலயங்களின் வரலாறு எழுதி வைக்கப்படவேண்டும்.

தனியார் சேகரிப்பில் உள்ள பழைய புகைப்படங்கள் திரட்டப்படவேண்டும்.

மலையகத்தின் அனைத்துத் தொழிற்சங்கங்களையும் சேர்ந்த தொழிற்சங்கவாதிகள் அனைவரதும் விபரங்கள் சேகரிக்கப்படவேண்டும்.

தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்களின் வாழ்நிலை பற்றிய தரவுகளும் நமக்கு அவசியமானவையே.

ஒரு பெருங்குழுவாக இணைந்து செயற்பட்டாலே இப்பெரும் பணி சாத்தியமாகும்.



nithiyananthan.m@thaiveedu.com

# கலாலஷ்மி கதைகள்

## மாதவி உமாசுதசர்மா



எழுத்தாளர் கலாலஷ்மி தேவராஜா அவர்கள் 1957-2019 வரை வாழ்ந்தவர். எழுத்தாளர், நாடக நடிகை, நெறியாளர், சமூக செயற்பாட்டாளர், குடும்பத் தலைவி, ஆசிரியர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். அவருடைய மறைவிற்குப் பின்னர் ஈராண்டு நினைவாக அவரது குடும்பத்தினரின் முயற்சியால், பல காலகட் டங்களிலும் அவரால் எழுதப்பட்ட சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'கலாலஷ்மி கதைகள்' என்ற பெயரில் 2021-ஆம் ஆண்டு கலாலயம் பதிப்பகத்தால் வெளியீடு செய்யப்பட்டது. இந்நூல் தேசிய கலை இலக்கியப் பேரவையின், 2022-ஆம் ஆண்டு இடம் பெற்ற புத்தக அரங்க விழாக்களில் நூல் அறிமுகம் செய்யப் பட்டு வாசகர்களால் மிகவும் விரும்பப்பட்ட சிறுகதைத் தொகுதியாக இன்று வரை திகழ்கின்றது.

கலாலஷ்மி அவர்கள் 1979-இலிருந்து அவைக்காற்றுக் கலைக்க ழகம், நாடக அரங்கக் கல்லூரி, தேசிய கலை இலக்கியப் பேரவை, மறுமலர்ச்சி மன்றம் ஆகியவற்றோடு இணைந்து மேடை நாடகங்கள் பலவற்றில் நடித்துள்ளார். தாயகம் இதழில் 'அபிராமி', 'சிவகாமி' மற்றும் 'செம்மனச்செல்வி' ஆகிய புனைபெ யர்களில் சிறுகதைகளை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தை நிறைவுசெய்துள்ள இவர், அரசியலிலும் 'புதிய சனநாயக மார்க்கிச லெனினிசக் கட்சியில்' இணைந்து சமூகப் போராட்டங் களிலும் முன்னின்று செயற்பட்ட ஆளுமைமிக்க பெண்ணாவார்.

இதுவரை இவருடைய நான்கு சிறுகதைத் தொகுப்புக்கள் வெளி வந்துள்ளன, முறையே 'மகர காவியம்' (2017), 'ரோஜாப்பூ' (2017), 'பூமராங்' (2017), 'கலாலஷ்மி கதைகள்' (2021). மேலும் அவரது நினைவுகளைப் பகிரும் வகையில் 'கலாலஷ்மி எனும் ஆளுமை' நூல் 2021-இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் அவருடன் இலக்கிய, நாடக மற்றும் அரசியல் மேடைகளில் ஒன்றாகப் பய ணித்தவர்களும், அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் முக்கி யமான நண்பர்கள் பலரும் எழுத்தாளரின் நினைவுகள் குறித்து தமது அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார்கள்.

இவற்றில் 'கலாலஷ்மி கதைகள்' எனும் சிறுகதைத் தொகுதி மிகவும் முக்கியமானதொரு பெண்ணெழுத்தாகவே திகழ்கின்றது. 32 சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பில், ஆசிரியர் காட்டும் கதையுலகு பெரும்பாலும் நம்மைச் சூழவுள்ள சக மனி தர்களின் அன்றாடப் பிரச்சினைகளும், உறவுநிலைச் சிக்கல் களும், சாதாரண வாழ்வியலும், குடும்பச் சூழலில் பெண் எதிர் கொள்ளும் வாழ்க்கைச் சவால்களும் என நம்முடைய வாழ்வி யலோடு ஒன்றித்துப் போவதை அவதானிக்க முடிகின்றது. கதைகூறும் மொழிநடையும், நமக்கு நெருக்கமான நம் பக்கத்து வீட்டு மனிதர்களிடம் பேசும் மொழிநடை தான் என்பது கூடுதல் சிறப்பு. இதனாலேயே நமது மனதுக்கு கதைகள் நெருக்கமாகி விடுகின்றன.

எழுத்தாளர், பெரும்பாலும் சிறுவர்களின் அகநிலைகள், துஷ்பிர யோகம், ஆண் பெண் பால்நிலை சமத்துவம், உணர்வுகள், உறவுநிலை, பொருளாதாரப் போராட்டங்கள், ஆண் பெண் மனநிலை உணர்வுகள் என்று பெரிதும் பேசப்படாத, பொதுவெ ளியில் உரையாடப்படாத ஆனால் விழிப்புணர்வு தேவைப்படும் விடயங்களை இக்கதைகளின் கருப்பொருளாக கையாண்டுள்ளார்.

பிள்ளைக்கறி, ஞானப்பழம், புரிதல், ஒரு ஒப்புதல் வாக்குமூலம், கணிப்பு ஆகிய கதைகளில் கணவன், மனைவி இடையேயான வாக்குவாதங்கள், புரிந்துணர்வு, உறவுநிலைச் சிக்கல்கள் குறித்துக் கதைமாந்தர்கள் ஊடாக பல விடயங்களையும் மறை பொருளாகக் கூற விளைந்துள்ளார். பொதுவாகவே தமிழ்ச் சூழலில் ஒரு குடும்பத்தைக் கட்டியமைப்பதும், உறவுகளைப் பேணுவதும் பெண்ணின் அல்லது குடும்பத் தலைவியின் கடமை யாகவே காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றமை இங்கு அவதானிக் கப்படவேண்டிய விடயமாகும். என்னைப் பலவாறு சிந்திக்கச் செய்த சிறுகதை ‘பற்று’, மதங்களினை அடிப்படையாக் கொண்ட பிரச்சினை எவ்வாறு குடும்பத்தையும், உறவுகளையும் பிரிக் கின்றது என்பதை கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட் டுள்ளது. மதங்கள் எப்போதும் மனிதனை மனிதனாக வாழ ஒழுங் குபடுத்துவதாகவும், நெறிப்படுத்தவும், அன்பையே போதிப்பதா கவுமே இருக்கின்ற போதிலும், மதத்தின் பெயரால் நிகழும் வன் முறைகள் எண்ணில் அடங்காதவையே.

இச் சிறுகதைகளில் பல உளவியல் சார்ந்த விடயங்களையும் வாசகர்களுக்கு புரியும் வகையில் எளிமையாக எழுதப்பட் டுள்ளது. உதாரணமாக ‘பூமராங் கதையில் குடும்பத்தில் ஒருவ ருக்கு ஏற்படும் மனநிலை பிறழ்வு என்ற விடயம் சமூகத்தால் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதையும், இறுதியில் ‘அம் மாக்கு இருந்தா மகளுக்கும் வரும் தானே’ என்று பொதுமைப்ப டுத்தப்படும் நிலையையும் சுட்டிக் காட்டப்படுகின்றது.’

‘ஆண்டாள் பாசுரங்கள்’ கதையில் விகாரத்தை நோக்கிச் செல்லும் பெண்ணின் மன உணர்வுகள் பற்றியும், அந்தப் பெண்ணை அப்படியொரு முடிவெடுக்கத் தூண்டிய காரணிகள் பற்றியும் பெண்ணின் மனக்குமுறலாக, தன்னுடன் தானே கதைக்கும் வடிவில் சிறுகதை நகர்த்தப்படுகின்றமையை அவதா னிக்க முடியும்.

‘ப்ளீஸ் கிவ் மீ 20,000/= ஐ வாண்ட் டு சேன்ஜ் மை...’ என்ற தலைப் பிலான கதை முக்கியமானதொரு கருப்பொருளைப் பேசு கின்றது, எப்போதும் ‘அவன் ஆம்பிளைப் பிள்ளை என்ன வேணும் எண்டாலும் செய்யலாம், நீ அப்பிடியில்ல பொம்பி ளைப்பிள்ளை ஒழுங்கா இரு’ என்று சொல்லிச் சொல்லி அடக்கப் படும் ஒரு சிறுமியின் மனதின் விகாரங்கள் எவ்வாறு தோற்றம் பெறும் என்பதை இச் சிறுகதை பேசிச்செல்கிறது.

உண்மையில் ஏனைய நூல்களைப் போல எடுத்த வீச்சில் வாசித்து முடித்துவிட முடியாத அடர்த்தியான செறிவான மனதைப் பாதிக்கும் கதைகளாகவே இருக்கின்றன. ஆனால் நிச்சயம் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் குறித்தே கதையுலகு பயணிக்கின்றது. எழுத்தாளர் கலாலஷ்மி மறைந் தாலும், தன்னுடைய சிந்தனையாலும், எழுத்துக்களாலும் எம்மிடையே நிச்சயம் வாழ்வார். இந்த நூலை வெளியிட்ட குடும் பத்தாருக்கு எனது நன்றிகளும், பாராட்டுக்களும்.



mathavi.u@thaiveedu.com












# ஒரு நூலின் உருவாக்கம்

## ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்

பகுதி **17**

- என். செல்வராஜா

இலங்கைத் தமிழர்களிடையே புத்தகப் பண்பாடு என்பது தெய்வீகச் சூழலில்தான் பெரும்பாலும் வளர்க்கப்பட்டுள்ளது என்று கருதுகின்றேன். நவராத்திரி தினங்களில் சுவாமித் தட்டில் புத்தகங்களை வைத்து கல்வித் தெய்வமான சரஸ்வதியை வழிபடும் பண்பை வளர்த்துக் கொண்டுள்ளோம். ஒரு நூலை நிலத்தில் தவறுதலாக வீழ்த்திவிட்டால்கூட காலடியில் வீழ்ந்த அதனைத் துடித்துப் பதைத்து கைகளில் ஏந்திக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் அனுபவத்தை நாங்கள் தலைமுறை தலைமுறையாகப் பேணி வந்துள்ளோம்.

அதே வேளை முரண்நகையாக, ஒரு குழந்தையின் அறிவு விருத்திக்குப் பொறுப்பாக இருக்கும் ஆசிரியர்கள் முதற்கொண்டு, சமூகத்தில் வாசகர்களுடன் நேரடித் தொடர்பினைப் பேணுவதைப் பணியாகக் கொண்ட நூலகர்கள் வரை வாசிப்புக் கலாசாரத்தைப் பேணிவரத் தவறிவிட்டதையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. ஒரு ஆசிரியர் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் வேளை அவரது கல்வித் தரத்தை மாத்திரம் கவனிக்காமல், அவரிடம் வாசிப்புக் கலாசாரம் ஊறியிருக்கிறதா என்பதையும் கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் தேர்வில் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். தான் வாசிப்பில் அக்கறை காட்டாத ஒருவர் எப்படி மாணவர்களை வாசிப்பில் அக்கறையெடுக்கத் தூண்டுவார் என்பதையிட்டும் நாம் சிந்திக்கவேண்டும்.

பாடசாலைகளில் நூலகத்திற்கென பாட அட்டவணையில் நேரம் ஒதுக்கும் ஆசிரியர் குலம், சிறார்களின் பொது வாசிப்புப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட அந்த ஒரு பாட நேரத்தைக்கூட தாம் தவறவிட்ட மேலதிக வகுப்புகளுக்காக கவர்ந்து கொள்வதைப் பாடசாலையின் தலைமையும் சந்தோஷமாக அனுமதிப்பதிலிருந்தே இதன் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளலாம். ஒரு தனி ஆசிரியரின் நேர முகாமைத்துவக் குறைபாடு காரணமாக, அந்த வகுப்பின் முழு மாணவர் குழுவினரும் தமக்கான நூலகப் பாட நேரத்தை இழந்து தவிப்பதை தலைமை ஆசிரியர்களும் உணர்ந்துகொள்வதில்லை.

**வாசிப்பை நேசிக்கும் பண்பை ஆசிரியர்களிடம் முதலில் வளர்த்தெடுக்க வேண்டும். அவர்களுக்கு அதற்கான ஆதரவினையும் ஊக்கத்தையும் பிராந்திய ரீதியாக வளர்த்துச் செல்ல வேண்டும்.**

பிரித்தானிய பாடசாலைகளிலும் சிறுவர் பள்ளியிலிருந்து நூலகப்பாட நேரம் உள்ளது. அதை எவரும் தமது தேவைகளுக்காகக் கவர்ந்துகொள்ள முடியாது. அதில் அவர்கள் சித்திரக் கதைகள், பாடநூல்கள், பாலியல் கிளர்ச்சியான நூல்கள் தவிர்ந்த எதையும் வாசித்து மகிழ அனுமதியுண்டு. அவர்கள் என்ன வாசிக்கிறார்கள் என்பதை நூலகப் பாட ஆசிரியை கவனிப்பதுடன் வாசிப்பில் ஆர்வமற்ற சிறார்களுக்கு நூலை வாசிக்க ஊக்கமளிக்கும் பணியை அப்பாடநேரத்தில் மேற்கொள்கின்றார். தாம் வாசித்த நூல் பற்றிய குறிப்புகளையும் விமர்சனங்களையும் மாணவர்கள் வெளியிட அந்த வகுப்பு இடம் அளிக்கின்றது. அதனால்த்தான், ஐரோப்பிய நாடுகளில் இணையத்தள வாசிப்புடன் போட்டிபோட்டுக் கொண்டு பாரம்பரிய நூல்களும் தரம் குறையாமலும், எண்ணிக்கை குறையாமலும் வெளிவந்தவண்ணமுள்ளன.

இந்த நிலைமையை இலங்கையில் உருவாக்குவது கல்வித்துறையினரிடமே தங்கியுள்ளது. வாசிப்பை நேசிக்கும் பண்பை ஆசிரியர்களிடம் முதலில் வளர்த்தெடுக்கவேண்டும். அவர்களுக்கு அதற்கான ஆதரவினையும் ஊக்கத்தையும் பிராந்திய ரீதியாக வளர்த்துச் செல்லவேண்டும். ஈழத்தின் தலைசிறந்த படைப்பாளிகள் ஆசிரியர் உலகத்திலிருந்தே வந்திருக்கிறார்கள். அதனை நாம் ஏன் வழிகாட்டியாகக் கொள்ளக்கூடாது?

நூல்களைப் பேணிப் பாதுகாத்து வாசகர்களிடம் வழங்கும் பொறுப்பை ஏற்றுப் பணிசெய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூலகர்களே வாசிப்பை நேசிப்பவர்களாக இல்லாதிருப்பதும் ஒரு முரண்நகையாகின்றது.

நூலகவியல்துறையின் தொழில்நுட்பங்களையே இன்றைய நூலகக் கல்வி நூலகத்துறை மாணவர்களுக்கு, குறிப்பாக, பொது நூலகத்துறையின் மூலம் இளையோரிடம் வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவுள்ள எதிர்கால நூலகர்களுக்குப் போதிக்கின்றது. நூலகரின் சமூகப் பொறுப்பு பற்றி 'நூலகமும் சமூகமும்' என்ற பாடநெறி புகட்டுகின்றது. அதனைப் பரீட்சைப் பெறுபேற்றிற்கான பயன்பாட்டுக்கு அப்பால் தமது பணியின்போது எத்தனை நூலகர்கள் சிரமேற்கொண்டு சமூக ஊடாட்டம் மிக்கவர்களாக இருக்கிறார்கள்?



சமூகத்தில் நூலகமொன்றின் இருப்பு அது தான் சார்ந்த சமூகத்தில் எத்தனை 'புதிய வாசகர்களை' உருவாக்கியிருக் கின்றது என்பதிலேதான் தங்கியுள்ளது என்பது ஒரு நூலக வேதவாக்கு. வடமாகாண சர்வோதய அமைப்பாளராக இருந்த மறைந்த அமரர் திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த தொரு பேச்சாளர். அறிவுபூர்வமான சிந்தனையாளர். நேர்மை யான சமூகத் தலைவர். இளவயதிலேயே பாடசாலைக் கல்வியைத் துறந்து சமூகத் தொண்டனானவர். தனக்கு யாழ்ப்பாண நூலகமும் அதன் நூலகராகவிருந்த அமரர் வே.இ. பாக்கியநாதன் அவர் களுமே அறிவுக் கடலை அடையும் மார்க் கத்தைக் கண்டறிய வைத்தார்கள் என்று அடிக்கடி என்னிடம் கூறுவார். இன்று எமது நூலகர்களில் எத்தனைபேர் வாசிப்பில் நாட்டமுள்ளவர்களாக இருக் கிறார்கள்? நூலகத் துறையில் நுழை வதற்கு விதிக்கப்பட்ட தகைமைகளில் அடிப்படையான தகைமையாக நூலக வியல்துறை மாணவர்களுக்கு வாசிப்பில் ஆர்வம் இருக்கவேண்டும் என்று புதிய தொரு விதி செய்திட வேண்டும். அப்போதுதான் அவரால் தான் சார்ந்த சமூகத்தை வாசிப்பில் நாட்டமுடையதாக் கும் முனைப்பில் மனமொத்து அவர் களால் ஈடுபடமுடியும். தானே வாசிப் பதில் அக்கறையில்லாத ஒரு நூலகர் புதியதொரு வாசகனை எவ்வாறு உருவாக்குவார்?

ஒரு சமூகத்தில் வாசிப்பை பொழுது போக்காக ஏற்றுக்கொள்ளும் சிறுவர், வளர்ந்தோர், முதியோர் அணிகளைப் பலப்படுத்துவதன் மூலம் நாம் ஈழத்தின் தளர்ந்துசெல்லும் வாசிப்புக் கலா சாரத்தை கூன் நிமிர்த்தலாம். வாசகர்கள் பெருக, நூல்களின் தேவை பெருகும். நூல்களின் தேவை பெருக பதிப்பகங் களும் பெருகும். பதிப்பகங்கள் பெருக அவற்றினிடையே வர்த்தகப் போட்டிகள் உருவாகித் தரமான நூல்களின் வரவுக்கு வழிகோலும்.

இன்றுள்ள நிலையில் பதிப்பகங்களிடையே போட்டியில்லை. அதனால் அவர்களிடம் செல்லும் பெரும்பான்மையான எழுத் தாளர்களுக்கும் திருப்திகரமான சேவை கிடைப்பதில்லை.

புத்தகங்களை எழுதுபவர்களும் அதன் உருவாக்கத்தில் அக்கறை காட்டு வதில்லை. அண்மையில் இலங்கையில் ஒரு இளம் கவிஞர் என்னை அணுகினார். தனது வெளியீடு என்று ஒரு கவிதைத் தொகுதியை என்னிடம் வழங்கினார். விரித்துப் பார்த்தேன். முழுவதும் 24 பக்கம் கொண்ட காதல் கவிதைகள். தன் காதல் தாகத்தை யாழ்ப்பாணத்துப் பகைப்புலத்தில் நின்று உருக்கமாக எடுத்துரைக்கும் கவிதைகள். நூலக நெறி முறைகளில் 48 பக்கத்துக்கு உட்படாத தால் அது ஒரு தனி நூலாகக் கருதப்பட மாட்டாது. இதனை சிறு பிரசுரங்கள் என்ற வகைக்குள் அடங்கும் பாம்ப்லெட் (Phamplet) ஆகவே கருதுவர். (UNESCO defines a pamphlet as 'a non-periodical printed publication of at least 5 but not more than 48 pages, exclusive of the cover pages)

அந்தச் சிறுநூலில் பதிப்பு விபரங்களோ, போதிய நூலியல் விபரங்களோ நூலின் விலையோ காணப்படவில்லை. அதனை எவ்வாறு சந்தைப்படுத்தப் போகிறீர் என்று அந்த இளைஞரிடம் கேட்டேன். அவ்விளைஞன் மிகச் சர்வசாதாரணமாக, இந்நூல் தன் பல்கலைக்கழகக் காதலி யிடம் தன் காதலின் ஆழத்தைச் சொல்வ தற்காகவே எழுதி நூலாக்கியதாகக் கூறினார். (தன் நோக்கம் ஈடேறிவிட்ட தால்) நூலைச் சந்தைப்படுத்தும் நோக்கமே தன்னிடம் இல்லை என்று சர்வ சாதாரணமாகவே கூறி விடைபெற்றார். இலங்கையில் இன்று நூல் வெளியீடு எவ்வளவு சாதாரணமானதாகிவிட்டது என்பதை அன்று என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. இச்சம்பவம் ஒட்டுமொத்த வெளியீட்டுத் துறையையும் எடைபோடும் ஒரு 'வகைமாதிரி'யாகக் கொள்ள முடியாது தான். இருப்பினும் இது எமக்கானதோர் அதிர்ச்சி வைத்திய மாகவே கருதுகின்றேன்.

இலங்கையில் பெரும்பாலான நூல்களின் உருவாக்கங்கள் ஒரு படைப்பாளியின் குடும்பத்தவரின் சொந்தப் பணத்தில் மிகுந்த மன உளைச்சலுடன்தான் மேற் கொள்ளப்படுகின்றன என்பதை அனைவரும் அறிவோம். நூலை அச்சிட்டுப் பெறச் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியை யேனும் தன்னால் மீளப் பெற்றுக்கொள்ள முடியாதா என்ற அங்க லாய்ப்புடன்தான் பல படைப்பாளிகள் தமது வெளியீட்டின் விற்பனைக்கு வழி தேடுகிறார்கள் என்பதை நான் அறிவேன். இலங்கையின் தமிழ் நூல் விற்பனை யாளர்கள் இந்திய நூல்களை முற்பணம் கொடுத்து வாங்கி விற்பனை செய்வதில் காட்டும் அக்கறையை ஈழத்து நூல்களை விற்பனைசெய்வதில் காட்டுவதில்லை என்று கனக செந்திநாதன், முல்லைமணி என்று பலரும் ஆதங்கப்பட்டு எழுதி யதைக் கண்டிருக்கிறோம்.

எழுத்தாளர்கள் தமது நூலைப் பற்றிய தகவல்களை புதினப் பத்திரிகைகளின், பருவ வெளியீடுகளின் வாயிலாக அறிமுகப் படுத்தி, நண்பர் வட்டத்தில் ஓரளவு விற்பனை செய்து, புத்த கக் கடைகளில் காட்சிப்படுத்துவதுடன் நிறுத்திக்கொள்கின்றார்கள். வசதி படைத்தவர்கள் பணச்செலவுமிக்க வெளியீட்டு விழாக்களை ஒழுங்குசெய்து தமது நூலை சிறப்புப் பிரதிகளாக விற்பனை செய்வதுடன் திருப்தி கொள்கிறார்கள். தமது நூலின் சில பிரதிகளைத் தன் பிரதேசத்தின் பல்வேறு நூலகங்களுக்கும் அன்பளிப்பாக வழங்கி, தனது நூலின் இருப்பை நீண்டகாலத்துக்குத் தக்கவைத்துக்கொள்ளும் எழுத்தாளர்கள் சிறு எண்ணிக்கையினரே. இக்கடமையை ஒவ்வொரு நூலாசிரியனும் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு பிரதேசத்தின் படைப்பாளிகளின் நூல்களை அப்பிரதேச நூலகங்களில் தனிச்சேர்க்கைகளாகப் பேணும் வரலாற்றுக் கடமையை ஒவ்வொரு நூலகரும் மேற்கொள்ள முன்வரவேண்டும். அதற்கு நான் முன் சொன்னது போல, சமூகத்துடன் வலுவான தொடர் பினைப் பேணவேண்டும்.

ஒரு நூலகர் தான் சேவையாற்றும் பிரதேசத்திலுள்ள அனைத்து படைப்பாளிகள் பற்றியும் தகவல்களைத் தேடிப்பெற்றுப் பேணவேண்டும். அவர்களின் நூல்களைத் தருவித்து பாதுகாப்பதுடன் அவர்க ளுடன் வாசகர்களைச் சந்திக்கவைக்கும் நிகழ்வுக ளையும் ஒழுங்குபடுத்தவேண்டும். ஒரு பிரதேசத்தின் நூல் வெளியீட்டு விழாக்களில் அல்லது எழுத்தா ளர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் நூலகர்களைக் காண்பது எப்போதும் அரிதாகவே உள்ளது. இந்நிலை மாற வேண்டும். படைப்பாளிகளும் தத்தம் பிரதேச நூலகர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்தி வர வேண்டும். இது மறைமுகமாக ஈழத்து வெளியீட்டுத் துறைக்கு வளம் சேர்க்கும்.

ஒரு பொருளை விற்பனை செய்வதற்கு அதன் இருப்பினை நுகர்வோரிடையே விளம்பரப்படுத்தியாக வேண்டும். அதனைத் தொடர்ச்சியாகச் செய்யவும் வேண்டும். இதற்குப் பணத்தைச் செலவிடும் நிலையில் படைப்பாளர்கள் இல்லை. நூலகங்களின் வாயிலாக இலவசமாக அதனைச் செய்துகொள்ளலாம்.

1989-இல் நூல்தேட்டம் தொடங்கும் முன்னர் இலங்கையில் ‘பிரசுரகளம்’ என்றொரு சஞ்சிகையைத் தொடங்க முயற்சி செய்திருந்தேன். எனது நோக்கம், பல்வேறு நிதிப் பிரச்சினை களால் அன்றே கருச்சிதைவைக் கண்டுவிட்டது. ‘பிரசுர களம்’ சஞ்சிகையானது சமகாலத்தில் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நூல்கள் பற்றிய தகவல்கள், நூல் அறிமுகங்கள், நூல் விமர்சனங்கள், வெளியீட்டு விழாச் செய்திகள், எழுத்தாளர் அறிமுகங்கள் என முற்றிலும் நூலியல் தகவல்களைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்திருந்தேன்.

அது சஞ்சிகையுருவில் இரு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவர வேண்டும் எனவும் தமிழ் நூல் வெளியீட்டு அச்சகங்கள், வெளியீட்டு நிறுவனங்கள், புத்தக விற்பனை யாளர் போன்றவர்களின் விளம்பரங்களுடன், அவர்களது நிதி உதவியுடன் பிரசுரகளம் வெளி வரவேண்டுமெனவும் விரும்பினேன். மேலும் சகல தமிழ் நூலகர்க ளுக்கும், பாடசாலை, பொது, பல்க லைக்கழக, தனியார் நூலகங்க ளுக்கும் நூலக வசதிகொண்ட சனசமூக நிலையங்களுக்கும் பிரசுர களம் சஞ்சிகையின் பிரதிகள் இல வசமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் திட்டமிட்டி ருந்தேன். இன்றுவரை இலங்கையில் இத்தகையதொரு திட்டத்தை எவராலும் அமுல்படுத்த முடியா திருக்கின்றது. இத்தகையதொரு பிரசுரம் இலங்கையின் வெளியீட்டுத் துறையின் மீள் எழுச்சிக்கு அத்தியா வசியமானது என்பதை எவரும் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை. தமிழகத்தில் க. நாகராஜனின் புத்தகம் பேசுது, புதிய புத்தகம் பேசுது போன்ற வடிவங்களில் அறிவார்ந்த நூலியல் செய்திகளை வழங்கும் சஞ்சிகைகள் இலங்கை யிலும் எதிர்காலத்தில் உருவாக்கப் படவேண்டும்.

> **“ஒரு நூலகர் தான் சேவையாற்றும் பிரதேசத்திலுள்ள அனைத்து படைப்பாளிகள் பற்றியும் தகவல்களைத் தேடிப்பெற்றுப் பேணவேண்டும். அவர்களின் நூல்களைத் தருவித்து பாதுகாப்பதுடன் அவர்களுடன் வாசகர்களைச் சந்திக்கவைக்கும் நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும்.”**

படைப்பாளிகளால் மாத்திரம் அக்க றைகொள்ளப்படவேண்டிய துறையல்ல பதிப்புத்துறை. அதற்குப் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு முயற்சி தேவை. இதனை விரைவில் செய்யாதிருந்தால் ஈழத்தின் தமிழ்ப் பதிப்புல கத்தின் செயற்பாட்டுத் தளத்தை தமிழகத்திலேயே தேட வேண்டியதாக இருக்கும். தமிழகத்தில் இன்று வெளிவரும் ஈழத் தமிழர்களின் பல்வேறு படைப்புக்கள் தாயகத்தையே எட்டாதிருப்பதை தமிழகத்துடன் பதிப்புலகத் தொடர்பு கொள்பவர்களால் அவதானிக்க முடியும். இது தொடர்வதைக் கண்டுகொள்ளாமல், இது எனது வேலையல்ல, அடுத்தவரின் வேலை என்று கைகட்டி நின்று பார்வையாளர்களாக வேடிக்கை பார்ப் பதனைப் படைப்பாளிகளும் ஈழத்துப் பதிப் பாளர்களும் நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லாது போனால், விரைவில் ஈழத்தின் வடக்கிலும் கிழக்கிலும் நிலை கொள்ளப்போகும் தமிழகப் பதிப்பகக் கிளைகளுக்கும், முக வர்களுக்கும் முகம்கொடுக்கவேண்டியிருக்கும்.

(தொடரும்)



selvarajah.n@thaiveedu.com

# தாகூரின் கீதாஞ்சலியும் வேலுப்பிள்ளையின் விஸ்மாஜினியும்:

## மு. நித்தியானந்தனின் பதிப்பு முயற்சியை முன்வைத்து...

மல்லியப்புசந்தி திலகர்

இலங்கை, மலையகத்தின் பதுளையில் பிறந்தவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் (பொருளியல்) பணியாற்றியவரும் தினகரன் (லேக் ஹவுஸ்) ஆசிரிய பீடத்தில் அங்கம் வகித்தவருமான மு. நித்தியானந்தன், அரசியல் காரணங்களினால் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்தவர். தற்போது இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்து வருகிறார். புலம் பெயர்ந்து பல வருடங்களின் பின்னர் கடந்த 2015-ஆம் ஆண்டு இலங்கை வந்த அவர், தனது 'கூலித்தமிழ்' நூலை வெளியிட்டிருந்ததுடன் அதனையொட்டிய சந்திப்புகளைப் பதுளை, ஹட்டன் முதலான நகரங்களில் செய்தார். அங்கு நடந்த இலக்கிய கூட்டங்களிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெறும் 'இலக்கியச் சந்திப்பு' நிகழ்வுகளில் தொடர்ச்சியாகக் கலந்துகொண்ட இவர் மலையக இலக்கியம் குறித்த உரையாடல்களையும் பதிவு செய்தவர். 2015-ஆம் ஆண்டு மட்டக்களப்பு (சத்துருக்கொண்டான்) இலக்கியச் சந்திப்பின் பின் மலையக அரங்கத்திலும் கலந்துகொண்டு உரையாற்றி இருந்தார்.

அந்த பயணத்தின் பின்னதாக சுமார் பத்து ஆண்டுகள் கழித்து 2025-ஆம் ஆண்டு மீளவும் இலங்கைக்கு வருகை தந்திருந்த மு. நித்தியானந்தன் இம்முறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பலக்லைக்கழகம் ஆகியவற்றில் சிறப்புரைகளை ஆற்றியதுடன் பதுளை, ஹற்றன், கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் இலக்கியச் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரைகளை ஆற்றியிருந்தார்.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்படும் 'இலக்கியக் களம்' நிகழ்ச்சியில் 2025.05.30-ஆம் திகதி அன்று கலந்துகொண்டு 'மலையக இலக்கியம்: சில குறிப்புகள்' எனும் தலைப்பில் மு. நித்தியானந்தன் உரையாற்றியிருந்தார். இந்த உரையில் மலையகத்தின் பல்வேறு இலக்கிய ஆளுமைகள் குறித்தான தனது மனப்பதிவுகளைப் பகிர்ந்துகொண்டவர், தனது இலங்கைப் பயணம் குறித்தும் தனது தேடல், பதிப்பு முயற்சிகள் குறித்துமான தகவல்களையும் பகிர்ந்துகொண்டார். மலையக இலக்கியப் படைப்புகள், படைப்பாளர்கள் குறித்தான இவரது தேடலும் பதிவும் எப்போதும் ஆச்சரியங் கொள்ளச் செய்துகொண்டே இருக்கும்.

விரிவுரையாளர், ஊடகவியாலாளர், எழுத்தாளர், ஆய்வாளர், பேச்சாளர் எனப் பல்பரிமாண ஆற்றல்கொண்ட மு. நித்தியானந்தனது இன்னுமொரு முக்கியமான வகிபாகம் பதிப்பாளர் என்பதாகும். ஆரம்பத்தில் 'வைகறை' எனும் தனது பதிப்பகத்தின் ஊடாகவும் பின்னர் தனது தந்தையாரின் பெயரில் இயங்கும் கலையொளி முத்தையாப்பிள்ளை அறக்கட்டளை ஊடாகவும் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவரது பதிப்பு முயற்சிகள் அனைத்தும் பெறுமதியானவையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையுமாகும்.

தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். இராமையா, சி.வி. வேலுப்பிள்ளை போன்ற முன்னோடி மலையக இலக்கிய ஆளுமைகளின் படைப்புகளைப் பதிப்பித்துள்ள இவர், மலையக இலக்கியத்தின் பிதாமகனான மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் மீது அதீத மரியாதை கொண்டுள்ளவர். இதுவரை சி.வி. வேலுப்பிள்ளையின் 5 நூல்களைப் பதிப்பித்துள்ளார் எனும் தகவலையும் தனது உரையிலே பகிர்ந்து கொண்டார். 'வீடற்றவன்' (நாவல் - 1981 - வைகறை), ' நாடற்றவர் கதை' (கட்டுரைகள் - 1987 - ஐலண்ட் அறக்கட்டளை), ' மலைநாட்டுத் அரசியல் தலைவர்களும் தளபதிகளும் - (ஆளுமைப் பதிவுகள் 2022 - க மு அ) 'எல்லைப்புறம் (நாவல் - 2024 - க மு அ) என்ற வரிசையில் 'விஸ்மாஜினி' (2025 - க மு அ) எனும் சி.வி. யின் கவிதை நாடகத்தையும் பதிப்பித்துள்ளார். சி.வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதியதை தானே தமிழாக்கம் செய்து தமிழ், ஆங்கிலம் இணைந்த பதிப்பாக வெளியிட்டுள்ளதாகவும் தகவல் தெரிவித்தார்.



‘விஸ்மாஜினி’ எனும் படைப்பைப் பற்றிக் கூறுகையில் சி.வி. வேலுப்பிள்ளையின் ஆங்கில புலமைப் பற்றியும் கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் மீது அவர் கொண்டிருந்த பற்று குறித்தும் கருத்துரைத்தார். கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது அவரிடம் தனது ‘விஸ்மாஜினி’ நூலைக் கையளித்து சி.வி. வேலுப்பிள்ளை ஆசி பெற்ற நிகழ்வையும் (1934) நினைவுப்படுத்தியிருந்தார்.

கல்விப்பின்புலம் நிறைந்த யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கவிஞர் ரவீந்திரநாத் தாகூரை யாரும் பெரிதாகக் கண்டு கொள்ளாத நிலையில் அவர் கலந்துகொண்ட கூட்டம் சோபையிழந்த ஒன்றாகவே இருந்துள்ளது என வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் பிக்னஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியதுடன், இன்றையளவு கல்விப்பின்புலமும் இலக்கிய வளர்ச்சியும் கண்டிராத அன்றைய மலையகத்தில் இருந்து இளங்கவிஞராக இருந்த சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் கவிஞர் தாகூர் அவர்களைச் சந்தித்து தனது படைப்புகளைக் கையளித்திருப்பது வியப்புக்குரியது எனவும் சுட்டிக்காட்டினார். தாகூரின் எழுத்துக்களின் பால் பெரிதும் கவரப்பட்ட சி.வி. வேலுப்பிள்ளை தாகூரின் ‘கீதாஞ்சலி’ எனும் படைப்பின் தாக்கத்திலேயே ‘விஸ்மாஜினி’ எனும் கவிதை நாடகப் படைப்பினைத் தந்துள்ளார் எனவும் வியந்துரைத்தார்.

மு.நித்தியானந்தனின் இந்த வியப்பு நியாயமானதுதான். இலங்கையின் மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்த மடகொம்பரை எனும் ஒரு தேயிலைத் தோட்ட குடியிருப்பில் (கடந்த 2015 ஆண்டு இலங்கை வந்திருந்தபோது மடகொம்பரையில் அமைந்துள்ள சி.வி. வேலுப்பிள்ளையின் இல்லத்துக்கும் அவரது நினைவிடத்துக்கும் மு. நித்தியானந்தனை அழைத்துச் சென்றிருந்த நினைவுகள் நிழலாடுகின்றன) பிறந்து வளர்ந்த ஓர் இருபது வயது இளைஞனுக்கு இந்தியாவில் கல்கத்தாவில் வாழ்ந்த மாபெரும் கவிஞனின் படைப்புகளை வாசிக்கக் கிடைத்திருக்கிறது என்பதும், அந்த படைப்புகளின்பால் ஈர்க்கப்பட்டு தானும் அத்தகையதொரு ஆங்கில படைப்பாக்கத்தை தரும் ஒரு படைப்பாளியாக வெளிப்பட்டது ஆச்சரியங் கொள்ளத்தக்கதும் வியக்கவைப்பதுமான நிகழ்வுதானே!

இந்த நிகழ்வு குறித்து ஒரு தேடல் நீட்சியை நிகழ்த்துகைளில் கவியரசர் தாகூர் குறித்தும் அவரது படைப்புகள் குறித்தும் 1934-ஆம் ஆண்டிலேயே வீரகேசரி பத்திரிகைக்கு சி.வி. வேலுப்பிள்ளை தமிழில் கட்டுரைகளை எழுதியுள்ளமை மேலும் ஆச்சரியமளிக்கின்றது. 1914-ஆம் ஆண்டு பிறந்த சி.வி. வேலுப்பிள்ளை 1934-ஆம் ஆண்டு இந்தக் கட்டுரைகளை எழுதியுள்ளார் என எண்ணும்போது தனது 20-வது வயதிலேயே அந்த இளைஞனுக்குள் எழுந்த எழுச்சி வியப்பை ஏற்படுத்துகின்றது.

‘கவியரசரின் காவிய மாலைகள் - கீதாஞ்சலி புறப்பட்ட காரணங்கள்’ எனும் தலைப்பில் 1937-10-10 வீரகேசரி - ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையில் கவியரசர் தாகூரின் வாழ்க்கை வரலாற்றையும் ‘கீதாஞ்சலி’ உருவான வரலாற்றையும் சி.வி. வேலுப்பிள்ளை தொடர் கட்டுரையாக எழுதியுள்ளார். சி.வி. வேலுப்பிள்ளை ‘விஸ்மாஜினி’ எனும் கவிதை நாடக நூலை எழுதுவதற்கு வித்திட்ட ‘கீதாஞ்சலி’ எழுந்த வரலாற்றை சி.வி. வேலுப்பிள்ளை பின்வருமாறு பதிவு செய்கின்றார்:

எனது தாய்த்திருநாடு உனது அந்த ஜோதி மயமான வெளிச்சத்தின் ஆதியில் எனது நயனங்களைத் திறந்தேன் என்று கவியரசர் தனது கவியில் கூறினார் அல்லவா? அப்படி அவர் கண்ணை திறந்த தினம் எது தெரியுமா? 1861-ஆம் வருடம் மே மாதம் ஆறாம் தேதி ஆகும். அன்று அவர் கல்கத்தாவில் ஜெனித்தார். அவருடைய குடும்பம் ஈடும் எடுப்பும் கொண்டது. ‘மஹாரிஷி’ என்ற சிறப்புப் பெயர் பூண்டவர் ரவிந்திரநாத் தாகூர். கவியரசரின் தந்தை ஆதி பிரம்ம சமாஜத்தைக் கண்டவர்களில் ஒருவர். அவர் பெரிய யாத்திரீகர். அதனால் உண்டான அனுபவ அறிவு நிறைய அவருக்குண்டு. பாரத நாடெங்கும் செல்வாக்குப் பெற்ற குடும்பம் தாகூர் குடும்பமாகும். பரம்பரை பரம்பரையாக அவர்களுடைய வம்ச புகழ் நிலை பெற்று வந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் இலக்கியம், சங்கீதம் முதலான கலைகள் மீது அந்த குடும்பத்தாருக்கு இருந்த ஈடுபாடாகும்.

தாகூர் குடும்பம் பெரியது. பல சகோதரர்களின் மத்தியில் நமது கவியரசர் கடைசிக் குழந்தையாகப் பிறக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார். இளமைப் பருவத்திலேயே தாகூர் தாய் இல்லாத பிள்ளையானார். அதன் பயனாக அவர் வாழ்க்கை ஒரு வித மாற்றத்தை அடைந்தது. தாகூர் சிறுபிள்ளையாய் இருந்த காரணத்தினால் அவருக்கு தனிப்பட்டவர்களால் கல்வி கற்பிக்கப்பட்டது. அந்த காலத்திலேயே அவருக்கு ஏகாந்தத்தில் ஆசை அதிகம். பசுமையான வயல்களில் நடுவேயாவது நீண்டு வளர்ந்து நிற்கும் மலைகளின் மத்தியிலேயாவது ஏகாந்தமாக இருந்து இனிமை அடைய அவரது இதயம் பேரவா கொண்டது. அவரது அந்த நுட்பமான புலன்கள் மரங்களில் நாவன்மையையும், சிலுசிலு என்று ஓடும் ஆறுகளில் புத்தக அறிவையும், கம்பீரமாக எழுந்து நிற்கும் மலைகளில் உபதேசங்களையும் கண்டுகளித்தன. அவருக்கு அவைகளே அறிவூட்டும் சாதனங்களாகத் தோன்றின. அதிகம் கூறுவானேன், அவரது பள்ளிக்கூடப் பயிற்சி அப்படியும் இப்படியும் ஆகப் பல பள்ளிக்கூடங்களில் படித்ததினால் ஒழுங்கற்றதாகவே போய்விட்டது. ஆனால் ஒன்று அவர் வளர்க்கப்பட்ட முறை அச்சமயம் அவரை சுற்றி இருந்த கலையார்வம் இளமைப் பருவத்திலேயே அவருடைய கலை வன்மைகளையும் விரிவுபடுத்திவிட்டன. காலக்கிரமத்தில் சிரந்திதாஸ் வித்யாபதி அவர்களின் பாடல்கள் அவரது மனதை ஆகர்ஷித்தன. அவைகளின் மூலம் இவரது மேதாவி தன்மை உதயமாயிற்று.

தமது 14-வது வயதில் வால்மீகியின் நுட்ப அறிவு என்பது பற்றியதான ஒரு சங்கீத நாடகத்தை தாகூர் எழுதி முடித்தார். வங்காள சஞ்சிகைகளில் பலவற்றில் அவர் அந்த வயதில் பல கட்டுரைகளையும் வியாசங்களையும் எழுதுவார். சொர்ணகுமாரி தேவி என்பவர் தாகூரின் சகோதரி. அவர் நவீனங்கள், நாடகங்கள் எழுதுவதில் மிகத் திறமை வாய்ந்தவர். அவர் அக்காலத்தில் ஒரு பத்திரிகை வெளியிட்டு வந்தார். அந்த பத்திரிகை இதழ்களில் தாகூர் எழுதிய வியாசங்கள் ஏராளமாக வெளியாகின. தாகூருக்கு வயது பதினேழு ஆனபோது அவர் உத்தியோகப் படிப்பின் பொறுத்து இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். சட்டப்படிப்பு தமது போக்குக்கு முரண்பாடாக இருப்பதைக் கண்டு தாகூர் அதை பூர்த்தி செய்யாமல் தாய் நாடு திரும்பிவிட்டார். அதற்குப் பிறகு கல்கத்தாவை அவர் சேர்ந்த பின்னர்தான் அவர் வாழ்க்கையில் புதியதொரு ஜோதி புறப்பட்டு எழுந்தது. அந்த ஜோதியின் காரணமாக அவரது கவிப்புலமை ஆரம்பமாயிற்று.

தாளாண்மை மிகுதியால் அவரது கலாவன்மையானது செய்யுள்கள், கீர்த்தனைகள், நாடகங்கள், கதைகள், வியாசகங்கள் ஆகிய கலை சிருஷ்டிகளைச் செய்தது. தாகூர் ஆங்கிலத்தில் தனது கனவை உருவாக்குவதில் பெருமை கொள்ளவில்லை. என்றாலும் பிற்காலத்தில் நமது கவியரசர் தமது கவிதைகளை ஆங்கில வசனத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

அப்போது அவருக்கு வயது 23. மிருநாளினி தேவி என்னும் அம்மையாரை அந்த வயதில் தாகூர் மணஞ் செய்து கொண்டார். தமது மனித பருவத்தின் ஆரம்ப காலத்தை தமது மனைவியுடனும் ஐந்து குழந்தைகளுடனும் ஷில்டாவில் உள்ள அவருடைய பூர்வீக வாசஸ்தலத்திலேயே கழித்தார். அந்த காலத்தில் இவரது ஆத்ம ஒற்றுமை, தியானம் முதலியவைகள் அவரது கவிதா சிருஷ்டிகளுக்கு செழுமை கொடுத்து வந்தன. அந்த காலத்தில் தான் அவர் ஏராளமான சிறுகதைகளை எழுதினார். 'உலகமும் தாய்நாடும்' என்ற நாவலை அந்த காலத்தில்தான் அவர் எழுதி முடித்தார். இன்னும் சில காதல் கவிதைகள் வெளியானதும் அதே காலத்தில்தான். குடும்ப வாழ்க்கையின் நடுவே ஒன்றை அடுத்து மற்றொரு துக்கம் ஏற்படலாயிற்று, முதலில் அவர் மனைவியை இழந்தார். பின்னால் அவரது மகள் ஒருவர் விண்நேகினார். அடுத்தாட்போல் அவரது கடைக்குட்டி மைந்தன் ஒருவன் இவ்வுலக வாழ்வை நீத்தான். அந்தச் சிறுவன் தந்தையைப் போல் புத்தி நுட்பம் வாய்ந்தவனாகவே காணப்பட்டான். அத்தகைய புதல்வனை இழப்பது எத்தனை மன வருத்தம்.

'கஷ்டங்களின் கொடுமை கனத்த இன்பம்' என்னும் பழமொழி தாகூர் விஷயத்தில் உண்மையாகவே முடிந்தது. அவரது துன்பங்கள், அன்பு, அனுதாபம் என்பவைகளாகப் பழுத்தன. ஆத்மார்த்தமே உருவெடுத்தது போன்று எழுந்த 'கீதாஞ்சலி' என்னும் நூல் அவரது கஷ்டங்களின் விளைவாக எழுந்தது. இதற்குப் பின் அவரது வாழ்க்கையில் புதிய அம்சம் புகுந்தது. அப்போது கவியரசரின் கவனம் பல திசைகளிலும் அலைந்து திரியலாயிற்று. அவர் ஸ்வதேசி இயக்கத்தில் இருதயபூர்வமாக ஈடுபட்டு வந்தார்.

கவிஞர் தாகூர் குறித்தான சி.வி.வேலுப்பிள்ளையின் மேற்படி கட்டுரையைப் படிக்கும்போது கவியரசர் தாகூரின் வாழ்க்கை அவரில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. கவிஞர் தாகூரைப்போலவே மிக இளவயதிலேயே படைப்பாற்றல் மிக்கவராக சி.வி. வேலுப்பிள்ளை திகழ்ந்துள்ளார். கவிதைகள், கவிதை நாடகம், புதினம், சிறுகதைகள், வாழ்க்கை நிகழ்வுகள், வரலாற்றுத் தகவல்கள், ஆளுமைகள் பற்றிய பார்வைகள், அரசியல் கட்டுரைகள், நாட்டார் பாடல் சேகரிப்பு எனப் பலவகைப் படைப்புகளை அங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் தந்துள்ளார் சி.வி. வேலுப்பிள்ளை. தாகூர் தமது இலக்கியப் படைப்புகளுக்கு அப்பால் ஸ்வதேசி இயக்கத்தில் இணைந்ததுபோல சி.வி. வேலுப்பிள்ளையும் மலையக அரசியல், தொழிற்சங்க இயக்கத்தில் இணையலானார். இத்தகைய ஒற்றுமைகள் காரணமாகவே சி.வி. வேலுப்பிள்ளை 'ஈழத்து தாகூர்' என வர்ணிக்கப்பட்டுள்ளார். ஈழத்தின் தாகூர் என அழைக்கப்பட்ட சி.வி. வேலுப்பிள்ளை கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் குறித்தும் அவரது கீதாஞ்சலி குறித்தும் எழுதிய கட்டுரைகளை தொடர்ந்துவரும் 'தாய்வீடு' இதழ்களில் பார்க்கலாம்.



thilagar@thaiveedu.com



# அசோகமித்திரன் குறுநாவல்கள்

**சு. வேணுகோபால்**



ஒரு படைப்பு வெற்றியடைந்த படைப்பா தோல்வியடைந்த படைப்பா என்பது படைப்பாளியின் பார்வை சார்ந்த விசயம். அல்லது தேர்வு சார்ந்த விசயம். மிக கனமான பிரச்சினையைக் கூட படைப்பின் வீச்சு வாய்க்கப் பெறாத செய்தியாளர் கையில் சிக்கி கதை நய்ந்துபோவதுண்டு. செய்தியாளர்களாக இருக்க வேண்டியவர்கள் ஒரு கட்டுரைகூட எழுதாமல் கதைகள் எழுதித்தள்ளும் பட்டாளம்தான் தமிழ்ப் படைபுலகில் பாதியை அடைத்துக் கொண்டிருக்கின்றனர். கட்டுரையாளர்கள் என்றால் சிந்தனையின் பாய்ச்சலால் மனிதவாழ்வின் எதிர்காலம் குறித்து யோசிப்பவர்கள் அல்ல. நிகழ்காலப் பிரச்சினைகளின் வேர்களைக் கண்டு சொல்கிறவர்களும் அல்ல. அந்தந்த தேசத்திற்குரித்தான பிரச்சினைகளின் மையங்களைக் காணத் திராணியற்றவர்கள். இந்த செய்தியாளர்களின் கதைகளில் உடனடி பிரச்சினைகள் இருக்கும். அதன் வேர்களான சமூக உளவியலை அறுத்து எறிந்து விட்டுக் கோசங்களைத் திணித்துத் தைத்து விடுகின்றனர். படைப்பே ஒரு வாழ்வுதான். அந்த வாழ்வு நிஜத்தில் உலவுகிற வாழ்வு போன்றதுதான். ஆனால் அந்த நிஜவாழ்வை விட ஆரோக்கியமான வாழ்தலைச் சொல்லும் அடுத்த கட்ட பயணத்தில் போய்க்கொண்டிருக்கும். நிஜவாழ்வைவிட அரை நூற்றாண்டுக்கு முன்னே போய் அப்படி அரை, ஒரு நூற்றாண்டு முன்னேபோய் இயங்குவதாக எந்த பாவலும் காட்டிக் கொள்ளாமல் இந்த நிகழ்வாழ்விலேயே இயங்கு வதுபோல இயங்கும் படைப்பாளி தன்னை முன்நிறுத்துவதைக் காட்டிலும் படைப்பு ஓர் உலகை முன்நிறுத்தும். படைப்பாளிக்கே கைக்கு சிக்காத உலகம் இது. படைப்பாளி சொந்த வாழ்வில் சராசரி மனிதனாக இயங்க முடியும். அதாவது மனிதனுக்குரிய மரபான எல்லாப் பலவீனங்களும் சர்வ சாதாரணமாக இருக்கும். பொறாமை, வஞ்சகம், சூது, கெடுதல், பெண்களை, சக மனிதர்களை நேசிக்காத மனிதனாகக்கூட இருக்க முடியும். அப்படிப்பட்ட மனிதனையே தூக்கி எறிந்து விட்டு அவனுடைய படைப்பே எங்கோ ஓர் அற்புத உலகத்தில் இயங்கும் படைப்பு என்கிறபோது அவன் ஒரு சிருஷ்டிகர்த்தா இல்லை. படைப்புக்குள் எழும் மாந்தர்களை சித்திரங்களாகத் தீட்டிக் கொண்டு போகிறான். பேய் போல, கடவுள்போல, துஷ்ட தேவதைகள் போல, வனதேவதைகள்போல அரூபமான உருவங்களைப் புகைப்படங்களாகத் தீட்டுவதுதான் அவனுடைய வேலை. அவைகள் விரும்புகிற பாதைகளை - போகிற பாதைகளை வருகிற பாதைகளை வரைவதுதான். படைப்பின் உலகம் என்பது அபாரமானது. படைப்பாளிக்கே தெரியாத உலகம் படைப்பில் பீரிட்டுக் கிளம்பும். படைப்பாளி இதுவரை அனுபவத்திராத சந்திப்பு, நெருக்கடிகள், பிரச்சினைகள் என வருகிற அந்த நொடிதான் இவன் படைப்பாளியா ? செய்தியாளனா ? என்ற பாதைகள் வேறுபட்ட விதத்தில் பாதாளமாகப் பிரிந்து விடுகின்றன. படைப்பாளி நெருக்கடியின் சந்திப்புவரைகூட சாதாரண மனிதன்தான். அதுவரை கதையை அவன்தான் செயற்கையாக இழுத்துச் செல்கிறான். சந்திப்பு / நெருக்கடியின் அந்த தருணத்திலிருந்து அவன் செயற்கையாக உருவாக்கிய பாத்திரங்கள் உயிர் பெறுகின்றன. அந்த உயிர்கள் ஏவும் பணியைப் படைப்பாளி செய்கின்றான். பாத்திரங்களை ஏவி வேலை வாங்குகிறவன் படைப்பாளி அல்ல. அவன் செய்தியாளன். பாத்திரங்களின் ஏவலாளியாக பயணியாற்றுபவன் படைப்பாளி. அந்த நெருக் கடிகள் அவனுக்கே புதிய தரிசனமாக இருக்கும். மர்மமான உலகில் போய்க்கொண்டிருப்பதாகப்படும். அவன், அப்போது ஆவேசம் பிடித்தவன். அவன் உடலுக்குள் அவனில்லை. தெய்வம் பூசாரிக்குள் புகுந்து குறி சொல்வது என்பதென்னவோ பொய்யாகக்கூட இருக்கலாம். படைப்பாளிக்குள் மர்மமான படைப்புலகம் புகுந்து அவனை ஆவேசத்திற்குட்படுத்தி உணரச்சொல்கிறது. இந்த உளறல் உளறல் அல்ல. மேன்மையான பயணம். இதுதான் நிஜ உல கத்தில் நின்று கொண்டே எல்லைதாண்டி வெகுதூரத்தில் வீரியம் மிக்க மனித வாழ்வை நாட்டும் பணியைச் செய்கிறது.

அசோகமித்திரனின் படைப்பிற்கும் மேற்குறிப்பிட்ட படைப்புக்கும் மேற்சொன்ன எண்ணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த இரு படைப்புக்குறித்து எழுத நினைத்து என்னவோ மனதில் சம்மந்தமற்று துள்ளி விழுந்துவிட்டது. ஆமாம் செய்தியாளர்கள் படைப்பிலிருந்து அசோகமித்திரன் படைப்புகள் எப்படி சம்பந்தமற்று இயங்குகின்றன என்பதிலிருந்துதான் இவரின் படைப்புகளை இனங்காண முடியும். அசோகமித்திரனின் அபூர்வமான சில படைப்புகளைப்

படித்து முடித்ததும் இதுபற்றி என்ன சொல்ல முடியும்? ஒன்றும் தெரியவில்லையே! அப்பட்டமான உண்மையைச் சொல்லியிருக்கின்றன. இதற்குமேல் எதுவும் முதலில் ஓடாது. விமர்சகர் அசோகமித்திரன் படைப்பை நெருங்காமலே ஓடிவிடுவது இதனால்தான், விமர்சகருக்கு சர்ச்சையைக் கிளப்ப முடியாத மெல்லிய போர்வை இருப்பதை அசோகமித்திரன் உணர்ந்து நீங்கிச் செல்வதில்லை. 'விடுதலை'யைப் படித்து முடித்ததும் என்ன எழுதுவது என்றுதான் தோன்றுகிறது. உண்மையை அப்படியே சொல்லிவிட்டபின் எனக்கு என்ன வேலை எதுவுமே இல்லை. விமர்சகருக்கு வேலையே இல்லாமல் வைக்கும் எழுத்து முறை இது. ஆனால் அ.மி. எப்படி எழுதுகிறார் என்ற ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டால் சொல்ல பக்கங்கள் பத்தாது. படைப்பை உண்மையென்று உருவாக்கிக் காட்டுவதில் இவரிடம் சிரத்தையற்ற படைப்புமனம் இயல்பிலேயே வழிந்து ஓடுகிறது. முக்கியமாக இவர் சொல்லிச் செல்லும் விவரணைகளைக் குறிப்பிடலாம். இந்த விவரணைகளே இவரின் வலுவான பலம் படைப்பிற்குரிய பலம். எளிமையான தோற்றத்தில் இயங்குகிறது. மொழி வாய்க்கப்பெறாத செய்தியாளர்களின் பேனாவில் கசியும் எளிமையல்ல. வாழ்க்கை எப்படி மெதுவாக நகருமோ அதுபோல கதைநகர்வில் ஓர் எளிமை. வாழ்வின் போக்கை, விசித்திரங்களை சொல்வதற்காகப் படைப்பை அமைத்துக் கொள்வதே இல்லை. வாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறது. அந்த விசித்திரத்தை அடைவதற்காக அது நகர்ந்து வந்ததாகவே தெரிவதில்லை. மர்மத்தை, மன அழுக்கை, போட்டு உடைப்பதற்கென்றே புதுமைப்பித்தன் பின்னணிகளை உருவாக்கி எல்லையை - ஓர் எல்லையில் நிறுத்துவார். பெரும்பாலும் சமூகத்தின் மீது அவர் எழுப்பும் கேள்விகள் கிண்டல்கள் இதுவே அவரின் படைப்பு பயணம். மனோபாவம்.




'விடுதலை' குறுநாவலில் பரசுராம அய்யரை பம்பீனா என்ற சேரிப்பெண் மீது கொண்ட காதலாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே எழுதப் பட்டதாகவே தெரிய வில்லை. (மாதவனின் கிருஷ்ண பருந்தும் இப்படித்தான்) பெரிய குடும்பஸ்தர் பரசுராமய்யர். ஐம்பது வயதைத் தொடக் கூடியவன் (44) ஆறு குழந்தைகள் உண்டு. கடைசி குழந்தை ஜெயம் (ஜெயலஷ்மி) இரண்டாவது வகுப்பு படிக்கும் பெண் காணாமல் போய் விடுகிறாள். அவளை வெளியெல்லாம் தேடிவிட்டு பம்பீனாவை சந்திக்கிறார்.

ஜெயத்தின் ஸ்கூல் டீச்சர், பம்மீனா - பம்பீனாவின் அம்மா - அந்தோணியோடு வந்து பம்பீனாவின் அப்பாவோடு சேர்ந்து குடித்தனம் நடத்துவது; தாய் - மகள் சண்டை; 'அர்ச்சுனன் தமசுக்காக' கண்ணுசிங் - முருகையனின் இரவு நேர ஒத்திகைகள்;

சிவசாமி - பரசுராம அய்யர் இருவரின் அலுவல் வேலைகள் குடும்பப் பின்னணி பற்றிய கதையாடல்கள்;

பரசுராம அய்யர் - பக்கத்து வீட்டுக்காரர்கள் - பெயர் தெரியாமலே வாழ்வது; குரோம்பேட்டை என்ற ஊர் சென்னை நகரத்திற்குத் தொடர்பற்று இருப்பது; 1965-ஆம் வருட பின்னனி; தண்ணீர் பஞ்சம், தண்ணீருக்காக தண்ணீர் உள்ள வீட்டுக்காரரோடு கூட்டுபிடிப்பது;

கதையின் மைய இழையான பரசுராமர் கதையை விட்டு விட்டு சிவசாமியின் அலுவலகப் பிரச்சினை, அவர் வியாபாரம் சம்பந்தமாக வரும் ஜெர்மனிக்காரர்களுக்காக முன் பின் அலைவது; வீட்டுக்குள் வராமல் பம்மீனா வசிக்கும் சேரியில் ஒரு குடிசையில் தனியாக வாழ்வது; சம்பளம் அனைத்தையும் தன் குடும்பத்திற்கே (தனியாக வாழ்ந்தாலும்) அனுப்பி வைப்பது; மூத்த மகள் சரோஜாவுக்கு தன் அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடத்தை மேனேஜரிடம் கேட்பது இப்படி நாவல் வாழ்வாக விரிந்து போகிறது. குரோம்பேட்டையில் இரண்டு கிரவுண்ட் நிலத்தை நாலாயிரத்திற்கு வாங்குவது பற்றிய திட்டங்கள், மூத்த மகன் பாபுவை கல்லூரியில் படிக்க வைப்பதிலுள்ள சிரமங்கள், காசியாத்திரை சென்றிருக்கும் அம்மா பற்றிய கடிதங்கள், அந்தக்காலத்து பஸ் பயணம், ரயில் பயணம் எல்லாமே இக்குறுநாவலில் பரசுராமய்யரின் அடிமனசை பிடுங்குவதற்காக வரவில்லை. இந்த வாழ்வின் எத்தனையோ பகுதிகள் போல, சம்பவங்கள் போல பம்பீனாவை பெண்டாளவே அவர் குடும்பத்தைவிட்டு போய் கிடையாய் கிடப்பதும் நாவல் முடிவில் இது தெரிந்தாலும் அது மட்டுமே பிரமாதமான விசயமாக நாவலில் உரு வாக்கிக் காட்டாமலே விசயங்களை முக்கியத்துவப்படுத்தி யிருப்பது அபாரம். இதுதான் அசோகமித்திரன் என்ற படைப்பாளியின் படைப்பாளுமை. படித்து முடித்ததும் அந்த சிக்கல்மட்டும் தூக்கமாக தெரியவில்லை. முழு குறு நாவலுமே தன்போக்கில் இயல்பாக வாசக மனக்கிடங்கில் அசைகிறது. அசோகமித்திரன் படைப்புலகில் இது ஓர் அசுர சாதனை.

பம்பீனாவுக்காகத்தான் அவர் குடும்பத்தைவிட்டு இங்கு கிடக்கிறார் என்று வாசகன் உணராமல், குடும்ப பாரத்தை, அதன் சலிப்பைத் தாங்காமல் ஒதுங்கிக்கிடப்பவராகத்தான் உணர முடிகிறது. வாழ்வின் அலுப்பை உணர்த்தக்கூடிய ஒரு பாத்திர மாகவே தெரிகிறார்.

நாவலில் சில குறிப்புகள் உண்டு. பம்பீனாவுக்காக போன வேலையைப் பிடிக்க முழு முயற்சி எடுப்பது; வேலையே கிடைக்கவில்லை என்றால் அவளை முன்வைத்து அந்தச் சேரியில் ஒரு சிறிய பள்ளியைத் துவக்குவது என பரசுராம ஐயர் அலைவதில் கூட சந்தேகப்படாத அளவில் நகர்த்து கிறார்.

சரோஜா வீட்டிற்கு வந்தே தீரும்படி அழைக்கிறபோது போகிறார். L.I.C. பாலிசி வரும்போதும் போகிறார். பணம் தருகிறார். குடும்பத்தில் ஒரு மௌனம் சுழல்கிறது. ஐயரைப் பார்த்ததும் திரும்பிப் படுத்துக்கொள்கிற அம்மா, ஏனோதானோ என்ற கணவனின் உறவை அலுப்போடு நோக்குகிற மனைவி எல்லாம் நாவல் முடிந்தபின்தான்

வேறுமாதிரியான குறிப்புகளாகத் தெரிகின்றன. பம்பீனா என்ற சேரிப்பெண்ணின் மீதான இவரின் காதல் வெளிப்படையாகச் சொல்ல முடியாத ஒன்று. பொருத்தமற்ற வயது. (பம்பீனா டேவிட்) பொருத்தமற்ற வாழ்க்கைமுறை. ஒரு குடும்பஸ்தர். வயது வந்த பிள்ளைகள் எல்லாம் அவரை சொல்லமுடியாமல் பம்பீனாவை பின்தொடர மட்டுமே வைக்கும். அதைத்தான் பதிவு செய்கிறார்.

'அர்சுனன் தபசு' என்பதுதான் சொல்லாமல் சொல்லும் முக்கியமான குறிப்பு. அதுகூட நாவலில் கூத்தின் ஒத்திகையாகத்தான் வருகிறது. பரசுராமய்யருக்கு பம்பீனா மீதான தபசு என்பதாக இருந்திருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்கிற மாதிரி எப்போது தெரிகிறது என்றால் நாவல் முடிந்த பின்தான். என்வரையில் நான் வாசித்த படைப்புகள் சிக்கலை செல்லுகிற பயணத்தில் பல குறிப்புகள் முடிவை, முரணை புரிந்துகொள்ள படைப்பாளி பல ஏதுக்களை வழிநெடு வைத்துக்கொண்டே போவார். அந்த ஏதுக்கள் படைப்பு முடிந்தபின் பயங்கரமாய் மிளிரும்.

'விடுதலை' குறுநாவலில் அர்சுனன் தபசை ஒரு குறியீடாகவும் கொள்ளலாம். குறியீடாக அல்ல! சேரியின் பின்னணியில் அவர்கள் வாழ்வின் பொழுதுபோக்கோடு கூடிய ஒன்றாகவும் அர்த்தமாகிறது.

அதேபோல பம்பீனாவுக்காக அவர் செக்ரேட்டரியில் ஏறி மந்திரியின் செயலைப் பார்ப்பது, தட்டச்சைச் சரிபார்ப்பது எல்லாம் சாதாரண மனிதன் செய்யக்கூடிய உதவியாகவும் உருப்பெறுகிறது. விசேசதொனி தெரியாதபடி விநயமாக எழுதும் கலை அசோகமித்திரனுடையது. எனவே அசோகமித்திரனின் எளிமை என்பது உண்மையில் மொழி சம்பந்தப்பட்டதல்ல. படைப்பாளியின் பார்வை சம்பந்தப்பட்டது. அசோகமித்திரன் மட்டுமே மொழிநடையை படைப்பின் வடிவமாகக் கொண்டிருக்கிறார். அதிர்ச்சி தரக்கூடியவற்றை அதிர்ச்சி தரும் மொழிநடையால் அல்லது கவித்துவ வரிகளால் அல்லது தகிப்பு மொழிகளால் எழுதாமல் அதிர்ச்சியான திருப்பத்தை அதிர்ச்சியற்ற மொழியிலேயே சாதாரண திருப்பமாக எழுதித் தாண்டிச் சென்றுவிடுவது அவரின் கலை.

சில படைப்புகளில் முரண்கள் வெளிப்பட்ட பின்பு குறியீடுகளுக்கு வேலையில்லாமல் போய்விடும். 'விடுதலை' நாவலில் குறியீடுகள் கூட (அர்சுனன் தபசு) தன்னளவில் ஒரு வாழ்வைக் கொண்டிருக்கின்றன. இவரின் அனைத்துப் படைப்புகளையும் இதன் பின்னணியிலேயே புரிந்து கொள்ளலாம்.

நாவலின் தொடக்கத்தில் ஜெ. கிருஷ்ணமூர்த்தியின் பிரசங்கத்திற்கு அடிக்கடி போகும் பம்பீனா டீச்சருக்கு உறவு குறித்த தெளிவை - பற்றற்ற நிலையை கேட்கிறாள். பம்பீனாவை விட வாசிக்கிற வாசகருக்குப் பயனளிக்கக் கூடிய பகுதிகள் அவை. நாவலில் ஜெ. கிருஷ்ணமூர்த்தி பிரசங்கத்திற்குச் சம்பந்தமற்ற பரசுராமய்யர்தான் சம்பந்தமாகிறார். ஆன்மீக உரை கேட்பவர்தான் விடுதலை அடைய முடியும் என்பதல்ல. அப்படிக் கேட்பவர்கூட குடும்ப உறவில் சாதாரணராகவோ மீண்டும் உலாவுவர்.

பரசுராமய்யருக்கு விடுதலை கிடைக்கிறது. அவருக்கே தெரியாமல் பம்பீனா அப்துல்காதருடன் ஓடிவிட்ட பின்பு மனத்தி லிருந்து விடுதலை அடைகிறார்தான். ஓர் அப்துல்



காதராக இருந்திருக்கக்கூடாதா என்று ஏங்கியவர், அவள் ஓடிவிட்ட பின்பு அந்த எண்ணத்திலிருது விடுதலை அடைகிறார். உறவிலிருந்து விடுதலை. ஜே.கே. சொல்லும் மனவிடுதலை. எதுவும் இல்லாமல் இருப்பதான விடுதலை. ஜே.கே. யின் சிந்தனை பின்னின்று தொழில்பட்டதாகத் தெரியாமல் பரசுராமய்யரின் பற்றிலிருந்து விடுதலையாக நாவல் கால் பதிக்கிறது.

அசோகமித்திரனின் இன்னும் சில நாட்களை குறுநாவல் எனக் கொள்ள முடியுமா? சிறுகதையின் ஒருமைதான் மேலோங்கி இருக்கிறது. ஒரு முரணை நோக்கியே அத்தனை தகவல்களும் ஒருங்கு குவிவதால் சிறுகதையாகக் கொள்ளலாம். படைப்பு என்கிறபோது அது கோரி நிற்கும் நம்பகத்தன்மை மிக முக்கியமான அம்சம். மார்க்சிய, திராவிட, மற்ற புது. இய, பெண்ணிய, ஆணிய, தலித்திய எந்த இயத்திலும் வாசகனை நெருக்கமாக உறவு கொள்ள வைப்பது இந்த நம்பகத்தன்மைதான். உதாரணமாக மார்க்சிய படைப்பாளிகள் இரண்டு காகிதமலர்களை உருவாக்கி விடுகின்றனர். கதாநாயகன் வில்லன். கதாநாயகனுக்கு ஆசாபாசங்களே இருக்காது. லட்சியப் பாதையை நிமிர்த்தியே தீருவான். வில்லனிடம் கொஞ்சம்கூட நல்லம்சமே இருக்காது. கதாநாயகன்கூட நம்பும்படியாக இருப்பான். வில்லன் இருக்கிறானே தமிழ்மண்ணில் எங்கும் காணமுடியாது. ஏனென்றால் அந்த வில்லனிடம் நல்ல தனங்களே இருக்காது. அவனுக்கென்று சூழல்களே இருக்காது. வில்லன் என்று நிறுவு வதற்கு சூழல்கள், பின்னணி, சிக்கல் ஏதுமில்லாத வில்லன்களாக வருவார்கள். அதற்கான சிரத்தைகளை அவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. படைப்பாளி என்று வருகிறபோது நல்லவர் பக்கமோ -

வில்லன் பக்கமோ சாயவே முடியாது. அவருக்கு ஒவ்வொரு பாத்திரமும் முக்கியம். குப்பை கூழங்களும், காற்றும், மழை வெப்பமும் முக்கியம். படைப்பில் ஒரு படைப்புலகத்தை நிறுவுகிற கனவில் இருப்பவர். வில்லன் - கதாநாயகன் என்ற மிகச்சின்ன விசயத்திற்கு மெனக்கிட மாட்டார். லட்சிய கொள்கையைப் படைப்புக்குள் நுழைக்கிறவர்களுக்கு அந்த சின்ன விசயம்தான் விசயமே. படைப்பாளி உலகையே அரவணைக்கிறவர். அதற்குள் முரண்களைக் கொதிக்க விடுவார். முரண்கள்தான் வில்லன்கள். மனித பெயர்கள் அல்லது முதலாளி தொழிலாளி அல்ல. போகட்டும் அசோக மித்திரன் படைப்பில் நம்பகத்தன்மை அப்பட்டமாக இருப்பதற்கு மையமான பாத்திரமே காரணம். வாழ்வின் சிக்கலைச் சொல்லவந்த அந்தப் பாத்திரமே - அந்த பாத்திரத்தின் துயரத்தைத்தான் சொல்லிச் செல்வார். ஏழ்மையாகக்கூட இருக்கலாம். மற்றவர்களைவிட மேன்மையானவராகக்கூட படைப்பில் சுழன்று கொண்டிருப்பார். அவருக்குச் சின்ன எலும்புத்துண்டுகள் கிடைக்கிறபோது தனதாக்கிக்கொள்கிற மனநிலையை எழுதியே செல்கிறார். தனதாக்கிக் கொண்டே பொது சமூகத்திற்கும் பயன்படும் ஆசாமிகளை அ.மி. படைப்புகளில் காணலாம். நம்மை நாமே பார்த்துக்கொள்வதுபோல. இந்த இடம்தான் நம்பகத் தன்மையைத் தட்டி எழுப்புகிற இடம்.

‘இன்னும் சில நாட்களில்’ குறுநாவலில் வைத்தியலிங்க வைத்தியர் ஆன்மீக லட்சியம் கொண்டவர். தங்கக் குழம்பை தயாரிக்கிற சாமிநாதன் அதை வைத்தியரின் வாரிசுக்குத் தரும்படி சத்தியம் வாங்கியிருப்பதை இங்கு குறிப்பிடலாம். அதனால் வைத்தியரின் நிலை வாசகமனதில் தாழ்ந்து போவதில்லை என்பதை அடித்துச் சொல்லவேண்டும். இந்த மாதிரியான புள்ளிகள்தான் நம்பகத்தன்மையைக் கொடுக்கின்றன. அதே வைத்தியர் பழநியில் பிச்சைக்கார கூட்டத்திலிருந்து தத்தெடுக்கிற போது உயர்கிறார். அல்லது ஆபத்தான பரிசோதனை என்று வருகிறபோது தன் பிள்ளைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அந்த சவாலை எதிர் கொள்ள தனக்குப் பிறக்காத அனாதையைத் தயார் செய்து கொள்வதாகக்கூட இருக்கலாம். இதையெல்லாம் கடந்துதான் வைத்தியர் தான் அடையாத லட்சியத்தை ஒருவர் சந்தித்துப் பார்க்கட்டும் என்று துடிக்கிறார். தங்கத்தைக் கண்டு பிடித்து அவருடைய பிள்ளைகளுக்குத் தந்துவிட்டு தவத்திற்குப் போகிறான் சாமிநாதன்.

நாடி ஜோதிடத்தில் 7 வருடம் நாலு நாள் என்கிறான். தவம் இருந்து சாவை நெருங்குகிறபோது தவமிருந்த நாட்கள் பதினோரு வருசம் நாலுமாசம் ஒன்பது நாள்’ என்கிறான் மாரிமுத்து. சாமிநாதனின் கனவு சிதைகிறது. தரிசனம் என்பது பொய்யாக - வாழ்வே வேஷ்டாகி விட்டதாக செத்துப்போகிறான். திருவாரூர் ஜோஸ்யா கணக்கில் தவறு செய்திருந்தது சாமிநாதனுக்குத் தெரியாது. ‘பதினோரு வருஷம் நான்கு மாதம் பதிமூன்று நாட்கள்’ என்பது தெரிகிறது. மிச்சம் நான்கு நாட்களேதான். ஆனால் சாமிநா தனுக்கு ஏழு வருசம் சொச்சத்தைத் தாண்டி ஏமாற்றப்பட்ட தாகத்தான் கலங்கிச் சாகிறான். இச்சிறு கதையில் இந்த கணக்குவழக்குதான் கதையை நடத்துகிற விஷயகணம். ஆனால் படைப்பு நோக்கம் கதை தாண்டி எங்கோ செல்கிறது. தோல்விக்கும் வெற்றிக்குமான வாசகமனம் பயணம் கொள்கிறது. சரியான நாட்களை சாமிநாதன் மிச்சமில்லாமல் தவம் செய்திருந்தால் என்ற கேள்வி வாசகருக்கு பலபல விடைகளைக் கேள்விகளை எழுப்பி வாசகருக்குள் ஒரு படைப்பை. புனைவை உருவாக்குகிறது. இது முக்கியமான படைப்பு சாதனை. அதாவது சில நாட்களுக்கு முன்பே சாமிநாதனை மரணிக்க வைப்பதில் அல்லது கதையை அந்த இடத்தில் நிறுத்திவிடுவது. எனவே படைப்பும் வாசகனும் மோதிக்கொள்கிற மோதவைக்கிற இடம் அதி அற்புதமாய் இப்படையில் சந்தித்துவிட்டது.

இந்த சந்திப்பைத்தான் உருவாக்கி வைத்திருக்கிறேன் என்பது தெரியாமல் செய்து வைக்கிறார். சாதாரண வாசகனுக்கு அசோகமித்திரனின் இந்தக் கைவண்ணம் தெரியவே தெரியாது. பரிதாபகரமாக இன்னும் நாலே நாட்கள் தவம் இருக்கவேண்டிய நாட்கள் தெரியாமல் போய்விட்டதே என்ற ஏக்கத்தில் சுழல வைத்து மயக்கமுற வைக்கும். படைப்பின் எல்லை அது அல்ல. ‘முடிந்தால்... முடித்தால்... முடியப்பெற்றால்’ என்ற தொடரின் முடிந்த பின்னான விவாதத்தைத் தொடர்ந்து வைக்கிறது.

சாமிநாதனை பிச்சைக்கார கூட்டத்திலிருந்து தத்தெடுக்கி றபோது பிச்சைக்காரர்கள் மறித்து பணம் பிடுங்குவது பற்றி சன்னமாக எழுதுகிறார். திருவாரூர் ஜோதிடர் ‘தங்ககட்டி உனக்கு பங்கில்லையா’ என கேட்கிறார். இப்படி பல தகவல்களோடுதான் - மனிதமனங்களோடுதான் மைய இழையையும் நெய்து செல்கிறார். அசோகமித்திரனின் படைப்பு முறை இது.

அசோகமித்திரனின் கலை என்பது முடிந்தமட்டும் கற்பனை சாயைகளை அடியோடு நீக்கிவிடுவது, எதிர்பார்ப்புகளோ, கனவுகளோ படைப்பில் படியாவண்ணம் பார்த்துக் கொள்கிறார். இயங்கும் வாழ்க்கையைக் கதையாக அப்படியே பெயர்த்து நகர்த்துவது அசோகமித்திரன் விருப்ப மாகவே இருக்கிறது. காலம் தரும் நெருக்கடியில் மனிதர்கள் மாறியபடியே இருக்கின்றனர். மிகமிக சில சமயம் மனிதர்கள் சரியாகவும் பெரும்பாலான சமயங்களில் சுயநலமிகளாகவும் மாறிக்கொள்கின்றனர். மதிப்புகளும் உயர்ந்த எண்ணங்களும் சர்வசாதாரணமாக உதிர்ந்துபோகின்றன. இந்த நவீன வாழ்க்கை தரும் நிர்பந்தத்தை பலர் நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றனர். அதனை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளத் தவறினால் நீர்த்துப்போவோம் - நிர்தாட்சண்யமாகவே. பொதுநலன், ஈவு இரக்கம், மதிப்பு மரியாதை என்று பட்டியல்படி நடந்தால் எழும்ப முடியாதபடி பின்தங்கிப் போய்விடுவோம் என்ற சூட்சுமத்தை நெருக்கடியின் புதிரைக் கண்டடைந்தவர்கள் மட்டுமே நவீன காலத்தில் தாக்குப்பிடிப்பவர்களாக மாறுகின்றனர். போற்றப்பட வேண்டிய மதிப்புகள்தான். ஆனால் சுயநலத்தின் பற் சக்கரங்களில் அந்த மிச்சமீதி நல்லதனங்கள் நசுங்கி சிதைகின்றன. அதைவிட நெருக்கடி மகத்துவமான மனிதர்களை, தத்துவங்களை எப்படி சிறுகச்சிறுக உருமாற்றி நவீன முகங்களாக மாற்றிவிடுகின்றன என்பதின் மீது அசோகமித்திரன் பார்வை விழுந்தபடியே இருக்கிறது.

இவரின் கதைகளில் இரண்டு கோணங்கள் மிக நுணுக்கமாக நகர்ந்தபடியே இருக்கின்றன. ஒன்று நவீன கால மனோபாவம் தன் இயல்போடு பெருக்கெடுத்து ஓடுவது (ஆசிரியர் அதன் மீது வெஞ்சினமோ, தாறுமாறான விமர்சனங்களையோ முன்வைக்காத ஒரு பார்வை). இரண்டு பழைய மனோபாவங்களைக் கொண்டிருக்கிற (நல்ல விசயங்கள்) மனிதர்கள் நவீன முகத்தைப்புரிந்திருந்தும்

மரபுகளை மீறமுடியாமல் மோதிவிழுகின்ற காட்சிகள் கதைகள் நெடுக தென்படுகின்றன. இதற்குக்காரணம் நம் குடும்ப அமைப்புமுறை, விரும்பியோ விரும்பாமலோ இந்த அமைப்புமுறையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் நாம். அதை தனக்குச் சாதகமாக பயன்படுத்துகிற போக்கும் குடும்பத்திற்குச் சாதகமாக நிற்கிற போக்கும் நிகழ்ந்த படியே இருக்கின்றன. இந்த முரணை அசோகமித்திரன் கதையின் முடிவுக்காக வைக்காமல் முரணையே கதையாக உருவாக்கிக்காட்டுகிறார். இந்த அம்சத்தில் உலக எழுத்தாளர்களும் சரி, தமிழ் எழுத்தாளர்களும் சரி தொடாத பகுதிகளை அசோகமித்திரன் தொட்டிருக்கிறார். அசோக மித்திரன் கதைகள் காலத்தின் பதிவுகள். 20-ஆம் நூற்றாண்டு தமிழ் வாழ்க்கையின் பதிவுகள். இந்த வகையில் இக்கதைகள் ஆவணமாகின்றன. யார்மீதும் குற்றம்சுமத்தி எழுதாத கலைத்தன்மை இவரிடம் இருக்கிறது. விமர் சனத்தைக் காலத்தின்மீதும் மனிதர்கள் மீதும் வைக்கிறார். அது எங்குமே தெரியாதபடிக்கு உள்ளுறைந்து இருக்கிறது. ‘மணல்’ என்ற குறுநாவல் மேற்சொன்ன அனுபவத்தை, வாழ்வை தெளிவுறுத்தியது.

‘மணல்’ ஒரு குடும்பக்கதை. மணி, அப்பு, வனஜா, பவானி, சரோஜினி இந்த ஐந்து பிள்ளைகள், இரண்டு மருமகன்கள், தாய், தந்தை இவர்களின் போக்குகள் சொல்லப்படுகின்றன. தாயின் சமையலறை உழைப்பு என்பது அவள் இறந்தபின் காட்டும் வெற்றிடத்தால் உணரமுடிகிறது. அந்தப் பணியை ஏற்றுக்கொள்ள மறுக்கும், தப்பிக்கும் மனுஷிகளைப் பார்க்கிறோம். கணவனோடு அடிக்கடி சண்டையிட்டு வந்து இரண்டு மாதம் மூன்றுமாதம் சண்டைவாழ்க்கை வாழும் வனஜா, வளைகாப்பு நடக்கவில்லை என்றாலும் அதற்குரிய பங்கு கேட்கும் பவானி, சம்பளத்தை இழக்கவிரும்பாத இரண்டாவது மகன் அப்பு, காதல் மணம் செய்து கொண்டு குடும்ப சிக்கலிலிருந்து தப்பித்துவிடும் சாகசம், அந்தஸ்து பேசி திருமணமாகாமலே முடங்கிப்போகும் மூத்த அண்ணன் மணி. தாய் இறந்தவுடன் அதை ஈடுகட்ட பெரியம்மாவை அழைக்கிறபோது நைசாக தப்பித்துவிடும் குணம். எல்லாமும் அதன் இயல்போடு இருக்கின்றன. இத்தனை இக் கட்டுகளிலும் முட்டி மிதிபடுகிற சரோஜினி குடும்ப பொறுப்பை ஏற்கிறாள். அல்லது சமையல்கட்டு அவள்மீது சூழல் திணிக்கப்படுகிறது. கடைகுட்டி பி.யூ.சி.யில் முதல் வகுப்பு பெற்றாலும் டாக்டராகவோ, இன்ஜினியராகவோ போகமுடியாமல் முடங்கிப்போகிறாள். பவானியின் பிரசவத் தின்போது தாய் இல்லாத வெறுமை, முகத்தில் அறைந் தால்போல் இருக்கிறது. முடிந்த மட்டும் சரோஜினி உதவி செய்கிறாள். அண்ணன், அக்கா, அப்பா இவர்களுக்கு சமையல்காரியாக முடங்கிய சரோஜினி ஒரு பழைய போட்டோ ஸ்ருடியோகாரனை (மோகன்) நம்பி வீட்டைவிட்டு கிளம்புவது என்பது நெருக்கடியின் விளைவே. அவன் ஒரு போக்கிரி என்பதும் அவளுக்குத் தெரிந்ததே. திருமணமான அண்ணன் சுயநலமிக்க அக்காக்கள், காலத்தைப் புரிந்து கொள்ளாத அப்பா எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையை சரோஜினி உணர்ந்திருக்கத்தான் வேண்டும். ஆனாலும் ஒரு போக்கிரியை நம்பி அவளை வெளியேற வைக்கிற கொடுமையைக் காலம் திணிக்கிறது. சரோஜினி பந்தங்களால் உழன்ற குழந்தை. நெருக்கடி அவளை சீரழிக்க அழைக்கிறது. ஏதோ ஓர் ஆவேசத்தில் ஏதோ ஒரு நம்பிக்கையில் ஒரு போக்கிரியை நம்பி சந்திக்கச் செல்வதுதான் துயரம். ஒரு தாய் இருந்தால் நிகழ்ந்திருக்குமோ? கதையில் தாய்க்கு பெரிய மகத்துவம் இல்லை. அவள் இல்லாத வெற்றிடத்தினால் விளைகிற சிதைவுகளில் தாயின் மகத்துவம் காட்டப்படுகிறது. சரோஜினியும் மண்ணாகப் போகிற இடத்தில் தாய் தாயின் குடும்பபாரம் என்பது நாம் நினைக்கிறதுபோல லேசுபட்ட காவியமல்ல என்று விளங்குகிறது. அடுக்களை சுமை பெண்களின் கனவுகளைப் பறிக்கிற பலிபீடமாக காட்சியளிக்கிறது இக்கதையில். ஆனால் அதிலிருந்து தப்பிக்கிறதாக நினைக்கிற பெண்கள் அதைவிட மோசமான சூழலில் சிக்கி சீரழிகின்றனர். குடும்ப அமைப்பு என்பது இந்தியாவில் சிக்கல்வாய்ந்த அமைப்புத்தான். அந்த சிக்கலில் மாட்டிக்கொள்கிறபோது ஒருவித பாதுகாப்பு கிடைக்கிறது. ஒருவித அடிமைத்தனமும் அமுக்குகிறது ஒரு பொறியிலிருந்து தப்பித்தால் இன்னொரு பொறியில் மாட்டிக்கொள்ளும் சமூகச்சூழல் இது. இப்படி ‘மணல்’ ஒரு பன்முகப்பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டுகிற நல்ல கதை.

‘மாறுதல்’ பெரிய சிறுகதை. மூத்தமகள் குடும்பத்தில் ஒண்டி வாழ தன் மகளோடு தாய் வருகிறாள். தங்கை நிம்மி தன் கணவன் ட்ராயலில் பணம் திருடுவதைக் கௌரவ குறைச்சலாக நினைத்து கோபத்தைக் காட்டுகிறாள். எட்டாம் வகுப்பு படிக்கும் பருவத்துக்குரியவளாக நிம்மியின் செயல்கள் இருக்கின்றன. சைக்கிள் விடுவது, சக மாணவிகளுக்கு கைகுளிர செலவழிப்பது, பையன்களோடு சுற்றுவது என விவரிக்கிறபோதும் அவள் ஒரு குழந்தைதான். பங்கஜத்தின் கோவத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் தாய் நிம்மியை அழைத்து பழைய வீட்டிற்கு வருவதும், கோவம் தணிந்து தாய் பங்கஜத்தோடு சகஜமாவதும் இயல்பு. அதே போல நிம்மியின் பார்வையில் அக்கா பங்கஜம் தேவையான அளவு சுருட்டிக்கொள்வதாக சொல்வதும் மனித குணங்கள் பிளக்கப்படுகின்றன. பங்கஜம் நோய்வாய்பட்டு மீள்கிற போது கணவனிடம் நிம்மி கொஞ்சி திரிவதும் தாய் மருமகனுக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பதும் சகஜப் பட்டுப்போய்விடுகிறது. இந்த ‘மாறுதல்’ கூட நிர்பந்தத்தால் மாறி இயற்கைத்தன்மை பெறுகிறது.

தேவையின் பொருட்டோ, சூழ்நிலையைப்பொறுத்தோ மனிதர்கள் மாறிக்கொண்டே இருக்கின்றனர். பணத்தின் தேவை மனிதர்களை மாற்றுகிறது. சூழ்நிலைகள் மனிதர்களை மாற்றுகிறது. சில இக்கட்டில் மரபுகட்டுக் குள்ளே இறுக்கிவிடுகிறது. நம்பிக்கைகள் பொய்த்துப் போகின்றன. ஒரு கூண்டிலிருந்து விடுபட்டால் தெரியாத ஒரு கூண்டில் அகப்பட நேர்கிறது. ஆசைகள் நிராசைகளா கின்றன. நெருக்கடியிலும் சில மனிதத்துவம் தோன்றவே செய்கின்றன. காலம் உருட்டி விளையாடுவதை மிக மென்மையான தொனியில் உருவாக்கிக் காட்டுத் திறம்படைத்தவர் அசோகமித்திரன்.



venugopal@thaiveedu.com



## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து

**- அருணாசலம் லெட்சுமணன் -**

**07**

பிரமனின் புதல்வர்களில் ஒருவராகவே தக்கன் விளங்கினான். அவ்வாறே பிரமனின் மற்றுமொரு மகனாக காசிபன் விளங்குகிறான். காசிபனின் பிள்ளையான சூரபத்மன், கந்தபுராண உருவாக்கத்தின் பிரதானியாகக் காணப்படுகிறான். தக்கனைப் போலவே காசிபனும் சிவன் மீது அதீத பக்தி கொண்டவனாகவே இருக்கிறான். சிவனிடமிருந்து மேலான சக்தியைப் பெற்ற நவக் கிரகங்களில் முக்கியமானவராகக் கணிக்கப்படும் சுக்கிரனால் ஏவிவிடப்பட்ட மாயை எனும் அரக்க பெண்ணில் காசிபன் மயங்கி தனது வரங்களை அழித்துக் கொள்கிறான். காசிபன் மாயை தம்பதியினருக்கு அசுரர்கள் வாரிசுகளாகப் பிறக்கிறார்கள். மனித தலையுடன் கூடிய சூரபத் மனுக்கு சிங்க முகம் கொண்ட சிங்காசுரனும், யானை முகம் கொண்ட தாரகாசுரனும், ஆட்டின் முகம் கொண்ட அசமுகியும் சகோதரர்கள் ஆவார்கள்.

சூரபத்மன் சுக்கிலாச்சாரியாரிடம் பெற்ற உபதேசத்தின்படி சிவபெருமானை நினைத்து கடுந் தவம் புரிகின்றான். அத்தவத்தின் பயனாக 108 யுகங்கள் உயிர் வாழவும், 1008 அண்டங்களை அரசாளவும், இந்திரஞாலம் எனும் தேரையும், சிவனின் சக்தியைத் தவிர தனக்கு அழிவில்லை என்ற வரங்களைப் பெற்றுக் கொள்கிறான். தனக்கிருந்த சக்தியின் பயனாகத் தன்னைப் போல பலரை உருவாக்கி அண்டங்களை ஆட்சி செய்து வந்தான். சூரபத்மன் பதுமகோமளை எனும் பெண்ணை திருமணம் புரிந்தான். தனது மாயைகள் பிற அண்டங்களை ஆட்சி செய்த நிலையில் வீரமகேந்திரபுரியில் தனது நேரடி ஆட்சியைச் செலுத்துகிறான். சூரபத்மன் பத்மகோமளை தம்பதியினருக்கு பானுகோபன், அக்கினிமுராசுரன், இரணியன், வச்சிரவாகு (பத்து தலைக் கொண்டவன்) ஆகிய நான்கு புதல்வர்களும் பிறந்தார்கள். அது மட்டுமல்லாமல் சூரபத்மனுக்கு பல மனைவிமார்கள் இருந்துள்ள நிலையில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருந்துள்ள தாகவும் கூறப்படுகிறது.

தான் பெற்ற வரத்தின் வலிமையினால் சூரபத்மனின் ஆணவம் மிகுந்தது. கர்வம் கொண்ட நிலையில் தேவர்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகிறான். சூரபத்மனின் அதர்ம ஆட்சியில் சிக்குண்ட தேவர்கள் சிவனிடம் முறையிடுகிறார்கள். தேவர்களின் கோரிக்கையைச் செவிமடுத்த சிவன், அசுரர்களை அழிக்கும் வல்லமை படைத்த ஆறுமுகனை அவதரிக்க செய்கிறார். சிவனின் நெற்றிக் கண்ணைத் திறக்கும் நிலையில் ஆறு பொறிகள் உருவாகின்றன. சிவனுக்குள்ள ஈசானம், தத்புருசம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், அதோமுகம் ஆகிய சிவனின் ஆறு முகங்களில் இருந்தே ஆறுப் பொறிகளும் உருவாகியதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு உருவான தீப்பொறிகளை வாயு பகவான் ஏந்திச் சென்று சரவணப் பொய்கையிலுள்ள தாமரை மலர்களில் சேர்த்ததாக அறியப்படுகிறது. கார்த்திகைப் பெண்களின் பராமரிப்பில் வளர்ந்த ஆறு குழந்தை களையும் ஓர் நாள் பார்வதியார் வருகைத்தந்து கட்டி அணைத்தபோது ஒரு மேனியாகவும், ஆறு

முகங்களாகவும், பன்னிரு கரங்கள் கொண்ட உருவம் தோன்றியது. ஆறுமுகன் என்ற அடையாளம் வருவதற்கு தக்க சான்றாக அமையுமாற்றை இதில் காணலாம். முருகனின் ஆறு முகங்களும் ஞாலம், ஐஸ்வர்யம், அழகு, வீர்யம், வைராக்கியம், புகழ் எனும் குணங்களையும் குறிப்பிடுவதாக அமைகின்றது. இந்நிலையில் பார்வதியின் பாதச் சிலம்பில் இருந்து தோன்றிய வாரிசுகள் முருகனின் படை வீரர்கள் ஆகிறார்கள். சூரபத்மன் உட்பட அவனுடைய சகோதரர்கள் அனைவரையும் மாய்ப்பது வரை கந்த புராணக் கதை நகர்த்துகிறது. கந்தபுராணக் கதையம்சத்துடன் தொடர்புபட்டும் கந்தப்புராணத்தை மக்களிடத்தே எடுத்துச் செல்லும் நோக்கம் கருதியும் காமன் கூத்து ஆடப்படுகிறது.

சூரபத்மன் சிவனை வேண்டித் தவத்தில் ஈடுபட்டதை பின்வரும் பாடல் சித்தரிக்கிறது.

***'சூரபத்மன் தாருகன் சுத்தவீரன் சிங்கமுகன்***
***மூவர்களும் தான்கூடி முக்கண்ணரை தான் தேடி***
***ஆதி சிவன்நாடி அநேக தவம் புரிந்து***
***பஞ்சாக்னியில் நின்று பெருந்தவங்கள் தான் செய்ய***
***தசகனைத் தானெடுத்து தர்ப்பரனைத் தான் தரித்து***
***தணலிலே தான் போட்டு தபசு இருந்தான் சூரனவன்***
***அனேகதவம் புரிந்தான் ஆங்கார சூரபத்மன்***
***சதாசிவனைத் தான்துதிக்க சாம்பசிவனும் மிக்க***
***பரமன் மனமகிழ்ந்து பார்வதியுடனே வந்து***
***தவத்துக்கு தான் மகிழ்ந்து தர்பரனார் ஏதுரைப்பார்'***

சூரபத்மன் முன் தோன்றிய சிவன் 'என்னை குறித்து நீங்கள் இப்படி தவமிருக்க / உனதுறுதியைத் தான் கண்டு புகுந்து நான் வந்தனிப்போ' என்று கூறி என்ன வரம் வேண்டுமென்று என்று கேட்டார். 'சம்போ சதாசிவனை சக்தி உமை நாயகனே' எனக் கூறி சூரபத்மன் சிவனை வேண்டுவது அடுத்தடுத்த பாடல்களில் எடுத்துக்காட்டப்படுகிறது. ஆயிரத்தெட்டு அண்டம் அடிகலமெல்லாம் ஆள வேண்டும் என்றும் ஆரும் எதிரில்லாமல் இருப்பதோடு ஐந்து முகத்தாலே அழியாமல் இருக்க வேண்டும் என்றும் வேண்டுகிறான். சிவனிடம் 'தேவர்கள் மூவர்களும் என்னைத் தினம் தினம் பணிய வேண்டும் எனக்கேட்கும் சூரபத்மன் சர்வஜீவ ஜந்துவினால் நான் சாகாமல் இருக்க வேண்டும்' என்ற வரத்தையும் இறைவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்கிறான்.

பொதுவாக காமன் எரித்தல் தினத்தன்று அரங்கேற்றும் நிகழ்வுகளில் இவ்விடயம் சில சந்தர்ப்பங்களில் மாத்திரமே அரங்கேற்றப்படுவதுண்டு. இக் காட்சி நிலைகளின் பாடல்கள் மாத்திரம் காமன் மாஸ்ட்டரினால் எடுத்துரைக்கப்படுகிறது. சூரபத்மன் சார்பான குரல், ஈஸ்பரன் சார்பான குரல், இரண்டு உரையாடல்களையும் தொடர்புபடுத்தும் வகையில் பாடல்களுக்கான தொடர்பு நிலையும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்தவாறு சூரபத்மனின் கோரிக்கையை செவிமடுத்த நிலையில் அந்நிலையின் விளைவுகளைப் பற்றி யோசிக்காத நிலையில் சூரபத்மனுக்கு சிவனாரும் வரமளித்து விடுகிறார். உலக ஓட்டத்தில் தீய எண்ணங்கள் உடையோருக்கும் அதிகார வர்க்கத்தினருக்கும் கிடைக்கும் வரப்பிரசாதங்களும் இவ்வாறுதான் அமைந்து விடுகின்றன. ஜனநாயகத்தின் ஊடாகவும் முறையற்ற ஆட்சியாளர்களுக்கான அதிகாரமும் இவ்வாறுதான் பகிரப்படுகின்றமை கவனத்திற்குரியதாகும். அதிகார வர்க்கத்தினரிடம் இருந்து கையகப்படுத்தும் அதிகாரங்களும் மக்கள் நலனில் அக்கறை கொள்ளாது துஸ்பிரயோகப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையும் காமன் கூத்து விளக்கி நிற்கிறது. இவ் வகையான நெருக்குவாத நிலைகளுக்கு மலையக மக்களும் தங்கள் வாழ்நாளில் முகங்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. முதலாளி வர்க்கம் என்ற நிலையில் அதன் அதிகார கட்டமைப்பில் சிக்குண்ட நிலையை இது காட்டுகிறது. அவ்வாறே தொழிற்கட்டமைப்பில் துரைத்தன, கங்கானித்தன அடக்குமுறைகள், தொழிற் பிணக்குகளை உறவுகளோடு முன் நகர்த்தும் தொழிற்சங்க கட்டமைப்பின் 'இறுக்குதல்' நிலைமையும் மலையக மக்களின் நலனைப் பாதிக்கும் செயற்பாடுகளாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். தொழிற் சங்க கட்டமைப்பில் இருந்து பிறந்த அரசியல் தெளிவின்மையும் இம் மக்கள் பாதிக்கப்படுவதற்கு பிரதான காரணம். நீண்டகாலமாகவே இக்கொடுர நிலைமைத் தவிர்க்க மீட்பர் இல்லாத நிலையே இற்றைவரை காணப்படுகின்றன. தேவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு நிலைமையைப் போன்று தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையை விளக்கும் வகையில் சூரன் வரலாறு காணப்படுகின்றது. பெரியாங்கங்கானிகளின் சேட்டைகளாலும் உழைப்பு சுரண்டல்களாலும் பெற்ற பாதிப்புகள் ஏராளம். பொதுவாக கங்கானிகள் சூரனுக்கு ஒப்பான பாதிப்பு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றமையை மலையக நாட்டார் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. கங்கானிகளுக்கு எதிரான வசைகளைப் பல பாடல்கள் சுட்டி நிற்கின்றன. அவ்வாறான பாடல்களில்,

***'கங்கானி கங்கானி கருத்தக் கோட்டு கங்கானி,***
***கங்கானி கங்கானி நாலு ஆளு வரலனாக்கா***
***நக்கி போவான் கங்கானி...'***

எனக் கங்கானியை நையாண்டி பண்ணும் வகையில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இதுபோல கங்கானிமாரால் ஏற்படும் பாதிப்புக்களையும் மலையக நாட்டார் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

***'கூடயில கொழுந்துமில்ல***
***கொழுந்தெடுக்க சிந்தையில்ல***
***கங்கானி சொன்ன சொல்லு***
***கண்ணீரைக் கொட்டுதடி...!'***

என்ற சோகத்துடன் பாடப்படும் மலையகப் பாடல் இதற்கு தக்க எடுத்துக் காட்டாகும்.

***'கல்லாறு தோட்டத்தில்***
***கண்டாக்கையா பொல்லாதவன்***
***மொட்ட புடுங்குன்னு***
***மூனாள வெரட்டி விட்டான்...!***
***கோண கோண மலையேறி...***
***கோப்பி பழம் பறிக்கையிலே***
***ஒரு பழம் தப்பிச்சினு***
***ஒதச்சானாம் சின்ன தொரை...!'***

என்றவாறும் வசைப் பாடல்கள் மேலாதிக்க வர்க்கத்துக்கு எதிரானவையாகக் காணப்படுகின்றன. மலையக மக்களின் உழைப்பினை உறிஞ்சுதல் தொடக்கம் பாலியல் வன்

கொடுமை வரையில் தாராளமாகவே இம்மக்கள் அவதியுறுத்தும் செயற்பாடுகள் தொடர்கின்றன. தோட்டங்களிலே சூரன்களாக வலம் வரும் கங்காணிகள், கணக்கப்பிள்ளைகள், துரைமார்கள் ஏராளம். அப்பாதிப்பு நிலைத் தொடர்பிலான அனுபவமே சூரனை வதம் செய்தல். இச்செயற்பாட்டில் மக்களுக்கு ஆர்வம் மேலோங்கி இருந்தமையும் காணக்கூடியதாக இருந்தன. இவ்வகையாகச் கூத்தாடும் சந்தர்ப்பத்தில் எதிர்ப்புணர்வுகளை வளர்த்துக் கொண்ட நிலையில் தண்டனைகளையும் அதிகார வர்க்கத்தினர் பிரயோகித்துள்ள நிலைமைகளும் காணப்படுகின்றன.

***'வரம் பெற்ற சூரனவன் வந்தானே வையகத்தில்***
***தேவர்களை தான் பிடித்து சிறையயில் அடைத்து விட்டான்***
***முனிவர்களை தான் பிடிப்பான் மூர்க்கமுள்ள சூரனவன்***
***கர்ப்பமிகு மங்கையரைக் கர்ப்பழித்தான் சூரனவன்***
***ஆங்கார சூரனவன் ஆரும் எதிரில்லாமல்...'***

என்ற பாடலடிகள் இதனை தெளிவாக எடுத்துரைக்கின்றன. இவ்வாறு சூரனின் அட்டகாசம் தொடர்ந்த நிலையில் தேவர்கள் கூட்டம் கூட்டமாகச் சிவனை நோக்கி விரைந்து சென்று தாங்கள் சூரபத்மனால் அனுபவிக்கும் பாதிப்புகளை எடுத்துக் கூறினார்கள். சூரபத்மனை அழிக்கும் முனைப்பே முருகனின் உருவாக்கத்திற்கு காரணமாகிறது. கந்த புராணத்தின் கதை நகர்வை எடுத்துரைக்கும் முனைப்பில் அவ்வரலாற்றுத் தடங்களையும் இப்பாடல்கள் முன்வைக்கின்றன.



முருகனால் சூரன் வதம் செய்யப்பட்ட நிலையில் சிவன் தவறான ஒருவருக்கு தானளித்த வரம் உலக அமைதிக்கு பங்கமாக அமைந்தமையை எண்ணி தனக்குள் ஓர் முடிவுக்கு வருகிறார். பாதிப்பு நிலை ஏற்படுவதற்கு நாம் காரணமாகி விட்டால் சிவனின் மனசாட்சி அவரை உறுத்துகிறது. குற்ற உணர்வில் சிவன் புளுங்குகிறார். அவ்வாறான நிலையில் சிவன் இமயமலையை நோக்கி சென்று தவம் செய்கிறார். ஆயினும் சிவனின் தவ நிலை பாதிப்புக்குள்ளாகிறது.

***'இமயகிரி சாரலுக்கு ஏகினார் யீசனுமே***
***உதயகிரி சாரலுக்கு உத்தமனார் தானேகி***
***தக்சனா மூர்த்தியைப் போல் உக்கிரமும் உண்டாகி***
***தேவன் வடிவம் கொண்டு***
***நிஸ்டையிலே தானிருந்தார் நிமலரும்...'***

என்று பாடல் வரிகள் தொடர்கிறது. சிவனின் நிஸ்டையினால் உலக இயக்கமே தடைப்பட்டு விட்டது. சிவனின் உறக்க நிலை தொடரும் நிலையில் உலகமும் ஒளியிழந்து இருளானது. கைலாச வாசகனான ஈசன் தன் கண்களைத் திறக்காமல் போனால் உலகம் இயங்காது. உலகத்தில் வாழும் உயிரினங்கள் ஒன்றும் உயிருடன் இருக்க முடியாது. உலக இயக்கமே தடைப்பட்டு விடும். இந்நிலைமையைத் தொடரவிடக்கூடாது என்ற முனைப்பில் தேவர்கள் ஒன்று கூடுகிறார்கள். இவ்வாறு ஒன்றுக்கூடி பொது முடிவு நோக்கி ஆலோசிக்கும் நிலையைப் பின்வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

***'ஈசன் தவத்தாலே இடர் வந்து நேர்ந்ததென்று***
***இந்திரனார் அப்பொழுது தேவர்களின் சபையைக் கூட்டி***
***இதற்கென்ன செய்வதென்று ஏங்கி இருக்கையிலே,***
***அப்போது அண்டத்து தேவர்களும், அசுர முனிவர்களும்,***
***சூரமுனி நாரதரும் சபையில் இருக்கையிலே,***
***அந்த சபையிலே நாரதரும் ஏதுரைப்பார்.***
***ஆயனார் தன் மகனாம் அழகுகிளி வாகனத்தோன்***
***மங்கை படை மன்மதனார் மாரவேளை தனையழைத்து***
***ஐந்து மலர் கனையோன் அச்சுதன் மகனை அழைத்தால்***
***செங்கரும்பு விலிலெடுத்து சிதறடிப்பான் தபசை***
***அவராலே ஆகுமென்று அவராலே தானுரைக்க...'***

என்ற நாரதரின் உரையை கேட்ட நிலையில் மனமகிழ்ந்து அடுத்தக்கட்ட செயற்பாடுகள் நோக்கி இந்திரன் நகர்கிறான்.

***'அன்புள்ள மன்மதனே அச்சுதனார் தன் மகனே***
***அடியேன் இந்திரனும் அன்புடனே எழுதுவது***
***ஈசன் தவத்தாலே இடர் வந்து நேர்ந்ததையா***
***அங்கஜரே நீயும் வந்து இரட்சிக்க வேணுமையா***
***இப்போதே வர வேணுமையா காகுந்தன் தன்மகனே***
***இங்ஙனம் உனதன்புள்ள இந்திரன்...'***

என்றவாறு ஓலையைத் தயார் செய்கிறான் இந்திரன். தயார் செய்யப்பட்ட ஓலை தூதன் மூலமாக மன்மதனுக்கு கிடைக்கச் செய்யும் ஏற்பாடுகள் தொடங்கப்பெற்றன. சூரபத்மனின் அழிவு முன்னிலைப்படுத்தப்படுகிறது. சிவனின் தவ நிலையைக் களைப்பதன் ஊடாகவே உமையுடன் உடலால் ஒன்று

சேரும் தன்மையை ஏற்படுத்த முடியும், என்ற முனைப்புடனும் காமன்கூத்தில் மதன் தயார் செய்யப்படுகிறான்.

இமவானின் புதல்வியான பார்வதி சிவனைக் கணவனாக அடைவதற்காக சிறு வயது முதலே தவம் இருக்கிறாள். பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக ஆண் மகனே பெண் வீட்டாரிடம் சென்று பெண் கேட்க வேண்டியது நடைமுறையாக இருந்தது. சிவனை நினைத்து பார்வதி ஏங்கிக் கொண்டிருக்கும் தருவாயில் சிவன் தரப்பில் இருந்து எதுவித சமிச்ஞையும் கிடைக்காததால் சிவன் மீதான கோபம் பார்வதியின் தந்தையான இமவானுக்கும் இருந்தது. இருந்த போதிலும் உலகின் ஏகம் சிவன் என்ற காரணத்தினால் தன்னை இமவான் ஆசுவாசப்படுத்திக் கொள்கிறான். சிவன் கைலாயத்தில் கடும் தவம் இருக்கும்போது சிவனுக்கு பணி விடை செய்வதற்காக பார்வதியையே அனுப்பி வைக்கிறான். தவம் செய்யும் அனைவருக்கும் வரங்களை வழங்கும் ஏகத்து வத்தில் சிவன் இருக்கையில் தானே தவம் இருப்பது எதற் காக ? தவத்தின் மகிமையை எடுத்துரைக்கும் கைங்கரியமாக இது இருக்கலாம் என்ற பொதுவான கணிப்பு உலகின்பால் உள்ளமை கவனத்திற்குரியதாகும்.

சூரனின் கொடூரப் போக்கினால் தேவலோகம் பின்வருமாறு சித்தரிக்கப்படுகிறது. தேவர்களுடைய முகங்கள் பனியால் மூடப்பட்ட நட்சத்திரங்கள் போலக் காணப்படுகின்றன. இம் முகங்கள் சோபை இழந்து போயுள்ளன. இந்திரனின் வஜ்ரா யுதம் ஒளி வீசும் கிரணங்களை இழந்து கூர்முனைகள் மழுங் கியதாகத் தென்படுகிறது. வருணனின் கையிலுள்ள பாசம் மந்திரங்களால் கட்டுண்ட நாகப்பாம்பு போல் வலுவிழந்து காணப்படுவதாகக் கூறப்படுகிறது. கதாயுதம் இல்லாமல் குபேரன் அவமானத்துடன் நிற்பதையும் காண முடிகிறது. எமன் தனது ஆயுதமான தண்டத்தை நெருப்பு அணைந்த



தணலைப் போல பிடித்திருந்தான். பன்னிரெண்டு சூரியர் களும் இயல்பான உஸ்ணம் தணிந்து குளிர்ந்து போனவர்க ளாகக் காட்சித் தந்தார்கள். இந்நிலைமைகளைப் பார்வை யிட்ட பிரமனுக்கு விஸ்ணுவினுடைய சக்ராயுதத்தைப் பிர யோகித்து தோற்றுப் போன விடயமும் தேவர்களால் எடுத்துக் கூறப்பட்டது. விடயங்களை அறிந்த பிரமன் 'சிவனுக்கு பிறக்கும் குழந்தையே சூரனை அழிக்கும் வல்லமை பொருந்தியவன் என எடுத்துரைக்கின்றான். சிவனின் தவத்தைக் கலைத்து காந்தத்தை இழுக்கும் இரும்பைப்போல கவரும் தன்மையை உமையால் சாத்தியப்படுத்தும் நிலைமையை உருவாக்க வேண்டும் எனத் தேவர்களுக்கு பிரம்மா யோசனையை முன் வைக்கிறார். இவ்வாறான நிகழ்வின் பின்னரே மன்மதன் ஊடாக சிவனின் தவத்தைக் கலைத்து காமத்தை ஏற்படுத் தும் நோக்கம் கருதி மன்மதன் தெரிவு செய்யப்படுகிறான்.

தேவர் சபையால் இந்திரனால் எழுதப்பட்ட ஓலையை மாத் திரம் தூதன் எடுத்து வரவில்லை. பொதுவாக உறவினர் ஒருவர் பிறிதொருவர் இருப்பிடத்திற்குச் செல்லும்போது தீன் பண்டங்கள், பரிசுப் பொருட்களை எடுத்துச் செல்வது வழமையான செயற்பாடாகும். இங்கும் அவ்வாறுதான் தேவர் கள் தூதுவனிடம் மதனுக்கு ஏற்ற பரிசுப் பொருட்களைக் கொடுத்து விடுகின்றனர். 'ரதிக்கேற்ற மன்மதனுக்கு ரத்னகிரீ டத்தைக் கொடுத்த தேவர்கள் பெண்களுக் கேற்றதொரு பூச் சக்கர குடையையும் கொடுத்துவிட்டனர். இத்தோடு பட்டாடை, ஆபரணம், பஞ்சவர்ண சால்வை, கிளி வாகனம், பதினெட்டு ஆயுதம் முதலானவற்றையும் பரிவாகத் தான் கொடுத்தனர். அத்தோடு 'வானவர்கள் எல்லோரையும் வரவழைத்தனர்' என்ற கூற்றையும் மறவாமல் எடுத்துரைக்குமாறு தேவர்கள் தூதுவர்களிடம் வலியுறுத்தினர்.

தூதுவர்கள் எனக் குறிப்பிடப்பட்டாலும் காமன் கூத்து அரங் கேற்றத்தில் தூதன் வேடமிட்டு ஒருவரே அரங்கிற்கு வருகின்ற மையை அவதானிக்கலாம். வீரப்பத்திரரைத் தொடர்ந்து பந் தங்களுடன் வருகைத்தரும் பாத்திரமாக இப்பாத்திரம் அமை யப் பெறும். வருகைத்தரும்போது காமன் கூத்து இடம்பெறும் களம் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்துவதாகக் காணப்படும். கூத்து நடக்கும்போது கண் விழித்துப் பார்வையைச் செலுத் திக் கொண்டிருக்கும் தருவாயில் கண் அயர்வுக்கான வாய்ப் புகளும் ஏற்படுவதுண்டு. இச்சந்தர்ப்பத்தில் தூக்கத்தைக் களைத்துவிடும் பணியையும் இப் பாத்திரத்தின் பிரசன்னம் ஏற்படுத்திவிடும். பொதுவாக தேக ஆராக்கியமும் திடமான மனதையும் கொண்டவர்களே இப் பாத்திரத்தை ஏற்பதுண்டு. காமன் கூத்து கதையம்சத்தில் தூதனுடைய வரவு அழகியல் அம்சத்தோடு சித்தரிக்கப்படுகின்றமை கவனத்திற்குரியதாகும்.

***'ஆரோக்கியா புரம்தேடி அஞ்சாமல் வருகையிலே***
***மாயா புரிதேடி வருந்தி வருகையிலே***
***கற்பூர வனந்தேடி கணமாய் வருகையிலே***
***காடு மலைத் தாண்டி கரியமலை தான் கடந்து***
***வெய்யலில் தான்நடந்து மேனியுருகிப் போய்***
***தண்ணீர் தாகங்கள் தாகத்துடன் தான்நடந்தார்***
***குளிர்ந்த நிழல்தேடி தூதுவரும் ஓடி வந்தார்***
***மலையும் காடும்தாண்டி வருகின்ற வழிதனிலே***
***சாலைகளும் தோப்புகளும் சரமுடனே கண்டார்கள்***
***தோட்டம் துறவுகளும் தூதுவர்களும் கண்டார்கள்***
***தோட்டத்து அருகினில் தூதுவர்கள் ஓடிவந்தார்...'***

நீண்ட தூரம் பயணித்துக் களைப்புற்ற தூதர்கள் ஆரோக்கிய புரம் வளாகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரோக் கியப்புரத்தின் சூழல் மிக ரம்மியமிக்கதாகவும் பெயருக் கேற்ற வகையில் வளமானதாகவும் அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

***'…கொம்பில் பழுத்ததொரு கோதுபலா மாங்கனியும்
வேரில் பழுத்ததொரு வெடித்த பலாப்பழமும்
குளஞ்சி பழுத்திருக்கும் கோதில்லா தேன் சொரியும்
தென்னைமரச் சாலையிலே செவ்விளநீர் தொங்கி டுமாம்
கொய்யாப் பழங்களும் கொத்தோடு காய்த்திடுமாம்
மாதுளம் பழங்களும் வாய்வுரித்து வாசமிடும்…'***

மதன், ரதி வாசம் கொள்ளும் ஆரோக்கியபுரத்தின் இயற்கை சூழல் சோலைகளாகக் காணப்படும் நிலையில் அச்சோ லைகள் பழவகைகளைத் தரும் கூடாரங்களாகவும் அமையப் பெற்றுள்ளமை கவனத்திற்குரியதாகும். இயற்கை வளம் நிறைந்த இப்பிரதேசம் 'ஆரோக்கியபுரம் எனும் ஊரின் பெயரை அர்த்தப்படுத்துவதாகவே அமைகிறது. அவ்வாறான ஆரோக்கிய சூழலில் பல்லின உயிரினங்களின் வாழ்வுநிலை யும் முக்கியத்துவம் பெறுகிறது. காட்டானை, சிங்கம், மான், கிளிகள், பன்றிகள், கரடிகள், ராஜாளி, கொக்குகள், மந்தி குரங்குகள்,வெள்ளைக் கிளிகள், பச்சைக் கிளிகள், சின்ன கிளிகள், பஞ்சவர்ண கிளிகள் என பல விலங்குகளின் சரணா லயமாகவும் ஆரோக்கியபுரத்தின் இயற்கை காட்சியளிக் கிறது. இதுபோல ஆரோக்கியப்புரத்தின் நீர் வளம் குறித்த எடுத்துரைப்புகளும் முக்கிய கவனம் பெறுகின்றது. இதன் தொடர்ச்சி நிலையில் மதன் ரதி வாழும் ஆரோக்கியபுரத்தின் அரண்மனை குறித்த சித்தரிப்புக்களும் முக்கிய கவனம் பெறுகிறது.

***'தங்க மிழைத்ததொரு ஜெயகண்டிகை கண்டார்கள்
தூணுக்குத் தூணுக்குத் தூங்கா விளக்கெரிய
முத்து சரங்கள் தான் முகமெல்லாம் தான் துலங்க
மகர சங்கூத மத்தளங்கள் ஓசையிட
மங்கையர்கள் நடனம் செய்ய வாத்தியங்கள் தான் முடங்க…'***

என்றவாறு தொடர்கிறது.

தூதன் அல்லது தூதர்கள் மதனின் அரண்மனை வளாகத்தை அடைந்துள்ள நிலையில் வாயிற் காவலர்கள் தூதனை விசா ரிக்கிறார்கள். விசாரணை முடிவில் மதனிடம் ஓலையை ஒப்ப டைக்க வேண்டிய விடயத்தை அறிந்த காவலர்கள், தூது வர்களை மதன் இருக்கும் இடமான கொலுமுனைக்குப் போவ தற்கு அனுமதித்தார்கள். மணிவட்டக் குடையின் கீழ் அமர்ந் திருந்த மன்மதனிடம் தான் வந்த விடயத்தை எடுத்துக்கூறிய தூதுவர்கள் இந்திரனார் கொடுத்தனுப்பிய ஓலையை அவரி டம் கையளித்தார்கள். மதன் - ரதி வாழ்வில் பல விளைவு களை ஏற்படுத்தப்போகும் திருப்ப முனையாக இச்சம்பவம் அமைகிறது.

தொடரும்



letsumanan.a@thaiveedu.com

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# பதிப்பாசிரியரின் அடிக்குறிப்புகளால் இன்னொரு பரிமாணம் பெறும் நாடக ஆக்கங்கள்



- கதிரேசு ரதிதரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 11 நாடகங்களை உள்ளடக்கி வெளிவந்த 5 நாடக நூல்களின் வெளியீட்டு நிகழ்வு 20.11.2024 அன்று பல்கலைக்கழகத்தின் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. ஜீவநதி வெளியீடாக வெளிவந்த இந்நூல்களின் பதிப்பாசிரியர் நா. நவராஜ் ஆவார். இக்கட்டுரையானது வெளியீடு செய்யப்பட்ட நூல்களில் காணப்படுகின்ற சிறப்புப் பண்புகள் பற்றிய ஒரு கண்ணோட்டமாக அமைகிறது. எனினும், இந்நூல்களின் ஆசிரியரான பெருமதிப்பிற்குரிய சண்முகலிங்கம் தனது 93-ஆவது வயதில் 17.01.2025 அன்று இயற்கை எய்திவிட்டமையால் அவரது நூலில் உள்ள நாடகங்கள் அடிக்குறிப்பிடப்பட்டமையால் சிறப்படைந்தது பற்றி பார்ப்பதற்கு முன்னர் 'குழந்தை ம. சண்முகலிங்கம் என்றால் யார் ? என்று பார்க்கவேண்டிய அவசியமும் அவரது எழுத்துருக்களைப் படைப்புகளை ஏன் நவராஜ் பதிப்பிக்க வேண்டும் ? என்ற நியாயத்தையும் முதலில் நோக்கலாம்.

குழந்தை ம. சண்முகலிங்கம் 1931.11.15-இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்தவர். ஆசிரியராக, அதிபராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை தற்காலிக மற்றும் வருகை விரிவுரையாளராகக் கடமை புரிந்தவர். தனது ஆரம்பக்கல்வியை போளவத்த றோமன் கத்தோலிக்கத் தமிழ் ஆரம்பப் பாடசாலையில் கற்றார். பின்னர் இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்ற இவர் பட்டப்படிப்பினை (1953 சித்திரை - 1957 சித்திரை வரை) இந்தியாவில் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் நாடக டிப்ளோமாவைக் (1976 - 1977) கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் பெற்றுக்கொண்டவர். அவர் சுயவாக்க மற்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் உள்ளடங்கலாக 200 வரையான நாடக எழுத்துருக்களை (நா. நவராஜின் அண்மைய பதிவின்படி) எழுதியுள்ளார். அத்தோடு நாடகம் ஒரு கற்கைநெறியாக வரவேண்டும் என்ற ஆரூடத்திலேயே 'நாடக அரங்கக் கல்லூரியை' (1978) ஆரம்பித்தார். அதேபோல யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் நுண்கலைத்துறையின் 'நாடகமும் அரங்க கலைகளும்' பாடத்தினைத் தற்காலிக விரிவுரையாளராகவும், வருகை விரிவுரையாளராகவும் 1987-இல் இருந்து 2004 வரை கற்பித்த தருணங்களில் மாணவர்களுக்கு மேற்கத்திய அரங்க வரலாற்றையும் போக்கையும் அறிமுகப்படுத்தினார். அதேவேளை, சண்முகலிங்கம் அவர்கள் மேற்கத்திய நாடக எழுத்துருக்களைக் கற்பதற்காக மொழிபெயர்ப்புகளையும் செய்ததோடு அக்காலங்களில் நாடகத்துறைசார்ந்து பல்வேறு விடயங்களையும் பேசுதற்குரிய செயற்பாட்டாளராகவும் புலமையாளராகவும் விளங்கினார். அத்தோடு சமூகத்தின் இருப்பையும் நெருக்கடிகளையும் பண்பாட்டுத் தளத்திற்குள் நின்று கொண்டு சமூகத்தில் பார்ப்போருக்கு நெருக்கமான உறவோடு, தற்புதுமையான நாடகங்களை உருவாக்கினார். இவரது அரங்க ஆற்றுகை முறையின் தொடர்ச்சியே பெருமளவில் இன்றுவரை புழக்கத்தில் உள்ளது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

1995-ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இடப்பெயர்வுக்கு யாழ்ப்பாணம் தயாராக இருந்தவேளை, எனது பல்கலைக் கழக இறுதி வருட ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்குக் குழந்தை சண்முகலிங்கத்தின் 81 நாடக எழுத்துருக்களைக் கடல்கடந்து வன்னிக்குக் கொண்டு செல்லவேண்டி இருந்ததால் தண்ணீர் போகாதபடி பொலித்தீன் பையினால் சுற்றிக் கட்டி அவர் முன்னர் பயன்படுத்திய பொது அலுவலகப் பையினுள் போட்டு அவற்றைக் கிளாலியால் கொண்டு சென்று எனது கிராமமான ஸ்கந்தபுரத்தைச் சென்றடைந்தேன். இயற்கை நாடகத்தால் நான் கொண்டு சென்ற 81 எழுத்துருக்களைத் தவிர இடப்பெயர்வு நடந்து முடிந்து மீள வீடு வந்தபோது சண்முகலிங்கத்தின் பல ஆவணங்கள் அவரது வீட்டு எலுமிச்சை மரத்தின் கீழே வீசப்பட்டு அழிந்தும் சேதமடைந்தும் காணப்பட்டன.

நான் சண்முகலிங்கத்தின் எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு எனது தகவல் சேகரிப்பு வேலைகளை முடித்த பின்னர் 1996-ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு ஆட்கள் அனுமதிக்கப்பட்டபோது வன்னியிலிருந்து எழுத்துருக்களைக் கவனமாக எடுத்துக்கொண்டு திருகோணமலை ஊடாகக் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சண்முகலிங்கம் அவர்களிடம் கையளித்தேன். அவ்வாறு கையளித்த அவரது எழுத்துருக்களைப் பின்னர் நாடகம் போடுவதற்கு என்று வாங்கிச் சென்று அவற்றை தொலைத்தவர்கள் இருக்கிறார்கள். எழுத்துருக்களைத் திருப்பி கொடுக்காதவர்கள் இருக்கிறார்கள். அவற்றை வைத்து நாடகம்

போட்டவர்கள் இருக்கிறார்கள். யாரிடம் அந்த எழுத்துருக் கள் கொடுக்கப்பட்டன என்ற விபரங்கள் தெரியாமலே சிலர் மறைத்திருக்கிறார்கள், இன்னும் சிலர் மறைந்திருக்கிறார் கள். திருப்பிக்கொடுக்காதவர்களில் சிலர் இது தம்மிடம் தான் இருக்கின்றது என்பதை நாகரிகமாக பின்னர் தெரியப் படுத்தியவர்களும் இருக்கிறார்கள். இதைப் பேசாது விடலாம், ஆனால் இன்னுமொரு வரலாற்றுப் பேராளுமைக்கு இவ்விதம் நடக்கக்கூடாது என்பதற்காக இது பதிவு செய்யப்படுகிறது.

நாடக அரங்கக் கல்லூரியின் பதிவாளரும் யாழ்ப்பாண பல்க லைக்கழகக் கலைப்பீடத்தின் சிரேஸ்ட பதிவாளருமாக இருந்த திரு. க. ஞானபாஸ்கரன் அவர்கள் கிட்டத்தட்ட 2002-களின் பின்னர் சண்முகலிங்கத்தின் எழுத்துருக்களைத் தட் டச்சு செய்து பாதுகாக்கும் நல்ல நோக்கில் எடுத்துச் சென்று பல்கலைக்கழகத்தில் தனது அலுவலகத்தில் வைத்திருந் தார். யாராவது பாஸ்கரனிடம் சண்முகலிங்கத்தின் எழுத்து ருக்களைப் பயன்படுத்தக் கேட்டால் எழுத்துருவைக் கொடுக் கும்போது அது இருந்த கோப்பின் உள்ளட்டையில் திகதி யிட்டு பெறுபவரின் கையெழுத்தை வாங்கியே அதனை அவர் களிடம் ஒப்படைப்பார். அவர்கள் திருப்பி எழுத்துருவைக் கொடுக்கும்போது தந்த திகதியை இட்டு அவர்களது கையொப்பத்தினை இட்டு வைப்பார். மீண்டும் 2005-களின் பின்னர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவரிடமிருந்து எழுத்து ருக்களை மீளப்பெற்றுத் தனது வீட்டில் வைத்திருந்தார். இக் காலங்களில் நா. நவராஜ் உடன் இணைந்து மாலை நேரங் களில் எழுத்துருக்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினர். அப் போது பாஸ்கரன் வைத்திருந்த சில கோப்புகளில் கொடுத்த திகதியும் மீளக் கையளித்த திகதியும் கையெழுத்தும் இருந் தன. சிலவற்றில் கொடுத்த திகதியும், கையெழுத்தும் இருந் தன. மீளக் கையளித்த திகதியும் கையெழுத்தும் இல்லை. எழுத்துருவும் இல்லை. அந்த பெயர் கொண்டவர்களிடம் தொடர்புகொண்டு எழுத்துருக்களை மீளக் கேட்டபோது தம் மிடம் இல்லையெனக் கைவிரித்தனர்.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் படைப்புகளோடும் வெளி யீடுகளோடும் தோன்றாத்துணையாக நின்று நா. நவராஜ் இயங்கிவந்த காலங்களில் குழந்தை அவர்களின் கட்ட ளையின் பேரில் பல விடயங்களை இருவரும் இணைந்து மேற்கொண்டனர். அச்செயற்பாட்டில் திருப்தியடைந்த குழந்தை அவர்கள் தனது எழுத்துருக்களின் பதிப்பினை மேற்கொள்ளும் பணியினை அவரிடம் அளித்து அவரை ஆற் றுப்படுத்தி வந்தார். ஒருமுறை எனது கட்டுரைகளைப் புத்த கமாக வெளியிடுவதற்கு என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தபோது அது பற்றி அவருடன் உரையாடிய போது அதனைக் கேட்ட அவர் பின்னர் எனக்கு தெரியாமலே நவராஜை எனது புத்தக வெளியீட்டிற்கு உதவிசெய்யுமாறு பணித்திருந்தார். நவராஜ் அவரது வழிப்படுத்தலில் 'அன் டிகனி', 'மன்னன் ஈடிப்பஸ்' போன்ற நாடக எழுத்துருக்கள் மூலத்தில் உள்ளவாறு குழந்தை அவர்களின் வேண்டுகோ ளுக்கியைவாகக் குறிப்புகளோடும், குழந்தை அவர்களுடன் இணைந்து செய்த செம்மைப்படுத்தல்களோடும் பதிப்பித் தார். மன்னன் ஈடிப்பஸ் நூலின் முன்னுரையில் 'நூலொன்றி னுக்கான முன்னாய்த்தப் பணிகள்' என்ற பகுதியில் 'என் செயலாவது யாதொன்றுமில்லை' என்று உணரப் பெற்ற வனாக நான் இருக்கிறேன். தெய்வ சித்தத்தால் என்பால் நேயம் கொண்டு உற்றதுணையாய் நிற்கின்ற சிலருள் ஒருவ ராக இருக்கின்ற நண்பர் நா. நவராஜ் அவர்களது, பெருவி ருப்போடு கூடிய அரும்பணியின் பேறே அது என்பதைப் பெருமையுடன் கூறுவேன். அவர் 'நாடகமும் அரங்கியலும்' கற்றுப் பட்டம் பெற்றவரல்ல. அவரது வாசிப்பின் விசாலத் தையும் தமிழ்ப் புலத்தின் புலமையையும் கண்டு நயந்த பலரது வற்புறுத்தலால் தமிழில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். ஆயினும் தமிழ்மொழி மூலம் அவர் தரிசித்து வரும் அறிவுத் துறைகளோ அனந்தம். தொழிலால் அவர் ஒரு 'இருவினை ஒப்பாளர்' - உளவளத்துணையாளராகவும், அபி விருத்தி உத்தியோகத்தராகவும் இருவேறு துறைகளில் பணியாற்றி வருகிறார். இதிகாசங்கள், புராணங்கள், ஐதி கங்கள், சமயங்கள் எனத் தொடங்கி இன்றைய இலக்கி யங்கள், சிந்தனைகள் வரையில் அவர் தாடனம் பெற்றவராக உள்ளார். பரீட்சைக்காகப் படிக்காது பரிச்சயத்துக்காகத் தேடிப் படித்துவரும் ஒருவர். அத்தகைய ஒருவர் பண்டைய கிரேக்கத்தின் நாடகத்தையும் அதன் வழி பண்டைய கிரேக்க புராணங்களையும், சிந்தனைகளையும் கண்டதும் தண்ணீ ரினுள் மீனெனப் 'புளுகத்தோடு' புகுந்து விட்டார். அவரது புளுகத்தின் விளைபயன் தான் இந்நூலில் இடம்பெறும் கட்டு ரைகள் என்பேன். நாடக எழுத்துருவின் அமைப்பினையும் அவரே வகுத்தமைத்தார். அந்த வகையில் இந்நூலினை வகுத்துத் தொகுத்துப் பதிப்பிக்கும் ஆசிரியராக அவர் உள்ளார். இவருக்கு நன்றி தெரிவிக்க நினைக்கையில் 'இங் கிவனை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்' என்ற பாரதியின் புளகாங்கிதம் வந்து என் நெஞ்சை நிரப்பிவிடு கிறது.' எனக் குழந்தை ம. சண்முகலிங்கம் குறிப்பிடுவது இங்கு நாம் சிந்திக்கவேண்டிய கூற்றாக உள்ளது.

இவற்றைத் தொடர்ந்து 'எதிர்கொள்ளக்காத்தி ருத்தல்', 'மனத்தவம்' போன்ற நூற்களும் அவற்றைத்தொடர்ந்து 'தான் விரும்பாத் தியாகி', 'சத்திய சோதனை', 'உறவுகள்',



'அருமை நண்பன்', 'வீட்டுக்கு வெளியே' மற்றும் 'கடலருகே இரு சிறு முயல்களும் கழுதையொன்றும்' போன்ற ஐந்து நூல்களும் நா. நவராஜால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எட்டு மொழிபெயர்ப்பு நாடகங்களையும், மூன்று சுயநாடக எழுத்துருக்களையும் தம்மகத்தே கொண்டுள்ள இவ்வைந்து நூற்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினர் வெளியீடு செய்து வைத்தனர். இவ்வெளியீட்டில் வந்த நூல்கள் பற்றிய இக்கட்டுரையில் பின்வரும் மூன்று முக்கிய விடயங்கள் உற்று நோக்கப்படுகின்றன.

- பதிப்பாசிரியர் மற்றும் பதிப்புரையின் முக்கியத்துவங்கள்
- எழுத்துருக்களில் செய்யப்பட்ட திருத்தங்களும் குறிப்புக் களும்
- பதிப்புரிமை மற்றும் எதிர்காலச் செயற்றிட்டங்கள்

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடக எழுத்துருக்களை முன்னர் சிலர் நூல்களாகவும் நினைவு மலர்களின் பின் இணைப்பாகவும் வெளியிட்டிருந்தனர். அவ்வாறு வெளியீடுகளில் பல்வேறு விடயங்களைக் கவனிக்காதுவிட்டது தெரிய வந்தது. பல்வேறு வகையான தவறுதல்கள், விடுபடுதல்கள், எழுத்துப் பிழைகள், பாத்திர மற்றும் வசனச் சிதைவுகள், இடமாற்றல்கள் போன்ற பாரிய பிழைகள் மற்றும் வரலாற்று தவறுகள் வெளியிட்டவர்களின் பொறுப்பின்மையைக் காட்டி நின்றது. சண்முகலிங்கத்தின் ஆக்கங்களை வெளியிடும் ஆர்வமும் அதன் மூலம் கிடைக்கப்பெறும் மதிப்பு மற்றும் அங்கீகாரம் என்பவற்றில் காட்டிய அக்கறையின் அளவிற்கு அவரது படைப்புக்களைச் செவ்வனே, நேர்த்தியாக, பிழைகள், தவறுகள் இல்லாது செய்ய வேண்டும் என்ற பொறுப்பும் அக்கறையும் பலரிடம் இருக்கவில்லை. பொதுவாக வெளியீடுகளில் கண்களை ஏமாற்றிவிட்டு தவறுகள் சில வருவதுண்டு. ஆனால் தவறுகளைத் தவறுகளாக விடுவதுதான் தவறு. இது பற்றிய நீண்ட உரையாடலை குழந்தை அவர்கள் நா. நவராஜோடு நிகழ்த்தியிருக்கின்றார். சில வெளியீடுகளிற்கு சண்முகலிங்கம் நவராஜையே அவற்றின் பிழைகளைத் திருத்துவதற்குப் பொறுப்பாகவும் விட்டிருந்தார். இந்த தவறுகளைத் தவிர்ப்பதற்கு ஒரு பதிப்பாசிரியர் தேவை என்பது இங்கு உணரப்பட்டதால் 'அன்டிகனி', 'மன்னன் ஈடிப்பஸ்' (மீள்பதிப்பு), 'எதிர்கொள்ளக் காத்திருத்தல்'(மீள்பதிப்பு), 'மனத்தவம்' போன்ற நூல்களிற்கு நவராஜே பதிப்பாசிரியர் ஆகிறார். இந்நூல்களை நோக்குவோர் பதிப்பாசிரியரின் முக்கியத்துவம் பற்றிய எனது கூற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

இனி, இறுதியாக வெளிவந்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 5 நூல்களில் பதிப்பாசிரியரது பங்களிப்புக்கள் எவ்விதமிருந்தன என்று நோக்கலாம். பதிப்பாசிரியர் நவராஜ் மூலக் கையெழுத்துப் பிரதியை வைத்துத் தானே தட்டச்சு செய்வதால் பெரும்படியான தவறுகள் தவிர்க்கப்பட்டன. கையெழுத்து மூலப்பிரதி இல்லாது தட்டச்சு செய்யப்பட்ட பிரதி மட்டும் இருந்தால் அங்கு நிறையத் தவறுகள் இருந்தே தீரும். அதனால் அங்கு பெரியதொரு சீர்செய்தலும், தேடலும், பகுப்பாய்வும் தேவைப்பட்டிருந்தன. சண்முகலிங்கத்தின் கையெழுத்தில் இல்லாது வேறொருவரின் கையெழுத்தில் அம்மூலப்பிரதி இருந்தால் கட்டாயமாக அங்கும் தவறுகள் இருக்கும். அதனால், மிகக் கவனமாக ஆராயப்பட்டும் சண்முகலிங்கத்தோடு சேர்ந்து கலந்துரையாடியும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமை மிகச் சிறப்பான பொறுப்புணர்வுடன் கூடிய பணியாகும். இந்த இடத்தில் 'சத்தியசோதனை' (1984) நூலிற்கான பதிப்புரையில் (2024) நவராஜ் குறிப்பிடும்போது 'குழந்தை அவர்களின் எழுத்துருக்களைப் பதிப்பிக்கும் உரிமை அவரால் வழங்கப்பட்டிருப்பினும் அதனைக் காரணமாக வைத்து 'தான்தோன்றித்தனமாக' அதில் மாற்றங்களைச் செய்து பதிப்பிக்கும் எண்ணம் எமக்கு இல்லை. அதாவது எழுத்துருக்கள் அவர் எழுதியவாறே செம்மையாகப் பதிப்பிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் மிகுந்த உறுதியோடு இருக்கிறோம்' என்கிறார்.

வரலாற்றைப் பதிவு செய்வதில் தமிழ்ச் சமூகம் மிகவும் பின்னோக்கியே நிற்கிறது. எனினும், 1980-இற்கு பிற்பட்ட தமிழ் சமூகத்தின் அரசியல் சமூகச் சூழலைச் சண்முகலிங்கம் மிக யதார்த்தபூர்வமாகத் தனது படைப்புக்களில் பதிவு செய்திருப்பதையும், அதேநேரம், அவருடைய புலக்காட்சியும், சமூகப் பொறுப்பும் தெளிவாகத் தெரிகிறது. எனினும் சண்முகலிங்கம் நாடகத்துறைக்கு வந்தது முதற்கொண்டு அவரால் இறுதியாக எழுதப்பட்ட நாடகம் வரை நவராஜின் கடும் முயற்சியால் தேடப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு, பட்டியல் இடப்பட்டு, ஆண்டு இடப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுப் பதிப்பிக்கப்படவுள்ளன. அல்லாவிடில் சண்முகலிங்கத்தின் அரங்க வரலாறு தவறவிடப்பட்டு அல்லது திரிபுபடுத்தப்பட்டுப் போயிருக்கவும் வாய்ப்புண்டு. அவர் எழுதிய சில நாடகங்களின் பெயர்கள் தெரியுமே தவிர, அவை எங்குள்ளன? எப்படிக் காணமல் போயின? என்பவை இற்றைவரை யாருக்கும் தெரியாது. அது மர்மமாகவே உள்ளது.

அடுத்து முக்கியமாக நோக்கப்பட வேண்டியது பதிப்பாசிரியரின் குறிப்புகள். அவை சண்முகலிங்கத்தின் சுயவாக்க நாடகங்கள் மற்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் மீதான பல்வேறு அம்சங்களைச் சரிப்படுத்தல், விளக்குதல், குறைநிரப்பல், வேறுபட்ட அர்த்தங்களுக்கான விளக்கம் என பல வகைகளில் காணப்படுகின்றன. சுயவாக்க நாடகங்களான 'உறவுகள்' (1980) - 55 குறிப்புகளும், 'சத்திய சோதனை' (1984) - 116 குறிப்புகளும், 'அருமை நண்பன்' (1958) - 66 குறிப்புக்களும் என அடிக்குறிப்புகள் காணப்படுகின்றன. நாடகங்கள் அடிக்குறிப்புகளோடு பதிப்பிக்கப்படுவது குழந்தை அவர்களின் விருப்பங்களில் ஒன்று என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1958-இல் எழுதிய 'அருமை நண்பன்' நாடகத்திற்கான மூல எழுத்துருப்பிரதி இல்லாதபோதும் கிடைத்த தட்டச்சு பிரதியை வைத்து, நவராஜ் அதனைச் சண்முகலிங்கத்துடன் கலந்துரையாடி செம்மைப்படுத்தி வெளியிட்டுள்ளார். உதாரணமாக அவ்வுரையாடலில் தட்டச்சுப்பிரதியில் 'கருப்பன் பாடுகிறான்' என்று வந்த இடத்தில் என்ன பாடல் பாடப்பட்டது என்ற வினாவை எழுப்பக் குழந்தை அவர்கள் அது மறந்துவிட்டது என்றும் பொருத்தமான பாடலைத் தெரிவு செய்து இடும்படியும் குறிப்பிட்டுள்ளார். எனினும், நவராஜ் அது பற்றி நாடகம் நடந்த காலப்பகுதி நாடகத்தின் அவ்விடத்தில் பாடலின் பொருத்தப்பாடு போன்ற விடயங்களை முன்வைத்து குழந்தை அவர்களுடன் உரையாடி முடிவில் அதில் பாடல் எதனையும் போடாது அப்படியே இருக்க விடுதல் சிறப்பு என்று தீர்மானித்து நெறியாளரின் சுதந்திரப்படி தங்களுக்கேற்ப பொருத்தமான பாடல்களைத் தெரிவு செய்ய முடியும் என விட்டுள்ளனர். இவ்விடயம் அடிக்குறிப்பில் குறிப்

பிடப்பட்டுள்ளது. அத்தோடு அக்காலத்தில் புழக்கத்திலிருந்த சொற்களிற்கான சமகால விளக்கக் குறிப்புக்களும் எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக அத்துவகாத்து என்பது அப்புக்காத்து என்றும், குண்டடித்தல் என்பது அக்காலத்தில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியெய்தாவிட்டால் குறிப்பிடப்படும் சொல்லாடல் என்பதும் அடிக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாடகத்தில் வரும் 'கலாலயம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்பதை நவராஜ் தேடி கண்டுபிடித்து அது திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் நடத்திய கலை நிறுவனம் என்று அடிக்குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாடகத்தில் வரும் ஒரு வசனத்தில் 'வாத்தியார் நின்று சாப்பிட்டால் மாணவன் நடந்து சாப்பிடுவான்' என்பது என்ன அடிப்படையில் எழுதப்பட்டது என்பதை, சண்முகலிங்கம் அவர்கள் கொடுத்த விளக்கத்திலிருந்து எடுத்துக் காட்டுகிறார். அதாவது 'தகப்பன் நிண்டு ஒண்டுக்கிருந்தாப் பெடியன் நடந்து நடந்து பெய்வான்' என்ற அக்காலத்திய உரையாடல் மொழியை நாடகத்திற்காக மாற்றி எழுதியதையும் நவராஜ் அடிக்குறிப்பில் பதிவுசெய்துள்ளார்.

ஊரின் பெயர் பலாலி ஆசிரியர் கலாசாலையைக் குறிக்கிறது. 'ஒட்டகப்புலம்' என்ற சொல்லுக்கு அடுத்த சந்ததிக்கு இந்தச் சொல்லின் அர்த்தம் தெரியாமல் போக வாய்ப்புள்ளதால் கட்டாயம் இந்தக் குறிப்பு போடப்படுதல் முக்கியமாகும். தமிழில் எழுதப்பட்ட ஆங்கிலச் சொற்களின் அர்த்தப்பிழை வராது அதற்கான ஆங்கிலச் சொற்களும் குறிப்புக்களில் உண்டு. அதேபோல இந்நாடகத்தில் நடிகர்களின் பேச்சு இதத்திற்காகச் சில சொற்கள் நாடகாசிரியரின் நெறியாள்கையில் ஆற்றுகையின் போது மாற்றம் செய்யப்பட்டன. (உதாரணம்: சுருட்டு புகைக்க என்பது சுருட்டு பத்த என மாற்றப்பட்டுள்ளது). அம்மாற்றங்கள் பற்றிய குறிப்புகளும் உண்டு. குழுக்குறி பற்றிய விளக்கம், பிழையாக இருந்த இலக்கங்கள் மாற்றிய குறிப்புகளுடன் தர்க்கரீதியான தெளிவுபடுத்தும் (6 மாதம் என்பது 8 மாதமாக்கப்பட்டது, 2 லட்சம் என்பது 3 லட்சம் ஆக்கப்பட்டது) அடிக்குறிப்புகளாக இருக்கின்றன.

அடுத்து, குறிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஏனென்றால் தட்டச்சுச் செய்தவர் குறிகள் போடாது விட்டுள்ளார். உண்மையில் சண்முகலிங்கத்தின் நாடகங்களின் உரையாடலின் உணர்ச்சி மாற்றங்கள் இந்தக் குறிகளின் தன்மை மற்றும் எண்ணிக்கையை வைத்தே நோக்க முடியும். உதாரணமாக பல விளிப்புக்குறிகள் வருவது, விளிப்பு குறியும், கேள்விக்குறியும் சேர்ந்து வருவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். உரையாடல் ஓட்டத்தில் உள்ள பிழைகள் திருத்தப்பட்ட தற்கான அல்லது இணைக்கப்பட்ட தற்கான குறிப்புகளோடு, புதிதாகப் பதிப்பாசிரியரால் எழுதப்பட்ட பாத்திர விபரங்கள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

1980-களில் எழுதப்பட்ட (1982 என்று இருந்த ஆண்டை நாடக ஆற்றுகை செய்யப்பட்டதைக் கொண்டு சரியான ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது) 'உறவுகள்' நாடகத்திற்காக 55 குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி கருதி சிலவற்றை நோக்கலாம். இந்த நாடகத்திற்கான மூலப்பிரதி கிடைக்கவில்லை. தட்டச்சு செய்த பிரதியே கிடைத்தது. தட்டச்சு பிரதியின்படி எழுதியது 1982-என்று கருதப்படுகிறது. ஆனால் பல்வேறு தகவல்களின் அடிப்படையில் அது 1980-என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடப்படுகிறது. அண்மைக்காலப் புத்தக வெளியீடுகளில் எழுத்துப்பிழைகள், தவறுகள் காணப்படுகிறது. விடயங்களைப் பொறுப்பாகச் செய்யாது விடுதல் போன்றனவற்றாலும் பொதுவாகப் பல இடங்களில் காணப்படுகிற பொறுப்பின்மையாலும் இவ்வாறான தவறுகள் ஏற்படுகின்றன. இந்த நாடகத்தின் எழுத்துருவில் பல விடயங்கள் சரி செய்யப்பட்டன.

இப்புத்தகத்தில் பதிப்பாசிரியர் இந்த நாடகம் எழுதிய பின்னர் எங்கெங்கு ஆற்றுகை செய்யப்பட்டது, எத்தனை ஆற்றுகைகள்? யாரால் செய்யப்பட்டது மற்றும் நாடகப் படங்கள் என்பனவற்றைத் தேடிச்சேர்த்து இந்நாடக நூலை வெளியிட்டுள்ளார்.

இந்த எழுத்துருவில் சொற்கள் எவ்வாறு மாற்றப்பட்டன?, விளக்கப்பட்டன என்பதான குறிப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாகப் பாத்திர உரையாடலில் வரும் 'பலாலி' என்ற

**சண்முகலிங்கம் இதுவரை 60 நாடகங்கள் வரை மொழி பெயர்த்துள்ளார். இவரது மொழிபெயர்ப்பு நாடகங்கள் எல்லாம் 'நேரடி மொழி பெயர்ப்பாக' இருப்பதற்கான சண்முகலிங்கத்தின் பிரதான நியாயம் யாதெனில் தான் எப்போதும் மூல எழுத்துருவிற்கும் அதன் ஆசிரியருக்கும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருத்தல் என்பதாக அமைகிறது.**



அடுத்த நாடகமான, 'சத்திய சோதனை' (1984) என்கின்ற சுயவாக்க நாடக நூலில் 116 குறிப்புகள் இடப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் உள்ள மேடைக் குறிப்பில் மட்டும் 34 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. விரிவஞ்சி எல்லா குறிப்புகளையும் தராது சில உதாரணங்கள் மட்டும் இங்கு தரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் நூலினை நோக்கிக் கண்டுகொள்க. இந்த நாடகத்திற்கான மூல எழுத்துரு கிடைக்கப்பெறவில்லை. இரண்டு தட்டச்சு எழுத்துருக்கள் ஒப்பிட்டு நோக்கி சரிபார்க்கப்பட்டது. மிக அதிகளவான குறிப்புகள் காணப்படுவது நேர்த்தியையும் செம்மைப்படுத்தலையும் கொண்டு வரும் ஒரு குறிகாட்டியாகச் சொல்ல முடியும்.

பதிப்பாளர் நவராஜ் எல்லா எழுத்துருக்களையும் பல தடவை வாசித்துச் சரிபார்க்கும் பண்பானது எழுத்

துருக்களைப் பகுப்பாய்வு நோக்கில் பார்க்கும் திறனை வளர்த்திருக்கிறது. உதாரணமாக இந்த 'சத்திய சோதனை' நாடக எழுத்துருவில் எத்தனையாம் ஆண்டு எழுதப்பட்டது என்பது எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனினும் நாடகத்தில் வரும் ஒரு உரையாடலான 'வெள்ளையன் போய் 36 வருடங் கள்' எனும் பாத்திரத்தின் கூற்றை வைத்து 1984-ஆம் ஆண்டு எழுதப்பட்ட எழுத்துரு என்பது ஆதாரத்துடன் நிரு பிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். அதேபோல நாடகத் தில் பயன்படுத்தப்பட்ட பாடல்களின் மூலத்தைத்தேடிக் கண் டறிந்து பார்த்துப் பாடலிலுள்ள தவறுகள் திருத்தப்பட்டுள்ள துடன் அவை எங்கு இடம்பெற்றுள்ளன என்ற விபரங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றோடு பாத்திரப் பட்டியல்படுத்தல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எழுத்துருவில் உள்ள ஆங் கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியதோடு ஆங்கில சொற் களை அடிக்குறிப்புப் பகுதியில் வைத்து விளக்கப்பட்டுள் ளன. ஒரே நாடகத்திற்கான இரண்டு தட்டச்சு எழுத்துருக் களின் சொற்களில் காணப்படும் வேறுபாடுகளைச் சரிசெய்த விபரம், வசனங்களை இடமாற்றிய விபரம் மற்றும் எழுத் துருவில் விடுபட்டுப்போன சில சொற்களை தர்க்கரீதியாகச் சிந்தித்தும், ஊக ரீதியாக யோசித்தும் செய்யப்பட்ட பல்வேறு பட்ட மாற்றங்கள் அடிக்குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக, அவரது 'தான்விரும்பாத்தியாகி' என்ற ஆறு மொழிபெயர்ப்பு நாடகங்களை உள்ளடக்கிய தொகுப்பில் பதிப்பாளரின் அடிக்குறிப்புகள் பற்றி நோக்க முடியும். சண் முகலிங்கம் இதுவரை 60 நாடகங்கள் வரை மொழிபெயர்த் துள்ளார். இவரது மொழிபெயர்ப்பு நாடகங்கள் எல்லாம் 'நேரடி மொழிபெயர்ப்பாக' இருப்பதற்கான சண்முகலிங்கத் தின் பிரதான நியாயம் யாதெனில் தான் எப்போதும் மூல எழுத்துருவிற்கும் அதன் ஆசிரியருக்கும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருத்தல் என்பதாக அமைகிறது. இவரது மொழிபெயர்ப்புக்களில் ஒரு முக்கியமான விடயம், ஒரு நாட கத்திற்கான பல ஆங்கிலப் பிரதிகள் காணப்பட்டால் அவை எல்லாவற்றையும் ஒப்புநோக்கியே தமிழ் மொழிபெயர்ப்பை செய்வார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே வாசகர் ஒருவர் அவரது மொழிபெயர்ப்பை ஒரு ஆங்கில பிரதியுடன் ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. இந்த அடிக்குறிப்புக்களை வைத்தே பல ஆய்வுகளை செய்யலாம். உதாரணமாக மொழி பெயர்ப்பில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் பற்றியும், பல மூலப்பிரதிகளை ஒப்பிட்டு எழுதியதை பற்றியும் ஆராயலாம்.

அந்த வகையில் 'அந்திமாலைப் பாடலொன்று.' (Swan song) - 2005-இல் மொழிபெயர்க்கப்பட்ட நாடகத்திற்காக 36 குறிப் புகள் காணப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்பில் சொல் மாற்றம், பெயர் மாற்றம், மொழிபெயர்ப்பாளரால் செய்யப் பட்ட மாற்றங்கள், சொல்லின் மொழிபெயர்ப்பு தமிழ் விளக் கத்தை தெளிவுபடுத்த ஆங்கிலச் சொல்லையும் அல்லது ஆங்கில வசனத்தை அருகில் வைத்தமை, மாறி மொழிபெ யர்க்கப்பட்ட சொல்லிற்குச் சரியான சொல்லைக் கண்டுபி டித்து இட்டமை, ஒத்திகையின் போது செய்யப்பட்ட சொல் மாற்றங்கள் சேர்ப்புகள் குறித்துக் காட்டப்பட்டமை, மொழிபெ யர்ப்பில் காணப்படும் அக்காலக் கவிதைகள் பற்றி தக வல்கள் மற்றும் பின்புலங்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதியமை எனப் பல பயன் தரும் குறிப்புகளைப் பதிப்பாசிரி யர் பதிவு செய்துள்ளார்.

ரவீந்திரநாத் தாகூரினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'துறவி' (Sanyasi or The Ascetic) எனும் மொழிபெயர்ப்பு நாடகத்தில் 57 குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த குறிப்புகளில் நாடகம் எழுதப்பட்ட காலத்து வரலாறு சார்ந்த விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு குறிப்புகளாக எழுதப்பட்டுள்ளது இங்கு ஒரு முக்கிய அம்சமாகும். 'தான் விரும்பாத் தியாகி' (Unwilling Martyr) - (2005) என்ற நாடகத்திற்கு 20 அடிக்குறிப்புகள் காணப்படுகின்றன. இது அன்ரன் செக்கோவின் நாடகம் என்பதால் ரஷ்ய நாட்டுச் சொற்புழக்கம் மற்றும் அக்கால மனிதர்கள், அனுபவங்கள் என்பன நாடக எழுத்துருவின் பாத்திர உரையாடல்களில் காணப்படுகின்றன. அவற்றைப் பதிப்பாசிரியர் தேடிக் கண்டுபிடித்துத் தருவது அந்த நாட கத்தின் வாசிப்பில் ஆர்வத்தை தூண்டுவதோடு அதை நெறியாள்கை செய்வதற்கும் வசதியாக இருக்கிறது. நாடகப் பாத்திரங்களின் பின்னணியில் காணப்படும் பெயர்களின் அர்த்தம், பொருள், பண்பாடு மற்றும் பின்னோக்கிய வரலாறு போன்ற பல தகவல்கள் உண்டு. உதாரணமாக டோல் கச்சோவ் என்ற பெயருக்கு விடாக்கண்டன் எனும் அர்த்தம் உள்ளமை, கேக்குலிஸ் மல்லன் என்பது கிரேக்க ஐதீக பாத்திரம் மற்றும் நாடகத்தில் வரும் மேஷெயோவோஸ் என்ற பெயர் நாடகம் எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு உள மருத்துவர் என்பதைப் பதிப்பாசிரியர் கண்டுபிடித்து குறிப்பு களில் விளக்குகிறார். இந்த குறிப்புகள் நெறியாள்கையை இலகுபடுத்தவும், சரியான திசையில் போகவும் வழிவகுக்கும். இந்த நாடகம் ஏற்கனவே நெறியாள்கை செய்யப்பட்டு விட்டது. இவரது அடிக்குறிப்புகளின் பின்னர் அந்த நாடகம் மீள்வாசிப்பிற்கும், நெறியாள்கைக்கும் உட்படவேண்டிய தேவை வந்துள்ளது. மற்றும்படி சொல், பெயர், வசன மாற்றங் கள், திருத்தங்கள், சேர்ப்புகள் என்பனவும் குறிப்பில் காணப் படுகின்றன.

'இரவலன் அல்லது இறந்துபோன நாய்' (2017) என்ற தமிழ் மொழிபெயர்ப்பு நாடகத்திற்கான மூலப்பிரதி பேர்ட்டோல்ட் பிரெச்ட்டினால் எழுதப்பட்டதாகும். இந்த நாடகத்திற்கு 21 அடிக்குறிப்புகள் இடப்பட்டுள்ளன. வழமையான அடிக்குறிப் புகளோடு, நாடகம் மொழிபெயர்க்கப்பட்ட கால அளவு, பொருத்தமான சொல் மாற்றல், விடுபட்ட மூலச் சொல் கண்டு பிடித்தல், கடினமான சொல்லிற்கு இலகுவான சொல்லைக் குறிப்பிடுதல் போன்ற பல்வேறு அடிக்குறிப்புக்கள் இதில் காணப்படுகின்றன.

சாமுவேல் பெக்கெற்றின் நாடகம் 'வார்த்தைகளற்ற நடிப்பு' (Act Without Words - A Mime for one Player) சண்முகலிங் கத்தால் 2013-இல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன் ஆங்கில மூலத்தை வைத்துச் செம்மைப்படுத்தும் பொறுப்பை குழந்தை அவர்கள் முற்றுமுழுதாக நவராஜிடம் விட்டிருந் தார். அவருடன் உரையாடி உரையாடி தான் செய்த திருத் தங்களை நவராஜ் விளக்குகிறார். இந்த மொழிபெயர்ப் பிற்குப் பின்னர் 113 அடிக்குறிப்புகளாக இட்டுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். அதில் மொழிபெயர்ப்புக் காலம் ஆராய்ந்து கண்டறியப்பட்டமை, தமிழ்ச் சொல்லிற்கு ஆங்கில சொல் லாடல், ஆங்கில சொல்லிற்குத் தமிழ் சொல்லாடல் போன்ற பல விளக்கங்கள் அடிக்குறிப்பில் காணப்படுகின்றன. அதே போலத்தான் கோபால் முகர்ஜியின் 'The Judgment of Indira' நாடகமானது 'இந்திரன் தீர்ப்பு' என்ற பெயரில் தமிழில் 2005-ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டது. இந்த நாடகத்திற்கு 32 அடிக்குறிப்புகள் காணப்படுகின்றன.

இந்த மொழிபெயர்ப்பு நாடகங்களின் பதிப்பில் இரண்டு சிறுவர் நாடகங்களை உள்ளடக்கிய 'வீட்டிற்கு வெளியே மற்றும் கடலருகே இது சிறு முயல்களும் கழுதையொன்றும்' தொகுதியும் உள்ளடக்கம். இதில் 'வீட்டுக்குவெளியே' என்ற

மொழிபெயர்ப்பானது இரண்டு வயதுடைய பிள்ளைகளுக்கு உரியது. இங்கு மிகச்சிறப்பான விடயம் இரண்டு வயது பிள்ளைகளுக்கான அரங்க மாதிரியாக இந்த படைப்பை மொழி பெயர்த்தமை எனலாம். இந்த நாடகத்தில் 35 குறிப்புகளுண்டு. இந்த குறிப்புகளில் முக்கியமாக பாத்திரங்கள் பற்றிய மேலதிக தகவல்கள், விளக்கங்கள் தேடி எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. இவரது மொழிபெயர்ப்புகளிலேயே இந்த சிறுவர் நாடகம் நேரடி மொழிபெயர்ப்பில் இருந்து சற்று மாறி செந்தமிழ் சொற்களுக்கு பேச்சுத் தமிழ் சேர்க்கப் பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். ஒரு தமிழ் சொல்லிற்கு பல ஆங்கில சொல் அர்த்தம் வருமெனில் அதற்கான ஒரு சொல்லைக் குறிப்பிடல். தமிழ் சொல்லிற்கு அருகில் விளக்கம் கருதி ஆங்கில சொல்லையும் குறிப்பிடல். வசன ஒழுங்குபடுத்தல்கள், ஆங்கில சொல்லிற்கான தமிழ் சொல்லிற்கு இன்னோர் தமிழ் சொல்லையும் குறிப்பிட்டு அதற்கான ஆங்கில சொல்லையும் இணைத்தல் (முரசொலி - கீச்சொலி - chirp).

அடுத்த சிறுவர் நாடகம் 'விலங்கரங்கு' (Animal Theatre) எனப்படுகிறது. 'கடலருகே இரு சிறு முயல்களும் கழுதை ஒன்றும்' எனும் நாடகம் 2008-இல் மொழிபெயர்க்கப்பட்ட சிறுவர் நாடகம். 16 அடிக்குறிப்புகளை கொண்டுள்ளது. ஒரு ஆங்கில சொல்லிற்கு இரு ஒத்த தமிழ் சொற்கள் காணப் பட்டால் அதை அடிக்குறிப்பில் அதற்கான தெளிவான விளக்கத்தை இடுதல் (Chorus - கூட்டுப்பாடகர் / குழாம்). ஆங்கில மொழியில் உள்ள உரையாடல் செழுமையை அதேயளவு தமிழ் மொழியில் கொண்டு வரும்போது ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி அடிக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக 'They both were as happy as happy could be' என்ற ஆங்கில வசனத்திற்கு 'ஆனந்தம் எவ்வளவு ஆனந்தமாக இருக்குமோ அந்தளவு ஆனந்தத்தை அடைந்தார்கள்' என்கிற தமிழ் மொழிபெயர்ப்பானது தமிழிற்கான மொழிச் செழுமை எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பதை அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக நாடக மொழிபெயர்ப்பில் பல சவால்கள் வருவதுண்டு. அதில் ஒன்று ஆங்கிலத்தில் உள்ள தாளலயத்தையும், ஜதியையும் எவ்வாறு தமிழிற்கு கொண்டுவருவது என்பதாகும். அதை சண்முகலிங்கம் எவ்வளவு அழகாக கொண்டு வந்துள்ளார் என்பதை இந்த அடிக்குறிப்பின் (குறிப்பு-13) மூலம் நாம் அறிய முடிகிறது.

பொதுவாக சண்முகலிங்கம் நேரடி மொழிபெயர்ப்பை செய்திருந்தாலும் இவ்வாறான ஆங்கில ஜதியை தமிழ் ஜதியாக மாற்றும் போது பண்பாட்டில் உள்ளவற்றை பயன்படுத்தி அங்கு ஒரு மொழிபெயர்ப்புத் தழுவலையும் செய்துள்ளார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இந்நூலின் பதிப்பாசிரியர் நாடக மொழிபெயர்ப்பில் குழப்பத்தை ஏற்படுத்தும் சொற்களைத் தவிர்த்ததற்கான காரணங்களைப் பற்றியும் குறிப்புக்களில் பதிவிட்டுள்ளார். அடிக்குறிப்புகள் பற்றிய எனது இந்த குறைந்த உதாரணங்களை வைத்துப் பார்க்கும்போது அவற்றின் முக்கியத்துவம் எந்தளவு அவசியமானது என்பதை இங்கு விளங்கிக்கொள்ளமுடியும்.

பதிப்பாசிரியரின் அடிக்குறிப்புகள் சண்முகலிங்கத்தின் படைப்புகளை மேம்படுத்தவும், தெளிவுபடுத்தவும், உறுதிப்படுத்தவும் பல்வேறு வகைகளில் உதவியுள்ளமையை இங்கு நாம் அவதானிக்கலாம். சண்முகலிங்கத்தின் இயல்பில் அவராக முன்வந்து தனது ஒரு படைப்பையும் புத்தகங்களாகப் பதிப்பிக்கவில்லை. அதேபோல அவரால் உருவாக்கப்பட்ட நாடக அரங்க கல்லூரியிலும் பெரும்பாலும் மற்ற நாடகக் கலைஞர்களின் நாடகங்களையே மேடையேற்ற முன்னுரிமை கொடுத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். புத்தகங்களாக வந்தவற்றில் ஒன்றிரண்டைத் தவிர ஏனையவை சொற்பிழைகளோடும், பொருட்பிழைகளோடும் வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பதிப்பாசிரியர் நவராஜின் வருகைக்கு பின்னரே சண்முகலிங்கத்தின் எழுத்துருக்கள் பொறுப்புணர்வுடன் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டு தெளிவாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. நவராஜால் இன்னமும் பல பிரதிகள் பதிப்பிக்கப்படவுமுள்ளன.

குழந்தை ம. சண்முகலிங்கம் மரணிப்பதற்கு முன்னரே அவரது பிள்ளைகள் தந்தையாரின் கட்டுரைகள், நாடக எழுத்துருக்கள், அவரது சொந்தப் படைப்புகள் போன்றவற்றிற்கான உரிமத்தைச் சட்டத்தரணி திருவாளர் / நாடகக் கலைஞர் சோ. தேவராஜா அவர்கள் முன்னிலையில் சட்டரீதியாக நா. நவராஜிடமே ஒப்படைத்திருந்தமை இங்கு குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. பலருக்கு இது ஒவ்வாமையாக இருந்தாலும் சண்முகலிங்கத்தின் படைப்புகளைப் பதிப்புரிமையோடு பதிப்புச்செய்யும் அதிகாரத்தையும் அதேவேளை திறமையையும் நவராஜ் கொண்டிருக்கிறார். ஏனென்றால், சண்முகலிங்கத்தின் பிறப்பு முதற்கொண்டு கலை வாழ்க்கை மற்றும் லௌகீக வாழ்க்கை ஈறாக அவரது இறுதி மரணம் வரைக்குமான எல்லாவற்றையும் ஆழமாகவும், அகலமாகவும் அறிந்திருப்பவர் அவரே எனலாம். குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகங்களைப் பொதுவுடமையாக்குவது என்பது ஒரு பிரச்சினையே அல்ல. ஆனால், அதற்கு முதல் அவரது படைப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுச் செம்மையாகப் பதிப்பிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு செய்வதில் எந்த பிழையும் இல்லை அதுவே சரியானது. சிதறிக்கிடப்பவற்றை அவரவர் தத்தமது உடைமையாக்கலாமே தவிர தேசிய உடைமை யாக்க முடியாது. அவருடைய நாடகங்களை முன்னறிவித்தலோடும், அனுமதியோடும் யாரும் ஆற்றுகை செய்யலாம். அப்பொழுதுதான் சண்முகலிங்கம் தொடர்ந்தும் வாழ்வார். அதற்கு எந்த தடையுமில்லை. சண்முகலிங்கத்தின் நாடகத்தை மேடையேற்றும் ஒருவர் சண்முகலிங்கத்தால் புகழையும், பெருமையையும் பெறக் கூடும். ஆனால், அவரது படைப்புகள் சிதைக்கப்படாமல் அவற்றிற்கும் நீண்ட பெரும் பெருமை இருக்கும்படி செய்யப்படவும் வேண்டும்.

ஜேம்ஸ் ஜோயிஸின் நூல்கள் அவரது சொந்த திருத்தங்களோடும் கிறுக்கல்களோடும் எழுபது பாகங்களாக ஆய்வாளர்களுக்காக அச்சடிக்கப்பட்டு வெளிவந்தன என அறிஞர் ஆ. சபாரத்தினம் நவராஜிடம் கூறிய நிலையில் அது போல சண்முகலிங்கத்தின் கையெழுத்துப் பிரதிகளை அவரது திருத்தங்கள், கிறுக்கல்களோடும் ஸ்கான் (Scan) செய்யப்பட்டு புத்தகங்களாகவும், மென் பிரதிகளாகவும் (Soft copy) நூல்நிலையத்திற்கு கொடுத்தல் என்பதும் நவராஜின் எதிர்காலத் திட்டங்களில் ஒன்று. அவ்வாறு கொடுக்கப்படும் பட்சத்தில் அது எதிர்கால சந்ததிக்கும், அதன் பிற்கால சந்ததிக்கும், கலை தேடலுக்கும், சமூக தேடலுக்கும், ஆராய்ச்சிக்குமான தகவல் பெட்டகங்களாக காலங்காலமாக திகழும் என்பதில் ஐயமில்லை.



Rathitharan.K@thaiveedu.com



# மலைமண்டல நாயகன்

– ஜீவராஜ்

அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் ஆதினியை எழுப்புவதற்கு கோதைக்கு தயக்கமாக இருந்தது. கந்தளாய்க்குச் சென்று வந்ததிலிருந்து ஆதினி சோகமாகவும், சோர்வாகவும் இருந்து வருகிறாள். அவளை எப்படி பழைய நிலைக்குக் கொண்டு வருவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் கோதை. கந்தளாய் குளக்கட்டின் புனரமைப்பின் போது பெண்டுகள் கட்டில் கல் எடுத்து வைத்த வைபவம் இடம் பெற்று அன்றோடு மூன்று கிழமைகள் முடிவடைந்து இருந்தது.

ஆதினியின் தாய் சுகவீனமுற்றிருந்த அறிவாட்டிப் பாட்டியை பராமரித்துக் கொண்டிருந்ததால் இவர்களைச் சந்திக்க கந்தளாய்க்கு வரமுடியாமல் போனது. கோதையின் தாய் மட்டுமே உரிய நேரத்தில் கந்தளாய் விஷ்ணு ஆலயத்துக்கு வந்திருந்தாள். அவர்களது திருகோணமலை நோக்கிய பயணத்திற்கான நேரம் நெருங்கி இருந்ததால் மிகச்சிறிய நேரமே அவருடனும் கதைக்க முடிந்தது. நீண்ட வருடங்களின் பின் சந்தித்ததால் வேறு ஏதும் செய்யத் தோன்றாமல் தாயை இறுக்கி அணைத்தபடி அழுதுகொண்டு இருந்த கோதையால் தாயுடன் சொற்ப நேரமே பேச முடிந்தது. அறிவாட்டிப் பாட்டியை அடுத்த முறை வரும்போது பார்ப்பதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவு என்பதை கோதையின் தாயின் வார்த்தைகளில் இருந்து இருவரும் புரிந்து கொண்டார்கள். ஆதினியையும், கோதையையும் போலவே வண்டியில் இருந்த பல தேவரடியார்களும் ஓடிப்போய் ஊரில் உள்ள தங்கள் சொந்தங்கள் எல்லோரையும் பார்க்க வேண்டும் என்று துடித்தார்கள் ஆனால் ஆலயத்துக்கு அடிமையாகிப் போனவர்களால் தூரத்தில் மறைந்துபோகும் கந்தளாயின் பிரதான சாலைகளைப் பார்த்து அழுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது இருந்தது.

மனதில் பலவித எண்ணங்களோடு ஆதினியின் அருகில் கோதை குழம்பிக் கொண்டிருந்தாள். அந்த நேரம் இன்னும் ஆதினி அக்கா எழும்பவில்லையா? என்று கேட்டபடி வானதி வந்தாள். திருக்கோணேச்சர ஆலயத்திற்கு புதிதாக தேவரடியாராக வந்திருக்கும் சுட்டிப்பெண் அவள். சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்த ஆதினியின் தலையினை கோதை ஆறுதலாக வாரி விட்டாள்.

விசயம் தெரியுமா அக்கா இன்றைக்கு மலைமண்டல நாயகன் கோயிலுக்கு வாராராம் என்றாள் வானதி.

மண்டல நாயகனா என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கோதை. அந்த நேரம் பார்த்து அபிராமி அங்கே வந்தார்.

யார் அக்கா அவர் நாலைந்து நாட்களாகவே கோயில் பரபரப்பாக இருக்குது என்று ஆர்வத்துடன் கேட்டாள் வானதி.
வேளைக்காரப் படைத் தலைவர். திருகோணமலைக்குப் பொறுப்பானவர். அதனால்தான் மலைமண்டல நாயகன் என்ற பட்டம் அவருக்கு கிடைத்தது என்றாள் அபிராமி.

அப்ப அவரிட உண்மையான பெயர் என்ன அக்கா என்றாள் வானதி.

கணவதித் தண்ட நாதனார் என்றதுதான் அவரது உண்மை யான பெயர். திருகோணமலைக்கு அதிபதி என்பதால் மலை மண்டல நாயகன் என்று அழைக்கிறாங்க என்றாள் அபிராமி. சில காலமாக அரசு அலுவல்கள் காரணமாக அரசரோட புலத்தி நகரில தங்கி இருந்தார். இப்ப திரும்பி வந்ததும் கோணேசர தரிசிக்க வந்திருக்கிறார் என்றாள் அபிராமி. ஆல யத்தில் நீண்ட காலம் பணியாற்றி வரும் அபிராமியிடம் இருந்து நிறைய விடயங்களைக் கேட்க வேண்டும் என்ற ஆர் வத்தில் கோதையும், வானதியும் மாறி மாறிக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த உரையாடல்களில் ஆர்வம் எதுவுமில்லாதவளாக ஆதினி கந்தளாய்க் குளக் கட்டில் இருந்து ஞாபகமாக அவள் கொண்டு வந்திருந்த சிறிய கல்லினை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்களது உரையாடலில் இருந்து கணவதித் தண்ட நாதரின் வீர பிரதாபங்களை கேட்பதில் வானதியும், கோதையும் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆதினி புரிந்து கொண்டாள். அதற்கேற்றால்போல் அபிராமியும் அவர்கள் கேட்ட கேள்விக்கெல்லாம் விபர மாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தார். உரையாடலின் இடையில் இரகசியக் குரலில் அபிராமி கதைக்கத் தொட ங்கிய போதுதான் ஆதினி தனது கவனத்தைச் செலுத்தினாள்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா இப்பெல்லாம் கோணேசர தரிசிக்க வாற சோழ தேசத்து யாத்திரிகர்களிட எண்ணிக்க வழக்கத்தை விட அதிகமாய் இருக்கிறது இல்லையா என்று அபிராமி கேட்டார்.

ஆமக்கா நானும் அதப்பத்தித்தான் யோசிச்சன். நிறை யப்பேர் தொடர்ச்சியாக தலயாத்திரை வாறாங்க என்றாள் வானதி.

திருகோணமலைப் பட்டணத்தில சோழ வியாபாரிகள், ஐநூற் றுவர் வணிகர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதா கத்தான் எனக்கும் படுகிறது என்றாள் கோதை.

பரவாயில்லை சின்னப் பிள்ளைகள் என்று நினைத்தேன். சுத்தி நடக்கிறத கவனமாத்தான் கவனிச்சிட்டு வாறீங்க என்றாள் அபிராமி.

இல்லக்கா கிட்டடியில ஏதும் பிரச்சினை வருமோ என்று நேற்று யாரோ கோயில் மண்டபத்தில கதைச்சிட்டு இருந் தாங்க. ஏனக்கா சோழ தேசத்து படையெடுப்பு ஏதும் நடக்கப் போகிறதா என்றாள் பயத்துடன் கோதை.

யாருக்குத் தெரியும் இதெல்லாம் கோயிலுக்கு வாற அரச பிர தானிகள் கதைக்கிறத வச்சு நாமட ஆட்கள் சொல்லிறதுதான் என்றாள் அபிராமி. இருந்தாலும் மலைமண்டல நாயகர் அவ சரமாக திருகோணமலைக்கு திரும்பி வந்ததில் ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்கும் என்றுதான் எல்லோரும் நம்புகி றார்கள் என்றாள் அபிராமி.

எல்லாத்தையும் கேட்கப் பயமாய் இருக்கிறது அக்கா என்றாள் வானதி.

அரசுகளுக்கு இடையில சண்டை நடந்தா இடையில இருக்கி றவங்க பாடுதான் திண்டாட்டமா இருக்கும். அதுலையும் ஆண்டவருக்கு நேர்ந்து விட்ட நம்மட நிலைதான் அந்தோ பரிதாபம். அப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்று கோணேசர வேண்டுதல்தான் செய்ய முடியும் என்றாள் அபிராமி.

ஆலயப் பணிகள் காத்திருந்ததால் உரிய நேரத்தில் அனைவரும் தங்களைத் தயார் செய்து அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்வதற்காகச் சென்றார்கள். அன்றைய நாள் காலைப் பூசையின்போது மூலஸ்தானத் துக்கு முன்னால் நடனமாடும் பணி ஆதினிக்கு ஒதுக்கப்பட்டு இருந்ததால் அவள் தொடர்ச்சியாக தன்னுடைய முன்னா யத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தாள்.

அபிராமி கூறியது போலவே அன்றைய நாள் ஆலயச் சூழல் மிகப் பரபரப்பாக இருந்தது. நிறைய அதிகாரிகள் அதிகாலை வேளையிலேயே வந்து விட்டிருந்தார்கள். திரு கோணமலை மண்டலத்துக்கான பொறுப்பதிகாரி வருகிறார் என்பதால் அரச நடைமுறைக்கு அமைவான பணிகளை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஆதினி அறிவாட்டிப் பாட்டியை நினைத்துக் கொண்டாள். அவர் கூறியது போல் தன்னுடைய முழு பணியும் கோணேசருக்குச் சொந்தமானது என்பதை மனதில் நினைத்தவளாக அன்றைய நாளுக்கான நடனத்திற்கான முன்னாயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டி ருந்தாள்.

அவர்கள் எதிர்பார்த்ததுபோல அன்றையதினம் ஆலயத்தின் மண்டபங்கள் பக்தர்களாலும், அரச அதிகாரிகளாலும், படை வீரர்களாலும் நிறைந்திருந்தது. பூசை முடிவடைந்தபோது ஆதினி குனிந்த தலை நிமிராமல் தான் நடனம் ஆட வேண்டிய இடத்தில் போய் நின்றுகொண்டாள். பலரும் மலை மண்டல நாயகரை பார்ப்பதற்காக முயற்சிப்பதை அங்கி ருந்த சூழ்நிலைகள் ஆதினிக்கு உணர்த்துவதாக இருந்தது. வெளிச்சூழ்நிலைகளின் பரபரப்பில் எந்த நாட்டமும் கொள் ளாதவளாக தான் ஆட வேண்டிய அன்றைய நடனத்துக்கான தேவாரப் பதிகத்தை மனதுக்குள் பாடிக் கொண்டிருந்தாள்.

***கடிதென வந்த கரிதனை யுரித்து***
***அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்***
***பிடியன நடையாள் பெய்வளை மடந்தை***
***பிறைநுத லவளொடும் உடனாய்க்***
***கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து***
***கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து***
***குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்***
***கோணமா மலையமர்ந் தாரே.***

பெண் யானையின் நடையைப் போன்ற நடையினை உடைய வரும், கைகளில் வளையல்கள் அணிந்தவரும், பிறை போன்ற நெற்றியை உடையவருமான மாதுமை அம்மையை தன்னருகில் கொண்டவராகிய சிவபெருமான் பிறர் கொடிது என்று அஞ்சுகின்ற அலைகளை உடையதும், நித்தமும் கோணமாமலையில் மோதி ஒலிகளை எழுப்புகின்ற முத்துகள் சுமந்த கடலை உடைய வளமிக்க திருகோணம லையில் வீற்றிருக்கும் அழகினை கூடியிருந்தவர் அனைவரும் மெய் மறந்து காணத்தக்க விதத்தில் தன்னை மறந்து நடனம் ஆடிக் கொண்டிருந்தாள்.

நடனம் முடிந்து சிறிது நேரமான பின்பும் கூட்டம் சலனமின்றி அமைதியாக இருந்தது. கண்மூடி தலை தாழ்த்தி கோணநா யகப் பெருமானை வணங்கிய ஆதினி கண்விழித்தபோது அந்த விபரீதம் நடந்தது. கூட்டத்திலிருந்த கம்பீரமான ஒருவர் முன் நகர்ந்து வந்து வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய ஆபரணத்தை அவள் கழுத்தில் அணிவித்தார்.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com

# ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில்

# பெண்ணிலைவாதம் இறுதியுத்தம்

- சி. ரமேஷ்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே 22 பெப்ரவரி 2002-ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து, தாய்லாந்து, ஜேர்மனி, யப்பான், ஒஸ்லோ என நோர்வேயின் அனுசரணையுடன் தொடங்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் தொடச்சியற்று நடந்தேறி இறுதியில் தீர்வுகள் ஏதும் எட்டப்படாத நிலையில் போர்நிறுத்த உடன்படிக்கையும் முடிவுக்கு வந்தது. நிம்மதியில்லா வாழ்க்கை மீண்டும் தொடரப் போவதை எண்ணிக் கலங்கும் பெண் உள்ளத்தை நாகபூஷணி கருப்பையாவின் 'மெல்ல மெல்ல' என்னும் கவிதையில் காணலாம்.

'சந்தோசமாயிருந்த
மனங்கள் மீது
மெல்ல மெல்ல
பதற்றம் தடவியது.
திடீரென்று சமாதானப் பேச்சுகள்
இடை நிறுத்தப்பட்டது.
படுக்கையில்
கனவொன்று
முன் கூட்டியே
நிழலாய் தொடர்ந்தது
நடுக்கம் வந்து - என்
உடம்போடு ஒட்டியது.
நிம்மதி
காணமல் போய்விடுமோ
என்று'

நெற்றிக்கண்

இலங்கை அரசு 2008-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் திகதி அன்று போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறியதை தொடர்ந்து இலங்கை அரச படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நாலாம் கட்ட ஈழப்போர் தொடங்கியது. இப்போரில் விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பல பிரதேசங்களை இலங்கை அரசு கைப்பற்றிக் கொண்டது. நந்தி கடலேரியைச் சூழ்ந்து நடைபெற்ற போரின் இறுதிக்கால கட்டத்தில் பல்லா யிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இருபதாயிரத் துக்கு மேற்பட்ட மக்கள் காயம் அடைந்தனர். பல்லாயிரக்க ணக்கான மக்கள் அவயவங்களை இழந்தனர். 2009-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் நாள் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் கொல்லப் பட்டதை அடுத்து போர் முடிவுக்கு வந்தது. மனிதப் பேரவலங் களுக்கு மத்தியில் மக்கள் ஏதிலாக அலைந்து திரிந்தனர். உரிமையிழந்து, உடமையிழந்து நிர்கதியான மக்களை அரசு முகாங்களுக்குள் முடக்கியது. போரின் அழிவுகளையும் மக்களின் வலிகளையும் அவர்களின் பாடுகளையும் சுமந்து ஏராளமான கவிதைகள் வெளிவந்தன. முள்ளிவாய்க்காலில் மக்கள் எதிர் கொண்ட பேரவலங்களைத் தாங்கி வெளிவந்த தொகுப்பே ‘முள்ளிவாய்க்காலுக்குப்பின்’. குட்டிரேவதியை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த இத்தொகுப்பு இருபத்தெட்டு கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளி வந்தது. நெருக்கடியான சூழலில் தன்னை வெளிப்படுத்த விரும்பாத கருணாகரன் இத்தொகுப்பில் சுலோசனா தேவராஜா, கருணாகரன் வசந்தி என்ற புனைபெயர்களில் கவிதைகளை எழுதியிருந்தார். இது தவிர ஃபஹீமா ஜஹான், அனார், தமிழ்நதி, விநோதினி, விஜயலெட்சுமி சேகர். றஞ்சனி, மாதுமை, சுல்பிகா, வெலிகம ரிம்ஸா முஹம்மத், ஜெயந்தி தளையசிங்கம் முதலான பெண்கவிஞர்களின் கவி தைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்துள்ளாகி அச்சத்தோடு வாழ்ந்த மக்கள் எவ்விதமான சமரசத்துக்குள்ளும் சிக்கிக் கொள்ளாமல் தம் கவிதைகளைப் படைத்தனர். விடுதலைப் புலிகளின் ஆக்கிரமிப்புக்குள் வாழ்ந்த கவிஞர்கள் அரசியலை விமர்சனம் செய்வதை தவிர்த்து ஈழம் என்ற நிலத்தை முதன்மைப்படுத்தி கருத்து நிலைசார்ந்த கவிதை களையே படைத்தனர் என்று தமிழக விமர்சகர்கள் குற்றஞ் சாட்டி வருகின்றநிலையில் இத்தொகுப்பின் முன்னுரையும் இதனையே வழிமொழிகிறது. அக்காலப்பகுதியில் வன்னி பிர தேசத்துக்குள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்த மக்கள் அங்குள்ள அரசியல் உள்ளீடுகளை விமர் சிக்கும் நிலையில் இருக்கவில்லை. அதற்கான சூழலும் அவர்களுக்கு வாய்க்கவில்லை. ஆதலால் அங்கிருந்து வெளிவந்த கவிதைகளும் இலங்கை அரசாங்கத்தை விமர் சிக்கும் கவிதைகளாக இருந்தனவே அன்றி புலிகளின் அரசையோ அவர்களின் நிர்வாகக் கட்டமைப்புகளையே விமர்சிக்கும் கவிதைகளாக அமையவில்லை. குட்டிரேவதி தொகுப்பின் முன்னுரையில் கூறுவதைப்போல இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை வெறும் நிலமாக மட்டும் கருத்தியல் தளத்தில் மாத்திரம் வைத்துப் பார்க்கவில்லை. தாம் வாழ்ந்த காலத்தில் தமிழ் மக்களில் பலர் ஈழத்தை உணர்வின் தளத்திலேயே அணுகினர். தமிழர்களின் தாயகம் தமிழீழத் தாயகம் என வாழ்ந்தவர்கள் அன்று மாத்திரமன்றி இன்றும் வாழ்கிறார்கள். அத்தோடு இத்தொகுப்பில் எழுதிய பெண்கவிஞர்களும் பார்வையாளர்களாக இருந்து கவிதை படைத்தனரே அன்றி போர் இடம்பெற்ற சூழலில் முள்ளி வாய்க்காலுக்குள் இருந்து கவிதை படைத்தவர்களல்ல. ஆயினும் அக்கவிதைகள் பலவற்றில் உணர்வின் செறிவு மேலோங்கிக் காணப்பட்டது. முள்ளிவாய்க்கால் விடுவிக்கப் பட்டதை அரசு அறிவித்ததைத் தொடர்ந்து போர் முடிவுக்கு வந்தது. துப்பாக்கிகள் பேசத்தொடங்கிய அக்காலத்தில் மக்கள் அமைதி காத்தனர். மக்கள் சொந்த இடங்களுக்குள் செல்ல முடியாத நிலையில் கூடாரங்களுக்குள் முடங்கினர். போராளிகளாக இருந்தவர்கள் காவுகொள்ளப்பட்டனர். வேட் டையாடப்பட்ட பெண்போராளிகள் போக ஏனைய போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இலங்கை அரசு தனது வெற்றியைக் கொண்டாடி வந்த நிலையில் தமிழ் மக்கள் இருக்க இடமின்றி முள்வேளிகள் அடைக்கப்பட்ட முகாங்களுக்குள் மந்தைகளாக அடைப்பட்டிருந்தனர். இம் மக்களின் துல்லியமான வாழ்வை ‘விடுவிக்கப்பட்டவர்களின் இரகசிய வாக்குமூலம்’ என்ற தமிழ்நதியின் கவிதை கூறிச் செல்கிறது.

**‘முள்ளிவாய்க்காலிலிருந்து**
**நாங்கள் விடுவிக்கப்பட்டதாக**
**அரசு உலகுக்கு அறிவித்தபோது...**
**முட்கம்பி வேலிகளுள்**
**விடுதலையானோம்.**
**கூரைகளைப்**
**பிடுங்கிக்கொண்டு**
**வழங்கப்பட்ட கூடாரங்களுள்**
**ஒன்று**
**போலவே நெளிந்துகொண்டிருக்கிறார்கள்**
**புழுக்களும்**
**குழந்தைகளும்**
**விடுவிக்கப்படுவதன் முன்**
**போராளிகளாக இருந்த பெண்களை**
**நகக் குறிகளுடனும்**
**பற்தடங்களுடனும்**
**முகாமின் மூலைகளில்**
**சடங்களாகக் கண்டு பிடிக்கிறோம்**
**ஆயினும்**
**புத்தர் சாட்சியாக**
**எதையும் நாங்கள் பார்க்கவில்லை...’**

*முள்ளிவாய்க்காலுக்குப்பின். பக். 70 -71*

யுத்தம் தொடர்ச்சியாக நிகழ்ந்த சமயத்தில் உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமல் இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் பலர் எறிகணைத் தாக்குதல்களுக்குள்ளாகி உடல் சிதறி இறந்தனர். இறக்கும் உறவுகளை அவ்வவ் இடங் களில் புதைத்துவிட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி மக்கள் நகர்ந்து கொண்டிருந்தனர். ஆறா வலிகளோடும் ரணங்களோடும் மக்கள் அக்காலத்தைக் கடந்து முடித்தனர். இதனை றஞ்சனியின் ‘நாடற்றவனின் இயலாமை’ கவிதை உணர்த்தி நிற்கிறது.

**‘செல் வீச்சிலும்**
**துகள் வீச்சிலும்**
**எரிந்த உடல்கள்**
**சிதறிய குழந்தைகள்**
**அரை குறை உயிருடன்**
**புதைகுழிக்குள் மரணிக்கிறார்கள்**
**இறந்த உடலோ**
**நாதியற்று**

**அலைகிறது ஆவியாக**
**இருக்கும் உயிர்களும்**
**உறுப்புக்களை இழந்து**
**அரைகுறை மனிதராக**
**ஓடுகின்றனர்**
**மீதமுள்ள**
**உயிருக்காக...'**

முள்ளிவாய்காலுக்குப்பின் தொகுப்பில் இடம்பெறும் விநோதினியின் கவிதை மண்ணோடு மண்ணாக சிதறுண்டு கிடக்கும் சடலங்களுக்கிடையில் தாயை இழந்து தவிக்கும் பெண்மையின் துயரை வெளிப்படுத்தி நிற்கிறது. 'நிறைவேறாக் கனவு முடிவுறல் தகாதென மூடாத கண்கள்' எனக் கூறி கண்கள் மூடாது கிடக்கும் பிணத்தைக் காட்சிப்படுத்துவது சொல்லாத பல சேதிகள் பலவற்றை உணர்த்தி நிற்கிறது. றஞ்சனியின் 'நாடற்றவளின் இயலாமை' கவிதையும் இப்பின்னணியில் எழுகிறது. செல் வீச்சாலும் துகள் குண்டுத் தாக்குதலாலும் சிதறிய உடல்களையும் அவையங்களை இழந்து அங்கவீனப் பட்ட மனிதர்களையும் காட்சிப்படுத்தும் றஞ்சனி பாது காப்போம் எனக் கூறி வந்தவரும் பாதியிலே மடிந்துபோன செய்தியை உணர்த்தி நிற்கிறது.

ஈழப்போர் புதிய பரணியை எழுதிச் செல்கிறது. நாலாங்கட்டப் போர் நிகழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் இறந்த தாயின் மார்ப்பில் குழந்தை பாலைத் தேடுகிறது. அத்துயரின் கொடிய வலியை பா. சிவாந்தினி ஒற்றைப்பனைத் தொகுப்பில் பதி விட்டுச் செல்கிறார்.

**'பச்சைப்பாலகன் பிணமாய்க்கிடக்க**
**அன்னையின் முலையில் முகத்தைப் புதைத்து**
**பாலைத் தேடிய அவலமும்**
**அரங்கேறியதும் இங்கேதான்...'**

மனிதநேயத்தை விழுங்கிய யுத்தம் மக்களை வேட்டையாடிய கணங்களையும் செல்வீச்சின் மத்தியில் உயிரைக் கையில் பிடித்தபடி தம் உறவுகளைக் கூட பொருட்படுத்தாது மக்கள் விரைந்த காட்சியையும் பா. சிவாந்தினியின் 'எங்களுக்கு மட்டும் ஏன்' என்ற கவிதையில் பதிவுசெய்கிறது. குற்று உயிராய் இருப்பவர்களையும் கண்மூடும் வரை எங்களை யாரும் காப்பாற்ற மாட்டார்களா என்று நினைப்பவரையும் கைவிட்டு தம் உயிரைக் காப்பாற்ற மக்கள் விரைந்த கணப் பொழுதுகளையும் இக்கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது.

முப்பது ஆண்டுக்கு மேலாய் தொடர்ந்த போராட்டம் துரோகங்களால் சிதைக்கப்பட்ட வரலாற்றை முள்ளிவாய்க்காலுக் குப்பின் தொகுப்பில் விஜயலெட்சுமி சேகர் எழுதிச் செல்கிறார். காலங்கள் கடந்து மாதங்கள் கடந்து நிசப்தமாய் கதவடைத்துக் காத்துக்கிடக்கும் ஊர், அவ்விடங்களை விட்டு நகர்ந்த மக்கள், கூரையின்றி நிற்கும் வீடுகள், பல்நாட்டு பீரங்கியாலும் பல்நாட்டு படைகளாலும் ஆக்கிர மிக்கப்பட்ட தேசம் என யுத்தவடுக்களால் நிறைந்திருக்கும் தாய் நாட்டை விபரித்துச் செல்லும் இக்கவிதை சிதைக்கப் பட்ட தமிழினத்தின் அழிவுகளைக் கூறிச்செல்கிறது.

அகதிமுகாங்களுக்குள் முடக்கப்பட்ட மக்களின் வாழ்வு கவி தைகளில் வெளிப்படுதப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். உள்நாட்டுப்போர் காரணமாக வெளியேறிய மக்கள் அகதிமு காங்களுக்குள் தஞ்சம் அடைந்தனர். சிலர் தமிழகம் தம் சொந்த இடங்களை விட்டு வெளியேறி தமிழகம் போன்ற பிற பகுதிகளுக்குச் சென்றனர், அவ்வாறு முகாங்களில் தங்கி வைக்கப்பட்ட மக்கள் சொல்லவொண்ணாத் துயரை அனுப வித்தனர்.

**'அவள்**
**அரசின் வன்செயலால்**
**அகதியாகி வந்திட்டாள்**
**தொற்று நோய்களின் இருப்பிடம்**
**நோய்க்காவிகளின் உறைவிடம்**
**வயிற்றுப் பசியின் வாழ்விடம்**
**இதுவே இவள் வதிவிடம்...'**

*சாளரம் - 1993-செப்டெம்பர்*

அன்று கதிரேசு கலாரஞ்சனி சாளரத்தில் எழுதிய இக்கவிதை இக்காலத்துக்கும் பொருந்திப் போகிறது. அலங்காரத் தன்மை கொண்ட வார்த்தைகளுக்கூடாக இக்கவிதை கட்டுண்டாலும் ஈழத்தில் இயங்கும் பெரும்பாலான அகதிமுகாம்களின் உண் மைத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

வவுனியா பம்மைமடு அகதிமுகாமில் இருந்த பொழுதில் வெற்றிசெல்வியால் எழுதப்பட்டு வெளிவந்த தொகுப்பே 'இப் படிக்கு தங்கை'. முள்ளிவாய்க்காலில் இருந்து வந்த மக்கள் தம் உறவுகளை தேடியலைந்த பொழுதில் அவ்வுறவுகளைக் காணாது அல்லலுற்று எழுதிய கவிதைகளாக இக்கவி தைகள் காணப்படுகின்றன. புனர்வாழ்வு முகாமில் நெருக்க டியான கணங்களை இக்கவிதைகள் பதிவு செய்கின்றன.

**'அன்புள்ள அண்ணா,**
**கம்பி வேலிக்குள்ள**
**கனவுகளைச் சிதைச்சிக் கிட்டு**
**கலங்கிக் கெடப்பமின்னு**
**கனவுலயும் நெனைக்கலயே...**
**ஒருக்கா நீ வந்தின்னா**
**ஓ...ன்னு நானழுது**
**மனப்பாரம் கொறைச்சிக்கலாம்**
**வாங்கண்ணா முயற்சி பண்ணி...**
**நீயும் வந்து பாக்காட்டி**
**எனக்கு வேற யாரிருக்கா?**
**தோழிகூட இல்லண்ணா**
**தோழனைச்சு கண் துடைக்க...'**

*இப்படிக்கு தங்கை. பக்.12-19*

கம்பிவேலிக்குள் அகப்பட்ட மக்களின் அவலக்குரலாய் ஒலிக்கும் இக்கவிதை நாட்டார் பாடலமைப்பில் எழுதப் பட்டது. முள்ளிவாய்க்காலுப்பின் தொகுப்பில் இடம்பெறும் மாதுமையின் கவிதையும் இத்தடத்தில் நகர்கிறது.

**'பசித்து வாடிய முகக்களைப்பின் முன்**
**நீண்டு சென்றது முட்கம்பி**
**தும்பியும் அமரும் துக்கமும் அமரும்...'**

எனத்தொடங்கும் இக்கவிதை வறுமைக்குள் ஆட்பட்ட மக்களின் உணர்வின்குரலாய் ஒலிக்கிறது. போராட்டம் தடம் மாறிச் சென்ற காலகட்டத்தில் மக்களின் வலியையும் வேதனையையும் புகலிடத்தில் இருந்து பார்க்கமுடியாது என்பதை உணர்த்தும் மாதுமை துக்கித்துக் கிடக்கும் மக்களால் இனி ஒரு போராட்டம் குறித்துச் சிந்திக்க முடியாது என்பதையும் வெளிப்படுத்திச் செல்கிறார்.

போர் முடிவுற்றதும் வெளிநாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மாயைகளுக்குள் கட்டுண்டு அதன் வலைகளில் சிக்கி சின்னாபின்னமாகும் மனித உளவியலை எஸ். பாயிஸா அலியின் 'பேரலையின் முடிவினிலே' என்ற கவிதை உணர்த்தி நிற்கிறது. சுபீட்சத்தின் செழிப்பான தோற்றமாக வலுவூட்டப்பட்ட தொண்டு நிறுவனங்களின் உதவியால் எவ்விதமான பயனும் விளையப்போவதில்லை. மக்களுக்கான உதவிகள் என்ற பெயரில் இந்நிறுவனங்கள் மக்களைத் தொடர்ந்தும் சோம்பேறிகளாக்குகின்றன.

**'கலர் கலராய் என்ஜிஓக்கள்**
**காது குளிரும் வாக்குறுதிப் பொதிகள்**
**ஊருக்குள்ளேயதன் முகவர் மட்டுமே**
**மாடத்து வாசமுடன்**
**குளிர் பதன பவனி வர**
**நாங்கள் மட்டுமின்னும்**
**நலன்புரி நிலைய சாக்கடைக்குள்**
**தெருவோர எச்சில் பொறுக்கிகளாய்...'**

சமூக முன்னேற்றத் திட்டங்கள், நன்கொடை, உதவி என்ற பெயரில் அரசு சாரா அமைப்புக்கள் மக்களுக்கு உதவிகள் செய்து வருகின்றன. இவ்வுதவிகள் மக்களை உழைப்பில்லாது ஊதாரிகளாக்கும் முயற்சிகள் எனக்கூறி எஸ். பாயிஸா அலி இக்கவிதையில் இந்நிறுவனங்களைக் கண்டிக்கிறார்.

ஈழவாணி தன் 'விலக்கப்பட்ட தாள்கள்' தொகுப்பில் கூறுவது போல ஈழப் போரில் பெண்களின் பங்களிப்பினை சாதாரணமாக மதிப்பிடமுடியாது. ஈழப்போரில் கஸ்தூரி, வானதி, பாரதி எனப் பெண்கள் சமராடி தம் இருப்பைத் தக்க வைத்துக்கொண்டனர். தங்கள் சொந்த அனுபவங்களைப் பாடல்கள் மற்றும் கவிதைகளாக வடித்துச் சாதனை படைத்தனர். தாயக மண்ணில் வாழ்ந்து கொண்டே விஞ்சிய வீரம் படைத்த ஈழப்பெண் கவிஞர்கள் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை நிலைநாட்டத் தம்மை மறந்துழைத்தனர்.

**'மனிதமாய் வாழ**
**மாபுரட்சி செய்த மறநங்கைகள்**
**முறம் எடுத்துப் புலி விரட்டிய**
**முன்னொரு காலக்கதையல்ல**
**காலத்தின் தக்கவல்லதாய்த் திகழ்ந்த**
**நிஜப் பெண்கள் நிகழ்த்திய கதை**
**எம் நிலத்தை**
**துகில் கிழித்த காலத்தே**
**அக்களம் மறித்து**
**கயவர் புஜமேறிக் கணமே**
**பகை வீழ்த்தி**
**வென்ற கதை புனைவன்று'**

*விலக்கப்பட்ட தாள்கள். பக்.63*

போருக்குப் பின்னரான அமைதியை ஆழமான படிமத்துக்கூடாக விளக்கும் இக்கவிதை நவீனத்தமிழ்க் கவிதைகளில் தனித்துவமானது. போரினால் உடமையிழந்து, உரிமையிழந்து, வலியிழந்து, அடிமையாய் ஏதுமற்ற ஏதிலிகளாய் வாழும் வாழ்வைக் காட்சிப்படுத்தும் கவிதைகளும் பெண்களால் பாடப்பட்டுள்ளன.

மாவீரர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட துயிலுமில்லங்கள் மாவீரர்களின் கல்லறைகள் மற்றும் நினைவுக்கற்கள் போன்றவற்றை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட நிலப்பரப்பு ஆகும். வீரச்சாவு அடைந்த விடுதலை வீரர்களின் நினைவு கொள்ளும் முகமாக 1989 முதல் நவம்பர் 27-ஆம் திகதி மாவீரர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அன்றையநாள் மாலை 6.05-க்கு தமிழ் ஈழமக்கள் ஈகைச் சுடரேற்றி வணங்குவார்கள். சிறிலங்காவின் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் விடுதலைக்காக உயிர் நீத்த போராளிகள் புதைக்கப்பட்ட துயிலுமில்லங்கள் இராணுவத்தினரால் நிர்மூலமாக்கப்பட்டன. கிட்டத்தட்ட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டன. குடும்ப உறவு களை இழந்த தமிழ் மக்களின் உளவியலை இந்நடவடிக்கையானது மிகவும் மோசமாகப் பாதித்தது. அவ்விடங்கள் இராணுவ முகாங்களாக மாற்றப்பட்டன. இதனைக் கனகலதாவின் கவிதை கிண்டலும் கேலியுமாகப் பதிவுசெய்கின்றது.

**கோட்டையும் காவலுமாய்**
**கோலோச்சிய**
**காலத்தடங்கள்**
**அறுகம்வேரில் அழிந்திருந்தன**
**குரல்களை மூடிப்படர்ந்திருந்தது**
**பசுமை**
**நடுகல்கள் விசாரணைக்குச்**
**சென்றுவிட்டனதென்றனர்**
**பாதை காட்டும்**
**முண்டப் பனைகளையும் காணோம்...'**

கனகலதாவின் 'இரண்டாவது காலனித்துவம்' என்ற கவிதை முள்ளிவாய்காலுக்குப் பின் இராணுவமயமாக்கப்பட்ட சூழலில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைகளை இக்கவிதை ஆவணமாகப் பதிவு செய்கிறது. சாலைகளில் இராணுவத்தின் பிரசன்னமும் போரால் பாதிக்கப்பட்டு சோபையிழந்து காணப்படுகின்ற ஈழப்பிரதேசமும் காட்டப்படுகிறது.

**'வென்றவரின் வாட்களையும்**
**அழித்தவரின் விழிகளையும்**
**புதைத்தாகி விட்டது**
**வரலாறு**
**மதுவிலும் குருதியிலும்**
**பிறழ்ந்துகிடக்கிறது...'**

போருக்குப்பின் இன்று மக்களின் நடைமுறை வாழ்க்கை மாறி விட்டது. 21-ஆம் நூற்றாண்டு அதீத தொழில்நுட்ப, பொருளாதார வளர்ச்சி பெண்களின் வாழ்க்கைநிலை பெருவளர்ச்சி கண்டுள்ளது என்றே கூறலாம். கலை, இலக்கியம், சட்டம், வணிகம், விளையாட்டு, கண்டுபிடிப்பு என அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டு பெண்கள் சாதனை படைத்து வருகிறார்கள். இன்று பெண்கள் முத்திரை பதிக்காத இடங்களே இல்லை எனக் கூறலாம். இலங்கையில் தொடர்ந்தும் ஓரளவுக்கு பாலின சமத்துவம் பேணப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். பெண்கள் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குரிய சூழ்நிலையை உரு வாக்கிக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறான நிலையில் சுயசிந்தனையும் தன்னம்பிக்கையும் பெற்று விளங்கும் பெண்கள் நாளைய சாதனையாளர்களாக விளங்குகிறார்கள் என்றால் மிகையில்லை.



ramesh.s@thaiveedu.com



### வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு:

# ஒல்லாந்தர் காலமும் விரதபுராணங்களும்

- மைதிலி தயாநிதி

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் எனும் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி தவிர்க்கவியலாத வகையில் தமது நாட்டில் நிலைநாட்டப்பட்டபொழுது, சுதேசியர் இயலுமான வகைகளில் தமது எதிர்ப்புகளைப் பதிவு செய்யத் தவற வில்லை. ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி முடிவெய்தும் தறுவாயில், அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசகேசரி இயற் றிய வடமொழிக் காவியத் தழுவலான இரகுவமிசம் அகில இந்தியப் பண்பாட்டுடன் தன்னை அடையாளப்படுத்துவதன் மூலமாகப் போர்த்துக்கேயரின் மேலாதிக்கம், சமயம், பண் பாடு என்பவற்றை முழுமையாக நிராகரிப்பதுடன், சூரியவம் சத் தோன்றல்கள் என்று தம்மைக் கருதிக்கொள்ளும் யாழ்ப்பாண மன்னர் ஆட்சியே சுதேசிகளுக்கு உகந்த ஆட்சி என்ற எண்ணத்தையும் நுட்பமாக விதைத்தது என்று முன்னர் பார்த்தோம். அதுபோலவே, ஒல்லாந்தர் காலத்தில் வட மொழித் தழுவல்களாகத் தோன்றிய விரதபுராணங்கள், விசேட மாக, சிவராத்திரி புராணமும் அதன் பிரதான கொள்கையான தற்செயலான கருணை (accidental grace) என்பதும் கல்வி னிய இறையியல் (Calvinist theology) அடிப்படையிலான டச்சுச் சீர்திருத்த சபைக் கோட்பாடுகளை நிராகரித்தது.

தற்செயலான கருணை என்பது இந்து பக்தி மரபில் காணப்படும் முக்கியமான தத்துவமாகும். இது இறை யருளானது மனிதரின் அறவொழுக்கத் தகுதி அல் லது ஆன்மிக முயற்சி ஏதுமின்றி எதிர்பாராதவிதமாக அவர்களுக்கு வழங்கப்படுதலைக் குறிக்கிறது. அதா வது, தூய பக்தி, ஒழுக்கம் தவறாத நடத்தை, ஆன்மிக ஈடேற்றத்திற்கான செயற்பாடுகள் என்பன மூலமே இறையருள் பெறலாம் என்ற பொதுவான கருத்திற்கு மாறாக, தற்செயலாக நிகழும் இறை தரிசனம், எண்ணிச் செய்யப்படாத சிவபுண்ணியச் செயல்கள் மூலமாக, இறையருள் பற்றி முன்பு சற் றுமே சிந்தித்திராத, ஒழுக்கக் குறைபாடுகள் கொண்ட மனிதர் கூட, இறையருள் பெறக்கூடும். இது கட வுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே இறையருள் கிட்டும் என வலியுறுத்தும் கல்வினியத் தத்துவத்துடன் அடிப்படையில் மாறுபட்டது. இது குறித்துச் சற்று விரிவாகப் பின்னர் பார்போம்.

அவ்வகையில் பிராமணரான வரத பண்டிதரின் சிவ ராத்திரி புராணத்தினை வெறுமனே சமய பாராயண அல்லது வடமொழிப் பௌராணிக மரபில் வந்த புரா ணத்தின் தழுவல் என்று மாத்திரம் பார்க்கவியலாது. ஒல்லாந்த காலனிய ஆதிக்கத்திற்கு எதிரான உள்நாட்டு மேல்குழாத்தின் எதிர்ப்பின் வடிவமாகவும் அந்நூல் திகழ் கிறது என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். தமிழ்ச் சைவநூல்கள் சிறப்பிக்கும் சிதம்பரத்தில் வாழும் பெரியோர் களின் ஆணைப் பிரகாரம் பாடப்பட்ட இந்நூல் பல்லாண்டுக ளாகக் காலனித்துவ அச்சுறுத்தல்களினால் நலிந்திருந்த சைவக் கோட்பாடுகளை மீள் உறுதி செய்கிறது. காலனித் துவ அதிகாரத்தின் கீழ் இரட்டைச் சமய வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவர்களின் வாழ்வியல் நடைமுறையை ஒரு விதத்தில் அங்கீகரிக்கிறது என்றும் கூறலாம்.

> ❝ ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் வடமொழிப் புராணங்களைத் தழுவி இயற்றப்பட்ட வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் எனும் இரு விரத புராணங்க ளையும் காலனிய ஆதிக்கம் மீதான எதிர்ப்புணர்வை மையப்படுத்தி எழுந்த இலக்கியம் என்று கூறுவதில் தவறில்லை. ❞

காலனித்துவ ஆட்சியானது தன் ஆதிக்கத்திற்குட்பட்ட சமூ கத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கருவிகளுள் ஒன்றாக மதத்தையும் பயன்படுத்தியதால், அக்காலத்தில் எழுந்த வரத பண்டிதரின் ஆக்கத்தையும் மதத்தைத் தாண் டிய எதிர்ப்பாகவே பார்க்கவேண்டியுள்ளது. ஆதலால், ஒல் லாந்தர் ஆட்சிக்காலத்தில் வடமொழிப் புராணங்களைத் தழுவி இயற்றப்பட்ட வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் எனும் இரு விரத புராணங்களையும் காலனிய ஆதிக்கம் மீதான எதிர்ப்புணர்வை மையப்படுத்தி எழுந்த இலக்கியம் என்று கூறுவதில் தவறில்லை. இங்கு சிவ ராத்திரி புராணம் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுகிறது. அடுத்து எத்தகைய காலனிய அரசியல், மதச் சூழலில் சைவ மத ஆக்கங்களின் தோற்றத்தைக் கோடிட் டுக் காட்டும் சிவராத்திரி புராணம் போன்ற நூல்கள் தோன்றத் தொடங்குகின்றன என் பதைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி பொது சகாப்தம் 1621-ஆம் ஆண்டில் யாழ்ப்பா ணத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிய துடன் முடிவுக்கு வந்தது. யாழ்ப்பாணத் தைப் போர்த்துக்கேயர் 1658-ஆம் ஆண்டு வரை மட்டுமே ஆட்சி செய்தனர் எனினும், போர்த்துகேயரின் நேரடிக் கட்டுப்பாட்டுக் குள் யாழ்ப்பாண இராச்சியம் வர முன்பே கத்தோலிக்கக் குருமார் அங்கு தீவிர மத மாற்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வெற்றி யும் கண்டனர். போர்த்துக்கேய ஆட்சி யாளர்கள் உள்ளூர் மக்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களை அழித்தல் முத லான தீவிர சுதேச சமய ஒடுக்குமுறைக ளிலும் ஈடுபட்டனர். ஆகவே, போர்த்துக்

கேயரின் நேரடி ஆட்சி நடைபெற்ற குறுகிய காலகட்டத்தில் ஞானப்பள்ளு, அர்ச். யாகப்பர் அம்மானை போன்ற கத்தோலிக்க சமயச் சார்புடைய இலக்கியங்கள் மட்டுமே தோன்றின என்பது வியப்புக்குரியதன்று. ஆனால் 1658 முதல் 1796 வரை நிலவிய ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் சமய நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டது. Dutch Reformed Church எனப்படும் டச்சு சீர்திருத்த திருச்சபையைச் சார்ந்த ஒல்லாந்தர்கள் கத்தோலிக்கக் குருமார்களை இலங்கையிலிருந்து வெளியேற்றியதுடன், கத்தோலிக்க மத வழிபாடுகளுக்கும் தடை விதித்தனர். இதற்கு முக்கியமாக இரு காரணங்களைக் கூறலாம். தாம் தோற்கடித்த போர்த்துக்கேயருக்குக் கத்தோலிக்க மக்களின் ஆதரவு தொடரக்கூடும் என்ற அரசியல் ரீதியான பயம் ஒல்லாந்தருக்கு இருந்தது. மற்றது, மதக்கோட்பாட்டு அடிப்படையில் ஒல்லாந்தரின் 16-ஆம் நூற்றாண்டின் சமய சீர்திருத்தத்தின் விளைவாகத் தோன்றிய டச்சுச் சீர்திருத்தசபை கத்தோலிக்க மதத்தின் அடிப்படைகளை முற்றாக மறுதலித்திருந்தது.

போர்த்துக்கேய ஆட்சியுடன் ஒப்பிடுகையில், ஒல்லாந்தர் காலனிய ஆதிக்கத்தில் சைவ நூல்கள் எழுவதற்குப் பல காரணங்கள் உள. போர்த்துக்கேய முடியாட்சி ஐரோப்பாவில் கத்தோலிக்கத் திருச்சபையுடன் மிக நெருங்கிய உறவு பூண்டிருந்தது. அத்துடன், Padroado Real என்று அழைக்கப்பட்ட அரச ஆதரவு அமைப்பு முறையானது (Royal Patronage system) போர்த்துக்கேய முடியாட்சிக்கு அதன் காலனித்துவ நாடுகளின் தேவாலயச் செயற்பாடுகளில் முழுக் கட்டுப்பாட்டையும் வழங்கியது, இது காலனிய நாட்டு மக்களைக் காப்பாற்றும் மீட்பர்களாகப் போர்த்துக்கேயர் தம்மைக் கருதிச் செயலாற்ற உந்தியது. மேலும், போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் யேசு சபை, டொமினிக்கன் சபை, பிரான்ஸிஸ்கன் சபைக் குருமார் தமக்குரிய காலனிய நாடுகளில் சுதந்திரமாக இயங்க அனுமதித்தனர். மிகத் தீவிரமான மதமாற்ற நடவடிக்கைகள் மேற்கொண்ட அவர்களுக்கு ஒத்துழைப்பைப் போர்த்துக்கேய ஆட்சியாளர் நல்கியது மட்டுமன்றி, சுதேச வழிபாட்டிடங்களை அழித்ததுடன், சுதேச சமய நடைமுறைகளை மக்கள் பின்பற்றுவதிலும் கட்டுப்பாடுகளை விதித்தனர். இவ்வாறு போர்த்துக்கேய காலனிய ஆதிக்கத்தில் மதமாற்றம் என்பது பிரிக்கவியலாத அம்சமாக விளங்கியது.

இதற்கு மாறாக, முதன்மையாக ஒரு வணிக நிறுவனமான டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் மதமாற்ற நடவடிக்கைகளில் போர்த்துக்கேயர் காட்டிய அளவு ஆர்வமும் தீவிரமும் காட்டவில்லை. இதற்கு ஒரு காரணம் ஒல்லாந்து நாட்டில் டச்சுச் சீர்திருத்த திருச்சபை உத்தியோகபூர்வ அரசு மதமாக இருப்பினும், அது இரண்டாம் பட்சமாகவே கருதப்பட்டது. அதனால் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் போர்த்துக்கேய ஆட்சியாளர் போன்று, புரட்டஸ்தாந்தினரான ஒல்லாந்தர் ஒப்பீட்டளவில் தீவிரமான அணுகுமுறைகளைக் கையாளவில்லை. அது மாத்திரமன்றி, உத்வேகத்துடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கத்தோலிக்கக் குருமார்களின் செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் டச்சுச் சீர்திருத்த சபைக் குருமார் நிதானமாகவே தங்கள் மதம் பரப்புதலைக் கையாண்டனர் எனலாம். மேலும், இலங்கையில் ஒல்லாந்து ஆட்சியாளர்க்கும், டச்சுச் சீர்திருத்த திருச்சபைக் குருமார்களுக்கும் இடையில் பதற்றம் நிலவியது. போர்த்துக்கேயர் கத்தோலிக்கக் குருமாரைச் சுதந்திரமாக இயங்கவிட்டது போன்று ஒல்லாந்தர்கள் டச்சுச் சீர்திருத்த சபைக் குருமார்களைச் சுதந்திரமாக இயங்க விடாது தமது அரச கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க விரும்பினர். அத்துடன், மதகுருமாருக்கும் உள்ளூர் மொழிகளைக் கற்றல் பெருஞ்சவாலாக இருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் மதமாற்றம் பாடசாலையில் கட்டாயக் கல்வி, பாடசாலையை அண்டிய தேவாலயத்தில் எல்லா பிறப்பு, இறப்பு, கல்யாணப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும் என்ற நிபந்தனை, அரச வேலைவாய்ப்புக்குக் கிறிஸ்தவர்கள் மாத்திரமே தகுதியுடையர் என்ற விதி முதலானவை மூலமாக நிகழ்ந்தது. இது குறித்து மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூலிற் கூறியுள்ளதை நோக்கலாம்.

“இக்காலகட்டத்தில் கிறிஸ்தவர்களாக மாறியோரின் எண்ணிக்கை பெருமளவினதாக இருந்தபோதும் பலர் பெயரளவில் மாத்திரமே கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு தமது சடங்காசாரங்களை மறைவாகவும், வெளிப்படையாகவும் கைக்கொள்ளத் தொடங்கினர்.”



‘கல்வினிசம் எனும் சமயமேயன்றி, மற்றொரு வேதமும் வழங்காமல் அதிகாரத்தினால் தடுத்து, யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டு கோவில் (church) பற்றுகளாகப் பகுத்து, ஒவ்வொரு பற்றுக்கும் ஒவ்வொரு கோவில் (church) கட்டுவித்து, அக்கோவில்களிலே (churches) தங்கள் சமயக் குருவானவரை நியமித்து, அனைவரும் அந்தக் கோவில்களில் (churches) போய் அறிவு கேட்கவும் கலியாணம் கைப்பிடிக்கவும் மற்றச் சடங்குகள் எவைகளையும் தங்கள் சமய விதிப்படிதான் செய்யவும் வேண்டுமென்று அந்த டச்சுத் தேச அரசாட்சியாளர் பலவந்தம் பண்ணி வந்தார்கள். பல வரிகளை ஏற்படுத்தி, அரசாட்சி வருமானத்தையும் பெருக்கிக் கொண்டார்கள்.’

இக்காலகட்டத்தில் கிறிஸ்தவர்களாக மாறியோரின் எண்ணிக்கை பெருமளவினதாக இருந்தபோதும் பலர் பெயரளவில் மாத்திரமே கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு தமது சடங்காசாரங்களை மறைவாகவும், வெளிப்படையாகவும் கைக்கொள்ளத் தொடங்கினர். அத்துடன், ஒல்லாந்தர் கொடுத்த இன்னல்கள், தடைகளுக்கு மத்தியிலும் கத்தோலிக்கம் இரகசிய உயிர்ப்புடன் இருந்தது என்பது முக்கியமானது.

மதத்தையும் கல்வியையும் ஒன்றிணைத்துப் பரப்ப டச்சு ஆட்சியாளர் முயன்ற போதிலும், தங்கள் மதத்திற்குச் சுதேசிகளை உண்மையாக மதம் மாற்றுவது இயலாத காரியம் என்பதை அவர்கள் இறுதியாக ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் உள்நாட்டு மதங்கள் மீதான தங்கள் பிடியைச் சில காலங்களின் பின்னர் தளர்த்திக் கொண்டனர். நகரங்களிலிருந்தும், தமது கோட்டைகளிலிருந் தும் தொலைவில் இருக்கின்ற கிராமப் பகுதிகளில் வெளிப்ப டையாகவே கடைப்பிடிக்கப்படும் உள்நாட்டு மத நடை முறைகளைக் கண்டும் காணாதவர் போலிருந்தனர். இத்த கையதொரு சமூகப் பின்புலம் உருவாகிவரும் காலமான 18-ஆம் நூற்றாண்டில் சிவராத்திரிப் புராணம் இயற்றப்பட்டது என்று கொள்ளலாம். இந்த அரசியல், சமூகச் சூழலில், சிவ ராத்திரி புராணத்தை வெறுமனே ஒரு சமய புராணமாக மட்டு மல்லாமல், சைவப் பண்பாட்டு அடையாளத்தினை நுட்ப மாக வலியுறுத்தும் நூலாகவும் நோக்கலாம். தீவிரமான மதப் பிரசாரம் நிகழாவிட்டாலும் கூட, அரச ஆதரவுடன் திணிக்கப் பட்டதும், இவ்வுலக அதிகாரங்கள், செல்வாக்கு, வருவாய் தர வல்லதுமான கிறிஸ்தவத்திற்கும், நல்ல மறுபிறப்பு, முத்தி எனும் ஆன்மிகப் பயன்கள் தரும் சுதேசிய கிரியை, பக்தி முறைமைகளுக்கும் இடையில் பயணிக்கும் காலனிய ஆதிக்கத்திற்குட்பட்ட சமூகத்தின் வாழ்வியல் பிரதிபலிப்பா கவும் இந்நூலைப் பார்க்கலாம். மேலும், ஒரு பிராமண புத்தி ஜீவியால் எழுதப்பட்ட இந்நூலைப் பொதுசன அடிப்படையி லான எதிர்வினையாக அல்லாமல், மேட்டுக்குடியின் கால னித்துவ மத எதிர்ப்பின் வடிவமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.



**“ *18-ஆம் நூற்றாண்டில் சிவராத்திரிப் புராணம் இயற்றப்பட்டது. இந்த சிவராத்திரி புராணத்தை வெறுமனே ஒரு சமய புராணமாக மட்டுமல்லாமல், சைவப் பண்பாட்டு அடையாளத்தினை நுட்ப மாக வலியுறுத்தும் நூலாகவும் நோக்கலாம்.* ”**





காலனித்துவ எதிர்ப்பு யாழ்ப்பாணத்தில் சிறுபான்மையி னராக விளங்கிய பிராமண குலத்தைச் சேர்ந்த வரத பண்டி தரிடமிருந்து வருகிறது என்பதும் கவனத்திற்குரியது. ஒல் லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் சமூக மற்றும் மத வாழ்க்கையில் பிராமணர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இங்கு வாழ்ந்த டச்சுக் குரு பிலிப்பஸ் பால்டேயஸ் (Philippus Baldaeus) விவரித்தபடி, பிராமணர்கள் கல்வி, ஒழுக்கம், மதம் பற்றிய அறிவு, சிரத்தை என்பவற்றிற்காக மதிக்கப்பட் டனர். அவர்களில் சிலர் தங்கள் சொந்த மதப் பாரம்பரியங் களைப் பற்றி ஆழமாக அறிந்திருந்துடன், கிறிஸ்தவ மிஷன ரிகளுடன் இறையியல் விவாதங்களிலும் ஈடுபட்டனர். அத்தகைய ஒரு பிராமணர் பின்னாளில் கிறிஸ்தவ மதத் திற்கு மாறி, கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய நூல் ஒன்றினைக் கவிதை நடையில் எழுதினார் எனும் செய்தியும் உண்டு. சிவராத்திரி புராணத்தை இயற்றிய வரத பண்டிதரின் பின்னணியை ஓரளவு புரிந்துகொள்ள பால்டேயசின் குறிப் புகள் நமக்கு உதவுகின்றன. காசியிலிருந்து சுன்னாகத்தில் குடியேறிய, பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த அரங்கநா தரின் மகனான வரத பண்டிதர், பால்டேயஸ் விவரித்த பிராம ணர்களைப் போலவே, சமய அறிவு நிரம்ப வாய்க்கப்பெற் றவர். இலக்கண இலக்கியங்களிலும் மிக்க தேர்ச்சியுடை யவர். எனவே, காலனித்துவ ஆட்சி தந்த மதம் மற்றும் கலாசார சவால்களுக்குக் கற்றறிந்த பிராமண வர்க்கத்தின் பதிலாக அவரது படைப்புகளைப் பார்க்கலாம். சிவராத்திரி புராணம் மட்டுமல்லாமல், ஏகாதசி புராணம், குருநாத சுவாமி கிள்ளை விடுதூது, பிள்ளையார் கதை போன்ற பிற நூல்க ளையும் அவர் எழுதியுள்ளார்.

இலங்கையில் பரப்பப்பட்ட டச்சுச் சீர்திருத்த சபைக் கோட் பாடுகள் 16-ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவில் மார்ட்டின் லூதர் (Martin Luther), ஜோன் கல்வின் (John Calvin) போன் றவர்களால் வழிநடத்தப்பட்ட புரட்டஸ்தாந்து சீர்திருத்தத் தால் வடிவமைக்கப்பட்டவை. புரட்டஸ்தாந்து சீர்திருத்தவாதி கள் வேதாகமம் மட்டுமே இறுதி அதிகாரம் (Scripture alone as the ultimate authority), இரட்சிப்பு விசுவாசத்தின் மூலம் மட்டுமே வருகிறது (salvation by faith alone), அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம் (the priesthood of all believers) போன்ற கொள்கைகளை வலியுறுத்தினர். அவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரம், அதன் சடங்கு கள், மரியாள் (Mary) வழிபாடு, புனிதர்கள் (saints) வழிபாடு முதலானவற்றை நிராகரித்தனர். அவர்களைப் பொறுத்த வரை, இரட்சிப்பு என்பது கடவுளின் கிருபை (sola gratia), கிறிஸ்துவின் - solus Christus என்பவற்றால் மட்டுமே சாத்தி யமாகும். டச்சு சீர்திருத்த திருச்சபை, குறிப்பாக அதன் கல்வினிய வடிவத்தில், சில முக்கிய கோட்பாடுகளைச் சேர்த்துக் கொண்டது. இவற்றில் இரண்டை இங்கு சிறப் பாகக் குறிப்பிடலாம்.



- கடவுளின் முழுமையான இறையாண்மை (God's absolute sovereignty): மனித இரட்சிப்பு உட்பட படைப்புகள், வரலாறு, மனித விவகாரங்கள் என யாவுமே கடவுளின் முழுமையான கட்டுப்பாட்டிற்குட்பட்டது. இறைசித்தத்துக்கு அப்பாற்பட்டு எதுவுமே நடக்காது.

- முன்வகுத்தமைவு (predestination): கல்வினிய இறையியலில் முன்நிர்ணயம் அல்லது முன்வகுத்தமைவு என்பது முற்றிலும் தனது இறையாண்மை விருப்பத்தின்படி கடவுள், படைப்பிற்கு முன்னரே, சிலபேரை இரட்சிப்புக்காகவும் (salvation) ஏனையோரை நித்திய நரகத்திற்காகவும் (eternal damnation) தேர்ந்தெடுத்துள்ளார். இது மனிதரின் தகுதி அல்லது தெரிவின் அடிப்படையில் நிகழ்வது அன்று.

இந்த டச்சு சீர்திருத்தச் சபைக் கோட்பாடுகளுக்கு மாறான இன்னொரு இறையியற் பார்வையைச் சிவராத்திரி புராணம் அளிக்கிறது. கிரியைகள், உருவ வழிபாடு, ஆலய வழிபாடு, இறையருள் பெற்றோர் கதைகள் என்பன டச்சு கல்வினியத்தின் வேதாகமத்தில் மாத்திரம் கவனம் செலுத்துதல், உருவம் மற்றும் சடங்குகளை நிராகரிக்கும் பண்பு என்பவற்றிலிருந்து முழுமையாக வேறுபடுகின்றன. மேலும், இறையருள் கடவுளால் தேர்ந்தெடுத்தவர்களுக்கு மட்டுமே கிட்டுகிறது. அத்துடன், விசுவாசம் அல்லது நம்பிக்கை என்பது அந்தத் தேர்வின் வெளிப்பாடாகவே இருக்கிறது என்ற டச்சு சீர்திருத்த மதக் கோட்பாட்டிற்கு, இறையருளைத் தற்செயலாகவும், யார் வேண்டுமானாலும் பெறக்கூடும் என்ற சிவராத்திரி புராணக் கருத்து நேரடியாக முரண்படுகிறது. கடவுளுக்குப் பிரீதியான செயல்கள் முழுப் புரிதல் இல்லாமல், அறவொழுக்கம் தவறியவர்களால் தற்செயலாகச் செய்யப்பட்டாலும் கூட, இறை அருளை ஈர்க்க வல்லது என்பதை சிவராத்திரி புராணம் வலியுறுத்துகிறது. கல்வினியத்தில் ஒழுக்கத்தினின்றும் வழுவியவர்கள் இறையருள் பெற்றவர்களாக, அதாவது சுவர்க்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க முடியாது. ஒழுக்கம் என்பது ஒருவர் சுவர்க்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதன் அடையாளம். இக்கருத்தைச் சிவராத்திரி புராணம் மறுப்பதன் மூலம் இது கல்வினிய முன்வகுத்தமைவுக் கோட்பாட்டை எதிர்க்கும் ஒரு தீவிரமான இறையியலை முன்வைக்கிறது. சுருங்கக் கூறின், சிவராத்திரி புராணம் தான் எழுந்த காலத்தின் கருத்தியல் சூழலுக்கு எதிர்வினையாற்றியுள்ளதெனின் மிகையாகாது.

நிறைவாக, சிவராத்திரி புராணம் ஒரு பக்தி நூலாக மட்டுமன்றி, ஒல்லாந்தர் காலனித்துவ காலத்தில் தற்செயலான கருணையை சிறப்பிப்பதன் மூலமாக டச்சு சீர்திருத்த திருச்சபையின் முக்கிய மதக் கோட்பாடுகளுக்கு எதிர்வினையாகவும் செயற்படுகிறது. சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமோ அல்லது அந்நாளில் ஏதேனும் விதமாகத் தற்செயலாகப் பங்கேற்பதன் மூலமோ ஒருவர் பாவியாயிருப்பினும் நன்னிலை உறுவர் என்று அது கூறுகிறது. அத்துடன் தெய்வீகக் கருணை பிராமணனாயினும், அரசனாயினும், வேடனாயினும், புலையனாயினும் அனைவருக்குமானதே என்ற கருத்தையும் முன்னிறுத்துகிறது. இறையருளானது வருணம், சாதி, பால் என்பவற்றைக் கடந்த மானிட குலத்துக்குப் பொதுவானது எனும் கருத்து ஏலவே இந்து பக்தி மரபில் இருந்ததொன்றுதான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' போன்ற சாதி சமத்துவக் குரல்களைத் தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் கேட்கிறோம். ஆனால் அவை சாதியப் படிநிலைக்கு ஓர் உண்மையான சவால் என்று கொள்ள முடியாது. அதாவது, சமூக அடித்தட்டிலுள்ளவர்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் பக்தி இயக்கங்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பது முக்கியமான விமர்சனமாகத் தொடர்கிறது. அவ்வகையில் சிவராத்திரி புராணம் வருணத்திற்கு அப்பாற்பட்டவர்களையும் உள்ளடக்கியதாகத் தோன்றினாலும், அது பிராமணியக் கருத்துநிலைப்பட்ட தொன்ம அளவில் நின்றுவிடுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். இருப்பினும், காலனிய அதிகார வர்க்கம் சுதேச மொழி, சமய, பண்பாடுகளை ஓரங்கட்ட முயன்ற காலகட்டத்தில், தமிழ், சைவ மத அடையாளத்திற்கான இடத்தை அனைத்திந்திய (pan-indic) வடமொழிப் பௌராணிக மரபின் அடிப்படையில் சிவராத்திரி புராணம் மீட்டெடுக்கிறது.

அத்துடன், தற்செயலான கருணை எனும் கோட்பாட்டை உள்ளடக்கிய மாற்று இறையியலை முன்வைத்ததன் மூலம் காலனித்துவ மற்றும் கிறிஸ்தவ மத ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு நுண்வடிவ எதிர்ப்பை வெளிப்படுத்துகி



maithilithayanithy@thaiveedu.com

# அழிந்துபோன நாகரிகங்களை உயிர்த்தெழச்செய்த கல்வெட்டுகள்

**- ச.சத்யதேவன்**



1798 ஆம் ஆண்டில், நெப்போலியன் போனபார்ட் எகிப்தைக் கைப்பற்ற ஒரு படையெடுப்பைத் தொடங்கினார். இந்தியாவுக்கான பிரிட்டனின் இலாபகரமான வணிகப் பாதைகளைத் துண்டிப்பதோடு, கிழக்கில் பிரெஞ்சு ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதும் அவரது நோக்கமாக இருந்தது. 1798-ல் நெப்போலியன் எகிப்தைத் தாக்கியது ஒரு இராணுவ நடவடிக்கையாக மட்டுமே அமையவில்லை - அது பண்டைய உலகுபற்றிய நமது வரலாற்றுப் புரிதலையே மாற்றிய ரகசியப் புதிர்களைத் விடுவிக்கவும் உதவியது.

1799 ஆம் ஆண்டு கோடையில், நைல் நதியின் கரையின் ரொசெட்டா அப்போது என அழைக்கப்பட்ட( தற்போதைய ரஷீத்) நகருக்கு அருகில் ஒரு கோட்டையை மீண்டும் க ட்டிக்கொண்டிருந்த போது, லெப்டின ன்ட் பியர்-பிரான்சுவா பவுச்சார்ட் (Lieutenant Pierre-François Bouchard) சேற்றில் ஓரளவு புதைந்திருந்த ஒரு விசித்திரமான கருப்பு பாசால்ட் (black basalt) பலகையைக் கண்டார். சுமார் 3 அடி 9 அங்குல உயரமும் கிட்டத்தட்ட 1,700 பவுண்டுகள் எடையும் கொண்ட அந்தக் கல்லில் மூன்று வெவ்வேறு எழுத்து முறைகள்(scripts)பொறிக்கப்பட்டிருந்ததன.

ஹைரோகிளிஃப்ஸ் (Hieroglyphs): ஹைரோகிளிஃப்கள் என்பது எழுத்துக்களுக்குப் பதிலாக படங்களால் ஆன ஒரு வகை எழுத்து. பண்டைய எகிப்தில், மக்கள் இன்று நாம் செய்வது போல் எழுத்துக்களைப் பயன் படுத்தவில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் பறவைகள், கண்கள், பாம்புகள், கைகள் மற்றும் பிற வடிவங்களின் சிறிய சித்திரங்கள் /படங்களைப் பயன்படுத்தினர். இந்த சித்திர / பட எழுத்துக்கள் கோயில் சுவர்கள், கல்லறைகள் மற்றும் கற்களில் செதுக்கப்பட்டன. பெரும்பாலும் புனித இடங்களில் பயன்படுத்தப்பட்டதால் "புனித எழுத்து" என்று பொருள்படும் "ஹைரோகிளிஃப்" (hieroglyph) என்ற கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து இப்பெயர் வந்தது. அதுவரை யாராலும் ஹைரோ கிளிஃப்களைப் படிக்க முடியவில்லை


ஹைரோகிளிஃப்ஸ் - மின்னக்ட் கல்வெட்டு,
கி.மு. 14 ஆம் நூற்றாண்டு (Louvre Museum, Paris)


டெமோடிக் - ஒஸ்ட்ரகான் கல்வெட்டு (சுண்ணாம்புக்கல்)
கி.மு. 305–30., (Brooklyn Museum, Charles Edwin Wilbour Fund, 37.1821E)

டெமோடிக் (Demotic) : பண்டைய எகிப்திய மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் பயன் படுத்திய எளிமையான, வேகமான எழுத்து முறையாக டெமோடிக் எழுத்து இருந்தது. ஹைரோகிளிஃப்கள் கோயில்களிலும் பிரமிடுகளிலும் பயன்படுத்தப்பட்டன, ஆனால் டெமோடிக் என்பது கையெழுத்து போன்றது, கடிதங்கள், பொருட்களின் பட்டியல்கள், சட்ட ஆவணங்கள் மற்றும் கதைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. இது ஹைரோகிளிஃப்கள் போன்ற படங்களைப் பயன்படுத்தவில்லை, ஆனால் விரைவாக எழுதக்கூடிய மெல்லிய, பாயும் அடையாளங்களைக் கொண்டிருந்தது. "டெமோடிக்" என்பதுவும் சொல் "மக்களுடையது" என்று பொருள் படும் கிரேக்க சொல்லிலிருந்து வந்தது, ஏனெனில் அது சாதாரண எகிப்தியர்களின் அன்றாட எழுத்து வடிவமாக இருந்தது. இது அவர்களுக்கு வணிகம் செய்யவும், பதிவுகளை வைத்திருக்கவும், அன்றாட வாழ்க்கையில் எளிதாக தொடர்பு கொள்ளவும் உதவியது.

பண்டைய கிரேக்கம் (Ancient Greek) : பண்டைய கிரேக்கர்களால் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்ட இந்த எழுத்துமுறை, மாபெரும் அலெக்சாண்டர் எகிப்து உட்பட பல நாடுகளை வெற்றி கொண்ட பின்னர் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றது. அவரது மறைவுக்குப் பின்னர், அவரது தளபதிகளில் ஒருவரான டோலமி எகிப்தின் பாரோவாக(அரசராக)ஆட்சி ஏற்றார். இதன் விளைவாக, கிரேக்கம் எகிப்தில் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் முன்னணி நிலையைப் பெற்றது.


பண்டைய கிரேக்க கல்வெட்டு
கிமு 440/439 (New Acropolis Museum, Athens)

1798 ஆம் ஆண்டில், நெப்போலியன் போனபார்ட் எகிப்தைக் கைப்பற்ற ஒரு படையெடுப்பைத் தொடங்கினார். இந்தியாவுக்கான பிரிட்டனின் இலாபகரமான வணிகப் பாதைகளைத் துண்டிப்பதோடு, கிழக்கில் பிரெஞ்சு ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதும் அவரது நோக்கமாக இருந்தது. 1798-ல் நெப்போலியன் எகிப்தைத் தாக்கியது ஒரு இராணுவ நடவடிக்கையாக மட்டுமே அமையவில்லை - அது பண்டைய உலகு பற்றிய நமது வரலாற்றுப் புரிதலையே மாற்றிய ரகசியப் புதிர்களைத் விடுவிக்கவும் உதவியது.

1799 ஆம் ஆண்டு கோடையில், நைல் நதியின் கரையின் ரொசெட்டா அப்போது என அழைக்கப்பட்ட( தற்போதைய ரஷீத்) நகருக்கு அருகில் ஒரு கோட்டையை மீண்டும் கட்டிக் கொண்டிருந்தபோது, லெப்டினன்ட் பியர்-பிரான்சுவா பவுச்சார்ட் (Lieutenant Pierre-François Bouchard) சேற்றில் ஓரளவு புதைந்திருந்த ஒரு விசித்திரமான கருப்பு பாசால்ட் (black basalt) பலகையைக் கண்டார்.

சுமார் 3 அடி 9 அங்குல உயரமும் கிட்டத்தட்ட 1,700 பவுண்டுகள் எடையும் கொண்ட அந்தக் கல்லில் மூன்று வெவ்வேறு எழுத்து முறைகள்(scripts) பொறிக்கப்பட்டிருந்ததன.

இன்றைய கிரேக்க மொழியைப் போலவே, அக்காலத்திலும் எழுத்துக்களின் சேர்க்கையால் வார்த்தைகள் உருவாக்கப்பட்டன. எனவே சட்டங்கள், அரச ஆணைகள் போன்ற அனைத்து முக்கிய ஆவணங்களும் கிரேக்க மொழியில் பதிவு செய்யப்பட்டன. இதே காரணத்தால் தான் ரொசெட்டா கல்லில் கிரேக்க எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

கிமு 196 இல், எகிப்திய பாரோ ஐந்தாம் தொலமியின் பூசாரிகள் தங்கள் இளம் அரசரைக் கௌரவிக்கவும் முக்கியமான அறிவிப்புகளை வெளியிடவும் ஒரு பெரிய கருங்கல்லில் ஆணையொன்றைப் பொறிக்கும் போது இந்தக் கல் பின்னர் 'ரொசெட்டா கல்' என்று பெயர் பெறும் என்பதோ, 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு இது கண்டுபிடிக்கப்பட்டு, நூற்றாண்டுகளாக மர்மமாக இருந்த ஹைரோகிளிஃப்களைப் புரிந்துகொள்ள அறிஞர்களுக்கு வழிகாட்டும் என்றும் அவர்களில் யாரும் கற்பனைக்கூட செய்திருக்க மாட்டார்கள்.

தங்கள் செய்தி கடவுள்கள் (ஹைரோகிளிஃப்ஸ்), மக்கள் (டெமோடிக்), அரச நிர்வாகிகள் (பண்டைய கிரேக்கம்) அனைவருக்கும் புரியும் வகையில், ஒரே செய்தியை மூன்று வெவ்வேறு எழுத்துமுறைகளில் பொறித்தார்கள். அந்த கல்வெட்டையே 1799 ஆம் ஆண்டு கோடையில், "ரொசெட்டா" நகரில் பாலைவன மணலுக்கு அடியில் பிரெஞ்சு படை வீரர்கள் கண்டுபிடித்தார்கள்.

நெப்போலிய இராணுவத்துடன் வந்த எகிப்தின் பண்டைய அதிசயங்களை ஆவணப்படுத்தும் பிரெஞ்சு அறிஞர்கள், அது ஒரு முக்கியமான கலைப்பொருள் என்பதை விரைவாக உணர்ந்தனர். ரொசெட்டா கல் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அது கெய்ரோவிற்கு கொண்டு செல்லப்பட்டது. நெப்போலிய இராணுவத்துடன் வந்திருந்த ஜீன்-ஜோசப் மார்செல் (Jean-Joseph Marcel) மற்றும் நிக்கோலஸ்-ஜாக் கான்டே (Nicolas-Jacques Conté) போன்ற புத்திசாலி பிரெஞ்சு அறிஞர்கள் அதில் உள்ள எழுத்துக்களைப் பார்க்கத் தொடங்கினர். அவர்களால் இன்னும் பண்டைய எழுத்துக்களைப் படிக்க முடியவில்லை, ஆனால் அந்தக் கல் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் எழுத்தின் நகல்களையும் அச்சுகளையும் உருவாக்கி ஐரோப்பாவில் உள்ள மற்ற அறிஞர்களுக்கு அனுப்பினர்.

இது பண்டைய எகிப்தியர்களின் இழந்த மொழியை இறுதியாகப் புரிந்துகொள்ள உதவும் என்று அனைவரும் நம்பினர். அவர்களால் இன்னும் குறியீட்டை உடைக்க முடியவில்லை என்றாலும், கடந்த காலத்திற்கான ஒரு அற்புதமான திறவுகோலைக் கண்டுபிடித்ததை அவர்கள் அறிந்திருந்தனர்.

ஆனால் வரலாறு வேறு திட்டங்களைக் கொண்டிருந்தது. 1801 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் இராணுவம் எகிப்தில் நெப்போலியனின் படைகளைத் தோற்கடித்தது. ஆனால் வரலாறு வேறு திட்டங்களைக் கொண்டிருந்தது. 1801-ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் இராணுவம் எகிப்தில் நெப்போலியனின் படைகளைத் தோற்கடித்தது. சரணடைதல் ஒப்பந்தத்தின் (அலெக்ஸாண்ட்ரியா ஒப்பந்தம்) ஒரு பகுதியாக, ரொசெட்டா கல் உட்பட பிரெஞ்சுக்காரர்களால் சேகரிக்கப்பட்ட அனைத்து முக்கியமான கலைப்பொருட்களையும் ஒப்படைக்கும்படி ஆங்கிலேயர்கள் கோரினர். பிரெஞ்சு அறிஞர்கள் தங்கள் விலைமதிப்பற்ற கண்டுபிடிப்பைத் தக்கவைத்துக் கொள்ள விரும்பினர்; மேலும், ஒவ்வொரு நாடும் பங்கு பெறும் வகையில் அதைத் துண்டுகளாக உடைக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்தனர்! ஆனால் பிரிட்டிஷ் ஜெனரல் ஜான் ஹெலி-ஹட்சின்சன் (British General John Hely-Hutchinson) அலெக்ஸாண்ட்ரியா ஒப்பந்தத்தின் படி அந்தக் கல்லை முழுமையாக ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தினார். தோற்கடிக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர்களுக்கு, தொல்பொருளியலின் மிகப்பெரிய பொக்கிஷங்களில் ஒன்றாக மாறவிருந்த அதை ஒப்படைப்பதைத் தவிர வேறு வழியில்லை

ஆங்கிலேயர்கள் தங்கள் 1,700 பவுண்டு எடையுள்ள பரிசை HMS Egyptienne என்ற கப்பலில் கவனமாகப் பொதித்து அனுப்பினர். நீண்ட கடல் பயணத்திற்குப் பிறகு, 1802-ஆம் ஆண்டில், ரொசெட்டா கல் லண்டனை அடைந்து பிரிட்டிஷ் அருங் காட்சிய



கத்தில் (British Museum) வைக்கப்பட்டது அது இன்றும் அங்கேயே உள்ளது. பிரிட்டிஷ் படையினரிடம் அதை ஒப்ப டைப்பதற்கு முன்பாகவே, பிரெஞ்சுக்காரர்கள் அதன் நகல்க ளையும் வார்ப்புகளையும் தயாரித்திருந்தனர். இதனால், ஐரோப்பாவிலுள்ள அறிஞர்கள் அதிலுள்ள செய்திகளைத் தொடர்ந்து ஆய்வு செய்ய முடிந்தது.

பண்டைய கிரேக்கம் புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகவும், பைசண்டைன் பேரரசின் அதிகாரப்பூர்வ மொழியாகவும் விளங்கியது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற சிந்தனை யாளர்களின் மொழியாக இருந்த இது, தத்துவம், அறிவியல் மற்றும் கல்வி துறைகளில் முக்கிய பங்கு வகித்தது. மறும லர்ச்சியின் போது, ஐரோப்பா முழுவதும் உள்ள அறிஞர்கள் பண்டைய உலகின் ஞானத்தை மீண்டும் கண்டறிய கிரேக் கத்தைப் படித்தனர்.



அறிஞர்கள் ஏற்கனவே பண்டைய கிரேக்க மொழியைப் புரிந்துகொண்டி ருந்ததால், பழக்கமான கிரேக்க பகுதியை அறியப்படாத ஹைரோகிளிஃபிக் மற்றும் டெமோடிக் எழுத்துக்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம், புதிரான அக்குறியீடுகளை புதிரவிழ்ப்பு செய்து (decode) புரிந்துகொள்ள முடியுமென்று அவர்கள் நம்பினர்.

இறுதியாக 1820-களில் ஜீன்-பிரான்சுவா சாம் போலியன் (Jean-François Champollion) தலைமுறைகள் சாத் தியமற்றதாகக் கருதிய ஹைரோ கிளிஃப்களின் இரகசியத்தை புதிர விழ்க்கும் வழியை கண்ட டைந்தார். 1,400 ஆண்டுகளுக்கும் மேலாக அமைதியாக இருந்த பாரோக்களின் புனித எழுத்துக்கள் மீண்டும் பேசி, காலத்தின் குரல்களை எழுப்பின. இந்த மகத்தான கண்டுபி டிப்பு வெறும் வார்த்தைகளை மொழிபெயர்க்கவில்லை - இது சகாப்தங்களுக்கு இடையிலான தடைகளை உடைத்து, மனி தகுலத்தின் மிக அற்புதமான நாகரிகங்களில் ஒன்றின் ஞானம், மகிமை மற்றும் ரகசியங்களால் நவீன மனதை நிரப் பியது. நீண்ட காலமாக மர்மத்தில் புதைந்து கிடந்த பண் டைய உலகம் மீண்டும் அதன் குரலைக் கண்டறிந்தது.

ரொசெட்டா கல்லைப் பயன்படுத்தி எகிப்திய ஹைரோகி ளிஃப்களைப் புரிந்துகொண்ட சுமார் பதினைந்து ஆண்டுக ளுக்குப் பிறகு, வரலாறு இதேபோன்ற ஒரு மொழியியல் மைல்கல்லை வெளிப்படுத்தியது. இம்முறை எகிப்தில் அல்ல, மேற்கு ஈரானின் மலைப்பகுதிகளில். 1835 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியும் மொழியியலாளருமான ஹென்றி க்ரெஸ்விக் ராவ்லின்சன் (Henry Creswicke Rawlinson), ஒரு பாறை முகத்தில் உயரமாக செதுக்கப்பட்ட ஒரு மகத்தான பழங்கால கல்வெட்டைப் ஆராயத் தொடங்கினார். அவரது முயற்சிகள் இறுதியாக கியூனிஃபார்ம் (Cuneiform script) எழுத்துக்களைப் புரிந்துகொள்வதில் திருப்புமுனையாக அமைந்தன.

பெஹிஸ்டன் கல்வெட்டு (Behistun Inscription) என அழைக் கப்படுகின்ற இக்கல்வெட்டு தரையில் இருந்து சுமார் 100 மீட்டர் (330 அடி) உயரத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இது 15 மீட்டர் (49 அடி) உயரமும் 25 மீட்டர் (82 அடி) அகலமும் கொண்டது. ஈரானின் ஹெர்மான்ஷா மாகாணத்தில் (Kermanshah Province) உள்ள இன்றைய பிசோட்டனுக்கு (Bisotun) நகருக்கு அருகிலுள்ள ஜாக்ரோஸ் (Zagros) மலைத் தொடரின் பாறையில் அமைந்துள்ள இந்த பாறை ஒரு காலத்தில் பண்டைய நகரங்களான பாபிலோன் (Babylon) மற்றும் எக்படானாவை (Ecbatana) இணைத்த வரலாற்றுப் பாதையில் அமைந்துள்ளது. ரொசெட்டா கல்லைப் போலவே, பெஹிஸ்டன் கல்வெட்டும் மூன்று வெவ்வேறு மொழிகளில் ஒரே செய்தியை வழங்குகிறது

ராவ்லின்சனின் காலத்திற்கு முன்பே ஐரோப்பிய அறிஞர்கள் பெஹிஸ்டன் கல்வெட்டு (Behistun Inscription) பற்றி அறிந்தி ருந்தனர். ரொசெட்டா கல் கண்டுபிடிக்கப்படுவதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் தூதர் சர் ராபர்ட் ஷெர்லி (Robert Sherley) 1598 ஆம் ஆண்டில், ஆஸ்திரிய ஹாப்ஸ் பர்க்குகளுக்கான ஒரு இராஜதந்திரப் பணியில் (துருக்கிக்கு எதிரான போர் குறித்து பாரசீக ஷா அப்பாஸிடம் பேசுவ தற்காக) சஃபாவிட் பெர்சியாவிற்கு (Safavid Persia - தற்போதைய ஈரான்) இந்தப் பகுதி வழியாகச் சென்றார். அவரது உதவியாளர்களில் ஒருவரான ஏபெல் பின்சன், பெஹிஸ்டன் கேரவன்சராய் (Caravanserai - கேரவன்சராய் என்பது ஆசியா மற்றும் வட ஆபிரிக்காவின் பண்டைய வர்த் தகப் பாதைகளில், குறிப்பாக பட்டுப்பாதையில், பொது வாகக் காணப்படும் சாலையோர விடுதியாகும். இவை பயணி களுக்கும் அவர்களின் விலங்குகளுக்கும் ஓய்வும் தங்குமி டமும் வழங்கின. இவ்வகை கட்டமைப்புகள் வணிகம், கலாச்சார பரிமாற்றம் மற்றும் ஓய்வுக்கான முக்கிய மையங்களாக இரு ந்தன) அருகே வியத்தகு பாறை சிற்பத்தைக் கண்டதாகப் பதிவு செய்தார்.

ஆனால் ஷெர்லியும் அவரது குழுவினரும் அது உண்மையில் என்னவென்று புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் இந்தச் சிற்பங்களைக் கிறிஸ்தவ உருவங்களாகத் தவறாகப் புரிந்து கொண்டனர். சிலர் அவை பைபிளிலிருந்து வரும் காட்சிகளை சித்தரிப்பதாக நம்பினர்.

இதற்கடுத்து, 1604ஆம் ஆண்டில், இத்தாலிய பயணி பியட்ரோ டெல்லா வாலே பெஹிஸ்டன் கல்வெட்டைக் கண்டறிந்தார். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டில் உள்ள சிற்பங்களை முதன்முறையாக வரைந்தவர்களில் அவரும் ஒருவராக அறியப்படுகிறார். கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களின் உண்மையான பொருளை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அவரது துல்லியமான வரைபடங்களும் குறிப்புகளும் பின்னாளில் வந்த அறிஞர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமைந்தன. இந்த முக்கியமான ஆவணங்களின் அடிப்படையில்தான் பிற்காலத்தில் இக்கல்வெட்டின் உண்மையான பொருள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் கண்டறியப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியன் மத்திய கிழக்கில் தனது செல்வாக்கை விரிவுபடுத்த முயன்றார். அதே நேரத்தில், பிரிட்டன் மற்றும் ரஷ்யாவின் சாம்ராஜ்ய ஆதிக்கத்தை எதிர்கொள்வதற்காக, பிரெஞ்சு இராணுவ ஜெனரல் அன்டோயின் சார்லஸ் கார்டேன் (General Antoine Charles Gardanne) பெர்சியாவுக்கு (தற்போதைய ஈரான்) அனுப்பப்பட்டார்.

இந்த இராஜதந்திரப் பணியின் போது, ஜெனரல் கார்டேன் பெஹிஸ்டன் கல்வெட்டை (Behistun Inscription) கண்டுபிடித்தார். ஒரு இராணுவ அதிகாரியாக இருந்தாலும், அவருக்கு தொல்பொருளியல் மீது ஆர்வம் இருந்தது. இதனால், அவர் இந்த வரலாற்று இடத்தை ஆராயும் வாய்ப்பு கிடைத்தது.

ஆனால், கார்டேன் கல்வெட்டின் உண்மையான முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அதை இயேசு கிறிஸ்து மற்றும் அவரது பன்னிரண்டு சீடர்களுடன் தொடர்புடைய கிறிஸ்தவக் கல்வெட்டு என்று தவறாக விளக்கினார். இந்த தவறான கருத்து பின்னர் ஐரோப்பிய அறிஞர்களிடையே பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1818 செப்டம்பரில், பிரிட்டிஷ் கலைஞர் மற்றும் பயணி சர் ராபர்ட் கெர் போர்ட்டர் (Sir Robert Ker Porter) பெஹிஸ்தூன் பாறையில் உள்ள சிற்பங்களை ஆய்வு செய்ய முயன்றார். அவர் பாறையின் ஒரு பகுதிக்கு ஏறி, அங்குள்ள புடைப்புச் சிற்பங்களை (relief sculptures) அடையாளம் கண்டு, அவற்றின் நீர்வண்ண ஓவியங்களை (watercolor paintings) வரைந்தார். எனினும், கல்வெட்டின் முழுப் பகுதியையும் அவரால் அணுக முடியவில்லை.

கல்வெட்டில் உள்ள பண்டைய எழுத்துக்களை (ancient script) படிக்கத் தேவையான மொழியறிவு மற்றும் கருவிகள் இல்லாததால், அவர் இந்தக் காட்சியை அசீரிய மன்னர் ஷால்மனேசர் III (Assyrian King Shalmaneser III, 9ஆம் நூற்றாண்டு BC) மற்றும் இஸ்ரேலின் பத்து தொலைந்த பழங்குடியினர் (Ten Lost Tribes of Israel) ஆகியோரை சித்தரிப்பதாகத் தவறாக கருதினார்.

ஷால்மனேசர் III கிமு 9ஆம் நூற்றாண்டில் இன்றைய ஈராக்கை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த சக்திவாய்ந்த அசீரிய மன்னராக இருந்தார். இந்த தவறான விளக்கம் அசீரிய வரலாற்று ஆவணங்கள் (Assyrian records) மற்றும் பைபிள் குறிப்புகளால் (Biblical references) தூண்டப்பட்ட ஒரு கற்பனைக் கோட்பாடாக இருந்தாலும், இது பெஹிஸ்தூன் கல்வெட்டின் மீது ஐரோப்பியர்களின் ஆர்வத்தைக் கணிசமாக அதிகரித்து, பின்னாளில் விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளுக்கு வழிவகுத்தது.

திறமையான பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி மற்றும் ஆழ்ந்த ஆர்வமுள்ள அறிஞராக இருந்த ஹென்றி க்ரெஸ்விக் ராவ்லின்சன், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணிக்காக பெர்சியாவில் (இன்றைய ஈரான்) நியமிக்கப்பட்டார். ஆனால், உத்தியோகபூர்வ கடமைகளைவிட, பண்டைய மொழிகள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி மீது கொண்டிருந்த அவரது ஆழ்ந்த ஈர்ப்பு, அவரை அறிவுப் பயணத்தில் தனித்து நிறுத்தியது.

இது தற்செயலாக நிகழ்ந்ததல்ல. ராவ்லின்சன், பயணிகள் எழுதிய குறிப்புகள், மற்றும் முன்னோடி ஆய்வுகள் ஆகிய



பழைய பாரசீகம் பிஹிஸ்டன் கல்வெட்டு



வற்றின் மூலம் பெஹிஸ்டன் கல்வெட்டைப் பற்றி முன்னரே அறிந்திருந்தார். பல அறிஞர்கள் இதன் முக்கியத்துவத்தை அறிந்திருந்தாலும், அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, ராவ்லின்சன் தீவிரமாக இக்கல் வெட்டை ஆய்வு செய்ய முன்வந்தார்.

அதிக உயரத்தில், செங்குத்தான பாறையில் அமைந்திருந்த கல்வெட்டை நகலெடுக்கும் பணி மிக ஆபத்தானதாக இருந்த போதிலும், ராவ்லின்சன் அதனை துணிச்சலுடன் ஏற்றுக் கொண்டார். அவர் இக்கல்வெட்டைப் படிக்க கடினமான முயற்சிகளை மேற்கொண்டார். செங்குத்தான பாறையில் ஏறி, சில சமயங்களில் கயிறுகளின் உதவியுடன் தொங்கியபடி, கல்வெட்டின் நகலெடுக்கும் பணியை மேற்கொண்டார். அவரது இராணுவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மீதான ஆர்வம் இணைந்து, இந்தப் பணியை வெற்றிகரமாக முடிக்க உதவியது. இவ்வாறு, அவர் மேற்கொண்ட பணி வரலாற்றின் ஓட்டத்தை மாற்றிய ஒரு முக்கியமான மைல்கல்லாக மாறியது.

கி.மு 520 ஆம் ஆண்டு பாரசீக மன்னர் டேரியஸ் I (Darius I) ஆல் உருவாக்கப்பட்ட இந்த கல்வெட்டு, அவர் ஆட்சிக்கு வந்த விதமான வரலாற்றைக் கூறுகிறது. இது மூன்று மொழிகளில் எழுதப்பட்டது:

1. பழைய பாரசீக மொழி (Old Persian) : 2,500 ஆண்டுக ளுக்கு முன்பு பாரசீகப் பேரரசில் பேசப்பட்ட தொன்மை யான மொழி இது. மன்னர்கள் தங்கள் கல்வெட்டுகள், சட் டங்கள் மற்றும் செய்திகளை இந்த மொழியில் கல்லில் செதுக்கினர். பெஹிஸ்டன் கல்வெட்டு இதற்கு சிறந்த உதாரணம். இன்றைய ஈரானியர்கள் பேசும் பாரசீக மொழி, இந்த பழைய மொழியின் மேம்பட்ட வடிவம் தான்!

2. எலாமைட் மொழி (Elamite) : இன்றைய தென்மேற்கு ஈரானின் ஏலம் (எலாம்) பகுதியில் பேசப்பட்ட பண்டைய மொழி. இந்த மொழி, பழைய பாரசீக மொழிக்கு முன்னரே (Old Persian) ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பிருந்தே பயன்பாட்டில் இருந்தது. எலாமைட் மொழி பழைய பாரசீக (Old Persian) மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. எனினும், இவை இரண்டும் பண்டைய ஈரானின் ஒரே பிராந்தியத்தில் நீண்ட காலம் ஒன்றாகப் பயன்பாட்டில் இருந்தன. இன்று, எலாமைட் அந்தப் பகுதியின் மிகப் பழமையான எழுத்து மொழிகளில் ஒன்றாக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

3. பாபிலோனியன் மொழி (Babylonian) : பாபிலோனிய மொழி என்பது பண்டைய காலத்தில் பாபிலோன் நகரத்தில் வாழ்ந்த மக்கள் பேசின ஒரு பழமையான மொழியாகும். இந்த நகரம் இப்போது இருக்கும் ஈராக் நாட்டின் பகுதி யில்தான் இருந்தது. பாபிலோனியர்கள், தங்கள் மொழியை எழுதுவதற்கு கியூனிஃபார்ம் எனப்படும் சிறிய மூலை வடிவ சின்னங்களை களிமண் பலகைகளில் அழுத்தி எழுதினார்கள். இது மிகவும் பழமையான எழுத்து முறை. பாபிலோனிய மொழி உலகில் முதலில் எழுதப் பட்ட மொழிகளில் ஒன்றாகும், அதனால் இது வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

ரொசெட்டா கல் ஒரே செய்தியை மூன்று மொழிகளில் பதிவு செய்து, எகிப்திய ஹைரோகிளிஃப்களைப் புரிந்துகொள்ள அறிஞர்களுக்கு உதவியது போல, பெஹிஸ்டன் கல்வெட்டிலும் ஒரே செய்தி மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்ததால் தொலைந்து போன கியூனிஃபார்ம் (cuneiform) எழுத் துக்களை ஒப்பிட்டு புதிரவிழ்ப்பு (decode) செய்வதில் ஒரு முக்கிய திறவுகோலாக செயல்பட்டது.

நாம் இன்று எழுதும் எழுத்துக்கள் வட்டமாகவும் நேரான கோடுகளாகவும் இருக்கும். ஆனால், பண்டைய நாட்களில் மக்கள் எழுத்துகளை வேறு விதமாகவே எழுதினார்கள். அவர்கள் மென்மையான களிமண் பலகைகளை எடுத்துக் கொண்டு, ஒரு சிறிய ஆப்பு வடிவ கருவியால் சிறு சின் னங்களை அழுத்தி எழுதினர். இவ்வாறு அழுத்தப்பட்ட சின் னங்கள் தான் "கியூனிஃபார்ம்" (Cuneiform) - அதாவது ஆப்பு வடிவ எழுத்து என அழைக்கப்படுகிறது.

பண்டைய மெசொபொடேமியா பகுதியில் மக்கள் பயன்ப டுத்திய மிகவும் பழமையான எழுத்து முறையான கியூனிஃ





பாபிலோனிய மொழி கல்வெட்டு செர்க்சஸ் I கிமு 5 ஆம் நூற்றாண்டு (இன்றைய துருக்கியில் வான் ஏரிக்கு அருகில் உள்ள வான் கோட்டையை ஒட்டிய மலையின் தெற்கு சரிவில் அமைந்துள்ளது)

பார்ம் (Cuneiform) எழுத்துமுறை பல பழமையான நாகரிகங்கள் பயன்படுத்திய ஒரு பொதுவான எழுதும் முறை. இதைப் பல்வேறு மக்கள் தங்கள் சொந்த மொழியை எழுத வித்தியாசமான சின்னங்களுடன் பயன்படுத்தினார்கள். இதைப் பயன்படுத்தி அவர்கள் வணிகம், சட்டங்கள், கதைகள் என்று பல தகவல்களை எழுதினர். களிமண் காய்ந்ததும், அந்த எழுத்துக்கள் நீண்ட காலம் பாதுகாப்பாக இருந்தன.

கியூனிஃபார்ம் எழுத்துமுறையை சுமேரியர்கள் கிமு 3500ல் கண்டுபிடித்தனர். பின்னர் அக்காதியர்கள் தங்கள் மொழிக்கு ஏற்ப இதை மாற்றியமைத்தனர். இதைத் தொடர்ந்து பாபிலோனியர்கள் தங்கள் அக்காதிய மொழியின் பாபிலோனிய வடிவத்திற்கு ஏற்ப பயன்படுத்தினர். அசீரியர்கள் தங்கள் அசீரிய பாணியில் எழுதினர். எலாமியர்கள் தங்கள் எலாமைட் மொழிக்கான தனித்துவமான கியூனிஃபார்ம் சின்னங்களை உருவாக்கினர். ஹிட்டைட்டுகள் (தற்கால துருக்கி பகுதி) தங்கள் மொழியை எழுத இதைப் பயன்படுத்தினர். உகரிட் மக்கள் தங்களுக்கென சுருக்கப்பட்ட உகரிட் கியூனிஃபார்ம் முறையை உருவாக்கினர்.



எலாமைட் கியூனிஃபார்ம், நராம்-சின் வெற்றி கல்வெட்டு
கிமு 2254–2218 (Louvre Museum, Paris)

கிமு 3200 ஆம் ஆண்டில் பண்டைய மெசபடோமியாவில் தொடங்கிய கியூனிஃபார்ம் எழுத்து, 3,000 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்தது. இருப்பினும், கிபி 1 ஆம் நூற்றாண்டின் இறுதியில், அது படிப்படியாக மறைந்துவிட்டது. பாபிலோன், அசீரியா போன்ற மெசபடோமியப் பேரரசுகளின் வீழ்ச்சி, புதிய அரசியல் சக்திகளின் எழுச்சி மற்றும் அராமைக், கிரேக்கம், லத்தீன் போன்ற எளிதான எழுத்துமுறைகளுக்கான மாற்றம் ஆகிய காரணிகள் இதற்கு வித்திட்டன. கிபி 75 ஆம் ஆண்டைச் சேர்ந்த அசீரியக் கல்வெட்டே கியூனிஃபார்மின் கடைசி சான்றாகக் கருதப்படுகிறது. இவ்வாறு, மனித வரலாற்றின் பழமையான மற்றும் நீண்ட காலம் நீடித்த எழுத்து முறைகளில் ஒன்று காலத்தின் அலைகளில் அமைதியாக மறைந்தது.

ஹென்றி ராவ்லின்சன் கல்வெட்டின் பழைய பாரசீகப் பகுதியைப் படிப்பதன் மூலம் தொடங்கினார். இந்த மொழி ஒப்பீட்டளவில் நன்கு அறியப்பட்டதாகவும், அதன் எழுத்து மற்ற இரண்டை விட எளிமையானதாகவும் இருந்ததால், அதைப் புரிந்துகொள்வது எளிதாக இருந்தது. முதலில் பழைய பாரசீகத்தை (Old Persian) படித்து, அந்த எழுத்துக்களை டேரியஸ் (Darius),மற்றும் செர்க்சஸ் (Xerxes) போன்ற அரசர்களின் பெயர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அதன் எழுத்துமுறையைப் புரிந்துகொண்டார்.அவர் பழைய பாரசீகத்தை வெற்றிகரமாக புதிரவிழ்ப்பு செய்தவுடன், ராவ்லின்சனும் பிற அறிஞர்களும் எலாமைட் மற்றும் பாபிலோனிய பிரிவுகளைப் புரிந்துகொள்ள வழிகாட்டியாக அதைப் பயன்படுத்தினர்.

மூன்று மொழிகளும் கிட்டத்தட்ட ஒரே செய்தியை வெளிப்படுத்தியதால், அவர்கள் முழு சொற்களையும் அர்த்தங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, படிப்படியாக கியூனிஃபார்ம் அடையாளங்களின் அர்த்தத்தை வெளிப்படுத்தினர்.

இந்தக் கண்டுபிடிப்பு, உலகின் மிகப்பழமையானதும் செல்வாக்கு மிக்கதுமான நாகரிகங்களில் ஒன்றான மெசபடோமியாவின் மறைந்துவிட்ட பண்பாட்டை மீண்டும் புரிந்துகொள்ள மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்தது. பெஹிஸ்டன் கல்வெட்டின் எழுத்துகள் புதிரவிழ்க்கபட்டதும், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் புரியாமல் இருந்த அக்காடியன் மற்றும் எலாமைட் மொழிகளை வாசிக்க முடியும் சூழ்நிலை உருவானது. இதன் மூலம், உலகின் பல அருங்காட்சியகங்களிலும் அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட, களிமண் பலகைகளில் கியூனிஃபார்ம் எழுத்தில் பதிக்கப்பட்டிருந்த நூல்கள் படிப்படியாக மொழிபெயர்க்கப்பட்டன.

இந்த வரலாற்றுப் புரிதல், கில்காமேஷின் காவியம் போன்ற உலகின் முதல் இலக்கியங்களில் ஒன்றையும், ஹமுராபியின் குறியீடு எனும் மனித சமுதாய வரலாற்றின் ஆரம்ப சட்டக் கோவையை நம்மிடம் கொண்டு வந்தது. இலக்கியம், சட்டம் மட்டுமல்லாது, பண்டைய மெசபடோமிய மக்களின் அன்றாட வாழ்வு, வர்த்தகம், மருத்துவம், வானியல், மதசடங்குகள் பற்றிய பலவிதமான தகவல்களும் இதன் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இதனூடாகத்தான் "அசிரியோலஜி" (Assyriology) எனும் பண்டைய மெசபடோமிய மொழிகளும் கலாச்சாரங்களும் குறித்த கல்விசார் ஆய்வு துறை உருவாகியது.

இன்று, ரொசெட்டா கல்லைப் போலவே, பெஹிஸ்டன் கல்வெட்டும் வெறும் மொழியியல் சாதனமாக மட்டுமல்லாமல், மனிதத் தத்துவங்களையும் பண்பாட்டையும் மீட்டெடுத்துள்ள ஒரு உலக கலாச்சாரச் சின்னமாகவும் போற்றப்படுகிறது.

யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாக (UNESCO World Heritage Site) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த கல்வெட்டு, மனித வரலாற்றைப் பற்றிய நமது புரிதலை மறுவடிவமைக்க, கல்லில் செதுக்கப்பட்ட சில சொற்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எதிரொலித்து வருகின்றன என்பதை இந்தக் கல்வெட்டுகள் நமக்கு நினைவூட்டுகின்றன.



sathiyathevan.s@thaiveedu.com



11

# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

### சென்ற இதழில்...

- இன்று, இலங்கைத் தீவின் புராதன வரலாற்றை ஆராய்வதற்குரிய சான்றுகள் மூன்றினுள் முதலாவது சான்றான, அரச வம் சாவழியினர் வரலாற்றை மைய மாகக் கொண்டு, நாடோடிப் பாடல்களிலிருந்து எழு தப்பட்ட மகாவம்சம் என்னும் நூல் பற்றிய ஆய்வு தொடக்கிவைக்கப்பட்டது.
- மகாவம்சத்தின் ஆசிரியர், அதன் அமைப்பு, அந்நூல் எழுதப்பட்ட வரலாறு முதலியன எடுத்து வரப்பட்டன.
- மகாவம்சம் கூறும் 37 அத்தியாயங்களில் முதல் இரு அத்தியாயங்களின் சுருக்கம் எடுத்துவரப்பட்டன.
- ஈழத்து வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத் தின் உண்மைத் தன்மை ஆராயப்படுகிறது. இதன் விரிவாக்கம் இவ்வி தழில் தொடர்கிறது.

### மகாவம்சம் இரண்டாம் அத்தியாயம்:
### (மகாவம்சம் – தமிழாக்கம் எஸ். சங்கரன்)

இரண்டாம் அத்தியாயம் மகா சம்மத வம்சம் பற்றிப் பேசு கிறது. இம் முனிவர் மகா சம்மத வம்சத்தில் உதித்தவர். மகா சம்மதன் முதலாக 28 பேர்களும் அளவு கடந்த காலம் குஸாவதி, ராஜக்ரகம், மிதிலை ஆகிய இடங்களில் ஆண்டார் கள். அவர்களைத் தொடர்ந்து 100, 56, 60, 80 என்று சொல் லப்படுகின்ற எண்ணிக்கையிலான அரசர்கள் ஆண்டதாக இந்த இரண்டாம் அத்தியாயம் கூறுகிறது.

'ஒன்பது மகாதேவர் முதலாக எண்பத்து நான்கு ஆயிரம், மேலும் காலராஜ நாகர் முதலான எண்பத்து நாலாயிரம், ஒக்காடர் வரையிலான பதினாறு என மகா ஸம்மதர் மரபில் தத்தம் குழுவின் வரிசையாக அவரவர்க்கான தலை நகரில் இருந்துகொண்டு ஆட்சி செய்தனர்' - என்று கூறப்படும் பகுதி.

இறையனார் களவியலுரையில் சங்க காலத்திற்கு முன்னர் ஆண்ட மன்னர், புலவர்கள், அவர்கள் பாடிய நூல்கள் தொடர்பாகக் கூறப்படும் தகவல்களுடன் ஒப்ப நோக்கக் கூடியதாக இருக்கிறது. இது பண்டைக் காலத்தில் முன்னைய இலக்கியங்களை நினைவு கொள்ளும் முறை போலும்.

மகா சம்மதனுடைய வம்சத்தில் இம் மகாஞானியும் தோன்றி னார். பிம்பிசாரனும் போதிசத்துவராகிய இளவரசர் சித்தார்த் தரும் நண்பர்கள். போதிசத்துவர் பிம்பிசாரனை விட ஐந்து வயது மூத்தவர். போதிசத்துவர் தந்தையின் வீட்டை விட்டுச் சென்றபோது அவருக்கு வயது 29. ஆறு ஆண்டுகள் முயன்று அவரது 35-ஆம் வயதில் ஞானம் பெற்றார். பிம்பிசாரன் பட்ட மேற்றபின் அவனுக்குத் தம் மார்க்கத்தைப் புத்தர் போதித் தார். பிம்பிசாரன் அஜாதசத்துரு தந்தையைக் கொன்று ஆட் சிக்கு வந்தான். அஜாதசத்துரு அரசனாகி எட்டாம் வருடம் புத்தர் நிர்வாணம் அடைந்தார்.

ஒழுக்கத்தின் உயர் நிலையை எட்டிய புத்தர் நிலையாமை யையின் சக்திக்கு அடிபணிந்தார்.

### மூன்றாம் அத்தியாயம்:

#### ‣ *முதல் மகாசபை:*

84 ஆண்டுகள் உலகில் வாழ்ந்திருந்து தமது கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றியபின் குஸிநாகரத்தில் (நேபா ளத்தில் ஒரு நகர்) வைகாசிப் பௌர்ணமி தினத்தில் இவ் வுலகை நீத்தார். எழுநூறாயிரம் புத்த பிக்குகள், சத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர், தேவர்கள் என்று அனைவரும் கூடினர், மகா காச்யப தேர் அப்போது சங்கத் தேரராக இருந் தார். உரிய சடங்குகள் செய்யப்பட்டன.

புத்தரின் தர்மக் கோட்பாடுகளைத் தொகுப்பதற்கான புத்த ரின் அனுமதி இருந்தது. புத்தரது போதனைகளைத் தொகுப் பதற்காகச் சிறந்த ஐந்நூறு பிக்குகள் நியமிக்கப்பட்டனர். ஆனந்த தேரர் என்பவர் புத்தரின் தர்மக் கோட்பாடுகளைத் தொகுக்கும் பணியைத் தொடங்கினார். மண்டபம் அமைக்கப் பட்டது. பிக்குகள் குழுமியிருந்தனர். ஆனந்த தேரர், பிக்கு கள் அடையக்கூடிய உன்னத நிலையாகிய 'அரஹந்தர்' நிலையை அடைந்தார்.

'விநயம்' பற்றிய கேள்விகளுக்கு விளக்கம் கொடுக்க உபாலி என்பவர் நியமிக்கப்பட்டார். கேள்விகளை மகா தேரரான மகா காச்யபர் கேட்க உபாலி தேரர் விளக்கம் கொடுத்தார். 'தர்மம்' பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆனந்த தேரர் விளக்கம் கொடுத்தார். இவ்வாறாக ஏழு மாத காலத்தில் உலகைக் காப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தர்மக் கோட் பாடுகளைத் தொகுக்கும் பணி நிறைவேறியது. சபை முடிந்த தும் இதனால் பெருமகிழ்வடைந்த பூமி ஆறு முறை அதிர்ந்

தது. உலகெங்கும் பல வழிகளிலும் பலவிதமான அற்புதத் தோற்றங்கள் எழுந்தன.

தேரர்களால் தொகுக்கப்பட்டமையால் இது தேரவாதம் என்று அழைக்கப்பட்டது.

## நான்காம் அத்தியாயம்:

### *இரண்டாம் மகாசபை:*

முதலாம் மகாசபை நடந்ததன் பின், வடநாட்டில் பல மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராகத் தந்தையரைக் கொன்று ஆட்சி செய்தனர். 'தந்தையைக் கொல்பவர்கள் வம்சமான' இவர்கள் அகற்றப்பட்டு, சிசுநாகன் என்னும் மந்திரி அரசனாகத் தேர்ந்து எடுக்கப்பட்டான். சிசுநாகன் 18 ஆண்டுகளும் அவன் மகன் காலசோகன் 28 ஆண்டுகளும் ஆண்டனர். காலசோகன் ஆட்சியின் 10-ஆம் ஆண்டில் புத்தர் நிர்வாணமடைந்து நூறாண்டுகள் கழிந்திருந்தன.

அச்சமயம் 'வஜ்ஜி' பிரிவைச் சேர்ந்த பிக்குகள், வைசாலியில் பத்து அம்சக் கொள்கைகளை நியாயமானதாகக் கொண்டு பிரசாரம் செய்தனர். மன்னனும் அவர்கள் வழியில் திருப்பி விடப்பட்டான். இச் செய்தி, அதீத சக்திகள் ஆறும் கொண்டவரும் வஜ்ஜி நாட்டில் இருந்தவருமான யாச தேரரின் காதுக்கு எட்டியது. கொள்கை பரப்புத் தொடர்பான கருத்து வேறுபாட்டைச் சமாதானமாகத் தீர்ப்பதற்காக மன்னன் முயன்றான். அவனது முயற்சி தேவர்கள் சூழ்ச்சியால் திசைதிருப்பப்பட்டது. பின்னர், ஆசவங்களை வென்றவளும் அரசனின் சகோதரியுமான தேரிநந்தா அரசனை நெறிப்படுத்தினாள்.

அரசன், உண்மைக் கொள்கைகளை ஆதரிக்கும் முயற்சியில், புத்தரின் உண்மையான நெறிகளை நீண்ட காலம் அனுசரிக்கும் ரேவத தேரர் அவர்களின் குழுவிலிருந்து 700 பிக்குகளைத் தெரிந்தெடுத்து மகாசபை கூட்டினார். இப் பிக்குகள், எதையும் புரிந்து கொள்ளுவது முதலான விசேட கலைகள் நான்கிலும் வல்ல அரஹந்தர்கள், திரிபிடகத் தையும் அறிந்தவர்கள். இவர்கள் அரசன் காலாசோகனுடைய பாதுகாப்பில் வாலிகாராமாவில் ரேவத தேரர் தலைமையில் கூடித் தர்மக் கோட்பாடுகளைத் தொகுத்தனர்.

தொடக்க காலத்தில் மகா காச்யப தேரரும் பிக்குக்களும் இணைந்து தொகுத்த உண்மையான தர்மக் கோட்பாடுகள் தேரவாதம் எனப்பட்டது. இந்தத் தேரவாத மரபு முதல் 100 ஆண்டுகளில் ஒன்றாகவும் ஒன்றுபட்டதாகவும் இருந்தது.

அதன் பின் பிற தர்மக் கோட்பாடுகள் எழுந்தன.

இரண்டாம் மகாசபை மூலம் அவை அடக்கப்பட்டன.

தவறான வழியில் நடந்த 10,000 பிக்குகளும் மஹா சம்ஹிகை என்ற ஒன்றை அமைத்தனர். மஹா சம்ஹிகையிலிருந்து கோகுலிகா, ஏகவியோகாரிகா பிரிவுகள் ஏற்பட்டன. கோகுலிகாவிலிருந்து பண்ணதி பிரிவும், பஹுலிகா பிரிவும் ஏற்பட்டன. இவற்றிலிருந்து தேசியப்பிரிவு ஏற்பட்டது. இவ்வாறு மஹா சம்ஹிகையுடன் சேர்ந்து 6 பிரிவுகள் உருவாயின. மேற்கொண்டு வேறும் பல பிரிவுகள் ஏற்பட்டன.

இவ்வாறாக 2-ஆம் நூற்றாண்டளவில் 17 பிரிவுகளும் அதன் பின் மேலும் பல பிரிவுகளும் தோன்றின.

தர்மருஸி, சாகலியா பிரிவினர் மற்றவர்களிடமிருந்து இலங்கைத் தீவில் பிரிந்தனர்.

இவ்வாறாக, மகாவம்சத்தின் முதல் நான்கு அத்தியாயங்களும் வடநாட்டில் அரச வம்சங்களிடையே அரசுரிமை தொடர்பாக நடைபெற்ற போட்டிகள், கொலைகள், அரச பரம்பரை மாற்றங்கள் பற்றியும் புத்த மதம் பல்வேறு கிளைகளாகப் பிரிந்து வளர்ந்த வரலாறு பற்றியும் கூறுகின்றன. அத்துடன் முதலாம் இரண்டாம் மகாசபைகள் நடைபெறுவதற்கான பின்னணியும் மகா நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளும் கூறப்பட்டன.

மகாவம்சத்தின் முதல் நான்கு அத்தியாயங்களிலும் கூறப்படும் வடநாட்டு அரச பின்னணி, பௌத்த மதமும், அதன் பிரிவுகளும் ஏற்படுவதற்கான பின்புலத்தை விளக்குவதாய், இந் நூலுக்கு முகவுரையாக அமைந்திருக்கின்றன.

## ஐந்தாம் அத்தியாயம்:

### *மூன்றாம் மகாசபை:*

அரச உரிமைப் போராட்டம் தொடர்கிறது. காலசோகனும் அவனது 10 பிள்ளைகளும் 22 ஆண்டுகளும், அவர்களைத் தொடர்ந்து நவநந்தர்கள் 22 ஆண்டுகளும் ஆட்சி செய்தனர். அதன் பின் சாணக்கியன் (அர்த்தசாஸ்திரம் எழுதியவன்) என்னும் பிராமணன் சந்திரகுப்தன் என்னும் பெருமை மிக்க இளைஞனுக்கு முடிசூட்டினான். சந்திரகுப்தன் ஜம்புத்வீபம் முழுமையையும் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தான். சந்திரகுப்தனின் பின் அவன் மகன் பிந்துசாரன் 28 ஆண்டுகள் ஆட்சி செய்தான். பிந்து சாரனின் பின் அவனது 99 மக்களில் ஒருவனும் வீரத்திலும் பலத்திலும் புகழிலும் அதீத சக்திகளிலும் சிறந்து விளங்கிய அசோகன் தன் சகோதரர்களைக் கொன்று அரசனானான்.

அசோகன் முடிசூடிக் கொண்டபோது புத்தர் நிர்வாணம் அடைந்து 218 ஆண்டுகள் ஆகிவிட்டன. அசோகனுக்கு,



தேவர்கள், தேவதைகள், நாகர்கள் முதலியோர் நீர், பல் துலக்குவதற்காக நாகக் கொடிகள், உடலுக்கு உகந்த பழவகைகள், பஞ்ச வர்ண உடைகள், சந்திரகாந்த ஏரியிலிருந்து தேவபானம், தாமரை மலர்கள், சாந்து வகைகளையும் கொண்டுவந்தார்கள் என்று கூறப்படுகிறது.

நிக்ரோதன் என்னும் அரஹந்த நிலை அடைந்த பௌத்த துறவியை அசோகன் காண நேர்ந்தது. அத் துறவியின் அமைதியான தோற்றத்தால் மகிழ்ச்சியடைந்த அசோகன் அவனை அழைத்து மரியாதை செய்தான். நிக்ரோதன் என்னும் துறவி அசோகனுக்கு 'அப்ப மாத வர்க்கத்தை' உபதேசம் செய்தான். 'அப்ப மாத வர்க்கம்' என்பது சம்யுக்த நிகாயத்திலுள்ள 16 வர்க்கங்களில் ஒன்று. 'தளராத முயற்சி' என்பது இதன் பொருள். அசோகன் புத்தரின் கொள்கைகளுக்கு வசமானான். அசோகன் தன் வீட்டில் நிரந்தரமாக 60,000 பிக்குகளுக்கு உணவளித்தான்.

நான்கு புத்தர்களைத் தரிசித்தவரும் அற்புத சக்தி படைத்தவருமான மகா காலன் என்னும் நாக மன்னன் புத்தரின் அழகிய உருவத்தைப் படைத்தான். புத்தரின் அந்த உருவம் முப்பத்திரண்டு பெரு லட்சணங்களும் எண்பது சிறுலட்சணங்களும் ஒளிவீசும்படியாக இருந்தது.

இரண்டாம் மகாசபை கூடியபோது, எதிர்காலத்தை நோக்கிய தேரர்கள் அந்த அரசன் காலத்தில் நம்பிக்கை வீழ்ச்சியடையும் எனக் கண்டனர். நம்பிக்கை வீழ்ச்சியடையாமல் காக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

புத்தர் விஜயம் செய்த இடங்களில் எல்லாம் அரசன் அழகிய சைத்யங்களைக் கட்டினான். 84,000 நகரங்களில் விகாரைகள் கட்டி முடிந்து விட்டது என்னும் செய்தி தாங்கிய கடிதங்கள் வந்தடைந்தன. அரசன் அனைத்து ஆராமாக்களிலும் விழா நடத்த முடிவு செய்தான். பௌத்த மத வளர்ச்சிக்காக அசோகன் ஏராளமான தர்மம் செய்தான்.

அரசன், 'புத்தர் போதித்த தர்மத்தின் தன்மை எவ்வளவு மகத்தானது ?' என்று கேட்டார். அதற்கு மாகாளி புத்திர தீஸ தேரர் 84 (ஆயிரம்) பிரிவுகளைக் கொண்டது தர்மம் என்றார். அரசன், அவை ஒவ்வொன்றையும் பெருமைப்படுத்தும் முறையில் ஒரு விகாரை எழுப்புவேன் என்றான். புவியெங்குமுள்ள அரசர்களை விகாரை கட்டுமாறு பணித்து தானும் அசோகாராமாவைக் கட்டத் தொடங்கினான்.

காசி நாட்டில் வர்த்தகக் குழுவினருக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரின் குமாரர் சோனகர். இவர் பெற்றோருடன் வணிகம் செய்துகொண்டு கிரிவிரஜாவுக்கு வந்தார். 15 வயது இளைஞரான அவர் வேணுவன மடத்திற்கு அவரது 55 பிராமண சகாக்களுடன் சென்றார். தாசக தேர்ரைக் கண்டார். சீடர் புடைசூழ இருந்த தாசக தேரரைக் கண்டதும் தமக்குத் தீட்சை அருளுமாறு கேட்டார். 'உன் குருவைக் கேள்' என்றார் தாசகர். அதன் பின் சோனகர் பெற்றோரின் அனுமதியுடன் புத்த தீட்சையும் துறவு தீட்சையும் பெற்று மற்ற இளைஞர்களுடன் இணைந்து திரிபிடகங்களையும் கற்றார். தேரரின் 1000 சீடர்களில் சோனக முனைவர் முன்னிலையில் இருந்தார்.

பாடலி (பாடலிபுத்திரம்) என்னும் நகரில் மந்திரியின் புதல்வரான சிக்கவா என்னும் ஒரு 18 வயது இளைஞன் இருந்தான். இவன் இன்னுமொரு மந்திரியின் மகனான சந்தவாஜி என்னும் தோழனுடன் 500 பேர் தொடர்ந்து வர சோனக தேரரைக் கண்டான். அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார்.

குருநாதர் அழைக்கும் போதோ, சங்கத்தாரின் அழைப்பு வந்த பின்னரோ அல்லது தியானத்திற்குரிய நேரம் முடிந்த பின்போ அல்லது மரணம் நெருங்கும் போதோதான் அவர்கள் தியானம் கலையும் என்று அறிந்து கொண்டான்.

மாகாளியின் புதல்வரான தீசன் உலகில் பிறவி எடுத்திருப்பதை சிக்கவா அறிந்து கொண்டார். தீசனுக்குப் 16 வயதாயிற்று. மூன்று வேதங்களிலும் கரை கண்டார். தீசனுடன் தேரர் பேச விரும்பினார். தீசன் வீட்டிற்குச் சென்றார். 'இளைஞனே நீ மந்திரங்களை அறிவாயோ' என்று ஞானியான தேரர் கேட்டபோது அதே கேள்வியைத் தீசன் தேரரிடம் திருப்பிக் கேட்டார். வேதத்திலுள்ள கடுமையான பகுதிகளைக் குறித்து தீசன் தேரரிடம் கேட்டார். பதிலளித்த தேரர், தீசனிடம் கேள்வி கேட்டபோது அது இரவின் அடர்ந்த இருளைப் போல் இருந்தது. பெற்றோரின் அனுமதியுடன் தீசன் புத்தரின் மந்திரங்களைக் கற்றார்.

துறவியான சிக்கவா, தீசனை உபசம்பதராகச் செய்து அவருக்கு இரண்டு பிடகங்களைக் கற்றுத் தந்தார். தீச தேரரின் வாக்குகள் சம்புத்தரின் வாக்காக மதித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அசோகன் ஆட்சியில் நாடு நகர்கள் விழாக் கோலம் கொண்டன. எண்பது கோடி பிக்குகள் கூடியிருந்தனர். அசோகனின் கொடுஞ் செயல் காரணமாக அவனைச் 'சண்டாள அசோகன்' என்று சொன்னவர்கள் பின் அவனது பக்திச் செயல்களின் காரணமாக அவனைத் 'தர்ம அசோகன்' என்று அழைத்தனர்.

அசோகன், 'புத்தரது வாழ் நாளில் கூட உன்னளவு கொடுத்த ஒரு தர்மவான் இருக்கவில்லை' என்று மாகாளி புத்திர தேரரால் பாராட்டப்பட்டவன்.

அசோகன் மகன் மஹிந்தனாலும் மகள் சங்கமித்தையாலும் புத்த மார்க்கம் செழிப்படையப் போவதை உணர்ந்த மாகாளி புத்திர தேரர், 'தன் மகனையோ மகளையோ துறவை மேற்கொள்ள அனுமதிப்பவன்தான் மத ஈடுபாடு கொண்டவனும் கொடையாளியும் ஆவான்' என்றுரைத்தார். அப்போது இளவரசன் மகிந்தனுக்கு 20 வயது, அரசகுமாரி சங்கமித்திரைக்கு 18 வயது. மகிந்தனும் சங்கமித்தையும் பௌத்த மதத்தில் விதிப்படி இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

அசோகன் பெருவாரியான பிக்குகளை மஹிந்த தேரரிடம் ஒப்படைத்தபின் அவன், கங்கைக்கும் மேலே அஹோ கங்க பர்வத்தில் தமது வாசத்தைத் தனியே அமைத்துக் கொண்டு 7 ஆண்டுகள் வசித்தார்.

போலித் துறவிகள் தொகை அதிகரித்தது. முறை கேடாக நடந்தாலும் பிக்குகளால் அவர்களைச் சங்க விதிகளின்படி கட்டுப்படுத்த முடியவில்லை. ஏழு ஆண்டு காலத்திற்கு எல்லா அராமாக்களிலும் உபோசத சடங்கோ பவாரனா சடங்கோ நடைபெறவில்லை. இதனை அறிந்த அசோகன் ஒரு மந்திரியை அசோகாராமாவுக்கு அனுப்பி, 'பிக்கு சங்கத்தார் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து, எனது அராமாவில் உபோசத விழாவை நடத்தச் செய்யவும்' என்று கட்டளையிட்டார்.

இது தொடர்பாக நடந்த வாக்குவாதத்தில் பல தேரர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். பிரச்சினைகள் தொடர்ந்தன.

அரசன் நேரடியாகத் தலையிட்டான். பொய்யான மார்க்கத்தைப் பின்பற்றியவர்களை அரசன் சங்கத்திலிருந்து வெளியேறச் செய்தான். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் மொத்தம் 60,000 பேர். தீச தேரரைச் சங்கத்தின் காவலராக்கிவிட்டு அரசன் திரும்பினான்.

தீச தேரர், தேரர் சங்கத்திலிருந்து அறிவாற்றல் மிக்க, ஆறு பெரும் சக்திகளைப் பெற்ற திரிபிடகங்களையும் அறிந்த விசேட சாத்திரங்களில் தேர்ச்சி பெற்ற ஆயிரம் பிக்குகளை உண்மையான போதனைகளைத் தொகுப்பதற்காகத் தேர்ந்தெடுத்தார். அவர்களுடன் இணைந்து அசோகாராமாவில் தர்மக் கோட்பாடுகளைத் தொகுத்தார்.

மகா காச்யப தேரரும் யாசகதேரரும் மகாசபை நடத்தியது போலவே தீச தேரரும் மகாசபை நடத்தினார். அரசனது ஆட்சி 17-ஆவது ஆண்டில் தேரர்க்கு 72 வயதுதாகியிருந்த அவர் பெரும் பவாரணா விழாவுடன் மகாசபையை முடித்தார்.

அசோகனது ஆதரவில் நடைபெற்ற இம் மகாசபை ஆயிரம் பிக்குகளால் ஒன்பது மாதங்களில் முடிவடைந்தது. புத்த மதம் புத்துயிர் பெற்றதில் பெரு மகிழ்ச்சி அடைந்தது போல பூமி அதிர்ந்தது.

## இதுவரை 5–ஆம் அத்தியாயம் கண்ட பௌத்தம் தொடர்பான தகவல்கள்:

84 ஆண்டுகள் உலகில் வாழ்ந்திருந்து தமது கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றியபின் குஸிநாகரத்தில் (நேபாளத்தில் ஒரு நகர்) வைகாசிப் பௌர்ணமி தினத்தில் இவ்வுலகை நீத்தார்.



ஆனந்த தேரர் என்பவர் புத்தரின் தர்மக் கோட்பாடுகளைத் தொகுக்கும் பணியைத் தொடங்கினார்.

‘விநயம்’ பற்றிய கேள்விகளுக்கு விளக்கம் கொடுக்க உபாலி என்பவர் நியமிக்கப்பட்டார். கேள்விகளை மகா தேரரான மகாகாச்யபர் கேட்க உபாலி தேரர் விளக்கம் கொடுத்தார். ‘தர்மம்’ பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆனந்த தேரர் விளக்கம் கொடுத்தார். இவ்வாறாக ஏழு மாத காலத்தில் உலகைக் காப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தர்மக் கோட்பாடுகளைத் தொகுக்கும் பணி நிறைவேறியது. தேரர்களால் தொகுக்கப்பட்டமையால் இது தேரவாதம் என்று அழைக்கப்பட்டது.

புத்தரின் கொள்கைகள் முறைப்படி முதலாம் பௌத்த மாநாட்டில் வகுக்கப்பட்டன.

வட இந்தியாவில் பல்லாயிரக் கணக்கானோர் பௌத்தர்களானார்கள்.

இந்தத் தேரவாத மரபு முதல் 100 ஆண்டுகளில் ஒன்றாகவும் ஒன்றுபட்டதாகவும் இருந்தது.

அதன் பின் பிற தர்மக் கோட்பாடுகள் எழுந்தன. தவறான வழியில் நடந்த 10,000 பிக்குகளும் மஹா சம்ஹிகை என்ற ஒன்றை அமைத்தனர். மஹா சம்ஹிகையிலிருந்து கோகுலிகா, ஏகவியோகாரிகா பிரிவுகள் ஏற்பட்டன.

இரண்டாம் மகாசபை மூலம் அவை அடக்கப்பட்டன. இரண்டாம் மகாசபை கூடியபோது, எதிர்காலத்தை நோக்கிய தேரர்கள் அந்த அரசன் காலத்தில் நம்பிக்கை வீழ்ச்சியடையும் எனக் கண்டனர். நம்பிக்கை வீழ்ச்சியடையாமல் காக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

மகாவம்சத்தின் முதல் நான்கு அத்தியாயங்களிலும் கூறப்படும் வடநாட்டு அரச பின்னணி, பௌத்த மதமும், அதன் பிரிவுகளும் ஏற்படுவதற்கான பின்புலத்தை விளக்குவதாய், இந் நூலுக்கு முகவுரையாக அமைந்திருக்கின்றன.

அரச உரிமைப் போராட்டம் தொடர்ந்தது. ஈற்றில், சாணக்கியன் என்னும் பிராமணன் முயற்சியால் சந்திரகுப்தன் என்னும் பெருமை மிக்க இளைஞனுக்கு அரசனானான். சந்திரகுப்தன் ஜம்புத்வீபம் முழுமையையும் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தான். சந்திரகுப்தனின் பின் அவன் மகன் பிந்துசாரன் 28 ஆண்டுகள் ஆட்சி செய்தான். பிந்துசாரனின் பின் அவனது மகனான அசோகன் தன் சகோதர்களைக் கொன்று அரசனானான். இவனே பௌத்த மத வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட மன்னனாவான்.

அசோகன் முடிசூடிக் கொண்டபோது புத்தர் நிர்வாணம் அடைந்து 218 ஆண்டுகள் ஆகிவிட்டன. நாடெங்கிலும் பெருமளவிலான பௌத்த விகாரைகளைக் கட்டினான், கட்டுவித்தான். பெரும் தானங்கள் செய்தான்.

அசோகன் காலத்தில் பல பிரபல்யமான பௌத்த பிக்குகள் தோன்றிப் பௌத்தத்தை வளர்த்தனர்.

மகா காலன் என்னும் நாக மன்னன் புத்தரின் அழகிய உருவத்தைப் படைத்தான்.

மகா காச்யப தேரரும் யாசகதேரரும் மகாசபை நடத்தியது போலவே தீச தேரரும் மகாசபை நடத்தினார். அரசனது ஆட்சி 17-ஆவது ஆண்டில் தேரர்க்கு 72 வயதுதாகியிருந்த அவர் பெரும் பவாரணா விழாவுடன் மகாசபையை முடித்தார். மகவம்சத் தின் ஐந்தாவது அத்தியாயமான மூன்றாம் மகாசபை முற்றுப் பெற்றது.

தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com



# பெண்ணியவாதம்: அறிவாராய்ச்சியியலும் கோட்பாடும் - பகுதி IV

# பின்நவீனத்துக்குப் பிந்திய பெண்ணியவாதம்

– ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

பெண்ணிய அரசியலிலும், புலமைச் செயற்பாடுகளிலும் பின்நவீனத்துவத்தின் வருகையால் ஏற்பட்ட மாற்றங்களை இக்கட்டுரையில் ஆராயவுள்ளோம். பின்நவீனத் துவத்தின் எந்தெந்தக் கூறுகளால் பெண்ணியவாதம் கவரப்பட்டது? இவ்வினாவிற்கான விடையை லிண்டா ஜே. நிக்கல்சன் (Linda J. Nicholson) தொகுத்துப் பதிப்பித்த Feminism / Post-Modernism (1990) என்னும் கட்டுரைத் தொகுப்பினைப் படித்துக் தெரிந்துகொள்ள லாம். மேற்படி நூலில் பெண்ணிய ஆய்வாளர்கள் பலர் பின்நவீனத்துவத்தின் பங்களிப்புப் பற்றி எழுதியுள்ளனர், வேறு பலர் அதனை விமர்சித்தும் எழுதியுள்ளனர். ஜோர்ஜியா வார்ன்கே (Georgia Warnke) என்பவரின் ஆய்வுக் கட்டுரையின் (1993) கருத்துப்படி பின் நவீனத்துவ மெய்யியலின் இரு விடயங்களில் பெண்ணியவாதிகள் அக்கறை கொண்டனர். அறிவொளிச் சிந்தனையின் நோக்குநிலையையுடையதான தாராண்மை மனிதாயவாதம் (Liberal Humanism) சமூக அரசியல் விடயங்களைப் பொதுமைப்படுத்துதல் (Generalisation) என்ற இயல்பை உடையதாக இருந்தது.

இத்தத்துவத்தின் அறிவாராய்ச்சியியல் வெள்ளையரான ஆண்களின் (Whitemen) வரலாற்று அனுபவங்களை ஆண் பெண் என்ற இருபாலாருக்கும் பொதுமைப்படுத்துவதன் அடிப்படையில் அமைந்திருந்தது. பின்நவீனத்துவ மெய்யியல் தாராண்மை மனிதாய வாதத்தின் இப்பொதுமைப்படுத்தல் அனுமானங்களைக் கண்டனம் செய்தது. இக்கண்டனம் பெண்ணிய வாதிகளுக்குப் பின்நவீனத்துவ மெய்யியல் மீது ஏற்பட்ட கவர்ச்சிக்கான முதலாவது காரணமாகும்.

பின்நவீனத்துவத்தின் கண்டனத்தை பெண்ணியவாதிகள் பெண்ணியச் சிந்தனை பற்றிய விமர்சனத்திற்கும் உபயோகித்தனர். பெண்ணியவாதம் வெள்ளையரான மத்தியதர வர்க்கப் பெண்களின் (White Middle - Class Women) வரலாற்று அனுபவங்களின் படியான பொதுமைப்படுத்தலைச் செய்துள்ளது எனவும், அதன் அறிவாராய்ச்சியியல் நோக்கு முறை இப்பொதுமைப்படுத்தலின்படியான அனுமானங்களைக் கொண்டது எனவும் பெண் ணியவாதிகள் விமர்சனம் செய்தனர். இது பின்நவீனத்துவத்தின் மீது பெண்ணியவாதி களுக்கு ஏற்பட்ட கவர்ச்சிக்கான இரண்டாவது காரணமாகும்.

மேற்குறித்த இரு விடயங்களிலும் போலியான பொதுமையாக்கம் (False Universalism) உள்ளடங்கியிருந்தது. இப்போலியான பொதுமையாக்கம் மேலாதிக்கக் குழுக்கள் தவிர்ந்த பிற குழுக்கள் யாவற்றினதும் குரல்களை அடக்குவதற்கு உபயோகிக்கப்பட்டது. இதற்கு மாறாக பின்நவீனத்துவம் வெள்ளையரான மத்தியதரவர்க்க ஆண்களிற்கும்,

பெண்களிற்கும் இடையில் அனுபவங்கள், அறிவு விருப்பங்கள் என்பனவற்றில் 'வேறுபாடுகள்' (Differences) இருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு உதவியது, இவ்வாறாக வெள்ளையரான மத்தியதர வகுப்புப் பெண்களின் அனுபவங்கள், அறிவு, விருப்பங்கள் என்பனவற்றை பொதுமைப்படுத்தி உலகின் பிற பெண்கள் சமூகத்தின் மீது பொருத்துவதும் தவறானது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

பெண்ணியவாத விமர்சனம் வேறுபாடுகள் (Differences) என்ற பின்நவீனத்துவ கருத்துக்கு அழுத்தம் கொடுத்தது.

பெண்ணியவாதத்திற்கும் பின்நவீனத்துவ மெய்யியலுக்கும் இடையிலான உறவின் காரணமாக பெண்ணிய அறிவாராய்ச்சியியலிலும், கோட்பாட்டிலும் இரு போக்குகள் வெளிப்பட்டன. அவ்விருபோக்குகள் பற்றி அடுத்துக் குறிப்பிடுவோம்.

அவ்விரு போக்குகளாவன:

- பின்நவீனத்துவ மெய்யியலின் தாக்கத்திற்கு உட்பட்ட பெண்ணியவாதம் அடிப்படைவாத மெய்யியலையும் சமூகக் கோட்பாட்டையும் (Foundationalist philosophy and Social Theory) அடிப்படைவாத எதிர்ப்பு நோக்கில் (Anti-Foundationalist Perspective) விமர்சனம் செய்தது.
- பெண்ணியவாதம், பின்நவீனத்துவத்தைப் பின்பற்றிப் பெருங்கதையாடல்களை (Grand Narratives) நிராகரித்தது.

இவற்றுள் அறிவின் அடிப்படைவாதம் (Foundationalism in Knowledge) என்ற கருத்தை விளக்குதல் அவசியமானது. எல்லாவகை அறிவு முடிவுகளினதும் வலிதுடமையை (Validity) பரிசீலனை செய்து மதிப்பிடுவதற்கு ஓர் அளவுகோல் அல்லது கோட்பாடு உள்ளது, என்று கூறும் மெய்யியல் நிலைப்பாடு (Philosophical Position) அறிவின் அடிப்படைவாதம் எனப்படும். அறிவின் அடிப்படைவாத நிலைப்பாட்டை உடையோர் தமது சமூகக் கோட்பாடும், தமது மெய்யியலும் பிற எல்லாவற்றையும் விட உயர்ந்தது, பிறவற்றை மதிப்பிடும் பொது அளவு கோல் தம்மிடம் உண்டு என வாதிடுவர். இந் நிலைப்பாட்டை எதிர்ப்போர் அடிப்படை வாத எதிர்ப்பு விமர்சனத்தை (Anti - Foundationalist Critique) முன்வைத்தனர். பெண்ணியவாதமும், பின்நவீனத்துவமும் அடிப்படைவாத எதிர்ப்பு விமர்சனம் என்ற வகைக்குள் அடங்கும் கோட்பாடுகளாகும். சமூகம் பற்றியும் சமூக நிறுவனங்கள் பற்றியும் பெண்ணியவாதம் சுயத்துவமான விமர்சனத்தை முன்வைத்தது. அவ்விமர்சனம் சமகாலத்தின் முக்கியமான சமூக விமர்சனமாக (Social Criticism) வளர்ச்சி பெற்றுள்ளது. பெண்ணியவாதம் சமூக நிறுவனங்கள் பற்றிக் கடுமையான விமர்சனத்தை முன்வைத்ததோடு, சமகாலத்தின் சமூகக் கோட்பாட்டையும் (Social Theory) மெய்யியலையும் விமர்சனத்திற்கு உட்படுத்தியது. அறிவை மதிப்பீடு செய்வதற்கு உலகப் பொதுவான வரைசட்டகம் (Universal Framework) உள்ளது என்ற அறிவின் அடிப்படைவாத நிலைப்பாட்டை பெண்ணியவாதம் நிராகரித்தது. பின்நவீனத்துவமும் பெண்ணியவாதம் போன்றே அறிவின் அடிப்படைவாதம் மீது கடுமையான விமர்சனத்தை முன்வைத்தது. பின்நவீனத்துவம் தனக்கே உரியதான சுயத்துவமான சமூக விமர்சனத்தை உருவாக்கிக் கொண்டது. றிச்சார்ட் ரொர்டி (Richard Rorty) பிராங்கோய்ஸ் லியோதார்த் (Francois Lyotard) ஆகிய இருவரும், அடிப்படைவாத மெய்யியலையும் சமூகக் கோட்பாட்டையும் எதிர்த்து வாதங்களை முன்வைத்தனர். அடிப்படைவாத எதிர்ப்பாளர்களின் கருத்துப்படி எந்தவொரு மெய்யியலும், சமூகக் கோட்பாடும் முதன்மையிடத்தைக் கோர முடியாது. ஜயதேவ உயன்கொட இக்கருத்தைப் பின்வருமாறு ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறார்.

From the Anti - Foundational Perspective, there is no Philosophy starting with capital P or Theory starting with Captial T. (பக்கம் 332)

மேற்குறித்தவாறு அறிவின் அடிப்படைவாதம் பற்றி முன்வைக்கப்பட்ட விமர்சனம் அரசியல் சமூக விமர்சனம் உறுதியான தளத்தில் செயற்படுவதற்கு வழிவகுத்தது. சமூக விமர்சனம் உலகப் பொதுவான வரைசட்டகத்தை ஆதாரமாகக் கொண்டு அமைதல் இயலாது. சமூக விமர்சனம் நடைமுறைப் பயன் உடையதாகவும், சமூகச் சூழமைவின் (Social Context) பின்னணியில் எழுவதாகவும் அமையும், அது சுயத்துவமான இயக்கத்தை உடையது. அது தற்காலிகமான (Adhoc) ஒன்றாகவும் கூட அமைந்துவிடலாம். இக்கருத்து ஆங்கிலத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

Social Criticism cannot have a universal frame work. It can only be local, free floating, pragmatic, Adhoc and Contextual. (பக்கம் 332)

பின்நவீனத்துவத்தின், அடிப்படைவாத எதிர்ப்பின் பிரதான விளைவு பெருங்கதையாடல்களை அல்லது எல்லாவற்றுக்கும் பொதுவான கோட்பாடுகளை (Universal Theories) நிராகரித்தமையாகும். பெருங்கதையாடல்களின் நிராகரிப்பை Post Modern Condition. A Report on Knowledge (1979) என்னும் லியோர்தத் நூல் அறிவித்தது. எல்லாவற்றுக்கும் பொதுவான அறிவு என்பதற்குப் பதிலாக அறிவு குறிப்பிட்டதொரு விடயம், இடம், சூழல் சம்பந்தமானதாகவும், பன்மையானதாகவும் (Local and Plural) அமையும் எனக் கூறப்பட்டது.

### மூன்று வகைமைகள்:

ஜயதேவ உயன்கொட அவர்கள் 332, 333 ஆகிய இரு பக்கங்களில் பாலினம் (Gender) பெண்கள் (Women) ஆணாதிக்கம் (Patriarchy) என்ற மூன்று வகைமைகள் (Categories) பற்றி பின்நவீனத்துவ நோக்கிலான விமர்சனத்தை முன்வைத்து, பின்நவீனத்துவப் பெண்ணியவாதத்தின் முக்கிய கருத்துகளை விளக்கிக் கூறுகிறார்.

பின்நவீனத்துவம் சுயம் (Self) பாலினம் (Gender) என்பனவற்றை சாரப்படுத்தி நிலையானதாகக் கூறமுடியாது என்ற கருத்தை முன்வைத்தது. உதாரணமாக 'சுயம்' என்பது நிலையானதா? பத்து ஆண்டுகளுக்கு முந்திய 'நான்' இன்றைய 'நான்' என்ற இரண்டு அடையாளமும் ஒன்றா? உள்ளார்ந்த 'சுயம்' என்று ஒன்று உள்ளதாகக் கொள்ளமுடியுமா? என்பன 'சுயம்' பற்றிய ஐய வினாக்களாகும். இதனால் சுயம் கட்டமைக்கப்படுவது Constructedness of the self என்ற முடிவு கிடைக்கிறது. இதுபோன்றே 'பாலினம்' என்பதும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது (Socially Constructed) என்ற வாதம் பெண்ணியவாதிகளால் முன்வைக்கப்பட்டது. மெய்யியலில் 'Essentialism Vs Constructivism' - சாரம்சவாதம் எதிர் கட்டமைப்பு வாதம் என்ற எதிரிணைகள் இவ்விவாதத்தின் உட்பொருளை அறிந்துகொள்ள உதவுவன. 'பாலினம்' (Gender) என்பது நிலையான சாராம்சமான ஒரு கருத்து அல்ல.



ஆண் ஆணாகவும், பெண் பெண்ணாகவும் பிறப்பதில்லை. 'பெண்மை' என்பது சமூகத்தால் கட்டமைக்கப்படுவது (Socially Constructed) ஆகும். 'ஆண்மை' என்பதும் அவ்வாறு கட்டமைக்கப்படுவதே.

பின்நவீனத்துவ பெண்ணியவாதிகள் மேற்குறித்த கருத்துக்கும் அப்பால் சென்று இன்னொரு பிரச்சினையை முன்வைத்தனர். உயன் கொட இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். Post Modern Feminists have Gone Further to argue that 'Considerations of Sex and Sexuality Cannot be Contained by the Category of Gender' (Weed and Schor 1997:VIII) மேற்தரப்பட்ட கூற்றில் இடம்பெறும் 'Sex' என்ற சொல்லை 'பாலினம்' என்றும் 'Sexuality' என்ற சொல்லை பாலுணர்வு நாட்டம்' எனவும் தமிழ்ப்படுத்திக்கொண்டு அதனை பின்வருமாறு மொழி பெயர்த்துக் கொள்ளலாம். 'பாலினம்', 'பாலுணர்வு நாட்டம்' என்பனவற்றைக் கருத்தில் கொள்ளும் போது அவற்றை பாலினம் என்ற வகைமைக்குள் உள்ளடக்க முடியாது என்பது புலனாகும்.'

இக்கூற்று ஐயங்கள் பலவற்றைத் தோற்றுவிக்கிறது. பாலினம் (Gender) என்ற வகைமைகூட 'பெண்' என்பதை சாரம்சம் படுத்துவதாகவே உள்ளது. ஆண் தன்மை, பெண் தன்மை என்பனவற்றின் கலப்பான இயல்புடைய பல் வகையினர் உள்ளனர். அவர்களது பாலுணர்வு நாட்டங்கள் (Sexuality) வேறுபட்டவை.' குயர்கோட்பாடு (Queer Theory) பாலினம் (Gender) வேறு, பாலிமை (Sex) வேறு, இரண்டும் ஒன்றல்ல என்று கூறியது ஆய்விலும், அரசியலிலும் மையநீரோட்ட பெண்ணியவாதத்திற்கு 'குயர் கோட்பாடு' ஒரு சவாலாக அமைந்தது.

பாலினம் என்ற வகைமையைக் கோள்விக்கு உட்படுத்தியது போன்ற, பெண்கள் (Women), ஆணாதிக்கம் (Patriarchy) என்ற வகைமைகள் பற்றியும் சோஷலிச, தாராண்மை பெண்ணியவாதிகளால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பெண்ணியவாத சிந்தனை வளர்ச்சியின் முந்தைய கட்டத்தில் பெண்ணியவாதிகள் பாலின அடையாளத்தை ஒருமையில் (Sinqularity of Gender Identity) குறிப்பிட்டனர். ஆனால் பிற்காலத்தில் 'பெண்' அடையாளத்தை ஒருமையில் குறிப்பிடமுடியாது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. மேற்கு நாட்டு வெள்ளையினப் பெண்களின் அனுபவம் வேறு, மூன்றாம் உலகப் பெண்களின் அனுபவம் வேறு, இந்நிலையில் 'பெண்' என உலகப் பொதுவான (Universal) வரையறையும் அடையாளமும் பொருந்தமில்லாது மேலும். பெண் - பெண் இணைவிழைச்சு நாட்டம் உடைய (Lesbian) பெண்ணிய வாதிகள், மையநீரோட்ட பெண்ணியவாதிகளின் ஆண் - பெண் எதிரினை விழைச்சு (Hetero Sexual) அடிப்படையிலான வரையறையை நிராகரித்தனர். இவை போன்ற வாதங்களின் பயனாக பாலினம் (Gender) என்ற வகைமை சாராம்சப் படுத்தல் (Essentialisation) பொதுமைப்படுத்தல் (Generalisation) ஆகிய குறைபாடுகளை உடையது என்பது சுட்டிக் காட்டப்படுகிறது அது வேறுபாட்டை (Difference) மறுப்பது, விலகல்களை (Deviance) நிராகரிப்பது. இச்செயல்முறைகள் பெண்களின் சில பிரிவினர்களை ஒதுக்குதலுக்கும் (Exclusion) விளிம்பு நிலைப்படுத்துவதற்கும் உதவுகிறது. மைய நீரோட்ட பெண்ணிய வாதம் 'பெண்கள்' (Women) என்பதையும் பெண்கள் பற்றிய அறிவையும் (Knowledge about Women) குறுகிய ஓர் எல்லைக்குள் மட்டுப்படுத்துகிறது.

'பெண்கள்' என்றால் மேற்கத்தேய (Western), வெள்ளையின (White) மத்தியதரவர்க்க (Middle Class) எதிரிணை விழைச்சு நாட்டமுள்ள (Hetero - Sexual) தன்மையுடையவர்கள் என்ற அடையாளத்தை மையநீரோட்ட பெண்ணியவாதம் முன் வைப்பதாக பின்நவீனத்துவ பெண்ணியவாத விமர்சனம் அமைந்தது.

பின்நவீனத்துவப் பெண்ணியவாதம் பாலினம் என்பது ஒன்றையொன்று ஊடறுத்துச் செல்லும் பிரிவினைகளை உடையது (Inter Sectionality of Gender) என்ற கருத்தை வலியுறுத்தியது. ஆண் - பெண் என்ற வேறுபாடு மட்டுமன்றி வர்க்கம், இனம், நிறம், பாலுணர்வு நாட்டம் (Class, Race, Colour, Sexual Orientation) என்பனவற்றாலும் உருவாகும். பிரிவினைகள் முக்கியமானவை. ஆகையால் பெண் ஒடுக்குமுறை பற்றிப் பேசும்போது உள்ளூர், இடம் சார்ந்த, பிரத்தியேக பண்பாட்டுச் சூழமைவு (Local, Location and Culture Specific, Conditions of Women's Oppression) கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

உலகப் பொதுவானதும், சாராம்சப்படுத்தப்பட்டனவுமான எண்ணக்கருக்கள் பெண்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு, குறிப்பாக அடித்தள விளிம்பு நிலைப் பெண்கள் சமூகங்களின் (Subaltern and Maginalised women Groups) நிலையை ஆய்வுகள் மூலம் வெளிக்கொணருவதற்கு இடம் தருவதில்லை.

(இக்கட்டுரை Social Research Philosophical and Methodological foundations என்னும் நூலின் 16-வது அத்தியாயத்தின் Feminism After post Modernism என்னும் உபதலைப்பில் பக். 331 - 333 வரையான மூன்று பக்கங்களில் கூறியிருக்கும் கருத்துக்களைக் தழுவித் தமிழில் எழுதப்பட்டுள்ளது)



shanmugalingam@thaiveedu.com

# பாட்டுப் பிறந்த கதை காட்டும் கண்ணன்

கிருங்கை சேதுபதி



பத்திரிகை அடங்காப் பசியுடைய அசுரன். எத்தனை வித மான எழுத்துணவுகளை அதற்கு இட்டாலும் அது அந்தந்த நேரத்தில் அடங்குவதுபோல் இருந்து மீள எழுந்து விடுவது. அது தனக்கான பசியாக இல்லாது உலகத்தார்க்கெல்லாம் எழும் அறிவுப்பசியாக விரிவது. அதற்குரிய உணவாக, உணர்வையும் உண்மையையும் ஊட்டவேண்டிய கடப்பாடு அதற்கு இருப்பதால், தீராத் தாகமுடையதாய் தன் தேவை உணர்த்தி நிற்பது.

நிகழும் காலத்திற்கு முன்னோக்கி, வருங்காலத்தைத் தன்வச மாக்கும் கலை அறிந்தவர்களே, அதற்கு உரிய உணவிடும் வல்லமை உடையவர்கள். அவர்களுக்குக் கடந்த காலங் களும் நன்கு தெரியும். இப்படி முக்காலப் பரிமாணங்களை முழுதாக உள்வாங்கி எழுதும் இதழாளராக இமைப்பொ ழுதும் சோர்வின்றி இயங்கியவர் பாரதி. அதற்காகத் தன் பசி மறந்து துயில் துறந்து தீவிரமாகச் செயற்பட்டவர்.

பத்தி பத்தியாய் எழுதும் வாசகங்கள் அனைத்திலும் தேச பக்தியே பின்புலம் ஆனது. அதுவும் உலக நலனை உள்ள டக்கி வளர்ந்தது. அதில் நாட்டு நலனும் வீட்டு நலனும் உள் ளார்ந்து அமைந்தன.

***நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்***
***யாநலத்து உள்ளதூஉம் அன்று***

(சொல்வன்மை-641)

என்று அனுபவித்துச் சொன்னவர் திருவள்ளுவர். ‘எனதுரை தனதுரை’யாகக் கொண்டவன் சிவன் (1.76.1) திருஞானசம் பந்தர் பாடியது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, என் கவி அனைத்தும் தனக்கெனக் கேட்கிறாள் சக்தி என்ற பாரதி பாடுவதும். அவள் சூலமேந்திய காளி மட்டுமல்ல. காணும் யாவுமாய் எழுந்த பராசக்தி. அவளே தாய். அவளே மனைவி. அவளே மகள். அவளே அனைத்தும்.

எந்த நேரமும் அவருள் கனன்றுகொண்டிருக்கும் கவிதைக் கனல், ஓங்கியெழும் அக்கினிப் பிழம்பாகிச் சுடர்கிறபோது, எந்த வடிவும் கருவும் கொண்டு அமைகிறதோ, அதுதான் ஆக்கம். அது கவிதையாக, பாடலாக, கட்டுரையாக, சம்பா ஷணையாக, துணுக்குச் செய்தியாக, கருத்துப்படக் குறிப்பாக, இவற்றுக்கெல்லாம் இடம் தராது முன்னின்று மொழிபெயர்க்கச் சொல்லும் ஒன்றாக வெளிப்படும்.

பல சமயங்களில் எழுத நினைத்து உட்கார்ந்தது எழுத்தாக வெளிப்படாமல், வெளிநிகழும் சம்பவங்களால், ஒலிகளால், காட்சிகளால் தோன்றும் ஆக்கங்கள் பாரதியினுடையவை. அது சுயமாய் எழுதுவோர்க்கெல்லாம் இயல்பாய் அமைவது. அதனைப் பல படைப்பாளிகளின் நேர்காணல்களில், தன்வி ளக்கச் செய்திகளில் இடம்பெறக் காணலாம்.

பாரதி காலத்திலோ அவரை அவ்விதம் பேட்டி கண்டவர்கள் யாருமிலர். ஆனால், உடனிருந்து உடனுறைந்து பழகிய வர்கள் அவ்வப்போதோ, பின்னரோ, தத்தம் நினைவில் பதிந் தவற்றை உரிய வண்ணம் புனைவு இன்றித் தந்திருக்கின் றனர். அவர்களுள் செல்லம்மா பாரதி, வ.ரா., யதுகிரி அம் மாள், பாரதிதாசன் ஆகியோரைப் போன்று விரிவாகச் சொல் லும் வாய்ப்பு மிகவும் குறைவாகப் பெற்றவர் குவளைக் கிருஷ்ணமாச்சாரியார். ஆனாலும் கிடைத்த வாய்ப்பின்போ தெல்லாம் குறைவின்றிச் சொன்னவர்.

அவர் சொல்லித்தான், பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி தோன்றிய பின்புலத்தை உலகறிந்தது. அதுபோல் எழுந்த இன்னொரு பாடலுக்கும் அவர் பின்புலமாகச் சொல்லிய செய்தியை இக்கட்டுரையில் காணலாம்.

•

தன் முனைப்பினால் உற்பத்தி செய்கின்ற கவிதைகளாக, பாரதி யாதொன்றையும் பாடவில்லை. எழுதவில்லை. இன்னும் சொல்லப்போனால், வாக்கில் வெளிப்பட்ட வாசகங்களே பின்னர் தாளில் பதிவாகி, இதழ்களில் அச்சாகி உலகறிய வலம் வந்தன. கவிதாவுணர்வு தோன்றாத காலத்தில் அவர் வறிதே இருந்திருக்கிறார் என்பதை விட, வேறு வேறு வடிவங்களில் எழுதியிருக்கிறார். அதுவும் இயலாத நிலையில் நண்பர்களுடன் பேசியிருக்கிறார். அதனையும் கடந்து அவர் மௌனத்துள் ஆழ்ந்து வெளிப்படுத்திய ஆக்கங்கள் அமரத்துவம் அடைந்தன.

அவை பேசாப் பொருளைப் பேசின. யாரும் கேட்கா வரத்தினைக் கேட்டன. அவை யாவர்க்கும் பொதுவாக அமைந்தன. புதுமைப்பெண்ணுக்குப் பாடினாலும், புரட்சிக்கு வித்திட்ட ருஷ்யாவைப் பாடினாலும், சக்தியைத் துதித்தாலும், அல்லாவைப் பாடினாலும் எல்லாம் ஒன்றாய் ஒன்றிய உணர்வின் நுண்ணிய வெளிப்பாடாய் அமைந்து பாரதியை மகாகவியாக அடையாளம் காட்டின. அவற்றில் ஒன்றுதான் அவர் பாடிய பாப்பா பாட்டு. அது பாரதியின் இளைய புதல்வி சகுந்தலாப் பாப்பாவுக்காகப் பாடிய பாட்டு என்பது பலரும் அறிந்ததே. ஆனால், அது எங்ஙனம் பிறந்தது என்பது பலர் அறியாதது. அதனை உடனிருந்து கண்டவர் குவளைக் கண்ணன். அதன் தோற்றப்பின்புலத்தோடு அது வெளிப்பட்ட காலத்தையும் நினைவுகூர்ந்து, 1938-ஆம் ஆண்டு வெளிவந்த ஹிந்துஸ்தான் வாரப்பதிப்பில் எழுதுகிறார்.

•

ஸ்ரீ பாரதியாரின் இரண்டாவது குமாரி சகுந்தலாவுக்கு நாலு அல்லது ஐந்து வயதிருக்கும். ஒரு நாள் காலை சுமார் ஏழு மணிக்குக் காப்பி சாப்பிட்டாயிற்று. வெற்றிலை போட்டுக்கொண்டு பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுத ஆரம்பித்தார் பாரதியார் என்று தொடங்குகிறது அவர்தம் பதிவு. அப்போது பாரதியார் என்ன எழுத ஆரம்பித்தாரோ தெரியாது. ஆனால், அவர் அதனை எழுதி முடிக்க முடியாதவண்ணம், உரத்த குரல் எழுப்பிச் சகுந்தலாவை, செல்லம்மா பாரதி கடிந்துகொள்வது அவர் காதில் விழுந்து விடுகிறது. கூடவே, பாப்பாவின் விசும்பல் சத்தமும் எழுந்துவிடவே, பாரதியாருக்கு எழுத்து ஓடவில்லை. அவரை இழுத்து வசப்படுத்தி நியாயம் பேசவைத்துவிடுகிறது, வீட்டுச் சூழல்.

இது எல்லா எழுத்தாளர்களுக்கும் நிகழ்வதுதான். பொதுவாக அந்த நேரங்களில் பலர் மனைவியையோ, குழந்தையையோ கடுமையாகக் கடிந்துகொள்வதே இயல்பு. ஆனால், பாரதியின் குழந்தை மனதுக்கு இது ஒவ்வாதது. பிறர் துயர் எதுவென்றாலும் அதனைத் தன்துயராகக் கருதிக் கொள்ளும் பாரதியின் இயல்பு எல்லாருக்கும் வாய்த்துவிடுமா, என்ன?

(உண்மையைச் சொல்கிறேன். இந்தக் கட்டுரையை எழுதும்போது என் இல்லத்திலும் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டிருந்தது. அது பின்னிரவுப் பொழுது. எனினும் அதற்குச் சம்பந்தப்படாததுபோல், எழுதத் தொடங்கி வாங்கிக் கட்டிக்கொண்டதை இப்போது எழுத முடியுமா, என்ன?) கதைக்கு வருவோம். அதாவது, குவளைக் கண்ணன் கூறும் வரலாற்றுப் பதிவுக்குள் வந்துவிடலாம்.

•

அந்தச் சமயம் அவர் பத்தினியார் செல்லம்மா சகுந்தலா பாப்பாவைக் கூப்பிட்டுக் கோபித்தும், அடித்தும், ‘வாசலில் போகாதே’ என்று சொல்லியும் வீட்டில் சமையல் கூடத்தில் ஒரு மூலையில் உட்கார வைத்து, ‘நான் கிணத்தருகில் குளித்து வரும் வரையில் நீ எங்கேயும் அசையக் கூடாது’ என்று சொன்னார்.

தாயாரால் கண்டிக்கப்பட்ட குழந்தை அழுவதைக் கேட்ட பாரதியார், உடனே எழுதுவதை விட்டு, ஸ்நானம் செய்யப் போன செல்லம்மாவைக் கூப்பிட்டு, ‘குழந்தை ஒரு தப்பும் செய்யவில்லையே, அதை ஏன் அடிக்கிறாய்?’ என்றார்.

அதற்கு, ‘நீங்கள் வெளியே போய் விடுகிறீர்கள். தானும் குளிக்கப் போய் விடுகிறேன். தன்னைக் கவனிப்பார் இல்லாத காரணத்தை ஆதாயமாகக்கொண்டு அது வீதிக்குப் போகிறது. எங்கேயாவது ஒருவீட்டிற்குள் போய்ப் புகுந்து கொண்டு, அசல் வீட்டுக் குழந்தைகளிடம் அடியுண்டு, மலங்க மலங்க அழுதுகொண்டு கிடக்கிறது. நான் ஒரு பக்கம் குழந்தையைத் தேட, அது மறு பக்கம் வர இவ்வாறு ரொம்ப நாழி பொறுத்து எங்கிருந்தோ அழுதுகொண்டு அதுவாக, அந்தக் குழந்தை அடித்தது என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்கு வருகிறது. தினம் இது இவ்விதம் செய்தால், இதுக்குப் புத்தி எப்படி வரும்; இதைத் தேடும் காரியமே எனக்குப் பெரிய காரியமாய் விட்டால், எனக்கு ஸ்நானம், சமையல், இதர வீட்டு வேலைகள் இதெல்லாம் எப்படி ஆகிறது?’ என்றார் செல்லம்மா.

•

நாளும் நடக்கிற இந்நிகழ்வுக்கு யாரைக் கடிந்துகொள்வது? நீதிபதியாகி, பாரதி தீர்ப்புரைக்கப் போகிறார். செல்லம்மாளுக்கு உபதேசமாக ஒரு செய்தியையும், பாப்பாவுக்குச் சொல்ல வேண்டிய உபதேசங்களைப் பாடலாகவும் ஆக்கி விடுகிறார். அதனை, நேரில் கேட்ட, கண்ட குவளைக் கண்ணன் கூறுகிறார்.

உடனே பாரதியார், ‘செல்லம்மா! இனி நீ குழந்தையை அடிக்காதே! குழந்தை பாடு, என் பாடு அதைத் தொடாதே! நான் குழந்தையை எங்கும் போகாமல் பார்த்துக்கொள்ளுகிறேன்’ என்று சொல்லிவிட்டுக் குழந்தையைப் பார்த்து, ‘சகுந்தலா பாப்பா! அழாதே. அம்மா இனி உன்னை அடிக்க மாட்டாள். உனக்குப் பாட்டுப் பாடுகிறேன்’ என்று சொல்லிவிட்டுக் குழந்தைக்குப் பாப்பா பாட்டுப் பாடினார்.

•

‘ஓடி விளையாடு பாப்பா’ - இந்த ‘ஓ’, சகுந்தலாப் பாப்பா மட்டுமல்ல, அம்மாவிடம் அடி வாங்கி அழும் எந்தப்பாப்பாவுக்குள் இருந்தும் எழுகிற ஓவெனும் அழுகைக்கு மாற்று மருந்தாக வரும் ஓங்கார ஒலியின் நீட்சியாய் அமைகிறது, பாரதி பாடிய பாப்பா பாட்டின் முதல் அடி, ‘ஓடி விளையாடு பாப்பா’

அழுகையை நிறுத்தி நிமிர்ந்து பார்க்கும் பாப்பாவின் முன் தன் ஆட்காட்டி விரல் நீட்டி, ‘நீ’ என்கிறது கவிக்குரல். ‘ஓய்ந்திருக்கலாகாது பாப்பா’ உபதேசமாகச் சொல்லியிருந்தால் செல்லம்மாவிடமிருந்து பாரதியார் பாட்டு வாங்கியிருக்க வேண்டும். ஆனால், இவர் பாடத் தொடங்கிவிட்டாரே. அது வாணியின் திருவாக்கு அல்லவா?

நீராடப் போன செல்லம்மாவுக்குள்ளும் குழந்தையின் குதூகலம் வந்திருக்க வேண்டும். தன் சிறுவயதில் தன் தாயோ, தந்தையோ இப்படிச் சொல்லியதே இல்லையே. இப்போதும் என்ன வாய்க்கிறது. அங்கே போகாதே. இங்கே இருக்காதே. அவனோடு சேராதே. இவளோடு பேசாதே - இப்படித்தானே எல்லோர் வீட்டிலும் உபதேசங்கள் நடக்கின்றன. இதற்கெல்லாம் ஒருப்படாத பாரதி,

'கூடி விளையாடு பாப்பா - ஒரு, குழந்தையை வையாதே பாப்பா' குழந்தையை வைத செல்லம்மாவையும் ஒரு குழந்தையாக்கிவிடுகிறது, தொடக்கம். பின்னர் நீளும் ஒவ்வொரு சரணங்களும் அவரவர் மனப் போக்கின்படி விரித்துப் பொருள் உணரவும், உணர்த்தவும் இடம்கொடுப்பவை.

'சின்னஞ்சிறு குருவி போலே' - இந்த உவமை, 'விட்டு விடுதலையாகி நிற்பாய் அந்தச் சிட்டுக்குருவியைப் போலே' என்ற பாட்டுக்குப் பிறந்த பாப்பா பாட்டு. அந்தப் பாட்டும் கூட, இந்தப் பாப்பாவுக்குச் சொன்ன பாட்டுத்தானே. அன்றைக்கும் இப்படித்தானே நடந்தது. மாதக் கடைசியின் ஒரு வெள்ளிக்கிழமை. 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு எழுதி வெளிவந்தால்தான் வீட்டில் அடுப்பெரியும் என்கிற நிலைமை. அதுவரைக்கும் வயிறு சும்மா இருக்குமா? சிட்டுக்குருவி சேர்ப்பதுபோல் சிறுகச் சேகரித்து உலைக்கு வைத்திருந்த அரிசிமணிகளை அள்ளி இறைத்துச் சிட்டுக்குருவிக்குப் போட்டுக்கொண்டு, இந்த மனுஷனும் மகளும் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் மனைவிக்கு எவ்வளவு ஆத்திரம் வரும்?

யதுகிரியிடம் செல்லம்மாள் சொல்கிறார். 'அரிசியைக் களைந்து உலையில் போடுவதற்காக வெளியில் வந்து பார்க்கிறேன். அரிசியில் கால் பங்கு இல்லை. எனக்கு அழுகை வந்துவிட்டது. இதைப் பார்த்த அவர், 'வா செல்லம்மா, இந்தக் குருவிகளைப் பார். எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றன. நாமும் அதைப்போல் ஏன் இருக்கக்கூடாது? நீயும் சதா தொந்தரவு செய்கிறாய். நானும் எப்பொழுதும் எரிந்துவிழுகிறேன். நமக்கு இந்தக் குருவிகள் ஒற்றுமை கற்றுக்கொடுக்கின்றன. நாம் அதைக் கவனியாமல் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறோம். நம்மைக் காட்டிலும் மூடர்கள் யார்?' என்று அகத்தாய்வு செய்திருக்கிறார் பாரதி.

ஆனாலும் ஆத்திரம் அடங்காமல், 'கத்திவிட்டு'ச் சென்ற செல்லம்மா சமையல் முடித்துவிட்டு வந்து பார்த்தால், அப்பாவும் மகளும் பாட்டுப்பாடி ஆடுகிறார்கள்.

***விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச்***
***சிட்டுக் குருவியினைப் போலே***
***எட்டுத் திசையும் பறந்து திரிகுவை***
***ஏறியக் காற்றில் விரைவோடு நீந்துவை***
***மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்***
***வானொளி என்னும் மதுவின் சுவையுண்டு (விட்டு...)***

அதே செய்தியை உள்ளடக்கிய குழந்தைப் பாடல், பாப்பா பாட்டு 'சின்னஞ்சிறு குருவி போலே - நீ திரிந்து' என்று சொல்கிறபோதே சிறகுகள் முளைத்துவிடுகின்றன. பாடல் 'பறந்து வா பாப்பா' என்று வளர்கிறது. வீட்டுக்குள் முடங்கி, ஓய்ந்துவிடாமல், ஓடி விளையாடப் போகச் சொல்லித் தொடங்கிய பாடல், சிறகுகளோடு வீட்டுக்கு(ள்) வரவேற்பது அழகு. இது சிட்டுக்குருவி குறித்து, பாரதி எழுதிய வியாசங்களை உள்ளடக்கியது. சிட்டுக்குருவி சொல்லிய மந்திரம், 'விடு... விடு... விடு...' என வளர்கிறதல்லவா?

அன்றைக்கு வந்த அதே சிட்டுக்குருவி, இன்றைக்கும் இந்தப் பாடலில் வந்துவிட்டது. செல்லம்மாவுக்குள்ளும் அந்தப் பக்குவநிலை வந்துவிட்டதனால், அமைதியாகக் குளிக்கப் போயிருக்கிறார். பாட்டு வளர்கிறது. குழந்தையின் உளப்பாங்கிற்கு ஏற்பவும், குழந்தை உளவியல் கூறுகள் நிரப்பியும் வளர்கிற பாடலில், பாப்பாவும் வளர்ந்து வளர்ந்து பெரியவள் ஆகிறாள். கோழி தோழியாகிறது. காக்காய் இரக்கத்திற்குரிய இன்னுயிர் ஆகிறது. பசுவும், நாயும், குதிரையும், மாடும், ஆடும் கூடி வருகிற இப்பாடலில் சூழலியல் சிந்தனை இலக்கியமாகிறது. உடனே படிக்கச் சொல்லியும் பாடம் நடத்துகிறார்.

***காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு***
***கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு***
***மாலை முழுதும் விளையாட்டு - என்று***
***வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!***

ஒரு பழக்கத்தைச் சொல்லிக் கடைப்பிடிக்க வைத்தால் அது வழக்கமாகிவிடும் அல்லவா? அதைச் சரியாகச் செய்துவிடுகிறது, இந்தச் சரணம். பின்னர் குருவடிவாகிக் குவலயம் தன்னில் ஒரு துயரும் இன்றி வாழ உபதேசம் செய்கிறார் பாரதி. பொய் சொல்லக்கூடாது, புறம் சொல்லல் ஆகாது. பாதகம் செய்பவரைக் கண்டால் பயம் கொள்ளலாகாது. துன்பம் நெருங்கிவந்தபோதும் சோர்ந்துவிடலாகாது என்று கூடாதனவற்றைக் கூப்பிட்டுச் சொல்லி, துன்பத்துக்கு மாற்றையும் சோம்பலுக்கு மருந்தையும், சொல்லிக் கொடுக்கிற பாரதி, தேசபக்தியை விட்டுவிடுவாரா, என்ன? கூடவே மொழிப்பற்றும் வந்துவிடுகிறது. எல்லாம் சொல்லிய பாரதி நிறைவாய்,

***உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்***
***உண்மையென்று தானறிதல் வேணும்***
***வயிர முடைய நெஞ்சு வேணும் - இது***
***வாழும் முறைமையடி பாப்பா!***

என்று முடிக்கிறபோது, தொடக்கமுதலாய், 16 பாடல் உறுப்புகள் அமைந்துவிடுகின்றன. அவை பதினாறு பேறும் தருகின்ற பாடலாக அமைந்து வாழும் முறைமையை வகைப்படுத்திச் சொல்லி நிறைகிறது.

பாப்பா பாட்டு என்றாலும் இது பாட்டியாகி வளர்கிற வரைக்கும் பெண்மைக்கான வாழ்முறையை வழங்கிவிடுகிறது. ஆத்திசூடி இளையோர் இலக்கியம் என்றால், அதற்குத் தாய் பாரதியின் பாப்பாப் பாட்டு.

•

இந்தப் 'பாப்பா பாட்டு' பாரதியாரால் 1913-ஆம் வருஷம் பாடப்பட்டது. இதுவே 'பாப்பா பாட்டு' பாடியதற்குக் காரணமும் சமயமும் ஆகும். என்று சொல்லி முடிக்கிறார் குவளைக் கண்ணன். எழுதப்பட்ட ஆண்டு இதுவென்றாலும் எப்போதும் நின்று ஒலிக்கும் வாழ்வியல் நெறிப்பாடலாக இது விளங்குகின்றது.



sethupathi@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

## - மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

சென்றமாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணத்தில் ஆரணிய காண்டத்தின் நான்காவது படலமாகிய சடாயுகாண் படலத்துள் சென்று, கம்பனின் கவிதைத்தேனை உண்டு சுவைத்தோம். சடாயுவைக் கண்டு உரையாடிய பின் இராமன், சீதை, இலக்குவன் மூவரும் அவ்விடத்தைக் கடந்து பஞ்சவடி நோக்கிச் செல்கிறார்கள். அவர்கள் பஞ்சவடியில் தங்கியிருந்தபோது அவர்களைச் சூர்ப்பணகை எதிர்கொள்ளும் கம்பராமாயணக் கதையின் பெரும் திருப்பு முனையாக அமைந்த ஆரணிய காண்டத்தின் ஐந்தாவது படலமாகிய சூர்ப்பணகைப் படலத்துக்குள் இப்போது நுழைகின்றோம். இப்படலத்தில் 143 அழகான செய்யுள்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தேர்ந்தெடுத்த சில சிறந்த செய்யுள்களுடன் இந்த இதழில் உங்களுடன் இணைந்துகொள்கிறேன். சில பிரதிகளில் இப்படலம், பஞ்சவடிப் படலம், சூர்ப்பணகி மூக்கரி படலம் என வேறு பெயர்களால் குறிப்பிடப் படுகின்றது.

சூர்ப்பணகை இராவணனின் தங்கை. அவள் காலகேயருள் ஒருவனான வித்யுச்சிகுவன் என்பானைத் திருமணம் செய்தவள். காலகேயர்களுக்கெதிரான போரில் அவளுடைய கணவன் இராவணனால் கொல்லப்படுகின்றான். அதனால் கலங்கி நின்ற சூர்ப்பணகையை இராவணன் சமாதானப்படுத்தி, தண்டக வனத்தின் ஒரு பகுதியில் அவளுக்கு ஒரு வாழ்விடத்தை நிறுவி, தனது ஒன்றுவிட்ட சகோதரனாகிய கரன் என்பானையும் அவளுக்கு உதவியாக இருக்கப் பணித்துப் பெரும் படையொன்றினையும் கொடுத்து அவளின் விருப்பப்படி அங்கே ஆட்சி செய்யுமாறு அனுப்பி வைக்க அவள் அவ்வனத்திலேயுள்ள முனிவர்கள் செய்யும் வேள்விகளை அழித்து அவர்களுக்குப் பெருந் தீமைகள் செய்து வந்தாள் என்பது புராணக் கதை.

இராம இலக்குமணர்கள் பஞ்சவடி நோக்கிச் செல்லும் வழியில் கோதாவரி நதியைக் காண்கின்றார்கள். கோதாவரி நதியின் சிறப்பையும் வளங்களையும் பற்றி 7 செய்யுள்களில் கம்பர் வருணனை செய்கின்றார். முதற் செய்யுளே மிக அழகானது.

> “
> **இராவணனுக்கு உடன் பிறந்தவளாக இருந்து, அவன் அழிந்து படும்படியாக இருந்தவள் என்பதால், ஒருவர் பிறக்கின்ற போதே அவருடன் பிறந்து அவரைக் கொல்லும் கொடிய நோயைப் போன்றவள் என்று சூர்ப்பணகையை உடன்பிறந்து கொல்லும் நோய்க்கு உவமை கூறுவது சிறப்பாகும்.**
> ”

***புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி***
***அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்***
***சவியுறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமும்***
***தழுவிச் சான்றோர்***
***கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.***

கம்ப. ஆரணிய. 225

புவியினுக் கணியாய் - பூமி என்னும் பெண்ணுக்கு அணிகலனாக விளங்கி, ஆன்ற பொருள் தந்து - மலையிலிருந்து சிறந்த செல்வங்களையெல்லாம் அடித்துக்கொண்டு வருவதுடன், நிலத்தைச் செழுமையாக்கி பல விளைபொருள்களையும் கொடுத்து, புலத்திற் றாகி - விளைநிலத்தைச் செழிப்பானதாக ஆக்கி, அவியகத் துறைகள் தாங்கி - இறங்கு நீர்த்துறைகள் ஆங்காங்கு அமைந்ததாய், ஐந்திணை நெறியளாவிச் - குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐவகை நிலங்களையும் கடந்து செல்வதாக, சவியுறத் தெளிந்து - மிக ஆழத்திலுள்ள பொருள்களும் தெரியத்தக்கதாகத் தெளிந்த நீரையுடையதாக, தண்ணென்று ஒழுக்கமும் தழுவி - குளிர்ச்சியான நீர்ப்பெருக்கையும் கொண்டதாக, சான்றோர் கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார் - சான்றோர் இயற்றிய கவிதையைப்போலக் கிடந்த கோதாவரி ஆற்றினை இராம இலக்கு மணர்கள் பார்த்தார்கள் என்பது பொருள்.

இச்செய்யுளில் கோதாவரி ஆற்றை சான்றோர் செய்யுளுக்கு உவமையாகக் கூறி சான்றோரின் கவிதைக்குரிய பண்புகளைக் கோதாவரி ஆற்றின் சிறப்புகளோடு ஒப்பிட்டுச் சிலேடை அணிநயமும், உவமை அணி நயமும் பொருந்தக் கம்பர் இச்செய்யுளைப் படைத்துள்ள சிறப்பை நோக்கலாம்.

சான்றோர் கவிதைக்குரிய பண்புகளாக, (1) புவியினுக்கு அணியாதல் - புவியிலுள்ளோரால் போற்றப்படக் கூடிய அணிநயமுடையதாதல் (2) ஆன்ற பொருள் தருதல் - அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்களை உணர்த்துதல், (3) புலத்திற்

றாதல் - கற்போருக்கு நுண்ணறிவைக் கொடுப்பதாக அமைதல், (4) அவியகத் துறைகள் தாங்குதல் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் தமிழிலக்கணத்துள் அமைந்து அகம், புறம் என்னும் ஒழுக்கங்களின் துறைகளைத் தாங்குதல், (5) ஐந்திணை நெறியளாவுதல் - குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் ஆகிய ஐவகை நிலங்களுக்கும் உரியதாக உள்ள புணர்தல், இருத்தல், பிரிதல், இரங்கல், ஊடல் என்னும் ஐவகை ஒழுக்கங்களையும் உரைப்பதாக இருத்தல், (6) சவியுறத் தெளிதல் - மயங்க வைத்தலென்னும் குற்றத்திற்குச் சிறிதும் இடமின்றித் தெளிவாகப் பொருள் விளங்க வைத்தல், (7) தண்ணென்ற ஒழுக்கம் தழுவுதல் - நல்லொழுக்கத்தை உணர்த்துவதுடன் ஆற்றொழுக்கான ஓசையோடு செல்லும் நடையுள்ளதாக இருத்தல் ஆகியன சான்றோர் கவிதைகளின் பண்புகள் என்றுகூறி இந்த ஏழு பண்புகளையும் கோதாவரி ஆற்றுக்கும் அதன் வளத்துக்கும் ஒப்பாகக் கம்பர் கூறியுள்ள சிறப்பை இச்செய்யுளில் பார்க்கிறோம். கவிதை என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணமாக இச்செய்யுளைக் கம்பர் வடித்துள்ளார் என்பதும் சிறப்புடையதாகும்.

மூவரும் கோதாவரி ஆற்றை எப்படிப் பார்த்தார்கள் என்று வருணித்த கம்பர் அம் மூவரையும் கோதாவரி ஆறு எவ்வாறு பார்த்தது என்பதையும் வருணிக்கின்றார்.

***எழுவுறு காதலால் இங்கு இரைத்திரைத்து ஏங்கி ஏங்கிப்***
***பழுவநாள் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர***
***வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி***
***அழுவதும் ஒத்ததால்அவ் அலங்குநீ ராறு மன்னோ.***

கம்ப. ஆரணிய. 227

அவ்வலங்குநீ ராறு - அசைந்து பெருகுகின்ற நீரையுடைய அந்தக் கோதாவரி ஆறு, வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி - குற்றமற்ற வாய்மை தவறாத தயரதனது மைந்தர்களாகிய இராம இலக்குமணர்கள் அந்தக் காட்டுக்கு வந்து வசிக்கின்ற வருத்தம் தரக்கூடிய அந்த நிலைமையைப் பார்த்து, எழுவுறு காதலால் - அவர்களிடத்திலே மிகுதியாக எழுகின்ற அன்பினாலே, ஏங்கி ஏங்கி - மிகுந்த ஏக்கத்துடன், பழுவநாள் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர - தொகையாக அன்று மலர்ந்த குவளை மலர்களாகிய தனது கண்களிலிருந்து தேனாகிய நீர்த்துளி வழிந்து பரவ, இரைத்து இரைத்து அழுவதும் ஒத்தது - அலைகளினால் அடித்தடித்துக் கதறிப் புலம்புவது போன்று கோதாவரி ஆறு காணப்பட்டதாகக் கம்பரின் வருணனை பொருள் தருகிறது.

அன்று மலர்ந்த கருங்குவளை மலர்களிலிருந்து தேன் வழிந்தோட மிகுந்த ஆரவாரத்துடன் பெருகிப் பாய்கின்ற ஆற்றை நோக்கினால் அது தயரதனது மைந்தர்கள் வனத்தில் உறைகின்ற துயர நிலையைப் பார்த்தும், பின்னர் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னலை எண்ணியும் ஏங்கிக் கண்ணீர் பெருகிக் கலங்கி அழுவது போல இருப்பதாகத் தற்குறிப்பேற்ற அணிநயத்துடன் கம்பர் அதனை வருணித்துள்ளார். இதே போன்ற தற்குறிப்பேற்ற வருணனையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் படைத்திருப்பார். 'புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி, வையை என்ற பொய்யாக் குலக்கொடி, தையற்கு உறுவது தானறிந்தனள்போல், புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக் கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி' என்ற தொடரிலே மதுரையை நோக்கி வருகின்றபோது கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேரவிருக்கின்ற துன்பத்தை முன்னரே அறிந்ததைப்போல வைகையாறு கண்ணீர் சொரிவதாகவும் அதனை தன்மீது ஆடையாகப் போர்த்திருக்கின்ற நறுமணமுள்ள பூக்களுக்குள்ளே மறைத்துக்கொள்வதாகவும் தற்குறிப்பேற்ற அணிநயத்துடன் இளங்கோவடிகள் வருணனை செய்வதைப்போலவே கம்பரின் வருணனையும் ஒத்துப்போவதைக் காண்கிறோம். மேலும், 'வாய்மை மைந்தர்' என்று தயரதனை வாய்மைக்கு உருவகப்படுத்தி யிருக்கின்ற சிறப்பையும் இச்செய்யுளில் நோக்கலாம்.

இராமனும் சீதையும் கோதாவரி ஆற்றின் அழகுக் காட்சிகளையும், அதன் வளங்களையும் பார்த்தபடி வருகின்றபோது அவர்களிடம் ஏற்படும் மனவோட்டத்தைக் கம்பர் படம்பிடித்துக்காட்டுவது போலச் சில செய்யுள்கள் வருகின்றன. அவற்றுள் ஒன்று.

***ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்***
***சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்***
***மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்***
***போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.***

கம்ப. ஆரணிய. 229

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் - அன்னப் பறவையொன்று ஓரமாக ஒதுங்கி நடந்து செல்வதைக் கண்ட இராமன், உழையள் ஆகும் சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான் - தன்னருகே வருகின்ற சீதையின் நடையைப் பார்த்துச் சிறிய ஒரு புன்சிரிப்பை உதிர்த்தான். ஆண்டு வந்துநீர் உண்டு மீளும் போதகம் நடப்ப நோக்கி - அப்போது அந்த ஆற்றுக்கு வந்து நீர் பருகிவிட்டுப் போகின்ற ஆண் யானை ஒன்று நடப்பதைப் பார்த்து, மாதவள் தானும் புதியதோர் முறுவல் பூத்தாள் - அந்த சீதையும் இராமனை நோக்கி இளநகை புரிந்தாள் என்பது பொருள்.



சீதையின் நடைக்குத் தனது நடை ஒப்பாக மாட்டாது என்று அன்னப் பறவை ஒதுங்கி நடந்து சென்றது என்பதாகச் சீதையின் நடையின் சிறப்பைத்

தனது புன்சிரிப்பால் இராமன் வெளிப்படுத்தினான் என்றும் அதேபோல நீருண்டு மீண்ட யானை இராமனின் நடைக்கு ஒப்பாகாமல் விலகிச் செல்வதாக சீதையும் எண்ணி இராமனின் நடையின் சிறப்பைத் தன் புன்சிரிப்பால் வெளிப்படுத்தினாள் என்றும் இராமனும் சீதையும் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த இருவரது எண்ணவோட்டத்தையும் கம்பர் நயமாக வெளிப்படுத்துவது சிறப்பாக இருக்கிறது. பெண்ணின் நடையை அன்னத்தின் நடைக்கும், ஆணின் நடையை யானையின் நடைக்கும் ஒப்பிடுவது கவிஞர்களின் இயல்பு. ஆனால் சீதையின் நடைக்கு அன்னத்தின் நடை தோற்றுப் போனதாகவும், இராமனின் நடைக்கு யானையின் நடை தோற்றுப்போனதாகவும் அதனாலே அன்னம் ஒதுங்கிப் போனதாகவும், யானை அங்கிருந்து மீண்டு சென்றுவிட்டதாகவும் கம்பர் கற்பனை செய்வது தற்குறிப்பேற்ற அணிநயமாகும். இவ்வாறாக கோதாவரி ஆற்றின் நெடுகக் காணப்படும் மலர்கள், பறவைகள், விலங்குகள் எல்லாவற்றிலும் ஒருவரின் அழகை மற்றவர் கண்டு அகத்திலே மகிழ்ச்சி கொள்வதாகக் கம்பர் சில செய்யுள்களை வடித்துள்ளார்.

இவ்வாறு, கோதாவரியின் அழகையும், சிறப்பையும் கண்டவாறு சென்றவர்கள் பஞ்சவடியை அடைந்து அங்கேயுள்ள தனியான, அமைதியான சோலையொன்றில் இலக்குவனால் சமைக்கப்பட்ட ஒரு பூஞ்சாலையொன்றில் தங்கி மூன்றாண்டு காலம் எவ்விதமான சிக்கலுமின்றி வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வேளையில்தான், காப்பியத்தின் திருப்புமுனையாக அவ்விடத்துக்குச் சூர்ப்பணகையின் வருகையும், அதனால் அங்கே அவள் இராமனைக் கண்டு அவன்மீது காதல் கொள்வதும் நிகழ்கிறது. அங்கே வரும் சூர்ப்பணகையைக் குறித்துக் கம்பர் வருணனை செய்கின்ற சில செய்யுள்களில் ஒன்றை இங்கே பார்க்கலாம்.

***நீலமா மணிநிற நிருதர் வேந்தனை***
***மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்***
***மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை***
***காலமோர்ந்து உடனுறை கடிய நோயனாள்***

கம்ப. ஆரணிய. 232

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை - சிறந்த நீல மணிபோன்று ஒளிவீசும் கருநிறத்தையுடைய அரக்கர்களுக்கு அரசனாகிய இராவணனை, மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள் - அவன் தன் குலத்தோடு அழிந்து போகும்படி செய்யும் வலிமையுள்ளவளும், மேலைநாள் உயிரொடும் பிறந்து - முன்னாளில் ஒருவரின் பிறப்போடு சேர்ந்து பிறந்து, தான் விளை காலமோர்ந்து - தனக்குப் பயன் விளைதற்குரிய காலத்தை எதிர்பார்த்திருந்து தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய, உடனுறை கடிய நோயனாள் - உயிரோடு கூடவே சேர்ந்திருக்கின்ற கொடிய நோயை ஒத்தவள் என்று சூர்ப்பணகைக்கு அறிமுகம் தருகின்றார் கம்பர்.

இராவணன் இராமனுக்குப் பகையாகித் தன் குலத்தோடு அழிவதற்குக் காரணமாக அமைந்தவள் சூர்ப்பணகை என்பதை வேந்தனை மூலநாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள் என்று கம்பர் குறிப்பிடுகிறார், 'உடன் பிறந்தார், சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம் உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்றபடி இராவணனுக்கு உடன் பிறந்தவளாக இருந்து, அவன் அழிந்துபடும்படியாக இருந்தவள் என்பதால், ஒருவர் பிறக்கின்ற போதே அவருடன் பிறந்து அவரைக் கொல்லும் கொடிய நோயைப் போன்றவள் என்று சூர்ப்பணகையை உடன்பிறந்தே கொல்லும் நோய்க்கு உவமை கூறுவது சிறப்பாகும். இராவணனின் அழிவுக்கு ஏதோ ஒருவகையில் காரணமாக இருக்கின்றார்கள் என்பதால், எதிர்மறைப் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் போதெல்லாம், அவர்களை இராவணனோடு தொடர்புபடுத்திக் காட்டுவது கம்பரின் உத்தியாக இருக்கிறது. முன்னர், கூனியை அறிமுகப்படுத்தும்போதும், தாடகையை அறிமுகப்படுத்தும்போதும் இவ்வாறு இராவணனோடு தொடர்புபடுத்தியிருந்ததை நோக்கலாம்.

தனிமையில் தண்டகவனத்தில் சுற்றிக்கொண்டிருந்த சூர்ப்பணகை தற்செயலாகப் பஞ்சவடியில் இராமன் இருந்த அந்தச் சோலைக்கு வந்தவள் இராமனைக் காண்கின்றாள்.

***எண்தகும் இமையவர் அரக்கர் எங்கள்மேல்***
***விண்டனர் விலக்குதி என்ன மேலைநாள்***
***அண்டசத்து அறிதுயில் துறந்த ஐயனைக்***
***கண்டனள் தன்கிளைக்கு இறுதி காட்டுவாள்.***

கம்ப. ஆரணிய. 235

மேலைநாள் எண்தகும் இமையவர் எங்கள்மேல் - முன்னொரு காலத்தில் யாவராலும் மதிக்கத்தக்க தேவர்களாகிய எங்கள்மேல், அரக்கர் விண்டனர் - அரக்கர்கள் பகை கொண்டார்கள், விலக்குதி என்ன - அவர்களாலாகிய துன்பத்தைத் தீர்க்க வேண்டுமென்று தேவர்கள் வேண்ட, அண்டசத்து அறிதுயில் துறந்த ஐயனை - ஆதிசேசனைப் படுக்கையாகக் கொண்டிருந்த துயிலை நீக்கி வந்த திருமாலின் அவதாரமான இராமனை, கண்டனள் தன்கிளைக்கு இறுதி காட்டுவாள் - தனது சுற்றத்தவர்கள் எல்லோருக்கும் அழிவைக் காட்டுபவளான சூர்ப்பணகை கண்டாள் என்பது பொருள்.

அவள் இராமனைப் பார்த்ததுதான் இராவணனின் வீழ்ச்சிக்கும், அவனது குலத்தின் அழிவுக்கும் இராமாயண காவியத்துக்கும் மையப்புள்ளியாக அமைந்தது. எனவேதான் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள் என்று சூர்ப்பணகையைக் குறித்துக் கம்பர் மிகுந்த நயத்துடன் கூறியுள்ளதை நோக்கலாம். சூர்ப்பணகை இராமனைக் காண நேர்ந்ததையும் அவள் அவனின் அழகில் ஈர்க்கப்படுவதையும், அதனைத் தொடர்ந்து நிகழ்வனவற்றையும் சூர்ப்பணகைப் படலத்தின் இன்னொரு பகுதியில் அடுத்த இதழில் எடுத்து வருகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 117

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-117 வினா

### இடமிருந்து வலம்

1 ஈரான் உச்சத் தலைவர்
2 பிராமணர்
5 சேக்கிழார் இயற்றிய நூல்
6 கருவாட்டுக்குப் பேர்போன மீன்
7 யூதர், கிறீத்தவர், இசுலாமியரின் பிதாமகர்
8 வனம்
9 நீரில் வாழும் புள்வகை
11 கேள்விபதில்
13 தமிழக திரைப்படப் பேட்டை
15 மயிர்க்கூச்செறி

### மேலிருந்து கீழ்

1 மார்ட்டின் விக்கிரமசிங்காவின் பேர்போன நாவல்
3 புனித இடம்
4 அமீரகத்தின் தலைநகர்
6 ஒருவரின் சாதனையை மெச்சி நடத்தப்படும் நிகழ்ச்சி
7 சத்தம் சந்தடி
8 ஓர் ஆபிரிக்க நாடு
10 துப்பாக்கி
11 எடுத்துரை
12 ஒரு சிற்றுண்டி
14 இலக்கியம் போற்றும் குறுநில வள்ளல்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-116-க்கான விடைகள்



## தமிழ்வலை-116 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

உமா கதிர், ஏஜக்ஸ்.
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ
நேசன் சபாராணி, பிரான்ஸ்

### பரிசுபெறும் போட்டியாளர்

**நவமணி நவரட்ணம்,**
**ஸ்கார்பரோ.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# காயாத ஈரம்

- பவானி சற்குணசெல்வம்



மலர்களை இரசிக்கும் கண்கள், மரத்தைக்கூட அணுவணுவாக இரசிக்கும் உள்ளம். அழகான பொருட்களை மேயும் அவள் விழிகள் சிலநேரங்களில் ஒரு புள்ளியில் நிலைத்து நின்ற கணங்களை நான் அவதானிக்கத் தவறவில்லை. சரி வாருங்கள் ஒரு தமிழ்ப்பாட்டுக் கேட்போம் என்றேன். 'காலங்களில் அவள் வசந்தம்...'

'தயவு செய்து நிப்பாட்டுங்கோ' என்றாள் நிப்பாட்டினேன். அது ஒரு நத்தார் விடுமுறைக்காலம் கடைகள் எல்லாம் விதம்வித மான பொருட்களால் நிரப்பப்பட்டிருந்தன. ஒரு சிறு இனிப்புப் பொதியை வாங்கி அவள் கைகளில் திணித்தேன். அப்படியொரு அழகிய முறுவல். அதை மீண்டும் காண நான் ஏழு பிறவிகள் எடுக்க வேண்டும். அதன்பின் நான் என் வழியில் அவள் தன்வழியில் என்னைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கையசைத்தவாறே சென்றாள். நானும் அப்படியே.

மீண்டும் அவளை ஒருமுறை சந்திக்க மனம் நாடியது. நான் அழைத்தால் அவள் வருவாள் என்பதும் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் நான் அவளிடம் அதிகம் பேசியதில்லை. மௌனமும் அழுகையும்தான் அவளின் மொழிகளாகின. அவளை நான் முதன்முதல் சந்தித்தபோது அவள் என்னைப் பார்த்து அழுதாள். ஆனால் நான்... நான் அழப்படாதாம். அழுபவர்கள் ஒருபோதும் இவ்வுலகில் நிபுணர்கள் ஆகிவிட முடியாது. அப்படிப்பட்டவர்கள் விருதுகளோ பரிசில்களோ பெற்றதாக இங்கொரு சரித்திரமும் இல்லை.

ஆர்ப்பரிக்கும் அவள் விழிகளும் சிறகாய்த் துடித்த அவள் விரல்களும். கண்ணீரில் நனைந்து ஒரு பூச்சியின் செட்டை போல் படபடத்த அவள் இமைகளும் என் கனவில்...

அவள் ஏதோ ஒரு ஏக்கத்துடன் என்னைப் பார்த்த பார்வை எனது உறக்கத்தைத் தன்பால் கவ்விக் கொண்டது. ஒரு குவளை தண்ணீரையும் கண்ணீரைத் துடைப்பதற்கு ஒரு கைக்குட்டையையும் கொடுப்பதைவிட என்னால் என்னதான் செய்யமுடியும். எல்லாமே கையறுநிலைதான்.

எப்படியாவது அவளைச் சந்திக்க வேண்டும் எனக் கங்கணங் கட்டிக்கொண்டு புறப்பட்டேன். அவளின் வதிவிடத்திற்கு அருகிலுள்ள கோப்பிக் கடையில் நானும் அவளும் தனியே அமர்ந்திருந்தோம். கோப்பி வேண்டாம் தண்ணீர் போதும் என்றாள். அந்தத் தண்ணீருக்குப் பரிசாக மீண்டும் கண்ணீரையே பரிசளித்தாள். வார்த்தைகள் இல்லை. நான் வெகு தூரம் பயணித்து வந்ததும் அவளுக்குத் தெரியும். ஏன் அழுகிறீர்கள் என்று கேட்க முடியாது. ஏன் அன்றொருநாள் சிரித்தீர்கள் என்றும் கேட்க முடியாது. இந்த இரண்டுக்கும் இடையில் கேட்பதற்கு வேறொன்றும் இருக்கவும் இல்லை. எதையாவது கேட்டால் அவள் உடைந்து விடுவாள் என்ற பயம் மறுபுறம்.

'நன்றாக அழுங்கள்! அது என் முன்னிலையில்தான் உங்களுக்குச் சாத்தியமென்றால் நன்றாக அழுங்கள்! நான் இன்று முழுக்க இருந்து அதைப் பார்த்துவிட்டுத் திரும்பிப்போக இருண்டுவிடும். அந்தநேரம் வந்து கள்வன் என்னைத் தூக்கிக் கொண்டு போகட்டும்' என்றேன்.

இல்லை என்ற பாணியில் கையை அசைத்தாள். நீங்கள் கவனமாகப் போய்ச் சேருங்கள், என்னை அழ அனுமதித்ததற்கு நன்றி எனது மனப்பாரமெல்லாம் இறங்கியதுபோல் உள்ளது என்று கூறினாள்.

'என்னை நம்புகிறீர்களா ?' என்று கேட்டேன் 'ஆம்' என்ற பாணியில் தலையசைத்தாள். 'முன்பின் தெரியாத என்னை நம்பக் காரணம் என்ன' என்று கேட்டேன். 'தெரியாது' என்று கூறினாள். 'அப்படியானால் நீங்கள் ஏன் அழுகிறீர்கள் என்பதை எனக்குச் சுருக்கமாக எழுதியாவது தர முடியுமா?' என்று கேட்டேன். 'ஆம்' என்று தலையசைத்தாள். 'ஒரு மாதம் களித்து நான் மீண்டும் உங்களை இதே இடத்தில் வந்து சந்திக்கிறேன்' என்று கூறினேன். 'இல்லை வசதியாக இருந்தால் அடுத்தவாரம் வாருங்கள்' என்று விடை பகன்று சென்றாள்.

'நான் குரும்பசிட்டி என்ற இடத்தில் பிறந்தேன். அம்மா அப்பாவுக்கு நான் ஒரேயொரு பெண் குழந்தை. எனக்கொரு அண்ணன். அரம்ப காலங்கள் குதூகலமாகத்தான் களிந்தன.

போர்க்கால இடப்பெயர்வுகளும் அதற்குப் பின்னான உற வினர்களின் இழப்புகளும் ஆறாத்துயரை மனதில் விதைத்தி ருந்தது. வழமைபோல் ஒருநாள் வீட்டைவிட்டு வெளிக்கிட்டு வேலைக்குப்போன அப்பா திரும்பி வரவேயில்லை. அப் பொழுது எனக்கு வயது பன்னிரண்டு. அப்பாவுக்கு நான் செல்லப்பிள்ளை. நானும் அம்மாவும் அண்ணாவும் அப்பா வைத் தேடி மனித உரிமை அமைப்புகளுக்கும் நகர்காவலர் நிலையங்களுக்கும் ஏனைய பலரிடமும் சென்று களைத்துப் போய் பேராட்டங்களிலும் ஈடுபட்டோம். சில நேரங்களில் நாள் முழுவதும் வெட்டவெயிலில் நின்று போராட்டங்களை நடத்தி ஒரு பயனும் கிடைக்கவில்லை. காலப் போக்கில் அம்மாவும் நோயுற்று இறந்துவிட்டார். அம்மாவின் இழப்பை என்னால் தாங்கமுடியவில்லை எனினும் இந்தச் சுமையான வாழ்வின் ஏமாற்றங்களையும் கொடுமைகளையும் தாங்கிக்கொள்ளும் சக்தி அம்மாவுக்கு இல்லை என்பது நிதர்சனமானது. அதன் பின் தொடர்ந்து நடந்த போர்ச்சூழல்களால் நானும் அண்ணா வும் பேரின்னல்களைத் தாண்டி பல தடவைகள் இடம் பெயர்ந்து இராமநாதபுரத்தில் வாழ்ந்து வந்தோம். அம்மா எம்மை விட்டுப் பிரிந்தபோது எனக்கு வயது பதினேழு. அதன்பின் நடைபெற்ற இடைவிடாத இடப்பெயர்வுகளாலும் போரினால் ஏற்பட்ட அச்சுறுத்தல்களாலும் எனது கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டது. சிறிது காலத்தின் பின் அருகிலிருந்த முதியோரில்லத்தில் பணிபுரிந்தேன். அண்ணா வேலைக்குப் போகும் நேரங்களில் வீட்டில் தனித்திருக்காது பக்கத்து வீட்டுத் தாத்தா பாட்டியின் வீட்டுக்குச் செல்வேன். அவர்கள் எனக்கு ஆதரவாக இருந்தார்கள். நானும் அவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன்.

தீடீரென ஒருநாள் அதிகாலை நான்கு மணிக்கு இனந் தெரி யாத சில நபர்கள் வீட்டிற்கு வந்து அண்ணாவை வெளியே அழைத்து விசாரித்தனர். நீண்டநேர வாக்குவாதங்களின் பின் அவர்கள் சென்று விட்டார்கள். நான் என்ன ஏது என்று கேட்ட தற்கு 'ஒன்றுமில்லை நீ இன்று வேலைக்குப் போக வேண்டாம் அந்தத் தாத்தா பாட்டியுடன் போய்க் கவனமாக இரு. நான் வேலை விட்டு வந்து மிகுதியைக் கூறுகிறேன்' என்று என் னிடம் கூறிவிட்டு வேலைக்குப் புறப்பட்டார்.

அண்ணா என்னை வந்து கூட்டிச் செல்வார் என்று பாட்டியுடன் காத்திருந்தேன். அவர் வரவில்லை. அதன்பின் அண்ணா சிலநேரம் வீட்டில் நிற்கலாம் என நினைத்து தாத்தா பாட்டி யுடன் வீட்டுக்குச் சென்று பார்த்தேன். வீட்டுக்கதவு திறந்து கிடந்தது. 'அண்ணா ஏன் என்னை வந்து கூப்பிடேல்லை' என்று கேட்டுக்கொண்டு உள்ளே நுளைந்தேன். வீட்டிலுள்ள பொருட்களெல்லாம் அள்ளி வீசப்பட்டிருந்தது. அந்த நான்கு இனந்தெரியாதவர்களும் எனது அறையினுள்ளிருந்து வெளியே வந்தனர். ஏதோவொரு துர்நாற்றம் வீசியது. அதிர்ந்து போனேன். தாத்தாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு வெளியே ஓட முயன்றேன். ஒருவன் தாத்தாவையும் பாட்டியை யும் தள்ளி விழுத்தினான். இன்னொருவன் எனது வாயைத் தன் கைகளால் பொத்தி என்னை இழுத்துச் சென்றான். அவன்... இல்லை... அவர்கள்... என்னை... என்னை...'

அதன்பின் சில வரிகள் மை கரைந்திருந்ததால் வாசிக்க முடியாமல் இருந்தது.

'நான் கண்விழித்தபோது ஒரு மருத்துவமனையில், கட்டிலில் படுத்திருந்தேன். தூக்க முடியாதளவுக்கு உடல் பாரமாக இருந்தது. அக்குவேறு ஆணி வேறாக எனது உலலைக் கழற்றிப் போட்டது போல் இருந்தது. எனது இடுப்பை மெல் லத்தூக்கி எனது கால்களுக்கிடையில் பெரியதொரு துணியை மடித்துச் செருகினாள் அந்த மருத்துவத்தாதி. தலையை மெல்ல நிமிர்த்திப் பார்த்தேன். எனக்கு இரத்தப் பெருக்கு ஏற் றப்பட்டுக் கொண்டிருந்தது. ஓவென்று அலறினேன். எனக்கு என்ன நடந்தது ? நான் எப்படி இங்கு வந்தேன் ? நான் எங்கு இருக்கிறேன் ? எனக் கேட்டேன்.

'உன்னை மயங்கிய நிலையில் அலங்கோலமாக தெரு வோரத்தில் கண்ட வழிப்போக்கர் ஒருவர் எங்களிடம் சிகிச் சைக்காகக் கொண்டுவந்தார்.' என்று ஒரு மருத்துவத்தாதி கூறினார்.

ஐயோ என் அண்ணா எங்கே ? எனக்கு அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை, அண்ணா மட்டும்தான்... அவர் எங்கே... எங்கே... நான் அவரைத் தேட வேண்டும். அவருக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ தெரியாது... என்று அழுது புலம்பினேன். என்னால் அழவும் முடியவில்லை எழுந்திருக்கவும் முடிய வில்லை. எனக்கு நடந்த கொடுமையை நினைந்தழுவதா ? அண்ணாவைத் தேடுவதா ? அம்மா அப்பாவை நினைத்து வருந்துவதா ? எதை நினைத்தழுதும் பயனற்ற நிலையில் அந்தத் தாதியின் தோள்களில் சோர்ந்து சரிகிறேன். அவள் என்னைப் பலவாறு தேற்றிப் பராமரித்தாள்.

சில நாட்கள் கழித்துப் பாட்டியும் தாத்தாவும் என்னைப் பார்க்க வந்தனர். 'அண்ணா இன்னும் திரும்பி வரவில்லை இந்த நிலையில் நீ இனியும் இங்கு இருப்பது உனக்கு ஆபத்து. நாங்கள் இருவரும் வயதுபோனவர்கள். எங்களால் உன்னைப் பாதுகாக்க முடியாது, எனவே நாங்கள் கனடா விலிருக்கும் உனது மாமாவுடன் தொடர்பு கொண்டோம். அவர் விரைவில் உன்னைக் கனடாவுக்குக் கூப்பிட ஒழுங்கு செய்வதாகக் கூறினார். உனது அண்ணாவின் விடயமாக எல்லா மனித உரிமை அமைப்புகளுக்கும் தகவல் கொடுத் துள்ளோம்.' என்று கூறினார்.

'எல்லாம் இழந்து நிர்க்கதியாக இருந்த எனக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. இனியும் நான் ஏன் வாழ வேண்டும் தற்கொலை செய்து கொண்டால் என்ன... எனக்கு இந்த உலகில் வாழத் துணிவில்லை. எனக்கு அந்தத் தகுதியும் இல்லை...' என்று ஓ...வென அலறினேன்.

'நீ வாழவேண்டிய பிள்ளை மற்றவர்கள் விட்ட தவறுக்காக நீ ஏன் உன்னைத் தண்டிக்க வேண்டும் ? இங்கே இருந்தால் உன்னுடைய உயிருக்கும் ஆபத்து. மாமாவின் சொல்லைக் கேட்டு வேறு எங்காவது சென்று புதிதாக ஒரு வாழ்வை உனக்காக அமைத்துக்கொள்' என்று கூறி பாட்டி என்னை இறுகத் தழுவிக் கொண்டார். தாத்தாவும் பாட்டியும் ஒவ் வொரு நாளும் வந்து என்னைப் பார்த்தனர், ஆறுதல் வார்த் தைகள் கூறினர். அண்ணாவுக்கு என்ன நடந்திருக்கும் என்று தெரியாமல் நான் ஒரிடமும் போகமாட்டேனென்று அடம் பிடித்தேன்.

மாமா அனுப்பிய பிரயாணத் தரகரும் என்னை வந்து சந்தித் தார். 'அண்ணாவின் விடயத்தை நாங்கள் பார்த்துக் கொள் கிறோம் அதுபற்றி உனக்குத் தகவல் தருகிறோம் நீ சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தித் தப்பித்துக்கொள் எங்களாலும் உன்னைப் பாதுகாக்க முடியாது என்பது புலனாகிய பின் இங்கிருந்து அல்லல்ப்படாதே' என்று பாட்டி கூறினார். தரகரு டனும் மாமாவுடனும் கதைத்து பாட்டி பிரயாண ஒழுங்கு

களைச் செய்தார். இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடொன்றிற்கு வந்து, பின் ஐரோப்பாவிலிருந்து கனடா போவதாக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் சரியான பத்திரங்கள் இல்லாததால் என்னை இங்கே கைது செய்து விட்டார்கள். எனக்கு இங்கு உற்றாரும் இல்லை உறவினர்களும் இல்லை. அந்தக் கடவுள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.' என்று அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

எனக்குத் தெரிந்த உதவி நிறுவனங்களுடன் அவளைத் தொடர்புபடுத்தி அவளுக்குச் சில உதவிகளைப் பெற்றுக் கொடுத்தேன். அதன்பின் அவளைக் கனகாலமாகக் காணவில்லை. அடிக்கடி அவளைப்பற்றி நினைத்துப்பார்ப்பேன் ஆனால் சந்திக்கக் கிடைக்கவில்லை.

பத்து ஆண்டுகளின் பின் நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எனது நண்பியைப் பார்க்கச் சென்றேன். அப்பொழுது ஒரு பெண் என்னை விலத்திக்கொண்டு போகும் போது என்னை உற்றுப் பார்த்து அக்கா! என்றாள். அவள் வைத்தியதாதிகள் அணியும் சீருடை உடுத்தியிருந்ததால் எனக்கு உடனே மட்டுக்கட்ட முடியவில்லை. முன்பு பனிமண்டலம் மூடி இருளாக இருந்த அவள் முகம் சூரியன் போல் அன்று பிரகாசமாக ஒளிர்ந்ததும் அதற்கொரு காரணமாக இருக்கலாம். சீருடையில் அவள் மிக மிடுக்காக, பரபரப்பாக, அழகாக இருந்தாள். அக்கா உங்களை நான் அடிக்கடி நினைப்பேன் ஆனால் எப்படி உங்களுடன் தொடர்பெடுப்பதென்று தெரியவில்லை. உங்களை இன்று சந்தித்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எனக்கு இப்ப மதியபோசன இடைவேளை, வாருங்கள் உணவுச்சாலையில் உணவருந்தியபடியே பேசலாம் என்று என்னை அங்கே அழைத்துச் சென்றாள்.

உங்களைப் பற்றி நானும் பல தடவைகள் நினைத்துப் பார்த்ததுண்டு. மீண்டும் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி என்று கூறி அவளை நலம் விசாரித்தேன்.

'மிகவும் கரடுமுரடான பாதைகளைக் கடந்து வந்த எனக்கு இங்கும் ஆரம்பகாலம் கடினமாகத்தான் இருந்தது. புரியாத மொழி அறியாத மனிதர்கள் ஆனாலும் மனிதாபிமானத்துடன் பல உதவிகளை எனக்குச் செய்தார்கள். பின் இந்த நாட்டு மொழியைக் கற்று அதற்குரிய தராதரப்பத்திரத்தைப் பெற்றேன் அதன்பின் உதவி மருத்துவத்தாதிக்குரிய பட்டம் பெற்று இங்கு பணி புரிகிறேன். நான் எனது துணைவரையும் இங்குதான் சந்தித்தேன். எனக்கு மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது.' என்று கூறி முடித்தாள்.

இங்கு தரப்பட்ட உளவளச் சிகிச்சைகள் உங்களுக்கு ஓரளவாவது உதவியதா? என்று கேட்டேன். 'ஓம் நிச்சயமாக என்னை மனஉறுதியும் தன்னம்பிக்கையும் உள்ள பெண்ணாக உருவாக்கியது அந்த உதவிகள்தான். நான் வாழ வழி காட்டியதும் அந்த உதவிகள்தான். எனினும் நான் தனியாக இருக்கும் நேரங்களில் என் கன்னங்களில் அமைதியாக வழிந்தோடும் சில கண்ணீர்த் துளிகள் என்னை வாஞ்சையுடன் அணைக்கும் உப்புநீர்.' என்று அவள் கூறியபோது அவளின் கண்களில் நிரம்பியிருந்த அந்த உப்புநீர் அவளுடனான எனது முதலாவது சந்திப்பின் நினைவுகளை மீள் பார்வை செய்தபோதும் இது அவளின் ஆனந்தக் கண்ணீர் என்பதில் எனது மனம் நிறைவு பெற்றது.



Bavany.S@thaiveedu.com






# முலையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை-05



### மா.சித்திவிநாயகம்

**‘ஒன்றே என்னின் ஒன்றே ஆம்**
**பல என்று உரைக்கின் பலவே ஆம்**
**அன்றே என்னின், அன்றே ஆம்**
**ஆமே என்னின் ஆமே ஆம்**
**இன்றே என்னின் இன்றே ஆம்**
**உளது என்று உரைக்கின் உளதே ஆம்**
**நன்றே நம்பிக்குடி வாழ்க்கை நமக்கு**
**இங்கு என்னோ பிழைப்பு அம்மா!’**

என்று கம்பன், கடவுள் ஒன்று என்பதும், பல என்பதும், இல்லை என்பதும், அவரவர் நம்பிக்கையைப் பொறுத்தது என்று பாடிய பிறகும் மதங்களையும், கடவுளையும்

பிரித்து... ஆளுக்காள் மோதி இன்றுவரை மாய்ந்துகொண்டிருக்கின்றார்கள் இந்த மனிதர்கள்.

எது எப்படியோ கோவிந்தன் தன்னையும், வெள்ளைக்காரக் கிளாராவையும் நிர்வாணமாகக் கண்டு கொண்டதை அறிந்த நாளிலிருந்து நம்பூதிரிக்கு அச்சம் அவனை நிம்மதியாயிருக்க விடவில்லை... சதா எப்படியாவது கோவிந்தனுக்கொரு முடிவு கட்டுவது என்கிற சிந்தனையிலேயே அவன் பொழுதுகள் கழிந்தன.

நம்பூதிரிகள் செய்கிற குற்றங்கள் கண்ணுங் காதும் வைத்தாற்போல எவராலும் கண்டுபிடிக்க முடியாதவை. சரியென்றோ, பிழையென்றோ எவராலும் விவாதிக்க முடியாதவை. பார்ப்பானைக் கேள்வி கேட்டால் தெய்வக்குற்றம் ஆகிவிடும் என்கிற சாட்சியற்ற பெருமிரட்டலால் அவர்களுக்கு எல்லாமே இன்றுவரை சாத்தியமாகின.

நம்பூதிரிப் பெண்ணைப் பலாத்காரம் பண்ணினான் என்று சோடித்துக் கோவிந்தனைக் கழுவேற்றிவிட்டால் என்ன? நம்பூதிரி ராமசாமியின் மூளை மின்னலாக வேலை செய்தது. கழுவேற்றுதல் என்பது கூர்மைப்படுத்தப்பட்ட மரம் ஒன்றினில் எண்ணெயை நன்றாகத் தடவி கழுவேற்றப்படுபவரைப் பிடித்து, நிர்வாணமாக்கி, மொட்டையடித்து அவனை அலாக்காகத் தூக்கி அவனது ஆசனவாயை (குதவாசல்) கழுமுனையில் வைத்து அப்படியே மரத்தில் செருகி விடுதலாகும். அதில் உடலின் பாரந் தாங்காமல், உடல் மெது மெதுவாகக் கீழே இறங்கும். கூர்க் கத்தியாய்ச் சீவிய கழுமரம் மெதுவாக உடலைத் துளைத்துக்கொண்டு மேலேறும். கொஞ்சம் கொஞ்சமாக மரம் உடலினுள் ஏற ஏற வலி தாங்காமல் நாளும் பொழுதும் கூப்பாடுபோட்டபடியே துடிதுடித்து அம்மரத்தில் அவன் மரணித்துப் போவான். அந்தக் கழுவிலேற்றப்பட்ட உடல் பறவைகளுக்கும், நாய்களுக்கும், நரிகளுக்கும் இரையாகும்.

இப்படி அப்பாவியான சமணர்கள் பலர் கழுவேற்றப்பட்டது குறித்து நம் இலக்கியங்களில் சான்று உண்டு.

மதுரையில் கூன்பாண்டியன் என்னும் பாண்டியனாட்சிக்காலத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் சமணர்களைக் கழுவேற்றிய கொடூரச் சம்பவங்கள் குறித்த ஓவியங்களை மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பெருஞ்சுவர் எங்கணும் ஓவியமாக்கி மகிழ்கிற நிலைகளில் மக்கள் மனங்கள் மயக்கப்பட்டிருந்தன.

எந்த அநியாய அரசனின் அரண்மனை வாசலில் தன் முலையைத் திருகிப் பிய்த்தெறிந்து, கண்ணகித் தெய்வம் நீதி வேண்டினாளோ அவளையே அம்மனாக்கி அவள் சன்னிதானங்களிலேயே கழுவேற்றும் கொலைகளை ஓவியமாக்கி வணங்கச் செய்கிற பார்ப்பனரின் சாணக்கியம் இவ்வுலகில் வேறு யாருக்குண்டு?

சமணத்தில் இருந்து சைவத்துக்கு மாறும்படியான அந்த காலப் பாண்டியனின் கட்டளையை ஏற்காத எட்டாயிரம் சமணர்களை கழுவேற்றம் செய்ததாகப் பெருமிதமான வரலாறு நம்மிடம் உண்டு. சமணர்களுக்கும், சைவனான சம்பந்தருக்கும் நடைபெற்ற மதப்போட்டியில் தோல்வியுற்றும், சைவ சமயத்தைத் தழுவ மறுத்த காரணத்திற்காகப் பாண்டிய மன்னனான கொடூரக் கூன்பாண்டியன் அந்த 8000 சமணர்களையும் ஈவிரக்கமேதுமின்றி மதுரையை அண்டிய சமணரத்தம் என்று அழைக்கப்பட்டு இன்று சாமநத்தமாக மாறி நிற்கிற கொலைக்கள ஊரில் கழுவேற்றம் செய்ததாகப் புராணங்கள் பதிவு செய்கின்றன. அந்தப் பாண்டிய மன்னர் காலத்தில் நிகழ்த்திய கொலைகளைக் கழுவேற்றப் பெருவிழாவாக திருவிழாவாக்கிச் சைவர்கள் கொண்டாடுவது தான் உலகின் பெருங்கொடுமை.

இக் கொடுமைகளை ஒரு மதம் மட்டுமே செய்ததென நாம் மட்டுறுத்தி வரையறை செய்ய முடியாது. இந்து, இஸ்லாம், பௌத்தம், கத்தோலிக்கமென அதற்கு வரையறை கிடையாது. உலகமெல்லாம் உள்ள அனைத்து மதங்களின் பெயராலும் நடந்த, நடக்கின்ற கொடூரம் அது.

சைவம், வைணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் போன்ற மதப்பிரிவுகள் இந்துப் பெருமதத்துக்குள் அடங்கினாலும் அவை குரோதம் கொண்டு ஒன்றையொன்று அழித்துத் தானேயழிந்து தலைசாய்கிற நிலையில்தான் இருந்தன. அதே போன்றே யூதர் அப்பாவிகள், யூத மதம் சிறப்பானதென்று சொல்லப்பட்டாலும் யூதர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். அவரைப் பின்பற்றிய சீடர்களையும், இயேசுவைப் போற்றியெழுதியோரையும் மிகவும் கொடூரமாகக் கொன்றழித்தார்கள்.

இயேசு வரலாற்றைச் சொல்ல முனைந்த மத்தேயுவை எத்தியோப்பியா நகரத்தில் ஈட்டியால் குத்திக் கொன்றார்கள். மாற்கு அவர்களை அலக்சாந்திரியாப் பட்டணத்தில் தெருவீதியில் நாயைப் போலச் சங்கிலியால் இழுத்துக் கொன்றார்கள்.

‘லூக்கா’வை கிரேக்க நாட்டில் தூக்கிலிட்டார்கள். ‘யோவான்’ அவர்களை இரும்புச் சட்டியில், கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணைய் சட்டியில் எறிந்தார்கள். குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த அவனைப் பத்மு எனும் தனித்தீவில் போட்டுக் கொண்டாடினார்கள்.

‘சின்ன யாகோபு’வை ஒரு கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளித் தடியால் அடித்துக் கொன்றார்கள். ‘பேதுரு’வைச் சிலுவையில் தலைகீழாக அறைந்து கொன்றார்கள்.

‘அந்திரேயா’வை, சிலுவையில் கட்டிக் கொன்றார்கள். தோமா என்னும் ‘தோமஸை ஈட்டியால் குத்திக் கொலை செய்தார்கள்.’ யூதா’வை அம்பு விட்டுக் கொன்றார்கள். விருத்த சேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்றவர்களை மறுதலித்த பர்னபா அவர்கள் ‘சலோனிக்கே’ என்னும் நகரத்தில் யூதர்களால் கல்லெறிந்து கொல்லப்பட்டார்.

பவுல் எனும் தீர்க்கதரிசி நீரோ என்னும் முட்டாள் ரோமப் பேரரசனால் சிரச்சேதம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இப்படித்தான் நீதிமான்களையும், தீர்க்கதரிசிகளையும், கேள்வி கேட்போரையும் எந்த மதமும், எப்போதும் கொன்றுவிடும்.

அப்படித்தான் வெள்ளேந்தியும், எஜமானிய விசுவாசியான கோவிந்தனையும் கொல்ல விளைந்துகொண்டிருந்தான் நம்பூதிரி ராமசாமி. நம்பூதிரிகள் தங்களின் மனைவிமார்களைக் கூட மதித்தவர்களல்ல. அவர்களை அந்தர்ஜனம் என்ற பெயர்சூட்டி தம் அடிமைகளாக அறைகளில் வைத்திருந்தார்கள்.

அந்தர்ஜனம் என்ற சொல், தாளிடப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் வாழ்நாள் பூராக தன் வாழ்வைக் கழிக்கும் சிறைவாசியான நம்பூதிரி சமூகப்பெண்ணைக் குறிப்பது. அந்தர் ஜனம் எனும் சொல்லால் இருட்டாக்கப்பட்டு வாழ்வழிந்து இன்றைக்கும், அலைக்கழிக்கப்பட்டு அலைகிற நம்பூதிரிப் பெண்குலத்தின் கண்ணீர் எவருமறியா மீனழுகிற கடல்.

திருமணமாகி நம்பூதிரியின் இல்லத்திற்கு வரும் பெண்கள் ஆணாதிக்கத்திற்கு அடங்கிக் கட்டுப்பட்டியான சூழலிற்குள் வாழ்ந்து மடிய வேண்டும். மொத்தத்தில் திருமணமான நம்பூதிரிப் பெண்களும், அங்குள்ள நம்பூதிரிக் கன்னிப் பெண்களும் தம் வாழ்நாளை இல்லத்தின் அடைக்கப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் விலங்குகள்போலக் காலமெல்லாம் கழிக்க வேண்டியிருந்தது.

பெரும்பாலான அந்தர்ஜனங்கள் கோஷா நெறிமுறையாளர்கள். கோஷா என்பது பார்சி மொழிச் சொல்லாகும். இதற்குத் திரைமறைவில் வாழும் வாழ்க்கை என்று பொருள். அவர்களுக்குக் கண்கள் உள்ளன, ஆனால் மகிழ்ச்சியூட்டும் எதையும் பார்க்கவிடாது அவர்கள் தடைசெய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்குக் கால்கள் உள்ளன, ஆனால் அவற்றின் இயக்கம் வரையறுக்கப்பட்ட சுவர்களுக்குள் மட்டுமே நடக்கக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வீட்டில் உபயோகிக்கின்ற பாத்திரங்களைப் போன்றதே அவர்களுடைய தகுதியும், வாழ்வின் இருத்தலும் ஆகும். மொத்தத்தில் அக்காலப் பெண்களின் அவலம் அது.

சுருக்கமாகச் சொன்னால் அந்தர்ஜனம் என்பவர்கள் சிறைப்பட்ட கைதிகள். கைதியாக்கப்பட்ட விலங்குகள். அந்தர் ஜனங்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுவார்கள். நல்ல காற்றைச் சுவாசிக்கவும், உலகைப் பார்க்கவும் அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை, பிறக்கும்போது அழுதுகொண்டே பிறக்கும் அந்த அந்தர்ஜனம் காலமெலாம் கண்ணீரில் வாழ்ந்து அழுதுகொண்டே இறந்து கதையை முடிக்கின்றாள்.

‘அன்பில்லாத ஒளிகுன்றிய நம்பூதிரிக் குடும்பச் சூழலில் பிறந்து வால் நட்சத்திரங்களாகப் பாதியிலேயே ஒளிராது அழிந்து போன அந்தர்ஜனங்களின் அவலப்பட்டிறந்த இரத்தப் பெருமூச்சால் நிறைந்திருந்தது கேரளப்பெருங்காற்று.

நம்பூதிரிப் பெண்கள் கருவுற்றவுடன் சிறப்பு வழிபாடுகளும், வேண்டுதல்களும், ஆண் குழந்தை பிறக்க வேண்டியே நடைபெறும். ஆண் குழந்தை பிறந்தால் இல்லப் பணியாளர்கள் குலவையிட்டு மகிழ்ச்சியான செய்தியாக அதனை அறிவிப்பர். பெண் குழந்தை பிறந்தால் கதவை மெதுவாகத் தாளிட்டுப் பூட்டுவர்.

அந்தர்ஜனங்களாய் நம்பூதிரி இல்லங்களில் வாழ்ந்து முடிந்த அன்னைகள் உலகின் மிகப் பெரிய சாபம். அப்படி வாழ்ந்த அம்மாக்களுக்குக் குடும்பத் தலைவன் இறந்தவுடன் நேரும் அவமானங்கள், புறக்கணிப்புகள், பொருளாதாரச் சீர்குலைவு என்பவை இப்புவியில் தாங்கொணாக் கொடுமையானவை. நம்பூதிரி விதவைகள் ஈர ஆடையுடன் உறங்க வேண்டிய அவலம் இங்கு சொல்லி மாளாது.

பிறப்பில் தலித் என்கின்ற சொல், உயிர்களைக் கருவிலே கொல்லும் கொலைக்குச் சமமானது. அதற்கு நிகரானதுதான் அந்தர்ஜனப் பெண்களின் வாழ்க்கை. நம்பூதிரிகளுக்கு அடிமைகளான அந்தர்ஜனங்களும், தலித்தான கோவிந்தனும் ஒன்றுதான்.

‘தலித்’ என்கின்ற வார்த்தை கொடூர நஞ்சிலானது. இந்த வார்த்தைதான் இந்த மானிடப் பிறப்பின் வாழ்வை சமத்துவமில்லாமல் அவமானங்களுடனேயே வாழச் செய்கிறது. இதற்காக எதிர்த்துப் போராடி, நியாயம் தேடி ஓடுபவன் அற்பாயுளில் அழிக்கப்பட்டு விடுவான். அதனால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சாதியச்சாக்கடையுள் காலங்காலமாக மௌனமாய் அழிகிறது மானிட மேன்மை.

தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்து சீரழிபவர்களை வைத்து அரசியல் செய்பவர்கள்தான் இங்கு அதிகம் பேர். அவர்கள்தான் எங்கும் பிழைத்துப் போகின்றார்கள். முதலில் அந்த வியாபாரிகள் சிறிய அமைப்பாக மாறிப் பின் ஒரு கட்சியாக அரசியலில் தடம் பதிப்பர். சிறிது காலத்தில் அவர்கள் ஆளும் கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ வளர்ந்து அரசியலில் வடம் பிடித்து ஆள்வார்கள். ஆனால் ஜாதியோ இங்கு என்றும் அவ்வாறுதான் இருக்கும். ஜாதிபேதம் அவர்கள் அரசியலிற்கு வலுச் சேர்க்க அவசியமாகவிருக்கிறது. இதேபோன்றது தான் தேசியம் பேசி ஏமாற்றும் தேசிய அரசியலாளர்களின் வாழ்வும். தேசியம் பேசிப் பேசியே மானிடரை மானுடரோடு நெருங்கிவரச் செய்யாமல் அவர்களைப் பிரித்துத் தாங்கள் சுகபோகமனுபவிக்கும் பல ஏமாற்றுப் பேர்வழிகளின் பின்தான் மக்கள் மறுபடி மறுபடி பயத்தோடு போய்க்கொண்டிருக்கின்றார்கள்.

இந்திய மக்களுள் நஞ்சைக் கலந்த மாபெரும் பார்ப்பனியச் சாணக்கியம் வர்ணாச்சிரமம். பார்ப்பனியமென்பது இந்தியா அடங்கிலும் அழிக்க முடியாத ஒரு பலம் வாய்ந்த நிறுவனமாகும். எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் அசைக்க முடியாத திருட்டுக் கொள்கைகளாலும், குருட்டு ஏமாற்று நம்பிக்கைகளாலும் மனிதர்களை விசுவாசம்கொள்ள வைத்திருக்கிற கொடூர அமைப்பு அது.

இத்தகு மோசமான பார்ப்பனியச் சூழலிலும் இராமானுசர் பாரததேசம் முழுவதும் யாத்திரை செய்து வைணவத்தின் பெருமையை எங்கும் பறை சாற்றினார். எதிர்வாதங்கள் புரிந் தவர்களை வென்று வைணவ மடங்களை நிறுவினார். ஒவ் வொருவரிடமும், முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட இன மக்க ளிடையே, இரக்கம், கருணை, பரிவு முதலிய நற்குணங் களைச் சொரிந்ததோடு தலித்துகளை 'திருக்குலத்தார்' என்றும் அழைக்கலானார். ஆனாலும் இங்கு எதுவும் மாற வில்லை.

நமது ஜாதி அமைப்பு முறையானது, 2,000 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. ஜாதி முறைகளின் படிநிலைப்படி ஒவ்வொருவரும் தமக்குக் கீழுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைச் சுரண்டுவது, பாரபட்சம் மற்றும் பாகுபாடு இழைப்பது என்று அவர்களை அடக்கி ஆளும் நிலைமையை இங்கு உண்டாக்கி வைத்துள்ளார்கள்.

தலித்தான ஏகலைவன் அரசர்கள் கற்ற வில் வித்தையை ஒழிந்திருந்து பார்த்துச் சிறப்பாக அதனைக் கற்றுக்கொண் டவன். அவன் உலகிற் சிறந்த வில்லாளர்களை விடவும் மிகச் சிறந்த வில்லாளியாக வெளிப்பட்ட போது குருதட்சணை தராமல் வித்தை கற்றது தவறு என்று கூறி, குருதட்சணையாக ஏகலைவனுடைய வலது கைக்கட்டைவிரலை காணிக்கை யாகக் கேட்டுப் பெறுகிறான் குரு துரோணன் என்கின்ற பார்ப் பனியன்.

இனிமேல் எப்போதும் வில்லைப் பயன்படுத்த முடியாதபடி தன்னை வஞ்சித்துவிட்டான் துரோணர் என்பதைக்கூட ஏக லைவனின் அடிமையான குருபக்தி உணரவிடவில்லை. இன் றைக்கும் இந்தப் பயபக்தியால்தான் சாதியை வளர்த்துப் போகிறது சமூகம். அது ஏகலைவனுக்கு மட்டுமல்ல இந்தக் கோவிந்தனுக்கும் பொருந்தும்.

வெளியே புயற்காற்றுப் புழுதியை வாரிக் கொட்டியபடி கொடூரமாக வீசிக் கொண்டிருந்தது. கோவிந்தன் ஸ்டீவன் வீட்டுத் தோட்டத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். இந்தியா என்கிற தேசபக்தியை வளர்க்க வேண்டிய நாடு நம் பூதிரிகளின் நயவஞ்சத்துள் கட்டுண்டு கிடக்கிறது. அன்னியர் காலடியை அடியோடு அழியுங்கள் என்று போராட வேண்டிய வர்கள் வெள்ளையர்கள் நம்பூதிரிகளைவிட நல்லவர்கள் என்று சொல்லத் துணிந்து நின்றார்கள். 'பாரத மாதா வாழ்க என்றும், உழைப்பவனுக்கே இந்தியா சொந்தமென்றும் சொல் வதற்கான துணிவை நம்பூதிரிகளும். அவர்கள் மதங்களும் ஏற்படுத்தவில்லை.' விசித்திரமான சிந்தனைகளைச் சிந்தித்த படியே வந்துகொண்டிருந்தான் கோவிந்தன்.

வழியெங்கும் அந்தகார இருட்டு வீட்டினுள் நுழைந்தபோது அவனது அன்பு மனைவி சமையலில் மும்முரமாக இருந்தாள். குப்பி விளக்கினுள் அழகுத் தேவதையாய் அவனுக்குத் தெரிந்தாள் அவள். அள்ளி அணைத்து முத்த மிட்டான். அவனது ஒரே சிறிய மகள் அவன் கொடுத்த பைபிளைத் தூக்கியபடியே அதனை வாசிக்கப் பக்கத்துவீடு போயிருப்பதாகச் சொன்னாள் அவனது மனைவி. கைகால் கழுவி அவன் சாப்பிட உட்கார்ந்தான். அடுத்த கணம் வீடு தீப்பற்றி எரிந்தது.

ஐயோ என்றலறியபடியே கோவிந்தனும் அவன் மனைவியும் வாயிற்கதவைத் திறக்க ஓடினார்கள். அதை அசைக்க முடியாப் பெருங்கல்லை வைத்து யாரோ வெளியில் அடைத் திருந்தார்கள். வெளியேற அவர்கள் எடுத்த எல்லா முயற் சியும் தோற்றுப்போய் அவர்கள் உடல் எரிந்து கொண்டி ருந்தது. கோவிந்தன் மூர்ச்சையுற்றான்.

'மகனே....' அவன் தலையைத் தடவியபடியே இயேசு அவன் கன்னத்தை வருடுகிறார். அவன் திடுக்கிட்டு விழிக்கிறான். வான்மேலே மிதக்கிற சுவர்க்கம். 'இயேசுவே நீங்களா'

'ஆமாம்... மகனே... நான்தான் வந்திருக்கிறேனடா...'

'நீ அனுபவித்த சாதிய ஒடுக்குமுறைத் துயரத்தை நானும் பார்த்தேன்... இன்னும் எத்தனை காலம் நீ அதனைத் துயரோடு அனுபவிப்பாய் என்னோடு வந்துவிடு... நானும், என் வார்த்தைகளும் பொய்க்காது... இந்தச் சாதியநாடு இனி யுனக்கு வேண்டாம்...

இயேசுவின் கரம் பிடித்த கோவிந்தன் என் அன்பு மகள்... எங்கே ஐயனே... கேவிக்கேவி கோவிந்தன் அழுதான். கவலையை விடு என்றார் இயேசு. உன் மகள் பைபிளோடு எனக்குள் இருக்கிறாள் மகனே... நீ நிம்மதியாய்த் தூங்கு என்றார் இயேசு. கோவிந்தன் இயேசு மடியில் சாம்பலாய்க் கிடந்தான்.

சாதிய ஒடுக்கலில் அவன் பட்ட அவலமும், வெள்ளைய அடிமை விசுவாசம் அதனை மீட்கும் என்று நம்பிய அவன் கனவும், அவனது இறுதி மூச்சோடு சங்கமித்து அடங்கியது.

சுழன்றடித்த காற்றில் ஓலைக்குடிசை ஜெகஜோதியாக ஒளிர்ந்து எரிந்தது. தெருமுனையைத் தாண்டித் தீமூட்டிய நம்பூதிரி யார் கண்ணிலும் படாமல் ஓடிக்கொண்டிருந்தான்.

கூக்குரல் கேட்டுப் பக்கத்துவீட்டார் அனைவரும் ஓடிவந்தனர். நெருப்பை அணைத்து அவர்களை மீட்கப் படாதபாடுபட் டனர். ஆனாலும் அதற்குள் அவர்கள் இருவரும் உடல் கருகிச் சம்பலாகியிருந்தார்கள். கணநேரத்துள் தன் தாய் தந் தையையிழந்து கையில் பைபிளோடு நின்றது அவர்களின் சிறிய பெண் குழந்தை. பைபிள் தான் அவர்களின் அந்தச் சிறிய மகளைக் காப்பாற்றியதென வந்த மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தொடரும்



sithivinayagam@thaiveedu.com

# ‘தவறு என்பது தவறிச் செய்வது...!’

- உஷாதீபன்




எதிர்த்தாற்போல் நாற்காலியைப் போட்டுக்கொண்டு அதையே பார்த்துக்கொண்டிருந்தார் நாகசாமி. கலைந்து கிடந்த செய்தித் தினசரிகளைப் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்தான் அவன். அடுக்க அடுக்க அந்த வரிசை தந்த அழகு இவருக்குப் பிடித்திருந்தது.

எதையுமே ஒழுங்காகச் செய்தால் அது எத்தனை அழகு பெறுகிறது? ஒரு விஷயம் சீராக இருப்பதில்தான் என்ன ஒரு கம்பீரம்?

‘உங்க கடைல பார்த்திருக்கேன் அமாவாச... சைடு ரேக்குல பேப்பர்களக் கட்டிக் கட்டி நீங்க அடுக்கியிருக்கிற ஒழுங்கிருக்கே அந்த அழகே தனி. கோடு போட்ட மாதிரி ஓரமெல்லாம் கரெக்டா நிக்க, கட்டி ஏத்தியிருக்கீங்களே... அத எவனும் கவனிக்காம இருக்க முடியாது! படு சுத்தமால்ல இருக்கு உங்க கடை வேலை...?’

‘சுத்தம்ங்கிறதவிடங்கய்யா அப்டி வச்சாத்தான் அந்தப் பத்துக்குப் பத்து ரூம்ல நிறைய வைக்க முடியுமுங்க... கடைக்குள்ளார வந்து பார்த்தீங்கன்னா தெரியும். மேலே உத்திரத்துல இடிக்கிறவரைக்கும் அடுக்கியிருப்போம். மூட்ட மூட்டயா இப்டி வாங்கிட்டுப் போறோம்ல, அதக்கொண்டு எறக்கினவுடனே காசக் கொடுத்திறமாட்டாரு மொதலாளி... எடையப்போட்டு அடுக்கிட்டுப் போடாம்பாரு... இல்லன்னா ஓர் ஒழுங்குக்கு வராதுங்க... கம்பனிக்கு அனுப்பறவரைக்கும் நாங்க தாங்க பொறுப்பு. எங்க எல்லாரையும் கட்டி மேய்க்கிறதே பெறும்பாடுங்க அவுருக்கு...’

‘ஏன் அப்டிச் சொல்றே?’ - நாகசாமிக்கு ஆர்வம் மேலிட்டது. நாம் சம்பந்தப்படாத பலவற்றில் நிறைய விஷயங்கள் இருக்கின்றன என்று தோன்றியது.

‘நாங்க ஏழெட்டுப் பேர் இருக்கமுங்க அவுருக்கு.

எங்க பிடிய விட்ரக் கூடாது முதல்ல. அத விட ஏரியாதாங்க ரொம்ப முக்கியம். வருமான வரி ஆபீசுக்கு இந்தப் பக்கம் இருக்கிற பகுதி பூராவும் நம்முளுது தானுங்க... எங்களத் தவிர யாரும் நுழைஞ்சிட முடியாது. நுழைஞ்சிடக் கூடாது ங்கிறதுல ரொம்பக் கவனமா இருப்பாருங்க. நாங்களெ ல்லாரும் எல்லா ஏரியாவுக்கும் போயிட்டு வருவோமுங்க... நீங்க நல்லாக் கவனிச்சி ருந்தீங்கன்னா தெரிஞ்சிருப்பீங்க... தெனந்தெனம் இந்தத் தெருவுல என்ன மாதிரிப் பலரும் போறதப் பார்த்திருப்பீங்க... அவுக பூராவும் நம்ம ஆளுகதா னுங்க... பின்னாடி சாக்கக் கட்டிக்கிட்டு அவுக பாட்டுக்கு ராகம் போட்டுக்கிட்டுப் போய்க்கிட்டே யிருப்பாங்க... யார் போனாலும் வந்தாலும் நீங்க எங்கிட்டத்தான் போடுவீ ங்கன்னு ஒண்ணு இருக்கு... அது வேற விசயம்... அதுதான சார் பழக்கமுங்கிறது?'

'அப்றம் எப்டி அமாவாச... வேறே ஆள்ட்டயா போடுறது? எனக்கு நீங்கதான் வரணும்... வீட்டுல கூட அவசரப் படுத்துவாங்க.. யார்ட்ட போட்டா என்னன்னு? எடம் ஒழிஞ்சாச் சரிங்கிறது அவுக சொல்றது... ஆனாலும் நான் மாட்டனே... நீங்க வரட்டும்னுதான் சொல்லுவேன்...'

அமாவாசையின் முகத்தில் ஒரு பெருமிதமும், சந்தோஷமும் படர்வதைப் பார்த்தார் நாகசாமி. வெறும் பெருமைக்காகவோ, மெப்பனையாகவோ வந்த வார்த்தை அல்ல அது. ஆத்மார்த் தமாய் வந்தது.

அதே போலத்தான் மற்றவர்களுக்கும் வாடிக்கை வீடுகள் இருக்கும் என்பது அவனுக்குமோ அல்லது தனக்கோ தெரியாததல்ல. ஆனாலும் அந்தப் பகுதிக்கு வீடு கட்டிக் குடி வந்தது முதல் அமாவாசையிடம்தான் போடுகிறார் அவர். அவரை ஈர்த்தது அவன் கொடுக்கும் குரல். ஒவ்வோர் தொழில் செய்பவரிடத்திலும் ஒவ்வொரு வகையிலான தன்மை என்பது இருக்கத்தான் செய்கிறது. அதை அவர்கள் விடாமல் கடைப்பிடிக்கிறார்கள். அதுதானே?

அந்த வீதியில் காய்கறி விற்பவரிலிருந்து பால், பேப்பர், பிளாஸ்டிக் சாமான்கள், உப்பு, கோலப் பொடி, வெங்காயம், தேங்காய், ஐஸ்கிரீம், என்று பலதையும் விற்றுக் கொண்டு வரும் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு விதமான ஒலி அழைப்பினைக் கண்ணுற்றிருக்கிறார் இவர். தங்களை, தங்கள் வரவினை அடையாளப்படுத்துவதற்காக. அத்தனையும் இரசனைக் குரியவைதான். எல்லாவற்றிலும் ஏதோ ஒரு ராகத்தின், சங்கீதத்தின் இழை தொற்றிக்கொண்டு மிதப்பதாகவே தோன்றும் இவருக்கு.

'மீனு... மீனோய்... மீனு... மீனோய்... கெண்ட... கெளுத்தி... இரா... அயிர மீனோய்...'

'அய்யய்ய... என்னங்க இது? இதெல்லாம் வருது இங்கே? உவ்வே...'

அந்த வார்த்தைகளுக்கே வாயிலெடுத்து விடுவாள் போலிரு ந்தது. முன்பிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் மூன்றாம் தளத்தில் இந்த மாதிரிச் சத்தமெல்லாம் கேட்டதில்லை அவள்.

'கௌசல்யா, சுப்ரஜா, ராம பூர்வா, சந்யா... ப்ரபப்ததே... உச்சிஷ்ட நரசாம்...' என்பதோடு சரி. பக்கத்து வீட்டுச் சத்தம் கூட காதில் விழ வழியில்லை. அதுதான் தனித் தனிப் புறாக் கூண்டுகள் ஆயிற்றே?

'வீதின்னா எல்லாமும் வரத்தான் செய்யும்... எல்லாரும் கலந்துதானே குடியிருக்கோம்...'

பட்டுப் பட்டென்று சன்னல் கதவுகளைச் சாத்துவாள் நாகலட்சுமி.

'என்ன... என்னாச்சு?' என்பார் இவர் பதறிக்கொண்டு.

'உங்களுக்கு மூக்குப்பொடி போட்டுப் போட்டு மூக்கே அடச்சுப் போயாச்சு... எந்த வாசனையும் தெரியற தில்லே... வீடம்புட்டும் ஒரே பொடி நாத்தம்... முதல்ல அத நிறுத்தப் பாருங்க... இந்தக் காலத்துல யார்தான் இப்டிப் பொடி போடுறாங்க... நேஸ்டி உறாபிட்...'

'சரி... சரி... முயற்சி பண்றேன்... அதுக்கு ஜன்னல எதுக்கு சாத்துவானேன்? 'பக்கத்து வீட்ல ஏதோ என்.வி. சமைப்பாங்க போலிருக்கு... ஒரே நாத்தம் தாங்க முடியலை... ஜன்னல்கிட்டப் போய் மூக்கை வச்சுப் பாருங்க... அப்ப வாவது வாடை தெரியுதா பார்ப்பம்...'

'அதுக்கென்ன பண்றது? எல்லாந்தான் இருக்கும்... அப்டிப் பார்த்தா உன் பேர்லயும் என் பேர்லயும் இருக்கே நாகம்... அதையே உரிச்சு சமைச்சு சாப்பிடறவா இருக்கா தெரியுமோல்லியோ... உணவே கிடைக்கலேன்னு வச்சிக்கோ... மனுஷன மனுஷனே அடிச்சிக் கூடத் தின்னுடுவான்... நடந்த கதையெல்லாம் இருக்கு... உட்கார்ந்து கேட்கறியா... சொல்றேன்...'

போதும்... இப்டித்தான் எதுக்கோ எதையோ சொல்ல ஆரம்பிச்சிடுவீங்க... உங்க ஜெனரல் நாலெட்ஜ் எல்லாம் உங்களோடவே வச்சிக்குங்க... எனக்கு வேண்டாம்...'

நாகசாமிக்கு நாகலெட்சுமி என்ற பெயரே பிடித்துப் போய்த்தான் கல்யாணம் கட்ட சம்மதித்தார். 'நீ பார்த்திட்டீல்ல... நீ பார்த்திட்டீல்லம்மா... முடி... கல்யாணத்த முடிங்கிறேன்...' என்று படிக்காத மேதை ரங்கன் பாணியில் தான் அவர் சம்மதம் தெரிவித்தார். அதை நினைவு கூறும் தன் தந்தையை அடிக்கடி நினைத்துக் கொள்வார் இப்போது.

'அது எப்படிரா... சம்மதிச்சே? நாங்கூட ஒங்கம்மாவ அவளுக்கே தெரியாம அடிக்கடி கோயிலுக்குப் போயிப் பார்த்துத்தான் உறுதி செஞ்சேன்... எம் பிள்ள நீ இப்படி யிருக்கியே?'

'நா உங்களப் போலல்லப்பா... எங்க அம்மாவப் போல... அவுங்க உங்களையே சம்மதிச்சிருக்காங்களே... அதுக்கு மேலயா?'

'அடி செருப்பால... திமிரெடுத்த பயலே...'

'விடுங்க... அவனென்ன உண்மையைத்தானே சொல்றான்... அதுக்கேன் உங்களுக்கு இம்புட்டுக் கோவம் வருது...'

'கோபமில்லடி கோபமில்ல... எல்லாம் ஒரு விளையாட்டுத்தான்... அவன் என்னைக் கேலி பண்றதுனால நானென்ன குறைஞ்சா போயிடப்போறேன்? அது ஒண்ணு மில்லே... என் கோபமெல்லாம் உன்னைக் கல்யாணம் பண்ணின அன்னியோட போயிடுச்சு... பையன் தோளுக்கு மேலே என்னிக்கு வளர்ந்தானோ அன்னைக்கு சுத்தமா வடிஞ்சு போச்சு...'

'பரவால்ல... அப்படியாச்சும் ஒரு நல்லது நடந்திருக்கே...' நாகலெட்சுமியோடு பேசும்போதெல்லாம் சுவாரஸ்யம் பிய்த் துக்கொண்டு போகும் இவருக்கு. பொதுவாக ஒரு வீட்டில் உள்ள ஆம்பிளைகளுக்குத்தான் நகைச்சுவை உணர்வு உண்டுன்னு பார்த்திருக்கேன், கேள்விப் பட்டிருக்கேன்... இங்க நீயே இந்தப் போடு போடுறியே...' என்று மனைவியின் வாத்சல்யத்தை வாய்விட்டு அடிக்கடி புகழ்ந்திருக்கிறார் இவர். ஒருவருக்கொருவர் கிண்டலடித்துக் கொள்வதைப் பார்த்து பையனே விழுந்து விழுந்து சிரித்திருக்கிறான்.

'சர்தான், ரொம்பக் கேலிக்கூத்தான குடும்பம் போலிருக்கு...' என்று அதையும் ஒரு மூன்றாம் நபர் சொல்வதைப் போலவே சொல்லிச் சிரித்துக் கொள்வார் இவர்.

'எனக்கு மட்டும் நகைச்சுவையுணர்வு இல்லை யென்றால் என்றோ நான் தற்கொலை செய்து கொண்டி ருப்பேன்' - சொன்னார் மகாத்மா காந்தி. அந்த உ ண ர்வு மனசை எவ்வளவு லேசாக்கி விடுகிறது?

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும். எவ்வளவு அழகாய்ச் சொல்லி வைத்திருக் கிறார்கள். இந்தச் சிரிப்பு என்கிற மா மருந்து தான் தன்னை இதுநாள் வரை நோய் அற்றவனாக நிறுத்தி வைத்திருக்கிறதோ என்னவோ?

'அப்பா, நீங்க சிரிச்சா பழைய புராணப் படங்கள்ல வர்ற ராட்ச்சசன் மாதிரியே இருக்குப்பா...' - ஒரு நாள் சொல்லியே விட் டான் பையன். அதுநாள் வரை சொல்ல முடியாமல் மனதுக் குள்ளேயே வைத்திருந்தான் போலிருக் கிறது.

கொஞ்சம் ஓவர்தான் என்று தோன்றியது இவருக்கு. ஆனாலும் சமாளித்துக் கொண்டார் உடனே.



'நீ உங்க தாத்தா, கொள்ளுத்தாத்தா, எள்ளு த்தாத்தா சிரிப்பெல்லாம் பார்த்ததில்லையே... காண்பி க்கிறேன் பாரு...' என்றார். சொன்ன கையோடு உள்ளே டிரங்குப் பெட்டி க்குள் பாட்டி கையால் பத்திரப் படுத்தி வைத்தி ருந்த இரண்டு மூன்று புகைப் படங்களை எடுத்துக் காண் பித்தார். காண்பி க்கும் முன் ஒரு கண்டிஷன் போட்டார். போட்டோ வைப் பார்த்துப் பயந்து கொண்டால், தான் பொறுப்பில்லை என்று.

'என்னப்பா இது! அனிமல்ஸ் மாதிரியே இருக்காங்க எல்லாரும்...' என்றான் எடுத்த எடுப்பில். என்னவோ சொல்லிவிட்டுப் போகட்டும் என்று அமைதி காத்தார் அவர்.

'எவ்வளவு பெரிய மூக்கு, எவ்வளவு பெரிய மண்டை, எவ்வளவு பெரிய காது, எவ்வளவு பெரிய கண்ணு, அடேங்கப்பா... என்னப்பா இது பல்லெல்லாம் இம்புட்டுப் பெரிசா இருக்கு? அப்பாடி...!'

'வாய் விட்டுச் சிரிக்கிறார் பாரு, அதான் உங்க தாத்தாவாக்கும்... என் கல்யாணம் முடிஞ்சு உறாய்யா உட்கார்ந்து தாம்பூலம் தரிக்கிற நேரம் அது... வெத்தலைச் செல்லத்துல எம்புட்டு வெத்தல இருக்கு பார்த்தியா? அதுகூட கனக் கரெக்டா விழுந்திருக்கு பாரு...'

'ஆடு கொழை தின்ன மாதிரி வச்சுத் திணிப்பாங்க போலிருக்கு...'

'கல்யாணத்துக்கு முன்னாடி உங்க அப்பா சிரிச்சி ருந்தார்னு வச்சிக்கோ... நிச்சயம் நானும் இங்க இருந்திருக்க மாட்டேன்... நீயும் வந்திருக்க மாட்டே... என்ன பண்றது? எல்லாம் தலவிதி... நெத்தில அழுத்தமாத்தான் எழுதி யிருக்கு... இப்படிக் குப்பை கொட்டணும்னு...'

மூவரும் அன்று வாய்விட்டுக் கைகொட்டிச் சிரித்தனர். எப்பொழுதும் அப்படிச் சிரித்துக்கொண்டே யிருந்தால் போதுமா? ஆக வேண்டிய காரியங்கள்?

'இப்டி சேர்த்து வச்சி ட்டேயிருந்தா என்னைக் குத்தான் இந்தக் குப்பைளை யெல்லாம் ஒழிக்கிறது? எவ்வளவு தூசி அடையறது? இதையெல்லாம் ஒழிக்கப் படாதா?'-ரொம்பவும் சங்கடப் பட்டு நச்சு

நச்சென்று தும்மித் தீர்த்தாள் நாகலெட்சுமி. அவளின் கோரிக்கையை நிறைவேற்றும் முகமாகத்தான் காரியம் ஆகிக் கொண்டிருக்கிறது இப்போது!

‘சரிங்கையா... சொல்லுங்க... நிறுக்க ட்டுமா... இல்லே இப்டியே ஒரு ரேட் போட்டு எடுத்துக்கவா...?’

‘நிறுக்கறதுக்கு என்ன குவிஞ்சா கெடக்கு? என்ன ஒரு ஆரேழு மாசம் தானே ஆகும்?’

‘இல்லீங்கய்யா... ரெண்டு மூணு மாசம் கூட ஆகலைன்னு நினைக்கிறேன்... பேப்பர் அளவைப் பார்த்தா எனக்குத் தெரியும்ல... அஞ்சு கிலோ கூடத் தேர்றது கஷ்டம்ங்க...’

‘சரி... எடுத்துக்குங்க...’ - சொல்லியவாறே அடுப் படியில் ஒரு பையில் சேர்த்து வைத்திருந்த பால் பைகளையும் கொண்டு வந்து போட்டார்.

இப்படி அவன் வரும்போது ஒழித்தால்தான். வேறு என்ன வெல்லாம் கழிக்க வேண்டும் என்று நாகுவுக்குத்தான் தெரியும்.

‘கொஞ்சம் இரு வந்திர்றேன்...’ என்று விட்டு மாடியைப் பார்த்து ஓடினார். சற்று மிரண்டு பார்க்க ஆரம்பித்தான் அமாவாசை.

‘இருங்க... இருங்க... வேட்டை... ஸ்லாப்பை மூடிடா தீங்க... நா பார்க்கணும்...’

அங்கே தண்ணீர் தொட்டியைக் கழுவிக் கொண்டிருந்த வேட்டையனைத் தடுத்தார் நாகசாமி.

‘நீங்க பார்க்காம மூட மாட்டேங்கய்யா...’

‘மதியம் மூணு மணி வரைக்கும் தொட்டி திறந்தே இருக்கட்டும்... சூரிய ஒளில அப்பதான் அந்த மக்கு வாடையெல்லாம் போகும்... சுண்டக் காயட்டும்...’

‘அப்போ இப்பத் தண்ணி ஏத்தலீங்களா...?’

‘ஊ...உம்... நல்லாக் காய்ஞ்ச பின்னாடிதான்...’

‘நீ வேணா ஏத்திக்கோ... காசு தர்றேன்...’ வாய் நுனிவரை வந்ததை அடக்கிக் கொண்டார். இந்த அதீத நகைச்சுவையுணர்வு பல சமயங்களில் அதிகப் பிரசங்கி த்தனமாகப் போய்விடுகிறது. தண்ணி போடும் பழக்கம் அவனுக்கு இருக்கும் என்றாலும் அதைத் தான் சொல்வது எப்படிச் சரியாகும்? தன் வீட்டுக்கு வேலைக்கு வரும்போது அப்படி வந்து நின்றால் ‘இப்டியெல்லாம் வரக்கூடாது’ எனலாம். உடம்பை ஏன் கெடுத்துக்கிறே? என்று அட்வைஸ் பண்ணலாம். ஆனால் வேட்டையன் அப்படியில்லையே? தன்னிடம் எத்தனை மரியாதை அவனுக்கு?

‘அய்யா, நீங்களெல்லாம் இருந்தபோது கிடைச்ச மரியாதயெல்லாம் இப்ப சுத்தமா இல்லைங்க... ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுறாங்கய்யா... எல்லாமே தலை கீழா மாறிக் கெடக்குதுங்கய்யா...’

‘ஏன் அப்டிச் சொல்றே?’ - அக்கறையோடு கேட்டார் இவர்.

‘என்னத்தங்கய்யா சொல்றது? டூட்டி நேரத்துல ஆபீசரே தண்ணியப் போட்டுட்டு வந்து உட்கார்ந்தா வெளங்குமாங்கய்யா...? பொம்பளைங்கல்லாம் ரொம்பப் பயப்படுறாங்கய்யா... அவர் ரூமுக்குள்ள போமாட்டேங் கிறாங்க... நீங்க இருக்கைல எல்லாத்தையும் வெளக்கிச் சொல்லி நீங்களே அம்புட்டையும் வாங்கிப்புடுவீங்க... இப்ப ல்லாம் அதில்ல... கொண்டு வையுய்யாங்கிறதோட சரி... கையெழுத்தாகி வந்த அன்னிக்குத்தான் நிச்சயம்.. என் ஜி.பி.எப். போட்டு இருபது நாளாச்சுங்கய்யா... இன்னும் காசு கைக்கு வந்தபாடில்ல... என் மவளுக்கு ஒரு மாப்ள பார்த்திரு க்கேன்யா... பரிசம் போட்டுடலாம்னு பார்த்தா பைசா கைக்கு வரமாட்டேங்குது... நாள் குறிக்க முடிலங்கய்யா... அதுக்கு த்தான் சொன்னேன்... நீங்க வெளியேறைல என்னையும் தயவுசெஞ்சு வெளியேத்திடுங்கன்னு... நீங்க செய்யாமப் போயிட்டீங்க...’

வேட்டையனுக்கு ஒரு மாறுதல் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்பதில் நாகசாமிக்கும் வருத்தம் உண்டு. ஆள் இல்லாமல் அவன் குடும்பம் பரிதவிக்குமே என்ற எண்ணம்தான் இவருக்கு. தனக்கு அவ்வப்போது வந்து வீட்டு வேலை செய்வது தடைப்படுமே என்ற எண்ணமிருக்குமோ என்று அவனாகவே நினைத்துக்கொண்டு அதையும் வாய் விட்டுச் சொல்லி விட்டான்.

‘லீவுல வந்து செய்து கொடுக்கிறேன்யா... அதப்பத்தி யெல்லாம் நீங்க ஒண்ணும் நினைக்க வேண்டாம்... அதுக்கு நா பொறுப்பு...’ என்று வேறு சொல்லிக் கொண்டான். தனக்கு வந்து செய்வதைவிட வேறு ஆம்பிளை இல்லாத அவன் குடும்பம் கஷ்டப்படுமே என்ற ஆதங்கம்தான் இவரிடம் பெருகி நின்றது. வாழ்க்கையில் கஷ்டத்தை உணர்ந்தவனு க்குத்தானே மற்றவர்கள் கஷ்டத்தையும் உள்வாங்க முடியும்?

‘சரி, வாங்க... கீழே போகலாம்...’ சொல்லிவிட்டு இறங்கினார் இவர்.

சுற்றிலும் கூட்டி சுத்தம் செய்து செடி கொடிகளை முறைப் படுத்தி தண்ணீர் இறங்கப் பாத்தி கட்டி, சலிக்காமல் ஒவ்வொன்றுக்கும் ரெண்டு வாளித் தண்ணீராவது ஊற்றி அழகு பார்த்திருந்தார் வேட்டை. அப்பப்பா! வேட்டையன் ஒரு முறை வந்து போனால் வீடு எவ்வளவு திருத்தமாகி விடுகிறது?

கொல்லைப்புறம் சென்று வாளியில் கிடந்த தண்ணீரில் கை, கால் கழுவ ஆரம்பித்தார் வேட்டையன். வாசலில் அமாவா சையை அநாவசியமாய் காக்க வைத்து விட்டோமே என்கிற ஆதங்கத்தில் -

‘நேரமாயிடுச்சா... நீங்க பல எடத்துக்குப் போறவரு... உங்களக் காக்க வச்சிட்டனே...’ என்றார்.

‘இருக்கட்டுங்கய்யா...’ சொல்லியவாறே நிறுக்க ஆரம்பித்தான் அமாவாசை.

‘எதுக்கு? நாந்தான் வேணாம்னல்ல...!’ தூக்கிப் போடுங்க சாக்குல...’ என்றார் இவர்.

அமாவாசையின் முகத்தில் மெல்லிய புன்னகை. இதற்குள் நாகு எதை எதையோ கொண்டுவந்து போட்டிருந்தாள் அங்கே.

காலி அட்டைப் பெட்டிகள், பாட்டில்கள், டப்பாக்கள், உடைந்த பைப்கள், இரும்புகள், பழைய செருப்புகள்... என்று என்னென்னவோ இருந்தன.

‘இதுக்கு, இந்தப் பால் பாக்கெட்டுகளுக்கு, எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு ரேட் போட்டுக்கிறேன்யா... பேப்பர் ஆறு கிலோ வருதுங்கய்யா வேறே ஏதாச்சும் இருக்குங்களா...?’

‘அவ்வளவுதான் அமாவாச... ஒரு நாளைக்கு பரண் மேல இருக்கிறதெல்லாம் ஒழிக்கணும்... என்னால ஒத்தையா முடியாது... எனக்கு தூசியும் ஆகாது...’

‘உங்களுக்கு என்னைக்குத் தோதுப்படும்னு சொல்லுங்கய்யா... அன்னைக்கு சரி பண்ணிடுவோம்...’ - சொல்லியவாறே அவன் நீட்டிய காசை வாங்கிக் கொண்டார் நாகசாமி.

‘நீங்க வந்து எடுத்துக்கிட்டதே பெரிய விஷயம்... ரெகுலரா வர்றீங்க பாருங்க... அதான் வேணும்... காசு பெரிசில்லை... இந்தாங்க பிடிங்க... - ஒரு இருபது ரூபாயை எடுத்து நீட்டினார் நாகசாமி. டீ சாப்பிடுங்க... என்றார்.

‘இருக்கட்டுங்கய்யா...’ என்றவாறே மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டான் அமாவாசை.

வெளியே நின்ற சைக்கிளில் சாக்கு மூட்டையை வைத்துக் கட்டும் சத்தம். அதைத் தொடர்ந்து

‘போயிட்டு வர்றேங் கய்யா...’

‘இந்தா பிடி...’ கையிலிருந்த காசை நாகுவிடம் நீட்டினார் நாகசாமி.

‘என்னாச்சு... இவ்வளவுதானா?’

‘ஆம்மா... வேறே எம்புட்டு வரும்... இது ஒரு காசா... இதையும் அவன்ட்ட வாங்கணுமான்னு இருக்கு எனக்கு... எத்தனையோ வீடுகள்ல பழைய பேன்ட், சட்டைன்னெல்லாம் அப்டியே தூக்கிக் கொடுத்திடுறாங்க... எடம் காலியானாச் சரின்னு... நாமதான் கணக்குப் பண்ணிகிட்டிருக்கோம்...’

‘எல்லாரும் அப்டி இருப்பாங்களா... ஒருத்தர் அப்டீன்னா, ஒருத்தர் இப்டித்தான்... நீங்களும் கணக்குப் பார்க்காம அவனாக் கொடுக்கிறதத்தானே வாங்கிக் கிறீங்க...? எதுவும் கட்டாயப்படுத்திறதில்லையே...?’

‘இன்னும் அதுவும் வேறே வேணுமா? அப்புறம் இந்தப் பக்கம் தல வச்சுக் கூடப் படுக்கமாட்டானாக்கும்... கட்டாயப்படுத்தி அப்டி என்ன கோட்டையா கட்டப் போறோம்? சும்மாத் தூக்கிக் கொடுத்தாலும் நாம ஒண்ணும் குறைஞ்சு போகப் போறதில்லையே...’ வாசலில் திரும்ப கேட் திறக்கும் சத்தம்.

‘அய்யா... நா வர்றேனுங்க...’ - மாடித் தண்ணீர்த் தொட்டி சுத்தம் செய்து வேலை முடித்த வேட்டையனின் விடைபெறும் குரல்.

‘கிளம்பியாச்சா... இதோ வந்துட்டேன்...’ என்றவாறே பர்சை எடுத்துக்கொண்டு ஓடினார் நாகசாமி. அதிலிருந்து உருவி நூறு ரூபாயை எடுத்து நீட்டினார் அவனிடம்.

‘வேண்டாங்கய்யா... இருக்கட்டும்... இதுக்கெல்லாம் காசு வாங்கினா எப்டீ... அம்மா தோச சுட்டுக் கொடுத் தாங்க... நிறையச் சாப்டுட்டேன் அதுவே போதும்...’ - சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவனை மீறி ஒரு பெரிய ஏப்பம் வந்தது வேட்டையனுக்கு. அடுத்த நிமிடம் சைக்கிளை எடுத்துக் கொண்டு பறந்து விட்டான்.

நாகசாமி அப்படியே திண்ணையில் நின்றிருந்தார்.

‘மனுஷாள்தான் பெரிசு... காசா முக்கியம்...? ரெண்டு மணி நேரமா சரியான வேல அவருக்கு... வீட்டைச் சுத்தி எவ்வளவு நீட்டாயிடுச்சி பாருங்க... யார் செய்வாங்க நமக்கு...? காசத் திணிச்சிருக்கப்படாதா? இப்படியா வெறுமே அனுப்புவீங்க...?’ -நாகுவின் பளீர் கேள்வி.

குற்ற உணர்ச்சி மேலிட பார்க்கவே பாவமாய் பரிதாபமாக நின்று கொண்டிருந்தார் நாகசாமி. சாப்பிட்டதே போதும் என்று திருப்தியோடு கிளம்பிப் போன வேட்டையனின் பெருந்தன்மையும் மனசும் அவரை வியக்க வைத்திருந்தது.



ushadeepan@thaiveedu.com

**தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***

# நெய்தல் நடை

- ரஞ்சனி சுப்ரமணியம்



‘நீ இன்னுமோர் பெண் சிநேகிதியுடன் கதைத்துக் கொண்டிருக்கிறாயா என்ன ? உன் மந்தகாசப் புன்னகை காட்டிக் கொடுக்கிறதே’

வெண்முகம் மேலும் சிவக்க மென்கோபத்துடன் கேட்டாள். தமிழில் அல்ல ஆங்கிலத்தில்.

அவளின் விடுப்புக் கதை கேட்டு அவனும் மனதிற்குள் கமுக்கமாக சிரித்துக் கொண்டான். ஆங்கிலத்தில் அல்ல தமிழில்.

புறப்பட்ட நேரம் தொடக்கம் அவளது வாய் ஓயவேயில்லை. சிறுமிகளின் துடிதுடிப்பு. ஆனால் சிறுமியல்ல. யௌவனத்தின் பெருங்கொடை.

அவனைப் பற்றிய அனைத் தையும் அறிந்து கொண்டு விட வேண்டும் என்ற பேரார்வத்தைக் கண்களில் ஒளிர் நட்சத்திரங் களாகக் காட்டியபடியே மின்னல் வேக வாகனத்தில் ஹரியின் பக்கத்தில் கதரீன் அமர்ந்திருந்தாள்.

கோப்பிக்கான இடைநிறுத்தங்க ளின்போது, கேள்விக் கொத்து களால் நிறைந்திருக்கும் அஞ்சுவின் வட்ஸ்அப் செய்திகளைப் பார்த்து இரசித்து, பதில் அனுப்ப வேண்டிய தேவை ஹரிக்கு நிதமும் உண்டு. அதனால் தொடர்ந்து குறுநகை புரிய வேண்டிய அவசியமும் இருக்கவே செய்கிறது.

காற்றைக் கிழித்து காட்டைக் குறுக்கறுத்து ஓடிய வாகனத்தில் அவர்கள் இருவர் மட்டுமே. ஹரியின் அதிவேகம் அவளைப் பயமுறுத்த, இடையிடையே Oh... No... No... எனக் கீரீச்சிட்டவள் சாட்டோடு சாட்டாக அவனது கைகளைப் பற்றிக் கொண்டாள்.

இவன் அவளுக்குத் தெரியாமல் உள்ளூர சிரித்துக் கொண்டான். இந்த மூன்று மாதங்களாகவே அவதானித்துக் கொண்டுதானே இருக்கிறான். எத்தனை பேரைக் கண்டிருப்பான் இப்படி. இளசுகள் பெடி பெட்டை எல்லாம் அவனோடு பயிற்சிக்கு வர விரும்புவதில் அதீத ஆனந்தம் அவனுக்கு. காரணம் தன் தொழில் திறனும், கம்பீரமும், ஆளுமையும், அழகும் என்பதை மன அடக்கத்துடன் உணர்ந்து கொண்டிருந்தான்.

ஹரியின் மேலான தனது உள்ளத்தின் கிளர்ச்சியை, கண்களின் வெளிப்பாட்டிலிருந்து மறைப்பதற்கு அவள் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை. அவனுக்காக அவள் ஆர்வத்துடன் தயாரித்து வந்த ஸ்டிக்கி டேட் கேக்கை ஊட்டி விடட்டுமா என்று வேறு கேட்டாள்.

‘என்னை மயக்க இதெல்லாம் தேவையில்லையே. பயிற்சியில் நீ பாஸ் பண்ண இந்தக் கேக் உனக்கு ஒரு போதும் உதவாது’ என்றது ஹரியின் மனக்குரல்.

கடற்கரையோரமாக அமைந்திருந்த அந்தக் கூட்டு இராணுவ பயிற்சிக் கூடத்தைச் சென்றடைய, மொத்தமாகப் பத்து மணித்தியாலங்கள் ஆகும்.

அவளுக்கான உள்ளகப் பயிற்சிகள் நிறைவடைந்த நிலையில், அடிப்படை வெளிக்கள இராணுவப் பயிற்சிகள் நாளையில் இருந்து அங்கு ஆரம்பம். அத்துடன் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வரும் இளைஞர் யுவதிகள் குழுவிற்கான விமான தனிச்சை இலத்திரனியல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புகள் பயிற்சியாளனும் இவன்தான்.

•

ஹரியை மிகச்சில வருடங்க ளாகவே அஞ்சு அறிவாள். கடல்கடந்த தேசமொன்றில் வாழும் அவன், மூன்று காரணங்களினால் மிக மிக அதிகமாக மனதை நெருங்கியவன். அவனைப் பற்றிய அஞ்சுவின் கணிப்புகளில் மூன்றாவதும் மிக முக்கியமான துமான ஒன்றே அதற்கான ஆதார சுருதி. மீண்டும் மீண்டும் அது உறுதிப்படுத்தப்படுவதில் அஞ்சுவிற்கு அதீத மகிழ்ச்சி.

ஹரியின் கைபேசி சிணுங்கியது. ஐந்து வயதான அழகான சிறுவனின் முகம் திரையில் தோன்றி ‘மாமா’ என்றது மிகச் செல்லமாக. மருமகனின் முகம் கண்டு ‘ஹாய் குட்டி’ என்றான் ஹரி ஆனந்தமாக.

கதரீனின் கண்கள் ஆச்சரியத்துடன் மலர்ந்தன.

‘சொல்லவேயில்லையே! உனக்கு ஒரு மகன் இருக்கிறானா என்ன ? உன்னை ஏன் மம்மா என அழைக்கிறான் ?’

‘ஆம். இவனுக்கு மூத்ததாக ஒரு மகளும் கூட இருக்கிறாள்’

குறும்பாகப் பதில் தந்தவன், அவளின் முகத்தில் அப்பட்ட மாகத் தெரிந்த அதிர்ச்சியை ஓரப் பார்வையால் அளவெடுத்து தனக்குள் இரசித்தான்.

‘எங்கே படத்தைக் காட்டு பார்க்கலாம்’

பிறகு காட்டுகிறேன் என்றான் சற்றே திரும்பி. அடுத்த கேள்விக்கான ஆயத்தங்களில் அவள் முனைப்புடன் இருக்கிறாள் என்பது புரிந்தது. எனினும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள்.

‘எத்தனை தரம்தான் கேட்பாய்? பொறுமை. பொறுமை. பயிற்சிகள் நிறைவடைந்து நீ செல்லும்போது நானே அவளைக் காட்டுகிறேன்’

இவளைப் பற்றி அஞ்சுவிடம் கூறினால் என்ன நினைப்பாள்? என்னைச் சரியான விதத்தில் புரிந்து கொள்வாளா? பயிற்சிப் பட்டறைக்காக கதரீனுடன் தொலைதூரப் பயணம் செல்ல நேரலாம் என்பதை அறிந்த நாள் முதலே சிந்தனை வயப்பட்ட அஞ்சுவின் மனது, இவர்களை மனோவேகத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பது அவன் அறியாததல்ல. அவள் நிதமும் கூறும் ஒன்றை மனதினுள் அசை போட்டுக் கொண்டான்.

‘ஹரி, கவனம். பயமறியாத உன் குணத்தினால் ஆபத்துகளைத் தேடிக் கொள்ளாதே. நீ இந்தத் துறையில் இருப்பது எனக்கு எப்போதும் சஞ்சலம் தருகிறது. நேரகாலமில்லாது வெளிக்களப் பயிற்சி அளிக்கப் புறப்படும் போதெல்லாம் மனம் மிகமிகப் பதற்றமாக இருக்கிறது. ஏன் இடத்துக்கிடம் அலைகிறாய்? லாவண்யாவின் நினைவை எப்போதும் நெஞ்சில் கொள். அவளுடன் சேர்ந்து இனிதே களிக்க வேண்டிய இளமைக் காலத்தை விரயம் செய்கிறாய்’

ஆனால், எந்த விதமான ஆடித் தள்ளுபடிகளும் இல்லாது ஆபத்துகளை விலைக்கு வாங்கும் துறையில் இருப்பதும், நேருக்கு நேர் களம் காண்பதும், புதிது புதிதாகக் கற்றுக் கொள்வதும், சிரமமான பிரதேசங்களில் பணி நிமித்தம் சுற்றுவதும் ஹரிக்கு மிக விருப்பமானது என்பதும் அவளுக்கு நன்கு தெரியும்.

•

தனது கேள்விக்குத் தகுந்த பதில் கிடைக்காத ஏமாற்றத்தால் உறக்கத்தின் வயப்பட்டவளாய் கதரீன் இப்போது அவனது இடது தோளில் தலையை சாய்த்திருந்தாள். வாகனத்தை நிறுத்தி அவளின் கள்ளமற்ற முகத்தினை இரசித்தான்.

இருபத்திரண்டு வயதின் துடினமும், இளமையின் மென்மையும் அபரிமிதமாக நிறைந்தவள். இருக்குமிடத்தை தன் சிரிப்பால் கலகலப்பாக்கி ஓடித்திரியும் இயல்பு கொண்டவள். எதையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வாள். உதவிகள் செய்வாள். இவளுக்குள் ஒளிந்திருக்கும் அப்பாவித்தனமான இனிய குழந்தையை முதலில் கண்ட அன்றே விரும்பத் தொடங்கி இருந்தான். ஆனால் அதைக் கதரீனிடம் வெளிப்படுத்தியதில்லை.

இவள் மேலான தன் கரிசனை எவ்வகைப்பட்டது என கடும் ஆராய்ச்சியில் இவன் ஈடுபட்டதில்லை. இந்த ஈர்ப்பு எல்லோரிடமும் ஏற்படுவதில்லை என்பதை நன்கு அறிவான். அழகியல் இரசனைகளை, எல்லா நுட்பங்களுடனும் அணுக நினைப்பவன். வாழ்வின் மென்கோணங்கள் வன்கோணங்கள் அனைத்தும் அவனது விருப்புக்கு உரியவை.

காட்டின் பசுமையும் குளிர்மையும் மனதுக்கு ரம்மியமான உணர்வுகளை உசுப்பேற்றின. இருளை அண்மித்த மாலைப் பொழுது. பௌர்ணமியை நெருங்கும் நிலா. வானத்தில் ஓரிரு நட்சத்திரங்கள் மிக மங்கலாக. கதரீனின் மெல்லிய வாசனைத் திரவியம் நுகர்தலை எட்டி, நினைவுகளை எங்கோ மிதக்க வைத்தது. லாவண்யாவின் கனவு துளிர்க்கும் விழிகள் மனதில் தோன்றிக் கிளர்ச்சியூட்ட இயற்கையின் அணைப்பில் இருந்து அவன் நிஜத்துக்கு மீண்டு வந்தான்.

கதரீன் பற்றிய சிறு சிறு செய்திகளை அஞ்சுவிற்கு அடிக்கடி அனுப்புவான். சில சமயம் கிண்டலடிக்கும் அவள் சில சமயங்களில் கனத்த மௌனம் சாதிப்பாள். அந்நேரங்களில் அவளது மனநிலை என்னவென்பதை இவன் அறிவான். மனங்களைப் ஊடுருவிப் படிப்பது அவனுக்கு இயல்பாகக் கைவந்த கலை.

விமானப் படைக்கான கதரீனின் தெரிவை சாத்தியமாக்கியவன் அவன்தான் என்பதை அந்தத் துடினமான பெண் ஒரு போதும் அறிய நேராது என்றே கருதினான். அறிவதை அவன் விரும்பவும் இல்லை.

விமானப் படையில் விமானியாகவோ, இலத்திரனியல் பொறியியலாளராகவோ வர வேண்டும் என்ற கனவு கொண்டவள். தெரிவின் இறுதிச்சுற்று வரை வந்து நிராகரிக்கப்பட்டவள். எனினும் இலத்திரனியலில் அவளுக்கு இருந்த அதிசிறப்புத் தகுதி காரணமாக, தனிச்சைப் பொறியியல் பயிற்சிக்கு அவளைத் தெரிவு செய்யும்படி மேலிடத்தை இவன் தகுந்த காரணங்களுடன் வலியுறுத்தினான்.

இல்லாவிடில் தெரிவிற்கான உடல்சார் நியமத் தகுதிகள் குறைவான அவளது கனவுகள் நிரந்தரமாகப் பொசுங்கி இருக்கும். மேலதிக பயிற்சிகளுக்காகவே தற்போது அவளை அழைத்துச் செல்கிறான்.

ஹரி குறும்புத்தனம் மிகுந்தவன் என்றாலும் வெளிக்களப் பயிற்சி வேளைகளில் மிகவும் கண்டிப்பானவன். அவனுடைய நிழலில் இருந்து இலத்திரனியல் மற்றும் ஏனைய அடிப்படைப் பயிற்சிகள் பெறும் யாரும் தமது திறமையை நிரூபித்தாலன்றி வேலைத்தளத்திற்கு போக முடியாது என்பதை மேலிடமும் அறியும்.

ஏனைய துறைகளுக்கும் சேர்த்து ஹரியோடு மொத்தம் ஆறு பயிற்சியாளர்கள். கடும் பயிற்சிப் பட்டறைகள் ஆரம்பமாகி விட்டன. அவற்றின் இரகசிய விபரங்களை ஹரி, அஞ்சுவுக்கு ஒரு போதும் சொல்வதில்லை. பாதுகாப்புத் துறையின் தொழில் நேர்மை காப்பது அவன் வழமை.

பயிற்சியின் இடைவேளைகளில் அவன் கைபேசியில் அஞ்சுவுக்கு குறுஞ் செய்திகள் அனுப்புவதை, சற்றே குறுகுறுப்பான பொறாமையுடன் கவனித்துக் கொண்டிருப்பாள் கதரீன்.

‘பயிற்சியளிக்கும்போது எவன் போன் பண்ணினாலும் தூக்க மாட்டாய். இன்று தேநீர் இடைவேளையில் யாருக்கு தகவல் அனுப்பினாய்?’

‘என்னை நோட்டம் விடுவது உனது பயிற்சிப் பட்டியலில் இல்லையே கதரீன்’ என்றான் குறும்பாக அவன்.

சிரிப்போடு அப்போ முடித்ததை மாலையில் மீண்டும் கேட்டாள். இரு பக்கமிருந்தும் புலனாய்வு நடவடிக்கைகள் இரகசியமாகத் தொடர்வதை ஹரியும் மனதிற்குள் இரசித்துக் கொண்டிருந்தான்.

•

பயிற்சி இறுதி நாட்களை அண்மித்துக்கொண்டிருந்தது. நாளுக்கு நாள் ஹரியின் செய்திகள் அனைத்தும் கதரீன் புகழ் பாடு வதாகவே இருந்ததை அஞ்சு அவதானிக்க மறக்க வில்லை.

‘கதரீன் பாசக்காரி. நல்ல பண்புள்ள இளம் பெண். இவள் சின்னவள். சற்று பயந்தவளும் கூட. சுட்டித்தனம் மிகுந்தவள். ஆனால் உண்மையில் கெட்டிக்காரி. அவள் நல்ல ஓர் அதி காரி தரத்துக்கு ஐந்து ஆறு வருடங்களில் வந்துவிடுவாள். ஆர்வ மிகுதி அதிகம். விளையாட்டு கணிதம் எந்திரதொழி னுட்பம் என்பவற்றில் கெட்டிக்காரி. அவளிடம் குறிக்கோள் உள்ளது. மிகவும் சிறப்பான புள்ளிகள் பெற்றுள்ளாள். ஒரு துடினமான பெண்ணை வளர்த்து எடுத்திருக்கிறேன் என் பதில் மகிழ்ச்சி...

விமானம் ஒரு விந்தையான மிக மிகச் சிக்கலான இலத்தி ரனியல் தொழில்நுட்பம் கொண்ட ஒன்று அல்லவா அஞ்சு. சண்டைக்கு போய் திரும்பி வரும் விமானங்களை அக்கு வேறாகப் பிரித்து இலத்திரனியல் அலகுகளைப் பழுது பார்க்க வேண்டும். அவளுக்கு நான் சொல்லித் தந்த விடயங் களை விட பல மடங்கு அதிகமாக உன் இளைய அணிக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் எனச் சொன்னேன். தலையை தலையை ஆட்டினாள்.

அஞ்சு இதற்குப் பதில் அனுப்பவில்லை. அவளது மனம் கூட மிகச் சிக்கலான இயந்திரம்தான் என்பதை ஹரியும் அறிவான். நினைவுகளில் எங்கோ ஒரு மூலையில் பதற்றத் தின் பேயாட்டம் ஆரம்பமாகி இருந்தது. இவனுக்குள் என்ன தான் நடந்து கொண்டிருக்கிறது? தடம் மாறுகிறானா?

ஹரியின் செய்திகள் தொடர்ந்தன.

‘மாலையில் ஒரு சிறுவனைப் போல இவர்களுடன் சேர்ந்து கடலோரத்தில் விளையாடுவேன். நீந்துவேன். ஆடுவேன். பாடுவேன். நட்பாக பழகுவேன். ஆனால் இவர்களை நான் பொறுப்பாகப் பார்த்துக்கொள்ள விரும்பும் அதேசமயம் மிகக் கண்டிப்பானவன், என் சுய கட்டுப்பாட்டை மீறு வதில்லை என்பதும் அனைவருக்கும் தெரியும்’

‘அவ்வாறே தொடர்ந்தால் எல்லோருக்கும் மிக நல்லதுதான் ஹரி’ என்ற அஞ்சுவின் செய்தி மிகக் குறிப்பாக அவனுக்கு எதையோ உணர்த்தியது. சிரித்துக் கொண்டான்.

இதோ இன்றுதான் பயிற்சியின் இறுதிநாள்.

●

‘இந்த இடம் எத்தனை கலகலப்பானது தெரியுமா?’

நீங்கள் மிகவும் இரசிப்பீர்கள் அஞ்சு. கடலோரத் தாழைகள் கொடுக்கும் மந்தகாசம், இருளில் கடற்கரையில் தீ மூட்டி நடனம் என வலு பம்பலாக இருக்கும்.

நிறைவு நாளின் பெரிய பார்ட்டி இப்போ நடந்து கொண்டிருக் கிறது. இந்த இடம் மின் விளக்குகளாலும் அதிர்வு இசை யாலும் நிரப்பப்பட்டிருக்கிறது.

Vodka, Whisky, beer, cider & wine என ஊருப்பட்ட வகை யான மதுசாரங்கள் மற்றும் சுவையான உணவுகள் நிறைந்தி ருக்கின்றன. பயிற்சிக்கு வந்தவர்கள் முதல் நாளின் கடும் சோர்வு நீங்க மதுசாரங்களை ஒரு கை பார்ப்பார்கள். தாம் நிதானம் என சொல்லிச் சரிந்து நடக்கும் வரை நாமும் பார்த் துக்கொண்டு இருப்போம். கவிழத் தொடங்க கையை கொடுப்போம்’

‘நிதானம் இழந்தால் பெற்ற புள்ளிகள் குறையுமா என்ன?’

அஞ்சுவின் நியாயமான சந்தேகம்.

‘இல்லையில்லை. இது பயிற்சியின் பின்னான இறுதிப் பகுதி. புள்ளிகள் வழங்குவதை இது பாதிக்காது. சுய கட்டுப்பாட்டை இழக்க வைப்பது எமது பொறுப்பு.

தனது அளவு கோல் எது என்பதை அவர்களுக்கு அறிய வைக்கும் பயிற்சி முறைகளில் ஒன்று. இனி அளவாக தொடு வார்கள் எதையும். இது அவர்களாகக் கற்றுத் தெளிய வேண்டிய பாடம். வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாகவும் அமைய வேண்டும் என்பது எமது நோக்கம்.

‘ஹரி, எனக்கு இந்த விடயம் மிகப் புதியது. நீ இது போன்ற விடயங்களை எனக்குச் சொல்லலாமா எனத் தெரியவில்லை.’

‘பிரச்சினையில்லை அஞ்சு. இது வழமையானதுதான். இரக சியம் ஏதுமில்லை. நாட்டுக்கு நாடு வேறுபடலாம். கடைசி இரண்டு நாட்கள் சரியாகத் தூங்க விடமாட்டோம். சிந்த னையை மழுப்பும் வகையிலான பயிற்சி உத்தி. தூக்கம் இல்லாத தஞ்சக்கேடு. தண்ணீர் மிகச் சொட்டு. அத்தோடு விமானத்தின் அனைத்து வயர்களையும் இனங்காண வேண் டும். பெயர்களை எழுதி சிறுகுறிப்பெழுத வேண்டும். இவை யெல்லாம் உடல்சார் கடும் பயிற்சியின் பின்னர் செய்ய வேண்டியவை. மனித உடலின் அனைத்து மகத்துவங்களும் அறியப்படும் நாட்கள் அவை. இறுதிப் பயிற்சியில், சிவந்த முகம், அழுகை நிரம்பிய கண்கள், நடுங்கும் விரல்களுடன் கதரீன் தரையில் இருந்துவிட்டாள்’

‘ஏன் உன்னைப் பிரிய வேண்டும் என்ற துயரா?’

அஞ்சுவின் கேள்வியில் சந்தேகங்களுடன் ஆயிரம் உள் அர்த்தங்கள்.

பார்ட்டி மூடில் ஹரியும் கிண்டலும் கேலியுமாகவே கதை யைத் தொடர்ந்தான்.

‘தெரியவில்லையே. இப்போ மடம் கதரீன் vodka குடித்தது விட்டு சுழண்டு கொண்டு திரியிறாள். தெளிவா இருக்கிறன் சேர் எண்டுவாள். பிறகு தெளிவா இருக்கிறன் ஹரி எண்டு வாள். பிறகு I am alright buddy எண்டுவாள். இதை வச்சு எவ்வளவு தெளிவு எண்டு தெரியும் எங்களுக்கு’.

‘உன்னைப் போன்ற பயிற்சியாளர்களை அவர்கள் எவ்வாறு அழைக்க வேண்டும் ஹரி’

‘வழமையாக சேர் என அழைப்பார்கள். ஆனால் எதிர்பார்ப்பு இல்லை’

‘மிகுதியையும் கேளுங்கள் அஞ்சு. சுவாரசியமான தகவல். Monkey Shoulders’ எனும் ஒரு whiskey-ஐ குடித்துவிட்டு குரங்காட்டம். தென்னையில் ஏறிய ஒரு பெடிப்பயல் தடால். அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டுள்ளது.

கலந்து குடிச்சு கவிண்ட சிலருக்கு IV போட்டுக் கிடக்குது. இடையில திரும்பிப் பாத்தா ஆண் பெண் இளசுகளை காணக் கிடைக்காது. தாழைகளுக்கு இடையே தவழப் போயிடு வீனம். இது இங்கு சர்வசாதாரணம். பசிக்கு கொறிக்கிற மாதிரி...

நான் சொல்லுவது இது ஒன்றுதான். பிள்ளைக்கு பேர் வைக்கிறது என் பொறுப்பில்லை என்று. எல்லாருக்கும் என்னுடைய கதைகளுக்கு சிரிப்புத்தான்...

இருபக்க சம்மதத்துடனும் சல்லாபம், கலாபம், ஆழ ஊடுருவல் என மனித தேவைகளை நிவர்த்தி செய்வது இங்கு பேசுபொருளோ பொருட்டோ அல்ல. விருப்பமா, எனக்கும்தான் எண்டுட்டு..., மிச்சம் சொல்லத் தேவையில்லையே அஞ்சு.

முன்பு வெள்ளக்காரப் பெண்கள் சிலர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் என்னிடம் வெளிப்படையாகக் கேட்டிருந்தனர்'

'ஓகோ... அப்போ நீ என்ன செய்தாய் ஹரி'

'சிறுமுறுவல். விலகல்'

'ம்... மகிழ்ச்சி'

'நாளைக்கு அதிகாலை பயணம். நம் வழமையான வேலைத் தலத்துக்கு கிளம்புகிறோம். ஆனால் கதரீன் இருக்கும் நிலையில் காலையில் ஆள் எழும்பாது போல இருக்கு'

அவனது செய்தியில் தெரிவது பிரிவின் ஆதங்கமா என மருண்டது அஞ்சுவின் மனம்.

'நீ சோகமாகி விட்டாய் போல தெரிகிறதே? கேட்பதற்கு எல்லாமே சுவாரசியமாக உள்ளது. இந்தக் கூத்தெல்லாம் நடக்கும் போது ஹரி என்னும் சிறுவன் என்ன செய்வான்?

'மென் மதுசாரம் மட்டும். ஆட்டம் பாட்டம் முடிந்த பிறகு சிப்பி பொறுக்கிக் கொண்டு வானத்துத் தாரகைகளைப் பார்த்துக் கொண்டு திரிவான். வேறென்ன? இவ்வாறான சூழ்நிலையில் ஒரு பெடி தன் கற்பைக் காப்பாற்றிக் கொண்டு காலம் தள்ளுது என்றால் பாருங்களேன். இன்று இரவு எனக்கும் கூட சோதினைக் காலம்தான். வேணும் எண்டே வாற நிலைதான் இன்றைய நிலை. அறை மாறிப் போவதும் பெடி பெட்டையள் கட்டில் உடைக்கிற சத்தமும் எண்டு படுக்க வழியில்லை'

'நீ இன்னும் உறங்கவில்லையா ஹரி'

'என்ன அவசரம். அதை விட முக்கியம் இந்த முஸ்பாத்திகளைப் பார்ப்பது. படுக்க பயமா இருக்குது. எது பக்கத்தில படுக்குதோ எண்டு. இதுகள் வண்டியை தள்ளினால் என்னுடைய வாழ்க்கை என்னாவது?'

'இப்போ கதரீன் என்ன செய்கிறாள்?'

'கதரினும் கிறக்கமாக பல்லைக் காட்டிக் கொண்டு திரியிறாள். இண்டைக்கு தவளுவாள் எண்டு நினைக்கிறன். காற்றுக்கு தாள் போட முடியுமா?'

ஹரி சிரித்தான்.

மிக அதிர்ச்சியாக, பதைபதைப்பாக இருந்தது அஞ்சுவிற்கு. உண்மையாகத்தான் சொல்கிறானா? அல்லது வழமை போல பகிடி விடுகிறானா?

'சந்தர்ப்பம் வாய்க்காத வரை எல்லோரும் உத்தமர்தான். வாய்ப்பிருந்தும் கட்டுப்பாடாக இருப்பதுதான் சாதனை ஹரி'

அவளது குரலில் நடுக்கம் கலந்த இறுக்கம் தெரிந்தது.

'விரைவில் கத்தரீனைக் கண்ணீரும் கம்பலையுமாக தொலைவில் இருக்கும் புதிய வேலைத்தலத்திற்கு அனுப்பி வைக்க வேணும். ஏதோ காலைச் சுற்றும் வீட்டுப் பூனை மாதிரி இருந்தாள். வாகனப் பயணம் முழுக்க கலகலவெனக் கதைத்தபடி வந்தாள்...

சிலர் எதனால் என் வாழ்வில் வருகிறார்கள் என்றே தெரியவில்லை அஞ்சு. துள்ளியபடி எங்கிருந்தோ வந்தாள். கலங்கியபடி எட்டிச் செல்லப் போகிறாள். எனக்கு யாரென்றே தெரியாத ஒரு சிறு பெண். கடற்கரைக்கு சென்று கால் நனைத்து காற்றை உள்வாங்கியபடி என்னைப் பற்றி முழுதாக அறிய வேண்டும் என்கிறாள். தன்னுடன் இசை நிகழ்ச்சிக்கு வா என்கிறாள். மனம் உருகிப் போகிறேன். நான் எப்படி இவ்வளவு இளகிய மனமுள்ளவனானேன். யாரென்றே தெரியாமல் அவளை இந்தத் தேர்வுக்கு சிபாரிசு செய்து, பயிற்றுவித்து பறக்கவிடப் போவதால் இவ்வாறு உள்ளதோ என எண்ணுகிறேன்...'

'அது காரணமல்ல ஹரி. அவளின் மெல்லியல்புகள் உனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. ஆனால்...'

மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை அஞ்சுவால்.

•

அடுத்த நாள் பயணத்தின் இடைநடுவில் சிறு செய்தியே அனுப்பியிருந்தான் ஹரி.

'அஞ்சு, கதரீன் வழிநெடுக ஒரே சத்தி. முகம் சிவந்து கண்கள் வீங்கியபடி இருக்கிறாள். இடையிடையே கண் முழிச்சு ஈனக் குரலில் 'Thanks Hari' என்றாள். இப்ப ஆள் அவுட். இன்று இடை வழியில் hotel-இல் தங்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். சுருண்டிட்டாள் பெட்டை. கடும் பயிற்சி. நித்திரை இன்மை. உள்ளே சென்ற மந்திர நீர். இடம் வலம் தெரியாத ஆட்டம் பாட்டம். இன்ப நிலை மிதப்பு எல்லாம் கடைசியில் காலை வாரி விட்டது. அவளைத் தூக்கிச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறாள். கொஞ்சம் தெளிந்ததும் காத்துப் பிடிக்க கடற்கரையில் நடக்க வைக்கப் போகிறேன். முள்ளை முள்ளால் எடுக்க, நானும் கொஞ்சமா குடிக்கக் குடுக்கப் போறன்'

செய்தி இடை நடுவில் நின்றது.

ஹரி கடைசியாகச் சொன்ன விடயம், இன்றிரவு ஏதேனும் விபரீதம் நடந்து விடுமோ என்ற பதைபதைப்பை அதிகரித்தது அஞ்சுவுக்கு.

அதன் பின் கனத்த மௌனம். அடுத்த நாளும் நீண்ட நேரம் செய்திகள் ஏதும் இல்லை. பயணம் தொடர்ந்ததா? நடக்கக் கூடாத ஏதும் நடந்ததோ. அஞ்சுவிடம் சொல்வதற்கு குற்ற உணர்வோ சங்கடமோ கொண்டிருக்கிறானோ?

மனம் தாங்கவில்லை அஞ்சுவுக்கு.

'இருப்பிடம் வந்து விட்டாயா ஹரி'

பதைபதைப்புடன் அனுப்பிய செய்திக்குப் பதில் தந்திருந்தான்.

'வந்து விட்டேன். உண்பதென்று உணவை வைத்தால் தன் முகத்தைக் காட்டுகிறாள். உறங்கவென்று படுக்கை போட்டால் ஓடி வந்து எழுப்புகிறாள். நீங்கள் கேட்கும் போதுதான்

அவளின் பிரிவு அதிகம் தெரிகிறது. கலகலப்பு நிசப்தமாகி விட்டது'

'உண்மையாகவா ஹரி. கவனம். உன்னைப் பற்றி கொஞ்சம் யோசனையாக இருக்கிறது'

'உண்மைதான் அஞ்சு. அவள் கலகலப்பு வெற்றிடமாகி விட்டது. அவள் துடினமும் ஓட்டமும் நடையும் இறுதி நாள் அழுகையும் என் நினைவில் வரத்தான் செய்கின்றன'

'இதை எவ்வாறு நான் புரிந்து கொள்வது ஹரி ?'

'அவளில் எனக்கு பால்கவர்ச்சி இல்லை. ஏறக்குறைய என் அரை வயதுக்காரி'

'அப்படியானால், இந்த உணர்வுகளை லாவண்யாவிடம் சொல்லுவாயா ?'

'நிச்சயமாகச் சொல்லுவேன். லாவண்யா உலகை அணுகும் விதம் சற்று வேறானது. பிரிவின் உணர்வுகள், இல்லறத் திற்கான புரிதல்கள் ஆளுக்காள் வேறுபடும் அல்லவா ?'

'இதைக் கேட்பதற்காக மன்னித்துக் கொள் ஹரி. உனது வாலிபப் பருவம் எவ்வாறானது ?'

'இளமை மாயவலை வீசியது உண்மை. அங்கு அகப்பட்ட தும், சில பெண்களின் மூச்சுக்காற்று படர்ந்து சென்றதும் உண்மை. இதை ஒப்புக் கொள்வதில் தயக்கம் ஏதும் இல்லை. தூறல்கள் இல்லாமல் இளமை பாழ் அல்லவா. ஆனால் காற்றுள்ள போதே தூற்றல்கள் என்பதெல்லாம் இளமைப் பருவத்துடன் கழித்துவிட்டன. நான் தற்போது திரு மணமான ஆண்...

நான் லாவண்யாவை விட்டு பல்லாயிரம் மைல்கள் தொலை வில் உள்ளேன். எதையும் செய்யலாம். ஆனால் இங்கு தவறி ழைத்தால் அது ஏமாற்றாகிவிடும். இந்த இடத்தில் 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்ற பழமொழி பொய்க்க வேண் டும். லாவண்யா என்னைத் தவறாக நினைத்திருந்தால் இந்தக் காடு, மலை, கடல், கன்னியர் என தேசம் தேசமாக அலைய சம்மதித்திருக்க மாட்டா. அவளுக்கான எனது இந்த வாழ்வு சாத்வீகமானது'

'உன்னைப் பற்றி பெருமிதம் கொள்கிறேன் ஹரி. இதற்கா கவும் எனது பாசமும் பிணைப்பும் அதிகரிக்கிறது'

'அத்துடன் உங்களுக்காகவும் ஓர் இனிய செய்தி அஞ்சு. கதரீன் எனது கடைசி சிப்பந்தி. இத்தோடு மௌனிக்கும் வெளிக்களப் பயணங்கள். மேலிடத்தில் ஏற்கனவே நான் கூறியபடி இதுவே இறுதி வெளிக்களப் பயிற்சியாளர் வேலை. சிறப்பாக முடித்துக் கொடுத்துவிட்டு, இனிக் காரியாலய வேலைதான். ஏனென்று தெரியுமா ? என்னைப் பெறாமலே இடையில் உறவான ஒரு தாய்ப்பறவை அஞ்சுவின் அன்புக் காக. வேண்டுதலுக்காக. மன அமைதிக்காக'

அஞ்சுவின் மனம் நெகிழ்ந்து உருகியது.

'அன்பை இவ்வாறு நேசிப்பவர்கள் இங்கு எத்தனை பேர் இருப்பார்கள் என்று தெரியவில்லை ஹரி. மனதால் உன்னை மகனென அணைத்துக் கொள்கிறேன்'.

'உங்களைப் போன்ற தாயன்பை வெல்ல எந்த ஆயுதத் தாலும் முடியாது அஞ்சு. இப்படி அன்பான அக்கறையான உறவு ஒன்றுக்காக நிறுத்தினாலேயன்றி, எந்த ஆபத்தான பாதைகளிலும் நான் தொடர்ந்து போய்க்கொண்டே இருப் பேன். என்றோ ஒரு நாள் திரும்பிப் பார்க்கையில் நீண்ட தூரம் வந்திருப்பேன். அனுபவங்களும் நினைவிழந்தால் அழிந்துவிடும்'

'எனது அன்பு உனக்கு உபத்திரவமானதா ஹரி ?'

'இல்லை தாயே. ஒரு போதும் இல்லை. இந்த அன்பு என்னை உயிர்ப்பிப்பது. புரிந்து கொள்கிறேன். எதிர்காலத்தில் எனது மகளோ மகனோ இவ்வாறாக என்னைப் பிரிந்து செல்லும் போது எனக்கும் பிரிவுத் துயரம் வரக்கூடுமோ என அஞ்சு கிறேன். நிலைகுலைந்து விடுவேன் என நினைக்கிறேன்'

'எனினும் கதரீனின் பிரிவு உன்னை இவ்வளவு தூரம் உடைத்து விடும் என நான் நினைக்கவேயில்லை'

'உடைக்கவில்லை அஞ்சு. உணர்வுகளுக்கு அதன் வெளிப் பாட்டிற்கு இடமளித்துள்ளேன்'

'உன்னிடம் ஒன்று கேட்க வேண்டுமே ஹரி. கதரீன் உனது மகளின் படத்தைக் காட்டு என்று கேட்ட போது பயிற்சி முடிந்து வரும் போது காட்டுகிறேன் என்றாயே. என்ன நடந் தது ? காட்டினாயா ?'

'ஆம். விமானப்படை முகாமிற்கு செல்ல முதல் அருகில் இருக்கும் கடலோரத்தில் கரம்பற்றி நடைபயில வேண்டு மென்றாள். இறங்க முதல் அவளாகவே கேட்டாள்...

நிராகரிக்கப்பட்ட என்னை எதற்காக உனது பயிற்சிக்கு எடுத் தாய் என. கெட்டிக்காரி. ஊகித்து விட்டாள். அதற்குப் பதில் சொல்லவில்லை நான். அத்துடன் திரும்பி வரும்போது உன் மகளின் போட்டோவை காட்டுகிறேன் என்றாயே. எங்கே காட்டு என்றாள்...

நான் அவளை இடக்கரத்தால் ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டேன். பார். உன் இடது பக்கம் முகம் திருப்பி வாகனத் தின் சைட் மிரரை நன்றாக எட்டிப் பார். அதில் மகளின் முகம் தெரியும் என்றேன்...

அப்போது அவளின் முகத்தில் தோன்றிய கலவையான உணர்வுகளை வர்ணிக்க எனக்கு வார்த்தைகள் இல்லை அஞ்சு. வானவில் போல என்று சொல்லலாமா ? அந்திவான் என சொல்லலாமா ? மெல்லிய தூவானம் எனக் கூறலாமா ?...

அவள் எனது அணைப்பை தனது கைகளால் மேலும் இறுக்க மாக்கி விம்மலுடன் என் கன்னத்தில் முத்தமிட்டாள். மறைக்க முயன்ற கண்ணீர் துளிகளில் நான் அவள் மனதினை உணர்ந்தேன்.

அந்த மூன்றாவதும் மிக முக்கியமானதும் ஆன காரணம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டதை நினைத்து அஞ்சு மிகப் பெருமிதத்துடன் புன்னகைத்தாள்.



ranjani Subramaniam@thaiveedu.com

# Mr. Bond

## கோவிந்தராஜ் சுப்ரமணியன்



காலையிலிருந்து மனம் ஏதோ சலிப்பிலேயே இருந்தது.

பிறந்தநாளுக்கு சமூக சேவை செய்வதும் அதைப் போட்டோ எடுத்துப் பிரபல்யப்படுத்திக்கொள்வதும் வருடா வருடம் நடக்கும், சடங்காக மாறிவிட்டது.

மணிக்கூண்டைத் தாண்டி ஒரு நடைமேடை உண்டு. சற்று அகலமான மேடை. மாலை வேலைகளில் கீரைக்கார அம் மாக்கள் கடை போடுவார்கள். முன்பு அந்த இடத்தில் பஸ் நின்று போகும் இப்போது நிற்பதில்லை.

போதுமான இடைவெளி விட்டு ஒரு டீக்கடை இருக்கும் டீக்க டையில் இரண்டு பக்கமும் இருக் கிற காலியிடங்களில் பெரும்பாலான வெளியூர் ஆட்கள் படுத்துக் கிடப்பார்கள். பசியும் மயக்கமும் கொண்ட இருள் அடைந்த அந்த முகங்கள் எப்போ கொண்டு வந்து தரப்படும் பொட்டலச் சோற் றுக்காகக் காத்தி ருக்கும்.

காலையில் ஆஞ் சநேயர் கோவி லுக்குப் போகுமாறு எப்போதும் கேட்கும் அம்மா வினுடைய குரல், இன்று அவளுடைய புகைப்படத்திலி ருந்து கேட்டது.

‘பாண்டுரங்கா அனுமந்தராயன் கோவி லுக்கு போய் வா’ பெரும் பாலும் வெற்றிலை ஊறித் தோய்ந் போன காவி படர்ந்த பற்களி னூடே அந்தச் சொற்கள் வெளி யேறும்.

அம்மா இறந்து வெகு நாளாகிவிட்டது ஆனாலும் பல நேரங் களில் என்னோடு இருப்பது போலவே ஒரு பிரம்மை இருக்கும். இன்று காலையில் நாலரை மணி இருக்கும், அம்மாவின் இந்த குரல் கேட்டபோது டக்கென்று எழுந்து உட் கார்ந்து பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தேன்.

வருடா வருடம் பிறந்த நாட்களுக்கு அனாதைகளுக்கு முடிவெட்டி விடுவது வழக்கம். அதற்குத் தேவையான உபகர ணங்களைக் கொண்டு வருமாறு கிஷோரிடம் சொல்லி இருந்தேன். அவன் எப்படியும் வந்து விடுவான் என்ற நம்பிக் கையோடு பைக்கைத் துடைக்க ஆரம்பித்தேன். அங்கே செல்வதற்கு முன்பு ஆஞ்சநேயர் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டேன்.

ஆஞ்சநேயர் கோவிலில் வேண்டிக்கொண்டது எதுவும் இதுவரை நடக்காமல் இருந்ததில்லை, ஒன்றைத் தவிர. அது மலர்விழியை திருமணம் செய்து கொள்வது. பிரம்மச்சாரிக் கடவுளிடம் திருமணம் பற்றி வேண்டியது என்னுடைய தவறா கவும் இருக்கலாம். ஆனால் எனது நிலையைப் புரிந்து கொண்டு அவர் செய்திருக்க வேண்டும் என்கிற மனத் தாங்கல் இல்லாமல் இல்லை.

ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு கோரிக்கை இல்லாமல் போனதும் இல்லை. இன்று கோரிக்கை என்று எதுவும் இல்லை. ஆனாலும் பார்க்கத் தோன்றியது.

‘மிஸ்டர் பாண்டு’ என்கிற பியூட்டி பார்லர் ராமநாதனின் பேரனும் முத்துராமனின் மகனுமான பாண்டுரங்கனாகிய எனது சொந்தக் கடை. இந்தக் கடையில் ஒவ்வொரு அலங்கார த்திற்குப் பின்னும் ஒரு நூற்றாண்டு காலப் பின்னணி இருந்து கொண்டே இருக் கிறது. அப்பா ரையன் ஊரில் குளக் கரை யோரம் இருக்கிற ஆலமரத்துக்குப் பக்கத்தில் கடை போட்டிருந்தார். கிளிகளும் குருவி களும் மைனாக் களும் கத்திக் கொண்டிருக்கிற அந்தக் குளக்கரை ஓரம் அப்பாரையன் கத் திரியும் ஓயாமல் கத்திக்கொண்டே இருக்கும்.

வாயூறும் பேச்சுக்க ளினிடையே வயிற்றில் இருந்து எக்கி உடம்பின் கசப்பைத் தூக்கி எறிவது மாதிரி துப்புவார். அவருக்குத் தெரியாதது என்று எதுவும் இல்லை. ஆட்டுக்குக் கிழுவை பிடுங்குவதில் இருந்து திரும ணத்திற்குப் பெண் பார்ப்பது வரை எல்லாமே அவருக்கு அத் துபடியாக இருந்தது.

கண்ணாடி வீடுகளில் அவருடைய பேச்சுக்கு ஒரு தனி மரியாதை இருந்தது. இவர் சொல்கிற எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, ‘சரி பார்த்துக்கலாம் போ’ என்பதோடு பெரும்பாலான உரையாடல்கள் முடியும். நடப்பது என்னவோ இவர் சொன்னது போலத்தான். ஆனால் அவர்கள் எடுத்த முடிவு போலவே செயற்படுத்துவார்கள். நல்லது நடந்தா போதும் யார் செஞ்சா என்ன என்பது மாதிரி அப்பாரையன் நடந்து கொள்ளும்.

ஒரு மணி நேரம் கதையை பேசிவிட்டுப் போதுமான அளவு சவரம் செய்த பிறகு ஒன்னேகால் ரூபாய் காணிக்கை வைத்தது போல் வைத்துவிட்டு இரண்டு வெற்றிலைகளை வாங்கிப் போட்டுக் கொள்ளும் குடியானவர்களும் உண்டு. தினம் ஒரு பத்து ரூபாய் வருமானம் இருந்தால் அது பெரிய வருமானம்.

வரும்போது ஆட்டுக்கு இலையும் பிடுங்கிக் கொண்டு வருவார். மதியம் சாப்பிட்டுவிட்டு ஒரு தூக்கம். ஏதாவது வேலை நாளில் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் சேராத சேர்க்கை நடந்தால், ஒரு தள்ளாட்டமும் ஆத்தாளிடம் வசவும் உண்டு. அப்பன் காலம் அப்படி இல்லை. ராணுவ வீரர். ராணுவத்தில் இருந்து வந்தபிறகு அப்பா 'கேப்டன் சலூன்' என்று வைத்திருந்தார். அப்பா கடை வைத்தது வள வுக்குப் பக்கத்தில். கடைக்குள் எப்போதும் வளவு ஆட்கள் நிறைந்திருப்பார்கள். எந்நேரமும் அரசியல் பேச்சு நடந்து கொண்டே இருக்கும். கடையில் வேலையைத் தவிர பேச்சு மும்முரமாக இருக்கும். அவ்வப்போது டீயும் வடையும் உண்பதைத் தவிர அந்தக் கடைகளில் வருமானம் என்று ஏதும் இல்லாமல் போனது.

ஆறு மாதத்தில் அப்பன் கடையை எடுத்து விட்டார். வளவு ஆட்கள் இருக்கும்பொழுது வேறு ஆட்கள் வருவதில்லை. இந்த சமூக உண்மை புரிந்து கொள்வதற்கு ஆறு மாதங்கள் ஆனது. அதன் பிறகு அப்பனின் கவனமெல்லாம் திருமணத் தரகு வேலைகளில் இருந்தது.

300 வீடுகள் கொண்ட அந்தக் கிராமத்தில் வருடத்திற்கு நான்கு ஐந்து திருமணங்கள் சாதாரணமாக நடந்து விடும். பொருத்தம் பார்ப்பதிலிருந்து ஆரம்பிக்கும் வேலை, பத்திரிகை வைத்து நிச்சயம் முடிந்து திருமணம் வரை ஓயாமல் அலைந்து வருகிற குடிமகனுக்கு ஒரு மூட்டை அரிசியும் வேட்டி துண்டும் காணிக்கைப் பணமும் வைத்துக் கொடுப்பார்கள். இந்த அரிசி குடும்பத்தின் வருடாந்திர செலவுகளை சுலபமாக ஈடு கட்டி விடுகிறது. அம்மாவின் இரண்டு மாடுகள் பால் கறந்து மேல் செலவுகளைக் கவனித்துக் கொண்டன.

'குடும்பத்தின் முதல் பையன் அவனுக்கு நல்லபடியா வழிகாட்டு சிவன்மலையானே என்று வேண்டாத நாள் இல்லை' காலையில் யோசிக்க ஆரம்பித்தால் இப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று புரிய வில்லை ஆனால் ஏதோ ஒரு மன அழுத்தம் இருந்து கொண்டே இருக்கிறது. காலமெல்லாம் இதுபோல் வாழ்ந்து விடுவோமோ என்கிற பயம் இருக்கிறது. அந்தப் பயத்தை மறைப்பதற்காகத்தான் சமூக சேவை போன்ற தடுப்பரண்கள் தேவையாக இருக்கின்றன.

கிஷோர் இன்னும் வரவில்லை அவன் வந்து விட்டால் அவன் துணை இருக்கும். இன்று குறைந்தது 40 பேருக்கு அன்ன தானம் செய்யலாம் என்று நினைத்திருக்கிறேன் பார்க்கலாம் ஆண்டவன் விட்ட வழி. அப்பனும் அம்மாவும் காலமெல்லாம் என்னோடு இருப்பார்கள் என்கிற நம்பிக்கை இருந்தது. ஆனால் இப்படி எந்தக் காரணமும் சொல்லாமல் இருவரும் மூன்று மாத இடைவெளியில் இறந்து போவார்கள் என்று நினைக்கவே இல்லை.

உயிரோடு இருக்கும்வரை எல்லா நேரமும் சண்டைதான். சாவு பயம் வரும்போது மட்டும் எங்கிருந்தோ அவர்கள் இரு வருக்கும் பரஸ்பரம் அன்பு பரிமாறிக்கொள்ள முடிந்தது. அம்மாவும் அப்பாவும் எப்போதாவது சண்டை இல்லாமல் இருந்தால், ஏன் உடம்பு சரி இல்லையா என்று நினைத்துக் கொள்வார்கள். அம்மாவுக்கு அப்பா, தான் சொல்லும்ப டிதான் நடக்க வேண்டும் என்று கனவு. அப்பாவிற்குத் தான் நினைப்பதை எல்லாம் மனைவி செய்திருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு. இரண்டும் அவர்கள் வாழ்நாளில் எப்போதும் நடந்ததில்லை.

அப்பா விபத்தில் அடிபட்ட பிறகு இரண்டு வாரங்களில் காலமானார். இவற்றுக்குப் பிறகுதான் கூடுதலான கடன்களை அடைப்பதற்காக சென்னை நோக்கி ஓடினேன். அங்குதான் தொழில் கற்றுக் கொண்டேன். காலமெல்லாம் அரசமரம் நிழலில் கிளிகளோடு மைனாக்களோடு விளையாடிக் கொண் டிருந்த தாத்தாவின் கத்திரி சென்னையில் ஒவ்வொரு முறை விரிந்து சுருங்கும் போதும் ஒவ்வொரு ரூபாய்களை வெட்டி எடுத்துக் கொண்டு வந்தது. ஒருமுறை சேவிங் செய்வதற்கு நூறு ரூபாய்களில் பணம் எடுத்துக் கொண்டு போகிற மனி தர்களை ஆச்சரியத்தோடு பார்த்தேன். எல்லாமே காசுதான் என்று ஆனபின் சம்பாதிக்கும் வழி தவிர வேறு எதுவும் தெரி யவில்லை.

முதல் முதலில் பேசியல் செய்தபோது, அந்த மனிதர் 45 வயதிற்கு மேல் இருக்கும் மிகுந்த மகிழ்ச்சியோடு இருபது ரூபாய் டிப்ஸ் வைத்தார். அப்பாரையன் காலத்தில் இது இரண்டு நாள் கூலி. அப்பன் இறந்த மூன்று மாதங்களில் அம்மாவும் விடைபெற்றுக்கொண்டாள். அப்பனின் பிரிவைத் தாங்காத அவள் எந்நேரமும் அவரோடு பேசிக் கொண்டே இருந்தாள். 'காபி குடி, இந்த வேட்டி எதுக்கு கட்டின, சோறு திங்கும்போது சிந்தாம திங்குறியா, இதே பொழப்பா' என்று அவள் தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்ததை ஊரும் உறவுகளும் வேடிக்கைக் கதைகள் உருவாக்கிப் பேசி னார்கள்.

அம்மாவுக்கு அது பற்றியெல்லாம் கவலை இல்லை. அப்பன் கூட இருக்கும் பொழுது அவளுக்கு என்ன கவலை. தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்த நிலையில் ஒருநாள் சிவன்மலை கோவிலுக்குப் போய் என்னைச் சீக்கிரம் கொண்டு போய் விடு அப்பனே என்று வேண்டிக் கொண்டு வீடு வந்தாள் அன்று இரவு இல்லாத அப்பனோடு பேசிக் கொண்டே கிளம்பி விட்டாள். இவ்வுலகில் இருந்து அவ்வு லகம் போவதற்குப் பிடிமானமாய் ஒரு முழம் கயிறு மட்டுமே அவளுக்குப் போதுமானதாக இருந்தது. நான் கொஞ்ச நாள் தாடி வளர்த்துச் சுற்றிக் கொண்டிருந்தேன். பெயர் வைத் ததில் இருந்து ஒரு நாளும்நான் பண்டரிபுரம் போன தில்லை.

அம்மா இறந்து துக்கங்களுக்காக மூன்று மாதம் வடநாடு போவதாகக் கிளம்பினேன். பண்டரிபுரம் போய்விட்டு பிச் சைக்காரனைப் போல் அலைந்து கொண்டிருந்தேன். பிறகு அதுவும் வெறுத்துப் போய் சென்னை திரும்பி விட்டேன். தொழில் கற்றுக் கொண்டு பிறகு, கடை வைப்பது என்னு டைய கனவு. உடனே ஊருக்கு வராமல் இருப்பதற்குக் காசு மட்டும் காரணமாக இல்லை ஒரு காதலும் இருந்தது.
பிள்ளைப் பருவக் காதல்.

மலர்விழி சண்முகசுந்தரம், அப்பாவின் பெயரோடு தான் எப்போதும் தனது பெயரை சொல்லுவாள். காலையிலிருந்து பொழுது வரைக்கும் அப்பா தறிக்குழியில் இருப்பார். மாலை நேரங்களில் டீக்கடைகளிலும் குளத்தங்கரைகளிலும் உள்ள

அரசியல் குழுக்களோடு ஏதாவது வம்பு இழுத்துக் கொண்டே இருப்பார்கள். சண்முகசுந்தரம் ஒரு வழமையான அவள் அப்பா. தறிக்குழியில் இருந்து மேடை ஏறினால் சாரா யக்கடை. டீக்கடை. அரசியல். இடமாறி படுக்கும் பல இரவுகள், என்று அவருடைய வாழ்க்கை ஓடிக்கொண்டி ருந்தது.

மோசமான அப்பாக்களுக்குப் பிறக்கும் நல்ல மகன், மகள் போலவே மலர்விழியும் இருந்தாள். போதுமான அளவுக்கு அழகும் இடையறாத வேலையும் படிப்பும் அவள் கண்களில் தெரிகிற எதிர்காலமும் என்னைப் பைத்தியம் பிடிக்க வைத்தது ஆச்சரியம் இல்லை. அவள் அருகே வரும்போதெல்லாம் பழைய சிந்தால் சோப்பின் மணமும் லேசான விபூதி மணமும் இருக்கும். அந்தக் காலத்துப் பிள்ளைகள் போலவே யாருடன் பேசாமல் இருப்பது நல்ல பிள்ளையின் அடையா ளமாக அவளுக்கும் இருந்தது. ஆனால் தேடி அலைகிற கண்களில் இருந்து, இந்த உலகத்தை அவள் விரும்புகிற மாதிரி மாற்றி விட ஓர் எளிய பற்றுக்கோடு கிடைக்கிறதா என்கிற ஆவல் இருந்து கொண்டே இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

சந்திப்பதற்கான இடங்கள் நிறைய இருந்தன. ஆனால் அவள் அவ்வளவு எளிதில் கிடைக்கக்கூடிய ஒன்றாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவில்லை. தீவிரமான படிப்பு. அம்மா வுக்கு உதவி செய்வதைத் தவிர இந்தப் பிறப்பின் நோக்கம் எதுவும் இல்லை என்பது போல் சுற்றிக் கொண்டிருப்பாள். அவளைப் பொறுத்த வரைக்கும் நான் ஓர் எளிய ஆத்மா. எப் போதாவது சிரித்துவிட்டுக் காலத்துக்கும் அப்போது சிரித் ததைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கும் ஓர் இனிய பைத்தியம்.

அப்போது நான் அப்படித்தான் இருந்தேன். என்னுடைய உல கத்திற்குள் யாரும் நுழைந்து விட முடியாதபடி மலர்விழி இருந்தாள். இவைகள் யாவும் பெற்றவர்களின் மரணத்திற்குப் பிறகு பொய்யாய் வெறும் நினைவாய் மெல்லக் கரைந்தன. ஏழு வருடங்களுக்குப் பிறகு அப்பாவின் விபத்து இன்சூ ரன்ஸ் கேஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது மலர்வி ழியைப் பார்த்தேன். இளம் தொந்தியும் பெரிய நெற்றியுமான குமாஸ்தாவின் மனைவியாக இருந்தாள்.

எந்நேரமும் பணத்தில் புரளும் குமாஸ்தாவின் நடவடிக் கைகள் மொத்த உலகத்தையும் உள்ளங்கையில் வைத்தி ருக்கிற மாய வித்தைகாரனாய் தன்னை நிறுவிக்கொள் ளும்படி இருந்தன. எதிரில் இருக்கிற எந்த மனிதனும் அவனுக்குச் சிறு துளிதான். மேட்டிமை தாங்கிய அவன் பார்வை எரிச்சலையும் குமட்டலையும் உருவாக்கும். இந்தக் கருத்த உருவத்தில் இருந்து என்ன மாதிரி காதலடி நீ எதிர் பார்த்தாய் என்று அவளைக் கேட்கத் தோன்றியது.

அதிர்ந்து அடங்கும் ஈரக்குலையைப் பற்றியபடி வழக்கு விசாரணை முடியும்வரை காத்திருந்தேன். வழக்கு முடிந்து ஓரளவு பணம் வந்த பிறகு சொந்தக் கடை வைக்கத் தீர்மானம் ஆனது. சொந்தக்கடை என்பது எளிதான காரிய மில்லை. ஏனென்றால் அப்பா செய்த தவறை நானும் செய்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன்.

நடு ஊருக்குள் இருந்த ஒரு காம்ப்ளக்ஸில் நல்ல பெரிய கடையாக பிடித்தேன். செலவுக்கு அஞ்சாத ஈராயிரக் குழவி களை நம்பி கடையைத் திறந்தேன். நான்கு சேர்கள். வேலை யாட்கள் மூவர் என்று தொடங்கியதில் முதல் மாத வருமா னத்தில் எழுபதாயிரத்தை எடுத்து வைத்தபோது அப்பனும் தாத்தனும் பிழைத்த கேனப் பிழைப்பு மனசுக்குள் வந்து ஓடியது. தாத்தாவுக்கு இது ஒரு ஆயுள் கால உழைப்பு. அப் பாவுக்குப் பல வருடம். பேரனுக்கு ஒரு மாதம். காலம் ஓடுவதை யாரால் தடுத்து நிறுத்திவிட முடியும்? மேற்படி வருமான வந்தபோதும் எனக்குப் பெண் கொடுக்க யாரும் முன் வரவில்லை.

கடை தொடர்ந்து 24 மணி நேரம் ஓடிக்கொண்டுதான் இருந்தது. ஓயாத சிட்டுக்குருவியின் சத்தம் இப்போது இல்லை. கத்திரிகள் சொங்குவதில்லை, சிணுங்குவதில்லை. ஆனால் மெல்லிய இசையும் ரசாயனப் பூச்சுகளும் வரவே வராத மகாலட்சுமியைக் கொண்டு வந்தன.

கிஷோர் ஒரு வழியாக வந்து சேர்ந்தான். கண்கள் சிவந்து போய் முகப்பருக்கள் வெடித்த முகம். இரவு முழுக்கத் தண்ணி அடித்தால் வேறு என்ன மாதிரியான முகம் அமையும். வேலைக்கு அஞ்சாதவன். எத்தனை வேலை வந்தாலும் செய்து முடித்துவிட்டுத்தான் அந்த இடத்தை விட்டு நகர்வான்.

இன்று சமூக சேவைக்கு நான்கு பேர் கிடைத்தார்கள். அம்மைத் தழும்புகள் அடர்ந்த முகம். சடை சடையாய் மயிர்த்துத் திரிந்த இன்னொருவன் 40 வயதுக்குள் தான் இருக்கும். 40 வயது மதிக்கத்தக்க வடநாட்டு முகத்தோடு இன்னொருவன். பேசவே விரும்பவில்லை. எங்கேயோ பார்வை நிலைத்து நின்றது. கருணை கருணையான கை கால்கள் உறுதியான நரம்புகள் படர்ந்த விவசாயியினுடைய கைகள். பொய்த்துப் போன வாழ்க்கையினைத் தேடிக் கொண்டி ருக்கும் பார்வை.

சாப்பிடுகிறீர்களா? என்று கையசைவில் கேட்டபோது, சரி என்று தலை அசைத்தார். கண்ணோரத்தில் திரண்டு நின்றது நீர். இரண்டு பேருக்கும் முடிவெட்டும் பொழுது நிருபர் மணி கண்டன் வந்து சேர்ந்தார். கூடவே அவர் பையனையும் அழைத்து வந்தார். சிறு பையன் வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தான். அவர் கடகடவென்று ஃபோட்டோ எடுத்துக் கொண்டிருந்தார். முடித்துவிட்டுப் பையனுக்கு ‘அட்டாக் கட்டிங்’ வெட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

‘அதுக்கு என்னங்க ஆகட்டும்’ என்று சம்மதித்தேன்.

புஷ்பா கடையில் பத்து மதிய சாப்பாட்டுக்குச் சொல்லி இருந்தேன். முடி வெட்டிவிட்டு அவர்களைப் பஸ் நிலை யத்தில் குளித்துவிட்டு வர செய்தேன். குளியலறை காவலாளி எதையோ நினைத்து நக்கலாகச் சிரித்துக் கொண்டான். பிச் சைக்காரனுக்கு எல்லாம் முடி வெட்டினால் நல்லவனாடா நீ! என்பதாக இருக்கலாம். யூகம்தான். உள்ளுணர்வுக்கு ஏற்ப வந்து கொண்டிருக்கிறது. தேவையானபோது தேவையானதை உருவெடுக்கும் மனம்.

ஆளுக்கொரு சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு, பஸ் நிலை யத்தில் தங்கியிருந்த நரிக்குறவர்களுக்கும் மீதிச் சாப் பாட்டைக் கொடுத்தேன். பசித்தவனுக்கு அன்னமிடுதல் புண்ணியம். அதைவிடக் கவனமாகக் கொடுப்பது மிகவும் முக்கியம். கையேந்திக் கொண்டிருப்பவன் தன் மனது உரு வாக்கிய எல்லாத் தடைகளையும் தாண்டி வாங்குகிறான்.

அவனைக் காயப்படுத்தாமல் தர வேண்டியது மிகவும் முக்கியம். சாமி சாப்பாடு, கோயில் சோறு என்று எதையாவது சொல்லித் தர வேண்டி இருக்கிறது. சாமி சாப்பாடு கொடுப் பதும், வாங்குவதும் புண்ணியம் ஆகவே ஒரு சின்னச் சிரிப்போடு கடந்துவிட முடிகிறது. ஆனால் இதிலும் ஒரு முறை பிரச்சினை வந்தது.

குப்பைத் தொட்டிக்குள் கையில் கிடைக்கும் பிளாஸ்டிக் பாக் கெட் பால் கவர்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு வயதான ஆத்தாவிடம், ‘ஆத்தோவ் இது வள்ளலார் சாமி சாப்பாடு சாப்பிடுங்க’ என்று சாப்பாட்டுப் பொட்டலத்தை நீட் டியபோது குப்பைகள் நிறைந்து கிடந்த மேட்டில் ஒரு காலும் குப்பைத் தொட்டிக்குள் இன்னொரு காலும் வைத்திருந்த அந்த ஆத்தா என்னைச் சந்தேகமாய்ப் பார்த்தாள்.

‘சாமி சாப்பாடுதான் ஆத்தா... வாங்கிக்கோ’ என்றேன்.

கருத்த நீண்ட நாசியை முந்தானையால் துடைத்தவாறு ஆத்தா சொன்னார், ‘கண்ணு நான் தேவனோட பிள்ளை இந்த சாப்பாடு எல்லாம் சாப்பிடக் கூடாதுங்கோ’ என்றாள். ஒரு கணம் ஆடிப் போய்விட்டேன். தீண்டாமையின் இன்னொரு முகம். பசி எவ்வளவு இருந்த போதும் இந்த மனிதர்கள் கருத் துக்களைத்தான் தின்று வாழ்கிறார்கள்.

இத்தனைக்கும் பிறகும் மனம் ஏனோ அமைதியற்றுத்தான் இருந்தது. ஏனென்று சொல்லத் தெரியவில்லை ஆனாலும் காலியான வயிறு போல மனம் ஏனோ சலிப்பில் மிதந்தது.

பஸ் உள்ளே நுழைகிற இடத்தில் சடார் என்று ஒரு சத்தம் கேட்டது. ஒரு வயதான மனிதர் கீழே கிடந்தார். பக்கத்தில் பதறிப் பதறி விழித்த ஒரு 4 வயதுப் பெண் குழந்தை. கரூரிலி ருந்து வந்த தனியார் பஸ்ஸுக்கும் இன்னொரு அரசு வண் டிக்கும் யார் முதலில் பஸ் நிலையத்திற்குள் நுழைவது என்பதில் போட்டி. இருவரும் வேகமாக வந்ததைப் பார்த்து விட்டு ஓரத்திற்கு ஓடியவர் கீழே விழுந்து விட்டார்.

பஸ்காரர்கள் யாரும் இவருக்காக நிறுத்தவில்லை. அடிபட் டவர் தெரிந்த முகம்தான். சண்முகசுந்தரம். இவனைப் பார்த்த பிறகு ஏனோ கொஞ்சம் வெக்கப்பட்டது போல் தெரிந்தது. ‘ஒன்னும் இல்ல ஒன்னும் இல்ல சரியாயிடுச்சு.’ என்றார்.

முழங்காலில் சிராய்ப்புக் காயம். கையை அழுத்தமாக ஊன் றியதில் லேசான ரத்தம் வந்தது. பக்கத்துக் கடையில் பேப்பர் வாங்கி ஒற்றி எடுத்தார். இவனைப் பார்த்து, ‘நல்லா இருக்கியா கண்ணு?’ என்று விசாரித்தார். சிரித்துக்கொண்டே நல்லா இருக்கிறேன் என்றான். ‘மலரு இப்போ வெளிநாட்டில் இருக்கா’ என்றார். சிரித்து வைத்தான். ‘இது அவளோட சின்ன புள்ள’.

அப்போதுதான் சின்ன பிள்ளையைக் கவனித்தேன். நெற்றியும் முடியும் அம்மாவைப் போலவே இருந்தன. ரோமானிய முகம். வெள்ளிக் கண்கள். குழந்தையைப் பார்த்து சிரித்து வைத்தேன். அவர் தொடர்ந்தார், ‘எல்லாம் மாறிடுச்சு கண்ணு. நானும் நிறைய மாறிட்டேன். இப்பல்லாம் கடப்பக்கம் போறதில்ல. சனிக்கிழமையானா ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போயிட்டு வரேன். மலர் வெளிநாட்டில் வேலை செய்றா. மாசம் கொஞ்சம் பணம் அனுப்புவா. அதுவே எனக்குப் போதும். மலரோட அம்மா அங்க தான் இருக்கிறா, இந்தப் பிள்ளையை நாமக்கல் ஸ்கூல்ல சேர்த்துப் படிக்கணும்னு அனுப்பி வைத்திருக்கி றார்கள். என்ன இருந்தாலும் நம்மூர் மாதிரி படிப்பு வருமா?’ என்றார்.

இவர் அந்த குழந்தையைப் பார்த்து, ‘அப்பா கோர்ட்டுல இருக்கிறாரே அம்மா மட்டுமா வெளிநாட்டில் இருக்கிறார்?’ என்று கேட்டேன். அந்தக் குழந்தை பதில் சொல்லத் தெரியாமல் இவனையும் தாத்தாவையும் மாறி மாறிப் பார்த்தது.

‘கேக்குறாங்களே சொல்லு கண்ணு...’ என்றார். ‘கோர்ட்டில் இருந்தது அக்காவோட அப்பா. எங்கப்பா ஐரிஷ். பேரு இஷாக். அம்மா அப்பா ரெண்டு பேரும் யூகேல இருக்காங்க என்றாள். கொஞ்சம் கவலையோடு அவளைப் பார்த்தேன். கடவுளே கடைசி வரைக்கும் அவளுக்கு என் ஞாபகமே வர வில்லையா?

‘எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல அவ வாழ்க்கைய அவளே தீர்மானிக்கிறா’ சண்முகசுந்தரம் தொடர்ந்தார்.

‘கோர்ட்ல குமாஸ்தாவா இருந்தவர் எங்க சொந்தக்காரர்தான். ஆனா குழந்தை பிறந்த பிறகு ஏனோ ரெண்டு பேருக்கும் ஒத்துப் போகல. டைவர்ஸ் வாங்கிட்டு வெளிநாட்டுக்கு வேலைக்குப் போனா அங்கேயே கல்யாணம் பண்ணிக்கிட்டா. நம்ம கைல என்னப்பா இருக்குது எல்லாம் ஆண்டவன் போட்ட முடிச்சு.’

கடைசியாக, ‘உனக்கு கல்யாணம் ஆச்சா தம்பி?’ என்றார் அவர்.

‘இல்லீங்க’ என்றேன்.

‘இப்ப இந்தப் பிள்ளைகலெல்லாம் படித்துப் போட்டு பெரிய பெரிய வேலையில் இருக்கிற ஆட்களைத்தான் கல்யாணம் பண்றாங்க. இப்பல்லாம் யாரு பொடி மயிர் வேட்டியைத் துவைக்க வருவாங்க என்று சொல்லியபடியே என்னைப் பார்த்தார். என் முகத்தைப் பார்த்த பிறகு கொஞ்சம் மாற்றிக் கொண்டார்.

‘உங்களதுலயே தேடிப் பார்த்தா கிடைக்கும். பாக்குறதுக்குப் பெரியவங்க வேணும் இல்லையா?’ என்றார்.

‘அது சரிங்க, காலம் கூடி வரவேண்டாமா?’ என்றேன்.

பசி ஏப்பக்காரனும் புளி ஏப்பக்காரனும் பேசிக் கொள்வது போல் இருந்தது எங்களுடைய உரையாடல். கிஷோர் உபகர ணங்களை மூட்டை கட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான். ‘எல்லாம் முடிஞ்சிடுச்சு நான் போலாமா?’ என்றேன். சண்முக சுந்தரம் விடை பெற்றுக்கொண்டார். பஸ் நிலையத்துக்கு வெளியே மகாராணி டீக்கடையைப் பார்த்துக்கொண்டே நின்றேன். அங்கே இருந்த பெஞ்சில் சிறிது நேரம் அமர்ந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

ஆட்கள் வருவதும் போவதுமாக இயக்கம் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. எல்லாமே இயங்குகிறது, சிலது மட்டும் நின்று விடுகிறது - வேடிக்கை பார்த்தபடியே



Govindaraj.S@thaiveedu.com

# பள்ளிக்கூடம்

## - டொனல்ட் பர்தலோமி

## தமிழில்: என்.கே. மகாலிங்கம்



(டொனல்ட் பர்தெல்மி - 1934-1989. அமெரிக்க எழுத்தாளர். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எழுதியவர். விளையாட்டுத்தனமான பின்நவீனத்துவ புனைவுப் பாணியில் எழுதியவர் என்ற வகையில் அவர் அறியப்படுகிறார். செய்தித்தாள் நிருப ராகவும் சஞ்சிகை ஆசிரியராகவும், பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும், ஹியுஸ்ரன் சமகால கலை அருங்காட்சியகத்தின் இயக்குநராகவும் வேலை பார்த்தவர். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே Forum என்ற இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்தார். அதில் நோர்மன் மெய்லர், வோக்கர் பேர்சி, மார்ஷல் மக்லூகன், வில்லியம் எச். கிறாஸ் போன்ற எதிர்காலத்தில் புகழ் பெறப்போகும் பெரும் எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள்.

புதிய சுருக்கமான சிறுகதை உருவத்தைப் புதிதாகப் புனைந்தவர் என்ற வகையில் ஆரம்பத்தில் அவரைப் பலரும் பின்பற்றினார்கள். கற்பனைப் பாத்திரங்களையும் பிரபலமான நபர்களையும் அபத்தமான சூழலில் வைத்து எழுதினார். அவரின் எழுத்தை மொழிவழி படத்தொகுப்புப் போன்றது - verbal collage - என்றும் சில விமர்சகர்கள் கூறுவர். மரபு ரீதியான கதைக்கரு இல்லாமல் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத துண்டு துண்டு விபரங்களால் கதையை வளர்த்துச் செல்வது அவர் பாணி என்று சொல்லப்படுகிறது.

அவருடைய புகழ்பெற்ற சிறுகதைகளில் சில - The Balloon, Sadness, The Indian Uprising, The School. அவருடைய சிறுகதைத் தொகுதிகள் City Life, Unspeakable Practices, Unnatural Acts முதலானவை.

அவர் சிறுகதைகள் மட்டுமல்லாது Snow White, The Dead Father, Paradise, The King போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார். அவர் தன் மகளுடன் சேர்ந்து சிறுவர் கதைகளையும் எழுதியுள்ளார்.

அவருக்கும் அவருடைய தந்தைக்கும் இடையிலான உறவு, கலகக்கார மகனுக்கும், அதிகம் எதிர்பார்க்கும் தந்தைக்குமான உறவுப் போராட்டமாக இருந்தது. மகன் எழுதும் பின்நவீனத்துவப் புனைவுகள் தந்தைக்குப் பிடிக்கவில்லை. தந்தை பின் நவீனத்துவப் பள்ளியையும் கட்டுடைத்தலையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் - அவான் காட் - புத்திலக்கிய வகையையும் அழகியலையும் ஏற்றுக் கொண்டவர்.

பார்தெல்மியை அர்த்தமற்ற, கல்விசார் பின்நவீனத்துவ எழுத்தாளர் என்று சிலர் விமர்சித்துள்ளனர். அவர் பல நவீனத்துவ மெய்யியல்வாதிகளை ஆழமாகக் கற்றவர். அவரை இருபதாம் நூற்றாண்டின் குணமான இருத்தலியல் கவலை - angst - கொண்டவர் என்றும் கூறப்படுகிறது. இறுதியில் தொண்டைப் புற்றுநோயால் இறந்தார்.)

இங்கேயுள்ள அத்தனை பிள்ளைகளையும் மரங்களை நட வைத்தோம். ஏனெனில் அது கல்வியில் ஒரு பகுதி. வேர்களைப் பற்றி அறிந்து கொள்ளலும் ஒரு பகுதி. அவர்களே அவற்றைக் கவனித்து வந்தால் தனித்தனியாக ஒவ்வொருவரும் அனைத்துக்கும் பொறுப்பாக இருப்பார்கள். அது அவர்களுக்கு ஒருவகையான பொறுப்புணர்வையும் கொடுக்கும் என்று நாங்கள் நினைத்தோம். நான் என்ன சொல்கிறேன் என்று உங்களுக்குப் புரியும். எல்லா மரங்களும் இறந்து விட்டன. அவை தோடை மரங்கள். அவை ஏன் இறந்தன என்று எனக்குத் தெரியாது. காரணமில்லாமல் சும்மா இறந்து விட்டன. அதற்கு மண் காரணமாக இருக்கலாம். அல்லது நாற்றுப்பண்ணையிலிருந்து நாம் வாங்கிய கன்றுகள் மிகச் சிறந்ததாக இல்லாமல் இருக்கலாம். அதைப்பற்றி நாங்கள் முறையிட்டிருக்கிறோம். இங்கே முப்பது பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு சிறிய மரம் கொடுக்கப்பட்டது, நடுவதற்கு. ஆனால் அந்த முப்பது மரங்களும் இறந்துவிட்டன. இப்பொழுது எல்லாப் பிள்ளைகளும் சிறிய மண்ணிற தடிகளைத்தான் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்கள். அது பார்ப்பதற்கு மனச்சோர்வை கொடுக்கிறது.

இது அத்தனை மோசமானதாக இருந்திருக்காது. இரண்டு கிழமைகளுக்கு முன்னர் இந்த மரங்கள் இறப்பதற்கு முன், அந்தப் பாம்புகள் அத்தனையும் இறந்திருக்காவிட்டால். அந்தப் பாம்புகள் இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன் தான் வேலை நிறுத்தத்தால் அந்தக் கொதிகலன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதை விளங்கிக் கொள்ளலாம். அது வேலை நிறுத்தத்தால் நடந்தது என்று பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்தலாம். பிள்ளைகளின் பெற்றோர் எவருமே வேலைநிறுத்தக்காரரை ஊடறுத்து உள்ளே போக பிள்ளைகளை விட்டிருக்க மாட்டார்கள். ஒரு வேலை நிறுத்தம் நடைபெறுகிறதென்றும் அது எதற்காக என்றும் அவர்களுக்குத் தெரியும். ஆகவே வேலை நிறுத்தம் முடிந்து பள்ளிக்கூடம் துவங்கியபோதே பாம்பு கள் இறந்துள்ளன.

மூலிகைத் தோட் டத்தைப் பொறுத்தவரை அதற்கு அதிகம் தண்ணீர் பாய்ச்சியதால் மூலிகைகள் இறந்திருக்கலாம். இப் பொழுது அவர்களுக்குத் தெரியும் அதிக தண்ணீர் பாய்ச்சக் கூடாதென்று. பிள்ளைகளைப் பொறுத் தவரை அவர்கள் மூலிகைத் தோட்டத்தில் கடினமாக உழைத்தார்கள். நாங்கள் அவர்களைக் கவனிக் காத நேரத்தில் கொஞ்சம் அதிகமாகவே நீரைப் பாய்ச்சி விட்டிருக்கலாம். அவர்கள் செய்தது நாச கார வேலை என்று நாங்கள் நினைக்கவில்லை. அப்ப டியான எண்ணம் எங்கள் மனதில் தோன்றியது தான். ஆனால், பாலை வன எலிகளும் வெள்ளெலி களும் சாலமண்டர்களும் சாவதற்கு முன் அவற்றை ப்ளாஸ்ரிக் பைகளில் வைத்து தூக்கிக் கொண்டு திரிந்தி ருக்கக் கூடாது என்பது எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

உண்மை, வெப்ப மண்டல மீன்கள் சாகும் என்று தான் நாங்கள் எதிர்பார்த்தோம். அதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அவற்றைப் பார்த்தால் அவை நேராக இல்லாமலும் வயிற்றை மேலே காட்டிக் கொண்டும் கிடந்தன. ஆனால் பாடத் திட்டத்தில் வெப்ப மண்டல மீன்களைப் பற்றிக் கற்க வேண்டும் என்று இருக்கின்றது. அதைப்பற்றி இப்பொழுது எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. அது ஒவ்வொரு ஆண்டும் நிகழ்வதுதான். நாங்கள் அதை அவசரமாகக் கடந்து செல்ல வேண்டியதுதான்.



நாங்கள் ஒரு நாய்க்குட்டியை வளர்த்திருக்கவே கூடாது. அதுவொரு சிறிய குட்டி நாய். அதை மேடொக் என்ற சிறுமி ஒரு றக்குக்கு கீழே ஒருநாள் கண்டாள். றக்கின் சாரதி பொருட்களைக் கொடுத்த பின் றக்கை எடுக்கும்போது அந்த நாய்க்குட்டியின்மீது றக் ஏறி விடும் என்று பயந்து அதை தன் தோள் பைக்குள் வைத்து எடுத்துக்கொண்டு பள் ளிக்கூடத்திற்குக்கொண்டு வந்துவிட்டாள். அப்படித்தான் அந்த நாய்க்குட்டி பள்ளிக்கூடத்திற்கு வந்து சேர்ந்தது. அந்த நாய்க்குட்டியை நான் பார்த்தவுடன், ஓ, யேசுகிறிஸ்துவே, அந்த நாய்க்குட்டி இரண்டு கிழமைகள் தான் வாழும் என்று பந்தயம் பிடித்தேன். அப்படித்தான் நடந்தது. அது வகுப்ப றைக்குள் இருக்கவே கூடாது. ஆனால் அது அங்கே தான் இருந்தது. அதைப்பற்றிய ஒருவகை சட்ட ஒழுங்கு அங்கே இருந்தது. ஆனால் ஒரு நாய்க்குட்டி அவர்களுடன் இருந்தால் அப்படி இருக் கக் கூடாது என்று எவரும் சொல்ல முடியாது. அது அங்கே ஏற்கனவே இருந் ததால், அது அங்கே அவர்கள் முன்னால் அங்கேயும் இங்கேயும் ஓடிக் கொண்டு சிறுகு ரலில் குரைத்துக் கொண் டிருந்தது. அந்த நாய்க் குட்டியை அவர்கள் எட் கார் என்றழைத்தார்கள். அதாவது என் பெயரை அதற்குச் சூட்டி. அவர்கள் பல வேடிக்கைகள் புரிந்து அதன் பின்னால் கூவிக் கொண்டும் ஓடினார்கள். ‘இங்கே, இங்கே, எட்கார்! நல்ல எட்கார் அல்லவா!’ அப்படிச் சொல்லிய பின் அவர்கள் உரக்கச் சிரிப்பார்கள். அவர்கள் அந்த இருபொருள் அர்த் தமுள்ள பகிடியை ரசித் தார்கள். அதை நானும் ரசித்தேன். என்னைப் பகிடி செய்வதை நான் பொருட்படுத்துவதில்லை. அந்த நாய்க் குட்டிக்காக ஒரு சிறிய வீட்டை சேமிப்பு அறையில் கட்டி னார்கள். அப்படிச் சில வேலைகள் செய்தார்கள். அது எதனால் இறந்தது என்று எனக்குத் தெரியாது. நச்சுயிரிக் காய்ச்சலால் இறந்திருக்கலாம். அதற்கு எந்தத் தடுப்பூசி களும் போடவில்லை என்று நினைக்கிறேன். அதைப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்து சேர்வதற்கு முன் அவ் விடத்திலிருந்து அப்புறப்படுத்தினேன். சேமிப்பறையை ஒவ்வொரு காலையிலும் தினசரி சோதனை செய்தேன். என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக. அந்த வேலையை அதன் பின் பொறுப்பாளரிடம் கையளித்தேன்.

அதன் பின் வந்தவன் தான் இந்த கொரியன் அநாதைக் குழந்தை. அவனை குழந்தைகள் உதவி திட்டம் என்ற அமைப்பின் மூலம் வகுப்பு தத்தெடுத்துக் கொண்டது. எல்லாக் குழந்தைகளும் ஒவ்வொரு மாதமும் கால் டொலர் கொண்டு வந்தன. அதுதான் திட்டம். அது அதிர்ஷ்டமற்ற குழந்தை. அந்த அநாதைக் குழந்தையின் பெயர், கிம். அதைத் தத்தெ டுத்தபோது காலம் பிந்தி விட்டதோ என்னவோ. அது இறந் ததின் காரணம் எங்களுக்குக் கிடைத்த அந்தக் கடிதத்தில் சொல்லப்படவில்லை. அதற்குப் பதிலாக இன்னொரு குழந்தையை தத்தெடுக்கச் சொல்லி ஆலோசனை சொல்லப் பட்டிருந்தது. அந்தக் குழந்தைகளின் பின்னணி, மருத்துவ வரலாறு போன்றவை அனுப்பப்பட்டிருந்தன. ஆனால் எங்க ளுக்கு அதில் ஆர்வம் இருக்கவில்லை. அக்குழந்தையின் மரணம் வகுப்பு மாணவர்களின் மன உளைச்சலை அதிகம் தாக்கியது. பாடசாலையில் ஏதோ பிரச்சினை இருக்கலாம் என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஆனால் எவரும் அதை எனக்கு நேரடியாகச் சொல்லவில்லை. என்னைப் பொறுத் தவரை பாடசாலையில் பிரச்சினை இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை. அதிலும் பார்க்கச் சிறந்தவற்றையும் மோசமானவற்றையும் பார்த்திருக்கிறேன். இவை சில துரதிஷ் டமான சம்பவங்கள் என்றே நான் எடுத்துக் கொண்டேன். உதாரணமாக, பெருமளவிலான பெற்றோர்கள் இறந்திருக்கி றார்கள். அது போன்ற உதாரணங்கள் தான் இவையும். இரண்டு மாரடைப்புகளும், இரண்டு தற்கொலைகளும், நீரில் மூழ்கிய ஒரு மரணமும், கார் விபத்தொன்றில் நாலு பேர் ஒன் றாகவும் இறந்திருக்கிறார்கள். ஒருத்தர் பக்கவாதம் வந்து இறந்திருக்கிறார். அத்துடன், இங்கே வழக்கமாக பெரும் இறப்பு விகிதம் பெற்றோரின் பெற்றோரிடையேயும் இருந்தது. அது இந்த ஆண்டிலும் பார்க்கிலும் அதிகம். அப்படித் தான் தெரிகிறது இறுதியில் நடந்த இந்த அவல நிகழ்ச்சியும்.

புதிய கூட்டாட்சி அலுவலுக்கான கட்டடத்துக்காக குழியைத் தோண்டிக் கொண்டிருந்தபோது, எங்கள் மாணவர்கள் மத்யூ வெய்னும் ரோனி மவ்றொகொடோவும் விளையாடிக் கொண்டி ருந்தபோது அந்த அவலம் நடந்தது. அந்தக் குழியின் விளிம்பில் அந்த பெரிய மர விட்டங்கள் அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. அதுபற்றிய நீதிமன்ற வழக்கொன்று இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பெற்றோர்கள் அந்த மர விட்டங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருக்கவில்லை என்று சொல்கிறார்கள். எது உண்மை, எது பொய் என்று எனக்குத் தெரியாது. அதுவொரு விசித்திரமான வருடம்.

பில்லி பாறன்றனின் தந்தை அவரின் வீட்டிற்குள் அத்துமீறிப் புகுந்த முகமூடி அணிந்த ஒருத்தனுடன் மல்லுக்கட்டியபோது அவன் அவரைக் கத்தியால் குத்த அவர் இறந்து போனார். அந்தக் கதையைச் சொல்ல மறந்துவிட்டேன்.

ஒருநாள் எங்கள் வகுப்பில் ஒரு கலந்துரையாடல் நடந்தது. இறந்த மரங்கள், சலமன்டர், வெப்பமண்டல மீன்கள், எட்கர் நாய், அப்பாக்கள், அம்மாக்கள், மத்யூ, ரோனி, அவர்கள் எல்லோரும் எங்கே சென்றார்கள் என்று ஒரு நாள் என்னைக் கேட்டார்கள். எனக்குத் தெரியாது என்று நான் சொன்னேன். யாருக்குத் தெரியும் என்று அவர்கள் கேட்டார்கள்? ஒருவ ருக்கும் தெரியாது என்று நான் சொன்னேன். மரணம் தானா வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது என்று அவர்கள் கேட்டார்கள். இல்லை, வாழ்க்கை தான் வாழ்க்கைக்கு அர்த் தத்தைக் கொடுக்கிறது என்று நான் சொன்னேன். மரணம் அல்லவா அடிப்படைத் தரவாக அல்லது கருவியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது, நாங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் தினம் தினம் நடக்கும் உலக வாழ்வு அந்தத் திசையில் அல்லவா செல்கிறது... என்று அவர்கள் சொன் னார்கள்.

'ஓம், இருக்கலாம்,' என்று நான் சொன்னேன்.

அதை நாங்கள் விரும்பவில்லை என்று அவர்கள் சொன் னார்கள்.

அது சரியானது போல் இருக்கிறது என்றேன்.

அது பெரும் அவமானம்! என்றார்கள் அவர்கள்.

ஓம், என்றேன் நான்.

இப்போது நீங்கள் ஹெலனுடன் உடலுறவு கொள்ள முடியுமா? (ஹெலன் எங்கள் வகுப்பறை உதவி ஆசிரியை) அது எப்படி நடைபெறுகிறது என்று எங்களால் பார்க்க இயலும். நீங்கள் அவரை விரும்புகிறீர்கள் என்று எங்க ளுக்குத் தெரியும் என்றார்கள்.

ஹெலனை நான் விரும்புகிறேன். ஆனால் நான் அதைச் செய்ய மாட்டேன் என்று அவர்களுக்குச் சொன்னேன்.

அதைப்பற்றி நாங்கள் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் ஒருபோதும் அதைப் பார்த்ததில்லை. என்னை வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள் என்றும் அதை ஒருபோதுமே செயல்முறையில் செய்து காட்டுவதில்லை என்றேன். ஹெலன் யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண் டிருந்தாள்.

தயவு செய்து, தயவு செய்து, செய்து காட்டுங்கள் என்றார்கள். அது உண்மையா என்பதை நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதைப் பார்ப்பதற்கு நாங்கள் ஆர்வத் துடன் இருக்கிறோம் என்றார்கள்.

நீங்கள் பதற்றப்படத் தேவையில்லை, எல்லாவற்றிலும் அர்த்தம் இருக்கும் என்றேன். (ஆனால் நானும் அப்படித் தான் அடிக்கடி பதற்றப்படுவேன். அதை நான் சொல்ல வில்லை.) ஹெலன் வந்து என்னை கட்டி அணைத்தாள். அவளின் நெற்றியில் நான் சிலமுறை முத்தமிட்டேன். இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துப் பிடித்தோம். பிள்ளைகள் உற் சாகமானார்கள். அப்போது யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டது. நான் கதவைத் திறந்தேன். புதிய ஜேர்பில் எலி ஒன்று உள்ளே நடந்து வந்தது. பிள்ளைகள் மகிழ்ச்சியால் உற்சாகமாகக் கூச்சலிட்டார்கள்.



mahalingam.k@thaiveedu.com

# ஆறாவது அனைத்துலக திருக்குறள் மாநாடு

## 6TH INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE

THEME
THIRUKKURAL ON GOVERNANCE

**DATE**

SEPTEMBER 19, 20, 21- 2025

**HOSTING CITY AND COUNTRY**

TORONTO, CANADA

**Jointly organized by**

Toronto Tamil Sangam, Toronto, Canada
Institute of Asian Studies, Chennai, India

***with the support of University of Toronto Scarborough***


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com





BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

**SUBRA**
MORTGAGE SOLUTIONS



புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



## Residential Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

## Commercial Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

**NESAN**
**416-908-5656**
mortgage@subra.com
www.subra.com

Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | FIRST NATIONAL FINANCIAL LP | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP

O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2017
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272


Ervamatin
Hair Lotion
Lotion Capilar
- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9855
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

